160942

# தத்துவ இஸ்லாம்

N21

JL
[illegible]
N21
160942

# தத்துவ இஸ்லாம்

[illegible] ... 3, ஆயத்து 103.

| காலம் 3. | 1921ஆ மேய் | இதழ் 1. |
|---|---|---|

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

அல்லாஹுதஆலாவின் திருநாமத்தைக் கொண்டு

நஹ்மதுஹூ வநுஸல்லீ அலா ரஸூலிஹில் கரீம்.

[illegible] அல்லாஹுதஆலாவை புகழ்ந்து அவனது திருத்தூதர் மீதும் வாழ்த்துக் கூறுகின்றோம்.

## எமது பத்திரிகை

[illegible] —(ஆலஇம்ரான் 3:103)

[illegible]

நம்புவதேபோல் எமது முஸ்லிம் [illegible]காரர்களும் தமது சுத்த சத்திய இஸ்லாமே [illegible] என்று நம்பி அதன்படி ஒழுகிவருகின்றனர். இப்படிப்பட்ட எமது சன்மார்க்க சாகரமாகிய சுத்த சத்திய இஸ்லாமார்க்கத்தின் உண்மையை உள்ளது உள்ள வண்ணமே உணர்ந்தோர் இக்காலத்தில் மிகச் சிலராகவே காணப்படுகின்றனர். உலகமுழுதுமுள்ள 40 கோடி முஸ்லிம்களுக்கிடையில் இக்காலத்தில் எமது இஸ்லாத்தின் தத்துவம் குறைந்து கிடப்பதோடு முக்கியமாய் இத்தென்னாட்டுத் தமிழ்ப் பிராந்தியங்களிலிருக்கும் முஸ்லிம்களின் மார்க்க உணர்ச்சியோ [illegible] பரிதாபகரமான நிலைமையிலிருந்து வருகின்றது. இத்தென் ஜில்லாக்களிலுள்ள முஸ்லிம்களுள் பெரும்பான்மையோர் தமிழ் மக்களாகவே யிருந்து வருகின்றனர்; அவர்கள் பொதுவாய்க் கல்வி அறிவிருந்திடினும் குறைந்தவராகவே காணப்படுகின்றனர். இவர்களின் நிலைமை இவ்வாறிருக்கும்போது இவர்களுக்கு மார்க்க உணர்ச்சியை ஊட்டுவதற்குப் போதுமான வழிகள் இன்னும் ஏற்படவில்லை. இஸ்லாமார்க்கத்திலுள்ள எல்லைக் கிரந்தங்களும் இன்றளவும் [illegible] தமிழில் வெளிவராமையாலும் இஸ்லாமிய வேத புராணத்தர்களான தென்னிந்திய மௌல்விமார்களுக்குத் தமது தாய்பாஷையாகிய இத் தமிழ் மொழியில் போதிய பாண்டித்தியம் இன்னும் உண்டாகாமையாலும் தமிழ் நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் தம்முடைய சன்மார்க்கத்தின் உண்மைக் கொள்கைகளை அறிந்துகொள்ள நல்வழி யில்லாமலே நீண்ட காலமாய்ச் செய்[illegible]மான வழியிலிருந்து வருகின்றனர். இப்படிப்பட்ட முஸ்லிம் சகோதரர்களின் நன்மைக்கென்று எமது முஸ்லிம் சங்கமே சென்ற பல வருடங்களாக எண்ணிறந்த துண்டுப்பிரசுரங்களை இலவசமாய்ப் பரப்பி வந்திருக்கின்றது. இதனால் மெத்த பயன் விளைந்திருக்கிறதென்று ஒத்துக்கொள்ளாதார் இத் தென்னாட்டில் யாருமில்லை யென்பது திண்ணம். இஸ்லாத்தின் தத்துவம் இன்னதென்று தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கிடையில் அத்தத்துவத்தை உள்ளபடி [illegible] இஸ்லாமார்க்கத்தைப் பற்றிய [illegible] பிரசாரத்தைக் கொண்டு இதனைக் [illegible] அவர்களின் [illegible] யும் எமது துண்டுப்பிர[illegible]

[illegible] 160942 N19·3



ருக்கின்றனர்; ஆனால் அப்படிப்பட்ட துண்டுப்பிரசுரங்களால் மட்டும் போதுமான சன்மார்க்க பிரசாரம் நடக்க ஹேது வில்லாமலிருந்தது. அத்துண்டுப் பிரசுரங்களால் மட்டும் கிடைத்துவரும் பிரயோசனத்தைக் காட்டிலும் இன்னும் பன்மடங்கு அதிகமான விசேஷ நன்மையை இஸ்லாமிய உலகத்துக்கு உண்டு பண்ணுதற்கு வேண்டிய ஊழியம் முழுதையும் செய்வதற்கென்றே இப்பொழுது **தத்துவ இஸ்லாம்** என்னும் இம்மாதாந்த சஞ்சிகையை எல்லோருக்கும் விளங்கும்படியான இனியதமிழ் நடையில் வெளியிட இம்முஸ்லிம் சங்கத்தார் முன்வந்திருக்கிறனர்.

சென்ற 400 வருஷங்களாக முஸ்லிம்கள் தங்களுடைய மார்க்க உணர்ச்சியையும் கல்வி வளர்ச்சியையும் உதாசீனம் செய்துவிட்டபடியால் அவர்கள் இவ்வுலகில் மிகத்தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது ஒருபுறமிருக்க, மற்றொருபுறம் எதிர்மதவாதிகள் பலர் தோன்றி எமது இஸ்லாமார்க்கத்தை உலகத்தவர் பார்வையில் மிகுதியும் இழிவுசெய்து காட்டுவதே தமது முக்கிய கடமையென்று கங்கணங்கட்டிக்கொண்டு திரிகின்றனர். முஸ்லிம்கள் தங்களுடைய சன்மார்க்கத்தைச் செவ்வனே பிரசாரம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெடுத்துக்கொள்ளாததாலும் எதிர்மதவாதிகள் இம்மார்க்கத்தை இழிவுசெய்தற்குப் பகிரதப் பிரயத்தனம் செய்து வருவதாலும் இவ்வுலகமாந்தரில் பலர் எமது இஸ்லாத்தைப்பற்றி மிகக்கேவலமாய் மதிக்க ஆரம்பித்துவிட்டனர். இப்படிப்பட்ட காலத்தில் உலகமுழுதும் இருப்பது போலவே இத்தென்னிந்தியாவிலும் எண்ணிறந்த புதினப் பத்திரிகைகளுண்டு; அவற்றுள் ஒன்றுகூட இஸ்லாத்தின் பெருமையை வெளியிடக்கூடியதாயில்லை யென்பது மிகவிசனிக்கத்தக்கவிஷயமே. இத்தமிழ் நாட்டின் கண்ணுள்ள முஸ்லிம்களின் நன்மைக்கென்று இஸ்லாமார்க்க பிரசார சம்மந்தமாய் இதுவரையில் ஒருவரும் யாதொரு பத்திரிகையும் வெளியிடவில்லை. இப்படிப் பலபத்திரிகைகள் வெளிவரவேண்டிய அவசியம் நெடுங்காலமுன்னரே உண்டாய்விட்டதென்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். இஸ்லாத்தின் உண்மைகளை எல்லோருக்கும் உணர்த்துவதற்கும், அவ்வுண்மைகளைப்புரட்டி இஸ்லாமார்க்கத்தை இழிவுசெய்து தாக்கும் எதிர்

[illegible] 160942 N19·3

மதவாதிகளின் தர்க்கத்தை ஒழிப்பதற்கும், இஸ்லாமியதத்துவங்களை உள்ளபடியே அறிய விரும்பும் இதரமத சகோதரர்களுக்கு அவற்றைப் போதிப்பதற்கும் எண்ணிறந்த பத்திரிகைகள் அவசியமாயிருக்கும்போது இத்தென்னாட்டில் ஒருமாதாந்த சஞ்சிகைகூட இல்லாமலே நம்முஸ்லிம்கள் நெடுங்காலமாய்த் துன்பப்பட்டு வருகின்றனர். ஆதலின் இப்படிப்பட்ட மாதாந்த சஞ்சிகையொன்று இப்பொழுது செந்தமிழில் வெள்ளிய நடையில் வெளிவரவேண்டியது அவசியமென்பதை ஒப்புக்கொள்ளாதவர் ஒருவருமேயிராரென்பது திண்ணம். மேலே கூறியபடி இஸ்லாமார்க்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் குறைகளை நீக்கி அதன் உண்மைகளை உள்ளவண்ணமே எம்மாலியன்ற மட்டும் ஒருவாறு வெளியிட எமக்குத் துணைபுரியும் எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும். பேனாவினால் செய்யத்தக்க இஷா அத்தே இஸ்லாமென்னும் சன்மார்க்க பிரசாரமே இக்காலத்துக்கு அத்தியாவசியமென்று பல அறிஞர்கள் கண்டு கொண்டனர். இக்காரணத்தால் தான் யாமும் இப்பொழுது முதன் முதலாகத் தத்துவ இஸ்லாம் என்னும் இம்மாதாந்த பத்திரிகையை வெளியிட முன்வந்துள்ளோம்.

இவ்வுலகில் ஏகதெய்வக்கொள்கையை இனியில்லா வண்ணம் நிலைநிறுத்தி மனிதர்களுக்குள் ஜனநாயக ஆட்சிக்குரிய சகோதரவுணர்ச்சியையும் சமத்துவ உணர்ச்சியையும் உண்டு பண்ணிப் பெண்களின் நிலைமையை மிகமேம்படுத்தித் தேஜோமயமாய் வீற்றிருப்பது எமது இஸ்லாமார்க்கம் ஒன்றுதான். இப்படிப்பட்ட இதன்பெருமைகளையும் இம்மார்க்கத்தை இவ்வுலகில் நிலைநிறுத்திய எம்பெருமானார் அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைப்பற்றிய பெருமையையும் அப்பெருமானாரால் கொண்டுவரப்பட்ட தனித்திருவேதமாகிய புர்க்கானுல் மஜீதென்னும் குர்ஆன்ஷரீபின் சிறப்பையும் இத்தென்னாட்டினருக்குச் செவ்வனே புலப்படுத்த வேண்டியது அவசியமாதலின் அப்படிப்பட்ட வேலையில் இப்பத்திரிகை மிகவும் ஈடுபட்டிருக்குமென்பதில் ஐயமில்லை. இஸ்லாமார்க்க உண்மைகளை உள்ளபடியே உணர்த்துவதற்குப் போதிய செந்தமிழ்ப்புத்த



கங்கள் இல்லாமலிருக்கும் இக்காலத்தில் போதுமான கிரந்தங்கள் தமிழில் வந்துவிட்டனவென்று சிலர் தவறாக எண்ணியிருக்கின்றனர். இப்படிப்பட்ட நமது நண்பர்களுக்கும் இஸ்லாத்தின் பெருமையை இன்னும் அதிகமாக விளக்கிக்காட்டவேண்டிய காலம் நெருங்கிவிட்டதென்றே சொல்லலாம்.

இக்காலத்தில் இப்படிப்பட்ட மாதசஞ்சிகை யொன்றைத் தமிழ்நாட்டிலுள்ள எல்லோரும் நன்கு நோக்கி வாசித்துணர்ந்து ஆதரிப்பார்களாக. “ஓ, ஈமான்கொண்டவர்களே! அல்லாஹுத்தஆலாவின் காரியத்தில் நீங்கள் உதவிபுரிவீர்களேல் அவன் உங்களுக்கு உதவிபுரிந்து உங்களுடைய பாதங்களையும் உறுதிப்படுத்துவான்”—(அல்குர்ஆன், 47:7)

உங்களுடைய இத்“தத்துவ இஸ்லாம்” பத்திரிகை இத்தமிழ்நாடுமுழுதும் நீடூழியாக நின்று நிலவும்படியாகவும் உங்களுக்கும் எங்களுக்கும் இடையிலுள்ள நட்புரிமையை மிகுதிப்படுத்திவைக்கும்படியாயும் எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலாவைச் சிந்தித்து வந்திப்போமாக.

அஸ்ஸலாமு அலைக்கும்

---

## அறிவும் கல்வியும்

1. தொட்டிலிலிருந்து கட்டைக்குச்செல்லு மட்டும் அறிவைத்தேடுங்கள்.

2. கல்விமான்கள் அழிவதே கிடையாது.

3. கல்வி சீனதேசத்தில் கிடைப்பதாயினும் அதைச் சம்பாதிக்கவேண்டுவது முஸ்லிமாகிய ஒவ்வொரு ஆண்பெண்மீதும் கடமையாகும்.

4. மாசறக்கற்றோனின் மசியானது மதாபிமானத்தால் கொலையுண்டோனுடைய உதிரத்தைக்காட்டிலும் விசேஷ சுகிர்தமுடையதாகும்.

5. கற்றோராவர்யார்? கற்றதன்படியே நடப்பவர் தான் அன்னோராவர்.

6. ஞானத்தை நாடித் தன் வீட்டை விட்டு வெளியேறுதல் அல்லாஹுத் தஆலாவின் பாதையில் செல்வதாகும்.

7. இரவில் ஒருமணிநேரம் அறிவைப் போதிப்பது அவ்விரவு முழுவதும் வணக்கம் செய்வதினும் சிறந்ததாகும்.

8. அறிவின் வழியை நாடிச் செல்பவனை ஆண்டவன் பிர்தௌஸ் என்னும் சுவர்க்கத்தை நோக்கி அழைக்கிறான்.

9. அறிவைத் தேடிக்கொள். அறிவுள்ளவனை அவ்வறிவு நன்மை தீமை இன்னதென உணர்ந்து கொள்ளும்படி செய்கிறது; அது சுவர்க்கம் புகுதற்கு வேண்டிய வழியைத் துலக்குகின்றது; தனித்த பாலைவனத்தில் அவ்வறிவு நமக்கு நண்பனும், ஏகாங்கியாயிருக்கும்போது நமது துணைவனும், நேசர்களில்லாதபோது நமது கூட்டாளியாகவும் இருக்கின்றது. பேரானந்த மடைவதற்குப் பேருதவி செய்கிறது. துன்பம் நேருங்கால் நம் துயரத்தை மாற்றுகிறது; நண்பர்களுக்குள் ஓர் ஆபரணமாயும் எதிரிகளின் முன்னால் ஒரு கவசமாயும் அவ்வறிவு அமைந்திருக்கிறது.

என்று எழுதப்படிக்கத் தெரியாமல் இறைவனருள் வாய்த்த எமது நபிகள் பெருமானார் அறிவையும் கல்வியையும் பற்றிக் கூறியிருக்கின்றார்கள்.

## இஸ்லாமிய சகோதரத்துவம்.

எமது சன்மார்க்கத்தில் அல்லாஹ் என்று சொல்லப்படும் பதமானது சகல லோகங்களுக்கும் தயாபரனாகிய ஏகநாயனையே குறிக்கின்றது. அல்குர் ஆன் என்னும் எமது திருவேதம் தன் ஆரம்ப அத்தியாயத்தின் முதலிலேயே ஆண்டவனது சர்வலோகத் தயாபரத் தன்மையை விளக்கியிருக்கின்றது. எமது மதக்கொள்கையின்படி தெய்வம் ஒரே தெய்வம் தான்; அதனால் வெளிப்படுத்தப்பட்ட வேதமும் ஒன்று தான்; அவ்வேதத்தை வெளியிட்டருளிய எமது திருநபியும் ஒருவர் தான்; அவர்களால் நிலைநாட்டப்பட்ட ஜன நாயக ஆட்சிக்குரிய சகோதரத்துவமும் ஒன்றுதான்; சமத்துவத்தையுடைய சகோதரர்களான எம் முஸ்லிம்களெல்லாரும் ஒரேஜாதிதான்; இந்த ஜாதியாரால் வணங்கப்படும் ஆலயமும் கஅபத்துல்லா வென்னும் ஒரே ஆலயம் தான். ("திக்கை வணங்கும் துலுக்கர்" என்று எழுதிய எமது ஹிந்துநண்பர் உண்மையையுணரவில்லையென்றே இங்கே குறிப்பிடுவோம்.) ஆதலின் எமது முஸ்லிம்கள் 40 கோடி



மனிதர்களும் ஒரே ஜாதியாயிருந்து ஒரே மனதுடன் ஒரே நபியால் கொண்டுவரப்பட்ட ஒரே வேதப்படி ஒரே முகமாய் நின்று ஒரே கடவுளை ஓர்மையாய் வணங்கி வருகின்றனர். இப்படிப்பட்ட ஓர்மைப்பாடுள்ள அநந்தம் பெருமைகளை ஏககாலத்தில் காண்பது எமது இஸ்லாமார்க்கத்தில் தான் முடியும். இப்படிப்பட்ட சிறந்த வைபவங்களை வேறெந்த மதத்தினரிடத்திலேனும் ஜாதியினரிடத்திலேனும் காண இயலாது. இது தான் இஸ்லாத்தின் இணையில்லா மகிமை. "அவர்கள் தங்களுடைய வாயால் அல்லாஹுத் தஆலாவின் ஒளியை அணைக்க விரும்புகிறார்கள்; நம்பிக்கையற்றவர்கள் வெறுப்புடனிருந்தபோதிலும் அல்லாஹுத்தஆலா தன் ஒளியைப் பூர்த்தியாக்குவதைத் தவிர வேறுவிதம் செய்ய இணங்கான்."—(அல்குர்ஆன், 9: 33.)

## சன்மார்க்கம் பரவுதல்

"(மனிதர்களுக்குத்) தப்பானதைத் தடுத்துச் சரியானதை விதிக்கவும் (அவர்களை) நன்மையான வழியில் அழைக்கவும் உங்களுக்குள் ஒரு வர்க்கத்தார் அவசியம் இருக்கக்கடவர்; இவர்கள் தாம் ஜயமுடையவர்களாவார்கள்." (அல்குர்ஆன்)

அருமை மிகுந்த முஸ்லிம் சகோதரர்களே!

பூவுலகிலுள்ள அநேக ஜாதியாருக்கு இடையில் நம்முஸ்லிம் வர்க்கத்தார் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு இப்போது ஞாபகமூட்டவேண்டிய அவசியமில்லை; உங்களில் ஒவ்வொருவருக்கும் இது நன்றாகத் தெரிந்த விஷயமே. தேசாசாரம் குலாசாரம் மதாசாரம் ராஜரீகமுறை ஆகிய எல்லாவற்றிற்கும் உரிய பழைய கொள்கைகளெல்லாம் ஆணிவேருடன் ஆட்டங்கண்டு இவ்வுலகமே பழைய ஏற்பாட்டை விட்டுப் புதிய ஏற்பாட்டுக்குப் புரண்டுவரும் இக்காலத்தில் நம்முடைய நிலைமை மட்டும் நமது கண்களெல்லாம் மழுங்கிவிடும்படி அவ்வளவு தாழ்ந்த கேவலமான ஸ்திதியில் வந்துவிட்டதை நினைக்கும் போதெல்லாம் மெய்யாகவே நமக்கு மனக்கிலேசம் அதிகமாயுண்டாகிறது. இதரஜாதியார்களுக்கு இடையில் நாம் இருக்கும் தாழ்

மையை நோக்கும்போது மற்றவர்கள் உயர்ந்திருக்கும் உச்சஸ்தானமே நமது பார்வைக்கு எட்டாமல் அவ்வளவு பாதாளத்தில் நாம் அழுந்திக் கிடக்கின்றோம். அவர்களுக்கெல்லாம் இருந்தது போலவே நமக்கும் சௌகரியங்களும் சாவகாசமும் ஏற்பட்டிருந்தன; ஆனால் நாம் சுறுசுறுப்பாயில்லாமல் அந்தச் சௌகரியத்தையும் சாவகாசத்தையும் கைநழுவ விட்டுவிட்டோம். ஆ, என்ன பரிதாபம்! மனித ஜாதியாருக்கு அருமருந்துபோல இருக்கும் சுறுசுறுப்பென்பது நம்மவரிடத்தில் அடியோடே ஒழிந்துவிட்டது; இதனால் நம் முஸ்லிம் வர்க்கத்தார் "ஒழிந்துபோன" ஜாதியாராய் விட்டார்கள் என்று சொல்லும்படியான நிலைமைக்கு வந்து விட்டார்கள்.

நாம் இப்போது சாகாமல் செத்த நிலைமையிலிருக்கிறோம்; இப்படிப்பட்ட பிராண அவஸ்தையான ஸ்திதியில் நாம் இருக்கும் கதியைக்கண்டு இதன் முடிவில் என்னகேடு சம்பவிக்குமோ என்று உலகத்தார் கண்டு நடுநடுங்குகின்றனர். இப்படி நமக்கு நேர்ந்தது ஆண்டவனுடைய அக்கிரமமென்று நினைக்கிறீர்கள்? இல்லை நமக்கு ஆண்டவன் கொடுத்திருக்கும் சக்தியையும் சாமர்த்தியத்தையும் இவ்வுலகில் காணப்படும் முன்னேற்றத்துக்குரிய இயற்கையின் சக்தியுடன் இணைத்து நாம் முன்னுக்கு வரப்பாடுபடாததால்தான் இப்படிப்பட்ட பாதாளத்துக்குள் அழுந்தி விட்டோம். நமது சோம்பேறித்தனத்துக்கு இது ஒரு தக்க தண்டனைதான்.

இவ்விஷயம் முஸ்லிம்களுக்கு மட்டும் பொருத்தமுள்ளதென்று எண்ணவேண்டாம்; இவ்வுலகத்துக்கே இவ்வுண்மை பொருந்துமென்று எமது குர் ஆன் ஷரீபு விளக்கிக்காட்டியிருக்கிறது. இவ்வண்டகோளத்தின் அமைப்பின் தன்மையாலும் அதன் இயக்கத்தாலும் நாம் அறிந்துகொண்ட உண்மையைக்கொண்டு மனிதனுடைய தன்மையை ஆராய்வோமாயின் அவன் நிமிஷத்துக்கு நிமிஷம் கேவலமான ஸ்திதியையே அடையவேண்டியிருக்கிறது. ஆனால் இவ்வுலகில் அவன் சாகாமல் நிலைத்திருப்பதற்காக மன்றாடும் முயற்சியாலும் தான் முன்னேற்றத்துக்கு வரப்பாடுபடும் பிரயத்தனத்தாலும் கேவலமான நிலைமைக்குள் நழுவி



விழுந்து விடாமல் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளலாம். ஆதலின் சாகாமல் நிலைத்திருக்கப் பாடுபடுவதாலும் முன்னேற்றத்துக்கு வரப் பிரயத்தனம் செய்வதாலும் மட்டுமே நாம் முன்னேறி நாகரீக நிலைமைக்கு வரமுடியும்; மனிதன் முன்னுக்கு வருவதற்குப் பாடுபடாமல் போவானாயின் அவன் பின்னுக்குப்போவது நிச்சயமே. இப்படிப்பட்ட பின்னிடையக்கூடிய சக்தியில் மனிதர் அகப்பட்டுத் தாழ்மையான நிலைமைக்கு வந்து விடாமல் எப்போதும் முன்னுக்கு வருவதற்குவேண்டிய மார்க்கத்தை அனுசரிப்பதற்கு நமது சுத்த சத்திய வேதமாகிய அல்புர்க்கான் அநேக வழிகளைக் காட்டிக்கொண்டிருக்கிறது. அவ்வழிகளை நாம் பின்பற்றுவோமாயின் நம்முடைய சோம்பலை விட்டுச் சுறுசுறுப்பைக்கைக்கொண்டு நாகரீகத்திலும் முன்னேற்றத்திலும் நாம் அதிக உன்னத ஸ்தானத்துக்கு வந்து சேரலாம். இதை நான் சொல்லும்போது நமது அல்புர்க்கானின் 103-வது அத்தியாயமாகிய ஒரு சிறு* ஸூராவை உங்களுடைய ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறேன்:—

"காலத்தைக் கவனியுங்கள்; உறுதிகொண்டு அதன்படி நற்கிரியைகளைச் செய்பவர்களும் ஒருவருக்கொருவர் உண்மையை விளக்கி உபதேசிப்பவர்களும் ஒருவருக்கொருவர் பொறுமையை விளக்கி உபதேசிப்பவர்களும் தவிர மற்ற மனிதர்களெல்லாரும் நிச்சயமாக நஷ்டத்திலானவர்களாயிருக்கிறார்கள்."

இந்த அத்தியாயத்தில் மனிதனுடைய முன்னேற்றத்துக்குரிய நான்கு முக்கிய அம்சங்கள் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்: (1) உறுதியான நம்பிக்கை, (2) நன்மை செய்தல், (3) உண்மையைப் பரப்புதல், (4) துன்பம் நேரிடுங்காலத்தில் பொறுமையுடனிருத்தல் இந்நான்குமே வெற்றிக்கும் முன்னேற்றத்துக்கும் உரிய சரியானவழிகளாயிருக்கின்றன. இஸ்லாத்தில் உறுதியான நம்பிக்கை வைப்பதும் (ஈமான்கொள்ளுதல்) நல்லகாரியங்களைச்செய்வதும் ஆகிய இந்த இரண்டும் ஒருவனிடத்திலிருந்தால் ஆண்டவனுக்காகவும் இதரமனிதர்களுக்காகவும் அவன் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துவிட்டதாய் நினைத்துக்கொள்வானாயின் அது மட்டும் அவனுக்குப்போதாது; இந்த இரண்டையும் செய்வதே போதுமென்று நம்முஸ்லிம்களில் பலர் தவறாக எண்ணுகிறார்கள்;

இப்படிப்பட்ட தவறான எண்ணம் அவர்களுடைய மனதில் ஆழமாய் ஆணிவேர்போல் பதிந்து கிடக்கிறது; இப்படிப்பட்ட தப்பு அபிப்பிராயத்தை நீக்கவேண்டு மென்பதே எம் முக்கிய நோக்கம். உறுதியான நம்பிக்கை யென்பது ஆண்டவனிடத்திலும் நபிமார்களிடத்திலும் வேதங்களிலும் கியாமத்து நாளிலும் (லோகமுடிவுகாலம்) வைக்கும் நம்பிக்கையைக் குறிக்கும். நல்ல செய்கையென்பது தினம் 5 வேளையும் தொழுதல், நோன்பு வைத்தல், ஹஜ்ஜு யாத்திரைபோதல், ஸக்காத்துக்கொடுத்தல் முதலியன எனலாம். இவ்வளவோடு நம்மவரில் அனேகர் திருப்தியடைந்து விடுகின்றனர். ஆனால் மனிதன் சம்பூரண மடையவேண்டுமாயின இம்மட்டோடு நின்றுவிடுவது போதாது. தான் பிறந்ததனாலான பலனை அடைந்து முன்னுக்கு வரவேண்டுமாயின் அவன் பரிபூரண மனிதத் தன்மையை யடைதல் அவசியமாகும்; மேலே சொன்ன இரண்டு கடமைகளுடன் இன்னும் இரண்டு கடமைகளை அவன் அநுஷ்டித்தால்தான் முன்னேற்றத்துக்கு வரமுடியும். உண்மையைப் பரப்புவதிலும் ஆபத்துவருங்காலத்தில் பொறுமையுடனிருப்பதிலும் அவன் பழகிவரவேண்டும். ஆகவே நம்முஸ்லிம்கள் பரிபூரணமனிதர்களாக ஆகவேண்டுமாயின் முதலில் உறுதியான நம்பிக்கை (ஈமான்) கொண்டு பிறகு நற்கிரியைகளைச் செய்து அதன்பின் உண்மையைப் பரப்பிக் கடைசியில் அதனாலுண்டாகும் துன்பங்களைப் பொறுமையுடன் சகித்திருத்தல் வேண்டும். கடைசியில் சொல்லப்பட்ட இரண்டு கடமைகளைப்பற்றிக் கூறும்போது வேறோரிடத்தில் நமது குர்ஆன் ஷரீபு (திருவேதம்) பின்வருமாறு வற்புறுத்திக் கூறுகிறது:—

“(மனிதர்களுக்குத்) தப்பானதைத் தடுத்துச் சரியானதை விதிக்கவும் (அவர்களை) நன்மையான வழியில் அழைக்கவும் உங்களுக்குள் ஒருவர்க்கத்தார் அவசியம் இருக்கக்கடவர். இவர்கள் தாம் ஜயமுடையவர்களாவார்கள்.”

நம் திருவேதத்தின் இவ்வாக்கியத்தைப் படிக்கும் போது இதன் கடைசிப்பாகத்தை நீங்கள் நன்றாகக்கவனித்து உங்கள் கருத்தில் அமைப்பீர்களென்று நான் வேண்டுகிறேன்; அந்தக்கடைசிப்பாகத்தில் “ஜயமுடையவர்கள்” (முபுலிஹூன்) இன்னாரென்று ஆண்டவன் நன்றாக விவரித்திருக்கிறான். மனிதர்களை அஞ்ஞான



அந்தகாரத்திலிருந்தும் துக்கசாகரத்திலிருந்தும் கேவலமான நிலைமையிலிருந்தும் மேம்படுத்தி முன்னேற்றத்துக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய விஷயமாய் நான் ஏற்கனவே சொன்னதற்கு ஒத்திருக்கிறது இந்தக் குர்ஆன் ஆயத்து. இந்த ஆயத்தில் “ஜயம்” (பலாஹ்) என்னும் பதம் அரபிபாஷையில் மகாசிலாக்கியமான தாத்பரியத்தைக் காட்டுகிறது. இப்பதத்தின் முழுத் தாத்பரியமும் இன்னதென்று அரபி பாஷையை அறியாதார் அறிந்து கொள்வது முடியாது. உலகத்துக்கு வேண்டிய எல்லா நன்மையையும் பிரயோசனத்தையும் சௌகரியத்தையும் கொடுத்துக்கொண்டு மனிதவர்க்கத்தார் தங்களால் இயன்ற முழு உன்னத நிலைமைக்கும் ஏகும்படியாகத் தமக்குள் பொதிந்திருக்கும் சக்திகளை யெல்லாம் உபயோகப்படுத்தி நிதானத்துடன் ஓயாமல் முன்னேற்றத்தை யடைதல் என்பது அரபிபாஷையிலுள்ள “பலாஹ்” என்னும் அப்பதத்தின் தாத்பரியமாகும். ஆகவே மனிதரிடத்தில் ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கும் சக்திகளையெல்லாம் வெளிப்படுத்தி அவற்றால் நாம் எவ்வளவு மேன்மையடைய முடியுமோ அவ்வளவு மேன்மையையும் அடைவதற்கு வேண்டிய வழிகளைக் காண்பிப்பது தான் எமது புர்க்கானுல் மஜீது என்னும் பரிசுத்த வேதத்தின் முழுக்கருத்து. மேலே சொல்லப்பட்ட ஆயத்திலும் அப்படியே ஆண்டவன் நாம் அடைய வேண்டிய முழுவெற்றிக்கும் வழிகாண்பித்திருக்கிறான். அவ்வழியைக் கண்டுபிடித்து நடத்தல் நமது கடமையாகும். மனிதர்களை நற்காரியங்கள் செய்யும்படி தூண்டுவதாலும் நல்லது இன்னதென்றும் கெட்டது இன்னதென்றும் அவர்களுக்கு விளக்கிக்காட்டுவதாலும் நாம் மேலே சொன்னமுழுஜயத்தையும் அடையலாம்.

இது வரையில் சன்மார்க்கப்பரவுதல் விஷயமாய்ப் பொதுப்படையாய்ச் சொன்னேன்; இனி இப்படிப்பட்ட மகாபெரிய பரிசுத்தமான பெருமை வாய்ந்த காரியத்தில் யாரேனும் தலையிட்டுச் சன்மார்க்கப்பரவுதல் செய்கின்றாரோ என்று ஆராய்ச்சி செய்வோம். இப்படிப்பட்ட கௌரவம் பொருந்திய மகா உத்தமமான காரியத்தில் உண்மையான ஊக்கத்துடன் உழைக்க ஒரு வர்க்கத்தார் முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய உடல் பொருள் ஆவியை யெல்லாம் சன்மார்க்கப் பரவுதலுக்கே தத்தம்

செய்திருக்கிறார்கள். இந்தியாவிலும் இங்கிலாந்து முதலிய இதர நாடுகளிலும் நம் சன்மார்க்கத்தைப் பரப்புவதே அவர்களின் நோக்கம். இச்சங்கத்தார் இது வரையில் இங்கிலாந்தில் அடைந்திருக்கும் அபார ஜயமானது உலகத்தவருக்குத் தெரியாத விஷயமன்று. சுருங்கச் சொல்லுமிடத்து இச்சங்கத்தார், நமது திருநபியவர்கள் (இவர்களது ஆவிக்கு இறைவன் கருணைபுரிவானாக) செய்துவந்த முறையையே அனுசரித்து நம்சன்மார்க்கத்தைப் பரப்ப முன்வந்திருக்கிறார்கள். எம்பெருமானார் செய்துவந்த காரியமும் இன்னதென்று அவர்களது பரிசுத்த செய்கைகளாலும் அவர்களது உடன் தோழர்களின் செய்கைகளாலும் இஸ்லாமார்க்கச் சரித்திரங்களாலும் நன்றாகத் தெரிந்துகொள்ளுகிறோம்.

மனிதர்களுக்கெல்லாம் மகாபெரியவரும் நபிமார்களுக்கெல்லாம் மகா சிரேஷ்டருமாகிய எமது பெரு நபியவர்களைப் பின்பற்றினவர்களென்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் உண்மையான முஸ்லிம்களெல்லாரும் நபிகள் பெருமானாரிடத்தில் தாம் வைத்திருக்கும் ஆழமான பக்தியின் அறிகுறியாகத் திருநபியவர்களுடையதும் ஆண்டவனுடையதுமான சன்மார்க்கப் பரவுதலில் தங்களுடைய உடல் பொருள் ஆவி முதலியவற்றைத் தத்தம் செய்வார்களென்று நான் அதிவினயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட அருமையான சன்மார்க்கப்பரவுதல் விஷயமாய்த் தமது முழுவாழ்நாளையும் தத்தம் செய்யக்கூடிய மனிதர்கள் முன்வந்திருக்கிறார்கள்; ஆனால் தங்களால் இயன்றமட்டும் தங்களுடைய சன்மார்க்கத்துக்காகவும் தங்களுடைய திருநபியவர்களுக்காகவும் தங்களுடைய கடமையைச் செலுத்தும் பொருட்டும் தம் தமக்கு இயன்ற தொகையைக் கொடுத்து மேலே சொல்லப்பட்டவர்களைக் கைதூக்கி விடுவதற்கும் வேண்டிய மனிதர்களைக்காணோம். அந்தோ பரிதாபம்! சன்மார்க்கத்துக்கு உழைக்கச் சிலர் முன் வந்தும் அவர்களைக் கைதூக்கிவிடப் பலர் முன்வாராதது என்ன கேவலம்!! இதைப் படிக்கும் எனது மித்திர ரத்தினங்களுக்குச் சுமக்க முடியாத சுமையை நான் கொடுக்கவரவில்லை. சன்மார்க்கப் பரவுதலைத் தலைமேற்கொண்டு முன் வந்திருக்கும் மேற்கூறிய சங்கத்தார், "ஒருவனுடைய சாமர்த்தியத்தின் அளவுக்குத் தக்கபடியல்லாமல் அதிக



மான கடமையை ஆண்டவன் ஒருவருக்கும் விதிக்கிறதில்லை," என்னும் திருவாக்கியத்தின்படியே அதிக தைரியம் வைத்திருக்கிறார்கள். நம் திருவேதத்தின் இவ்வாக்கியத்தின் தாத்பரியத்தையுணர்ந்து மேற்கூறிய சங்கத்தார் அதிக உற்சாகங்கொண்டு தங்களுக்கு என்ன துன்பமும் இடையூறும் நேர்ந்தாலும், தங்களுடைய அபாரவேலைத் தொந்தரவாலும், நம்போன்ற முஸ்லிம்கள் அவர்களுக்குத் தக்கபடி உற்சாகத்தைக் கொடுக்காமல் அன்னியரைப்போல் இருப்பதனால் அவர்களுக்குண்டாகும் மனக்கிலேசத்தாலும் எவ்வளவு சங்கடம் நேர்ந்தாலும் இதையெல்லாம் ஒரு பொருட்டாயெண்ணாமல் தாங்கள்கொண்ட காரியத்திலேயே கண்ணுங்கருத்துமாய்த் தமக்கு ஆண்டவன் பூரணவெற்றியும் கொடுப்பானென்று தைரியமாயிருக்கிறார்கள். இன்னும், எனது அருமைச் சகோதரர்களே! மேலே சொல்லப்பட்ட திருவாக்கியத்தில் உங்களுக்கு வேண்டிய கருத்தும் அமைந்திருக்கிறது. நீங்கள் இப்போது செய்யவேண்டிய கடமையானது உங்களுடைய சாமர்த்தியத்துக்கு மேற்பட்டிருக்குமென்று ஒருபோதும் எண்ண வேண்டாம். இப்போது சொல்லிவந்த சன்மார்க்கப் பரவுதலில் நீங்கள் செய்யவேண்டிய கடமை மிகச் சிறியதேயாகும். நீங்கள் இச்சன்மார்க்கப் பரவுதல் விஷயமாய் இப்போது செய்யவேண்டியது, நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கத்திலிருந்து இனிய செந்தமிழில் வெளிவரும் தத்துவ இஸ்லாம் என்னும் இப்பத்திரிகையை நன்றாக உலக முழுதும் பரவச் செய்வதுதான். இதைவிட அதிகம் நீங்கள் இப்போது செய்யவேண்டியதில்லை. இப்படி நீங்கள் செய்வதால் மேன்மையான பரிசுத்தம் பொருந்திய ஒரு நல்லகாரியத்தைச் செய்தவராக ஆவீர்கள்; இதுமட்டுமல்ல. இன்னும், நீங்கள் செய்யவேண்டிய ஒரு கடமையையும் செய்து முடித்தவராகக் கருதப்படுவீர்கள்; இன்னும், மகா பெரிய கல்விமான்களாகிய நாகரீக மனிதர்களின் பேனாவினால் எழுதப்படும் இஸ்லாமிய விஷயங்களையும் ஒவ்வொரு மாதமும் நீங்கள் இப்பத்திரிகைமூலமாய் அடைவீர்கள். உலகத்தையே பிரகாசிக்கச் செய்யக்கூடிய பத்திரிகையாயிருக்கிறது அது. இதன் ஜோதியானது இன்னும் செம்மையாக உலக முழுதும் பரவும்படி நீங்கள் உதவிபுரிவீர்களாக.

இதைக்காட்டிலும் இன்னும் அதிகமாக உங்களை யான் ஏதேனும் செய்யச்சொல்கிறேனா? உங்களால் தாங்கக் கூடியதற்கு மேல் அதிகபளுவான சுமையை உங்களுக்குக் கொடுக்கிறேனா? இல்லையே. இப்பத்திரிகையை நீங்கள் ஒவ்வொருவரும் வாங்கிப்படிப்பதோடு உங்களுடைய நண்பர்களையும் வாங்கிப்படிக்கும்படி செய்வீர்களாக. இப்படிச்செய்வீர்களேல் அப்பத்திரிகைக்கு அதிகம்பேர் ஆதரவுசெய்பவராவார்கள். இப்படிப்பட்ட ஆதரவு செய்யக்கூடிய நண்பர்கள் அதிகப்பட்டால் அவர்கள், "தப்பானதைத் தடுத்துச் சரியானதை விதிக்கவும் சாமானியர்களை நன்மையான வழியில் அழைக்கவும்" உரியவராவார்கள். எம். ஏ.

## இன்ஸானுக்கேற்றது இஸ்லாம்

1300 வருடங்களுக்கு முன் அரபுதேசத்தில் ஆண்டவனருளால் திருவவதாரம் செய்த அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களால் கடைசியில் இவ்வுலகில் நிலைநிறுத்தப்பட்ட சன்மார்க்கத்துக்கு "இஸ்லாம்" என்றுபேர்; இவ்வுலகிலுள்ள எல்லாமதங்களிலும் எமது இஸ்லாம் தான் கடைசிமார்க்கமாயிருக்கின்றது. இஸ்லாத்தின் உண்மையை உணராதவர்கள் இதை முஹம்மதியமார்க்கம் என்கின்றனர். கிரிஸ்துவின் மார்க்கத்தைக் கிரிஸ்தவமார்க்கமென்றும் புத்தருடைய மதத்தைப் புத்தமதமென்றும் சொல்லும் பாவனைபோல் முஹம்மது நபி (ஸல்)யின் மார்க்கத்தை முஹம்மதியமார்க்கமென்றும் அறியாமையால் சொல்கின்றனர். எமது மார்க்கத்தின் உண்மையானபேர் இஸ்லாம் என்பதுதான்; இஸ்லாத்தைப்பின்பற்றுவோரை முஸ்லிம்கள் என்று சொல்லவேண்டும். எமதுமார்க்கத்தை முஹம்மதியமார்க்கமென்றும் எம் முஸ்லிம்களை முஹம்மதியரென்றும் இனி அறிஞர்கள் சொல்லமாட்டார்களென்று நம்புகிறோம். குர்ஆன் ஷரீபில் சொல்லப்பட்டிருக்கும் உபதேசங்களின் கருத்துப்படி நோக்கும்போது இவ்வுலகிலுள்ள எல்லாமாந்தர்களுக்கும் எமது "இஸ்லாம்" பொருத்தமாகவே அமைக்கப்பட்டிருக்கிறதென்பது தெளிவாகும்; இந்த இஸ்லாமார்க்கமானது



முதன்முதலாக எமது நபிபெருமானாரால்தான் உண்டு பண்ணப்பட்டதென்று எண்ணவேண்டாம்; எம்பெருமானாருக்கு முன்னால் வந்துள்ள எல்லாநபிமார்களும் ஏகநாயகக்கொள்கை யென்னும் இஸ்லாத்தையே ஆதிமுதல் போதித்து வந்திருக்கின்றனர்; பாவா ஆதம் (அலை), நூஹ் (அலை), இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை) முதலிய தீர்க்கதரிசிகளின் மார்க்கம் "இஸ்லாம்" தான்; சுருங்கச்சொல்லுமிடத்து இவ்வுலகில் இது வரையில் எத்தேசத்தில் தோன்றிய தீர்க்கதரிசியாயிருந்த போதிலும் அவரது மார்க்கம் ஏகதெய்வமார்க்கமாகிய இஸ்லாம்தான். நபிமார்கள் பனீ இஸ்ராயீல் (இஸ்ரேவல்) கூட்டத்தில் மட்டுந்தான் தோன்றியிருக்கிறார்களென்று நினைக்கவேண்டாம். இவ்வுலகில் தீர்க்கதரிசிகள் அவதரிக்காத தேசமாவது ஜாதியாவது கிடையாது. "அச்சமூட்டி எச்சரிக்கைசெய்பவர் அனுப்பப்படாத ஜாதியார் ஒருவருமில்லை."—(அல்குர்ஆன், 35:24). இன்னும் குர்ஆன் ஷரீபில் 16:36ம் நோக்க. எல்லாநபிமார்களின் மார்க்கமும் இஸ்லாமாயிருப்பதல்லாமல் எமது நபிபெருமானாரின் திருவாக்கின்படி இவ்வுலகில் ஜனிக்கும் ஒவ்வொருகுழந்தையும் இஸ்லாத்தில் தான் பிறக்கின்றது. ஏகதெய்வக்கொள்கையானது மனிதனுடைய இயற்கை மதமாயிருப்பது சகஜம்தானே. அதற்கு முன் எல்லாத்தீர்க்கதரிசிகளாலும் உபதேசிக்கப்பட்டு வந்த இறைவனுடைய சட்டங்களை எமது திருநபியவர்கள் ஒழுங்கு செய்து சம்பூர்ணம் பண்ணினார்கள்; எமது நபிபெருமானார் ஒன்றையும் நூதனமாய்ச் சிருஷ்டித்துவிடவில்லை. அவர்களுக்கு முன்னுள்ள இஸ்லாத்தையே எமது பெருநபியவர்கள் சீர்திருத்தம் செய்து செம்மைப்படுத்தினார்கள். எமது திருவேதமாகிய குர்ஆன் ஷரீபின் பிரகாரம் "இஸ்லா" மானது இறைவனுடைய திருச்சமுகத்தில் சிறந்தமார்க்கமாயும் மனிதர்களின் இயற்கைக்குப் பொருந்தியதாயும் காணப்படுகின்றது. "நிச்சயமாக அல்லாஹுத்தஆலா இடத்தில் உண்மையான மார்க்கம் இஸ்லாம்தான்."—(அல்குர்ஆன், 3:18) "மனிதனை ஆண்டவன் படைத்திருக்கும்படியான நிலைமைதான் அல்லாஹ்வின் இயற்கையாகும்; அல்லாஹ்வின் சிருஷ்டியில் ஒன்றும் மாறுதல் இல்லை; அதுதான் சரியான சன்மார்க்கம்." — (அல்குர்ஆன், 30:30).

அல்குர்ஆனின் சித்தாந்தப்படியே பல்வேறு ஜாதியாருக்குள் பல்வேறு காலங்களில் பல்வேறு நபிமார்கள் அவதரித்திருப்பதாலும் அவர்களெல்லாரும் உபதேசித்து வந்த கொள்கையெல்லாம் ஏக தெய்வக்கொள்கையே யாதலாலும் இப்படிப்பட்ட இஸ்லாமார்க்கமானது ஆதிசிருஷ்டிமுதலே யிருந்து வருகிறதென்றும் அது எல்லாமனித கோடிக்கும் பொதுவானதென்றும் சொல்வதில் ஒன்றும் பிழையில்லை. ஆதிகாலமுதல் மூலக்கொள்கை மட்டும் ஒன்றாகவே யிருந்து வந்திருக்கிறது; ஆனால் சிற்சில அனுஷ்டான முறைகள் மட்டும் காலதேசவர்த்தமானத்துக்குத் தக்கபடி அப்போதைக்கப்போது வேறுபட்டிருக்கின்றன. இஸ்லாத்தின் மூலக்கொள்கை மட்டும் தொன்று தொட்டே யிருந்துவருகின்றதென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. கடைசியாக இந்த இஸ்லாத்தின் முழுவிவரமும் எல்லாத்தேசங்களுக்கும் எல்லாஜாதியார்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் வண்ணமாக எமது திருநபியவர்களால்தான் நன்கு நிலை நிறுத்தப்பட்டது; அப்படிப்பட்ட அந்த அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா அவர்களுக்கு இறைவன் எல்லா சுகிர்தமும் கொடுத்தருள்வானாக.

மௌல்வி முஹம்மதலி, எம். ஏ. எல் எல். பி.

## இஸ்லாத்தின் தத்துவம்

அருமைச்சகோதரர்காள்! அல்லாஹுத் தஆலா ஏன் உங்களை இவ்வுலகில் படைத்திருக்கின்றானென்று இதுவரையில் சிறிதேனும் நீங்கள் சிந்தித்துப்பார்த்திருக்கிறீர்களா? ஆண்டவன் உங்களைத் தமாஷுக்காகப் படைக்கவில்லை; ஆனால் நீங்கள் இவ்வுலகில் செய்யவேண்டிய முக்கியமான வேலையோ மிகப் பெரியதாயிருக்கும்போது நீங்கள் ஓயா நித்திரையில் உழன்று வருகின்றீர்களே! இஃதென்ன விபரீதம்!! மனிதனுடைய ஸூக்ஷ்ம ஆத்மாவானது (ரூஹ்) எமது இஸ்லாமியக் கொள்கையின்படி அநாதியாய் இருக்கவில்லை. உங்களுடைய ஆவியானது அநாதியாயில்லாவிடினும் அதற்கு முடிவென்பது கிடையாது. உங்களுடைய ஸ்தூல தேகமெல்லாம் மண்ணின் சாரத்தாலேயே உண்டாக்கப்



பட்டிருப்பினும் அத்தேகத்துக்குள் அமைந்துகிடக்கும் ஆத்மாவின் (ரூஹின்) உண்மை ஆண்டவனைச் சேர்ந்ததாயிருக்கிறது. ஆனால் அந்த ஆத்மாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சக்திக்கோ அளவில்லை. உங்களுடைய ஆத்மாவின் சக்தியை நீங்கள் நன்குணர்ந்து ஆண்டவன் சொல்லும் முறைப்படி அனுஷ்டித்து வருவீர்களேல் அல்லாஹுத் தஆலாவின் திருச்சன்னிதானத்துக்கு (லிக்காவுக்கு)ப்போய்ச்சேர்வீர்கள். உங்களுடைய ஸ்தூல வுடம்பில் துஷ்டமிருகங்களின் கெட்ட குணங்களும் பிசாசுகளின் துர்க்குணங்களும் கலந்து கிடக்கின்றன; இப்படிப்பட்ட தீயகுணங்களை நீங்கள் ஆண்டவனருளிய முறையின்படி பாடுபட்டு நீக்குவீர்களாயின் பிறகு நீங்கள் பரிசுத்தகுணமுடையவர்களாகி உங்களுடைய ஆத்மாவின் விசேஷபலத்தால் வெற்றியடைந்து அல்லாஹுத் தஆலாவின் திருச்சன்னிதானத்துக்கு ஏகும்படியான பாக்கியத்தைப் பெறுவீர்கள். மனிதப்பிராணிகள் தாழ்மைக்கெல்லாம் மகாகீழான பாதாளத்தில் வீழ்வதும் மேன்மைக்கெல்லாம் மகாமேலான லிக்காவுக்கு ஏறுவதும் அவரவரின் செய்கையாலேயே உண்டாகின்றன. 'தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என் செய்வர்?' அவரவரின் மேன்மை தாழ்மைக்கு அவரவரே காரணபூதராவார். மனிதனுடைய கீழ்மைக்குக் கீழான குணங்கள் என்னவென்றால் மிருகங்களின் குணமும் பிசாசின் குணமுமான அபிலாசை ஆத்திரம் முதலிய அருவருக்கத்தக்க குணங்களாகும்; மேன்மைக்கெல்லாம் மேலான குணவிசேஷம் என்னவென்றால் மனிதன் அமரர்களின் (மலக்குகளுடைய) பதவியையடைந்து அபிலாசை ஆத்திரம் முதலிய அருசிகரமான குணங்களை வென்றடக்கி அவற்றிற்கு அரசனாய் வீற்றிருப்பதாம். இப்படிப்பட்ட அருமையான தன்னடக்கத்தையெல்லாம் பெறுவீர்களேல் பின்னர் நீங்கள் ஆண்டவனுடைய "லிக்கா"வை அடையக்கூடிய யோக்கியதை பெறுவீர்கள். நீங்கள் இவ்வுலகில் ஜனித்ததன் பயன், உங்களுடைய ஆத்மசக்தியையெல்லாம் வெளிப்படுத்தி அதன் பயனாக நீங்கள் பலாஹ் (Falah) என்னும் முழுவெற்றியையும் அடைந்து மலக்குகளின் குணாதிசயத்தில் ஐக்கியப்பட்டு அல்லாஹுத் தஆலாவின் லிக்காவை அடைவதுதான். உங்களுடைய சம்பூர்ணவெற்றி இதில் தான் இருக்கிறது.

ஆண்டவனுடைய ஜமாலைத்தரிசிப்பதன் ஆனந்தம் ஒருமுறை உங்களுக்குண்டாய் விடுமாயின் ஒரு விநாடியேனும் அவனைக் காணாமலிருக்க உங்களுக்கு மனமுண்டாகாது; அந்த ஜமாலைத்தரிசிப்பதே உங்களுக்கு நித்தியானந்த சுவர்க்கமாகும்; இப்படிப்பட்ட ஆன்மசுவர்க்கம் கிட்டியபின் பஞ்சேந்திரியங்களுக்கு மட்டும் திருப்தியை யுண்டுபண்ணத்தக்க சாதாரண மோக்ஷம் உங்களுக்கு மிக அற்பமாய்த் தோன்றும்.

மெய்யன்பர்காள்! நீங்கள் இவ்வுலகில் ஜனனமெடுக்கும்போது மகாஆத்மசக்தியுடன் பிறக்கின்றீர்கள். ஜனனகாலத்தில் அந்தரங்கமாய் அமைக்கப்பட்டிருக்கும் உங்களுடைய ஆத்மசக்தியைப் பூரணவெற்றி யடையும்படி செய்யும் தொழிலுக்கு பலாஹ் என்று பேர். நீங்கள் பிறந்தகாலத்தில் உங்கள் ஆத்மசக்தியானது வித்துக்குள் மரம் போல் மறைந்து கிடப்பதால் உங்களுடைய துர்க்குணங்களை யெல்லாம் பாடுபட்டுப் போர் புரிந்து அந்த ஆத்மசக்தியை யெல்லாம் வெளிக்கிளப்பி வெற்றிகொள்ளாதவரையில் நீங்கள் சம்பூர்ணபதவியை (முப்லிஹூன்) அடையமாட்டீர்கள். ஆண்டவன் சொல்வதைக்கேட்டு அவனால் அருளப்பட்ட சன்மார்க்கத்தில் நேராகச்சென்று சீரான வெற்றிபெற்றவர்களே முப்லிஹூனானவர்கள். "அவர்கள்தாம் தங்களுடைய ரக்ஷகனிடத்திலிருந்து வந்த நேரான மார்க்கத்தில் இருக்கிறார்கள்; மேலும் அவர்களே முழு வெற்றியுள்ள முப்லிஹூனவர்கள்."—(அல்குர்ஆன்)

'அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை,' என்னும் பழமொழிக்கிணங்க இகலோகத்தின் பொருளானது அரசர்களின் கஜானாவில் அமைந்திருப்பது போல் பரலோகத்துக்கு வேண்டிய அருளானது அல்லாஹ்த் தஆலாவின் பொக்கிஷத்தில் ஆழ்ந்துகிடக்கின்றது. இப்படிப்பட்ட ஆண்டவனது பொக்கிஷமானது வானத்தில் அமரர்களின் ஸூக்ஷும ஆவி (கல்பு)யிலும் பூமியில் நபிமார்களின் ஸூக்ஷும ஆவி (கல்பு)யிலும் அமைந்திருக்கிறது. இதற்காகத்தான் ஆண்டவன் இவ்வுலகில் இதுவரையில் 1,24,000க்கு மேற்பட்ட நபிமார்களை மனிதகோடிகளின் ஈடேற்றத்துக்காக அனுப்பியுள்ளான். ஆண்டவன் தன் பெருமைகளை விளம்பப் பூலோகத்தில் நபிமார்களை அனுப்பினான்;



நாம் அந்த நபிமார்களின் கஜானாவிலிருந்து நமக்கு வேண்டிய மட்டும் நற்குணங்களைப்பருகிக் கதிமோக்ஷமடைதல் வேண்டும். ஆகவே சர்வலோகரக்ஷகனை ரப்பின் திருச்சமுகத்திலிருந்து தீர்க்கதரிசிகளின் மூலமாய்வரும் அருளையே நாம் பின்பற்றவேண்டும். இத்தகைய அருளை ரப்பின் திருச்சமுகத்திலல்லாமல் மற்றோரிடத்தில் தேடுகிறவர்கள் வழிதவறிப் போனவர்களாகவே கருதப்படுவார்கள்; இறுதியில் அவர்களின் செயல் வீண்செயலாகவே முடியும்; அன்னாரின் பாடெல்லாம் வெறும் எண்ணமாகவே போய்விடும். இறுதிநாளில் அவர்களுடைய வறுமை வெளியாகும்; அந்தரங்க எண்ணமெல்லாம் அடியோடு பகிரங்கமாகும். "நாம் உன்முன்னிருந்த திரையைத் திறந்துவிட்டோம்; பிறகு உன்பார்வையானது இன்று கூர்மையாயிருக்கிறது."—என்று அவர்களுக்கு ஆண்டவன் கியாமத்து நாளில் அறிவிப்பான்.

ஆண்டவன் தன் இயற்கை நற்குணத்தால் மனிதர்களுக்கு நல்வழிகாட்டும் பொருட்டு 1,24,000த்துக்கு அதிகமான நபிமார்களை இவ்வுலகில் காலதேச வர்த்தமானத்துக்குத் தக்கபடி அப்போதைக்கப்போது அனுப்பியுள்ளான். அந்த நபிமார்களின் வழியில் சென்று நாமும் பலாஹின் முழுவெற்றியும் பெறுதல் வேண்டும். இக்காரணத்தால் தான் இறைவன் எமது திருநபியவர்களைக் குறித்துச் சொல்லும்போது இதனடியில் கண்டவண்ணம் தனது குர்ஆன் ஷரீபில் கூறியுள்ளான்: "அவன், எழுதப்படிக்கத் தெரியாத அரபிகளுக்குள்ளேயே ஒரு தூதரையெழுப்பி அவர்களுக்குத் தன் நன்மாராயங்களைப் படித்துக்காட்டவும் அவர்களைப் பரிசுத்தம் செய்து செம்மைப்படுத்தவும் அவர்களுக்குச் சுவிசேஷப்புத்தகத்தையும் ஞானத்தையும் போதிக்கவும் செய்தான். அதற்குமுன் அந்த அரபிகள் பகிரங்கமான வழிகேட்டிலிருந்தார்கள்." "அவர்களைப் பரிசுத்தம் செய்து செம்மைப்படுத்துவ" தென்பது பிசாசுகளுடையவும் துஷ்டமிருகங்களுடையவுமான தீயகுணங்களை விட்டும் மனிதர்களைச் சுத்தமாக்குவதைக்குறிக்கும். அவர்களைச் சுத்தப்படுத்திச் சுவிசேஷப் புத்தகத்தையும் ஞானத்தையும் போதிப்பதால் மனிதர்கள் மலக்குகளுடைய நிலைமையை யடைகின்றார்கள். ஆதலின் குர்ஆன் ஷரீபில் போதிக்கப்படும் முறைகளை அனுஷ்டித்து

வருவீர்களேல் மனித ஜன்மத்துக்குத் தகுதியில்லாத தீக்குணங்களையெல்லாம் கைவிட்டு அமரர்களுக்குரிய அழகியகுணங்களின் நடுப்பட்டுக்கடைசியில் பரிபூரண மனிதர்களாவீர்கள் இதுதிண்ணம்.

(இன்னும் வரும்)

இவ்விஷயம் ஆலிமுர்ரப்பானீ ஹஸரத்து இமாமுல்கிராம் ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் அபூஹாமிது முஹம்மதுல் கஸ்ஸாலீ றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கருத்தை அனுசரித்து எழுதப்பெற்றது. இவ்வாறே இன்னும் பல அரியவிஷயங்கள் அவரது அரிய நூல்களினின்றும் அடிக்கடி இப்பத்திரிகையில் எழுதப்படும்.

ப—ர்.

## ஜிஹாதேகபீர்

நம்பர்—1

## ஸன்மார்க்க போதினி

(இஷா அத்தே இஸ்லாம்)

“ஜிஹாதேகபீர்” என்னும் இப்புத்தகத்தில் நம்மால் கூடுமான விவரத்துடன் ஸன்மார்க்க (இஸ்லா மார்க்க)ப்பரவுதலின் அவசியத்தைப் பற்றியும், அப்படிப் பரப்புவதில் எவ்வளவு அனுகூலங்களை நாம் எதிர்பார்க்கலா மென்பதைப் பற்றியும், எவ்விதமாக நம் ஸன்மார்க்கத்தைப் பரவுதல் செய்யக் கூடும் என்பதைப் பற்றியும், இதற்காக நாம் அனுஷ்டிக்க வேண்டிய முறைகள் இன்ன இன்னவை யென்பதைப் பற்றியும் சற்று ஆராய்வோம்.

இஸ்லாத்தின் பரவுதலைப்பற்றி எழுதுவதில், எமது நோக்கம், முக்கியமாக விவாதங்களை ஒதுக்கிவிட்டு இஷா அத்தே இஸ்லாத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து அதனாலுண்டாகும் அனுகூலப் பிரயோசனங்களை வெளியிடுவதிலேயே நாம் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும் என்பதே. ஒருவர் கோரிய காரியத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயலும் போது



அதற்கு விரோதமாக அனேக இடையூறுகள் உண்டாகக் கூடும். இவ்விதமாகவே நல்வழி (ஸுன்னத் துல்லாஹ்) களுக்கு எண்ணிறந்த இடையூறுகள் நேரிட்டிருக்கின்றன. மிகப் புண்ணியமானதும் அதிக பிரயோசனமுள்ளதுமான விஷயங்களில் கடினமும் கடோரமுமான விரோதங்களெல்லாம் நேரிடுவது சகஜமே.

ஸன்மார்க்கப் பரவுதலைக் கடமையாகக் கொண்டவர்கள் முதன் முதல் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமாவது: அயல் சமய வாதிகள் (இதர மதத்தினர்) நம்மை எதிர்ப்பதை விட நம்மவர்களின் விரோதமே சில சமயங்களில் அதிக பயங்கரமாக இருக்கும்; ஆனால் இப்போதைய நிலைமையில் ஸன்மார்க்கத்தார் தாம் ஏற்றுக்கொண்ட நன்மார்க்கப் பரவுதலுக்காகத் தமக்குள்ளேயிருக்கும் விரோதங்களை அசட்டை செய்து தாம்கோரிய பாதையில் வேலை செய்ய வேண்டி நேரிடும். நாம் இந்நற்காரியத்தில் பின்னுமெவர்களிடமிருந்து மிக்க உதவியும் தக்க உற்சாகமும் பக்கத்துணையும் ஒரு மனதாக ஒத்துழைக்குந் தன்மையும் காணமுடியுமோ அவர்களே முதன் முதல் நம்மீது விரோதம் பாராட்டி நம்மை எதிர்த்து நாம் எதிர் பாராத இடையூறுகளை எல்லாம் உண்டாக்குவார்கள். நம் பிரியமான சகோதரர்களே! நற் காரியங்களில் நமக்குக் கைகொடுத்து உதவிபுரிவதற்குப் பதிலாக அக்காரியம் வேருடன் அதன் நாமதேயமின்றி அழியும்படி நம்மவர்களே விரும்புவார்களாதலின் நமக்குள்ளேயிருக்கும் விரோதத்தையும் அதனால் நேரிடும் சங்கடங்களையும் அன்னியரால் அப்பால் நேரிடக்கூடிய விரோதத்தின் அளவையும் நாம் முன்னமே கண்டறிந்து கொள்ளவேண்டும். நம் நற்காரியங்களுக்காக ஆண்டவனைச் சார்ந்து அதற்கு விரோதமாயுண்டாகும் எல்லா இடையூறுகளையும் இம்சைகளையும் தொந்தரைகளையும் கவனியாமல் “கருமமே கண்ணாயினார்,” என்றபடி நடப்போமாக.

அவனன்றி ஒருவரும் அவ்வெண்ணங்களை (இஷா அத்தே இஸ்லாத்துக்கு வேண்டிய நம் நல் எண்ணங்களை) அறியார்; அவனடியார்களுள் சிலர் (சில முஸ்லிம்கள்) தங்கள் சகோதரர்களுடன் எதிர்த்து விரோதிப்பதே தங்களுடைய முக்கிய முதல் கடமையாகக் கொண்டிருப்பதனால் அப்படிப்பட்டவர்கள் ஆண்ட

வதுக்கு மாறான செயலைச் செய்யத் துணிவு கொண்டவர்களா வார்கள். நீங்கள் நம் (இஸ்லாத்தின்) ஸன்மார்க்கத்தின் குஷ்கலமான நோக்கங்களை அகத்திலுடையவர்களாகவும் அதற்காக உழைப்பவர்களாகவும் காணப்படுகின்றதனால் நமக்குள்ளிருக்கவேண்டிய ஒற்றுமையில் எங்கள்பால் யாதொரு தவறுதல் நேரிடினும் அதைப் புறக்கணித்து நம் நல்லெண்ணங்கள் நன்கு முடியும்படி உதவி புரிவீர்களாக.

நாம் ஒருவரையும் இச்சமயம் குறைவாகவாவது தாழ்ச்சியாகவும் பேசவே மாட்டோம். இனி இச்சன்மார்க்கம் பரவுதல் விஷயமாய் நேரிடக்கூடிய கஷ்டங்களையும் விரோதங்களையும் அதனால் உண்டாகும் இடையூறுகளையும் பற்றி எழுத வேண்டியது அவசியமாகிறது; ஸன்மார்க்கத்தைப் பரப்ப முயலும் ஒவ்வொருவரும் தம்மை ஒரு கூலிக்காரனாகப் பாவித்துத் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட வேலையை அதிக துரிதமாகவும் செம்மையாகவும் செய்யக் கடமைப்பட்டவராக நினைக்கவேண்டும். இப்படிப் பட்டவர் தம் மேல் கல் அல்லது மண்ணால் அடிவிழுந்த போதிலும் அல்லது பிறர் வீண் வாதம் செய்வாராயினும் அதை எல்லாம் கவனியாது தம் கூலி வேலையில் கண்ணுங் கருத்துமாயிருந்து அதற்கு நேரிடும் இடையூறுகளை இறைவனிடத்தில் ஒப்படைத்துத் தம் முழுப் பலத்துடன் மனப் பூர்வமாகத் தாம் ஏற்றுக் கொண்ட வேலையில் உழைப்பார். இதுவுமன்றித் தமக்கிட்ட வேலை நன்கு முடிவதற்குத் தடையாக இருக்கும் சகல காரணங்களையும் கண்டுபிடித்து அவற்றிற்கான பரிகாரங்களைச் செய்து தம் காரியங்களைச் செம்மையாய் முடிப்பார். தாம் ஏற்றுக் கொண்ட கருமத்தைச் செய்வதில் காயமடைந்தால் அதற்குப் பதில் காய முண்டாக்கவேண்டுமென்னும் எண்ணத்தை விலக்கி இவ்வகைப் பழிவாங்கும் விஷயமாய் ஒருவர் செய்யக்கூடிய முழு முயற்சியையும் ஏக பலத்தையும் தாம் முடிக்கவேண்டிய காரியத்தை நிறைவேற்றுவதில் உபயோகிக்க வேண்டும்.

ஸன்மார்க்கப் பிரசாரகனின் (இவரே அத்தே இஸ்லாம்) எண்ணமானது உத்தமமான எண்ணம். எவரொருவர் இந்தத் தன்மேற் கொண்டவராகக் காணப்படுகிறாரோ அவர் வாஸ்தவத்தில் சிறு சிறு



தடைகளையெல்லாம் அலட்சியம் செய்து தம் காரியத்திலேயே கண்ணாயிருப்பார்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்,"

என்பதே போல் எமது காரியத்தின் மேலேயே கண்ணாயிருப்போமன்றிப் பிறரின் இடையூறுகளைக் கவனியோம்.

இப்படி யில்லாவிடின் முக்கியமான மகா உன்னத காரியங்களெல்லாம் முடிவடையாமல் போவதோடு சாதாரண விஷயமும் கைகூடுவதில்லை. சிறு சிறு தடைகளையெல்லாம் ஒரு பொருளாக எண்ணும் ஒருவர் உலகத்தின் ஒவ்வொரு கோடியிலும் மூலை முடுக்கிலும் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த ஸன்மார்க்கத்தை எப்படிப் பரப்பமுடியும்? இவ்வரிய பெரிய காரியம் எத்தன்மையையுடையதென்பதும் அது நன்கு முடிவதற்காக நம்மிடமுள்ள உபகரணங்கள் இன்னவை யென்பதும் நமக்குத் தெரிந்திருக்கின்றன. அந்த உபகரணமானது ஆண்டவன் திருநாமமே தவிர வேறொன்றுமில்லை. இக்காலத்தில் இஸ்லாம் அதிக அபாய நிலைமையில் தத்தளிக்கும் பொழுது நமக்குள்ள அற்ப பலத்தையும் சொற்ப சக்தியையும் ஒருவருக் கொருவர் சச்சரவு செய்வதிலும் பழிச்சொல் சுமத்துவதிலும் பிரயோகிப்பது மதி கேடாகும்; ஆதலின் நம்மையே நாம் செம்மை செய்வதற்காக நடந்தேறும் இவ்விஷயத்தில் குந்தக முண்டாக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன், "நுண்ணறிவானது மூமினிடத்திலிருந்து காணாமற் போன ஒரு பொருளாகும்," என்கிற திருவாக்கின்படி எதிரிகள் தங்கள் நுண்ணறிவின் குறைவால் எடுத்துக் காண்பிக்கும் குற்றங்களை நாம் கவனியோம். "அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு எனக்கு நல்லுதவியில்லை," "அவன் நல்ல நேயனும் தக்க உதவிக் காரனுமாயிருக்கிறான்," என்னும் இத் திருவாக்கியங்களை அருளிய நாயன் துணையால் எவ்வித விரோதக் கட்சியும் பயன்படாது. அந் நாயனுடைய திருவுள்ளத்திற்குத் தகாத விஷயத்திற்

காக இவ்வுலக முழுதும் ஒன்று கூடி உழைத்த போதிலும் அவை தொன்றும் பயன்படாமல் நஷ்டமே நேரிடும்.

இம் முகவுரையிலேயே என் சகோதரர்களை இன்னொரு விஷயத்தின் பொருட்டும் யான் வேண்டிக்கொள்ள வேண்டியது அவசியமென எனக்குத் தோன்றுகின்றது. குர்ஆன் ஷரீபு என்னும் திருவேதம் எல்லாப் பொருள்களுமடங்கிய மற்றெல்லா வேதங்களையும் தன்னுள்ளடக்கிய ஒப்பற்ற ஒரு திருவேதமாக இருக்கிறது. இது பரலோகப் பிரயோசனத்திற்கான சகல காரியங்களையும் ஒருங்கே நமக்களிக்கிறது. ஆதலால் ஸன்மார்க்கப் பரவுதலைப் போன்ற மிகவும் பெருமை வாய்ந்த விஷய சம்பந்தமாய் இப்பரிசுத்த திருவேதம் மௌனமாயிராமல் மற்ற விஷயங்களை எவ்வளவு விஸ்தாரமாகவும் தெளிவாகவும் சொல்லுகின்றதோ அது போலவே ஸன்மார்க்கப் பரவுதலைப் பற்றியும் எல்லாவித வழிகளாலும் போதுமான அளவு தன் கிரணத்தின் ஒளியைக் கொண்டு பிரகாசிக்கச் செய்திருக்கின்றது. கிஞ்சித்தும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் பரிஷ்காரமாய் விளங்கச் செய்யும் பெருமை பொருந்திய மகா உத்தம குணத்தினால் இத்திருவேதம் மற்றெல்லா வேதங்களை விட மேன்மையுள்ளதாயும் சிறந்ததாயுமிருக்கிறது. ஒவ்வொரு குறைவைப் பற்றியும் தானே எடுத்துரைத்துப் பிறகு அதற்கான காரணத்தையும் அதற்குள்ள பரிகாரத்தையும் தானே விளக்குகின்றது. மற்றொரு சிறப்பு வாய்ந்த குணத்தால் மற்றெல்லா வேதங்களைக் காட்டினும் எம் திருவேதம் மிகச் சிறப்பும் தூய்மையும் சத்தியப் பொருளும் அடங்கிய தனி வேத மாக இருக்கிறது. இத்திருவேதத்தில் அருமையும் பெருமையும் வாய்ந்த ஆச்சரியமான சகல விஷயங்களைப் பற்றிய விவரமும் சொல்லப் பட்டிருக்கிறது "அவர்கள் உம்மிடம் ஓர் உபமானத்தைக் கொண்டு வருவதில்லை, ஆனால் (அப்படிக் கொண்டு வந்த நேரத்தில்) நாம் உம்மிடம் உண்மையானதையும், விளக்கியுரைப் பதில் அதிக அழகானதையும் கொண்டு வாராமலிருந்ததில்லை?" இதன் தாத்பரியம், "எப் புதிதான விஷயத்தை ஜனங்கள் சொல்லக்கூடும்? எது விஷயமாக முன்னமே நாம் சத்தியத்தினாலும் காரியார்த்தத்தினாலும் திரப்பமான தீர்மானத்துடன் மிகவும்



அழகாக அதன் பொருளை நாம் உமக்குக் காட்டாதது?" என்பதே. ஜனங்கள் ஏன் இங்குமங்கும் பரிபூரண நன்மாராயத்திற்காக அலைய வேண்டும்? சிற்சில சமயங்களில் மனிதர் ஏதேனுமொன்றைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்னும் ஆவலுடன் ஒரு ஜாதியாரின் பக்கம் சாய்கிறார்கள்; இனியொரு சமயத்தில் இனியொரு ஜாதியாரின் நடையைப் பார்த்துத் தாமும் அம்மாதிரியாக நடந்தால் தமக்கு அனுகூலம் (அதாவது ஜயம்) உண்டாகுமென்று எண்ணுகிறார்கள். ஒருவன் தன் மனோ கற்பனையால் ஒரு புறம் ஓடும்போது மற்றொருவன் அவனுக்கு நேர் எதிராகவே வருகிறான்; இவர்கள் எல்லாரும் தப்பான பாதையிலிருக்கிறார்கள். ஆண்டவன் கிருபையைக் கொண்டு ஒரு ஸன்மார்க்கர் (முஸ்லிம்) மற்றொரு சமயவாதிக்குக் கீழ்ப்பட உடன்பட்டவராக இல்லை. ஆனால் மற்றவர்கள் இவருக்கு (முஸ்லிமுக்கு) உடன்பட்டவராக இருக்கிறார்கள். மற்ற ஜாதியார்கள் தங்களுடைய தப்பான மார்க்கத்தைப் பரவச் செய்வதற்கான வழிகளையும் துறைகளையும் எமது குர்ஆன் ஷரீபு என்னும் திருவேதத்தினின்றும் அனுஷ்டித்திருக்கிறார்கள். திருவேதத்தில் பிரத்தியக்ஷமாகவும் பகிரங்கமாகவும் உபதேச விஷயங்கள் இருக்கும் போது தங்கள் மனோ பாவத்தால் கற்பனை செய்த விஷயங்களைக் கொண்டு ஸன்மார்க்கர்கள் ஏன் தடுமாற வேண்டும்? இதற்காகவே என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படியான பரிசுத்த உபதேசங்கள் முற்காலத்திற்கும் இக்காலத்திற்கும் இனி எக்காலத்திற்கும் பொருத்தமுள்ளதாக அமையும்படி பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னமே அன்புடன் அல்லாஹு தஆலா தன் திருவேதத்தில் அருளியிருப்பது நமக்குப் போதுமானதாயிருக்கிறது. உறுதியாகவும் விடாமுயற்சியுடனும் ஸன்மார்க்கர்கள் அவற்றை அனுசரிப்பார்களாயின் அவர்கள் மற்றெந்த ஜாதியாரையும் எதிர் பார்த்தவராக இருக்கவும் தம் மனோபாவங்களின் கற்பனையில் சார்ந்து அதில் நம்பிக்கை வைத்து உழல்பவராகவும் அலைய அவசியமிராது.

தம் விரோதிகளைப்பற்றி நபிநாயகம் அவர்கள் ரட்சக நாயனிடம் முறையிட்ட விதம் மிகவும் விசனிக்கத் தக்க விஷயமே?

அதுயாதெனின், "என் இறைவனே! என் கூட்டத்தார் இந்தக் குர்ஆனை (அங்கீகரிக்காமல்) மெய்யாகவே கைவிடப்பட்டதாக ஆக்கி விட்டார்கள்," என்பதாகும்.

இதற்கு இணங்கவே இக்காலத்து முஸ்லிம்கள் தமக்குத் தாமே அத்தாக்ஷிபாக இருக்கிறார்கள். நேர்வழியை யடையப் பல வழிகளாலும் உண்மையை விளக்கும் இப்பரிசுத்த வேதமிருக்கும்போது அதை விட்டுப் பலர் தத்தளிக்கும் மனத்துடன் வழி தடுமாறி அலைவது எவ்வளவு வெட்கத்திற்கும் தாழ்ச்சிக்கும் இழிவுக்கும் . காரணமாயிருக்கின்றது? இச் சன்மார்க்கர்களையே (முஸ்லிம்களையே) ஒவ்வொரு விஷயத்திலும் எதிர்பார்த்தவர்களாக மற்றெல்லா ஜாதியாருமிருக்க, அவர்களை முஸ்லிம்கள் ஒவ்வொரு காரியத்திற்கும் எதிர் பார்ப்பது எவ்வளவு இகழ்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் காரணமாக இருக்கிறது? தங்கள் வீட்டில் புதையலிருக்க அதைக்கண்டறிந்து தோண்டியெடுத்துப் பிரயோசனமடையாமல் அயலாரிடம் பைசாவுக்குப் பிச்சைகேட்கத் தலைக்கடைதோறும் நிற்பார்களாயின் இவர்கள் எவ்வளவு துர்ப்பலமானவர்களாகவும் துரதிருஷ்ட முள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்?

நீங்கள் முஸ்லிம்களின் பழய மேன்மையைப் பற்றி நிதானிப்பீர்களேல் ஆண்டவனால் அவர்கள் எவ்வளவு மகா வுன்னத உப்பரிகையில் நிற்பாட்டப் பட்டவர்களாயிருந்தார்களென்றும் இப்போது எவ்வளவு பாதாளத்தில் கிடக்கின்றார்களென்றும் நீங்கள் செம்மையாக அறிவீர்கள். தன்னுள்ளே எல்லாச் சாஸ்திரங்களையும் ஒருங்கே உட்கொண்டதாக விருக்கும் எமது திருவேதமானது ஒரு பெரும் புதையலாயிருக்க அதில் நமக்கு வேண்டிய அவசியமான உபதேசத்தைத் தேடுவீர்களேல் நிச்சயமாக நமக்கு வேண்டியது கிடைக்கும். இப்பரிசுத்த வேதத்தில் உங்களுக்கு வேண்டிய பெரும்பாக்கியமும் செல்வமும் போதுமான அளவிற்கு மிஞ்சியிருக்கின்றன. அதில் கிடைக்கும் நன்மாராயங்களை உறுதியாகவும் விடா முயற்சியுடனும் கடைப் பிடித்து நடப்பீர்களேல் வாஸ்தவமாக நீங்களேன் பலவழிகளிலும் அலைந்து திரியவேண்டும்?

இப்பரிபூரண உத்தம வேதத்தைக் கைவிட்டு நீங்களேன் கண்களை மூடிக் கொள்ளுகிறீர்கள்? சொற்ப முயற்சியால் நீங்கள்



இப்பெரும் பாக்கியத்தை அடையக் கூடும். உங்களில் ஒவ்வொருவரும் தம் தம்முடைய நாட்டத்தையும் அபிப்பிராயத்தையும் தம்முடைய குருவாகவும் தெய்வமாகவும் கொண்டாடுகிறீர். அவ்வபிப்பிராயங்களுக்கு முழு உலகத்தையும் அடிமையாக்க விரும்புகிறீர்கள். அவ்வாறின்றி ஸன்மார்க்கப் பரவுதலின் காரியத்தை நானாவித நிலைமையைக் கொண்டும் ஆழ்ந்து யோசிக்கும் சமயத்தில் நாம் திருவேதத்தின் தூய்மையான நன்மாராயத்தைத் தழுவியே நடக்கிறோம் என்பதையும், நம்முடைய தற்கால நிலைமைக்கு அவசியமான சாராம்சம் பொருந்திய நல் வழிகளை இப்புத்தகம் காண்பிக்கின்றதென்பதையும், அவ்வழிகளின் பிரகாரம் நடப்பதனால் நம் எண்ணங்களில் முதிர்ச்சியடைந்து நாம் விரும்பும் முழுப் பலனையும் அடையக்கூடுமென்பதையும் எண்பிப்போம்.

(தொடரும்)

முஸ்லிம் நேசன்.

## கிலாபத்

லாஹூரிலிருக்கும் மௌலானாமௌல்வி (அமீரெ கௌம்) முஹம்மதலிசாகிப், எம். ஏ. எல். எல். பி, அவர்களால் எழுதப் பெற்றது.

ப-ர்.

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹுத்தஆலாவின் திரு நாமத்தால்.

பூவுலகின் கண் சென்ற சில ஆண்டுகளாக நடந்தேறி வந்த மகாபாரதயுத்தத்தின் பயனாகத் துருக்கி ராஜ்யத்தின் நிலைமையானது ஐரோப்பாவிலுள்ள வல்லரசின் ராஜ்யதந்திரிகளால் தீர்மானிக்கப்படவேண்டிய பரிதாபகரமான முடிவுக்கு வந்து விட்டது. துருக்கியின் ராஜ்யவிஷயமானது இப்பொழுது மகாசிக்கலான ஒரு பிரச்னையாக ஏற்பட்டுவிட்டது; இப்படிப்பட்ட சிக்கலில் அகப்பட்டுக்கொண்டதனால் தான் சமாதானக் கான்பரன்ஸிலுள்ளவர்கள் துருக்கியின் உடன் படிக்கை சம்மந்தமான காரியத்தை அடிக்கடி ஒத்திவைத்துக்கொண்டே வந்தார்கள். சமாதானக் கான்பரன்ஸி

ளுள்ள வெற்றிபெற்ற தேசத்தவர்களின் எதிரில் தோன்றிய எல்லாவிதக்கஷ்டத்திலும் முஸ்லிம் கிலாபத் விஷயமானது மகாசிக்கலாய்த்தோற்றிற்று. முஸ்லிம்களின் ராஜ்யங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்தவ ஜாதியாரின் பேராசைக்கு இரையாய்ப்போனதை நாம் கண்கூடாகக் கண்டுகொண்டே வந்திருக்கிறோம்; ஆனால் கடைசியாக அந்தத் துருக்கிதேசத்துடன் நேசதேசத்தார் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையை நோக்கும்போது அது துருக்கி ராஜ்யத்தின் ராஜாங்கவிஷயத்தை மட்டும் பாதிப்பதாயில்லாமல் இன்னும் அதிக ஆழமான அர்த்தத்தையும் அது உட்கொண்டிருப்பதாய்க் காணப்படுகிறது. உலகமுழுதுமுள்ள முஸ்லிம்களின் மதசம்பந்தமான கிலாபத் விஷயத்தையே அவ்வுடன் படிக்கை பாதிக்கிறாற்போல் தோன்றுகிறது. இப்படிப்பட்ட முக்கியமான பிரச்னையை நன்கு யோசியாமல் துருக்கி (ஸெவர்ஸ்) உடன் படிக்கையில் கையெழுத்து வாங்கி விட்டதால் தான் இப்போது அவ்விஷயம் மறுபடியும் இவ்வுலகமுழுதும் ஒரு பெருங்குழப்பத்தை யுண்டுபண்ணி விட்டது. ஐரோப்பிய நாடுகளில் இப்போது ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பான நிலைமையை நோக்கும் போது துருக்கி விஷயம் மறுபடியும் திருத்தி யமைக்கப்படவேண்டிய அவசியமான நிலைமைக்கு வந்துவிட்டதென்றே சொல்லலாம். இனியேனும் இரண்டாமுறை அவ்வுடன் படிக்கையைத் திருத்தியமைக்கும்போது ஐரோப்பிய வல்லரசுகள் எமது முஸ்லிம்களின் மதசம்பந்தமான கிலாபத் விஷயத்தை நன்றாகத் தீர்க்காலோசனை செய்து முடிவுசெய்வார்களாக.

தற்போது ஐரோப்பிய வல்லரசுகள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய முதல் விஷயம் யாதெனின், "முஸ்லிம்களின் கிலாபத் என்றாலென்ன?" என்னும் விஷயத்தை அவர்கள் நன்குணர்ந்து கொள்ளவேண்டும் என்பது தான். இஸ்லாமார்க்க சம்பந்தமாய் ஐரோப்பாவிலுள்ளவர்கள் உண்மையை யுணர்ந்துகொள்ளாமல், தவறாகவும் தாறுமாறாகவும் பரப்பப்பட்டு வரும் விஷமச்செய்திகளைப் படித்துவிட்டு எமது மதத்தைப்பற்றி மாறுபாடான அபிப்பிராயத்தை யுடையவர்களாயிருந்து வருகின்றனர். இதனால் ஆதிமுதல் இஸ்லாத்துக்கு விளைந்திருக்கும் கஷ்டங்கள் அநந்தம். இப்



படிப்பட்ட கஷ்டங்களை விளைவிக்கக்கூடிய தாறுமாறான தப்பு விஷயங்களுக்குக் காரணம் அநேகமுளவாயினும் அவற்றுள் முக்கியமானது யாதெனின், இவ்வுலகில் கிறிஸ்தவமார்க்கத்துக்கு எதிரிடையான மதங்கள் எண்ணிறந்தன இருக்கும்போது எமது இஸ்லாத்தையே முதன்மையான முக்கிய எதிரியென்று கிறிஸ்தவர்கள் நினைப்பது தான். ஆதிமுதல் இந்த இஸ்லாத்தையே ஐரோப்பியர்கள் தமது பெரிய விரோதியென்று தவறாகக்கருதி வருகின்றனர். ஆனால் நேசதேசத்தினர் இவ்வுலகுக்கு நியாயம் செய்யக் கடமைப்பட்டவராயிருத்தலின் அவர்கள் மறுமுறையும் துருக்கி உடன் படிக்கையை மாற்றி அமைக்கும்போது முஸ்லிம் உலகத்துக்கே மனக்கவலையை விளைக்கக்கூடிய கிலாபத் விஷயத்தைத் திருப்திகரமாய் அமைக்கவேண்டிய நிமித்தம், தாங்கள் ஏற்கனவே இஸ்லாத்தைப்பற்றிக் கற்றும் கேட்டுமிருந்த தப்பபிப்பிராயங்களையெல்லாம் தங்கள் மனதை விட்டு ஒதுக்கிவிட்டு அப்பால் அந்த கிலாபத்து விஷயத்தைப்பற்றிப் பரிசீலனை செய்வார்களாக. இதன் கீழ்க்காணும் விஷயத்தை மேல்நாட்டார்கள் சிறிது உற்று நோக்குவார்களாயின் இஸ்லாத்தில் கிலாபத்தென்பது இன்னதென்பதையும் இந்த கிலாபத்துக்கும் தங்களுடைய போப்பு துரைக்கும் உள்ள வேறுபாடு இப்படிப்பட்டதென்பதையும் நன்கு உணர்ந்துகொள்ளுவார்கள். கிறிஸ்தவர்களுக்குப் போப்புதுரை எங்ஙனமிருக்கின்றாரோ அங்ஙனமே எமது முஸ்லிம்களுக்குள் கலீபாவும் அமைந்திருப்பதாக மேல் நாட்டார்கள் கருதியிருக்கின்றனர். இக்காரணத்தால் தான் லாஹூரில் வெளியாகும் "ஸிவில் அண்(டு)மிலிட்டரி கெஸட்" என்னும் பத்திரிகையில் அதன் ஆசிரியர் 1920 ஜனவரி 13-ந் தேதியில் கீழ்க்கண்டவிதமாகப் பிரசுரம் செய்யலாயினர்.

"இந்திய முஸ்லிம்கள் மத விஷயத்தையும் ராஜாங்க விஷயத்தையும் ஒன்றாகக்கலந்து கலக்கத்தை யுண்டுபண்ணிக்கொண்டு விட்டபடியால் அவர்கள் (துருக்கி உடன் படிக்கை சம்பந்தமான) பிரச்னையைச் செவ்வனே உணர்ந்துகொள்ள முடியாத விதத்திலிருந்து வருகின்றனர். துருக்கி விஷயத்தைப்பற்றிப் பேசும்போதெல்லாம் "கிலாபத்" என்னும் பதத்தைத் தாராளமாய் உபயோகப்படுத்தி வருவதால் மேலே சொன்ன கலக்கமானது இன்னும் அதிக

மாகக் கலக்கமடைந்துவிட்டது. எமக்குத் தெரிந்தவரையில், துருக்கி சுல்தானிடம் அமைந்து கிடக்கும் முஸ்லிம் உலகத்துக்குரிய கலீபாவாக இருத்தற்குவேண்டிய பாரமார்த்திக பதவியில் ஒரு சிறிதையேனும் குறைக்க வேனும் பலஹீனப்படுத்த வேனும் யாதொரு கடுகத்தனையான எண்ணமாவது ஆசையாவது நேசதேசத்து ராஜ தந்திரிகளிடம் இருப்பதாய்க் காணப்படவில்லை; ஆனால் சுல்தானுடைய கிலாபத் நிலைத்திருக்கவேண்டுமாயின் அவருடைய ராஜ்யங்களெல்லாம் அப்படியே சிதைவுறுமலிருக்கவேண்டுவது அவசியமென்று நினைக்கும்படி இந்திய முஸ்லிம்களை ஆக்கிவிட்டார்கள். ஆனால் மதசம்பந்தமான தலைவர்களுக்கு இராஜாங்கமும் இருக்க நேரின் அவருடைய் மதத்தலைமைக்கும் ராஜாங்க விஷயத்துக்கும் ஒன்றும் சம்மந்தமில்லையென்று நாம் சரித்திர பூர்வமாய் உணர்ந்துகொண்டிருக்கிறோம். உதாரணமாக, இத்தாலியாதேசமானது இன்னும் ரோமன் கதோலிக் மார்க்கத்திலேயே யிருந்து வந்தபோதிலும் போப்புதுரையின் ராஜ்யங்களை 1870-ம் ஆண்டில் சேனுபலத்தைக்கொண்டு பிடுங்கிக்கொள்வதற்கு அத்தேசம் சற்றும் பின்வாங்க வில்லை.”

ஐரோப்பா கண்டமுழுதும் அமைந்து கிடக்கும் கிலாபத் சம்மந்தமான இப்படிப்பட்ட துர்அபிப்பிராயமுள்ள கொள்கையின் மூலத்திலுள்ள தவறை நோக்கும் போது கிறிஸ்தவ உலகத்தில் போப்புதுரையின் நிலைமை எப்படியிருக்கின்றதோ அப்படியே முஸ்லிம் உலகத்தில் கிலாபத் விஷயமும் இருப்பதாக அம் மேல்நாட்டார் நினைத்து வருகின்றாரென்பது செவ்வனே விளங்குகிறது. இப்படி அவர்கள்நினைப்பது தான் முழுமோசமாகவும் ஏமாற்றத்துக்குரிய வழியாகவும் காணப்படுகிறது. முதன் முதலாய் நாம் கவனிக்கவேண்டியது யாதெனின், கிறிஸ்தவ உலகத்துக்குப் போப்புதுரை ஒருவர் இருக்கவேண்டு மென்பது ஏசுகிறிஸ்துவின் யாதொரு திருவாக்கியத்தின் ஆதாரத்தின் மீதும் அமைக்கப்படவில்லை யென்பதுதான். போப்புதுரை இருக்கவேண்டுவது அவசியமென்பதற்கு ஏசுநாதரின் ஆதாரம் ஒன்றுமில்லாமலிருப்பதோடு அக்கொள்கையானது அம்மார்க்கத்தில் இருக்கவேண்டிய அவசியமான சித்தாந்தமாயுமில்லை. இவ்வாறின்றி எமது இஸ்லாத்



திலோ கிலாபத்விஷயமானது எமது திருமறையின் தக்கமேற்கோளின்மீது அமைக்கப்பட்டிருப்பதோடு அதற்கனுசரணையான பல ஹதீது (நாயகவாக்கியங்)களும் உண்டாயிருக்கின்றன. இன்னாரைத்தான் கலீபாவாக நியமிக்கவேண்டும் என்னும் விஷயத்தில் ஸுன்னிகளுக்கும் ஷியாக்களுக்கும் இடையில் அபிப்பிராய பேதம் இருந்தபோதிலும் முஸ்லிம் உலகத்துக்கு கலீபா ஒருவர் அவசியமாக இருக்கவேண்டியது ஒருவேதக்கட்டளை யென்பதை எந்த முஸ்லிமும் மறுத்தற்கு முடியாது மேலும் போப்புதுரையானவர் ஸெயின்ட் பீட்டர் துரையின் அடிக்கினையாயிருந்து கொண்டு அவருடைய சுதந்தரங்களுக்கெல்லாம் அதீனகர்த்தராய்த் “தேவலோக ராஜ்ய”த்தின் வாயிற்காப்போராக அமைந்து பாரமார்த்திகத்துக்குரிய விஷயங்களை மட்டும் கவனித்து வருகின்றார். கிறிஸ்தவ சகிசேஷங்களில் ஸெயின்ட் பீட்டர் துரைக்கு என்ன என்ன மேன்மை மரியாதையான அடைமொழிகள் வழங்கப் பட்டிருக்கின்றனவோ அப்படிப்பட்ட அடைமொழிகளையே போப்பு துரைகளுக்கும் உபயோகப்படுத்திவந்ததனால் போப்புதுரை இருக்கவேண்டுமென்னும் கொள்கையானது அம்மார்க்கத்தில் வேரூன்றத் தலைப்பட்டது. ஆதியில் ஸெயின்ட் பீட்டருக்கு உலக சம்மந்தமான ராஜ்யாதிகாரம் இல்லாமையால் அவரைப் பின்பற்றி வந்த ஆதிகாலத்துப் போப்புமார்களுக்கு அநேக நூற்றாண்டுகள் வரையில் லௌகிகராஜ்யாதிகாரம் இல்லாமலேயிருந்தது. கடைசியாக, கி-பி எட்டாவது நூற்றாண்டில் தான் போப்புமார்கள் கொஞ்சங் கொஞ்சமாய் இகலோக ராஜ்யாதிகாரத்தை ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டனர்; ஆகவே அவர்களுக்குக் கிடைத்த அதிகாரமானது அதிருஷ்டவசத்தால் கிடைத்ததேயாகும். இக்காரணத்தால்தான் மறுபடியும் போப்புதுரைகளின் ராஜ்யாதிகாரத்தைப் பிடுங்கிக்கொள்வது கிறிஸ்தவ உலகத்துக்கு எவ்விதமான வேதனையையும் உண்டுபண்ண மாட்டாது; இதனால் போப்புதுரையின் பாரமார்த்திக பதவியும் தாழ்மையுறாது. ஆனால் இஸ்லாத்திலோ கிலாபத்தானது மதத்தோடு மதமாய் ஐக்கியப்பட்டிருப்பதல்லாமல் ஆதிமுதலே அக்கொள்கையானது முஸ்லிம் உலகில் கையாளப்பட்டே வந்திருக்கிறது. இஸ்லாமிய கலீபாவுக்கு ராஜ்யாதிகாரம் ஏற்பட்டது கிலாபத்து ஏற்ப

ட்ட நாள்முதலே யிருந்துவருகிறது. இன்னும் உற்று நோக்குமிடத்து முதல்கலீபாவுக்கு முன்பிருந்த இஸ்லாத்தின் தலைவரான எம்பெருமானார் முஹம்மது நபி (இவர்களுக்கு இறைவன் எல்லாப் பெருமையும் கொடுத்தருள்வானாக) இவர்களின் காலமுதலே ராஜ்யாதிகாரம் இஸ்லாத்தில் இருந்துவருகிறது. இஸ்லாமார்க்கத்தை இந்நிலைமையில் உறுதிப்படுத்தி வைத்த எம்பெருமானாரின் காலத்திலேயே ஏற்பட்ட ராஜ்யாதிகாரம் தான் நாளிதுவரையில் கலீபாக்கள் மூலமாய் இம்மார்க்கத்துக்கு அந்தரங்க உயிராயிருந்து வருகிறது. இஸ்லாத்தின் முதல் கலீபாவான அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ராஜ்யபரிபாலன காலத்தில் சில அரபிக்கூட்டத்தார்கள் ராஜாங்கப் பொதுஜனங்களுவாகிய "பைத்துல் மாலில்" தங்களுடைய ஏழைவரியான ஸக்காத்துப் பணத்தைச் செலுத்த மறுதளித்தபோது எமது திருநபியவர்களின் ஸஹாக்களான ஸஹாபாக்களின் ஒற்றுமையான அபிப்பிராயத்தின் மேல் அந்த அரபிக்கூட்டத்தாருடன் யுத்தம் தொடங்கும்படியான அவ்வளவு ராஜ்யாதிகாரம் அந்த முதல் கலீபாவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; அப்பொழுது அவ்வாறு முரட்டுத்தனம் செய்து பிறகு தோல்வியடைந்த மதத்துரோகிகளான அந்த அரபிகளைப்பற்றிய சரித்திரத்தை இன்றைக்கும் நாம் காண்கிறோம்.

ஆதலின் இஸ்லாமார்க்கத்திலுள்ள கிலாபத்கொள்கைக்கும் கிறிஸ்தவமார்க்கத்திலுள்ள போப்புதுரை சம்பிரதாயத்துக்கும் கிஞ்சித்தும் ஒற்றுமையே கிடையாது. ஆகவே முஸ்லிம்கள் மத விஷயத்தையும் ராஜாங்க விஷயத்தையும் ஒன்றாகக்கலந்து கலக்கத்தை யுண்டுபண்ணிக்கொள்ளவில்லை; ஆனால் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர்தான் இஸ்லாத்திலுள்ள கிலாபத் இத்தன்மையதென்று உணர்ந்து கொள்ளாமல் உண்மையில் கலக்கமடைந்திருக்கிறார்கள். இஸ்லாத்திலுள்ள கிலாபத்தானது கிறிஸ்தவமார்க்கத்திலுள்ள போப்புதுரையின் சம்பிரதாயம்போல் வெறுஞ்சம்பிரதாயமாயிருந்திருக்கும்பக்ஷத்தில், இன்னும் தேவலோக ராஜ்யத்தின் வாயிற் காவற்காரராக எமது கலீபாவை யாங்கள் கருதியிருக்கும் பக்ஷத்தில், மேலும் எமது திருநபியவர்களின் ராஜ்யாதிகாரத்துக்கு இந்த கலீபாக்கள் பிரதிநிதியாயில்லாமலிருக்கும் பக்ஷத்



தில், இன்னும் இவர்கள் இஸ்லாமிய உலகிலுள்ள புண்ணியஸ்தலங்களின் பாதுகாவலரா யில்லாமலிருக்கும்பக்ஷத்தில் முஸ்லிம் கலீபாவுக்கு ஒரு சதுரங்குல நிலங்கூட இல்லாமல் ஸகல ராஜ்யங்களையும் கிறிஸ்தவர்கள் பிடுங்கிக்கொண்டால் முஸ்லிம்கள் உண்மையாகவே ஒன்றும் குறை கூறுவதற்கில்லை; அப்பொழுது ஐரோப்பிய வல்லரசுகள் எமது கிலாபத்தைப்பற்றிக் கிஞ்சித்தும் லக்ஷியம் செய்யாமல் துருக்கிதேசத்தின் விஷயத்தைத் தீர்மானித்து விடலாம். ஆனால் நாம் மேலே சொன்ன விஷயங்களைக் கவனிக்கும் பக்ஷத்தில் போப்புதுரையைப் போல்தான் கலீபாவும் இருக்கிறாரென்று மேல் நாட்டார் கருதமாட்டார்கள். முஸ்லிம் கிலாபத்துக்கு வேத ஆதாரமும் நபிகள் நாயகத்தின் மேற்கோளும் சந்தேக மில்லாமல் அமைந்திருப்பதால் கிறிஸ்தவராஜதந்திரிகள் இந்த கிலாபத்தின் மூல ரகஸ்யத்தை மறந்து விடாமலிருப்பார்களாக. இதுவரையில் கிலாபத்தின் உண்மையைப்பற்றியும் அதன் விசேஷத்தைப்பற்றியும் அநந்தம் பேர் அடிக்கடி அழுத்தமாய் எழுதியுள்ளார். ஆனால் கிறிஸ்தவர்கள் இன்னும் கிலாபத்து விஷயத்தில் போப்புதுரையின் சம்பிரதாயத்தை யொட்டித் தங்களுடைய தப்பு அபிப்பிராயத்தையே விடாமல் பற்றிக்கொண்டிருப்பதால் அவ்வாறு எங்களுடைய கிலாபத்து ராஜாங்கத்துக்கு வேதக்கட்டளை யுண்டென்பதை எண்பிப்பதற்காகவே, அதன் மூலக்கொள்கை இப்படிப்பட்டதென்பதை விவரித்துக் காட்ட மற்றொருமுறை யானும் முன் வந்துள்ளேன். இது முஸ்லிம்களுக்கு மகா முக்கியமான விஷயம். முஸ்லிம்களுக்குள் எவ்வகை உட்பிரிவு வித்தியாசமும் இல்லாமற்போகும்படி எமதுகிலாபத்விஷயமானது அவ்வளவு முக்கியமான காரியமாயிருப்பதால் தகுந்த அதன் மதசம்பந்தமான கொள்கைக்காக யாங்கள் இவ்வளவு பரிந்து பாடுபடுகிறோமல்லாமல் சாதாரணமாயிருந்திருக்கும் பக்ஷத்தில் துருக்கியின் வீழ்ச்சியைப்பற்றி ஒன்றும் கவலைப்படோம். துருக்கியின் ஸப கஷ்டமெல்லாம் எங்களுடைய மதத்தைச் சார்ந்ததா யிருப்பதால்தான் எங்களுக்கு இவ்வளவு கவலை.

கிலாபத்தைக்குறித்து நாம் மேலே ஆராய்வதற்குமுன்னர் அதன் சம்பந்தமாய் எமது புர்க்கானுல்மஜீதென்னும் குர்ஆன் ஷரீபு என்ன சொல்கிறதென்று கவனிப்போம். "அல்நூர்" (பிரகா

சம்) என்னும் மகுடத்தையுடைய அத்தியாயத்தில் (ஸூராவில்) அடியில் காணப்படும் ஆயத்து (வாக்கியம்) ஆண்டவனால் அருளப்பட்டிருக்கிறது: "உங்களுள் உறுதியான நம்பிக்கையுடையவர்களாகவும் நற்கிரியைகளைச் செய்பவர்களாகவும் இருப்பவர்களை அல்லாஹுத்தஆலா, அவர்களுக்கு முன்னுள்ளோர்களை அவன் கலீபாக்களாக (அரசர்களாக) ஆக்கிவைத்ததே போல், இத்தரணியில் இவர்களையும் கலீபாக்களாக மகா நிச்சயமாக ஆக்கிவைப்பானென்றும், இவர்களுக்காக அவன் தெரிந்தெடுத்திருக்கும் மார்க்கத்தை அவன் மகா நிச்சயமாக நிலைநிறுத்துவானென்றும் இவர்கள் அச்சப்பாட்டுடன் நடந்துகொள்வார்களாயின் அதற்கு ஈடாக அவன் இவர்களுக்குத் தக்க பந்தோபஸ்தை மகா நிச்சயமாக அருளுவானென்றும் வாக்குறுதி கூறியுள்ளான்; என்னுடன் யாதொன்றையும் இணைவைக்காமல் என்னையே அவர்கள் தொழுவார்கள்; இனி இதன் பிறகு யார் நன்றி கெட்டவராயிருக்கிறாரோ அவரெல்லாம் அதிக்கிரமக்காரர்களாகவேயிருக்கிறார்கள்."— (அல்குர்ஆன், 24:55) இவ்வாக்கியத்தில்வரும் இஸ்தகலப என்னும் பதத்துக்கு "அவனை ஒரு கலீபாவாக அல்லது பின்வரவாராக அல்லது அரசனாக ஆக்கினான்", என்பது பொருள். இப்பதத்தின் பொருளானது மிக விளக்கமாயிருந்த போதிலும் இதைப்பற்றி முஸ்லிம்களுடைய மனத்தில் எக்காலத்திலும் எவ்வித சந்தேகமும் இருந்ததில்லையென்பதைக் காட்டும்பொருட்டு இதனடியில் சில (தப்ஸீர்காரரின்) வியாக்கியானிகளின் மேற்கோள்களை எடுத்துக்காட்டுகிறேன். அல்குர்ஆனின் பைலாவி வியாக்கியானத்தில், "இத்தரணியில் இவர்களையும் கலீபாக்களாக ஆக்குவான்" என்பதற்கு "ராஜாக்கள் தங்களுடைய ராஜ்யங்களை அடக்கியாள்வதே போல் இத்தரணியை இவர்கள் கட்டியாளும்படி இவர்களை கலீபாக்களாக்குவான்," என்று வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. "இத்தரணியை அவர்கள் காணியாட்சி செய்து கொண்டு அதில் கலீபாக்களாக இருக்கும்படி செய்வான்," என்று தப்ஸீர் கஷ்ஷாபில் எழுதியிருக்கிறார். "ராஜாக்கள் தாங்கள் நாடிய வண்ணம் தங்கள் ராஜ்யங்களில் நடப்பது போலவே இவர்களும் தங்களுடைய நாட்டம் போல் இத்தரணியில் ராஜ்யாதிகாரம் புரியும்படி ஆண்டவன் செய்



வான்," என்று ரூஹுல்மஆனி யென்னும் தப்ஸீரில் எழுதப்பட்டிருக்கிறது. "நபிகள் நாயகத்தைத் தொடர்ந்து பின்வருவோரை இத்தரணியில் ஆட்சிபுரியும்படி ஆண்டவன் செய்வான்; அதாவது அவர்கள் ஜன நாயகத்தலைவர்களாயிருந்துகொண்டு அவர்களுடைய காரியாதிகளை அடக்கியாள்வார்கள்," என்று இப்னிகஸீர் (ரலி) என்பவர் அவ்வார்த்தைகளுக்கு வியாக்கியானம் செய்திருக்கிறார்: "அரபு தேசத்திலும் அஜம் பிராந்தியத்திலும் உள்ள முஸ்லிமல்லாதவர்களிடமிருந்து இத்தரணியைக் காணியாட்சி பெற்றுக்கொண்டு அதற்கு அரசர்களாகவும் அங்குள்ள மனிதர்களுக்குத் தலைவர்களாகவும் ஆகும்படி ஆண்டவன் அவர்களைச்செய்வான்," என்று இப்னிஜரீர் (ரலி) குறிப்பிட்டுள்ளார். இப்படியே இன்னும் எண்ணிறந்த வியாக்கியானிகளின் மேற்கோள்களைக் காட்டலாம்; இத்தரணியில் இடையூறில்லா ராஜ்யாதிகாரத்துடன் முஸ்லிம்கள் கலீபாக்களாக ஆக்கப்படுவார்கள் என்பதற்கு ஆண்டவனுடைய ஐயமில்லாத அத்தாக்ஷியானது எமது திருக் குர்ஆனில் காணப்படுகிறதென்பதை எண்பிப்பதற்கு இதுவரையில் எடுத்துக்காட்டிய மேற்கோள்களே போதுமானவையாயிருக்கின்றன. ஆகவே இஸ்லாத்தில் கிலாபத் என்பது இடையூறில்லா இகலோக ராஜ்யாதிகாரத்தைக்குறிக்கின்றதென்று தெரிந்துகொண்டோம்.

பிறகு நாம் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனின், "இத்தரணி" என்று பொருள்படத்தக்க அல் அர்ல் என்பதன் தாத்பரியமென்ன என்பதுதான். இவ்விஷயத்திலும் யாம் சில வியாக்கியானிகளின் அபிப்பிராயங்களை எடுத்தெழுதுவோம். "ஆண்டவனுடைய திருத்தூதரும் (இவர்களுக்கு இறைவன் அருள் பாலிப்பானாக) அவர்களுடைய ஸஹாபாக்களும் பத்துவருஷகாலமட்டும் மக்கமாநகரில் அச்சத்துடன் காலங்கழித்துப் பிறகு மதீனா நகருக்குச் சென்று அங்கே அல்லும் பகலும் ஆயுதபாணிகளாகவே யிருந்து வாழ்ந்து வந்தார்கள்; கடைசியில் ஆண்டவன் தன்வாக்குறுதியை நிறைவேற்றி அவர்களை அரபுநாடு முழுமைக்கும் ராஜமான்களாக்கி அப்பால் அதன் கீழ்தேசங்களையும் மேல் தேசங்களையும் அவர்கள் ஜயிக்கும்படி செய்து விட்டான்." இதில் தீர்க்க தரிசித்துவ(நுபுவ்வத்)த்துக்குரிய உண்மையான இரகசிய மொன்று பொதிந்திருக்கிறது;

மறைவாயிருப்பன வற்றின் இரகசிய உண்மையையும் நேரான வழியில் சீராகச்சென்று வந்த கலீபாக்களின் கிலாபத் சம்பந்தமான உண்மையையும் இது விளக்கி யிருக்கின்றது," என்று பைஸாவி தப்ஸீர்காரர் எழுதியிருக்கிறார். "நன்னம்பிக்கையை ஸ்திரப்படுத்துவதென்றால் அதன் அஸ்திவாரங்களைக் கெட்டிப்படுத்தி அதற்கு எவ்வகை விக்கினமுமில்லாமல் உறுதிப் படுத்துவதேயாம். அவர்கள் மதினமா நகரில் இருந்தபோது இரவும்பகலும் யுத்த சன்னத்தராகவேயிருந்து காலங்கழிக்க நேர்ந்ததால் அவர்கள் அயர்ச்சியுற்றுக் கடைசியில் திருநபி (இவர்களுக்கு இறைவன் அருள்புரிவானாக) அவர்களிடம் புகார்செய்து கொண்டார்கள்; அதற்கு எம்பெருமானார், 'ஒவ்வொரு மனிதனும் தன் தன்னுடைய கூட்டாளிமார்களுடன் ஒரு பெருங் கூட்டமாகச் சுகமே உட்காரும் வரையில்தான் நீங்கள் சிறிது காலம் இப்படிக் கஷ்டப்பட நேரும்; அப்பொழுது சண்டை சச்சரவு இரா' என்று சமாதானம் சொன்னார்கள். அவ்வண்ணமே ஆண்டவன் தன் வாக்குறுதியை நிறைவேற்றி அவர்களை ஜஸீரத்துல்அரபுக்கு எஜமானாக்கினான்; அவர்கள் கிஸ்ராவின் ராஜ்யங்களைச் சுதந்தரித்துக்கொண்டு அங்குள்ள கஜானாக்களையும் பெற்றுக் கொண்டார்கள்," என்று கராயிபுல் குர்ஆன் என்னும் நூலின் ஆசிரியர் எழுதியிருக்கிறார். கஷ்ஷாப் என்னும் வியாக்கியானத்தில் மேற்கண்ட விதமாய்எழுதி அதன்முடிவில் இவ்வாறு குறிக்கப்பட்டிருக்கிறது; "ஆகவே ஆண்டவன் தன்வாக்குறுதியை நிறைவேற்றி அவர்களை ஜஸீரத்துல்அரப் என்னும் பகுதிகளுக்கு எஜமானாக ஆக்கிவைத்தான்; பிறகு அவர்கள் கீழ்நாடுகளையும் மேல் நாடுகளையும் ஜயித்துக் கொண்டார்கள்." 'முழு உம்மத்தையும், அதாவது எம் திருநபியவர்களின் பின்வந்த எல்லோரையும் அந்தவாக்குறுதி உள்ளடக்கிக்கொண்டிருக்கிறது; திருநபியவர்களின் ஸஹாபாக்களுக்கு மட்டுந்தான் இந்த வாக்குறுதிசெல்லத்தக்கதாகும் என்று சொல்வதற்கு ஒன்றும் ஆதாரமில்லை...... இந்த வார்த்தைப்பாடானது முதல் நான்கு கலீபாக்களுக்கு மட்டுந்தான் செல்லத்தக்கதென்றாவது அல்லது இஸ்லாத்தில் அடைக்கலப்புகுந்தவர்களுக்கு மட்டுந்தான் உரியதென்றாவது அல் அர்ல் என்னும் பதமானது மக்கமா நகரை மட்டுந்தான் குறிக்குமென்றாவது ஒருவன் சொல்வானாயின் அவன் நிச்சயமாகத் தவறான



வழியிலேயே இருக்கிறான். இது அரப் நாட்டையும் அதைத்தவிர இதர நாடுகளையும் குறிக்குமென்று இப்னுல் அரபி என்பவர் கூறியுள்ளார்; இதுதான் சரியான தாத்பரியம்," என்று பத்ஹுல் பயான் என்னும் நூலாசிரியர் எழுதுகிறார். மறுபடியும் அதே நூலாசிரியர் அபுல் அலியாஹ் அவர்கள் சொல்வதாகக் கீழ்க்காணும் விஷயத்தையும் கூறியிருக்கிறார். நமது நபிபெருமானாரின் ஸஹாபாக்கள் எதிரிகளின் அச்சத்தால் இரவும் பகலும் ஆயுதபாணிகளாகவே யிருக்க நேர்ந்தபோது அந்தத் தோழர்களில் ஒருவர் திருநபியவர்களிடம் இதைக் குறித்துப் புகார் செய்து கொண்ட காலத்தில் இந்த 24:55 வது ஆயத்து இறக்கப்பட்டதென்று அபுல்அலியாஹ் சொல்லி, "பிறகு ஆண்டவன் தன் திருத்தூதரை ஜஸீரத்துல் அரபுக்கு எஜமானாக்கினான்; இவ்விதமாக அவர்கள் க்ஷேமமடைந்து தங்களுடைய ஆயுதங்களையும் கீழே வைத்துவிட்டார்கள்," என்று எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட சவிஸ்தாரங்களைச் சொல்லி அதன் பின் மேற்கூறிய ஆயத்து இறங்கிய காரணத்தையும் கீழ்க்கண்ட விதமாக உபையின் கஅப் (ரலி) அவர்கள் எழுதுவதாக பத்ஹுல்பயான்காரர் சொல்கிறார்: "பிறகு இந்த(24:55) ஆயத்து இறக்கப்பட்டது; இதனால் அல்லாஹ் தஆலா தன் வாக்குறுதியை நிறைவேற்றி அவர்களை ஜஸீரத்துல் அரபுக்கு எஜமானாக்கினான்; இக்காரணத்தால் அவர்கள் பிறகு கிழக்கேயும் மேற்கேயும் நெடுந்தூரத்திலுள்ள பிரதேசங்களையெல்லாம் வென்று கொண்டார்கள்," என்று உபையின் கஅப் (ரலி) அவர்கள் குறித்துள்ளார். ரூஹுல்மஆனி யென்னும் வேறொரு சிறந்த வியாக்கியானத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது: "அல் அர்ல் என்பதன் தாத்பரியம் ஏற்கனவே சொல்லப்பட்டதுபோல் ஜஸீரத்துல் அரப் என்பதாகும்; எம்பெருமானாரவர்களுக்குக் காண்பிக்கப்பட்ட எல்லாக் கீழ் தேசங்களையும் மேல் தேசங்களையும் அது குறிக்குமென்று மற்றையோர் சொல்கின்றனர்; ஏனெனின், "இப்பூமி யானது எனக்காகச் சுருக்கிக் காண்பிக்கப்பட்டது; அப்பொழுது அதன் கீழ் நாடுகளையும் மேல் நாடுகளையும் காணும்படி நேரிட்டது; ஆதலின் என் பின்னோர்களின் ராஜ்யமானது என் கண்ணில் காண்பிக்கப்பட்ட அவ்வளவு தூரம் விஸ்தரித்து நிற்கும்,' என்று எங்கள்நபிகள் பெருமானார் திருவாய் மலர்ந்த

குறியதாய் ஒரு நிஸ்ஸந்தேகமான சங்கதி வந்திருக்கிறது.'' இப்னு கஸீர் (ரலி) அவர்கள் தக்க ஆதாரத்தோடு அடியிற் காணும் வண்ணம் வியாக்கியானம் செய்திருக்கிறார்: "ஆண்டவன் நபிகள் நாயகத்தின் பின் வருவோர்களுக்கு இத்தரணியில் கிலாபத்தைக் கொடுப்பதாய் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு அளித்த வாக்காக இது அமைந்திருக்கிறது. ஆதலின் நபிகள் பெருமானார் இவ்வுலகத்தை விட்டு நீங்குமுன் மக்கா ஷரீபு, கைபர், ஜஸீரத்துல் அரப் முழுதும், இன்னும் எமன் தேசம் ஆகியஇவற்றையெல்லாம் தங்களுடைய குடை நிழலின் கீழ்க் கொண்டுவந்து ஹிஜ்ர் தேசத்து மஜ்ஸீ என்பவரிடத்திலிருந்தும் இன்னும் ஷாம் தேசத்துச் சில பகுதிகளிலிருந்தும் ஜிஸ்யாவென்னும் கப்பமும் பெற்று வந்தார்கள்... பின்னர் எம்பெருமானாரவர்கள் இவ்வுலகைவிட்டு நீங்கின போது... அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முதல் கலீபாவாக நியமனம் பெற்றார்கள்." பின்னும் அதே கிரந்த கர்த்தாவானவர் மேலே கூறிய பல சங்கதிகளையும் கூறிவிட்டு அதற்கப்பால் எழுதுகிறார்: "முன்னோர்களிற் சிலர், அபூபக்கர் ஸித்தீக் (ரலி) உமருபுனுல்கத்தாப் (ரலி) இவர்களுடைய கிலாபத்துக்கு ஆதாரம் ஆண்டவனுடைய திருவேதத்திலேயே காணப்படுகிறதென்று சொல்லி இந்த (24:55)த்திருவாக்கியத்தை ஓதினார்கள்."

மேலே கூறப்பட்டுள்ள எமது பெருநபியவர்களின் திருவாக்கியங்களையும் இன்னும் இதர வியாக்கியானிகளின் வாசகங்களையும் உற்று நோக்குவோமாயின் எமது குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டுள்ள கிலாபத்தென்பது முதன் முதல் அரபு தேசமுழுவதும் ராஜாங்கத்தை ஏற்படுத்துவதையும் அதற்கப்பால் அதை அயல் நாடுகளில் ஏற்படுத்துவதையும் குறிக்கின்றது. இந்த 24:55 வது ஆயத்தைத் தான் இஸ்லாத்திலுள்ள கிலாபத்துக்கு மூலாதாரமென்று எல்லா வியாக்கியானிகளும் (தப்ஸீர்காரர்களும்) ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கிலாபத்துக்கு நடுநாயகமாயிருக்க வேண்டிய ஸ்தலம் அரபுநாடும் அதைச்சார்ந்துள்ள ஜஸீரத்துல் அரபும் தானென்றும் அதைச் சூழ்ந்துதான் இவ்வுலகிலுள்ள மகா பெரிய முஸ்லிம்ராஜ்யம் வளர்ந்தோங்க வேண்டுமென்றும் ஆண்டவன் அந்த ஆயத்தில் வாக்குறுதி கூறியிருப்பதாய் அந்த வியாக்கியா-



னிகளெல்லாரும் உணர்ந்து கொண்டார்கள். முதன் முதல் எங்கள் நபிபெருமானாரால் ஏகசக்ராதிபத்தியம் நடத்தப்பட்டுவந்த அரபு நாடுதான் தலைமைஸ்தானமென்றும் அதன் கிழக்கிலும் மேற்கிலும் தான் அநேக நாடுகள் முஸ்லிம்களின் ஆளுகைக்கு உட்படுமென்றும் ஆண்டவன் தன் திருவேதத்தில் வாக்களித்திருந்தான். எம்பெருமானார் தங்களுடைய ஜீவதிசையிலேயே நடுநாயகமாகிய அரபு தேசத்துக்கு எஜமானாக்கப்பட்டார்கள்; அவர்களுக்குப்பிறகு முதல் கலீபாவாக அபூபக்கர்ஸித்தீக் (ரலி) அவர்கள் பட்டத்துக்கு வந்தவுடனே முஸ்லிம் நாடு ஒரு பெரிய ராஜ்யமாக வளரத்தலைப்பட்டது; நபிகள் பிரான் காலஞ்சென்ற பத்துவருஷத்துக்குள்ளேயே இரண்டாவது கலீபாவான உமருபுனுல் கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சியில் அந்த முஸ்லிம் சமஸ்தானமானது ஒரு மகா பெரிய ராஜ்யமாக ஆய்விட்டது.

நான் இதுவரையில் மேலே சொல்லிவந்த விஷயங்களை உற்று நோக்குவீர்களேல் முஸ்லிம்களுக்கு ஒரு பெரியராஜ்யம் கிடைக்குமென்று ஆண்டவன் முன்னறிக்கை செய்ததன் தாத்பரியத்தை வியாக்கியானம் செய்யும்போது அந்த உரைகாரர்களெல்லாம் ஏகோபித்து ஒத்துக்கொண்ட கருத்தானது முஸ்லிம் உலகத்துக்கு நடுநாயகமாயிருக்கக்கூடிய அரபுதேசமானது கலீபாக்களின் ராஜ்யத்தில் ஒருமுக்கிய அம்சமாயிருக்கவேண்டுமென்பதுதான் என்பதை நீங்கள் செவ்வனே உணர்ந்துகொண்டிருப்பீர்கள். அரபு தேசத்தையும் தன்னுள்ளடக்கிக் கொள்ளாமல் ஒருராஜ்யம் இருக்கக்கூடுமாயின் அது கிலாபத்தாகமாட்டாது. ஆகவே கிலாபத்துடைய ராஜ்யத்தில் அரபுதேசம் ஒருமுக்கிய அம்சமாயிருத்தல் வேண்டும். ராஜாங்கத்தின் காரியஸ்தலம் எவ்விடத்திலிருந்து வேறெவ்விடத்துக்குமாற்றப்பட்டாலும் அந்தராஜ்யத்தில் சம்பந்தப்பட்டவேறெந்ததேசம் விடுபட்டுப் போனாலும் அல்லது ஒருபுதிய தேசம்வந்து சேர்ந்தாலும் அரபுதேசமட்டும் அந்த கிலாபத்துடைய ராஜ்யத்தில் ஒருமுக்கிய நாடாக இருந்தே தீரவேண்டும். அரபு தேசம்சேராமல் முஸ்லிம்ராஜ்யம் இல்லை; அப்படிப்பட்ட முஸ்லிம் ராஜ்யம் இல்லாமல் கிலாபத்தென்பதே கிடையாது. அதாவது வேறெந்த நாடுகள் இந்த ராஜ்யத்தில் சேர்ந்திருந்தாலும் அல்லா-

மற் போயினும் அரபுதேசத்தை மட்டும் தன்னுள்ளடக்கிக் கொண்டு அதன்மீதும் தன் ராஜ்யாதிகாரத்தை முழுதும் செலுத்தக் கூடிய ஏகசக்ராதிபத்தியம் தான் கிலாபத்துடைய ராஜ்யமாயிருத்தல் முடியும். இவ்வுலகில் முஸ்லிம் ராஜ்யங்கள் எண்ணிறந்தன அடிக்கடி இருந்திருத்தல் கூடும்; ஆனால் அவற்றுளெல்லாம் அரபு தேசத்தின்மீது செல்வாக்குடைய ராஜ்யமே கிலாபத்தை யுடையதாயிருந்திருக்கிறது. அரபுதேசம் சேராமல் அந்தராஜ்யம் எவ்வளவு பெரியதாயிருந்தபோதிலும் அதற்கு ஒருபோதும் கிலாபத்தின் பெருமை இருத்தற்கு முடியாது. இவ்வுண்மையைக் கீழ்க் காணும் உதாரணங்களால் நன்குணர்ந்து கொள்ளலாம்:—

(தொடரும்)

## பஞ்சமந்திரங்கள்

### (ஐந்துகலிமாக்கள்)

1. அல்லாஹுத்தஆலாவைத் தவிர வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறுயாருமில்லை; முஹம்மது நபியவர்கள் (இவர்களுக்கு இறைவனருளும் அவன் நன்மாராயமுமுண்டாகுக) அல்லாஹ்வின் திருத்தூதராவார்கள்.

2. அல்லாஹுத் தஆலாவைத்தவிர மெய்யாக வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறுயாருமில்லையென அறுதியிட்டு உறுதி கூறுகிறேன்; அவன் தனித்தவன்; அவனுக்கு இணையாருமில்லை; மெய்யாக முஹம்மது நபியவர்கள் (இவர்கட்கு இறைவனருளும் அவன் நன்மாராயமுமுண்டாகை) அவனுடைய அடியாரும் திருத்தூதருமாவார்களென்றும் அறுதியிட்டு உறுதிகூறுகின்றேன்.

(இன்னும் வரும்)

“ஒருவன் மற்றொருவனுடைய உயிரைக் கொல்வதும் பிறருடைய சொத்தை இச்சிப்பதும் எப்படி ஹராமாயிருக்கிறதோ அப்படியே ஒருவனுடைய கீர்த்திக்கு மற்றொருவன் தீங்குசெய்வதும்” (நாயக வாக்கியம்.)



தத்துவ இஸ்லாம் 1—5—1921 அனுபந்தம்

## நாச்சியார் கோவில்

## முஸ்லிம் சங்கம்

### 7-வது ஆண்டின் முடிவு ரிப்போர்ட்

பிஸ்மில்லாஹ்

அருமையார்ந்த அன்புடையீர்! 31.12.1920-ம் தேதியோடு எமது சங்கத்தின் 7-வது வயது பூர்த்தியாயிற்று. ஆதியில் அறிவானந்தசபை என்னும் பெயருடன் ஆரம்பமான இச்சங்கமானது 1919 முதல் “முஸ்லிம் சங்கம்” என்று புதுப்பெயர் புனையப் பெயறா முஸ்லிம்களின் மார்க்க உணர்ச்சி கல்வி அறிவு ஒழுக்கம் முதலியவற்றை மேன்மைப்படுத்த முன்வந்து செந்தமிழில் துண்டுப்பிரசுரங்கள் வாயிலாய் அநேக அரியபெரியவிஷயங்களை யெல்லாம் வெளியிட்டு வருகின்றது. இன்றுவரையில் பலநாடுகளிலுமிருந்து 54 போஷகமெம்பர்களும் 8 கௌரவமெம்பர்களும் 140 சாதாரணமெம்பர்களும் எமது சங்கத்தில் சேர்ந்திருக்கின்றனர். சென்ற 1919-ம் ஆண்டு முடிவில் 24 போஷகமெம்பர்களும் 2 கௌரவமெம்பர்களும் 56 சாதாரணமெம்பர்களும் தான் இருந்தனர்.

1920-ம் வருஷத்தில் 3 பொதுக்கூட்டங்களும் 7 சிறப்புக்கூட்டங்களும் 10 நிர்வாகசபைக்கூட்டங்களும் அதிவிமரிசையாய் நிறைவேறியிருக்கின்றன. அவ்வப்போது சங்கத்துக்கும் இஸ்லாமிய உலகத்துக்கும் வேண்டியவிஷயங்களெல்லாம் செவ்வனே நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. இச்சங்கத்திலிருந்து 9 பிரசுரங்கள் 10 இதழ்களாக 9250 காப்பிகள்வரையில் ரூ 419.12.9. செலவுசெய்து இனமாகத் தமிழ்நாடு முழுதும் பரப்பப்பட்டிருக்கின்றன. 1919ல் இச்சங்கத்தினின்றும் வெளியான 20 இதழ்களும் “முஸ்லிம் சங்க முதற் கமலம்” என்றபெயருடன் புத்தகரூபமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

எமது இலவசவாசகசாலையில் 226 புத்தகங்கள் ஜாதிமதபேதமில்லாமல் எல்லோரும் படிப்பதற்கு எளிதில் கிடைக்கும்படி சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. சென்ற 1919-ம் ஆண்டில் 173 புத்தகங்கள் தான் இருந்தன. இவ்வாசகசாலைக்கு, சென்னை-சுதேசமித்திரன், தேசபக்தன், ஆனந்தபோதினி, தமிழர்நேசன், பினாங்கு—பாதுகாவலன்; லண்டன்—இஸ்லாமிக் ரெவியூ; லாஹூர் இஷா அத்தே இஸ்லாம் முதலிய பத்திரிகைகள் வருகின்றன.

Page 43-114
Missing



இச்சாலையில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சென்ற ஒரு வருஷத்தில் 3669 நண்பர்கள் வரையில் வந்து படித்துப் போயிருக்கின்றனர். இன்னும் இச்சங்கத்திலிருந்து 360 புத்தகங்கள்வரையில் மெம்பர்கள் வாங்கிக்கொண்டு போய்ப் படித்திருக்கிறார்கள்.

சென்ற வருஷத்தில் இச்சங்கத்தின் கிளைச்சங்கம் ஒன்று இரங்கூனில் ஸ்தாபிக்கப்பட்டு அது வெகு விமரிசையாய் வேலை செய்து வந்திருக்கிறது. அச்சங்கத்தார் கனம் காஜா கமாலுத்தீன் சாஹிபவர்களின் சந்தேக நிவாரணக்கடிதம் ஒன்றையும் இச்சங்கத்தின் சார்பாக வெளியிட்டிருக்கிறார்கள். கீழ்நாடுகளிலுள்ள கிள்ளான் நகரத்திலும் இம்முஸ்லிம் சங்கத்தின் பிரதிநிதி ஆபீஸ் ஒன்று சென்ற 1920 ல் திறக்கப்பட்டிருக்கிறது. இதுவும் வெகு திருப்திகாமாகவே வேலைசெய்துவருகிறது.

இச்சங்கக் கட்டிடத்துக்காகக் காலிமனை ஒன்று ரூபாய் 700.ல் இந்நகரின் ஒரு பஹிரங்கமான இடத்தில் வாங்கித்தளம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு காஜா சதுக்கம் என்று பெயரும் இடப்பட்டிருக்கிறது.

இம்முஸ்லிம் சங்கத்திற்காகவும் இரங்கூன் கிளைச்சங்கம் கிள்ளான் பிரதிநிதி ஆபீஸ் இவற்றிற்காகவும் இவ்வூரிலும் இதரநாடுகளிலும் இஸ்லாவுக்காகவே தமது உடல் பொருள் ஆவியையெல்லாம் தத்தம் செய்துவரும் எமது முஸ்லிம் நண்பர்களுக்கெல்லாம் அவர்கள் கைம்மாறு கருதாது உழைத்துவரும் ஊழியத்திற்காக யாம் பெரிதும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இவர்களும் இவர்களைப்போன்ற இதரநண்பர்களும் இச்சங்கத்தின் காரியம் இனிது நடைபெறும்படி எமக்கு அடிக்கடி ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டிக்கொண்டிருப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

நம் எல்லோருக்கும் நாயன் நற்கிருபை புரிந்தருள் வாஞக. ஆமீன்.

முஸ்லிம் சங்கம்
நாச்சியார் கோவில்
1—1—1921

இஸ்லாமிய ஊழியன்.
கு. அமீருத்தீன் சாஹிப்,
காரியதரிசி.

முபஸ்ஸிலன்

# தத்துவ இஸ்லாம்

வல்தகுன் மின்கும் உம்மதுன் யத்ஊன இலல்கைரி வயஃமுரூன பில்மஅரூபி வயன்ஹௌன அனில்முன்கரி வஉலாஇக ஹுமுல் முப்லிஹூன்.—அல்குர்ஆன், ஸூரா 3, ஆயத்து 103

| கமலம் - 3. | 1921ஹு ஜூன்மீ | இதழ் - 2 |
|---|---|---|

## எது பிரசார மார்க்கம்?

"(மனிதர்களுக்குத்) தப்பானதைத் தடுத்துச் சரியானதை விதிக்கவும் (அவர்களை) நன்மையான வழியில் அழைக்கவும் உங்களுக்குள் ஒரு வர்க்கத்தார் இருப்பது அவசியம்; இவர்கள் தாம் ஜயமுடையவர்களாவார்கள்"—(அல்குர்ஆன், 3:103)

இவ்வுலகில் காணப்படும் பற்பல மதங்களுள் இஸ்லாம், கிரிஸ்து மதம், ஹிந்துமதம், ஜைனமதம், பௌத்தமதம் ஆகிய இவைகளே முக்கியமான மார்க்கங்களாய்க் காணப்படுகின்றன. இம்மதத்தினர் ஒவ்வொருவரும் தத்தம் மார்க்கமே சர்வ சிலாக்கியமானதென்றும் ஏனை மதங்களைவிட அஃதே உயர்ந்ததென்றும் வாதித்து வருகின்றனர். இவ்வாறு வாதிக்கும்போது அவரவரும் தம் தம்முடைய மதத்தையே எல்லா மனிதர்களும் பின்பற்ற வேண்டுமென்றும் உலகத்தவருக்கு உபதேசித்து வருகின்றனர். ஆனால் அந்த அந்த மதத்தினரின் மூலக்கிரந்தங்களைப் பரிசோதித்துப் பார்க்கப் புகின் அவர்களுக்குள் பலருக்குத் தம்முடைய மார்க்கத்தைப் பிரசாரம் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாய் ஒன்றும் ஆதாரம் காணப்படவில்லை. இவ்வுலகிலுள்ள எல்லா மதங்களிலும் மிகப் புராதனமானதென்று சொல்லப்படும் ஹிந்துமதத்தில், பிரசாரஞ் செய்து அம்மதத்தைப் பரவச் செய்தற்கு ஏதேனும் ஆதாரம் உண்டோவெனின், அப்படிப்பட்ட வேதக்கட்டளை ஒன்றும் இருப்ப

தாய்ப் புலப்படவில்லை. வேதங்களில் ஒன்றும் ஆதாரமில்லாமலிருப்பதோடு அனுஷ்டானத்திலும் ஹிந்துக்கள் தங்கள் மார்க்கத்தைப் பிரசாரம் செய்வதாய்க் காணப்படவில்லை. இதற்கு அத்தாக்ஷியாக ஸ்ரீ விவேகாநந்தரும், "கிறிஸ்தவன் ஹிந்துவாகவேனும் பௌத்தனாகவேனும் மாறவேண்டியதில்லை. அப்படியே ஹிந்துக்களாவது பௌத்தர்களாவது கிறிஸ்தவராக வேண்டியதில்லை," என்று வலியுறுத்தியிருக்கிறார். இதனால் ஹிந்துமதம் ஒரு பிரசார மார்க்கம் அன்றென்பதை உணர்ந்து கொண்டோம். உலகத்திலுள்ள ஏனைமதங்களைவிட ஹிந்துமதமே சிறந்ததென்று ஒருவனுக்குப் புலப்பட்டால் அவன் அம்மதத்தைத் தழுவுவது முடியாது; ஏனைமதங்களில் காணப்படாத சிறந்த உண்மையானது ஹிந்துமதத்தில் காணப்படுகிறதென்று அம்மதத்தினர் சாதிக்கும்போது அச்சிறந்த உண்மையை எல்லோரும் ஏற்றுக்கொண்டு நடக்கும்படி அம்மதம் இடந்தரவில்லை.

ஹிந்துமதத்திலிருந்து பிரிந்த ஜைனமதமும் பௌத்தமதமும் தம் தாய்மதமாகிய ஹிந்துமதம்போலவே பிரசாரத்தொழிலை ஏற்காமலிருக்கின்றன. ஜைனமதமாவது பௌத்தமதமாவது உண்மையான மதமென்று ஒருவனுக்குப் புலப்பட்டால் அவன் அம்மதத்தைத் தழுவுவதற்கு ஏதுவில்லாமலிருக்கிறது. ஒருவர் எப்பொழுது தம்முடைய மதமானது சிறந்ததென்றும் உண்மையானதென்றும் நம்புகின்றாரோ அப்பொழுதே அம்மதத்தின் நன்மையை உலகத்தவர் எல்லாரும் அனுபவிக்க இடந்தரல் வேண்டும். ஆனால் ஜைனமதத்தினரும் பௌத்த தர்மத்தினரும் தம் தம் மதம் சிறந்ததென்று பிரசாரம் செய்வதை நாம் கண்டதில்லை; பிரசாரம் செய்யும்படி அவர்களுக்கு வேத ஆதாரமும் இருப்பதாய் ஒன்றும் காணப்படவில்லை.

ஆனால் கிறிஸ்தவர்கள் மட்டும் தங்களுடைய சுவிசேஷப் பெருமையை இவ்வுலகமுழுதும் பரப்புவதற்குத் தம்மாலியன்ற பெருமுயற்சியெல்லாம் செய்து வருகின்றனர். கலாசாலைகளாலும் ஆஸ்பத்திரிகளாலும் பத்திரிகை புத்தகங்களாலும் பிரசங்கங்களாலும் இன்னும் இதரவழிகளாலும் ஏராளமான பாதிரிமார்களைக் கொண்டு தமது கிறிஸ்துமத தர்மத்தைப் போதித்துவரும் விஷயம் நமக்கெல்லாம் நன்கு தெரிந்த காரியமே. கிறிஸ்து மதத்தினர் இவ்வாறெல்லாம் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனரே இதற்கு ஏதேனும் வேதஆதாரம் உண்டோவென்று ஆராய்ச்சி செய்வோமாயின் அந்தக் கிறிஸ்தவ தர்மத்தை இஸ்ரவேல் (பனீஇஸ்ராயில்) கூட்டத்தாரைத் தவிர வேறு யாருக்கும் உபதேசிக்கக் கூடாதென்று ஏசு



நாதர் பன்முறையும் சொல்லியிருப்பதை நன்குணர்ந்து கொள்ளுவோம்: "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்"—(மத்தேயு, 7:6). இவ்வாக்கியத்தில் சொல்லப்படும் பரிசுத்தமானது இன்னதென்றும் நாய்கள் இன்னாரென்றும் தெரிந்து கொள்ளவேண்டும். அதே மத்தேயு 15: 22-27-ல்; "அப்பொழுது, அந்தத்திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து, 'ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என்மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்' என்று சொல்லிக் கூப்பிட்டாள், அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒருவார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து 'இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும்' என்று அவரை வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர் 'காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல' என்றார். அவள் வந்து, 'ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும்' என்று அவரைப்பணிந்து கொண்டாள். அவர் அவளை நோக்கி, 'பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல' என்றார். அதற்கு அவள், 'மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே' என்றாள்" என்று எழுதியிருப்பதைக் காண்கிறோம். இதனால் பரிசுத்தமான கிறிஸ்துமத தர்மத்தை இஸ்ரவேல் கூட்டத்தாரல்லாத நாய்களுக்கு உபதேசிக்க ஏசுநாதர் விரும்பவில்லையென்பது செவ்வனே விளங்கக் கிடக்கின்றது. இவ்விஷயம் பைபிளில் மற்றோரிடத்திலும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது: "இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால், 'நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்'..."—(மத்-10: 5,6); ஏசுநாதர் தம்முடைய மார்க்கத்தை இஸ்ரவேல் கூட்டத்தாரல்லாத நாய்களுக்கு உபதேசிக்கக் கூடாதென்று கட்டளையிட்டதோடு தம்முடைய ஆயுள்காலத்தில் இஸ்ரவேல் கூட்டத்தாரல்லாத யாதொரு மனிதனையும் தம்முடைய மார்க்கத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை. ஏசுநாதரின் காலத்துக்குப் பின்னும் இவ்வாறே நடந்து வந்தது. ஆனால் பௌல் துரையின்

காலத்தில் தான் இயேசுவின் தர்மத்தை இதரர்களுக்கும் போதிக்கத் தலைப்பட்டனர். கானானிய ஸ்திரீயானவள் தன்னை ஒரு நாயென்று ஒத்துக்கொண்டு எஜமானின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைக் கேட்டமையால் அந்நாயிடம் ஏசுநாதர் இரக்கம் காட்டினர். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான் பௌல் துரை கிறிஸ்தவ தர்மத்தின் உதிர்ந்த துணிக்கைகளை இஸ்ரவேல் கூட்டத்தாரல்லாத நாய்களுக்குக் கொடுக்கலாமென்று தீர்மானித்தார். ஆகவே இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் செய்துவரும் பிரசாரமெல்லாம் அம்மதத் தலைவராகிய ஏசுநாதரின் வெளிப்படையான கட்டளைகளுக்கு நேர்மாறாகவே யிருந்துவருகிறது. இதனால் கிறிஸ்துமதமும் பிரசாரமார்க்கம் அன்றென்று கண்டுகொண்டோம்.

இனி இஸ்லாத்தின் தன்மையைச் சிறிது ஆராய்வோம். "(மனிதர்களுக்குத்) தப்பானதைத் தடுத்துச் சரியானதை விதிக்கவும் (அவர்களை) நன்மையானவழியில் அழைக்கவும் உங்களுக்குள் ஒருவர்க்கத்தார் இருப்பது அவசியம்; இவர்கள்தாம் ஜயமுடையவர்களாவார்கள்"—(அல்குர்ஆன், 3:103.) இவ்வேதவாக்கியத்தால் இஸ்லாமார்க்கப் பிரசாரம் (இஷா அத்தே இஸ்லாம்) மகாமுக்கியமானதென்று தெரிந்துகொள்ளுகிறோம். இன்னும் குர்ஆன்ஷரீபின் 103வது ஸூராவிலும் இவ்விஷயமே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. "காலத்தை கோட்டமிடுங்கள்; உறுதிகொண்டு அதன்படி நற்கிரியைகளைச் செய்பவர்களும் ஒருவருக்கொருவர் உண்மையை விளக்கி உபதேசிப்பவர்களும் ஒருவருக்கொருவர் பொறுமையை விளக்கி உபதேசிப்பவர்களும் தவிர மற்றமனிதர்களெல்லாரும் நிச்சயமாக நஷ்டத்திலானவர்களா யிருக்கிறார்கள்." ஆண்டவனிடத்திலிருந்து தாம் அறிந்துகொண்ட உண்மையை எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஏனைமனிதர்களுக்கும் உபதேசித்ததுபோல் அந்த இதரமனிதர்களும் தாங்கள் கற்றுக்கொண்ட உண்மைகளை மற்றெல்லாருக்கும் உபதேசிக்கக்கடவர் என்று ஆண்டவன் அல்குர்ஆனில் 2: 143ல் கூறியுள்ளான். இப்படிப்பட்ட இஷாஅத்தே இஸ்லாம் வேலையைச் செவ்வனே செய்வதாயிருந்தால் மட்டுமே எம்முஸ்லிம்களை ஓர் உயர்ந்த ஜாதியாராக ஆக்குவேனென்றும் ஆண்டவன் வாக்குறுதி செய்திருக்கிறான். அல்லாஹுத்தஆலாவின் ஆணை இவ்வாறிருக்கும்போது ஒவ்வொருவரும் இஸ்லாமிய பிரசாரம் செய்யவேண்டுவது கடமையாயிருக்கிறது. அவசியமானபோது ஒருவன் யாதொருகாரணமுமின்றி அதைவிட்டுவிடுவானாயின் பாவியாவான். இதனால்தான் இஷாஅத்தே இஸ்லாம் என்னும் ஊழிய



மானது ஒவ்வொருவருக்கும் முக்கியகடமையாய் (பர்ளாய்) அமைந்திருக்கிறது. எவருமே இந்த இஸ்லாமார்க்கப்பிரசாரம் செய்வதில் முயலாதிருந்தால் எல்லாமனிதர்களும் பாவிகளாய்ப்போவார்கள். இன்னும் இஷாஅத்தே இஸ்லாம் என்னும் இந்தக்காரியத்தை அல்லாஹுத்தஆலா தொழுகையோடும் ஏழைவரியோடும் சேர்த்துக்கூறி அதனால் முஸ்லிம்களைப் புகழ்ந்திருக்கிறான். "பூமியில் இடங்கொடுத்தால் தொழுகையை நிலைப்படுத்துகிறவர்களாயும் ஸக்காத்தை (ஏழைவரியை)க்கொடுப்பவர்களாயும் நன்மை தீமைகளை உணர்த்தி ஏவல்விலக்கல் செய்பவர்களாயும் இருப்பவர்களுக்கு (அல்லாஹுத்தஆலா திடனாக உதவிபுரிகிறான்)" என்று ஒருவேதவாக்கியம் பிறந்திருக்கிறது.

அன்றியும் நபிகள் பெருமானார் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், "நீங்கள் நன்மைகளை உணர்த்தி ஏவுங்கள், இன்றேல் அல்லாஹுத்தஆலா உங்களுள் மிகப்பொல்லாதவர்களை உங்கள்மீது சாட்டுவான்," என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்கள். இன்னும் இப்படிப்பட்ட நாயகவாக்கியங்கள் அநேகமுண்டு. வேதவாக்கியங்களும் நாயகவாக்கியங்களும் வேண்டியமட்டும் அமைந்துகிடப்பதால் தான் எம் இஸ்லாமார்க்கத்தில் மதப்பிரசாரம் செய்யவேண்டுவது ஒவ்வொருவருக்கும் கடமையாய்விட்டது. ஆகவே எமது தீனுல் இஸ்லாத்தில் மட்டுந்தான் மதப்பிரசாரவேலையானது கடமையாக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாமார்க்கந்தான் ஏனைமார்க்கங்களைக் காட்டிலும் சிறந்ததென்று எமது திருமறை எண்பிப்பதோடு அவ்வுண்மையை இவ்வுலகமுழுதும் பரப்புவதற்கு வேண்டிய பொறுப்பையும் ஒவ்வொரு முஸ்லிமின்மீதும் கடமையாக்கி வைத்திருக்கிறது.

இஷாஅத்தே இஸ்லாம் வேலையானது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் முக்கியகடமையாய் விட்டதென்று இப்பொழுது செவ்வனே தெரிந்து கொண்டோம். இவ்வாறு மதப்பிரசாரம் செய்யவேண்டியதற்கு ஒவ்வொருவரும் ஒருபெரிய மௌல்வியா யிருக்கவேண்டுமென்னும் அவசியமில்லை. ஒவ்வொருமுஸ்லிமும் தனக்குத்தெரிந்தவரையில் மார்க்கப்பிரசாரம் செய்தால் அஃதேபோதும். எமது மார்க்கத்தில் ஒருவன் இஷாஅத்தே இஸ்லாம் செய்யவேண்டுமாயின் அவன் ஒரு முஸ்லிமாயும் அறிவுவந்தவனாயும் இருப்பின் அதுவே போதுமானதாயிருக்கிறது. அறிவையடைந்த ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இஷாஅத்தே இஸ்லாம் வேலையானது முக்கியகடமையாய் விட்டதால் இம்மார்க்கத்தில் பாதிரிமார்களை (மிஷனரிகளை) வைத்துக் கிறிஸ்தவ மார்க்கத்தார் செய்வதுபோல் மதப்பிர

சாரம் செய்யவில்லை. மிஷனரிகளைவைத்து இஷாஅத்தே இஸ்லாம் செய்ய நமக்கொன்றும் அவசியமில்லை. நாம் ஒவ்வொரு முஸ்லிமும் ஒவ்வொரு மிஷனரியாயிருக்கிறோம். ஆனால் இக்கடமையைச் சிலமுஸ்லிம்கள் இக்காலத்தில் கைவிட்டிருப்பதாய்க் காணப்படுகின்றனர். மதப்பிரசாரம் செய்தற்கு அனுமதிபெறாத கிறிஸ்து மதநண்பர்கள் எவ்வளவோ பாடுபட்டுத் தமது மார்க்கத்தை இதர நாய்க்குட்டிகளிடம் பரத்த முயலும்போது அம்மார்க்கத்தில் சொல்லப்பட்ட பெருமையைக்காட்டினும் மேலான உண்மையை உபதேசித்து வருகின்ற இஸ்லாமார்க்கத்தில் உறுதிகொண்டவர்கள் இதர சகோதரர்களிடம் இஷாஅத்தே இஸ்லாம் செய்வதில் பராமுகமாயிருப்பது இக்காலத்தில் நஷ்டத்தை விளைக்கத்தக்க விஷயமாகவே காணப்படுகின்றது. ஆதலின் ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்வும் ரஸூலும் சொன்னதைத் தலைமேற்கொண்டு தம்மாலியன்றமட்டும் தமது கடமையைச் செவ்வனே செய்து முடிக்க முன்வருமாறு அவர்களுக்கு நன்முயற்சியைத் தந்தருளும்படி எல்லாம் வல்ல இறைவனைச் சிந்தித்து வந்திப்போமாக. ஆமீன்.

## அலிசகோதரர்கள் சொல்வதென்ன?

வட இந்தியாவில் பாஞ்சால தேசத்திலுள்ள லாஹூரென்னும் தலைநகரில் வசித்துவரும் மகா பெரிய மௌலானா மௌல்வி முஹம்மதலி சாகிப், எம். ஏ., எல் எல். பி., அவர்களால் நம்முடைய இணையற்ற திருமறையாகிய புர்க்கானுல் மஜீதென்னும் குர்ஆன் ஷரீபானது ஒன்பது வருஷத்திய ஓயாதபாட்டிற்குப் பின் ஆங்கில பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றதென்பது நமது நண்பர்களுக்கு நன்கு தெரிந்த விஷயமே. அவ்வூரில் பிரபல லாயராயிருந்து இப்பால் இஸ்லாத்தின் ஊழியத்துக்காகத் தம் வக்கீல் தொழிலைவிட்டு இங்கிலாந்து சென்று அங்கே நூற்றுக்கணக்கான ஆங்கிலேயரை இஸ்லாத்தில் சேர்த்திருக்கும் மௌலானா மௌல்வி கனம் காஜாகமாலுத்தீன் சாகிப், பி. ஏ., எல் எல். பி., அவர்களையும் அறியாதார் இங்கொருவரும் இராரென்பது திண்ணம். மேற்கூறிய இரண்டு மௌல்விகளைப்பற்றியும் அவர்களுடைய குர்ஆன் ஷரீபின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பற்றியும் அலிசகோதரர்கள் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார்கள்:



“பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

சிந்த்வாரா, மத்திய மாகாணம்.

பிப்ரவரி 24உ, 1918.

என் அருமை மிர்ஸா யாக்கூப்பேக்,

ஷௌக்கத் அலிக்காகவும் எனக்காகவும் உங்களால் அனுப்பப்பட்ட மகா விலையுயர்ந்த சன்மானங்களை நாங்கள் ஒப்புக்கொண்டு பதில் எழுத இதுவரையில் தாமதப்பட்டதற்காகத் தங்களை மிகுதியும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இக்கடிதத்தை நான் வரைய வேண்டியிருக்கின்றது. கல்விக்களஞ்சியமான எனது நண்பரும் என்னுடைய பெயரையே தாமும் வகித்திருப்பவருமான மௌலானா முஹம்மதலி சாஹிப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் குர்ஆன் ஷரீபின் அழகிய கித்தாபுகளை விட அதிக திருப்திகரமான வேறொன்றையும் தாங்கள் எங்களுக்கு அனுப்பியிருக்க முடியாதென்று நான் சொல்லவும் வேண்டுமோ? ஐரோப்பாகண்டத்தில் தீனுல் இஸ்லாத்தைப் பரவச்செய்வதற்காக மிகுதியும் பாடுபட்டுவரும் நம்முடைய அருமையான தைரியம் நிறைந்த தாத்தமாகிய காஜாசாஹிபால் வெளியிடப்படும் “இஸ்லாமிக்ரெவியூ”வில் மேற்சொன்ன குர்ஆன்ஷரீபின் மாதிரிப் பக்கங்களை நான் வாசித்திருக்கிறேன்; அதனால் இந்தியாவிலாவது அல்லது இங்கிலாந்திலேனும் இந்தக் குர்ஆன்ஷரீபின் பிரதிகள் கிடைக்கும் காலம் கிட்டிவிட்டதென்று தெரிவிக்கக்கூடிய விளம்பரம் வெளியாகும் விஷயத்தை நான் அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். இந்திய நாட்டுப்பத்திரிகைகளில் நான் ஆவலுடனும் ஆயாசத்துடனும் எதிர்பார்த்திருந்த விளம்பரம் வெளியானவுடன் எங்களுக்கு வி. பி. போஸ்டில் இரண்டு புத்தகங்கள் அனுப்பவேண்டுமென்று தங்களுக்கு உடனே எழுதும்படி ஷௌக்கத்திடம் சொன்னேன். அவர் அப்படியே எழுத ஆயத்தமாயிருக்கும்போது ஒரு வெள்ளிக்கிழமையன்று அதிநேர்த்தியாக அச்சடிக்கப்பட்டு பைண்டு செய்த இரண்டு கித்தாபுகள் எங்களுக்குக் கிடைத்தன. எனக்குச்சற்று முன் பள்ளிவாயிலுக்குச் சென்ற ஷௌக்கத்திடமும் இன்னும் அங்குள்ள இதரமுஸ்லிம்களிடமும் அவற்றைக் காட்டுவதற்காக நான் பள்ளிக்கு இரண்டு குர்ஆனையும் எடுத்துச் சென்றேன். உலகத்தில் வேறொன்றாலும் கிடைக்கக்கூடாத அவ்வளவு அபாரமான ஆனந்தத்தை அந்தக்குர்ஆன் ஷரீபு எங்களெல்லோருக்கும் கொடுத்ததென்பதை நான் உங்களுக்கு நிச்சயமாகச் சொல்லுகிறேன். அன்றைத் தினத்திலேயே அந்த விலைபெற்ற சன்மானத்துக்காக நான் உங்களுக்கு வந்தனக் கடிதம் எழுதி

யிருப்பேன்; ஆனால் இப்படிப்பட்ட அருமையான வேலைத் திறத்தைப்பற்றி என்னுடைய அபிப்பிராயத்தையும் வெளியிடவேண்டுமென்று தாங்கள் கேட்டிருந்த படியால், என்னுடைய வந்தனத்தையும் இதுவரையில் தாமதம் செய்து வைத்தேன். ஆயினும் அன்று முதல் மறுபடியும் நான் ஜுரநோயால் பிடிக்கப்பட்டிருக்கிறேன்; குர்ஆன் ஷரீபின் மொழி பெயர்ப்பையும் அதன் வியாக்கியானத்தையும் சம்பூரணமாய் நான் படித்த பின்னரே இக்கடிதத்தை எழுதவேண்டுமென்றால் தாங்கள் இன்னும் அதிககாலம் காத்திருக்க நேரிடும். ஆதலின் தாங்களனுப்பிய இரண்டு பிரதிகளுக்கும் வந்தனம் செலுத்துவதில் இவ்வளவு தாமதமானதற்காக எங்களுடைய மன்னிப்பைத் தெரிவிப்பதற்காகவும் எங்களுடைய பெரியநன்றி பாராட்டலைத் தங்களுக்கு அறிவிப்பதற்காகவும் இப்பொழுது எழுதலான இக்கடிதத்தை அன்புடன் அங்கீகரித்துக்கொள்ளுவீர்களாக.

ஆயினும், எல்லாக் காலத்துக்கும் எல்லாத் தேசத்துக்கும் பொருத்தமாகிய இந்த மகா பரிசுத்தம் நிறைந்த பெரிய கிதாபை மொழிபெயர்க்க முன்வரும் பெரியார்களெல்லாம் காட்டக்கூடிய அன்பிற்கும் ஆர்வத்திற்கும் அறிகுறியா யிருக்கத்தக்க அழகிய அச்சும், நேர்த்தியான இந்திய காகிதமும், அதிவிசித்திரமான அழகிய பச்சை நிறமுள்ள துவளக்கூடிய மொராக்கோதோலில் செய்த பைண்டும், இன்னும் பார்ப்போர் கண்ணைப் பறிக்கத்தக்க அழகிய பூவேலைகள் நிறைந்த கூட்டெழுத்துக்களும் அமையப்பெற்ற அந்தக் குர்ஆன் ஷரீபின் வெளித்தோற்றத்தைப்பற்றி எனக்குண்டான அபிப்பிராயத்தையும் நான் வெளியிட வேண்டுமென்னும் உணர்ச்சியும் எனக்கு மிகுதமா யுண்டாகிறது. இப்படிப்பட்ட விஷயங்களில் எனக்கும் சிறிது அனுபவமுண்டென்பதில் எனக்கொரு பெருமை யுண்டாகிறது; இவ்விஷயம் தங்களுக்கும் ஒருகால் தெரிந்திருக்கலாம்; இப்பெரிய கிரந்தத்தில் எனக்கு அளவு கடந்த அன்பும் ஆர்வமும் உண்டு; இக்காரணத்தால் தான் தாங்களனுப்பிய பிரதிகளை இதுவரையில் அதி ஜாக்ரதையுடன் நோட்டமிட்டேன். கடைசியில் நான் அதிகமாய்த் திருப்தி யடைந்திருக்கிறேன் என்னும் விஷயத்தை நீங்கள் அறிந்து அதிக சந்தோஷப் படுவீர்களென்று நினைக்கிறேன்; இஃதோர் அசட்டுத்தனமான வெறும் ஸ்தோத்திரமென்று எண்ண வேண்டாம்; ஆனால் நான் அதிவிசுவாசத்துடனும் ஆர்வத்துடனும் பாராட்டி வருகின்ற அவ்வேதத்தில் மற்றொருவர் எவ்வளவு அனுதாபம் காட்டுகிறாரென்று நான் அதிமாற்சரியத்துடன் தீர ஆராய்ந்து தெள்ளிதாய் நோட்டமிட்டு அதன் பின்னரே என் கருத்தை வெளியிட்டிருக்கிறேன். தடித்த காகிதத்



தில் அச்சிட்டுக் கெட்டியான அட்டையால் பைண்டு செய்யப்பட்டிருக்கும் இரண்டாந்தரமான பதிப்பும் மிகநன்றா யிருக்கிறது. இருவகைப் பதிப்பும் அவசியம் வேண்டியவைகளே.

குர்ஆன் மொழி பெயர்ப்பிலுள்ள விஷயங்களைப்பற்றியென்றாலோ, முகவுரையும் ஒவ்வோர் அத்தியாயத்தின் முன்னுரையும் சில வியாக்கியானமும் அட்டவணையும் வேறு அம்சங்களும் என்னால் ஒருவாறு பார்வையிடப் பட்டன; இந்த ஏற்பாடுகளெல்லாம் மிக நன்றாய் அமைந்திருப்பதைக்கண்டு மெச்சுகின்றேன். ஆங்கில மொழி பெயர்ப்பைப் பற்றிச் சொல்லவேண்டுமாயின் நான் பார்த்த மட்டில் அது எளிய நடையில் தெளிவாக அரபு மூலத்துக்குச் சிறிதும் மாறாமல் ஆண்டவனுடைய சொந்த வார்த்தையில் உண்மையான ஒரு முஸ்லிமால் எவ்வளவு மரியாதை காட்டமுடியுமோ அவ்வளவு மரியாதையுடன் எழுதப்பட்டிருப்பதாய் எனக்கு நன்கு புலனாகின்றது. இப்படிப்பட்ட அபாரமான பெருங்கிரந்தங்களை முடிய ஓதுவதென்றால் எனக்கு அதிக நாள் செல்லும்; நானோ இப்படிப்பட்ட விஷயங்களை மிகமந்தமாய்ப் படிப்பவன். ஆனால் அரபி பாஷையில் நான் தேர்ச்சிபெற்ற மாணவனென்றாவது அல்லது ஒரு பெரிய மௌலவி யென்றாவது பாசாங்கு செய்யமாட்டேன். இனிமேல் நான் இந்தக் குர்ஆனை ஆதியோடந்தமாய் ஆழமாய்ப் படித்துப் பிறகு என் அபிப்பிராயத்தை மற்றொருமுறை வெளியிடுவேனாயினும் அதுவும் ஒரு சாதாரண மனிதனுடைய அபிப்பிராயமாகவே தான் இருக்கும்; அதற்குத் தகுந்த மதிப்புடன் தான் அந்த அபிப்பிராயத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் நாம் இப்பொழுது மெச்சிக் கொள்ளத்தக்க மிகப்பெரும் விஷயம் யாதெனின், ஓர் அரும் பெருங்காரியமாகிய இம்மொழி பெயர்ப்பு வெளிவந்திருப்பதுதான்; நிந்தனைக்காரனு மில்லாத ஓர் உண்மை முஸ்லிமால் ஐரோப்பிய பாஷைகளில் ஒன்றிலேனும் இம்மொழிபெயர்ப்பு வெளிவந்திருப்பது மிகசிலாகிக்கத்தக்க விஷயமே. பரிகசக்காரனால் இம்மொழி பெயர்ப்பு வெளிப்படுத்தப் படவில்லை; ஆனால் ஓர் உண்மை பக்தரே இதை வெளியிட்டிருக்கிறார். தான் ஒரு கவியென்று பாசாங்கு செய்துகொண்டு வேண்டியமட்டும் விடத்தனம் புரிந்து சமயம் வாய்த்தால் ஜனங்களை ஏமாற்றிவிடலாமென்று எண்ணித்திரிந்த ஒரு பித்தரால் சிருஷ்டிசெய்யப்பட்டதுதான் இஸ்லாமானவர்களின் திருவேதமென்று ஐரோப்பியருக்குக் காட்டவேண்டுமென்னுங் கெட்ட எண்ணத்துடன் வியாக்கியானம் எழுத முன்வந்த ஒரு போலிப்புலவனால் பிரசுரிக்கப்பட்டதன்று இம்மொழிபெயர்ப்பு; ஆனால் குர்ஆன் ஷரீபின் ஒவ்வொரு வார்த்

தையும் அல்லாஹுத்தஆலாவின் சொந்தமான திருவசனமென்று உண்மையில் நம்பி இவ்வேதத்தில் இறந்த கால உண்மையும் எதிர் கால உண்மையும் நிரம்பப்பொதிந்து கிடக்கின்றனவென்று ஒத்துக் கொண்டிருக்கும் ஓர் உண்மை மௌல்வியால் இம்மொழிபெயர்ப்பு வெளியாக்கப்பட்டிருக்கிறது. நிந்தனைக்காரனாகிய ஒரு போலிப் புலவனால் எழுதப்பட்டிருக்கும் மொழிபெயர்ப்புக்கும் உண்மை முஸ்லிமாகிய ஓர் மௌல்வி சாஹிபால் வெளிவந்திருக்கும் இவ்வழ கிய மொழிபெயர்ப்புக்கும் இடையிலுள்ள வேறுபாடு அதன் ஒவ் வொரு பக்கத்திலும் செவ்வனே காணப்படுகின்றது; இதை ஐரோப் பியர்கள் எளிதில் கண்டுகொள்வார்களென்று நம்புகிறேன். இப் பொழுது நடந்துவரும் மகாயுத்தத்தின்பின் ஐரோப்பாவின் எண் ணமானது வேறுபட்ட எண்ணமாகவே காணப்படுமென்று நான் சொல்வதை நீங்கள் நம்புங்கள்; இதுவரையில் ஐரோப்பாவிலிருந்து வரும் மதவுணர்ச்சியும் நம்பிக்கையும் அடியோடு மாறும்படியான காலம்வந்துவிட்டதென்று அதற்குரிய ஆயிரக்கணக்கான சின்னங் களாலும் அபிப்பிராயங்களாலும் அறிவுடையோர் நம்பிவருகின்றார் களென்பது நமக்கெல்லாம் நன்கு புலப்படுகின்றது. ஐரோப்பா கண்டத்திலுள்ள வெவ்வேறு ஜாதியாரால் வெவ்வேறுவிதமாய்க் கொண்டாடப்படும் அவர்களுடைய "தேசியக்" கிறிஸ்துமார்க்க மானது இப்பொழுது நடந்துவரும் மகா உற்பாதமாகிய இப்பெரிய அநாசார யுத்தத்தைத் தடுக்க முடியாமல் பலஹீனமடைந்து விட் டது. இந்தயுத்தத்தில் சாதாரணமாய்க் காணப்படும் கொடுமை களையும் தீச்செயல்களையும் ஏசுநாதரின் மலைமேல் செய்த உபதே சத்தாலும் தடைசெய்ய முடியவில்லை. இம்மகாயுத்தத்தில் காணப் படும் முக்கியமான விஷயம் யாதெனின், யுத்தசன்னத்தமாயிருக் கும் ஒவ்வொரு கிறிஸ்தவராஜ்யமும் தன் தன்னுடைய யுத்தக்கொ டிக்கு வாழ்த்துதல் கூறித் தன்னுடைய "தர்மகைங்கரியத்தில்" உதவிபுரிந்து ஜயந்தரும்படி ஏசுகிறிஸ்துவினிடம் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றது. எதிரெதிராய் நின்று போர்புரியும் இருகக்ஷிக் காரர்களும் இப்படியே தன்தன் தேவனிடம் ஸ்தோத்திரம் செய் வதை நோக்கும்போது இதெல்லாம் கிறிஸ்தவ தர்மமாயிருக்கக்கூடு மோவென்றும் ஏசு (அலை) நாதர் இப்படியும் உபதேசம் செய்திருப் பாரோவென்றும் நாம் தயங்கிநின்று சிந்திக்கவேண்டியிருக்கிறது. ஒருவிதமான உறுதியுமில்லாமல் கண்டகண்டபடி வியாக்கியானம் செய்யத்தக்க அந்தக் கிறிஸ்துமார்க்கத்தை வைத்துக்கொண்டு கோடிக்கணக்கான கல்வியறிவுள்ள ஐரோப்பியர்கள் இனி எவ்வாறு திருப்தியுடன் இருத்தல் முடியும்? ஏசுநாதர் உபதேசித்த சன்



மார்க்கதர்மத்தைக் கொஞ்சங்கூட ராஜீய விஷயத்தில் சேர்த்துக் கொள்ளமுடியாத நிலைமையில் இனியும் ஐரோப்பியர்கள் தங்கள் மாதாகோவிலுக்காக லக்ஷக்கணக்கான பவுன்களைக்கொடுக்கச் சம் மதிப்பார்களோ? "வெறுக்கத்தக்க பாடல்களை"ப்படிப்பவர்களை யும் "மனச்சாக்ஷியென்பதே மனிதர்களுக்கில்லையென்பவர்களை"யும் தன் கோஷ்டியில் சேர்த்துக்கொண்டிருக்கும் மதத்தைச் சரியான மதமென்று இனி ஐரோப்பாவிலுள்ள மனச்சாக்ஷிக்காரர்கள் ஒத் துக்கொள்வார்களோ? நன்று, நான் மேலேசொன்னதுபோல் கிறிஸ்தவ ஐரோப்பாவானது சண்டை முடிந்தவுடன் தன்னிடத்தி லுள்ள மாதாகோவில்கள் எத்தனையென்றும் மதக்கொள்கைகள் எத்தனையென்றும் மனச்சாக்ஷியுடையவர்கள் எத்தனையென்றும் கணக்கிடப்போகின்றதென்பதற்கு ஆயிரக்கணக்கான சின்னங் கள் காணப்படுகின்றன. இப்பொழுது சிறிதாகவும் அலக்ஷியமுள்ள தாகவும் முன்னறிவிக்கப்படுகின்ற ராஜ்யமாறுதல்களெல்லாம் அப் பொழுது அதிபலமுள்ளதாக ஆவதற்கு வேண்டிய ஆத்மசக்தியா னது பரவிக்கொண்டு வருகின்றது. இப்பொழுது ஐரோப்பாவில் காணப்படும் ஆத்மஞானமானது, நான் என்னுடைய பழய காம் ரேட் பத்திரிகையில் சொன்னதுபோல் துண்டு துண்டாய்ச் சிதறிக் கொண்டுவருகின்றது. குர்ஆனில் பன்முறையும் சொல்லப்பட் டிருப்பதேபோல் முஸ்லிம்களை ஆண்டவன் ஒரு திட்டமான நற் காரியத்துக்காகப் படைத்திருக்கிறானென்பது உண்மையாயின் நாம் ஐரோப்பாவை ஒருபத்திரமான துறைமுகத்துக்குள் சேர்ப்ப தற்குரிய வழிகாட்டியாயிருத்தல் வேண்டும். அவ்விடத்தில், பழய காலத்திலிருந்த [illegible]தன்மையான பலதெய்வக் கொள்கை களெல்லாம் பட்டுப்போனதுபோல் ஐரோப்பாவின் பற்பல மாதா கோவில்களும் இல்லாமற்போகும்; அவ்விடத்தில் கருப்பு அல்லது வெள்ளை அல்லது மஞ்சள் நிறமான வெவ்வேறு ஜாதியார் காணப் படமாட்டார்கள்; ஆனால் ஒரேவொரு ஆண்டவனை வணங்கக்கூடிய ஒரே ஜாதியார்தான் காணப்படுவார்கள்; அங்கே பிரபுக்களாவது பெருமான்களாவது தொழிலாளர்களாவது தனித்தனியே காணப் படமாட்டார்கள்; ஆனால் அனைவரும் ஒரே தெய்வத்தையே பூஜிக் கிறவர்களாயிருப்பார்கள். அங்கே ஏகாதிபத்தியமாவது பிரபுக் களின் அரசாட்சியாவது குடியாட்சியாவது காணப்படமாட்டாது; ஆனால் உலமாக்களால் அதிபக்தியுடன் ஆளப்படக் கூடிய ஒரே சன்மார்க்கராஜ்யந்தான் காணப்படும். அங்கே "ஏற்றுமதி இறக் குமதிச் சண்டை"களாவது "உரிமைகொண்டாடும் ராஜீய விவாத" மாவது "செல்வாக்குக்கொண்டாடும்" சில்லரைச் சண்டையா

வது இரக்ஷிக்கப்படும் நாடுகளாவது சார்பு நாடுகளாவது காணப்பட மாட்டா; ஆனால் அங்கே ஆண்டவனுடைய அகண்டாகாரமான ஒரே ராஜ்யந்தான் நிலைத்திருக்கும்; அந்தராஜ்யத்தில் ஆண்டவன்தான் ஏகசக்ராதிபதியாயும் பார்லிமெண்டாயும் போப்துரையாயும் இன்னும் எல்லாமாயும் விளங்குவான். அங்கே நித்தியமான சமாதானம் குடிகொண்டிருக்கும்; ஏகநாயனுக்கே எல்லாரும் ஏதேச்சையாய்த் தலைசாய்ப்பார்கள்; அவனுக்கே அனைவரும் கீழ்ப்படிந்து நடப்பார்கள்; நடக்கும்போதும் படுக்கும்போதும் உறங்கும்போதும் விழிக்கும்போதும் எழும்போதும் விழும்போதும் எப்போதும் அந்த ஆண்டவனையே ஸ்தோத்திரம் செய்வார்கள்; அதுதான் இஸ்லாம். இந்த இஸ்லாம்தான் கடைசியில் எஞ்சி நிற்கும். நான் சொல்வதை நம்புவீர்களாக. ஈதெல்லாம் ஒரு வனாந்தரத்தில் மூன்று வருஷகாலமாய்க் கொடிய சிறையில் அடைபட்டிருப்பதன் காரணத்தால் கட்டுக் தளர்ந்துபோன மூளையையுடைய ஒரு மனிதனுடைய பிதற்றலென்று எண்ணவேண்டாம். ஆயிரக்கணக்கான மனக்கவலைகளின் விருந்து பலவந்தமாய் அப்புறப்படுத்தப்பட்டு இத்தனியிடத்தில் சிறைவைக்கப்பட்டிருப்பதால் என்மனமானது தன்னில் தானே ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டது; அடிக்கடி தியானம் செய்வதால் அளவற்ற பிரயோசனத்தையடைந்தேன். ஆட்டமாடும்போது அப்பாலிருப்பவன் அதன் முழு விருத்தாந்தத்தையும் அதிகமாய்க் கவனிப்பதேபோல் பொதுஜனங்களை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட நான் ஐரோப்பாவின் நிலைமையையும் ஆசியாகண்டத்தின் தன்மையையும் ஆதியோடந்தமாய்க் கவனித்து வந்திருக்கிறேன்; எவ்வகைச் சார்வானுகூலப்பக்ஷபாதமுமில்லாமல் நோக்கும்போது எதிர்காலமானது இ-ஸ்-லா-ம் என்னும் பதத்தால் தோனிப்பதை நான் தெளிவாகக்காண்கிறேன். ஆம், இக்பால் என்பவரும் இவ்விஷயத்தைப் பத்து வருஷங்களுக்கு முன்னேயே உணர்ந்து கொண்டார்; ஐந்து வருஷங்களுக்கு முன்னேயும் அவர் அவ்விஷயத்தை மறுபடியும் தமது அருமைக்கவி மூலமாய் வெளிப்படுத்தி யிருக்கின்றார்.

நன்று, இந்த மகா யுத்தத்துக்குப் பின் இவ்வுலகில் உண்டாகப் போகின்ற பெரும் பிறழ்ச்சிக்கு ஆயத்தம் செய்வதுபோலிருக்கிறது இப்பொழுது மௌல்வி சாஹிபு எழுதியிருக்கும் குர்ஆன் ஷரீபு; எல்லாப் படைப்புக்களுக்கும் ஏகாதிபதியாகிய ஏகநாயனையே ஸ்தோத்திரம் செய்வதாயிருக்கின்றது எமது திருமறை. இந்த மகா யுத்தம் முடியுமட்டும் யான் உயிருடனிருக்கும் பக்ஷத்தில் ஆண்டவனிடத்தில் நான் விண்ணப்பித்துக் கொள்வது யாதெனின்



விலைமதிக்க முடியாத இஸ்லாத்தின் கொள்கைகளை நான் மேற்போட்டுக்கொண்டு இவ்வுலக முழுதும் திரிந்து நம்முடைய உடல் பொருள் ஆவியையெல்லாம் நம்முடைய தலைவணங்கிய இறைவனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டுமென்று உபதேசம் புரியும்படியான ஒரு குற்றேவல் செய்பவனாய் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான். நம்முடைய அருமை காஜா ஏற்கனவே ஸாபீக்கூனல் அவ்வலூன்களில் ஒருவராயிருக்கிறார்; அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படியான பாக்கியம் எனக்குக் கிடைக்கும் பக்ஷத்தில் அதை ஒரு சுகிர்தமென்றே கருதுவேன். இப்படிப்பட்ட பெரிய எண்ணமானது என்னுடைய இதர நாட்டங்களையும் அற்ப ஆவல்களையும் ஒழித்து விட்டது; என் தொழிலை ஆரம்பம் செய்வதற்குத் [illegible]த்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இவ்விடத்தில் என்னுடைய தெளிவான கடமையை இயன்றமட்டும் சிறு சிறு கூட்டத்தில் செலுத்துவதற்கு யான் பின்னிடையாமலிருக்கிறேன். இவ்வூரிலுள்ள ஜனங்களுக்குச் சென்ற இரண்டு வருஷங்களாக நம்முடைய நபிகள் நாயகத்தின் (இவர்களுக்கு ஆண்டவனுடைய அருளும் அவனது நற்கருணையும் உண்டாகுக) உபதேசங்களையும் சரித்திரத்தையும் பரிசுத்தம் நிறைந்த ரபிய்யுல் அவ்வல் மாதத்தில் பிரசங்கம் செய்து வருகின்றேன். ஆனால் ஊரூராய் அலைந்து திரியும் உபதேசியின் "அருமைப் பைத்தியத்தை" யுடைய ஒருவனுக்குப் படித்தவர்களின் கூட்டம் வேண்டுமென்பது அவசியமில்லை; ஆனால் அவனுக்கு மிக விரிவான இடங்கள் வேண்டும். ("அருமைப்பைத்தியம்" என்பது ஒரு புலவனைக்காட்டிலும் ஓர் உபதேசிக்கு அதிகப்பொருத்தமாயிருக்கிறது.) "மிஷனரிகளின் ஏற்பாட்டு"க்கு வேண்டிய ஆடம்பரங்களெல்லாம் எனக்கு வேண்டியதில்லை யென்று நினைக்கிறேன். ஒழுங்கான ஏற்பாட்டுடன் அமைக்கப்பட்ட மிஷனரி முறையைப்போலில்லாமல் உண்மை முஸ்லிம்களின் உள்ளத்தில் உதித்த ஆத்ம சக்தியாகிய ஆவேசத்தாலேயே இதுவரையில் இஸ்லாமார்க்கமானது விருத்தியடைந்து வந்திருக்கிறது. இந்தமகாயுத்தம் முடியுமட்டும் யான் பிழைத்திருப்பேனென்று எனக்குத்தோன்றவில்லை; ஏனெனின் என்தேக அசௌக்கியமானது என் ஜீவதாதை மிக முடிவான நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டது; அடிக்கடி திரும்பத்திரும்ப நான் தேக அசௌகியத்தால் பீடிக்கப்படுவதால் என்னுடைய முடிவுகாலம் கிட்டிவிட்டதென்றே எண்ணுகிறேன். ஆனால் நான் சண்டைக்குப்பின் பிழைக்கட்டும் அல்லது பிழைக்காமல் போகட்டும், இவ்வுலகில் பகிரங்கமாய் நடைபெற்றுவரும் மே

லான செய்கைகளின் நலமான முடிபாலும் என்னுடைய ஆத்மாவின் அந்தரங்க ஹிருதயத்தில் ஆண்டவனால் உபதேசிக்கப்படும் இரகசியத்தாலும் எனக்குத் தோற்றுவதாவது, மனிதர்களை அவர்களின் எண்ணங்களுக்குத் தக்கவாறு பரீக்ஷிக்கும் ஆண்டவன் என்னுடைய உறுதியான திண்ணிய எண்ணத்துக்குத் தக்கவண்ணமே என்னையும் மதிப்பிடுவான் என்பதுதான். பாபம்நிறைந்து வீணாய்ப் போன என்னுடைய வாழ்நாளில் ஒருதினத்தில் செய்தபாபத்துக்கேனும் மேற்கூறிய என் நல்லெண்ணம் பிராயச் சித்தமாயிருக்குமாறு ஆண்டவன் அருள்புரிவானாக.

நன்று, நான் இப்பொழுது தங்களிடம் விடைபெற்றுக்கொள்ளவேண்டும். மௌல்வி முஹம்மதலியைத் தாங்கள் கண்டால் எனக்காக அவருக்கு வந்தனமளியுங்கள்; அவர் அருமையாய் உழைத்துவெளியிட்டிருக்கும் குர்ஆன்ஷரீபில் நான் ஓர் உண்மை முஸ்லிமைப்போலவே பெருமை பாராட்டுகிறேன்; இப்பூவுலகத்திலும் காணப்படக்கூடிய நாமங்களிலெல்லாம் மகாசிலாக்கியமான திருநாமத்தை அந்தமௌல்வி வகித்திருப்பதே போல் நானும் வகித்திருப்பதால் எனக்கும் அவருக்கும் அதிகசம்மந்த முண்டென்பதும் எனக்கொரு பெருமையைக்கொடுக்கிறது...

மகாதீரபுருஷராகிய என்னுடைய அந்த காஜாசாகிபுக்குத் தாங்கள் கடிதம் எழுதநேர்ந்தால் அவருடைய அடர்த்தியமான வயது சென்ற வட்டதாடிக்கு என்னுடைய முத்திகளைச் சமர்ப்பியுங்கள். என்னுடையவும் ஷௌக்கத்துடையவுமான மகாசிலாக்கியமான சலாம் உங்களுக்குண்டாகுக.

தங்களுடைய மகா உண்மையான நன்றியறிதலுள்ள,

முஹம்மதலி.

P. S. ஒருவிஷயம்; நான் சொன்னதாக மௌல்விசாஹிப் எம். ஏ., அவர்களுக்கு இவ்விஷயத்தை ஞாபகப்படுத்துங்கள். அடுத்தபதிப்பில் நபிகள் நாயகத்தின் ஜீவியசரித்திரமொன்றையும் ஆரம்பகாலத்தில் இஸ்லாம் அடைந்துவந்த விருத்தியையும் குர்ஆன்ஷரீபின் ஆதாரத்தை மட்டுமேகொண்டு எழுதிச்சேர்க்கும்படி சொல்வதோடு, குர்ஆன்ஷரீபில் காணப்படும் எல்லா உபாக்கியானங்களுக்கும் ஒரு சுருக்கமும் அக்கால அரபுநாட்டின் பூகோள விவரமொன்றும் அவசியமென்று தெரிவியுங்கள்"

இக்கடிதத்தின் மூலம் 1919 டிஸம்பரில் வெளி வந்த இஸ்லாமிக் ரெவியூ 445-ம் பக்கத்தில் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருப்பதை நோட்ட மிடுங்கள். சென்ற ஆண்டில் மௌலானா முஹம்மதலி இங்கிலாந்துக்கு கிலாபத்துத் தூதில் ஒருவராய்ச் சென்றபோது அவர் வோக்கிங் மஸ்ஜிதில் ஈதுல் பித்ர் தொழுது கொண்டு கனம் காஜாசாஹிபை வாய்கொண்ட மட்டும் புகழ்ந்திருக்கிறார்கள். இன்னும் கனம் ஜஸ்டிஸ் ஸர் அப்துர் ரஹீமும் சென்னை மாகாண ஜனத்தலைவராகிய யாக்கூப் ஹஸன் ஸேட் அவர்களும் சென்ற வருஷம் ஜனாப் காஜாசாஹிப் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது அவரையும் அவரது வோக்கிங்மிஷன் வேலையையும் அளவுகடந்து புகழ்ந்திருக்கிறார்கள். அக்காலத்தில் சமாசாரப் பத்திரிகைகளைப் படித்தவர்கள் இவ்வுண்மையை நன்குணர்ந்து கொண்டிருப்பார்கள். சிங்கப்பூர் பினாங்கு முதலிய கீழ் நாடுகளில் இப்பொழுது காஜாசாஹிபுக்குண்டான புகழுக்கு ஓர் அளவு முண்டோ?



## ஒரு வேண்டுகோள்.

அருமைச் சகோதரர்காள்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்தஹு. இப்பொழுது இஸ்லாத்துக்கு நேர்ந்திருக்கும் இடர்ப்பாடு இத்தன்மையதென்பது உங்களெல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமே. முஸ்லிம்கள் தங்கள் மார்க்கக் கல்வியிலும் தேசியக்கல்வியிலும் மிகுதியும் பின்னிடைந்திருப்பதே அவர்களின் தற்கால வீழ்ச்சிக்கு ஒரு முக்கியகாரணமாயிருக்கிறது. கிலாபத்துக்கு நேரிட்டிருக்கும் குறைவு நிவர்த்தியாக வேண்டியதுடன் முஸ்லிம்களும் முன்னேற வேண்டுமாயின் தங்களுடைய மதவுணர்ச்சியிலும் மார்க்கக் கல்வியிலும் இனி அலக்ஷியமாயிருப்பது தகாது நம்முடைய மார்க்கசம்பந்தமான விஷயங்களை மிகுதியும் இத்தென்னாட்டில் பரவச் செய்ய வேண்டியிருக்கின்றது. தென்னாட்டு முஸ்லிம்கள் மார்க்கவிஷயத்தில் மிகவும் பொடுபோக்காயிருந்து வருவதால் அன்னவர்கள் நன்கு நோக்கும்படி இத் "தத்துவ இஸ்லாம்" பத்திரிகையை அதிகமாய்ப் பரத்த வேண்டியிருக்கின்றது. "சந்தா நேயர்களுக்கு மட்டுமே இச்சஞ்சிகையை அனுப்புவது போதாது. மார்க்க விஷயத்தில் வெகுஅலக்ஷியமாய்க் காலங்கழித்துவரும் நமது முஸ்லிம் சகோதரர்களுக்கும் நம்முடைய மார்க்க உண்மைகளை நன்றாக உணர விரும்பும் இதரமத நண்பர்களுக்கும் இப்பத்திரிகையை அதிக இலவசமாய்ப் பரத்த வேண்டியிருக்கிறது. இன்னும், இப்பத்திரிகையை அதிக நேர்த்தியாயிருக்கும்படி செய்தல் வேண்டும். மேற்கூறிய விஷயங்களைச் செவ்வனே நடத்துவதற்கு நமது சந்தா நேயர்கள் செய்யவேண்டியது ஒன்றுண்டு. சஞ்சிகையின் வருஷ

சந்தாவை உயர்த்திவிடப் போகிறோமென்று ஒருவரும் சந்தேகிக்க வேண்டாம். இப்பொழுதிருக்கும் சந்தாவுடனே மேற்கூறிய விஷயங்களை யெல்லாம் செய்து முடிக்க வேண்டுமாயின் நீங்களெல்லாம் செய்யவேண்டியது ஒரு சிறு உதவிதான்; அதாவது நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே வேறு ஒவ்வொரு சந்தா நேயரைச் சேர்த்து அனுப்பினால் அஃதே போதும். ஒவ்வொரு சந்தாதாரரும் வேறு ஒவ்வொரு நண்பரிடம் சொல்லி இப்பத்திரிகையை ஆதரிக்கும்படி சொல்வாராயின் மேற்கூறிய நன்மைகளை யெல்லாம் செய்வதோடு இன்னும் இனிய வியாசங்களையும் எழுதி வெளியிடுதல் முடியும்.

இங்ஙனம்:

அல்லாவுக்கும் ரஸூலுக்கும் ஈமான் கொண்ட,
தங்களன்பன், மிஸ்கீன்
பா. தாவூத்ஷா சாகிப்,
அக்கிராசனாதிபதி.

## கலாசாலைப் பஹிஷ்காரத்தைப்பற்றி ஷெய்குல்ஹிந்து ஹஸரத் மௌலானா மஹ்மூதுல்ஹஸன் கிபுலா அவர்களின் பத்வா.

### வினாக்கள்

மதாசாரியார்களும் உலகமாக்களும் இவ்விஷயங்களுக்குஎன்ன சொல்லுகிறீர்கள்?

1. உதவி மறுத்தல் இயக்கத்தின்படி கலாசாலைகளின் அதிகமான செலவுகளை உத்தேசித்து கவர்ண்மெண்ட்டார் உதவிவரும் கிராண்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வது கூடுமா, கூடாதா?

2. பற்பல மாணவர்களுக்கும் கௌரவப்பட்ட தாரிகளுக்கும் கவர்ண்மெண்ட்டாரால் கொடுக்கப்படும் உபகாரச்சம்பளத்தை வாங்குவது கூடுமா, கூடாதா?

3. பெற்றோர் அல்லது வேறு பெரியோர்களின் அனுமதியின்றியோ அல்லது அவர்கள் இஷ்டத்திற்கு விரோதமாகவோ இப்படிப்பட்ட பாடசாலைகளை விட்டகன்றுவிட மதக்கட்டளைப்படி மாணவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்களா, இல்லையா?

4. பெண்டுகள் பிள்ளைகள் பலஹீனமான பெற்றோர்கள் ஆகிய இவர்களை ஸம்ரக்ஷணை செய்யமதக்கிரமப்படி கடமைப்பட்டிருக்கும்போது மாணவர்கள் அதைத்தவிர்த்து விட்டு ஆண்டவனுக்காக கிலாபத் ஊழியம்செய்ய அமர்ந்து விடுவது அவசியமா, இல்லையா?



5. ஆங்கில கவர்ண்மெண்ட்டாரின் கிராண்டு பெறும், அல்லது கிலாபத் உதவிமறுத்தல் இயக்கத்திற்கு விரோதம் பாராட்டும் இதர ராஜ சமஸ்தானங்களினின்றும் கிராண்டுபெறும் கலாசாலைகளில் வாசிப்பதும் வாசிக்கவைப்பதும், அல்லது அங்கே பிரசங்கிக்கவோ உபதேசிக்கவோ மதக்கல்வி போதிக்கவோ ஊழியத்திலமர்வதும் கூடுமா, கூடாதா?

6. தங்களுடைய சொந்தமான செலவுகளுக்காகவாவது தாங்கள் ஸம்ரக்ஷிக்கக் கடமைப்பட்டிருக்கும் இதரர்களுக்காகவாவது போதுமான தொகையை கிலாபத் நிதியினின்றும் பெற்றுக்கொள்வது ஆகுமா, ஆகாதா?

7. கவர்ண்மெண்ட்டுப் பாடசாலைகளின் அல்லது கவர்ண்மெண்ட்டு உதவிபெறும் பாடசாலைகளின் உபாத்தியாயர்கள் இதர ஊழியர்களுடன் எப்படி நடந்து கொள்ளவேண்டும்?

8. கிலாபத்தின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஹிந்துக்களுடன் சேர்ந்திருப்பதும் அவர்களிடமிருந்து திரவியசகாயம் தேகசகாயம் பெறுவதும் ஆகுமா, ஆகாதா?

9. அலிகார் காலேஜின் சாசுவதநிதியும் அதன் கட்டிடங்களும் சுமார் 40,00,00 ரூபாய் பெறுமானமுள்ளவையாயிருக்கின்றன. இதையும் ஏராளமான மதிப்புப்பெற்ற இதன் புத்தகசாலையையும் ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள இதரசாமான்களையும் பத்திரப்படுத்தவோ அல்லது செலவுசெய்யவோ கலாசாலை அங்கத்தினர்கள் கடமைப்பட்டிருக்கிறார்களா, இல்லையா?

10. ஆங்கிலபாஷையைக் கற்றுக்கொண்ட மாணவர்கள் அதன் பிறகு மற்றவர்களுக்குப் போதிக்கும்பொருட்டு மார்க்கக்கல்வி கற்க மதக்கட்டளைப்படி கடமைப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மாணவர்கள் இச்சமயத்தில் கிலாபத்தின் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திவைக்கத் தலையிடுவது அவசியமா? சுருங்கச்சொல்லுமிடத்து, பிரமாதமான மதக்கல்வியைப் பூர்த்திசெய்வதா, அல்லது கிலாபத்தின் ஒத்துழையாமை இயக்கத்தில் தலையிடுவதா?

வினவுவோர்கள்:
அலிகார் காலேஜ் மாணவர்கள்,
1உ. ஸபர் மீ 1339 ஹிஜ்ரி.

## விடை.

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பம் செய்கின்றேன்.

இவ்வினாக்களுக்கு விடை தெரிந்து கொள்ளுமுன் உண்மையான முஸ்லிம்கள் தங்களைச் சூழ்ந்துள்ள எல்லா எண்ணங்களையும் விட்டொழித்துத் தங்களுடைய ஈமானின் பொறுப்பையும் மதிப்பையும் ஆண்டவனது திருவாக்கியங்களின் கௌரவத்தையும் புண்ணிய ஸ்தலங்களின் மகிமையையும் நன்றாய் மனத்தில் பதியவைத்துக்கொள்ள வேண்டுவது அவசியமாகும். தற்கால நிலைமையை ஆழ்ந்த நோக்கத்துடன் கூர்ந்து பார்க்குமளவில், ஒவ்வோர் ஈமான் கொண்டவராலும் அவசியம் பாதுகாக்கப் படவேண்டிய (பர்லான) முஸ்லிம்களின் மகா விலையுயர்ந்த ஆபரணம் எவ்வாறு அபகரிக்கப் பட்டுப் போகின்றதென்னும் விஷயமும், எவ்வகைப் பொய்வாக்குறுதிகளாலும் வெட்ககரமான புனைசுருட்டுக்களாலும் சேஷ்டைகளாலும் ஜஸீரத்துல் அரப் சம்மந்தமான ரஸூலுல்லாஹ் அவர்களின் முக்கியமான திருவாக்கியங்கள் எவ்வாறு தகர்க்கப்படுகின்றனவென்னும் விஷயமும் நன்கு விளங்கும்.

அல்லாஹுத் தஆலாவின் சத்துருக்கள் இஸ்லாத்தின் கௌரவங்களையும் மகிமைகளையும் அடியோடு அழித்து விடுதற்காகச் செய்யவேண்டிய முயற்சிகளில் எவ்வகைக் குறைவும் செய்யவில்லை. ரஸூலுல்லாஹ் அவர்களின் ஸஹாபாக்களும் பெரியோர்களும் தங்களுடைய உதிரத்தை நதியாகப் பெருக்கிக் கைப்பற்றிய மெஸபொட்டேமியா பலஸ்தீனம் ஸிரியா (ஷாம்) முதலிய புண்ணிய ஸ்தலங்கள் காபிர்களின் பேராசைக்கு உட்பட்டு விட்டன. கிலாபத் ராஜ்யம் சின்னாபின்னப் படுத்தப்பட்டுப் போய்விட்டது. இவ்வுலகிலுள்ள எல்லா முஸ்லிம்களின் பாதுகாப்புக் குரியவரும், இப்பூமண்டலத்தில் ஆண்டவனது சாயல்போலிருந்து வானலோகச் சட்டங்களை நிர்வகிப்பவரும், முஸ்லிம்களின் சுதந்தர சமாதானத்தைப் பாதுகாப்பவரும், அல்லாஹ்வின் திருவசனங்களைப் போதிப்பவரும், அவற்றின் கௌரவங்களை நிலைப்படுத்துபவருமான கலீபத்துல் முஸ்லிமீன் அவர்கள் ஏராளமான எதிரிகளுக் கிடையிலகப் பட்டுத் தயங்கிக்கொண்டிருக்கிறார்.

ரஸூலுல்லாஹ் அவர்களின் கொடியானது சாய்ந்து போகும் போலிருக்கிறது. ஹஸரத் உபைதா, ஸஅத்பின் அபீவக்காஸ், காலித் பின்வலீத், அபூஐயூப் அன்ஸாரி ஆகிய இவர்களின் ஆவியானது அவரவரின் ஸ்தலத்தில் நின்று சஞ்சலப் படுகின்றது. இப்படிப்பட்ட மஹான்களெல்லாம் முன்னொரு காலத்தில் மகா வீரத்



தோடிருந்திருந்தும் ஏன் இக்காலத்தில் முஸ்லிம்களெல்லோரும் மத உணர்ச்சியில் தளர்ச்சியடைந்து தங்கள் இஸ்லாத்திற்கு உதவி செய்யப் பின்வாங்குகின்றனர்? இப்போதைய முஸ்லிம்கள் சோம்பலிலும் மகிழ்ச்சியின் மயக்கத்திலும் மூழ்கிக்கிடப்பதால் தங்களுடைய பழமையான வீரத்தையும் மத உணர்ச்சியையும் வேறு ஜாதியாரிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

இந்த ஆபத்தான நேரத்தில் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு உதவி புரிவதை விடுத்துக் காபிர்களுடைய சிநேகம் பக்தி முதலியவற்றையடைய ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைக் கொலை செய்தான். ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனுடைய உதிரத்தைப் பெருக வைத்தான். சத்துருக்களிடம் மதிப்படையும் பொருட்டுத் தன்கையைத் தன்னுடைய உதிரத்திலேயே அமிழ்த்தி விட்டான்.

ஓ, இஸ்லாத்தின் புத்திரர்களே! மார்க்க விசுவாசிகளே!! தேச பக்தர்களே!!! முஸ்லிம் ராஜ்யங்களின் சுயேச்சையை நாசப்படுத்தினதும் இஸ்லாமிய கிலாபத்தின் [illegible]னையைத் தீக்கிரையாக்கினதுமான இஸ்லாத்தைப் பொசுக்கத்தக்க மின்னலோடு கூடிய இடியானது முக்கியமாய் அராபியர் இந்தியர் ஆகிய இவர்களின் உஷ்ணமான உதிரத்தைக் கொண்டே தயாரிக்கப்பட்டது என்றும், இப்புண்ணிய ஸ்தலங்களையெல்லாம் கைப்பற்றி வெற்றியடைவதில் ஆங்கிலேயருக்கு உதவியாயிருந்த பணத்திரளின் பெரும்பாகம் உங்கள் கரங்களாலேயே சேகரிக்கப்பட்டது என்றும் என்னைவிட நீங்களெல்லாரும் நன்றாய் அறிவீர்கள்.

இப்பொழுது கிறிஸ்தவர்களுடன் ஒத்துழைப்பதனால் உண்டாகும் தீயபலன்களைத் தெரிந்து கொள்ளாத முஸ்லிம்களும் இருப்பார்களா? ஜலத்தில் மூழ்கி இறப்பவன் ஒரு சிறு துரும்பின் ஆதரவையும் நாடுவதுபோலொத்த இந்நெருக்கடியான சமயத்தில் ஆங்கிலேயருடன் ஒத்துழைக்க வழிதேடுவோரும் இருப்பார்களோ?

ஏ, எனது நேயர்களே! தர்க்கம் செய்யத்தக்க நேரம் இஃதன்று. இஸ்லாமிய உணர்ச்சியுடனும் மார்க்க அபிமானத்துடனும் வேலைசெய்ய வேண்டிய நேரம் இது. தேச உலமாக்களின் சிறு சிறு அபிப்பிராய பேதங்கள் உங்களுடைய வன்மையைக் குறைக்கவும் அதைரியப் படுத்தவும் காரணமாகலாம்.

நான் இப்பொழுது உங்களைக் கத்தியெடுத்து ஜிஹாத்செய்யவும் ஸிரியா மெஸபொட்டேமியாமுதலிய இடங்களுக்குப்போய் உங்கள் சகோதரர்களுடன் கலந்து கொள்ளவும் சொல்லவில்லை. ஆனால் நான் உங்களை வேண்டிக்கொள்வதாவது, உங்கள் சத்துருக்களின் பலத்தை

அதிகப்படுத்தாதேயுங்கள் என்பதுதான் அல்லாஸுப்ஹான ஹுவதஆலாவின் திருவசனங்களின்மீது சாதுர்யமாகவும் தைர்யமாகவும் சார்ந்திருந்து நம்பிக்கையுடன் நடந்துகொள்ளுங்கள்.

"ஏ, ஈமான் கொண்டவர்களே! யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் உங்கள் சிநேகிதர்களாகவும் உதவிக்காரர்களாகவும் செய்து கொள்ளாதிருங்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் துணைவர்களாயிருக்கிறார்கள். உங்களுள் யாராவது அவர்களைச் சிநேகிதர்களாகவும் துணைவர்களாகவும் செய்து கொள்வாராயின் இவர்களும் அவர்களாகவே கருதப்படுவார்கள்"—(அல்குர்ஆன்).

"முஸ்லிம்கள் மூமின்களைத் தவிர காபிர்களைத் தமது தோழர்களாகவும் துணைவர்களாகவும் செய்து கொள்ளத் தேவையில்லை. யாரேனும் இவ்வாறு செய்வாராயின் அவர்களுக்கும் அல்லாஹ்வுக்கும் அதன்பின் எவ்வகைச் சம்பந்தமுமில்லை"—(ஷெ. திருமறை).

"மூமின்களைத் தவிர காபிர்களைத் தமது சிநேகிதர்களாகப் பாவிப்பவர்களும் அவர்களிடம் கௌரவத்தைக் கோருகிறவர்களுமான முனாபிக்கின் (கள்ளமுஸ்லிம்)களுக்கு மகா கஷ்டமான வேதனையின் செய்தியை அறிவித்து விடுங்கள். ஏனெனின் எல்லாக் கௌரவமும் அல்லாஹுத் தஆலாவைப் பொருந்தியதாயிருக்கும்"—(ஷெ. திருமறை).

"ஏ, ஈமான் கொண்டவர்களே! மூமின்களையல்லாது காபிர்களை உங்களுடைய நேயர்களாகவும் உதவிக்காரர்களாகவும் செய்து கொள்ளாதிருப்பீர்களாக. என்ன நீங்கள் அல்லாஹ்வின் ஆத்திரத்தைப்பெற விரும்புகிறீர்களோ?"—(திருக்குர்ஆன்).

"ஓ, ஈமான்கொண்டவர்களே! தங்கள் மதத்தைப் பரிகசமாகவும் விளையாட்டாகவும் கொண்டாடுகின்ற வேதக்காரர்களையும் காபிர்களையும் நீங்கள் தோழர்களாகவும் உபகாரிகளாகவும் செய்துகொள்ளாதிருங்கள். நீங்கள் மூமின்களானால் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்"—(ஷெ. வேதம்)

"உங்களுள் பலர் காபிர்களைத் தங்கள் சிநேகிதர்களாகப் பாவிப்பவர்களை நீங்கள் காண்பீர்கள். சந்தேகமில்லாமலே அவர்கள் தங்களுக்கு முன்னால் தமக்காக அனுப்பியிருப்பது வீணானதேயாகும். அவர்கள்மீது அல்லாஹ்வின் கோபமுண்டாகும். அவர்கள் எப்பொழுதும் வேதனையிலிருப்பார்கள். அவர்கள் அல்லாஹ்வின் மீதும் நபியின்மீதும் அந்நபியின் மீது இறக்கப்பட்டதன் மீதும் உறுதிகொண்டவர்களானால் காபிர்களைத் தங்களுக்குத் தோழர்களாகச்செய்துகொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்களில் அநேகர் பக்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள்"—(அதே வேதம்.)



"அல்லாஹ்வின் மீதும் கடைசித் தீர்ப்புநாள் மீதும் உறுதி கொண்ட எந்தக் கூட்டத்தாரும் அல்லாஹ்வையும் அவனது நபியையும் எதிர்த்தவர்களுடன், அவ்வெதிரிகள் தங்கள் பெற்றோர் பிள்ளைகள் சகோதரர்கள் சுற்றத்தார்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்களுடன் இஷ்டம் பாராட்டுகிறவர்களை நீங்கள் காணமாட்டீர்கள். இப்படிப் பட்டவர்களின் மனத்திலேயே அல்லாஹுத்தஆலா ஈமானை (உண்மையான உறுதியை) ஸ்திரப்படுத்தியிருக்கிறான்; மேலும் தனது சக்தியைக்கொண்டு அவர்களுக்கு உதவி புரிந்தான்; அவர்களை அருவிகள் ஓடும்படியான சுவர்க்கத்திலே சேர்ப்பித்தான்; அதில் அவர்கள் எப்பொழுதும் தங்கியிருப்பார்கள். இவர்களால் அல்லாஹ் சந்தோஷமடைந்தும் அல்லாஹ்வினால் இவர்கள் சந்தோஷமடைந்தும் இருக்கிறார்கள். இவர்கள்தாம் அல்லாஹ்வின் கூட்டத்தார்கள்; அல்லாஹ்வின் கூட்டத்தார்களே காரியசித்தி பெறுவார்களென்று ஞாபகம் வையுங்கள்"-(அல்குர்ஆன்)

"ஏ, ஈமான்கொண்டவர்களே! என் சத்துருவையும் உங்கள் சத்துருவையும் நேயர்களாகச் செய்துகொள்ளாதிருங்கள். உங்கள்பால் அனுப்பப்பட்ட உண்மையை மறுத்தவர்களிடம் நீங்கள் நேயச்செய்தியை அனுப்புகிறீர்களோ?"—(ஷெ. திருவேதம்).

இவைபோன்ற ஆயத்துக்கள் நமது குர்ஆனே கரீமில் மிகுதமாய்க் காணப்படுகின்றன. முழு விவரமும் இங்கே சொல்லவேண்டியது அவசியமாய்க் காணப்படவில்லை. உதவி மறுத்தல் இயக்கத்தின் விவரமாவது: இஸ்லாத்தின் விரோதிகளுக்கு உதவி புரிவதை மறுத்துவிடுவதேபோல் அவர்களிடமிருந்து உதவி பெறுவதையும் மறுத்துவிடவேண்டுமென்பதுதான். இதுதான் எமது கொள்கை. ஆதலின் உங்களுடைய முதலிரண்டு வினாக்களுக்கு விடையாவது:—வாசக சாலைகளில் வாங்கப்படும் கவர்ன்மெண்ட் கிராண்டுத் தொகையும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளமும் மறுத்துவிடத் தக்கனவே. மேலும் உதவி மறுத்த வியக்கத்தைக் கைக்கொள்வதில் பெற்றோர்களின் அனுமதி அவசியமன்று; அன்றியும், இவர்களே தாழ்மையுடனும் சாவதானத்துடனும் தங்கள் பெற்றோர்களையும் உதவி மறுத்த வியக்கத்தைக் கைக்கொள்ளும்படி வற்புறுத்துவது கடமையாகும்.

இப்பொழுது மாணவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டதுபோலவே நபிகள் நாயகத்தின் காலத்திலும் பல மூமின்களுக்கு ஏற்பட்டது. ரஸூலுல்லாஹ் அவர்களிடம் அவர்கள் பின் வருமாறு வினவினார்கள். "யாரஸூலுல்லாஹ்! காபிர்களிடமிருந்து ஒரு

மிக்க விலகிக்கொள்ள எப்படி முடியும்? நாம் அப்படிச் செய்வோமாயின் நமது தாய்தந்தையரையும் சகோதரர்களையும் சுற்றத்தார்களையும் இழந்துவிட நேரிடும்; வியாபாரங்கள் சேதமாய்ப்போம்; பொருள்களெல்லாம் விரயமாய்விடும்; இருப்பிடங்கள் நாசமாக்கப்படும்.'' இதற்கு விடையளிக்கும் பான்மையாய் அல்லாஹுத் தஆலா அடியில் காணுமாறு புர்க்கானுல் மஜீதில் கூறியுள்ளான்:—

"உங்கள் பெற்றோர், புத்திரர், சகோதரர், மனைவிமார், சுற்றத்தார், நீங்கள் சம்பாதித்த பொருள்கள், சேதமாய்ப் போகுமென்று நீங்கள் பயப்படும் உங்கள் வியாபாரங்கள், உங்களுக்கு விருப்பமான வீடுகள் ஆகிய இவையெல்லாம் அல்லாஹ்வுக்காகவும் அவனால் அனுப்பப்பட்டவருக்காகவும் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதைக் காட்டிலும் உங்களுக்குப் பிரியமானவையாயிருக்கும் பக்ஷத்தில் அல்லாஹுத் தஆலா தன் ஆணையைக் கொண்டுவருவதை எதிர்பார்த்திருங்கள் என்று சொல்லிவிடுவீராக. இவ்வகுப்பினரை அல்லாஹ் ஆதரிக்கமாட்டான்''—(அல்குர்ஆன்).

இப்பொழுது இத்தேசத்தில் பரவியிருக்கும் இவ்வியக்கம் ஒருகால் பயன்பெறுமற்போனாலும் அல்லது கவர்ன்மெண்டார் தமது பிடிவாதத்தில் ஊன்றி நின்றாலும் மகா கெடுதலெல்லாம் விளையுமென்று இப்போது சந்தேகிப்பதுபோலவே முன் காலத்திலும் நேர்ந்தது. "துரதிருஷ்டவசத்தால் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் தம் எண்ணத்தில் அனுகூலமடையாமல் யூதர்கள் வெற்றியடைந்துபோய் விடுவார்களாயின் எங்களுக்குப் பேராபத்து விளையும்; இதற்காகத்தான் நாங்கள் யூதர்களுடன் சிநேக பாவமாயிருந்து வருகிறோம்,'' என்று முனாபிக்கீன்கள் (கள்ள மூமின்கள்) சொன்னார்கள். இதற்கு மறுமொழியாக ஆண்டவன் கூறுகிறான்:—"ஜயம் அல்லது அதற்கு மாறான வார்த்தையை அல்லாஹுத் தஆலா தன்னிடமிருந்து வெளிக்கொண்டுவரும் காலம் சமீபித்துவிட்டது; பிறகு முனாபிக்கீன்கள் தங்கள் மனத்தில் ஒளித்து வைத்திருக்கும் இதுபோன்ற எண்ணங்களைக்கொண்டு வெட்கித்து விடுவார்கள்.''—(அல்குர்ஆன்).

எனது அன்பார்ந்த நேயர்காள்! அல்லாஹ்வின்மீது முழு நம்பிக்கையும் வைத்து அவன் கயிற்றைத் தாங்கி நுமதெண்ணத்தில் உறுதியாயிருங்கள். கிறிஸ்தவர்களுடன் உதவி மறுத்தலை அனுஷ்டித்து உங்களாலியன்றமட்டும் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் ஊழியஞ் செய்வதை விட்டுக்கொடாதிருப்பீர்களாக; ஏனெனின் இச்சமயம் விட்டுக் கொடுத்தல் நன்றன்று.



உங்களுடன் அனுதாபம் பாராட்டுவதற்காகவும் பஞ்சாப் படுகொலைக்குப் பரிகாரம் அடைவதற்காகவும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் பெறுவதற்காகவும் ஆங்கிலேயருடன் உதவி மறுத்தலைக் கைக்கொள்ளவேண்டுமென்பதே இப்பொழுது இந்தியாவிலிருக்கும் பெரிய வகுப்பாரின் (ஹிந்துக்களின்) நோக்கமாகும். சீக்கியர் சங்கமும் இவ்வாறே தீர்மானித்துவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். நீங்கள் முழு நம்பிக்கையையும் அல்லாஹ்வின் மீது நிலைக்கச் செய்யுங்கள். உங்கள் நேயனும் உதவிக்காரனும் அவனே. ஆனால் உங்களுடைய இம்மகத்துவமான இயக்கத்தில் இதர வகுப்பார் தாமாகவே சேர்ந்துகொண்டாலும் அல்லது உங்களுக்கு உதவி புரிந்தாலும் அல்லது அனுதாபம் காட்டினாலும் நீங்களும் அவர்களுடன் சமாதானமாயும் தயாள குணத்துடனும் நடந்து கொள்ளுங்கள். அன்னியோன்னிய சிநேகபாவமாயிருங்கள்.

"மார்க்க விஷயத்தில் உங்களுடன் சண்டையிடாமலும் உங்கள் ஸ்தலங்களிலிருந்து உங்களை அப்புறப்படுத்தாமலும் இருப்பவர்களுடன் நீங்கள் சரசசல்லாபமாயும் நியாயமாயுமிருக்க அல்லாஹுத் தஆலா உங்களைத் தடைசெய்யவில்லை. சந்தேகமின்றி அல்லாஹ் நியாயவாதிகளைப் பாராட்டுகிறான். மார்க்க விஷயமாய் உங்களுடன் சண்டைசெய்கிறவர்களும் உங்கள் ஸ்தலங்களிலிருந்து உங்களை அப்புறப் படுத்துகிறவர்களும் அப்படி அப்புறப்படுத்துவதில் உடந்தையாயிருக்கிறவர்களும் அவர்களுடன் சிநேகபாவம் பாராட்டுகிறவர்களும் ஆகிய இவர்களே கொடுமைக்காரராவார்கள். இவர்களுடன் சிநேக சம்மந்தம் வைக்கவேண்டாமென்று அல்லாஹ் தடுக்கிறான்''—(அல்குர்ஆன்).

இச்சமயத்தில் அடியிற் காணுமாறு உங்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது: ஹிந்து முஸ்லிம்களின் இச்சிநேக சம்பந்தத்தின் பொருட்டு முஸ்லிம்கள் தங்களுடைய மதக்கொள்கைகளை மாற்றுவதும் குப்ர் ஷிர்க் முதலிய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதும் கூடா. இப்படிச் செய்வீர்களாயின் நன்மை அழுந்தித் தீமையே வெளிக்கிளம்பும் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளுங்கள்.

என் அபிப்பிராயமாவது:—நீங்கள் உதவி மறுத்தலியக்கத்தில் பொருத்தமாக நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின்மீது முழு நம்பிக்கையும் வையுங்கள். தங்கள்மீது வேறு எவ்வகை முக்கியமான கடமையுமில்லாத மாணவர்கள் உதவி மறுத்தல் இயக்கப் பிரசாரவேலை செய்யலாம். வேண்டிய அளவு மார்க்கக் கல்வியும் ஜீவாதாரமும் அடைந்து விடுமாயின் தற்போதிருக்கும் இவ்வியக்

கம் மிகப்பெரிய நன்மையை விளைக்கத்தக்கதாயிருக்கிறது. நாம்யாவரும் அவனிஷ்டப் பிரகாரம் நடக்கும்படி அல்லாஹுதஆலா போதிப்பானாக.

பெண்டு பிள்ளைகளையும் தள்ளாமையான தாய்தந்தையரையும் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள் அக்கடமைகளையெல்லாம் நிறைவேற்றியதன்பின் இவ்வொத்துழையாமை வேலையை மேற்கொள்ளலாம். ஏனெனின் மேலே சொன்னவர்களைக் காப்பாற்றுவது முதற்கடமையா யிருக்கின்றது. கிலாபத்தின் பாதுகாப்பு அதற்கு வேண்டிய உதவி ஊழியம் முதலியன செய்பவர்களுக்குச் சந்தா மூலமாக வசூலிக்கப்பட்ட கிலாபத் கமிட்டியின் பணத்திலிருந்து அவர்களுக்கு வேண்டிய அளவு சம்பளம் கொடுக்கப்பட்டால் அதைப் பெற்றுக்கொள்வது மார்க்கத்துக்குப் பொருத்தமான காரியமா யிருக்கிறது.

முடிவாக, காபிர்களுடன் சம்மந்தம் வைப்பது ஹறாமாயிருக்கிறது. இயன்றமட்டும் உங்களையும் உங்கள் நண்பர்களையும் இதை விட்டு மீளும்படி செய்வது அவசியமா யிருக்கிறது. தங்களுடைய கவனத்தை மற்றெல்லா விஷயங்களிலு மிருந்து ஒதுக்கி ஒவ்வோர் அரசனுடையவும் அற்பனுடையவுமான கடிவாளங்களை யெல்லாம் தன்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கும் எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலாவினிடம் செலுத்துவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும்.

அடியேன் இவ்வியாசத்தை முடிக்குமுன் சொல்லவேண்டிய இன்னுமொரு விஷயமாவது:—நான் எவ்வித முப்தியுமல்லன்; பத்வா எழுதக்கூடிய உலமாக்கள் வேறுபலர் இருக்கின்றார்கள். ஆனால் இவ்வியாசத்தில் உங்கள் வினாக்களுக்கு விடை கிடைத்து விடுமென்று எண்ணுகிறேன். மேலும் அலிகார் காலேஜின் கட்டிடங்கள் புத்தகசாலைகள் முதலியவற்றைக் காப்பாற்றவேண்டிய எண்ணம் உங்கள் மனத்திலுதிக்குமுன் இப்படிப்பட்ட வேலைகளினுண்டாகும் பொறுப்புக்கும் கான்ஸ்டாண்டிநோபிள் ஸிரியா, பலஸ்தீனம் மெஸபொட்டேமியா ஆகிய இவற்றின் மதிப்புக்கும் இடையிலுள்ள வித்தியாசம உங்கள் மனத்தை நன்றாகக் கவரச் செய்யும் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

கடைசியாக இனியொரு விஷயமும் உங்களுக்கு எடுத்துரைப்பது அவசியமாய்க் காணப்படுகிறது. இச்சமயம் ஒத்துழையாமை இயக்கம் ஜயம்பெறுதற்கு வேண்டிய முக்கியமான அம்சங்களாவன;—அமைதிக் குறைவும் கொடூரச் செயல்களை விளைக்கக்கூடிய எவ்வகைக் காரியமும் நம்மால் நடைபெறக் கூடா. தேசத்தின்



ஜனத்தலைவர்களெல்லாரும் இவ்வண்ணமே உபதேசித்து வருகின்றனர். இதை முக்கியமாகக் கவனித்து நடக்கவேண்டும்; இன்றேல் நற்பயன் ஏற்படுவதற்குப் பதிலாக நஷ்டமே சம்பவிக்குமென்று கருதுகிறேன்.

உங்கள் நன்மையை நாடுவோன்,

மஹ்மூதுல் ஹஸன் அபீஅன்ஹு

12வ ஸபர் 1339 ஹிஜ்ரி.

## கிலாபத்

(முன் 40-ம் பக்கத்தொடர்ச்சி)

1. எங்கள் நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல் (இவர்களுக்கு இறைவனருளும் அவனன் மாராயமும் உண்டாகுக) அவர்கள் தங்களுடைய ஜீவதிசையிலேயே அரபுஸ்தான் முழுமைக்கும் அரசராக ஆக்கப்பட்டார்கள். அரபு நாடு முழுதும் ஆயுதபாணிகளால் வெல்லப்படவில்லை; ஆனால் அந்நாட்டிலுள்ள பற்பல கூட்டத்தார்களும் அடிக்கடி தங்களுடைய தூதர்களை எம்பெருமானிடம் அனுப்பி இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டதனால் சிலகாலத்துக்குள்ளேயே எல்லோரும் நபிபிரானின் ஆட்சிக்கு உட்பட்டு விட்டார்கள். அவர்களுடைய ஆயுள் காலத்தில் அவர்களுக்குக் கட்டுப்படாத கூட்டத்தார் ஜஸீரத்துல் அரபில் யாருமே யிருந்ததில்லை. அரபுதேசத்தில் பல் வேறுவகைப்பட்ட விரோதமான கூட்டத்தார்கள் மிகுதமாயிருந்தார்கள்; அவர்கள் அதற்கு முன் எக்காலத்திலும் ஒரே தலைவரின் கீழ் ஒன்று சேர்ந்ததே கிடையாது. அவர்களுடைய சரித்திரத்தில் முதன் முதலாக எம் நபிகள் நாயகத்தின் காலத்தில் தான் எல்லாக்கக்ஷியினரும் ஒன்று சேர்ந்து ஒரே நபிக்கு ஈமான் கொண்டு கட்டுப்பட்டார்கள். கிலாபத் என்பதன் தாத்பரியம் நபிகள் நாயகத்துக்குப்பின் ஓரரசர் அவர்களுடைய பிரதிநிதியாயிருந்து லௌகிகவைதிககாரியங்களைக் கவனித்து நடத்துதல் என்பதுதான்; ஆகவே நபிகள் நாயகம் தங்களுடைய ஆயுள் காலத்தில் ஜஸீரத்துல் அரப்முழுமையும் இஸ்லாமிய ராஜ்யாதிகாரத்தில் சேர்த்து விட்டுச்சென்றமையால் பிற்பட்ட கலீபாக்களின் ஆட்சிமுறையில் அந்தஜஸீரத்துல் அரப் ஒரு முக்கியபாகமாகவேயிருந்து வந்திருக்கிறது. இஸ்லாம் இவ்வுலகில் நிலைத்திருக்கு மட்டும் முஸ்லிம் கிலாபத்தும் இருந்து கொண்டேயி

க்கும்; முஸ்லிம் கிலாபத்து இருக்குமட்டும் ஜஸீரத்துல் அரபும் கிலாபத்ராஜ்யத்தில் ஒரு முக்கிய அம்சமாக இருந்தேதீரவேண்டும். கலீபாவின் ஆட்சியிலிருந்து அரபுதேசத்தை நீக்கி விடும் பக்ஷத்தில் பிறகு அவர் கலீபாவாக, அதாவது நபிகள் நாயகத்தின் பிரதிநிதியாக இருப்பது முடியாது; ஏனெனின் அப்பொழுது அந்த அரசர் எமது நபிபிரானுடைய ராஜ்யத்தை யிழந்துவிட்டவராக ஆய்விடுகிறார். நபிபெருமானின் ராஜ்யத்தைத் தன் அரசாட்சிக்குள் வைத்திராதவர் அத்திருநபியவர்களின் பிரதிநிதியாயிருப்பதெப்படி? கலீபா என்னும் பதத்தை நோக்கும் போதே அவருக்கு அரபுதேசமுழுதும் ராஜ்யாதிகாரம் செல்லவேண்டுமென்னும் அர்த்தம் தொனிக்கின்றது.

2. அபூபக்கர் ஸித்திக்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முதல் கலீபாவாக நியமனம் பெற்றபோது அரபுதேசமுழுமைக்கும் அவர்கள் தலைவரென்றே எல்லோரும் ஏகோபித்து ஒத்துக்கொண்டார்கள்; அந்நாட்டிலுள்ள சில கூட்டத்தார்கள் சில பொய்யான போலிநபிகளுடைய தூண்டுதலின்மீது அபூபக்கர் ஸித்திக்(ரலி) அவர்களை கலீபாவாக ஒத்துக்கொள்ளாமல் கலகம் செய்யத்தலைப்பட்டனர்; இன்னும் சிலகூட்டத்தார் பைத்துல்மால் என்னும் பொது கஜானாவில் தங்களுடைய ஸக்காத்தென்னும் ஏழைவரியைக் கட்ட மறுதளித்தார்கள். அபூபக்கர் ஸித்திக் (ரலி) அவர்கள் அந்தக்கலகக்காரர்களை யெல்லாம் சண்டைசெய்து வென்றடக்கினார்கள். அக்காலத்தில் அபூபக்கர் அவர்களை அநேகவிதமான ராஜீய கஷ்டங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன; வடதிசையில் ரோமன் தேசத்தார் இஸ்லாத்தின் அஸ்திவாரத்தையே அழித்துவிடுவதாய்ப் பயமுறுத்திக்கொண்டிருந்தார்கள்; வடகிழக்கு மூலையிலோ பாரஸீகர்கள் பயமுறுத்தினார்கள். அந்நிலைமையில் அரபுதேசத்துக்குள் அங்குரித்துவந்த உள்நாட்டுக்கலகங்களையே முதன்முதலாய் அடக்கவேண்டுமென்று அபூபக்கர், ஸித்தீக் (ரலி) அவர்கள் கருதினார்கள்; இதற்கு எல்லா ஸஹாபாக்களும் (நபிபெருமானின் ஸஹாபாக்கள்) ஏகோபித்து இணங்கினார்கள். ஜஸீரத்துல் அரபுமுழுதையும் தன் அரசாட்சிக்குள் வைத்துக்கொள்ளாமலே "கலீபா" தன் அந்தஸ்தை வகித்துக்கொண்டிருக்க முடியுமென்று மற்ற ஸஹாபாக்கள் எண்ணியிருக்கும் பக்ஷத்தில் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் அபிப்பிராயத்துக்கு அவர்கள் இணங்கியிருக்கமாட்டார்கள்.

3 "முஸ்லிம்களல்லாதாரை ஜஸீரத்துல் அரபைவிட்டு அப்புறப்படுத்துங்கள்" என்று நபிபெருமானாரவர்கள் தங்களுடைய அந்தியதிசையில் கூறியதாக இப்னி அப்பாஸ் (ரலி) அவர்கள்



சொன்ன சமாசாரமொன்று ஸஹீஹுல்புகாரியில் காணப்படுகின்றது. "ஜஸீரத்துல் அரபில் முஸ்லிமல்லாதவரொருவரும் இல்லாமல் செய்வதற்காக அவ்விடத்திலிருந்து எல்லா யஹூதிகளையும் கிரிஸ்தவர்களையும் நான் நிச்சயமாக அப்புறப்படுத்துவேன்" என்று எங்கள் நபிகள் நாயகமவர்கள் திருவாய்மலர்ந்தருளியதைத் தாம் கேட்டதாக உமரோபாருக் (ரலி) அவர்கள் கூறிய சமாசாரமொன்று ஸஹீஹ் முஸ்லிம் என்னும் நூலில்காணப்படுகிறது. "நான் பிழைத்திருக்கும் பக்ஷத்தில் ஜஸீரத்துல் அரபிலிருந்து எல்லா யூதர்களையும் கிரிஸ்தவர்களையும் நான் நிச்சயமாக அப்புறப் படுத்துவேன்," என்று எம்பெருமானார் கூறியதாக மற்றொரு விஷயம் காணப்படுகிறது. கிலாபத் விஷயத்தில் அரபுதேசமானது அவ்வளவு தொந்தித்திராத பக்ஷத்தில் ஏன் நமது நபிகள் நாயகம்அவர்கள் இவ்வளவு மனக்கவலை அடைந்திருக்கவேண்டும்? உலகத்திலுள்ள எல்லாமதங்களும் ஆண்டவனிடத்திலிருந்தே உற்பத்தியாயினவென்னும் உண்மையை எல்லாமுஸ்லிம்களும் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று இஸ்லாமார்க்கமானது பகிரங்கமாய்ப் போதித்துச்சர்வமதத்தினரிடத்திலும் தாராள சிந்தையை அதிகமாய்க் காட்டிவரும்போது இந்த ஜஸீரத்துல் அரபுவிஷயத்தில் மட்டும் ஏன் எம்பெருமானார் இவ்வளவு கடுமையாயிருக்க வேண்டும்? இஸ்லாத்தின் தாராள சிந்தையைப்பற்றிப் பெருமைபாராட்டாதவர் இவ்வுலகில் ஒருவருமில்லை. கிரிஸ்தவர்கள் எந்த எந்த இடத்தில் தலைமைவகிக்க ஆரம்பித்தார்களோ அந்த அந்த இடத்திலெல்லாம் தங்களுடைய கிரிஸ்துமார்க்கத்துக்கு விரோதமான எல்லாமதங்களையும் வேரறப்பாய் அறுத்துவந்தபோது முஸ்லிம்கள்மட்டும் தங்களுடைய ராஜ்யங்களில் இதர மதத்தினரைக் சாதாரணமாய் ஏகோபித்தசையுடன் விட்டுவந்தார்கள்; ஆனால் அரபுதேசத்தில் மட்டும் அப்படிச்செய்வது அசௌகரியமாயிருந்தது. அரபுதேசத்து முஸ்லிம்கள் தங்கள் நாட்டில் இதர மதத்தினர்கள் இருப்பதைச் சகிக்கமாட்டார்களென்று நபிபெருமானார் பயந்துவிடவில்லை; ஆனால் அரபுதேசமானது முஸ்லிம்கிலாபத் ராஜ்யத்துக்கு நடு நாயகமாயிருந்ததனால், அதாவது முஸ்லிம்களுக்கு வாக்களிக்கப்பட்ட ராஜ்யத்துக்கு அது நடுவாயிருந்ததனால் அந்த இஸ்லாமார்க்கத்துக்கு எதிரிகளால் எவ்வகை இடையூறும் உண்டாகாமலிருக்கும் பொருட்டு ஜஸீரத்துல் அரபின் எல்லைக்குள் இதர மதத்தினரை விடக்கூடாதென்று அவ்வளவு சிரத்தை எம்பெருமானாரால் காட்டப்பட்டு வந்தது. நபிபெருமானாரின் மேற்கூறிய ரிப்போர்ட்டுகளில் யூதர்களைப்பற்றியும் கிரிஸ்தவர்களைப்பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதை

நாம் நன்கு நோக்கவேண்டும். கிலாபத் விஷயத்தில் அரபு நாடானது இருக்கவேண்டிய நடுநாயகத் தன்மையைப் பற்றித்தான் அதற்கு இவ்வளவு மகிமை கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது செவ்வனே விளங்குகின்றது.

4. கிலாபத் ராஜ்யந்தவிர வேறு முஸ்லிம் ராஜ்யங்களும் இவ்வுலகில் இதுவரையில் இருந்திருக்கின்றன; இந்தியாவில் மொகலாய ராஜ்யம் இருந்ததுபோல் அதிவிஸ்தாரமான முஸ்லிம் ராஜ்யங்களும் சில சமயங்களில் தழைத்தோங்கி வந்திருக்கின்றன; ஆனால் அப்படிப்பட்ட ராஜ்யங்களில் ஒன்றேனும் கிலாபத் ராஜ்யமாய் விளங்கினதில்லை; ஏனெனின், அந்த ராஜ்யத்தில் அரபு தேசமானது சம்மந்தப்பட்டில்லை. ஆனால் அந்த ராஜ்யங்களெல்லாம் தங்களுக்குள் பெரும் பெரும் ராஜ்யமாயிருந்தபோதிலும் அரபுதேசத்தில் ஆட்சி புரிந்து வந்த கிலாபத் ராஜ்யத்தையே அவையெல்லாம் தலைமையாக ஒத்துக்கொண்டு வந்திருக்கின்றன.

5. இஸ்லாம் இப்போதிருப்பது போல் இவ்வுலகில் தோன்றி இன்றைக்கு 1300 வருஷங்களாகியும் அரபுநாடுமட்டும் எப்பொழுதும் கலீபாவின் ஆட்சிக்கு உட்பட்டே இருந்திருக்கிறது. அரபு தேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஒரேவிதமான கலீபத் அதிகாரமானது எல்லாக் காலத்திலும் இல்லாமலிருந்திருக்கலாம்; ஆயினும் சம்பிரதாயப்படி அரபு நாடு முழுதுமே சதாகாலமும் கலீபாசருக்கு உட்பட்டே இருந்திருக்கிறது. கலீபாவின் ஆணையானது அரபு நாடு முழுதும் சில சமயங்களில் செல்லாமலிருந்திருக்கும் பக்ஷத்தில் அந்த கலீபாசரானவர் போதுமான சாமர்த்திய சாலியல்லவென்று மட்டும் சொல்லவேண்டுமேயல்லாமல் அரபு நாட்டைத் தன் குடைக்கீழ்வைத்திராத எந்த அரசரும் எக்காலத்திலும் கலீபாவாக இருந்தாரென்று ஒருபோதும் சொல்ல முடியாது. கலீபத் ராஜ்யமானது எப்படி அரபுநாட்டை எப்போதும் தன்னுடைய ஆட்சிக்குள் வைத்துக்கொள்ளுவதற்குப் பிரயத்தனப்பட்டு வந்திருக்கிறதென்று ஆதியோடந்தமாய் அதன் சரித்திரத்தை ஆராய்ச்சி செய்வதென்றால் இப்பொழுது சாத்தியப்பட்ட காரியமன்று; ஆனால் அச்சரித்திரத்தில் மிக முக்கியமான சில சண்டைகளை மட்டும் இங்கே குறிப்பிடுவது போதுமானதாயிருக்கும். முதல் கலீபாவின் காலத்திலேயே அரபுதேசத்திலுள்ள சில கூட்டத்தார்கள் முரண் செய்ய ஆரம்பித்தார்கள்; ஆனால் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அக்கலகக்காரர்களையெல்லாம் வென்றடக்கினார்கள். மூன்றாவது கலீபாவான உதுமான் (ரலி) அவர்களுடைய ஆட்சிமுறையில் மறுபடியும் உள்நாட்டுக் கலகம் தலை கிளப்பிற்று; ஆனால் அவர்



களுக்கு அடுத்த கலீபாவான அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அரபுஸ்தான் முழுதையும் தம்முடைய குடைக்கீழ் கொண்டு வந்து ஏகசக்ராதிபதியாய் ஆண்டுவந்தார்கள். முஆவியா (ரலி) அவர்களின்காலத்திலும் அரபு நாடானது கிலாபத்துக்கு உட்பட்டே இருந்தது. சில காலத்துக்குப் பின் அப்துல்லா பின் ஸுபைர் மட்டும் சிறு கலகமொன்று செய்து அதில் தோல்வியடைந்துபோனார். இவ்விஷயம் தவிர உமையா வம்சத்தார்கள் கலீபாக்களாக இருந்த மட்டும் வேறு விசேஷம் ஒன்றும் நடைபெறவில்லை. அப்பாஸுடைய வம்சத்தார்கள் கலீபாக்களாக இருந்த வரையில் இவ்விதமாகவே ராஜ்யமுழுதும் அமைதியானது குடிகொண்டிருந்தது. அரபு நாட்டிலுள்ள பல பிராந்தியங்களுக்கும் கலீபாக்களே சிற்றரசர்களை நியமனம் செய்து வந்தார்கள். முஸ்லிம் கிலாபத்தானது துருக்கியர்களுடைய கைவசத்தில் சென்ற பின்னரும் அரபுதேசமானது அவர்களுடைய ஆட்சிமுறைக்கு உட்பட்டேயிருந்துவந்திருக்கிறது. ஆனால் சிற்சில சமயங்களில் சில துருக்கி கலீபாக்களின் ஆணையானது அரபு நாட்டின் சிற்சில பகுதிகளில் செல்லாமலிருந்திருக்கலாம்; இப்படியாகச் சிலசமயங்களில் இருந்து வந்ததனால் துருக்கியர்கள் ஜஸீரத்துல் அரபைத் தங்களுடைய ராஜ்யத்துக்கு உள்ளானதல்லவென்று நினைத்தார்களென்று சொல்வது முடியாது. அரபுநாட்டிலிருந்து மிகுதமான வரும்படியானது கிடைக்காததனால் சில கலீபாக்கள் இந்நாட்டைப்பற்றிச் சிறிது பாராமுகமாயிருந்திருக்கலாம். ஆனால் ஒருபோதும் அரபுநாட்டைத் தள்ளிவிட்டுத் துருக்கி சுல்தான்கள் கலீபாவாக இருந்ததில்லை. மத்திய அரபு நாட்டில் வஹாபிகளின் கலகம் நேரிட்டபோது முஹம்மதலியின் உதவியைக்கொண்டு துருக்கியர்கள்தாம் அக்கலகத்தை அடக்கினார்கள். 18-வது நூற்றாண்டின் இறுதியில் எமன் தேசத்தில் கிளம்பின அராஜகக்கலகத்தையும் துருக்கியர்களே பலவந்தமாய் அடக்கினார்கள்.

மார்க்கசம்மந்தமான அவசியத்துக்காகவே அரபு நாடுமுழுவதும் அதிகாரவரம்பைச் செலுத்தத்தக்க முஸ்லிம் ராஜ்யமொன்று இருக்கவேண்டியது அத்தியாவசியமென்று எமது தீனுல் இஸ்லாம் கட்டளையிடுகின்றதென்பதை இப்பொழுது செவ்வனே தெரிந்துகொண்டோம். கிலாபத் விஷயமாய்ச் சொல்கின்ற ஆயத்தின் மூலமாய் (24:55) எமது குர்ஆன் ஷரீபானது மேலே கூறப்பட்ட வண்ணமான ஒரு ராஜ்யத்தை யுண்டுபண்ணிக் கொடுப்பதாய் உறுதிகூறுகின்றது; இவ்வுண்மையைச் சென்ற 13 நூற்றாண்டுகளாக முஸ்லிம் உலகம் முழுதும் ஒரே மனதாய்

ஒத்துக்கொண்டிருக்கிறது." கேவலம் லௌகிக விஷயம்போல் காணப்படக்கூடிய இவ்விஷயத்துக்கு ஏன் மதசம்மந்தமான கட்டளை கொடுக்கப்பட்டதென்று ஒரு வினா பிறக்கலாம். இதற்குள்ள விடைகளுள் ஒன்றாவது, எங்கள் நபிபெருமானார் அரபுதேச முழுதுக்கும் அரசராகவும் ஞானகுருவாகவும் அமைந்திருந்தார்கள் என்பதே; இக்காரணத்தாலேயே கலீபாக்களாயிருப்பவர்களுக்கு மதசம்மந்தமான குருத்துவம் இருப்பதோடு அரபிதேசத்தின் ஆட்சியும் கூடவே அமையவேண்டியிருக்கிறது. இதைக்காட்டிலும் முக்கியமான மற்றொரு காரணம் எமது குர்ஆன் ஷரீபிலேயே கிலாபத்தின் அவசியத்தைப்பற்றி ஆண்டவனுடைய திருவசனங்கள் பல காணப்படுகின்றன என்பது தான். ஏற்கனவே குறிப்பிடப்பட்ட குர்ஆன் ஆயத்தில், "இவர்களுக்காகத் தான் தேர்ந்தெடுத்திருக்கும் சன்மார்க்கத்தை மகா நிச்சயமாக அருளுவேனென்றும் ஆண்டவன் வாக்குறுதி செய்திருக்கிறான்." ஆகவே இஸ்லாமார்க்கம் உறுதியான அஸ்திவாரத்துடன் ஸ்திரப்படும் பொருட்டும் அவ்விஸ்லாத்தில் சேர்ந்திருக்கும் முஸ்லிம்களெல்லோருக்கும் தகுந்த பந்தோபஸ்து ஏற்படும் பொருட்டும் எமது மார்க்கத்தில் கிலாபத்தென்பது அத்தியாவசியமாயிருக்கின்றது; முஸ்லிம்களின் மார்க்கமானது ஸ்திரமாய் நிலைத்திருப்பதற்கும், அவர்களுடைய சொந்தபந்தோபஸ்தும் சரியாய்ப் பாதுகாக்கப் படுவதற்கும் கிலாபத் ராஜ்யமொன்று இருக்கவேண்டுவது அவசியமென்று அல்லாஹுத்தஆலாவே தன் திருமறையில் எச்சரிக்கை செய்துள்ளான். நபிகள் நாயகமவர்கள் தங்களுடைய கொடிய பகைவர்களால் சகிக்கமுடியாதபடி துன்புறுத்தப்பட்ட காலையில் அவர்களால் இவ்விஸ்லாமார்க்கத்தின் உண்மைகளெல்லாம் செவ்வனே விளக்கிக்காட்ட முடியாமற் போனபோதும், அப்போதிருந்த முஸ்லிம்களுக்கு அதிகாரமாவது அரசுரிமையாவது இல்லாமலிருந்தபோதும், இம்மார்க்கமானது ஓர் உண்மையான சன்மார்க்கமாகவே யிருந்துவந்தது; அக்காலத்தில் இஸ்லாமானது ஸ்திரமாக வேரூன்றவுமில்லை, முஸ்லிம்களும் தக்க பந்தோபஸ்துடன் உயிர்வாழவுமில்லை. ஆதலின் இனி யொருமுறையும் இஸ்லாத்தின் இகலோக ராஜ்யாதிகாரமானது ஐரோப்பிய கிறிஸ்தவர்களால் அநியாயமாய் அழிக்கப்படும் பக்ஷத்தில் இஸ்லாமார்க்கத்தின் இணையில்லா உண்மையானது ஒரு சிறிதும் வாட்டப்போகிறதில்லை. உண்மைக்கு ஒருபோதும் வாட்டமிராது; ஆனால் இவ்வுலகிலுள்ள இஸ்லாத்தின் ஆழமான அஸ்திவாரத்துக்கு ஒரு பின்னம் ஏற்பட்டு விட்டதென்றும் முஸ்லிம்களின் பந்தோபஸ்துக்கு ஒரு ஹானி வந்துவிட்டதென்றும் மட்-



டும் சொல்லலாம் இதற்காகத்தான் முஸ்லிம்களெல்லாம் இப்பொழுது வருந்துகிறார்கள். ஏதோ ஒரு சிறு அபாயந்தானே இஸ்லாத்துக்கு நேர்ந்திருக்கிறதென்று எண்ணவேண்டாம்; கிலாபத் அழிந்து விட்டபின் வேறு எவ்வகை மதசுதந்தரம் இருந்தபோதிலும் ஒன்றும் பயன்படமாட்டாது; ஆதலின் முஸ்லிம் கிலாபத்தை அழிக்க உத்தேசிப்பவர் உண்மையாகவே இஸ்லாமார்க்கத்தை இவ்வுலகினின்றும் ஒழித்துவிடப் பார்க்கிறார்களென்றும் இனி முஸ்லிம்களுக்கு இத்தரணியில் பந்தோபஸ்து ஒரு சிறிதும் இல்லாமற் போகுமென்றும் முஸ்லிம்களெல்லோரும் அதிகமாக அஞ்சுகின்றனர்; ஆண்டவனுடைய திருவாக்கியமே இவ்வாறு கூறுவதால் எம்முஸ்லிம் சகோதரர்கள் இப்படி அஞ்சுவதற்கு ஆதாரமிருக்கின்றது. குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டிருப்பதன் காரணத்தால் மட்டும் முஸ்லிம்களுக்கு கிலாபத் அவசியமென்றெண்ணவேண்டாம்; ஆனால் கிலாபத்துக்கு ஆபத்து நேரிடும்போது இஸ்லாத்துக்கே ஆபத்து வந்துவிடுமென்றும் முஸ்லிம்களின் பந்தோபஸ்துக்கும் கெடுதல் நேரிடுமென்றும் ஆண்டவனே தன் திருமறையில் கூறியுள்ளான்; இதனால் தான் கிலாபத்தானது இவ்வளவு கவலையுடன் பாதுகாக்கப் படவேண்டியிருக்கிறது. ஆண்டவனால் 1300 வருஷங்களுக்குமுன் எச்சரிக்கப்பட்ட ஆபத்தானது இப்போது நிதரிசனமாய் அனுஷ்டானத்துக்கு வந்துவிட்டதென்பதை ஒவ்வொரு முஸ்லிமும் தன் தன் நேத்திரங்களால் நிதரிசனமாய்க் கண்டுகொண்டு விட்டனர்.

நான்மேலே சொன்ன அந்தப்பெரியவுண்மையைப்பற்றி ஆண்டவன் தன் சொந்தத்திருவசனத்தில் வெளிப்படையாய்ச்சொல்லாமல்விட்டிருந்தாலும் அப்பொழுதும் முஸ்லிம்களுக்குத் தங்களுடைய புண்ணியஸ்தலங்களின்மீது இடையூறில்லாத ஏகாதிபத்தியம் நடவாத வரையில் இஸ்லாத்தின் உண்மைகள் முழுபலத்துடன் இவ்வுலகில் நிலைத்திருக்க முடியாவென்றும் அக்காரணத்தால் இம்மார்க்கமே பலஹீனப்பட்டு விடுமென்றும் ஒவ்வொருவரும் செவ்வனே உணர்ந்து கொள்ளமுடியும். முஸ்லிம்களின் கிலாபத் ராஜ்யம் இவ்வுலகில் செம்மையாய் நிலைத்திராத மட்டில் எமது ஜாதியார்களுக்குச்சொந்தமான ஸௌரீய விஷயங்கள் அடியோடு அழிந்துபோக நேரும்; இன்னும் இஸ்லாத்தின் சில முக்கியமான காரியங்களை கலீபாசர் இல்லாவிடின் வேறொருவராலும் நடத்திவைக்க முடியாது; உதாரணமாக, அக்காலத்திய கிலாபத்தானது செம்மையாய் நடந்து வந்ததனாலல்லவோ சில கூட்டத்தார்கள் பொது கஜானாவான "பைத்துல் மாலில்" தங்களுடைய ஏழைவரியை (ஸக்காத்

தை) ச்செலுத்த மறுத்தபோது முதல் கலீபாவான அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அக்கலகக்காரர்களை வென்றடக்கினார்கள். இப்பொழுது உலகசரித்திரத்தில் நடந்து வரும் நிகழ்ச்சிகளை உற்று நோக்குவோமாயின் குர்ஆன் ஷரீபில் ஆண்டவனால் குறிப்பிடப்பட்ட உண்மையானது நடைபெற்று வருகிறதென்றே உணர்ந்து கொள்ளுவோம்; ஏனெனின், இஸ்லாத்தின் ஆணிவேரைக்கெல்லுவதற்கு அதன் விரோதிகளால்செய்யத்தக்ககாரியத்தைஇப்பொழுது அவ்விரோதிகள் செய்துமுடிக்கப் பார்க்கிறார்கள்; அதாவது கிலாபத்தைப் பலஹீனப்படுத்திவிட அவர்கள் தங்களுடைய சதியாலோசனையைப் பூர்த்திசெய்து வருகிறார்கள். மத்திய கிலாபத்ராஜ்யத்தில் சேர்ந்துள்ள பல பிரதேசங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அழிந்து கொண்டே வந்திருக்கின்றன. இப்பொழுது துருக்கிராஜ்யம் ஒன்று தவிர வேறொரு ராஜ்யமும் முஸ்லிம்களின் ஏகாதிபத்தியத்துக்கு உரியதாய்க் காணப்படவில்லை? நம்மவரின் ராஜ்யாதிகாரம் இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமையிலிருக்கும்போது சென்ற சில நூற்றாண்டுகளாக இவ்வுலகிலுள்ள எல்லாமுஸ்லிம்களாலும் ஏகோபித்து ஒத்துக்கொள்ளப்பட்ட கிலாபத்ராஜ்யமாகிய அந்த ஒரே துருக்கி அரசாங்கத்தையும் நசுக்கிவிடப்பார்க்கின்றனர். இவ்வுலகின் பல பாகங்களிலும் தழைத்தோங்கி வந்த எல்லாமுஸ்லிம் ராஜ்யங்களும் ஒழிந்துபோனபின் கடைசியில் ஆண்டவனுடைய அருள்வாக்கால் நிலைபெற்று வரும் கிலாபத் ராஜ்யத்துக்கும் தற்போது பேராபத்தென்னும் இடியானது பயமுறுத்திக்கொண்டு வருகிறது. இப்பொழுது ஐரோப்பாவில் நிகழ்ந்து வரும்சங்கடமான நிலைமைகளையெல்லாம் நோக்கும்போது எமது குர்ஆன் ஷரீபில் ஆண்டவனால் அருளப்பட்ட தீர்க்கதரிசனமானது செவ்வனே நிறைவேறிவருகின்றதென்று எல்லோரும் கண்டுகொள்ளலாம். கிலாபத்துக்கு ஆபத்து வந்து விட்டால் அதன் பின் இவ்வுலகில் முஸ்லிம்கள் க்ஷேமத்துடன் உயிர்வாழ முடியுமென்று எமது குர்ஆன் ஷரீபின் உண்மையில் நம்பிக்கையுடைய எவரும் எண்ணத் துணியார்.

குர்ஆன் ஷரீபில் காணப்படும் இதர ஆயத்துக்களை நோக்கும்போதும் இதே முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. அரபு நாட்டின் லௌகிக வைதிககாரியங்களுக்கு நடுநாயகமாயிருக்கின்ற கஃபத்துல்லாவும் அதைச்சூழ்ந்துள்ள திருமக்கா முதலிய ஸ்தலங்களும் முஸ்லிம்களின் கைவசத்திலிருந்தால் மட்டுமே அவற்றின் பாதுகாப்பெல்லாம் ஒழுங்காய் நடந்தேறுமென்று ஆண்டவன் தன் திருமறையில் ஒளியாமல் விளக்கியுள்ளான்: "இன்னும், அந்தப்



பரிசுத்தமான பள்ளிவாயிலுக்கு மனிதர்கள் வரக்கூடாதென்று அவர்கள் தடை செய்கின்றார்களே, இதற்காக ஆண்டவன் அவர்களைத் தண்டிக்காமலிருக்கும்பொருட்டு அவர்கள் என்னசாக்குச் சொல்லப் போகிறார்கள்; மேலும் அவர்கள் அப்பள்ளிவாயிலுக்குப் பாதுகாவலராயிருப்பதற்குத் தகுதிவாய்ந்தவராயில்லை; முத்தக்கீயான மனிதர்களே அதன் பாதுகாவலராயிருப்பர்"—என்று அல்லாஹுத் தஆலா தன் திருவேதத்தின் 8:34-வது வாக்கியத்தில் திருவுளமாயிருக்கிறான். இவ்வாக்கியத்தில் குறிப்பிடப்பட்ட முத்தக்கீயான மனிதர்கள் முஸ்லிம்கள்தான் என்று வியாக்கியானிகளெல்லாம் தாத்பரியம் எழுதியிருக்கிறார்கள்; ஏனெனின், முத்தக்கீ என்பதன் தாத்பரியம் "தீமையினின்றும் பாதுகாத்துக் கொள்பவர்" என்பதாகும்; இஸ்லாத்தில் மகா பாதகமான விஷயம் ஷிர்க் (ஆண்டவனுக்கு இணைவைத்துப் பூஜித்தல்) என்னும் தோஷமாகும்; இப்படிப்பட்ட ஷிர்க்கை விட்டும் நீங்கிய எல்லா முஸ்லிம்களும் "முத்தக்கீ" யாவார்கள். "ஈமான்கொண்ட மனிதர்களே! முஷ்ரிக்கான மனிதர்கள் (அதாவது இறைவனுக்கு இணைவைத்துப் பூஜைசெய்யும் பலதெய்வ வணக்கக் காரர்கள்) மகா அசுத்தமுள்ளவர்களாயிருக்கிறார்கள்; ஆதலின் அப்படிப்பட்டவர்கள் இவ்வருஷத்துக்குப்பின் அந்தப் பரிசுத்தமான பள்ளிவாயிலுக் கருகில் கிட்டக்கூடாது"—என்று ஆண்டவன் மற்றோரிடத்தில் (9:28) கூறியிருக்கிறான். இவ்விடத்தில் முஷ்ரிக் என்னும் பதமானது முஸ்லிம்களல்லாத ஏனையோரையெல்லாம் குறிக்கின்றது; ஏனெனின், இவ்வுலகில் இஸ்லாமார்க்கமல்லாத வேறெந்த மதமும் ஏகதெய்வக்கொள்கையை அவ்வளவு ஸ்திரமாய் உபதேசிக்கவில்லை; ஆதலின் குர்ஆன் ஷரீபுக்கு வியாக்கியானஞ்செய்த பெரியோரெல்லாம் விக்கிரகங்களை வைத்துப் பூஜிக்கும் மனிதர்களுக்கும் முஸ்லிமல்லாத வேறு ஜாதியார்களுக்கும் இடையில் வித்தியாசம் இல்லையென்றே விளக்கமாகக் கூறியுள்ளார்கள். விக்கிரக ஆராதனை புரிபவராகட்டும் அல்லது வேறு மனிதராகட்டும், முஸ்லிமல்லாதபோது அவர்கள் யாராயிருந்தாலும் எல்லாரும் முஷ்ரிக்குகளே. முஸ்லிம்களல்லாத முஷ்ரிக்குகளைப்பற்றிச் சொல்லும்போது அவர்கள் மகா மகா அசுத்தமுள்ளவர்கள் என்று ஆண்டவன் கூறியதானது அவர்களுடைய தேக அசுத்தத்தைக் குறிக்கமாட்டாது; இது வெளிப்படையாய்த் தெரிகிறது. ஏனெனின், முஸ்லிம்களல்லாத மனிதர்களுடன் முஸ்லிம்கள் சமயோஜனம் செய்யலாமென்று குர்ஆன் ஷரீபானது அனுமதிகொடுத்திருக்கின்றது; சமபோஜனம் செய்வதோடு நில்லாமல் முஸ்லிமல்லாதவர்களுடன்

முஸ்லிம்கள் கலப்பு விவாகமும் செய்துகொள்ளலாமென்று அவ்வேதமே உத்தரவு கொடுத்திருக்கிறது. முஸ்லிமல்லாதவர்களின் தேக அசுத்தத்தைப்பற்றி ஆண்டவன் குறை கூறுவதாயிருந்தால் சமபோஜனம் செய்வதற்கும் கலப்பு விவாகம் முடிப்பதற்கும் அனுமதி கொடுத்திருக்க மாட்டான்; ஆதலின் இங்கே அசுத்தமென்று கூறப்பட்டதெல்லாம் அசுத்தமான எண்ணங்களை மட்டுந்தான் குறிக்கும். ஆனால் அசுத்தமான எண்ணங்கள் ஒருவருக்கிருந்தால் அதனால் முஸ்லிம்களின் புண்ணியபூமிக்கு என்ன தீங்கு உண்டாகக் கூடுமென்று நீங்கள் சந்தேகிக்கலாம். அசுத்தமான எண்ணமானது புண்ணியஸ்தலங்களின் தரையை அசுத்தம் செய்துவிடுமென்று ஒருவரும் அஞ்சத்தேவையில்லை; ஏனெனின் முஸ்லிமல்லாதாரின் அசுத்த எண்ணமானது முஸ்லிம்களின் புண்ணியஸ்தலத்திலுள்ள மண்ணை ஒரு போதும் அசுத்தம் செய்யமாட்டாது; ஆனால் இஸ்லாத்தின் விரோதிகளின்கையில் ஆதி காலத்தில் எமது புண்ணியஸ்தலங்கள் இருந்தபோது அவற்றின் பரிசுத்தத் தன்மையானது சீர்கேடுற்றதேபோல் இப்பொழுதும் அப்பரிசுத்தத்தன்மையானது குன்றிவிடக் கூடுமென்றே அஞ்சுகிறோம். இந்த 9-28-வது திருவாக்கியம் வெளிப்பட்டகாலத்தில் கஅபத்துல்லாவென்னும் அந்தப் பரிசுத்தம் நிறைந்த பள்ளிவாயிலானது அப்பொழுது தான் முஸ்லிம்களின் கையில் வந்து சேர்ந்தது; ஆதலின் இனி அப்படிப்பட்ட அசுத்தமானவர்களை அப்புண்ணியஸ்தலத்துக்கு வரும்படி அனுமதி கொடுக்கும் பக்ஷத்தில் அவர்கள் முன்போலவே அப்புண்ணிய பூமிக்கு இடையூறு செய்வார்களென்று கருதியே "அப்படிப்பட்டவர்கள் இவ்வருஷத்துக்குப்பின் அந்தப் பரிசுத்தமான பள்ளிவாயிலுக் கருகில் கிட்டக்கூடாது," என்று ஆண்டவன் ஆணையிட்டிருக்கிறான். முஸ்லிமல்லாதவர்கள் தங்களுடைய மதக் கோட்பாடுகளில், இப்பொழுது நாமெல்லாம் காண்பது போல் எவ்வளவு அசுத்தமான எண்ணங்களையுடையவர்களாயிருந்தபோதிலும் அதனால் எமக்கொன்றும் தீமையில்லை; ஆனால் அவர்களுடைய தீய எண்ணங்களால் எங்களுடைய புண்ணியஸ்தலங்களுக்குத் தீமை நேரிடக்கூடுமாதலினாலேயே அன்னாரை அப்படிப்பட்ட க்ஷேத்திரங்களின் அருகில் அடிவைக்கவும் விடக்கூடாதென்று வேதக்கட்டளை வந்துள்ளது. புண்ணிய பூமிக்குத் தீங்கு நேருங்காலையில் எமது தீனுல் இஸ்லாத்துக்கே கேடுவருமென்பது திண்ணம்.

இதர மதத்தினரைப்பற்றிப் பேசும்போது இஸ்லாமார்க்கமானது மகாதாராளச் சிந்தையுடனேயே பேசிவருகின்றது; ஆத



லின் உலகிலுள்ள முக்கியமான எல்லாமதங்களும் ஆண்டவனிடத்திலிருந்தே உதித்திருக்கின்றன வென்பதையும் இஸ்லாம் ஏற்றுக்கொள்ளுகிறது; ஆனால் ஸர்வக்ஞனாகிய அல்லாஹுத் தஆலா, ஏக தெய்வக்கொள்கைக்கு இணையில்லாத அடையாளமாகிய பரிசுத்தம் நிறைந்த கஅபத்துல்லா வென்னும் அந்தப்புண்ணிய ஆலயமானது முஸ்லிம்களல்லாதவர்களின் கையில் சிறிதுநேரமேனும் பத்திரமாயிருக்கமுடியாதென்பதை உணர்ந்து கொண்டே அப்படிப்பட்ட அன்னியர்கள் அவ்விடத்தில் அடியைக்கூட வைக்கக் கூடாதென்று எச்சரிக்கை செய்திருக்கிறான். முஸ்லிமல்லாதவர்களை எமது புண்ணியஸ்தலங்களுக்குள் எதேச்சையாய் நுழையும்படி விட்டுவிடின் உடனே இஸ்லாத்தின் விரோதிகள் கஅபத்துல்லாவை அழிப்பதற்கு வேண்டிய சதியாலோசனைகளெல்லாம் செய்யத் தலைப்படுவர். இவ்வுலகசம்பந்தமான ஏகாதிபத்தியத்தை எல்லையில்லாமல் பெருக்கிக்கொண்டே போகவேண்டுமென்னும் பேராசை கொண்ட இக்காலத்திய மனிதர்கள் இடத்தைக்கொடுத்தால் மடத்தைப்பிடுங்குவேன் என்பதேபோல் நடித்துவருவதை நாம் தற்போது நிதரிசனமாய்க் காண்பதைப் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னாலிருந்த ஒரு சாதாரண அரபி அறிந்திருக்க முடியாது. ஆனால் திரிகால ஞானத்தையுமுடைய எமது எல்லாம்வல்ல இறைவன் இஸ்லாமார்க்கத்தின் பெருமையை ஒடுக்கி அம்மதத்தையே அடியோடு நசுக்கிவிடச் சதியாலோசனை செய்ய இடமுண்டாகாமலிருக்கும் பொருட்டே முஸ்லிமல்லாதவர்களைத் திருமக்கா நகரின் புண்ணிய பூமியில் அடிவைக்கவொட்டாமல் தடுக்கவேண்டுவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையென்று கட்டளை பிறப்பித்திருக்கிறான்.

சுருங்கச் சொல்லுமிடத்து கிலாபத்தின் முக்கிய இலக்ஷணமாவது, இவ்வுலகிலுள்ள எல்லா முஸ்லிம்களையும் கட்டுப்படுத்தக் கூடிய ஓர் மத்திய ஏகாதிபத்தியம் இருத்தல்வேண்டும், அந்த ஏகாதிபத்தியத்தின் முழு அதிகாரமும் அரபு நாடெல்லாம் செல்லத் தக்கதாயு மிருத்தல் வேண்டுமென்பதுதான். நபிகள் நாயகத்தின் பின் பிரதிநிதிகளாய் வருபவர்கள் எம்முஸ்லிம்களின் லௌகிக காரியங்களுக்கும் வைதிககாரியங்களுக்கும் தலைவர்களாகவே யிருக்கின்றார்கள் என்பது மெய்தான்; ஆனால் இவ்வாறு லௌகிகம் வைதிகம் இரண்டு காரியங்களுக்கும் கலீபாக்களாக முதல் நான்கு கலீபாக்கள் மட்டுமே யிருந்துவந்தார்கள். எம்பெருமானாரவர்களின் காலத்திலேயே அவர்கள் கண்முன்பாகப் பயிற்சிபெற்றுவந்த அபூபக்கர், உமர், உதுமான், அலி (இந்நால்வருக்கும் சாந்தியுண்டாகுக)

ஆகிய இவர்களே அப்படிப்பட்ட கலீபாக்களாக இருந்தவர்கள். இவர்கள் வகித்துவந்த அந்தக்கௌரவமான உத்தியோகத்தினிமித்தம் இந்நால்வருக்கும் ராஷிதீன் என்னும் சிறப்புப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. குலபா என்னும் பதத்துடன் ராஷிதீன் என்பதைச் சேர்த்து மற்ற கலீபாக்களினின்றும் இந் நால்வரைத் தனியே சிறப்பித்துக் கூறுவர்; ஆகவே இவர்களுக்கு குலபா-இ-ராஷிதீன், அதாவது நேரானவழியிலேயே சீராகச்சென்ற கலீபாக்கள் என்று பெயர் வைத்திருக்கின்றனர். இந்நால்வரும் கலீபாக்களாக ஆட்சி செலுத்திவந்த காலத்தில் முஸ்லிம்களின் லௌகிகம் வைதிகம் இரண்டுக்கும் அவர்களே தலைவர்களாயிருந்து வந்தார்கள். இவர்களை அக்காலத்திய மனிதர்கள் வெறும் அரசர்களென்று மட்டும் மதிக்கவில்லை; ஆனால் சன்மார்க்கத்துக்குரிய சரியான மாதிரி (நமூனா) என்றும் இஸ்லாமிய சட்டதிட்டங்களைச் செவ்வனே நடத்திக்காட்டக்கூடிய இனிய வழிகாட்டிகளென்றும் அவர்களை எல்லா முஸ்லிம்களும் நன்குமதித்திருந்தார்கள். ஆனால் அந்நால்வருக்குப்பின்வந்த கலீபாக்களெல்லாம் வெறும் அரசர்களாக மட்டுமே யிருந்திருக்கிறார்கள். ஆதிகலீபாக்களிடத்திலிருந்த பாரமார்த்திக சம்மந்தமான பதவியானது பிற்பட்ட காலத்தில் வேதக் கல்வியில் தேர்ச்சிபெற்ற இமாம்களிடத்திலும் மதசீர்திருத்தம் செய்யக்கூடிய முஜத்திதென்னும் சாதுக்களிடத்திலும் வந்து சேர்ந்துவிட்டது. ஆகவே ஆதியிலிருந்த நான்கு கலீபாக்களுக்குப் பின் எமது நபிகள் பெருமானாரின் அதிகாரமானது இருபெரும் பிரிவாகப் பிளவுபட்டுவிட்டது; லௌகிக அதிகாரமெல்லாம் கலீபாசர்களிடமும் வைதிகப் பொறுப்பெல்லாம் பெரிய மதாசாரியர்களான முஜத்திதென்னும் இமாம்களிடத்திலும் பிரிந்துவிட்டன. ஆனால் சிற்சில சமயங்களில் லௌகிகம் வைதிகம் இரண்டும் ஒரே அரசரிடம் இருந்ததுமுண்டு. இரண்டாவது உமர் அவர்கள் (இவர்களுக்கு இறைவனது கருணை தழைத்தோங்குக) கலீபாசராயிருந்தபோது அவர்களிடத்தில் இஸ்லாத்தின் லௌகிகத் தலைமையும் வைதிகத்தலைமையும் ஒருங்கே அமைந்து கிடந்தன. ஆதியில் அமைந்திருந்த கிலாபத்-இ-ரஷீதா என்பதற்கும் அதற்குப்பிற்பட்டகாலத்திலிருந்த அரசர்களின் கிலாபத்திற்கும் வேறுபாடு புலப்படும் பொருட்டே பிற்காலத்திய கிலாபத்தைச் சிலசமயங்களில் முல்க் (ராஜ்யம்) என்று சொல்வார்கள். லௌகிகம் வைதிகம் இரண்டுக்கும் தலைமைவகித்து வந்த கிலாபத்துக்கு "கிலாபத்-இ-ரஷீதா" என்றும், லௌகிகத்தலைமையை மட்டும் பெற்றிருந்த கிலாபத்துக்கு "முல்க்" என்றும் பெயர் வைத்திருக்கின்றனர். ஆயினும்

36



புண்ணியக்ஷேத்திரங்களின் பாதுகாப்பும் ஜஸீரத்துல் அரப் என்னும் பிராந்தியத்தின் ஆட்சிமுறைமையும் கலீபாசரின் ஆணைக்குட்பட்டே யிருந்துவருகின்றன.

ஆகவே தற்போதைய நிலைமைப்படி கிலாபத்தென்பது முக்கியமாய் லௌகிகத்தலைமையையே பொறுத்திருக்கிறது; ஆனால் இந்த கிலாபத்தானது எப்படிப்பட்ட முஸ்லிமாலும் மறுத்தற்கு முடியாத ஒருமதசம்மந்தமான ஏற்பாடாயிருக்கிறதென்பதைக் கவனிக்குங்கால் அஃதொரு வைதிகக் கோட்பாடாயும் காணப்படுகின்றது. ஆயினும் முஸ்லிம் கிலாபத்தென்பது ஒரு சாதாரணமான துலுக்கராஜ்யம் அன்றென்பதை நீங்கள் ஒவ்வொருவரும் நன்றாகக் கருத்தி லிருத்தவேண்டும்; ஆதலின் கிலாபத்தென்பது இவ்வுலகமுழுதுமுள்ள முஸ்லிம்களின் ராஜீய அதிகாரத்துக்கெல்லாம் நடுநாயகமா யிருந்துவருகின்றது; இதில் சம்மந்தப்பட்ட தேசங்களில் மேற்கேயுள்ள ஒரு ராஜ்யம் விடுபட்டுப்போவதாலும் கிழக்கேயுள்ள மற்றொரு ராஜ்யம் வீழ்த்தப்பட்டுப் போவதாலும் மத்திய கிலாபத் ராஜ்யத்தின் மகிமை சிறிது குறையலாம்; ஆனால் நடுநாயகமாகிய ஜஸீரத்துல் அரபைத் தாக்குவதற்காகச் செய்யப்படும் ஒவ்வொரு சூழ்ச்சியும் இஸ்லாத்தையே அடியோடு ஒழிப்பதற்காகச் செய்யப்படும் சதியாலோசனை யென்றே எல்லோராலும் கருதப்படும். இவ்வுலகின் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் மற்றொருதேசத்திலுள்ள எல்லா முஸ்லிம்களுடன் அபிமானம் பாராட்டுகிறார்; ஆதலின் எந்தப்பகுதியிலுள்ள பிரதேசமாயிருந்தபோதிலும் அந்தப்பிரதேசத்திலுள்ள ஒரு முஸ்லிம் ராஜ்யத்துக்கு அபாயம் நேரிடும் பக்ஷத்தில் அந்தத் துக்ககரமான செய்தியில் எல்லா முஸ்லிம்களும் அனுதாபம் காட்டிவருகின்றனர். இவ்வுலகிலுள்ள முஸ்லிம் ராஜ்யங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சத்துருக்களின் சதியாலோசனைகளுக்கு இரையாகும் போதெல்லாம் இவ்வுலக முழுதுமுள்ள முஸ்லிம்கள் கண்ணீருங்கம்பலையுமாய்க் கதறியிருக்கின்றனர். முஸ்லிம் குடிகள் பலசமயங்களில் இஸ்லாத்தின் சத்துருக்களுடைய ராஜ்யங்களில் தாங்கமுடியாத துன்பங்களையெல்லாம் சகித்து வந்திருக்கின்றனர்; சிலசமயங்களில் தங்களுடைய உயிருக்கே மன்றாடும்படியான ஹிம்சைகளை யெல்லாம் அனுபவித்திருக்கின்றனர்; இவ்வாறு துன்பத்தின்மேல் துன்பமாய் எதிரிகள் இழைத்துவந்த கொடுமையின் காரணத்தால் தான் ஸ்பெயின் தேசத்திலிருந்த முஸ்லிம்கள் அடியோடு அழிக்கப்பட்டுப்போயினர். இப்படிப்பட்ட பலகஷ்டங்கள் நேரிட்டபோதெல்லாம் இவ்வுலகத்திய முஸ்லிம்கள் அவ்வளவு அதிகமாய் மனவே

தனைப்படவில்லை; ஆனால் இப்போது கிலாபத்தின் மத்திய ராஜ்யத்தையே தகர்க்க எண்ணங்கொண்டிருக்கும் எதிரிகளின் சதியாலோசனையை நோக்கும் போதுதான் ஒவ்வொரு முஸ்லிமும் தன் தன்னுடைய ஜீவனுக்கே அபாயம் நேரிட்டு விட்டதென்று கருதுகிறார். மத்திய கிலாபத் ராஜ்யத்துக்குப் பலஹீனம் உண்டாகும்போது இஸ்லாத்துக்கே க்ஷீணதிசை உண்டாவது நிச்சயம். கிலாபத் ராஜ்யம், க்ஷேமமாயிருப்பதால் தான் முஸ்லிம்களின் க்ஷேமமும் முன்னுக்குவருமென்று ஆண்டவன் வாக்குறுதி கூறியுள்ளானதலின் அப்படிப்பட்ட கிலாபத்துக்கு ஆபத்து நேருமாயின் அக்காரணத்தால் முஸ்லிம்களின் பாதுகாப்பும் அடியோடு ஒழிந்து போம். இப்படிப்பட்ட ஆபத்தான நிலைமைகளெல்லாம் நம்கண்ணெதிரில் புலப்படுவதை நோக்கும்போது ஒவ்வொரு முஸ்லிமின் மனத்திலும் மிகப்பயங்கரமான திகிலெல்லாம் சூழ்கொண்டிருப்பது சகஜம்தானே. எமது சுத்த சத்திய சன்மார்க்கமாகிய தீனுல் இஸ்லாமென்னும் நன்மார்க்கமே இவ்வுலகில் கடைசியில் ஜயம்பெறுமென்று எல்லாம் வல்ல அல்லாஹுதஆலா நிஸ்ஸந்தேகமாய் வாக்குறுதி கூறியிருக்கிறான்; ஆனால் இக்காரணத்தை மனத்தில் இருத்திக்கொண்டு இஸ்லாத்தின் மார்க்க சம்மந்தமான கோட்பாடுகளுக்குப் பேராபத்து வரும்போதும், முஸ்லிம்களின் ராஜ்யாதிகாரச் சிறப்புக்கு நடுநாயகமாகிய கிலாபத்துக்குத் தீங்கு நேரும்போதும் முஸ்லிம்கள் தங்கள் கண்களை மூடிக்கொண்டு மௌனஞ்சாதிக்க மனந்துணியார்.

இதுவரையில் கிலாபத்தின் பொதுவான தன்மையைப்பற்றி மட்டும் சொல்லிவந்தேன்; ஆனால் இப்பொழுது முஸ்லிம் உலகம் முழுதையும் வருத்திவரும் கொடிய உற்பாதத்தைப்பற்றிச் சிறிது எழுதுகிறேன். துருக்கிராஜ்யத்தைச் சின்னாபின்னப்படுத்துவதால் கிலாபத்துக்கு ஏதேனும் குந்தகமுண்டோவென்று முதன் முதலில் நோக்கவேண்டும். துருக்கிராஜ்யத்தை முஸ்லிம்கள் எவ்வாறுகருதியிருக்கின்றனர் என்னும் விஷயத்தை நாம் நன்குணர்ந்து கொள்ளுவோமாயின் அதன் பின்னர் துருக்கிக்கும் கிலாபத்துக்குமுள்ள ஒற்றுமைவேற்றுமைகளெல்லாம் செவ்வனே விளங்கும். சென்ற ஐந்து நூற்றாண்டுகளாக கிலாபத்தானது துருக்கியரின் கைவசத்தில் இருந்துவருகின்றது. ஐந்நூறு வருஷத்திய அனுபவத்தால் துருக்கியே கிலாபத்தென்றும் கிலாபத்தே துருக்கியென்றும் முஸ்லிம்களெல்லோரும் எண்ணியிருக்கின்றனர்; இவ்வாறின்றி வேறுவிதம் எண்ணமுடியாதபடி அவ்வளவு அதிகாலமாக எம் முஸ்லிம் சகோதரர்கள் துருக்கியின் கிலாபத்தின்கீழ் வந்திருக்கின்றனர்.



மேலும் இத்துருக்கி ராஜ்யமானது மிகப் புராதனமான பெருமைகளையெல்லாம் அதிகமாய்த் தன் சரித்திரத்தில் நிறையப்பெற்றிருக்கிறது. முஸ்லிம் உலகத்துக்கே துருக்கியானது ஒருபொதுவான மத்திய முஸ்லிம் ராஜ்யமென்று எல்லோரும் கருதிவருகின்றனர்; முஸ்லிம்களின் ராஜீய அதிகாரத்துக்குத் துருக்கிதான் ஓர் அடையாளமாகவும் விளங்கிவருகின்றது. இஸ்லாத்தின் பகைவர்களால் செய்யப்பட்ட சதியாலோசனையான சூழ்ச்சிகளின் பயனாய்த் துருக்கியானது பலதுன்பங்களையும் அனுபவித்திருக்கலாம்; ஆனால் இப்பொழுது சமீபகாலமாக ஐரோப்பாவில் நிகழ்ந்து வந்த இந்த மகாபாரத யுத்தத்திலும் துருக்கிதேசம் தன் ஜீவசக்தியையும் வீரப்பிரதாபத்தையும் நன்குவெளிக்காட்டியிருக்கின்றது. ஆதலின் துருக்கிராஜ்யத்தைச் சின்னா பின்னப் படுத்துவதென்றால் கிலாபத்தையே சின்னாபின்னப் படுத்துவதாய் எம் முஸ்லிம்கள் கருதுகின்றனர். இஃதுண்மையே. துருக்கியே கிலாபத்தாகவும் கிலாபத்தே துருக்கியாகவும் ஒன்றோடொன்று ஐக்கியப்பட்டுவிட்டபின் துருக்கியைப் பின்னப்படுத்தினால் கிலாபத்தே பின்னமாய்ப் போகுமென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. ஆதலின் இந்தியாவிலுள்ள ஒரு சிற்றரசரைப்போல் துருக்கி சுல்தானை ஆக்கிவிடுவதென்றால் இஸ்லாத்தையே இல்லாமல் செய்துவிடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சூழ்ச்சியென்றே யாம் துணிய வேண்டும். இம்மகா யுத்தத்தில் ஜயம்பெற்ற வல்லரசுகளில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தாரும் ஒருவராயிருப்பதனாலும், இந்த ஏகாதிபத்தியத்தின்கீழ் எட்டுக்கோடி முஸ்லிம்கள் இத்தேசத்தில் வாழ்ந்து வருவதாலும் கிலாபத் விஷயமானது தங்களுடைய மதக்கோட்பாட்டின்படி திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று கேட்பதற்குத் தங்களுக்குச் சுதந்தரம் உண்டென்று இந்திய முஸ்லிம்கள் இயற்கையாகவே உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆதலின் கிலாபத்தானது சிதைவுறாமல் எப்பொழுதும்போல் செம்மையாயிருத்தல் வேண்டும்; அதாவது, அரபு நாட்டின்மீது தனது செல்வாக்கைச் செலுத்தக்கூடிய வன்மைபொருந்திய ஒரு துருக்கிராஜ்யம் அவசியம் நிலைத்திருக்கவேண்டும். ஒரு கலீபாவை ஒழித்துவிட்டு வேறொரு கலீபாவைச் சிருஷ்டிக்க ஐரோப்பியருக்கு அவ்வித அதிகாரமுமில்லை. ஹிஜாஸ் தேசத்து அரசர் சென்ற மகா யுத்தத்தில் நேசதேசத்தினருக்கு உதவி புரிந்திருக்கலாம்; இக்காரணத்தால் இவரை கலீபாவாக ஆக்கிவிட அந்நேசக் கக்ஷியினருக்கு யாதொரு அதிகாரமுமில்லை. முஸ்லிம்கள் யாரைத் தங்களுடைய கலீபாவாக ஒப்புக்கொண்டிருக்கிறார்களோ அவரே அதாவது

துருக்கி சுல்தானை அரபுநாட்டுக்கு ஏகாதிபதியாயில்லாமல் செய்து விடக்கூடிய எவ்வித உடன்படிக்கையும் செல்லத்தக்கதன்று. இப்படிப்பட்ட ஏற்பாடு ஏதேனுமிருந்து அவ்வேற்பாட்டின்படி கலீபாசரின் அதிகாரத்தை நேச தேசத்தார் குலைக்கும் பக்ஷத்தில் முஸ்லிம்களுடைய அபிப்பிராயத்துக்கு நேர்மாறாய்க் கிறிஸ்தவராஜதந்திரிகள் முஸ்லிம் கலீபாவைப் பட்டத்தை விட்டு நீக்கிவிட்டதாகவே எல்லோரும் கருதநேரும்; அதாவது முஸ்லிம்களின் மதசம்பந்தமான விஷயங்களில் முஸ்லிமல்லாதவர்கள் அனாவசியமாய்த் தலையிட்டார்களென்பது வெகு விசிதமாய்ப் புலப்படும்.

கலீபாவைத் தம்முடைய ஸ்தானத்திலிருந்து நீக்கவேண்டுமாயின் இரண்டுவகையால் மட்டுமே அதைச் சாதிக்க முடியும். எல்லா முஸ்லிம்களும் ஏகமனத்துடன் ஒன்றுகூடியேனும் அல்லது பெரும்பான்மையாரின் அபிப்பிராயத்தின் பிரகாரமேனும் தற்கால கிலாபத்தானது அதிருப்திகரமாயிருக்கும் பக்ஷத்தில் இப்போதிருக்கும் கலீபாவை நீக்கி வேறொரு கலீபாவை ஏற்படுத்தலாம்; அல்லது இரண்டு முஸ்லிம் ராஜ்யங்கள் வேறு ஜாதியாரின் உதவியின்றியே தங்களுக்குள் சண்டைசெய்து கிலாபத் விஷயத்தைத் தீர்மானம் பண்ணிக்கொண்டு அவர்களுக்குள் வெற்றிபெற்றவரே கலீபாவாக ஏற்படலாம். துருக்கிஜாதியார் பலஹீனப்பட்டு விடுவார்களாயின் அவர்களை வென்றடக்கக்கூடிய வேறொரு முஸ்லிம் ராஜாங்கத்தாரே அவர்களுடைய ஸ்தானத்தில் கலீபாவாக நியமனம் பெறலாம். ஏனெனின், மையஸ்தானத்தில் பலஹீனமான ஆட்சி முறை இருக்குமாயின் அம்மையஸ்தானமே பலஹீனப்பட்டுப்போம்; இப்படிப்பட்ட நிலைமைக்கு எமது கிலாபத்து வந்துவிடுவதற்கு முஸ்லிம் உலகமானது ஒருபோதும் சம்மதிக்கமாட்டாது. உண்மையை உசாவுங்கால் ஹிஜாஸ் மன்னரின் ஏகாதிபத்தியத்தை மக்காவின் மீதும் மதீனாவின்மீதும் கிலாபத்து ஆட்சியாக ஒப்புக்கொள்ள முஸ்லிம்கள் மறுதளிப்ப இஃதொரு முக்கியகாரணமாயிருக்கின்றது. ஹிஜாஸ் மன்னர் அரபுதேசத்தின் ஒரு பிராந்தியத்தைமட்டுமே ஆண்டுவருகிறார்; நஜத் பிராந்தியத்தின் சிற்றரசரால் கூடத் தோல்வியடையக்கூடிய அவ்வளவு கேவலமான பலஹீன ஸ்திதியில் ஹிஜாஸ் அரசர் இருந்து வருகிறார். கிறிஸ்தவராஜாங்கத்தார்களின் உதவியைக்கொண்டே ஹிஜாஸ் மன்னர் இப்போது பிரபலமடைந்தவர்போல் காணப்படுகின்றார். இவர் தம்முடைய சொந்த அதிகாரத்தின் பெருமையைக்கொண்டு இப்போது மக்காஷரீபில் ஆட்சி புரியவில்லை; ஆனால் நேசதேசத்தாரின் உதவியைக்கொண்டே இவர் மக்கமாநகரில் நிலைத்திருக்கிறார். முஸ்லிம் கிலாப

38-

21 SEP 1921 MADRAS

முபஸ்ஸிலன்

# தத்துவ இஸ்லாம்

வல்தகுன் மின்கும் உம்மதுன் யத்ஊன இலல்கைரி வயஃமுரூன பில்மஃரூபி வயன்ஹௌன அனில்முன்கரி வஉலாஇக ஹுமுல் முப்லிஹூன்.—அல்குர்ஆன், ஸூரா 3, ஆயத்து 103.

கமலம் - 3. | 1921ஞு ஜூலைமீ | இதழ் - 3.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

நஹ்மதுஹூ வநுஸல்லீ அலா ரஸூலிஹில் கரீம்.

## முஸ்லிம்களின் கடமை

எமதருமை மிக்க இஸ்லாமிய சகோதரர்காள்! இப்பொழுது நமது சுத்த சத்தியமார்க்கமாகிய தீனுல் இஸ்லாத்துக்கு நேரிட்டிருக்கும் துன்பம் இன்னதென்பது உங்களெல்லோருக்கும் தெரியாததன்று. முஸ்லிம் கிலாபத்துக்கு நேரிட்டிருக்கும் ஆபத்து இன்னதென்றும் நமது புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நாசகாலம் இப்படிப்பட்டதென்றும் ஸ்மர்னா முதலிய இடங்களிலுள்ள நம்முடைய முஸ்லிம் சகோதரர்களுக்கு விளைந்திருக்கும் கொடுமையும் கொலையும் இத்தன்மையனவென்றும் நீங்கள் மிகச் செம்மையாக உணர்ந்திருக்கிறீர்கள். இவ்விஷயங்களைப் பற்றி ஹிந்துஸ்தான் மௌல்விகள் என்னசொல்லி யிருக்கிறார்களென்பதும் நமக்கெல்லாம் நன்கு தெரியும். அல்லாஹ்வும் ரஸூலும் சொல்வதைச் செவ்வனே உணர்ந்து அதன்படி நாமெல்லாம் தற்போது நடக்கவேண்டுமென்பதுதான் அம்மஹான்களின் அபிப்பிராயம். நமது மார்க்கக் கடமைகளை நன்குணர்ந்து அவற்றின்படி நமது சகோதரர்களெல்லாம் நடந்துகொண்டால்தான் தீனுல் இஸ்லாத்துக்கு இனி ஸீனத்து உண்டு. இம்மார்க்கத்தை நீங்கள் தழுவியிருப்பதாய்ப் பெருமை பாராட்டுவது உண்மையாயின், ரஸூலுல்லாஹ் அவர்களிடம் மெய்யன்பு பாராட்டுவதாய் நீங்கள் சொல்லிக்

கொள்வது மெய்யாயின், அல்லாஹுத் தஆலாவின் திருவசனத்தின் மகாத்மியம் உங்கள் மனத்தில் குடிகொண்டிருப்பதாய் வெளிக்காட்டுவது வாஸ்தவமாயின் உங்களுடைய ஈமானை விளக்கிக் காட்டவேண்டிய சமயம் இப்பொழுது வாய்த்திருக்கிறது; உடனே நீங்களெல்லோரும் அல்லாஹ்வின் பாதையில் உழைக்க முன் வரவேண்டும். உங்களுடைய ஈமான் உண்மையான ஈமானாயின் ஆண்டவனது கட்டளைபோல் இப்போது நடக்க நீங்கள் ஆயத்தமாயிருக்கவேண்டும். "எதுவரையில் உங்களுடைய பெற்றோர்களையும் பிள்ளைகளையும்விட நபிகள் நாயகத்தினிடம் உங்களுக்கு அதிகமான ஆசையும் அபிமானமும் அன்புமில்லாமல் போகின்றதோ அதுவரையிலும் உங்களுடைய உறுதிப்பாடு (ஈமான்) மெய்யானதல்லவென்று அறியுங்கள்." இஸ்லாத்தின் அழிவு, சன்மார்க்கத்தின் அவமதிப்பு, புண்ணிய ஸ்தலங்களின் பறிமுதல் முதலியவற்றைக் கண்டு உண்மையான ஈமானுள்ள எவரும் சும்மா இருக்க மனந்துணியார். முஸ்லிம் நேசர்காள்! உங்களுடைய புண்ணிய ஸ்தலங்களெல்லாம் எதிர்மதவாதிகளின் கைவசப்பட்டும், உங்களது அரிய மார்க்கம் அழியும்படியான கெதியில் வந்தும், முஸ்லிம் கிலாபத்தானது சின்னாபின்னப் படுத்தப்பட்டும் நீங்கள் உங்கள் ஈமானையும் இஸ்லாத்தையும் இழந்து அவமானத்துக்குள்ளாகும் தருவாயிலிருக்கும்போது ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்துகொண்டு நீங்கள் ஆயிரமாயிரம்முறை வாயால்மட்டும் "நாங்கள் உண்மை முஸ்லிம்கள்தான், உண்மை முஸ்லிம்கள்தான்" என்று பறைசாற்றுவதால் யாதுபயன்? வெறுந் தொழுகை, நோன்பால் மட்டும் என்ன பிரயோஜனம்? உண்மையற்ற ஸக்காத், ஹஜ்ஜாலும் என்ன லாபம்? நீங்கள் உண்மையான முஸ்லிம்களாயின் இப்பொழுதே அல்லாஹுத் தஆலாவின் வேத வாக்கியங்களின் பிரகாரம் அமல் செய்ய முன் வருவீர்கள். "ஏ, ஈமான் கொண்டவர்களே! என் சத்துருவையும் உங்கள் சத்துருவையும் நேசர்களாகக் கொள்ளாதிருங்கள்; உங்களிடம் அனுப்பப்பட்ட உண்மையை மறுத்தவர்களிடம் நீங்கள் நேசச் செய்தியை அனுப்புகிறீர்களோ?"—

(அல்குர்ஆன்).

அருமைச் சகோதரர்காள்! மேற்கூறிய ஆயத்தின் பிரகாரம் இஸ்லாத்தின் சத்துருக்களிடம் சிநேகம் பாராட்டுவது கூடாதென்று விளங்கிக் கொண்டோம். இப்பொழுது நமது விரோதிகள் எவ்வகையான போரபத்தை யெல்லாம் இஸ்லாத்துக்கு விளைவித்திருக்கிறார்களென்று சற்று நிதானிப்பீர்களேல் உள்ள விஷயம் உங்களுக்கு உள்ளபடியே விளங்கும். ஐரோப்பிய மகாயுத்தகாலத்



தில் நமது உதவியைப் பெறுவதற்காக அவர்கள் முஸ்லிம் கிலாபத்தையும் இஸ்லாத்தின் புண்ணியஸ்தலங்களையும் ஒன்றும் செய்வதில்லையென்று வாக்குறுதி செய்தார்கள். ஆனால் நமது திரவிய சகாயத்தையும் மனித சகாயத்தையுங் கொண்டு வெற்றியடைந்தபின் அன்னார் தாங்கள் செய்திருந்த வாக்குறுதியை யெல்லாம் மறந்து விட்டார்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கும்படி பன்முறையும் முறையிட்டும் மறுத்து விட்டனர். முஸ்லிம்களின் புண்ணிய க்ஷேத்திரங்களை ஒன்றும் செய்வதில்லையென்று வாக்குறுதி செய்தவர்களே அப்புண்ணிய பூமிகளின்மீது படையெடுத்துச் சென்றனர். மெஸபொடேமியாவை அவர்கள் கைவசப்படுத்திக் கொண்டனர். ஸீரியா பலஸ்தீனம் முதலிய இடங்களைக் கைப்பற்றி இதரர்களிடம் ஒப்படைத்து விட்டனர். இஸ்லாமிய கலீபாவுக்கும் ஹிஜாஸின் ஷரீபுக்கும் இடையில் வேற்றுமையை உண்டு பண்ணி விட்டனர்; கஅபத்துல்லாஹ்வின் தலைவாயிலாகிய ஜித்தாத் துறைமுகத்தைத் தமது ராணுவஸ்தலமாக ஆக்கிக்கொண்டார்கள். யுத்த முடிவுக்குப்பின் கிலாபத்தின் தலைநகரைத் தமது படைகளால் வீண் சாக்குச் சொல்லி முற்றுகைசெய்து கலீபத்துல் முஸ்லிமீனை ஒரு மூலையில் கொண்டுபோய் ஒதுக்கிவிட்டனர். ஆதலின் இஸ்லாமிய அரசாங்கத்தை உலகத்திலிருந்து ஒழித்து விடவும், சென்ற பதின்மூன்று நூற்றாண்டுகளாக இவ்வுலகில் நிலை நின்ற எமது நபிபெருமானாரின் பிரதிநிதியை இல்லாமல் செய்துவிடவும், ஏகதெய்வக் கொள்கையையுடைய எமது சத்தசத்திய சன்மார்க்கத்தை ஆணிவேருடன் அசைத்துவிடவும், ஏகதெய்வக்கொள்கையின் ஸ்தானத்தில் தமது மூத்தெய்வ சம்பிரதாயத்தை நிலை நிறுத்தவும் பகீரதப் பிரயத்தன மெல்லாம் நமது எதிர்மதவாதிகள் செய்து வருகின்றனர். அக்கக்ஷியைச் சேர்ந்தவராகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தாரும் இருந்து வருகின்றனர். அல்லாஹ்வின் மீதும் அவனால் அனுப்பப்பட்ட நபிகள் நாயகத்தின் மீதும் ஈமான்கொண்டுள்ள எவரும் எமது இஸ்லாத்தின் பகிரங்கமான விரோதிகளுடன் ஒத்துழைத்து ஆண்டவனுடைய திருவசனங்களுக்கு நேர்விரோதமாய் நடக்கத் துணிவரோ? எந்த முஸ்லிமும் இந்தவித அவமானத்தைச் சகித்துக்கொண்டு இனி ஒரு விநாடியும் ஒத்துழைக்க மனந்துணியாரென்றே நம்புகிறோம். "முஸ்லிம்களைத் தவிர்த்துக் காபிர்களைத் தமது நேயர்களாக்குவோர் அவர்களிடம் கௌரவம் பெற விரும்புகிறார்களோ? கௌரவமளிப்பவர் அவர்களல்ல; ஏனெனின் எல்லாக்கௌரவமும் ஆண்டவனைப் பொருந்தியதா யிருக்கிறது—" (அல்குர்ஆன்.) ஆதலின் பூலோக அரசர்களால் அளிக்கப்பட்ட பிரயோ

சன மற்ற பட்டங்களையும் வீண் கௌரவ உத்தியோகங்களையும் பெற்றிருப்பவர் மேற்கூறிய குர்ஆன் ஆயத்தால் வெட்கப்பட்டுத் தலைகுனிய மாட்டார்களா?

முஸ்லிம் கனவான்களே! முஸ்லிமல்லாதவர்களால் அளிக்கப்பட்ட வீண்பட்டங்களைப் பொருட்படுத்தாதீர்கள். அப்பட்டங்களைப் பெற்றுக்கொண்டு உங்கள் சுயேச்சையையிழந்து அவர்களிடம்போய்த் தலைவணங்கி நில்லாதிருப்பீர்களாக. அவர்களுடைய வெளிப்படையான சினேகத்தால் உங்களுடைய தீனுல் இஸ்லாத்தை நாசமாக்காதேயுங்கள்.

ஓ, சட்டசபை அபேக்ஷகர்களே! அல்லாஹ்ரஸூலின் ஆக்ஞைக்கும் தேசத்தலைவர்களின் முறைப்பாட்டுக்கும் முரணாய் இஸ்லாத்தின் சத்துருக்களுடன் சமமாய் உட்காராதிருப்பீர்களாக. புதிய சட்டசபையில் ஸ்தானம் பெறுவதைத் தேசமகாஜனங்கள் விரும்பவில்லை. மகாஜனங்களுக்கும் மார்க்கக் கட்டளைக்கும் விரோதமாய் நீங்கள் சட்டசபைக்குச் செல்வதால் யாருக்கென்னபயன்?

பிரியமான மாணவ சகோதரர்காள்! நீங்கள் உண்மையான முஸ்லிம்களாகவும் அல்லாவுக்கும் ரஸூலுக்கும் அஞ்சி நடப்பவர்களாகவும் இருப்பது மெய்யாயின் இன்று முதலாகவாவது நீங்கள் ஒத்துழையாமைக்கக்ஷியில் சேரவேண்டும். ஒத்துழைக்கும் பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயிலாதிருப்பீர்களாக. அடிமைத்தனமான இக்கல்வி வேண்டாமென்று தேசத்தலைவர்களெல்லாம் முறையிடுவது நுமது செவியில் நுழையவில்லையா? "அல்லாஹ்வின் மார்க்கத்துக்கு விரோதமானவழியில் உங்களை நடத்த உங்களுடைய தாய் தந்தையர் பிரயத்தனப்பட்டால் நீங்கள் அவர்களுக்குப் பணிந்து நடக்காதிருப்பீர்களாக"—(அல்குர்ஆன்). இச்சமயம் ஆண்டவனது வார்த்தையை நன்கு மதித்து அதன்படி நடந்து கொள்ளுவீர்களாக. நீங்கள்தான் இந்தியாவின் இனிவரும் உரிமைபெற்ற ஜனங்களாயிருக்கிறீர்கள். உங்களுடைய நன்முயற்சியால்தான் இத்தேசத்துக்குச் சீக்கிரம் சுயேச்சை கிடைக்கவேண்டும். இச்சமயத்தைக்கைவிட்டீரேல் பின்னர் ஏமாந்து போவீர்கள்; பிறகு என்றென்றைக்கும் அடிமைகளாகவே ஆய்விடுவீர்கள்.

இந்நெருக்கடியான சமயத்தில் நீங்கள் இஸ்லாத்துக்கு உதவி புரியாமலும் எதிர் மதவாதிகளுடன் உதவி மறுக்காமலும் இருப்பீர்களேல், முஸ்லிம் நேசர்களே! ஆண்டவனது கோபாக்கினியும் கொடூரமும் நம்மைச் சாம்பலாக்கும் படியான நேரம் அதிக தூரத்தில் இல்லையென்று நீங்கள் ஒவ்வொருவரும் மனத்தி லிருத்துவீர்களாக.



"ஏ, திருமக்கா ஷரீபையும் திருமதீனா ஷரீபையும் காந்து ரக்ஷிப்பவனே! புண்ணிய க்ஷேத்திரங்களின் தலைவனே!! புண்ணியஸ்தலங்களின் சுயேச்சையைப் பாதுகாக்கும் பொருட்டுச் செய்யும் நன்முயற்சிகளில் முஸ்லிம்களாகிய எங்களைத் திடப்படுத்துவதுடன் எங்களுக்குப் போதிய நற்போதனையும் புரிந்தருள் வாயாக." ஆமீன்.

## ஹதீது.

"ஒரு முஸ்லிமைப்பார்த்துக் காபிரென்று சொல்லும் ஒவ்வொருமனிதனும் அந்தக் குபுரியத்தைத் தானே அடைவான்."

"ஈமானுக்கு மூன்று மூலவேர் உண்டு; அவற்றுள் ஒன்றாவது: 'ஒரே ஆண்டவனைத்தவிர வேறு தெய்வமே கிடையாது' என்று சொல்லும் ஒருவனைத் தொந்தரவு செய்யாமலும், அவன் ஏதேனுமொரு தவறு செய்துவிடின் உடனே அவனைக்காபிரென்று சொல்லாமலும், ஏதேனுமொரு பாபம் இழைத்துவிடின் அவனை அவமதிக்காமலும் இருப்பதுதான்.", (நாயகவாக்கியங்கள்)

## நூற்றுமுப்பது பர்லுகள்.

இஸ்லாத்தில் பர்லுகள் (முக்கிய கடமைகள்) நூற்றுமுப்பதாகும்: அவை மூன்று ஐந்துகள், மூன்று நான்குகள், இரண்டு மூன்றுகள், இரண்டு முப்பதுகள், ஓர் ஏழு, ஒரு பதின்மூன்று, ஒரு பதினேழு, ஆக 130 பர்லுகளாகின்றன. இவற்றின் விவரம்:—

### மூன்று ஐந்துகளாவன

முதல் ஐந்து:—1 கலிமாச் சொல்லல், 2 தொழுதுகொள்ளல், 3 ரம்லானில் நோன்புவைத்தல், 4 ஸக்காத்தென்னும் ஏழைவரி கொடுத்தல், 5 கஃபாவுக்கு ஹஜ்ஜு செய்யப்போதல். ஆக 5 பர்லு

இரண்டாம் ஐந்து:—தினம் ஐந்துவேளையும் ஆண்டவனைத் தொழுதல். ஆக 5 பர்லு

மூன்றும் ஐந்து:—ஐந்துவேளைத் தொழுகைக்கும் ஐந்து முறை நியமத்துச் செய்தல். ஆக 5 பர்லு

### மூன்று நான்காவன

முதல் நான்கு:—நபிகள் நாயகத்தின் நான்கு தலைமுறை அறிதல். நாயகத்தின் தகப்பனார் பேர் அப்

அல்லா; அவரது தந்தையார்பேர் அப்துல் முத்தலிப்; அவருடைய பிதாவின் பேர் ஹாஷிம்; அவரின் பெற்ரேர்பேர் அப்துல் முனபு. ஆக 4 பர்ளு

இரண்டாம் நான்கு:—ஹனபி, ஷாபியீ, ஹன்பலி, மாலிக்கி என்னும் நான்கு மதஹபுகளை உணர்தல். ஆக 4 பர்ளு

மூன்ரும் நான்கு:— ஒலுவில் முகங்கழுவுதல், இரண்டு கையும் முழங்கைமட்டும் கழுவுதல், தலையில் நாலிலொருபங்கு மஸ்ஹு செய்தல், இரண்டு பாதமும் மணிக்கட்டுவரையில் கழுவுதல். ஆக 4 பர்ளு

இரண்டு மூன்ருவன

முதல் மூன்று:—வாய் கொப்பளித்தல், நாசிக்குத் தண்ணீர் செலுத்தல், உடம்பு முழுதும் குளித்தல் என இம்மூன்றும் முழுக்கில் பர்ளுகள். ஆக 3 பர்ளு

இரண்டாம் மூன்று:—தயம்மம் செய்யும்போது நிய்யத்துச் செய்தல், கையால் தரையிலடித்து முகத்தில் தடவுதல், அப்படியே தரையிலடித்து இரண்டு கைகளிலும் முழங்கை வரையில் தடவுதல். ஆக 3 பர்ளு

இரண்டு முப்பதாவன

முதல் முப்பது:—ரமலானில் 30 நோன்பு பிடித்தல். ஆக 30 பர்ளு

இரண்டாம் முப்பது:—30 நோன்புக்கும் 30 முறை நிய்யத்துச் செய்தல். ஆக 30 பர்ளு

ஓர் ஏழாவது

ஈமான் விளக்க மந்திரமான "ஆமன்து பில்லாஹி....." என்பதிலுள்ள ஏழ் *பர்ளுகள். ஆக 7பர்ளு

ஒரு பதின்மூன்ருவது†

வெளி பர்ளு ஏழாவன:—1 தொழுகையின் வேளைகளை அறிதல், 2 உடம்பு, 3 உடை, 4 தொழுமிடம் இம் மூன்றும் பரிசுத்தமா யிருத்தல், 5 ஆணும் பெண்ணும் மறைக்கவேண்டிய உறுப்புக்களை மறைத்துத் துணி கட்டுதல், 6 கஅபாவை முன்னேக்கி நிற்றல், 7 தொழுகைக்கு நிய்யத்துச் செய்தல். ஆக 7 பர்ளு

உள்பர்ளு ஆருவன:—1 தொழ ஆரம்பிக்கும்போது சொல்லும் தக்பீர் தஹ்ரீமா, 2 நிலையாக நிற்றல், 3 கிரா அத்து ஓதுதல், 4 ருக்கூஉ செய்தல், 5 ஸுஜூது செய்தல், 6 பின்னிருப்பு இருத்தல். ஆக 6 பர்ளு

பதினேழாவது

தினம் 5 வேளைத் தொழுகையிலும் காலையில் பஜருக்கு 2, மத்தியானம் லுஹருக்கு 4, சாயங்காலம் அஸருக்கு 4, விளக்குவைக்கும் வேளையில் மகுரிபுக்கு 3, நிசியில் இஷாவுக்கு 4, ஆக 17 ரக்அத்துகள் பர்ளு. ஆக 17 பர்ளு

ஆக மொத்தம் 130 பர்ளுகள்.

மேற்கூறிய கணக்குப்படி இஸ்லாத்தில் பர்ளுகள் 130 ஆகின்றனவென்று "சார்குர்ஸி" என்னும் கிதாபில் வந்துள்ளன. இவற்றின் விவரமெல்லாம் காலக்கிரமத்தில் எமது பத்திரிகையில் தக்க ஆதாரத்துடன் வெளியிடப்படும்.

---

* எமது "முஸ்லிம்சங்க முதற்கமலத்தில்" இதன் விவரம் காணப்படும்.

† இதைப் பதினைந்தென்றும் சிலர் சொல்வர். உள்பர்ளு 6 ல் முதல் பர்ளை வெளிபர்ளுடன் சேர்த்து வெளி பர்ளு 8 என்றும், மிகுதி உள்ள பர்ளுகள் ஐந்துடன் தர்த்தீபு, சித்த சுவாதீனத்துடன் தொகையை ஆரம்பித்துச் சித்த சுவாதீனத்துடன் முடித்தல் என்னும் இரண்டையும் சேர்த்து உள் பர்ளு 7 என்றும் அன்னர் சொல்கின்றனர்.



## ஒத்துழையாமையும் உத்தியோகத் துறவும்

நாச்சியார் கோவில் பா. தாவுத்ஷா சாஹிப், பி. ஏ. அவர்கள் எழுதுவது.

ஐயா,

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் யான் சென்ற சில ஆண்டுகளாகச் சேவகம் புரிந்து வந்தேன். சென்ற மூன்று வருஷங்களாக இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டாகவும் தென்னாற்காடு ஜில்லாவில் ஊழியம் செய்திருக்கிறேன். ஆனால் இந்தியன் நாஷனல் காங்கிரஸின் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டும் இத்தேசத்தின் பெரும்பான்மையான உலமாக்களின் மதக்கட்டளைக்குக் கீழ்ப்பட்டும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி முறையில் இனி யான் கலந்துகொண்டு ஒத்துழைப்பதா, அல்லது சாத்வீக எதிர்ப்பான ஒத்துழையாமையாகிய சத்தியாக்கிரக தர்மத்தை அனுஷ்டித்து என்னுடைய பிறவிச்சுதந்தரமாகிய ஸ்வராஜ்யத்தை அடைவதற்கும், யான் இப்பிறவி

யில் பெறுதற்குரிய பெரும் பேறுகளையெல்லாம் பெற்றுப் பின்னர் மோக்ஷ சாம்ராஜ்யத்தை எய்துவதற்கும் வேண்டிய துறைகளில் கடவுளுக்கும் மனச்சாக்ஷிக்கும் முரண்படாமல் ஒத்துழைப்பதா என்னும் இம் முக்கியமான விஷயமானது சென்ற சில மாதங்களாக என் மனத்தை உறுத்திக் கொண்டே வந்திருக்கிறது. ஆண்டவனுடைய ஆணையை மீறிநடந்தேனென்னும் பாபத்துக்குள்ளாகாமலும், என் ஜன்மதேசத்துக்கு யானொரு துரோகியாக ஆய்விட்டேனென்னும் பாதகத்துக்கு ஆளாகாமலும், உலமாக்களின் உத்தரவை உல்லங்கனம் செய்தேனென்னும் உற்பாதத்துக்கு உடன்படாமலும், மனச்சாக்ஷிக்கு மாற்றமுண்டாகும்படி மீறி நடந்தேனென்னும் மனோ வேதனைக்கு இரையாகாமலும், கடைசியாய் (ஆனால் முக்கியமாக) யான் என்னுடைய தன் மதிப்பை யிழந்துவிட்டு ரோஷமற்ற வனாய்ப் போய்விட்டேனென்னும் அவமானத்துக்கு ஆளாகாமலும் இருந்து கொண்டு இனியான் ஆங்கில ஆட்சியாருடன் ஒத்துழைக்க முடியுமோவென்பது தான் இப்போது யான் கவனிக்கவேண்டிய முக்கிய பிரச்னையா யிருக்கிறது. யான் 1912 ல் பி. ஏ. பட்டம் பெற்றபோதே பிரிட்டிஷாரின் ஏகாதிபத்தியத்தில் சேவகம் செய்வது உசிதமாயிராதென்று கருதினேன். ஆனால் சுயநயப் பிரியர்களான சிலரின் பொய்யான வாக்குறுதிகளாலும் அவரின் உபசரிப்புப் போன்ற நயவஞ்சகமான வீண்பேச்சுக்களாலும் மயங்கி "உத்தியோகம்" என்னும் மாயவலையில் சிக்கிவிட்டேன். சென்ற ஒன்பது வருடங்களாக யான் ஆங்கிலேய கவர்ண்மெண்ட்டில் சேவகம் செய்தபின்னரும் ஆதியில் எனக்கிருந்த அபிப்பிராயமே அதிகமாக ஊர்ஜிதப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ ராஜ்யமாகிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தாரும் இன்னும் இதர ஐரோப்பிய கிறிஸ்தவ தேசத்தினரும் சென்ற சில நூற்றாண்டுகளாகவே "தீனுல் இஸ்லாம்" என்னும் எமது சுத்த சத்திய சன்மார்க்கத்தை வேருடன் கெல்லிவிட எல்லா விதப் பிரயத்தனமும் செய்து வருகின்றனர். சென்ற 200, 300 வருடங்களாக ஐரோப்பாவில் நிகழ்ந்துவரும் நிகழ்ச்சிகளின் அந்தரங்கக் கருத்தையெல்லாம் ஆழ்ந்து நோக்குவோமாயின், இவ்வுலகமுழுதும் தங்களுடைய கிறிஸ்தவ மார்க்கத்தைப் பரவச்செய்வதற்கு இஸ்லாமார்க்கம் ஒன்று தான் இடையூறா யிருக்கிறதென்றும் இதனால் இஸ்லாத்தின் கிலாபத் ராஜ்யமாகிய துருக்கிராஜ்யத்தை ஒழித்து இஸ்லாமார்க்கத்தையே இல்லாமலொழித்து விடவேண்டுமென்றும் ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் செய்துவரும் சூழ்ச்சியெல்லாம் வெள்ளிடை விலங்கல்போல் தெள்ளிதில் விளங்காமற்போகா.



பொதுவாக எல்லா ஐரோப்பிய கிறிஸ்தவரின் (முக்கியமாக ஆங்கிலேயரின்) அந்தரங்க எண்ணமானது இவ்வாறு இருந்து வரும்போது மேல் நாட்டாரின் மகா பாதகயுத்தமானது சிலவருடங்களுக்குமுன் நல்லவேளையில் ஆரம்பமாயிற்று. ஆங்கிலேயர்கள் அம்மகாயுத்தத்தில் சேர்ந்துகொண்டபோது துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டே தாங்கள் தர்மயுத்தம் செய்யப் புகுந்ததாய் உலக மறியப் பறை சாற்றினார்கள். ஆனால் அந்த யுத்தத்தின் போது அகாரணமாய் எங்களுடைய புண்ணியஸ்தலங்களை யெல்லாம் ஆங்கிலேயரும் மற்ற நேசக்கக்ஷிக்காரர்களும் கைவசப்படுத்திக் கொண்டபோது இதனால் என்ன தீங்கு எமக்கு விளையுமோவென்று இந்திய முஸ்லிம்களெல்லாம் திகில் கொண்ட காலத்தில் இது மதசம்பந்தமான யுத்தமல்லவென்றும் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களின் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் ஒன்றும் கெடுதல் செய்யப்படமாட்டாதென்றும் இங்கிலீஷ் ஏகாதிபத்திய முதல் மந்திரியார் வாக்குறுதி கூறினார். இப்படிப்பட்ட பலவாக்குறுதிகளையும் நம்பி யானும் மற்ற ஹிந்து நண்பர்களும் எங்கள் உடல் பொருள் ஆவியை யெல்லாம் ஆங்கிலேயரின் வெற்றிக்காகத் தத்தம் செய்தோம். என் சக்திக்கெட்டியமட்டில் யுத்தகளத்துக்காக எத்தனையோ மனிதர்களையும் யுத்தபண்டுக்காகவும் யுத்தக் கடனுக்காகவும் எவ்வளவோ பணத்தையும் சேகரித்துக்கொடுத்தேன். அந்தோ பரிதாபம்? இந்திய முஸ்லிம்களின் உதவியைக் கொண்டும் இந்தியரின் பணத்திரளைக்கொண்டுமே எமது இஸ்லாமிய புண்ணிய பூமிகளை யெல்லாம் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினார்கள். கடைசியாக யுத்தம் முடிவடைந்த பின் இதுதான் மதயுத்தமென்றும் இம்மகாயுத்தத்தில்தான் சிலுவையானது பிறையை வென்றுவிட்டதென்றும் அநேக நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவர்களால் கைப்பற்ற முடியாமற்போன இஸ்லாமிய புண்ணிய க்ஷேத்திரங்களையெல்லாம் இந்த யுத்தத்தில் ஆங்கிலேயர்கள் அதி லகுவில் கைக்கொண்டு விட்டார்களென்றும் பொறுப்பு வாய்ந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் உத்தியோகஸ்தர்கள் உலகமறியத் தெரிவித்துவிட்டனர். இந்தியர்கள் செய்துவந்த உதவிக்கெல்லாம் கைம்மாறாக எமது கிலாபத்துக்குப் பெரிய தீங்கை யெல்லாம் நேசதேசவல்லரசுகள் இழைத்துவிட்டார்கள்; இந்தியாவில் ஆங்கில அரசாட்சியாரோ பஞ்சாப் படுகொலைக்குத் தக்கபரிகாரம் செய்யவில்லை; ஆனால் ரௌலட்சட்டத்தைக் கொடுக்கவருகிறார்கள்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தார் எமக்குப் பிறவிச் சுதந்தரமாகிய ஸ்வராஜ்யத்தை அளிக்கத் தாமதம் செய்வதல்லாமல் முஸ்லிம் கிலாபத்திற்கும் தக்கபரிகாரம் செய்யப்

போவதாய் நற்குறி யொன்றும் தற்போது காணப்படவில்லை. மௌலானா முஹம்மதலி முதலியோர் சென்ற ஆண்டில் இங்கிலாந்துக்கு கிலாபத்து விஷயமாய்த் தூது சென்றுவந்ததனாலும் இவ்வாண்டில் மிஸ்டர் சோட்டானி முதலியோர் மறுபடியும் தூது சென்றிருப்பதனாலும் ஒன்றும் திருப்திகரமான முடிவு ஏற்படும் போல் தோன்றவில்லை.

இம்மட்டுமோ! கிலாபத்தை அழித்து முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தியதோடு நில்லாமல் இவ்வுலக முழுதையும் கிறிஸ்து மதத்தில் சேர்த்து விடுவதே உசிதமான காரியமாயிருக்குமென்று பிரிட்டிஷ் முதன் மந்திரியார் கூறியுள்ளார். கிறிஸ்துமதத்தை இஸ்ரவேல் கூட்டத்தாரைத் தவிர வேறு ஜாதியாரிடம் போதிக்கவேண்டாமென்று ஏசுநாதர் அருளிச்செய்த வாக்கியங்கள் அனந்தம் பைபிளில் காணப்படும்போதும், எமது குர்ஆன் ஷரீபு வேதமானது ஈஸா அலைஹிஸ்ஸலாம் (ஏசுநாதர்) அவர்கள் இஸ்ரவேல் கூட்டத்துக்காக மட்டுமே அனுப்பப்பட்டாரென்று சொல்லும்போதும் தமது கிறிஸ்து மதத்தில் இவ்வுலக முழுதையும் சேர்த்துவிட வேண்டுமென்று முதல் மந்திரி முதலியோர் சொல்வதைக் கேட்டு யாங்கள் சும்மா இருப்பது இனி முடியாது. பைபிள் ஷரீபின் விஷயமோ ஆதியோடந்தமாய்ப் புரட்டப்பட்டிருக்கின்றது. ஏசுநாதர் உபதேசித்தது இன்னதுதான் என்று ஸ்பஷ்டமாய் விளங்கவில்லை. இதனால் தான் எல்லாக் காலத்துக்கும் எல்லா ஜாதியாருக்கும் எல்லாத் தேசத்துக்கும் பொதுவாகவே எமது குர்ஆன் ஷரீபு அனுப்பப்பட்டிருக்கிறதென்று ஆண்டவன் பன்முறையும் அவ்வுத்தம வேதத்தில் கூறியுள்ளான். இதன் உண்மையை மேல் நாட்டார் உணராது இஸ்லாத்தைப்பற்றித் தாறுமாறான தப்பபிப்பிராயத்தை யெல்லாம் வைத்துக்கொண்டு இஸ்லாத்தை அழித்துக் கிறிஸ்து மதத்தையே நிலைநிறுத்தப் பார்க்கின்றனர். இது பைபிள் ஷரீபுக்கும் குர்ஆன் ஷரீபுக்கும் நேர்மாறான காரியமாயிருக்கிறது. இதில் என்போன்ற முஸ்லிம்கள் சோம்பியிருப்பது அறவே தோஷமாகும். இதனால் மேல் நாடுகளுக்குச் சென்று அங்குள்ளாரின் தப்பபிப்பிராயங்களை யெல்லாம் போக்கடித்துச் சுத்தசத்திய சன்மார்க்கமாகிய இஸ்லாமிய சன்மார்க்கத்தை அந்நாடுகளி லெல்லாம் பரவச்செய்வது ஒவ்வொரு முஸ்லிமின் தற்கால முதற்கடமையாகும்; இவ்வுத்தமமான இஸ்லாமிய பிரசாரவேலையானது லாஹூரிலுள்ள பிரபல லாயராயிருந்த மௌலானா மௌல்வி ஜனாப் காஜா கமாலுத்தீன் பி. ஏ. எல் எல். பி., அவர்களால் (இவ்வுத்தம பக்தராகிய ஸாபிக்கூனல் அவ்வலூனுக்கு இறைவன் என்றுங் குறை



யாத கிருபைத் தந்து நன்கு பாலிப்பானாக) இங்கிலாந்தில் சென்ற ஒன்பது வருடங்களாகச் செய்யப்பட்டு வருகிறது. இஸ்லாத்தின் உண்மைகளை உள்ளது உள்ளவண்ணமே போதிக்க ஆரம்பிப்போமாயின் மேல்நாட்டார் இஸ்லாமார்க்கத்தைத் தாராளமாய் ஒப்புக்கொள்வாரென்று பிரத்தியக்ஷமாய் ஜனாப் காஜாசாகிபின் வெற்றியால் கண்டுகொண்டோம். இச்சமயம் இப்படிப்பட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சேவகம் செய்து சம்பளமும் உம்பளமும் பெறுவதைவிட ஜனாப் மௌல்வி காஜாசாகிபுடன் ஒத்துழைத்து இஸ்லாமிய பிரசாரம் செய்வதே என் முதற்கடமைகளி லெல்லாம் முக்கிய கடமையென்று கண்டுகொண்டேன். "நீங்கள் நன்மையும் நியாயமுமான காரியங்களுக்கு உதவிபுரியுங்கள்; பாபத்திற்கும் அக்கிரமங்களுக்கும் உதவி செய்யாதிருங்கள்"—(அல்குர்ஆன்).

ஈதெல்லாம் போகட்டும். இக்காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சேவகம் செய்வது தன்மதிப்புக்குத்தான் ஒத்ததாயிருக்கிறதோவென்று யோசிக்குங்கால் என்போன்ற இந்தியர்கள் ஆங்கில ஸிவிலியன்களால் தன்மதிப்புக்குப் பங்கமுண்டாகும்படியானவிதமாய் நடத்தப்படுகிறார்கள். சென்ற 9 ஆண்டுகளாக யான் கடவுளுக்கும் என் மனச்சாக்ஷிக்கும் மதக்கட்டளைக்கும் பயந்தே என்னால் கூடியமட்டும் தர்மநீதி தவறாமல் உத்தியோகம் செய்து வந்தேன்; ஆனாலுமென்ன! ஆங்கில ஆட்சி முறையார் என்னைப் போதுமான தன்மதிப்புடன் நடத்திவரவில்லையென்பது எனக்கு நன்றாகத் தெரியும். 2000 வருடங்களுக்கு முன் யூதர்கள் (இஸ்ரவேல் கூட்டத்தார்) தாங்கள் மட்டும் கடவுளின் சொந்த ஜனங்களென்றும் இதர ஜாதியாரெல்லாம் கடவுளின் அருளுக்கு அப்புறப்பட்டவரென்றும் நினைத்திருந்ததேபோல் இக்காலத்தில் இந்தியர்களை ஆங்கிலேயர்கள் நடத்தி வருகிறார்கள். ஏனெனின் என் தோல் கருப்பாம், அவன் தோல் வெளுப்பாம். ஏசுநாதர் இஸ்ரவேல் கூட்டத்தாரல்லாதாரெல்லாம் பன்றிகளென்றும் நாய்களென்றும் பொருள் படும்படி குறிப்பிட்டிருக்கிறார். இக்காலத்தில் ஆங்கில ஆட்சிமுறையில் சேவகம் புரிந்துவரும் ஸிவிலியன்கள் என்போன்ற இந்தியர்களை நடத்தும் பான்மையை நோக்கும்போது ஏசுநாதரின் மேற்கூறிய திருவாக்கியங்களே என் ஞாபகத்தில் அடிக்கடி வருகின்றன.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறையில் உயர்தர உத்தியோகஸ்தர்களை வசப்படுத்தி அவர்களுடைய பிரியத்தைச் சம்பாதிக்கவேண்டுமாயின் அதற்காக நம் இந்தியர்கள் அனுஷ்டிக்கவேண்டிய முறைகள் பல உண்டு. ஓர் இந்தியன் தன் வேலையில் எவ்வளவு கெட்

டிக்காரனாயிருந்தபோதிலும் அதுமட்டும் போதாது. வேலையில் எவ்வாறிருந்தபோதிலும் வெள்ளையரைமட்டும் தன் வசப்படுத்தும் படியானவிதமாய் அவருக்குத் திருப்திகரமான வழியில் நடந்து கொண்டால் அஃதொன்றே போதும். வெள்ளையருக்கு ஹிதமுண்டாகும்படி நடக்கத் தெரியாமற்போயின் ஓர் இந்தியன் எவ்வளவு நல்லவனாயினும் எவ்வளவு யோக்கியனாயினும் எவ்வளவு சாமர்த்தியசாலியாயினும் அவன் ஆங்கில அரசாட்சியில் முன்னுக்கு வரமுடியாது. தன்மதிப்புடன் சுயேச்சையாய் நடக்கக் கூடிய எந்த இந்தியனுக்கும் இந்த பிரிட்டிஷ் ஆட்சி முறையில் செல்வாக்கில்லை.

மேற்கூறிய பல காரணங்களாலும் இனி ஒரு விநாடியேனும் இந்த ஆங்கில ஆட்சி முறையில் என்னால் சேவகம் செய்ய முடியாதென்பதைத் தெரிவித்துவிட்டேன். கிலாபத் கெடுதல்களுக்குப் பரிகாரம் தேடுவதற்கும் இஸ்லாமிய உண்மைகளை மேல் நாடுகளில் பிரசாரம் செய்வதற்கும் இந்தியாவில் ஸ்வராஜ்யம் பெறுவதற்கும் யான் துணிந்துவிட்டேன். என் மதக்கட்டளையையும் தேசத் தொண்டையும் முதற்கடமையாகக்கொண்டு அதற்காக யான் பெரிதும் உழைக்கவேண்டியிருப்பதால் அக்கடமைக்கு எவ்விதத்திலும் உதவிபுரியாத (ஆனால் எதிரிடையாயிருக்கின்ற) இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இனி ஒத்துழைக்க மனமில்லாமல் இன்று முதல் என் உத்தியோகத்தை ராஜிநாமா செய்துவிட்டேன்.

இங்ஙனம்:

நாச்சியார் கோவில்
23—5—1921.

தங்களுண்மையுள்ள
ஒத்துழையாமைக்காரன்,
பா. தாவூத்ஷா,
முஸ்லிம் சங்கப் பிரஸிடெண்ட்.

## இஸ்லாமென்றால் என்ன?

இஸ்லாம் என்பது இயற்கையான ஓர் இலேசான மார்க்கமாகும். இம்மார்க்கம் ஏக தெய்வக்கொள்கையையே எல்லா மனிதர்களுக்கும் புகட்டுகின்றது. எவ்வகைத் துர்க்குணமுமின்றி எல்லா நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஏகநாயகனாகிய அல்லாஹுத் தஆலாவையே தோட்டிமுதல் தொண்டமான் வரையில் எல்லோரும் பூஜித்தல் வேண்டும். இம்மார்க்கத்தில் விக்கிரக ஆராதனை அடியோடில்லை. இஸ்லா மார்க்கத்தில் சேர்ந்தவர்களுக்கு முஸ்லிம்கள் என்று பெயர் சொல்வர்; ஆனால் அவர்களை முஹம்மதி



யர்களென்று சொல்வது அறியாமையாகும். அவர்களால் வணங்கப்படும் ஏகநாயன் இருலோகத்துக்கும் இறைவனாகவும் சர்வ வியாபியாயும் சர்வக்ஞனாயும் சர்வசக்தி வாய்ந்தவனாயும் சரியான நீதிபதியாயும் சர்வலோக ரக்ஷகனாயும் சுவனத்துக்கும் புவனத்துக்கும் ஏகாதிபதியாயும் சராசரங்களுக்கெல்லாம் தலைவனாயும் அமைந்திருக்கிறான். அப்படிப்பட்ட அல்லாஹுத் தஆலா அருளாளனும் அன்புடையோனுமா யிருக்கிறான். இவனே இவ்வண்டத்திலுள்ள சராசரங்களுக்கெல்லாம் இணையற்ற நண்பனாயும் ஏகபராபர நித்தனாயும் இருக்கிறான். எல்லோருக்கும் நல்வழிகாட்டியாயும் நியாய உதவிக்காரனாயும் அவ்விறைவன் காணப்படுகிறான். இவ்வண்டத்திலுள்ள ஒவ்வோரிடமும் அவன் சன்னிதானத்தில் பரிசுத்தமுள்ளதாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அவனுக்கு இணை யாருமில்லை. அவனுக்குக் கூட்டாளியாவது பங்காளியாவது கிடையாது. அவனுக்கு மனைவியாவது மக்களாவது ஒருவருமில்லை. அவன் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல. இவ்வுலகில் அவன் மனிதனாகவாவது வேறு படைப்பாகவாவது அவதாரம் எடுப்பதில்லை. அவனுக்குச் சுகதுக்க மென்பது கிஞ்சித்தும் கிடையாது. அவன் பகுக்க முடியாத ஏகாண்டமான அரூபியா யிருக்கிறான். அவனிடத்தி லிருந்து எல்லாம் தோற்றமா யிருக்கின்றன; பிறகு அவனிடத்திற்கே அவை யனைத்தும் திரும்புகின்றன. வானங்களுக்கும் பூமிக்கும் அவனே ஒளியாயிருக்கிறான்; பரிசுத்தமானவன், புகழுக்குரியவன், கம்பீரம் நிறைந்தவன், எவருடைய மனோவாக்குக் காயங்களுக்கும் எட்டாத பெரியவன், ஆதியந்தமில்லா அரூபியானவன், ஆதியும் அந்தமும் தானா யிருப்பவன்.

இப்படிப்பட்ட இஸ்லாமார்க்கத்தை இவ்வுலகில் கடைசியாய் நிலைநிறுத்தினவர் எமது நபிபெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தான். இப்பெருநபியைத்தான் இம்மார்க்கத்தினர் பின்பற்றுகின்றனர். நபிமார்களுக்கெல்லாம் கடைசியானவர் எம்பெருமான் முஹம்மதுர் ரஸூலுல்லாதான். இவர்களின் தாயார்பேர் ஆமினா அம்மாள்; தகப்பனார் பேர் அப்துல்லா; அப்துல்லாவின் தகப்பனார் பேர் அப்துல் முத்தலிப்; அவர்களின் தகப்பனார் பேர் ஹாஷிம்; அவர்களின் தகப்பனார் பேர் அப்துல் முனாபா யிருக்கும். கடைசி நபியாகிய எம்பெருமானார் தான் இவ்வுலகில் ஏக தெய்வக்கொள்கையை இனி எக்காலத்திலும் எவராலும் அசைக்க முடியாதபடி அவ்வளவு அழுத்தமாய் அமைத்திருக்கிறார்கள். இவ்வுலகம் எவ்வளவுக் கெவ்வளவு நாகரீகத்தில் முதிர்கின்றதோ அவ்வளவுக்

கவ்வளவு ஏகதெய்வக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வருகின்றது. அறிவும் நாகரீகமும் முதிரமுதிர இஸ்லாத்தின் பெருமையும் அதிகமாய் ஜொலிக்க ஆரம்பிக்கின்றது. ஏகதெய்வக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் எல்லா முஸ்லிம்களும் எம்பெருமானாகிய இறுதி நபியை ஒத்துக்கொள்ளவேண்டும். இப்ராஹீம் (அலை), மூஸா (அலை) முதலிய நபிமார்கள்போல் எமது கடைசி நபியும் ஆண்டவனுடைய தூதர்தான். எமது முஸ்லிம் சகோதரர்கள் எம்பெருமானுடன் ஏனை நபிமார்களிடத்திலும் நம்பிக்கை வைக்கிறார்கள். உத்தமமான சத்திய சீலர்களான மகான்களையே அல்லாஹுத்தஆலா நபிமார்களாக நியமித்திருக்கிறானென்று நாம் நம்புகிறோம். நபிமார்களெல்லாரும் ஆண்டவனுடைய அடியார்களேயல்லாமல் ஒருவரும் தேவ அவதார புருஷர்களல்லர். இவ்வுலகில் தீர்க்க தரிசிகள் அவதரிக்காத நாடு ஒன்றுமில்லை. ஒவ்வொரு தீர்க்க தரிசியும் ஏக தெய்வக்கொள்கையையே உபதேசித்து வந்தார்; ஆனால் அந்த அந்த நபிமார்களுக்குப்பின் அந்த அந்தக் கூட்டத்தார் அந்த ஏகதெய்வக் கொள்கையைக் குலைத்துவிட்டபடியால் கடைசியில் 1300 வருஷங்களுக்குமுன் எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருமக்காவில் அவதாரம்செய்து என்றுமழியா வண்ணம் ஏக தெய்வக் கொள்கையான இந்த இஸ்லா மார்க்கத்தை நிலைநிறுத்தினார்கள்.

எமது இஸ்லாமார்க்கத்தின் வேதமானது புர்க்கானுல் மஜீதென்னும் குர்ஆன்ஷரீபேயாகும். ஆண்டவனுடன் ஒவ்வொரு முஸ்லிமும் எவ்வாறு கலந்துகொண்டு இல்ஹாமென்னும் சைதன்ய தரிசனத்தை அடைய முடியுமென்று தெரிவிக்கின்றது. ஆண்டவனுடைய படைப்புக்களிடத்தில் எவ்வாறு நாம் நடந்துகொள்ள வேண்டுமென்றும் அவ்வேதம் வழி காட்டுகின்றது. "தொழுகையை விடாதிருப்பீர்களாக, ஏனெனின் தொழுகையானது பாபங்களினின்றும் இன்னும் இதர குற்றங்களினின்றும் காப்பாற்றுகின்றது; மேலும் அல்லாஹுத் தஆலாவின் தியானமானது நிச்சயமாய் ஒரு மகா பரிசுத்தமான கடமையாயிருக்கிறது," என்று குர்ஆன்ஷரீபே கூறுகின்றது. இவ்வுலகில் காணப்படும் இதர மதங்களின் வேதங்களெல்லாம் மனித சேஷ்டையால் மாற்றப்பட்டுக் கிடக்கின்றன. இக்காரணத்தால் தான் எமது திருமறையானது இடையில் வந்து நுழைந்த மனிதக் குற்றங் குறைகளையெல்லாம் களைந்து ஏற்கனவேயுள்ள பரிசுத்தமான உண்மைகளை மட்டும் புதுப்பித்து எல்லாக் காலத்துக்கும் எல்லாத் தேசத்துக்கும் எல்லா



ஜாதியாருக்கும் பொருத்தமான ஒரே வேதமாக 1300 வருஷங்களுக்கு முன் எமது இறைவனால் என்றென்றைக்கும் அழியாதபடி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த 1300 வருஷங்களுக்கிடையில் இவ்வுலகிலுள்ள பற்பல தேசங்களிலும் பல்லாயிரக் கணக்கான மாறுபாடு உண்டாயிருக்கும்போது எமது குர்ஆன் ஷரீபுமட்டும் ஒரு வார்த்தையேனும் மாறுபடாமல் அன்றுமுதல் இன்றளவும் ஒரே தன்மையதாயிருந்து வருகிறது. இவ்வுலகிலுள்ள 40 கோடி முஸ்லிம்களுக்கிடையில் ஓர் அக்ஷரமேனும் வித்தியாசப்படாமல் எமது திருமறையானது கோடிக்கணக்கான மனிதர்களால் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றது.

இஸ்லாத்தில் புரோகிதர்களும் பாதிரிமார்களேனும் கிடையமாட்டார். எமது சன்மார்க்கத்தில் லௌகிகத்திலேனும் வைதிகத்திலேனும் ஜன நாயகத்தன்மையே முழுதும் குடிகொண்டிருக்கிறது. ஆண்டவனுக்கும் மனிதர்களுக்கும் இடையில் புரோகிதர்களும் பாதிரிமார்களும் வந்து சிபாரிசு செய்யத் தேவையில்லை. அவரவர் செய்யும் பாபத்துக்கு அவரவரே ஜவாப்தாரியாவார்; ஆதலின் தன்தனக்குத் தானே பாப மன்னிப்பைத் தேடிக்கொள்ள வேண்டும். ஒருவர்செய்யும் பாபத்துக்கு மற்றொருவர் ஜவாப்தாரியாதல் முடியாது. அவரவரும் தம்தம் பகுத்தறிவைச் செவ்வனே செலவுசெய்து நன்மைசெய்வாராயின் மோக்ஷத்திற்குச் செல்வர்; தீமையை யிழைப்பாராயின் நரகில் வீழ்வர். ஒருவருடைய பாபத்துக்கு மற்றொருவர் பிணைப்படுதல் முடியாது. அவரவரும் பிராயச்சித்தம் செய்துகொண்டு தத்தம் பாபத்துக்குத் தாமே பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும். "ஏ, என் ஊழியர்களே! உங்களுக்குத் தீமையை விளைவிக்கும்படியான தவறிய வழியில் நீங்கள் சென்றுவிடுவீர்களேல் ஆண்டவனுடைய தயை கிடைக்காதோவென்று அதைரியங்கொள்ளாதீர்; ஏனெனின் அல்லாஹுத் தஆலா எல்லாப் பாபங்களையும் மன்னிக்கிறான்; அவன் தயாளனும் அநுக்கிரகம் செய்பவனுமாயும் அமைந்திருக்கிறான்"—(அல்குர்ஆன் 39:54).

எமது இஸ்லாமார்க்கத்தில் ஆண்பெண்ணென்ற வித்தியாசமில்லை; ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும் சன்மார்க்க நெறியில் செல்வோரெல்லாம் மோக்ஷம் பெறுவர். ஆடவருக்குள்ள வைதிக அநுஷ்டானங்களெல்லாம் பெண்டிருக்குமுண்டு. தேவ சன்னிதானத்தில் ஆண் பெண்ணென்ற வேறுபாடில்லை. பெண்களின் நிலைமையானது எமது சன்மார்க்கத்தில் மிக மேன்மையுடன் கௌரவிக்கப்பட்டிருக்கிறது. "தாயின் பாதத்தில் சுவர்க்கம்

இருக்கிறது" என்று எம்பெருமானார் மாதாக்களின் தன்மையை மகிமைப்படுத்தி யிருக்கிறார்கள்.

இஸ்லாமார்க்கம் எல்லாவகை அசுத்தத்தையும் அடியோடு ஒழிக்கின்றது. புறப்பரிசுத்தமும் அகப் பரிசுத்தமும் இம்மார்க்கத்தில் அவசியம் வேண்டும். புறப் பரிசுத்தம் இல்லாமல் அகப் பரிசுத்தத்தை அடைய முடியாதென்பது எமது துணிபு. மகா பரிசுத்தமுடைய திரு மூர்த்தியாகிய அல்லாஹுத் தஆலாவின் திருச்சன்னிதானத்துக்குச் செல்லவேண்டியவன் எவ்வகை அபரிசுத்தமும் அற்றிருத்தல்வேண்டும். புறத்தீமையாகிய கொலை, களவு, கள், காமம், சூது, பன்றியிறைச்சி முதலியனவும் அகத்தீமையாகிய பொறாமை, வஞ்சகம், பொய், கடுஞ்சொல் முதலியனவும் அறவே அகற்றப்பட்டிருக்கின்றன.

இஸ்லாமார்க்கமானது தொழுகை, நோன்பு, ஏழைவரி, ஹஜ்ஜு யாத்திரை முதலிய முக்கிய கடமைகளைச் செய்யும்படி எல்லாரையும் வற்புறுத்துகின்றது. தாய் தந்தையரிடம் பக்ஷம்பாராட்டும்படியும் இன்னும் இதர படைப்புக்களிடம் கருணை பாராட்டும்படியும் எமக்குக் கட்டளையிறந்துள்ளது. மிருகங்களிடத்திலும் பறவைகளிடத்திலும் பக்ஷம் பாராட்டுதல் வேண்டும்.

இஸ்லாத்தில் ஸயன்ஸ் முதலிய சாஸ்திரங்களைப்படிக்க வேத ஆதாரமுண்டு. சூரிய சந்திர நக்ஷத்திர கிரகங்களும் இன்னும் இதர பஞ்சபூதங்களும் மனிதனுடைய அறிவுக்குக் கீழ்ப்படியும்படியே அமைக்கப்பட்டிருக்கின்றன வென்று எமது திருமறை புகல்கின்றது. எல்லாவகை ஞானத்தையும் பெறுதற்கு எம்வேதம் இடந்தருகின்றது. "அறிவு சீனதேசத்திலிருந்தபோதிலும் முஸ்லிமாகிய ஆணும் பெண்ணும் அங்கே சென்று கற்கக்கடவர்" என்று எமது திருநபியவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

சகோதரத்துவம் சமத்துவம் ஜனநாயகத்தன்மை யென்பனவெல்லாம் எம் இஸ்லாத்தில்தான் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றன. இதர மதத்தின ரெல்லாம் மேற்கூறிய விஷயங்களைப் பற்றிப் பிரசங்க மேடைகளிலும் புத்தகங்களிலும் மட்டுமே சொல்லிவருகின்றனரே யொழிய அவர்களுடைய அநுஷ்டானத்தில் சகோதரத்துவம் சமத்துவம் முதலியன ஒன்றும் காணப்படுவதில்லை. இவ்விந்தியநாட்டில் தீண்டாமை முதலிய ஜாதி வேற்றுமையானது இருந்து கொண்டு நம் ஜாதியினரை முன்னேற வொட்டாமல் தடுக்கின்றது என்று இவ்விருபதாவது நூற்றாண்டில் ஜனத்தலைவர்கள் ஓலமிடுகின்றனர். ஆனால் 1300 வருஷங்களுக்கு முன்னேயே எம் இஸ்லாமானது ஜாதி வேற்றுமையை அடியோடு அறுத்துவிட்டு



900 009 160942

இன்றளவும் அநுஷ்டானத்திலும் அவ்வாறே செய்துவருகின்றது. எம்மில் இஸ்லா மென்பது ஒரே ஜாதிதான்.

## பஞ்ச மந்திரங்கள்

(முன் 40-ம் பக்கத் தொடர்ச்சி)

3. அல்லாஹுத் தஆலா தூய்மையானவன்; புகழனைத்தும் அவனுக்கே தகும்; அல்லாஹுத் தஆலாவைத் தவிர வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லை; அல்லாஹ்வே மிகப்பெரியவன்; வன்மை பொருந்திய உயரிய அல்லாஹ்வைக் கொண்டன்றிப் பாபத்தைவிட்டு நீங்கவும் நன்மையைச் செய்யவும் நமக்குச் சக்தியுண்டாக மாட்டாது.

4. அல்லாஹுத் தஆலாவைத் தவிர வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறுயாருமில்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை யாருமில்லை; ராஜ்யாதி பத்தியம் அவனுக்கே தகும்; எல்லாப்புகழும் அவனுக்கே உரித்தாயிருக்கும்; இறந்தோரை உயிர்ப்பிப்பவன்; உயிர்த்தோரை இறப்பிப்பவன்; நலமெல்லாம் அவன் வயமாயிருக்கும்; எல்லாப் பொருள்கள்மீதும் அவன் ஆண்மைபெற்றவனாயிருக்கிறான்.

5. ஆண்டவனே, என் மனதார உனக்கொரு பொருளை இணைவைப்பதைவிட்டு நீங்கும்பொருட்டு நான் உறுதியாக உன்பால் பாதுகாப்பைத் தேடுகின்றேன்; யான் அறியாமல் செய்ததற்குப் பிழை பொறுக்கும்படி உன்னைக் கோருகிறேன்; மெய்யாகவே நீ மறை பொருள்களை நன்கறிந்தவன்; இணைவைப்பதை விட்டும் தவிழ்கின்றேன். இஸ்லாமார்க்கம் (இறைவனுக்குக் கட்டுப்பட்ட மார்க்கம்) அல்லாத ஏனைமார்க்கங்களைவிட்டும் நீங்கிவிட்டேன்; மேலும் நான் இஸ்லாத்தி லாகிவிட்டேன்; அதனால் நான் சொல்லுகிறதாவது: அல்லாஹுத் தஆலாவைத் தவிர வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லை, முஹம்மது நபியவர்கள் (இவர்கட்கு இறைவனருளும் அவன் நன்மாராயமு முண்டாகுக) அல்லாஹ்வின் திருத்தூதராவார்கள், என்பதே.

இஸ்லாமார்க்கத்தின் அநுஷ்டானத்திற்குரிய ஐந்து கடமைகளுள் முதல் கடமை ஷஹாதத்துக் கலிமாவை மனதார அறிந்து வாயாரச் சொல்லுதலாகும். ஷஹாதத்துக் கலிமாவென்பது மேலே சொன்ன இரண்டாவது மந்திரம்; மற்றை நான்கு மந்திரங்களும் இரண்டாவது மந்திரத்தின் விளக்கமா யிருக்கும்.

இஸ்லாத்தின் கடமைகள் ஐந்தாவன: 1 ஷஹாதத்துக் கலிமாவை மனமார அறிந்து வாயாரச் சொல்லுதல், 2 ஐங்காலமும் ஆண்டவனைத் தொழுதல், 3 ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டிய கடமையை 100-க்கு 2½-வீதம் ஸக்காத்துக் கொடுத்தல், 4 வருஷமொருமுறை ரம்லான் மாதத்தில் நோன்பு வைத்தல், 5 ஹஜ்ஜு என்னும் புண்ணிய ஸ்தலயாத்திரை செய்யத் திருமக்கா ஷரீபுக்குப் போதல்; (ஹஜ்ஜு செய்தல் போதிய திரவிய சகாயமும் தேகாரோக்கியமும் உள்ளவர்களுக்குத் தான் கடமை) மு. ச. மு. க.

## நாயகத்தின் சரித்திரச் சுருக்கம்.

“நாயக மான்மியம்” என்னும் விரிவான சரித்திரம் எம்பெருமானாரவர்களைப்பற்றி இனி இப்பத்திரிகையில் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவரும். அப்பொழுது நபிகள் பெருமானாரின் சரித்திர விசேஷங்களெல்லாம் வெகு விசிதமாய் வெளிவரும். இப்பொழுது ஆரம்பமாக அவர்களின் சரித்திரத்தின் முக்கியமான அம்சங்களை மட்டும் தொகுத்து இங்கே எமது நண்பர்களின் நன்மைக்காக எடுத்தெழுதுகிறோம். அடியிற்கண்ட சரித்திரமானது ஸ்ரீமான், மௌலானா, அப்துல்லா அல்மாமூன் அல்ஸுஹ்றவர்தி, எம். ஏ., எம். ஆர். ஏ. எஸ். என்பவரால் எழுதியதை அநுசரித்து எழுதப்பட்டது. ப-ர்.

இவ்வுலகின் அநேக காரியங்களைக் கவனிக்கும்போது இக்காலத்தில் எமது நபிபெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமானது அதிக பக்தி விசுவாசத்துடன் படிக்கவேண்டிய ஒரு சரித்திரமாக அமைந்திருக்கிறது. மேல் நாடுகளில் தற்போது நிகழ்ந்துவரும் கிலாபத் விஷயத்தைக் கவனிக்குங்கால் ஐரோப்பா கண்டத்தில் வல்லாளர்களாயிருப்பவர்கள் எமது இஸ்லாத்தின் உண்மையை உள்ளபடியே உணர்ந்துகொள்ள வேண்டிய அவசியம் நன்குபுலனாகின்றது. இக்காலத்தில் மேல் நாட்டாரும் கீழ் நாட்டாரும் “கிலாபத், கிலாபத்” என்று ஓயாமல் பேசிக்கொண்டேயிருக்கின்றனர்; ஆனால் அவர்களெல்லோரும் எமது நபிபெருமானாரின் பெருமை தங்கிய சரித்திரத்தையும் உள்ளபடியே உணர்ந்துகொள்வார்களாயின் அவர்கள் கிலாபத்தின் பெருமையையும் செவ்வனே உணர்ந்துகொள்ள ஏதுவுண்டாகும். மேலும் கிரிஸ்தவ மதத்தினர் இஸ்லாத்தையே தங்களுடைய பலமான எதிரியென்று கருதுவதாலும் இம்மதத்தை ஸ்தாபித்தவர் மகாகொடியவரென்று அவர்



கள் தப்பெண்ணங்கொண்டிருப்பதாலும் அம்மகானின் சரித்திர உண்மையை எல்லோரும் ஒருங்கே நன்குணரவேண்டியது அவசியமாயிருக்கிறது. இஸ்லா மார்க்கத்தை ஏற்படுத்திய மகான் மகா சௌலப்பிய குணங்களை வகித்திருந்ததேபோல் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இம்மார்க்கமும் மகா இலேசாகவே அமைக்கப்பட்டிருப்பதால்தான் உலகத்திலுள்ள ஏனைமார்க்கங்களைக் காட்டிலும் எமது இஸ்லாமானது புத்திக்குப் பொருத்தமுள்ளதாய் அமைந்திருக்கிறது. இக்காரணத்தால்தான் ஆபிரிக்கா கண்டத்தில் ஆயிரக்கணக்கான மனிதர்கள் எமது தீனுல் இஸ்லாத்தில் இன்றைக்கும் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். இதை யாராலும் தடுக்க முடியவில்லை.

இப்படிப்பட்ட இஸ்லாமார்க்கத்தின் இயல்பை உள்ளபடியே உணர்ந்துகொள்வதற்கு இப்பொழுது எமது திருநபியவர்களின் சரித்திரத்தைச் சுருக்கி ஈண்டு எழுதுவாம். உலகத்திலுள்ள மார்க்கங்களில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தலைவர் இருந்தே அந்த அந்த மார்க்கத்தை ஸ்திரப்படுத்தியிருக்கிறார்கள். வேறு மார்க்கங்களை நிலைநாட்டிய மகான்களின் சரித்திரத்தில் காணப்படக் கூடிய “சரித்திர சந்தேகங்கள்” (historical doubts) எம்பெருமானாரின் ஜீவிய சரிதையிலில்லை. நபிகள் பெருமானார் அவர்களுடைய சரித்திரத்தின் ஒவ்வோர் அம்சமும் மற்றையோரின் சரித்திரங்களைப்போலில்லாமல் அதிநுட்பமாய்க் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின் எம்பெருமானாரின் சரித்திரமானது மகா ஆச்சரியமான ஒருபெருங் காதையாகவே அமைந்திருக்கிறது. மனித கோடிகளுக்கு இவர்களால் அளவிடற்கரிய பெரும் பிரயோசனமெல்லாம் உண்டாயிருக்கின்றன. “யாரிடத்திலிருந்து மண்பனைக்கு மிகப்பெரும் நன்மையுண்டாகின்றதோ அவர்தாம் உங்களுக்குள் சர்வ கிலாக்கியமானவர்,” என்னும் பெருமானார் திருவாக்கியமானது அவர்களுக்கே அதிக பொருத்தமாயிருக்கிறது.

எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவவதாரம் புரிந்த வருஷமாகிய கி. பி. 570-ம் ஆண்டுக்குரிய கிரிஸ்தவ ஆறுவது நூற்றாண்டில் அரபு நாடுமட்டு மல்லாமல் இவ்வுலக முழுதுமே முழுமௌட்டிகத்திலும் அராஜரீகத் தொழிலிலும் அளவிடற்கரிய விக்கிரக ஆராதனையிலும் மூழ்கிக்கிடந்தது. கூடாரங்களிலும் வீடாரங்களிலும் வசித்துக்கொண்டு பாலைவனங்கள் தோறும் திரிந்துவந்த அந்த அரபிகள், நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாத்தின் மூலத்திலிருந்து நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாத்தின் வம்சவழியாய் வந்தவர்களாயிருந்

தும் அவர்கள் நக்ஷத்திரங்களையும் கற்களையும் கட்டை முதலியவற்றால் செய்யப்பட்ட விக்கிரகங்களையும் வணங்குகிறவர்களாயிருந்தார்கள். அக்காலத்திய அரபிகளின் பழக்க வழக்கங்களெல்லாம் மகா அருவருக்கத் தக்கவையாயிருந்தன. கி. பி. ஆறாவது நூற்றாண்டுக்கு 500 வருஷங்களுக்கு முன்னிருந்தே பல எஹூதிகள் (யூதர்கள்) அரபு நாட்டுக்குள் குடியேறியிருந்தனர். கிரிஸ்தவர்களும் பற்பல பகுதிகளில் தங்களுடைய மதத்தைப் போதித்துவந்தனர். அந்த எஹூதிகளும் இந்தக் கிரிஸ்தவர்களும் நூற்றுக்கணக்கான வருஷங்கள் வரையில் அரபுநாட்டில் பாடுபட்டும் அத்தேசத்தின் அநாசாரத்தையும் அன்னாரின் மௌட்டீக விக்கிரக ஆராதனையையும் அவர்களால் ஒழிக்க முடியவில்லை. மேற்கூறிய இரண்டு மதங்களல்லாமல் இன்னும் பல சில்லரை மார்க்கங்களும் ஆங்காங்கு நிலைகொண்டிருந்தன. இப்படிப்பட்ட மார்க்கத் தடுமாற்றத்துக் கிடையில் ஏக தெய்வக்கொள்கையை ஒருவாறு போதித்து வந்த சன்னியாசிகளாகிய ஹனீபுகள் என்னும் சில சாதுக்களும் அந்நாட்டில் காணப்பட்டார்கள். அரபுதேச முழுதும் கேடுகெட்டுக் கிடந்த அக்காலத்தில் இந்த ஹனீபுகள் இருந்ததனாலாவது ஏக தெய்வக்கொள்கை யென்பது சிறிதுசிறிது அங்கங்கே காணப்பட்டது; ஆனால் இந்த ஹனீபுகளாலும் முழு அரபு நாட்டையும் ஒழுங்குசெய்ய முடியவில்லை. ஆதலின் அக்காலத்தில் அரபு தேசமும் இன்னும் இதர தேசங்களும் இருந்த கேவலமான நிலைமையை நோக்கும்போது, அந்த ஆறாவது நூற்றாண்டில் ஒரு தீர்க்க தரிசி அவதரிக்கவேண்டியது அத்தியாவசிய மானதாகக் காணப்பட்டது. தௌராத்திலும் (பைபிள் பழைய ஏற்பாட்டிலும்) இன்ஜீலிலும் (புதிய ஏற்பாட்டிலும்) சொல்லப்பட்ட கடைசித் தீர்க்கதரிசி அரபுதேசத்திலேயே அவதரிக்கவேண்டியது தான் அவசியமென்று எல்லாரும் எதிர் நோக்கிய வண்ணமாகவே காத்திருந்தார்கள். அப்படிப்பட்ட தீர்க்கதரிசிதான் ஒருபுதிய சீர்திருத்தத்தை இவ்வுலகமுழுதும் உண்டுபண்ணத்தக்க பழைய தீனுல்இஸ்லாம் என்னும் தொன்று தொட்ட மார்க்கத்தை நிலைநிறுத்துவாரென்று திடமாக எண்ணினார்கள். அக்காலத்திலிருந்த அக்கிரமங்களையும் அநாசாரங்களையும் ஒழிப்பதற்கு அவர்கள் எதிர்பார்த்திருந்த தீனுல்இஸ்லாத்தை நிலை நாட்டுவதற்கு வேண்டிய தருந்த அவசியம் ஏற்பட்டு விட்டதால் அப்பொழுதே எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவவதாரம் செய்தார்கள்.

எம்பெருமானார் அவர்கள் இவ்வுலகில் அவதாரம் செய்யு



முன்னே அவர்களுடைய தகப்பனாரான அப்துல்லா அவர்கள் காலகதியால் தேகவியோகமாய்ப் போனார்கள்; நபிகள் நாயகம் ஆறுவயதான சிறுகுழந்தையாயிருந்தபோதே அன்னாரின் தாயார் ஆமினா அம்மாளும் இறந்துபோனார்கள். தாயும் தந்தையுமில்லாத எமது திருநபியவர்கள் பிறகு தங்களுடைய சிறிய தகப்பனாராகிய அபூதாலிப் அவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தார்கள். அபூதாலிப் என்பவர் தீனுல் இஸ்லாத்தைப் பகிரங்கமாய் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் தம்முடைய ஜீவதிசை முழுதும் எம்பெருமானாரின் வேலையில் வெகு கரிசனமும் அன்னார்மீது அளவிடற் கரிய அன்பும் பாராட்டி வந்தார்கள். பாலியத்தில் ஆடுகள் மேய்த்துக்கொண்டும் பிறகு அபூதாலிபின் வர்த்தகத்தில் சேர்ந்து பாடுபட்டுக்கொண்டும் யௌவன பருவம்வரையில் ஏழ்மைத்தனத்திலேயே யிருந்து வந்தார்கள். நபிபிரானுக்கு வயது 25 ஆனபோது அபூதாலிபின் சிபாரிசின்மேல் ஒரு பணக்கார விதவையான கதீஜா (ரலி) அவர்களிடம் ஒட்டகம் ஓட்டும் தொழிலில் எம்பெருமானார் அமர்ந்து அம்மாதின் வியாபார சம்மந்தமான கார்வானை ஷாம்(ஸீரியா)தேசத்துக்குக்கொண்டு போனார்கள். நபிகள் பிரான் அந்த வியாபாரத்தில் அடைந்துவந்த லாபத்தைக் கண்டும் அன்னாரின் சாமுத்திரிகா லக்ஷணத்தை நோட்டமிட்டும் அவர்களுக்கு கதீஜா நாயகம் (ரலி) மனப்பூர்வமான மனைவியாக அமர்ந்து விட்டார்கள். இவ்வாறு ஒரு தனிகரான விதவையை விவாகம் செய்துகொண்ட நிமித்தம் நபி பெருமானார் இகத்துக்குரிய தக்க அந்தஸ்தையும் திரவியப் பெருக்கத்தையும் அடைந்தார்கள். ஆனால் அதற்குமேல் அவர்கள் வியாபார விஷயத்தில் தங்களுடைய நாட்டத்தை அதிகம் செலுத்தவில்லை. தீன் (பாரமார்த்திக) விஷயத்தில் தங்களுடைய முழுக்கவனத்தையும் செலுத்த ஆரம்பித்து விட்டதால் அவர்கள் இவ்வுலகுக்குரிய வியாபாரத்தைச் சிறிதும் போற்றவில்லை. "தன்னை யுணர்ந்தவன் தன் தலைவனை யுணர்வான்" என்று அவர்கள் திடமாக எண்ணியிருந்ததனால் இவ்வுலக வியவகாரத்தையே ஒரு பொருளா யெண்ணாமல் பரமார்த்த விஷயத்தில் தங்கள் முழு நோக்கத்தையும் செலுத்திவிட்டார்கள். தங்களுடைய வாழ்நாளில் பெரும்பகுதியைத் தனிமையான ஏகாந்தத்தில் செலவு செய்தார்கள். 40 பிராயம் வரையில் அல்லும் பகலும் மக்கமா நகருக்கருகிலுள்ள ஹிரா என்னும் குகையில் தனித்திருந்து தவம் புரிந்து வந்தார்கள். அல்லும் பகலும் அகோர தவம் புரிந்து வந்ததனால் கடைசியில் ஆண்டவனருளால் தீர்க்க தரிசித்துவத்தை (நுபுவ்வத்தை)ப் பெற்றுக்கொண்டார்கள்.

நபிகள் பெருமானருக்கு முதன் முதல் நுபுவ்வத்து வந்த போது அவர்களுக்குப் பிராயம் நாற்பது. தீர்க்கதரிசிப் பட்டமென்னால், அவர்கள் புராதன தீனுல் இஸ்லாமென்னும் ஏக தெய்வக் கொள்கையை ஸ்திரப்படுத்தி மனிதர்களுடைய அநாசாரங்களையும் அருவருப்பான செய்கைகளையும் போக்கி அவர்களுடைய குருட்டுத் தனமான மூடக்கொள்கைகளையெல்லாம் ஒழித்து விலக்கலை நீக்கி ஏவலை உறுதிப் படுத்துவதாகும். புத்திக்குப் பொருத்தமில்லாத பலதெய்வக் கொள்கையை வேரறுப்பாய் அறுத்து ஏக நாயகக் கொள்கையை நிலை நாட்டவேண்டியது அவர்களுடைய முக்கிய கடமையாயிருந்தது. இன்னும் மனிதர்களுக்குள் ஜாதி வித்தியாசத்தை யொழித்து ஏக சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் என்றென்றும் அழியாதபடி செய்யவேண்டியது அவர்களுடைய பொறுப்பாகவே யிருந்தது. மேலும் ஸ்திரீகளின் நிலைமையையும் அடிமைகளின் கதியையும் உயர்த்த வேண்டியதும் எம்பெருமானின் தொழிலாகவே காணப்பட்டது. அல்லும் பகலும் அருந்தவம் புரிந்துகொண்டும் நீண்டகால நோன்புகளை நெருக்கமாக நோற்றுக் கொண்டும் மலைகளின் இடையிலும் கெபிகளின் வழியிலும் இவ்வுலகத்தின் தத்துவத்தைப் பற்றிச் சதா சிந்தித்துக் கொண்டும் இருந்ததன் பயனாகக் கடைசியில் ஹிரா என்னும் குகைக்குள் ஓரிரவில் எமது அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குத் தேவஒளி கிட்டிற்று. இந்த வைபவம் தான் எமது குர்ஆன் ஷரீபின் 96-வது ஸூறாவில் அதிவிசேஷமாய்ச் சிறப்பித்துச்சொல்லப்படுகிறது. தங்களுக்கு நுபுவ்வத்து வந்த நற் செய்தியை முதன் முதல் தங்களுடைய பாரியாள் கதீஜா (ரலி), நண்பர் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) முதலிய சிலரிடத்தில் மட்டும் சொன்னார்கள். இவர்களெல்லாரும் வேண்டிய மட்டும் தைரியம் ஊட்டியும் எம்பெருமானருக்கு மட்டும் தங்களுடைய நுபுவ்வத்தைப் பற்றிச் சிறிது காலம் போதிய துணிவு உண்டாகாமலே யிருந்து வந்தது. ஆப்த நண்பர்களாகிய சிலர் மட்டும் எம்பெருமானின் நுபுவ்வத்தை மெய்யென்று நம்பி ஈமான் கொண்டார்கள்; ஏனையோரெல்லாம் ஆரம்பத்தில் இவர்களைப் பொய்யரென்றும் பித்தரென்றும் சொல்லித் தூஷித்து வந்தார்கள். பல வருஷங்கள் வரையில் மக்காமா நகரிலுள்ளவர்கள் எமது நபி பெருமானரவர்களைப் பெரிதும் வாதனைசெய்து வந்தனர். அப்போது சகிக்க முடியாத சங்கடங்களை யெல்லாம் சகித்துக்கொண்டு தங்களுக்கு ஆண்டவனால் அனுப்பப்பட்ட கட்டளையை நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமா யிருந்து ஒருசிறிதும் பின்வாங்காம லிருந்தார்.



கள். அபூதாலிப் அவர்கள் ஒருசமயம் எம்பெருமானரைப்பார்த்து, மக்கத்துக் காபிர்கள் செய்துவந்த கொடுமைக்கஞ்சி இஸ்லாமிய பிரசாரம் செய்யும் அவ்வேலையை விட்டு விடும்படி வேண்டினார்கள். "அவர்கள் ஆகாயத்திலுள்ள சூரியனை என் வலதுகையிலும் சந்திரனை என் இடதுகையிலும் கொண்டுவந்து வைத்து நான் ஏற்றுக்கொண்ட வேலையை விட்டு விடும்படி வேண்டினபோதிலும் ஆண்டவன் தன் காரியத்தை வெற்றி பெறச்செய்யும் வரையில் அல்லது அதற்காகப் பாடுபட்டு நான் உயிர் துறக்கும் வரையில் என் பிரசார வேலையைக் கைவிடேன்," என்றுசொல்லி எமது நபிபெருமானார் திரும்பி நின்று கண்ணீர்விட்டார்கள். உடனே அபூதாலிப் அவர்கள், "ஆ, என் தமையனுக்குத்தனய! சாந்தமாயிரு; உனக்கிட்ட கட்டளையை நீ நிறைவேற்று; ஆண்டவன்மீது ஆணையாக நான் ஒரு போதும் உன்னைக் கைவிட மாட்டேன்," என்று தைரியமாக வாக்குறுதி கூறினார். (தொடரும்)

## முதல் மந்திரியாரின்
## புதுவருஷச் செய்தியும்
## முஸ்லிம்களின் கடமையும்

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! அல்லாஹுத்தஆலாவின் கருணைப் பிரகாசமும் கிருபாகடாக்ஷமும் சுகிர்த நன்மாராயமும் உங்களுக்கு உண்டாகுக.

பிரிட்டிஷ் ராஜ்யத்தின் முதல்மந்திரியான மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் அவருடையதும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் இதர மந்திரிகளுடையதுமான (1920) புதுவருஷச் செய்தி அடியில் கண்ட விதமாக அனுப்பப்பட்டிருக்கிறது:—

"கடவுளிடத்தில் காணப்படும் பிதாவின் தன்மையையும் கிறிஸ்து மார்க்கத்தில் நடுநிலை கொண்டிருக்கும் இவ்வுலகத்தின் தெய்வக் கருத்தையும் நன்கு உணர்ந்து கொள்வதில்தான் மனிதர்களுக்கெல்லாம் ஏற்றத் தாழ்வில்லாமலும் விதிமுறைப்படியும் புதிதாய் அமையவேண்டிய வாழ்க்கைக்கு உரிய முடிவான அஸ்திவாரம் காணப்படும். அவ்வாறு உணர்ந்து கொள்ளுதல், ஒவ்வோரிடத்திலும் உள்ள ஒவ்வொரு மனிதரும் தன்தன் சுயேச்சையாய் விரும்பினால் மட்டுமே கிடைக்கக்கூடியதாய் இருப்பதனால், உலக சமாதானத்துக்கு வேண்டிய நிரந்தர அஸ்திவாரத்தை நாட்டுதற்கு வேண்டிய ஒரே நம்பிக்கையாய் இருக்கத்தக்க ஆத்மார்த்தமான ஸௌக்ய சக்திகளின் உண்மையையும் உறுதியையும் கவனிக்க வேண்டு

மென்றே கிறிஸ்துமார்க்கம் நல்லெண்ணத்தை யுடைய மனிதர்களுக்கு விண்ணப்பம் செய்கின்றது."

சிநேக முறைமையாலோ விரோத முறைமையாலோ உலகத்திலுள்ள எல்லா மனிதர்களின் கவனத்தையும் கிரகிக்கத்தக்க அவ்வளவு வாக்குவன்மை யுடையவர்களாகவும் பிரிட்டிஷ் ராஜ்ய முழுதும் செல்லத்தக்க ராஜ்யாதிகாரத்தை வகித்தவர்களாகவும் இருக்கும் மனிதர்களால் மேற்கூறிய நற்செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ராஜ்யத்தின் முஸ்லிம்கள் உட்பட எல்லாமனிதர்களுக்கும் இச்செய்தி சொல்லப்படுகிறது. இவ்வுலக முழுவதையும் தன் தன்னுடைய சித்தாந்தங்களால் தன் தன் வசமாக்கிக் கொள்ளவேண்டுமென்று ஒன்றோடொன்று மன்றாடிவரும் மதங்களுள் முக்கியமான இரண்டுமதங்கள் இஸ்லாமார்க்கமாயும் கிறிஸ்துமார்க்கமாயும் இருக்கின்ற விஷயத்தையும், கடவுளால் அனுப்பப்பட்ட எல்லாமதங்களைவிட முடிவில் இஸ்லாமார்க்கமே ஜயமடையும் என்னும் வாக்குறுதியையும் நாம் கருதும்போது முதல் மந்திரியாரின் நற்செய்தியை முஸ்லிம்கள் மட்டும் அதிக கவனத்தோடு உற்று நோக்கக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்கள்.

உலகின் வெவ்வேறு மூலையிலிருந்து அவரவரின் மனோபாவத்துக்குத்தக்கபடி வெவ்வேறு விதமாய்ப் பதில் அளிப்பார்கள். கிறிஸ்தவக் குடிகளைக்காட்டிலும் கிறிஸ்தவரல்லாத குடிகள் மிகுந்திருக்கும் இந்தியாராஜ்யத்தின் குடிகளின் மதவிஷயத்தில் தலையிடுவதில்லையென்று சொல்லிக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ்ராஜ்யத்தின் கொள்கைக்கு மாறுபாடில்லாமல் முதல்மந்திரியார் தம்முடைய அதிகாரமான உத்தியோகக் கடமைகளுடன் கிறிஸ்துமதப் பரவுதல் சம்மந்தமான விஷயத்தையும் எப்படிச் சேர்த்து வகித்துக்கொள்ளக் கூடுமென்று சிலர் கேள்வி கேட்பார்கள். இப்படிப்பட்ட வாதம் செய்வதால் ஒன்றும் நன்மையுண்டாகமாட்டாது. இன்னும், முதல் மந்திரியாரின் நற்செய்தியை நன்றாய் ஆராய்ச்சிசெய்பவர் ஒருவர் பின்வருமாறு கேள்விகேட்கலாம்: உலகமுழுதும் இன்னும் கஷ்டப்படும்படியான அப்படிப்பட்ட சகிக்கமுடியாத துன்பங்களை யெல்லாம் சென்ற ஐந்துவருஷங்களாகக் கொடுத்துக்கொண்டு மனித கோஷ்டிகளை யெல்லாம் நடுநடுங்கும்படி செய்வதற்குக் காரணபூதமாயிருந்த ஜெர்மன் ஜாதியாரையும் கெய்ஸர் போன்றவரையும் உற்பத்தி செய்ததும், நாகரீக உலக முழுதும் நடுங்கும்படியான கொடுமைகளைப் பரப்பிவரும் "போல்ஷிவிஸம்" போன்ற கொடிய உற்பாதத்தை உண்டுபண்ணினதுமான கிறிஸ்துமதம் தானா "உலக சமாதானத்துக்கு வேண்டிய நிரந்தர அஸ்திவாரத்தை நாட்டுதற்கு வேண்டிய ஒரே நம்பிக்கையா யிருக்கத் தக்கது?" இவ்வாறு வற்புறுத்திச் சொன்ன முதல் மந்திரியாரின் செய்தி நாம் பிரத்தியக்ஷமாய்க் காணும் விஷயங்களுக்கு நேர்மாற்றமாய்க் கண்ணைக்கட்டினதுபோல் காணப்படவில்லையா? ஆனால் இப்படிப்பட்ட வாதம் செய்வதாலும் ஆகும் பிரயோசனம் ஒன்றுமில்லை. இஸ்லாமார்க்கத்துக்கு உண்மையான நன்மையைத் தரத்தக்க வழியில் முதல் மந்திரியாரின் நற்செய்தியை நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும்.



இந்தச் செய்தியின் நோக்கம் என்னவா யிருந்தபோதிலும் உலக முழுதும் கிறிஸ்தவராஜாங்கத்தார் உச்சநிலையை அடைந்திருப்பதன் பயனாக அக்கிறிஸ்து மார்க்கத்தைப் பரவச்செய்வதில் பல வழிகளிலும் மேற்சொன்ன நற்செய்தியானது தக்க உதவிசெய்யுமென்பதில் தடையில்லை. இவ்விஷயத்தில் கிறிஸ்து மதத்துக்கு மட்டுமே இப்படிப்பட்ட சௌகரியம் அமைந்திருக்கிறதென்று எண்ணவேண்டாம். சுயமாகவே ஒவ்வொரு ராஜாங்கத்தாரும் தங்களுக்குக் கீழ்ப்பட்ட குடிகளின்மீது தம்முடைய செல்வாக்கைச் செலுத்துவதுண்டு. "குடிகள் தங்களுடைய அரசர்களின் மார்க்கத்தையே அனுசரிக்க விரும்புகிறார்கள்" என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. ஆதலின் முதல் மந்திரியாரின் இந்தச்செய்தியால் நாம் புதுவிதமான கிலேசம் அடையவேண்டியதில்லை; ஆனால் தூக்கத்திலிருக்கும் நம்மை விழிப்புண்டாக்குவதற்கு இஃதொரு தக்க சாதனமாயிருக்கிறது. நம்முடைய ராஜ்யங்கள் ஒழிந்துபோனவிஷயத்தைக் குறித்து நாம் துக்கப்படவேண்டி யிருக்கிறது; இப்படிப்பட்ட அசந்தர்ப்பங்கள் நேர்ந்தால் ஒவ்வொரு ஜாதியாரும் அழத்தானே வேண்டும்? பல தேசங்களையும் வென்று லௌகிக உலகத்தில் உச்சநிலையை யடைந்த ஒரு ஜாதியார் கடைசியில் தங்களுடைய மதத்தை உலக முழுதும் பரப்பினால்தான் தாங்கள் சுகமாக நிலைத்திருக்க முடியுமென்று கண்டுகொள்ளுகிறார்கள்; ஆனால் முஸ்லிம்களோ தங்களுடைய ராஜ்யங்களையெல்லாம் இழந்துவிட்டபின்னரும் தாங்கள் இவ்வுலகில் உயிருடன் நிலைத்திருப்பதற்கு வேண்டிய உபாயம் என்னவென்று இன்னும் உணர்ந்துகொள்ளவில்லை. மனிதனுடைய ஜீவதாதுவிலிருந்து பலம் உண்டாகிறது; அந்தப் பலத்தின் பெருக்கத்தால்தான் ராஜ்யமும் ராஜாங்கமும் உண்டாகின்றன. மனிதர்களிடத்தில் ஜீவதாது குறைந்துபோம் பக்ஷத்தில் அப்படிப்பட்ட ராஜாங்கம் இருந்தும் யாருக்கு என்ன பயன்?

ஆகவே ராஜாங்கத்தில் நாம் மேன்மையடைய வேண்டுமாயின் இயற்கையாகவே நாம் நம்முடைய இஸ்லா மார்க்கத்தையும்

அதன் உண்மைக்கொள்கைகளையும் நன்றாகப் பரவச்செய்யவேண்டும். இஸ்லாத்தைப் பற்றியும் முஸ்லிம்களைப்பற்றியும் உண்மையான கருத்துக்களை உலகமுழுதும் உணரும்படி செய்வதில்தான் முஸ்லிம்களின் தற்கால ராஜாங்க உயர்வு தங்கியிருக்கிறதென்பது உண்மையல்லவா? இஸ்லா மார்க்கத்தை விட வேறொருமதமும் எதிர் மதத்தினரின் மாறுபாட்டால் அவ்வளவு கஷ்டப்படுவதில்லையென்று நம்தேசத்து அறிந்த நண்பர் ஒருவர் நமக்கு எச்சரிக்கை செய்வதை நோக்கும்போது, இப்போது முதல் மந்திரியாரும் இதர மந்திரிகளும் சேர்ந்து சொன்ன செய்தியால் இஸ்லா மார்க்கத்தைப்பற்றி மிகத் தப்பான அபிப்பிராயம் உலகில் பரவியிருக்கிறதென்பதற்குச் சாக்ஷியம் தோன்றவில்லையா? கிரிஸ்தவப் பாதிரிமார்கள் வேண்டுமென்றே தப்பாகப் புரட்டிச் சொல்வதால்தான் இப்படிப்பட்ட தப்பு அபிப்பிராயங்கள் உலகத்தில் பரவிவிட்டனவென்று சொல்லலாம்; எவ்வாறாயினும் இங்கிலீஷ் ஜாதியாரும் இன்னும் ஐரோப்பாவின் இதரஜாதியார்களும் இஸ்லாத்தைப்பற்றித் தப்பான எண்ணங்கொண்டிருக்கிறார்கள் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றிலும் சில சில மனிதர்களை இஸ்லாத்தில் கொண்டு வருவோமாயின் நம்முடைய ராஜாங்க அந்தஸ்து உச்சநிலையையடையுமன்றோ? இப்படிப்பட்ட முஸ்லிம்கள் நாளடைவில் இஸ்லாத்தைப் பாதுகாப்பவர்களாக அமைந்து தங்கள் தங்கள் தேசங்களில் முஸ்லிம்களின் பாத்தியதைகளைத் தக்கபடி காத்து ரக்ஷிக்கமாட்டார்களா? முஸ்லிம்களுக்கு எப்பொழுதும் துன்பத்தையே விளைத்துக்கொண்டிருக்கும் ஐரோப்பிய ஜாதியாரின் ராஜ்ய தந்திர வலைக்குள் சிக்கிக்கொள்ளாமல் அந்த முஸ்லிம்கள் நமக்கெல்லாம் நன்மைசெய்யமாட்டார்களா? இதர ஜாதியார்களின் ராஜ்ய தந்திரமானது அவர்களுடைய தேசத்தின் நான்கு எல்லைக்குள் மட்டும் கட்டுப்பட்டு இல்லையென்று நாம் நன்றாக உணரவேண்டும்; சாதாரண ஜாதியாரின் நிலைமை இப்படியிருக்கும்போது உலகமுழுதும் பரவிக்கிடக்கும் முஸ்லிம் ஜாதியாரின் ராஜ்ய தந்திரத்தை ஒரு தேசத்தின் எல்லைக்குள் மட்டும் ஒடுங்கிக்கிடக்கும்படி செய்வது எவ்வாறு முடியும்? முஸ்லிம்களின் ராஜாங்க அதிகாரம் வெற்றியடையவேண்டுமாயின் பிரிட்டனிலும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலும் இன்னும் இவைபோன்ற இதர நாடுகளிலும் முஸ்லிம்களின் செல்வாக்கையும் கௌரவத்தையும் அதிகப்படுத்தவேண்டியது அவசியமாயிருக்கிறது; இப்படிச் செய்வதற்குத் தகுந்த ஒரேவழி என்னவெனின், இஸ்லாமார்க்கத்தை நன்றாகப் பரவச்



செய்வதுதான். இன்னும் ஐரோப்பிய ஜாதியார்கள் இஸ்லா மார்க்கத்தில் சேர்ந்து, அம்மார்க்கமானது உண்மையான சமாதான வழியில் கொண்டு சேர்க்கிறதா அல்லது இரத்தக் கொலையையும் சமாதானக் குறைவையும் உண்டுபண்ணுகிறதா என்று அவர்கள் தமக்குத்தாமே அனுபவித்துப் பார்ப்பார்களாயின் அந்த ஜாதியார்கள் முஸ்லிம்களைப்பற்றிக் கொண்டிருக்கும் தப்பு அபிப்பிராயம் ஏதேனும் இருக்கும் பக்ஷத்தில் அப்படிப்பட்ட அபிப்பிராயம் ஒழிவதற்கும் நம் சன்மார்க்கப்பரவுதல் மிக்க பயன்படமாட்டாதா? இவற்றையும் இவைபோன்ற இதர விஷயங்களையும் நன்றாக நிதானித்துப் பார்க்கும் பக்ஷத்தில் முன்னேற்றமடைந்திருக்கும் இதர ஜாதியாருக்கு இடையில் முஸ்லிம் வர்க்கத்தாரும் உயிர்வாழ வேண்டுமாயின் அவ்வாழ்க்கைக்கு எல்லா வழிகளைக் காட்டினும் மிக்க பயன் தரத்தக்கதாகவும் வெற்றிக்குரிய அறிகுறியை உடையதாகவும் இருக்கக்கூடிய மகா முக்கியமான வழியாகமட்டுமல்லால் அதற்குரிய இன்றியமையாத முயற்சியையுடைய சாதனமாகவும் இருப்பது நமது இஸ்லா மார்க்கத்தை உலகமுழுதும் நன்றாகப் பரவச்செய்வது தான் என்று அறிந்துகொள்ளுவீர்கள்.

ஜிஹாது தான் முஸ்லிம்களுடைய முக்கியமான காரியமாக இருக்கிறது என்று நமது குர்ஆன் ஷரீபு கட்டளையிடுவதை உங்களுக்கு மறுபடியும் நான் நினைப்பூட்டுகிறேன். நமக்கு எதிரியாய் யுத்தம் செய்பவர்களுடன் மட்டுமே நாம்வாளாயுதத்தால் "ஜிஹாது" செய்யவேண்டுமென்று தெளிவான கட்டளை ஏற்பட்டிருக்கிறது. "ஜிஹாதை" நாம் விடாமல் நடத்திவர வேண்டுமாயின் நம் முஸ்லிம்களுடன் கத்தியெடுத்துச் சண்டை செய்யும் எதிரிகள் இருந்தேதீரவேண்டுமென்பது அவசியமில்லை; குர்ஆன் ஷரீபில் "ஜிஹாதேகபீர்" என்று சொல்லப்பட்டிருக்கும் "ஜிஹாதை" எப்பொழுதும் நாம் அனுஷ்டானத்தில் வைத்துக்கொள்ளலாம். இதுதான் குர்ஆன் ஷரீபை நாம் கையில் வைத்துக்கொண்டு செய்யவேண்டிய "ஜிஹாது"; இவ்வுலகம் முடியுமட்டும் இப்படிப்பட்ட "ஜிஹாதை" நாம் எப்போதும் ஓய்வில்லாமல் செய்து கொண்டேயிருக்கலாம். இஸ்லாத்துக்கு எதிரிகளின் வாளாயுதத்தால் இடையூறு நேரும்போது மட்டும் அந்த இடையூறுகளை நீக்கும் பொருட்டுக் கத்தியால் "ஜிஹாது" செய்யவேண்டும்; மற்றக்காலத்தில் மனிதரின் மனதைக் கிரகிக்கக் கூடிய இஸ்லாமார்க்க உண்மைகளால் "ஜிஹாதேகபீர்" செய்யவேண்டும்; ராஜ்யாதிகாரத்தை வகித்த ஜாதியார்களெல்லாம் தாங்கள் இனிமேல் செய்யவேண்டியது தங்களின் மதப்பிரசாரந்தான் என்று எண்ணும்போது முஸ்லிம்களும் இப்படிப்பட்ட சன்

மார்க்கப் பரவுதலான "ஜிஹாதேக்பிர்" வேலையில் மிகுதம் தலையிட வேண்டாமா? முஸ்லிம்களின் ராஜ்யங்களும் ராஜ்யாதிகாரமும் ஒழிந்துபோய் விட்டபோதிலும் அதைக்குறித்து நாம் மனவருத்தம் கொண்டு கலங்கவேண்டிய காரணம் ஒரு சிறிதும் இல்லை; ஏனென்னின், இவ்வுலகில் இஸ்லாமிய உண்மைக்கொள்கைகள் நன்றாகப் பரவி மனிதர்களின் மனதைச் சுவாதீனஞ்செய்கிற விஷயத்தையும் முஸ்லிம் ராஜ்யங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் அழிந்து விட்டனவோ அதைக்காட்டிலும் அதிசீக்கிரத்தில் கிரிஸ்து மார்க்கம் நிலை கலங்கி வரும் விஷயத்தையும் நாம் நித்ரிசனமாய்க் காண்கின்றோம். கிரிஸ்தவ ராஜ்யங்கள் தங்களுடைய ராஜ்யாதிகார வரம்பில் தற்போது உச்சநிலையை அடைந்திருந்தபோதிலும் அம்மார்க்கத்தின் கொள்கைகளெல்லாம் அறிவாளிகளின் முன்னிலையில் அடைந்து வரும் பலஹீனத்தை நோக்கும்போது, இவ்வுலக அதிகாரத்தில் மஹா சக்திவாய்ந்த பெரிய ராஜாங்கத்தார்கள் தங்களால் இயன்ற அபார முயற்சிகளை யெல்லாம் செய்தபோதிலும் தங்களுடைய கிரிஸ்து மார்க்கக் கொள்கைகளை நிலை நிற்கும்படி செய்வதற்கு அவர்களால் முடியாமல் போய்விடு மென்றும், இஸ்லாமார்க்கமானது இப்போது பார்வைக்குக் கீழே கிடப்பதுபோல் காணப்படினும் அதி சீக்கிரம் இச்சன்மார்க்கம் தன் சுயப்பிரகாசத்துடன் ஜொலிக்க ஆரம்பித்து விடுமென்றும் நாம் நம்பவேண்டியிருக்கிறது.

இன்று முதல் 30 வருஷங்களுக்கு முன் நம்மைச் சோம்பேறித் தனத்திலிருந்து எழுப்புவதற்கு ஒருவர் தோன்றினர். இவ்வுலகில் இஸ்லாமார்க்கத்தை நன்றாகப் பரவச்செய்வதில் தான் அதன் ஜயம் இருக்கிறதென்னும் இரகசியத்தை அவர் நமக்குக் கற்றுக் கொடுத்தார். அவர் தமக்குரிய ஒருவித இஸ்லாமியதத்துவத்தை நமக்குப் போதிக்கிறார்; இப்போது நாம் செய்து வரும் "ஜிஹாதேகபி"ருக்கு அவருடைய தத்துவம் அதிக பலத்தைக் கொடுத்துவருகிறது: இவ்வேளையில் காணப்படும் அவசியத்தைக் கருதும்போது அவர் சொன்னது தான் இவ்வுலகத்தைத் திருத்துவதற்கு வேண்டிய முக்கியமான மந்திரமாகக் காணப்படுகிறது. உணர்ச்சியற்றிருந்த மனிதர்களுக்கெல்லாம் நல் உயிர் வரும்படி அவர் செய்தார்; ஆதலின் அவரை முஸ்லிம்களின் நன்மையைக் கோரிய உபகாரியென்றே சொல்லலாம். ஆண்டவனால் அனுப்பப்பட்டு அவனுடைய காரியத்தில் உழைக்கும் ஊழியக்காரர்களை இழிவு செய்யும் உலகத்தாரின் ஐதிகப்படி. மேலே சொன்னவரையும் உலகத்தார் அவமதித்து அவரை இஸ்லாத்தின் விரோதியென்று கருதிவிட்டார்கள். ஆயினும் அவர் சொன்னதன் உண்மை இன்ன



தென்பதை நாம் காரியபாகத்தில் நன்றாக உணர்ந்து கொண்டோம்.

எப்பொழுதும் சும்மா இருந்து விடுவதைக் காட்டினும் சிறிது நேரம் சென்ற பின்பேனும் காரியத்தை ஆரம்பிப்பது இலாக்கியமல்லவா? சென்ற 30 ஆண்டில் கைசேதப்பட்டுப்போன நஷ்டத்துக்கு ஈடாக இப்பொழுது நம் முஸ்லிம்கள் உழைக்க முன்வந்து சன்மார்க்கப் பரவுதலான மேன்மையுற்ற இவ்விஷயத்தில் கண்ணுங் கருத்துமாய்ப் பாடுபடலாம்; இப்படிச் சன்மார்க்கப் பரவுதல் செய்வதில் தான் நமக்கு ஈடேற்றம் இருக்கிறது. ஒருவரிடத்திலிருக்கும் உண்மையான உற்சாகத்தைப் பிறருக்குப் பிரயோசனப்படும்படியான வழியில் திருப்பலாம்; அப்படித் திருப்பினால் மட்டுமே அந்த உற்சாகத்துக்கு உண்மையும் உறுதியும் உண்டு.

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! இஸ்லாத்தின் நன்மைக்காகவும் முஸ்லிம்களின் நன்மைக்காகவும் நீங்கள் முன் வந்து நாங்கள் இன்னதென்று அதிக கவனத்துடன் எங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றே உங்களை நான் வேண்டிக் கொள்ளுகிறேன். நாங்கள் செய்து வரும் காரியங்களில் எங்களுக்குக் கிஞ்சித்தேனும் சுயநயம் இருப்பதாய் நீங்கள் கண்டு பிடித்தபோதிலும், எங்களுடன் நீங்களும் சன்மார்க்கப் பரவுதலுக்காக ஒத்துழைக்க முன்வந்து எங்களுடன் நெருங்கிப் பழகினபின் நாங்கள் இஸ்லாமார்க்கத்துக்கே விரோதிகளென்று நீங்கள் எங்களுக்கு எண்பித்த போதிலும் எங்களைப்போன்ற இச்சிறு கூட்டத்தாரை அடியோடே ஒழித்து விடுவது உங்களுக்கொரு பெருங்காரியமாயிராது. ஆனால் இதற்குமாறாக எங்கள் மனமானது இஸ்லாத்தின் ஆவலால் துடித்துக்கொண் டிருப்பதையும் எங்கள் நோக்கமானது இஸ்லாத்தின் நன்மையே யொழிய வேறொன்றும் இல்லை யென்பதையும் நீங்கள் காண்பீர்களாயின், பிறகு அல்லாஹுவுக்காக நீங்கள் எழுந்து முன்வந்து இச்சன்மார்க்கப் பரவுதலான காரியத்தில் உங்களால் இயன்ற உதவியை எங்களுக்குச் செய்வீர்களாக; இச்சன்மார்க்கப் பரவுதல் இல்லாவிடின் முஸ்லிம் உலகத்தார் முன்னேற்றமடைய மார்க்கமில்லை.

இஸ்லாமார்க்கத்தை இவ்வுலகமுழுதும் பரவச் செய்யாவிடின், இவ்வுலகத்தில் உங்களுக்கு மிகப்பெரிய ராஜாங்கம் இருந்தபோதிலும் உங்களுடைய நிலைமையை நீங்கள் காப்பாற்றிக்கொள்ள முடியாது; இன்னும், இக்காலத்தில் உங்களுக்கு ராஜ்யபலமே இவ்வுலகில் இல்லாமல் போனபின் உங்களுடைய சன்மார்க்கப் பரவுதலால் மட்டுமே நீங்கள் பிழைத்திருக்கமுடியும். இந்த வெண்மையான உண்மையை நீங்கள் நன்றாகத்தெரிந்து கொள்வதற்கு இன்னும்

அதிக அபாயமான கெடுதல்களை யெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்களோ?

"எங்கள் இறைவனே! எங்களால் தாங்குவதற்குச் சக்தியில்லாத அவ்வளவு பளுவான சுமையை எங்கள் மேல் சுமத்தாதே; எங்களை மன்னித்து எங்களுக்குப் பாதுகாப்பைக் கொடுத்து எங்கள் மீது கருணை புரிவாய், நீதான் எங்களை ஆதரிப்பவன், ஆதலால் நம்பிக்கையற்ற மனிதர்களுக்கு எதிரில் எங்களுக்கு உதவி புரிவாய்."

பனீ இஸ்ராயீல் கூட்டத்தார் மீது தனக்கும் தன் கூட்டத்தாருக்கும் மேலதிகாரம் உண்டென்று பிர்ஔன் சொன்னவார்த்தையைக் கேட்ட நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களுடைய கூட்டத்தாருக்கு பிர்ஔனை எதிர்க்கும்படியான சக்தியில்லாததைக் கண்டு அவர்களை அல்லாஹுத் தஆலாவின் உதவியை நாடிக்கொண்டு பொறுமையுடன் இருக்கச்சொன்னார்கள்.

ஆகவே ஒருராஜாங்கத்தாரிடத்திலாவது அல்லது ஒருஜாதியாரிடத்திலாவது நாம் யாசகரைப்போல் கையேந்தி நிற்கத் தேவையில்லை. ஏக ஆண்டவனை அல்லாஹ்விடத்தில் நாம் துணைக்காகக் குறையிரந்து அவனிடத்திலேயே நம்பிக்கை வைப்போமாக; அவனைத்தவிர வேறொருவரிடத்தில் நம்பிக்கைவைக்கவும் தேவையில்லை; அவரிடத்தில் துணைகேட்கவும் அவசியமில்லை. ஆயினும், இவ்வுலகில் உண்மையைப் பரப்பவேண்டுமாயின் கஷ்டநிஷ்டூரங்களைப் பொறுமையுடன் சகிக்கவேண்டுமென்று நமது அல்புர்க்கான் கட்டளையிடுவதுபோல் கஷ்டப்பட்ட போதிலும் விடாமுயற்சியைக் கைவிடாமல் நாம் முயன்று வரவேண்டும். இஸ்லாத்தைப் பரப்புவதற்காக அயல் நாடுகளுக்குப் புறப்பட்டுப் போவதுதான் நீங்கள் செய்யக்கூடிய காரியங்களுக்குள் மஹா சிலாக்கியமானதாயும் வீட்டின் பாசத்தைவிட்டு அல்லாஹ்வின் பாதையில் உழைக்கத்தக்க வழியாகவும் காணப்படுகிறது. ஐரோப்பா கண்டத்திலும் அமெரிக்கா கண்டத்திலும் நிறைந்திருக்கும் அதிகார வம்பையும் ஐசுவரியங்களையும் ஒன்றாகத் திரட்டிக் குவித்த போதிலும் கிறிஸ்துமதத்தின் பிற்கால கதியானது பிரகாசமுடையதாயிராதென்பதைச் சந்தேகமறச் சிந்தையில் உணருங்கள். கிறிஸ்து மதத்தின் அழிவானது அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னேயே குர்ஆன் ஷரீபில் அடியில் கண்டபடி குறிப்பிடப் பட்டிருக்கிறது:—

"அருளாளனை அல்லாஹ்வுக்கு ஆண்மகவு உண்டென்று அவர்கள் அழைக்கின்றனரே, அவ்விஷயத்தைக் கேட்டவுடன் வானலோகங்கள் அநேகமாய்ப் பிளக்கக்கடவன, இன்னும் பூலோகமும்



வாய்திறந்து விரியக்கடவது, மேலும் மலைகளும் துண்டு துண்டாய்க் கீழே விழக்கடவன."

ஆனால் முஸ்லிம்கள் இதரராஜாக்களிடம் குடிகளாய் அடங்கிவிட்டபோதிலும் அவர்களுடைய சர்வ சாதாரணமான முயற்சியாலும், இதர மதங்களுக்கெல்லாம் மேலாக இஸ்லாமார்க்கம் வெற்றியடையப்போகிறதென்று ஆண்டவன் இட்ட வாக்குறுதி நிறைவேறப்போவதை எமது சன்மார்க்கம் காணப்போகின்றது.

முஹம்மதலி, எம். ஏ., எல் எல். பி.
27-1-20.

அதிகாரவர்க்கத்திலுள்ள ஆங்கிலேயரும் தங்களுடைய ஏகாதிபத்தியத்தை நிலைக்கச் செய்யவேண்டுமாயின் இவ்வுலக முழுவதையும் கிறிஸ்தவமார்க்கத்தினராகச்செய்துவிட வேண்டுமென்று முயல்கின்றனர். இது ஒருபோதும் முடியக்கூடிய காரியமன்று. ஐரோப்பா கண்டத்தில் கிறிஸ்துமார்க்கம் பேருக்கு மட்டும் இருந்துவருகிறதல்லாமல் அங்குள்ளமனிதர்களிடத்தில் அம்மார்க்கமானது தனது பிடிமானத்தை இப்பொழுது அதிகமாயிழந்து வருகின்றது. கிறிஸ்துமார்க்கத்தின் உறைவிடமென்று சொல்லத்தக்க அந்த ஐரோப்பாவில் லோகாயத மதமே இப்பொழுது நிரந்தரமாய்க்குடிகொண்டுவிட்டது; உண்மை இவ்வாறிருக்கும்போது கிறிஸ்தவர்களென்று தம்மை வெளிப்பேச்சில் மட்டும் சொல்லிக் கொள்பவர் எங்ஙனம் இவ்வுலகமுழுவதையும் அம்மார்க்கத்தில் சேர்க்கப் போகின்றனர்? ஏசுநாதர் உபதேசித்துவிட்டுப் போன உண்மையான மார்க்கம் இப்போது இவ்வுலகில் இல்லையென்றும் பௌல் முதலானவர்களால் பின்னிட்ட காலங்களில் அவரவரின் மனோகற்பனையால் சிருஷ்டிக்கப்பட்டதே இக்காலத்தில் கிறிஸ்து மார்க்கமாய் விளங்கி வருகின்றதென்றும் கிறிஸ்துமத ஆராய்ச்சியால் இந்த இருபதாவது நூற்றாண்டில் நாமெல்லாம் நன்கு தெரிந்து கொள்ளும்படி உண்மை வெளியாய் விட்டது. மேலும் உலகத்தா ரெல்லாரையும் கிறிஸ்து மார்க்கத்தில் சேர்க்க அவர்களுடைய வேதம் இடந்தரவில்லை. ஏசுநாதர் இஸ்ரவேல் கூட்டத்தாருக்கு மட்டுமே அனுப்பப்பட்டாரென்றும் இதர ஜாதியார்களுக்கு அவ்வுண்மையை உபதேசிக்கக்கூடாதென்றும் பைபிள்வேதம் பன்முறையும் முறையிடுகின்றது. பனீ இஸ்ராயீல் கூட்டத்துக்கு மட்டுமே ஈஸா நபி (அலை) அனுப்பப்பட்டிருக்கிறாரென்று எமது குர்ஆன் ஷரீபும் சாதிக்கின்றது. அவர்களுடைய பைபிள் வேதத்துக்கும் எமது குர்ஆன்ஷரீபுக்கும் விரோதமாய்க் கிறிஸ்தவர்கள் எவ்வளவு பாடுபட்ட போதிலும் ஒன்றும் பலிக்கப்போவதில்லை. ஆயினும் அதற்காக நாம் சும்மா இருப்

பது தகாது. தும்பைவிட்டு விட்டுப் பிறகு வாலைப்பிடிப்பது உசிதமாகாது.

குர்ஆன்ஷரீபில் ஆண்டவன் நம்முஸ்லிம்களுக்குப் பன்முறையும் இவ்வுலக முழுவதையும் இஸ்லாத்திலாக்கி விடுவேனென்று வாக்குறுதி கூறியுள்ளான். எம் இஸ்லாம் ஆதி முதல் கிஞ்சித்தும் மாற்றப்படாமல் சுத்த சத்திய சுயம் பிரகாசத்துடன் விளங்கிவருகின்றது. ஐம்பதினாயிரம் வருஷம் சென்ற போதிலும் கடைசியில் ஏகதெய்வக் கொள்கையாகிய இஸ்லாம்தான் உலகத்தை யெல்லாம் வெல்லும் (அல்குர்ஆன்). நமக்கு ஆண்டவனுடைய வாக்குறுதியும் இருக்கின்றது; நமது இஸ்லாமும் மனிதருக்கேற்ற விதமாய் அதிலேசாய் உண்மையானவழியில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் தத்துவங்களை எடுத்துரைப்பதுதான் தாமதம், உடனே அது காட்டுத்தீயைப்போல் மனிதருடைய மனதைக் கவர ஆரம்பிக்கின்றது. இப்பொழுது உலகம் இருந்து வரும் நிலைமையை நோக்கும்போது இஸ்லாமிய பிரசாரம் ஒழுங்காய்ச் செய்வோமாயின் மேல் நாடுகளிலும் மற்றுமுள்ள இடங்களிலும் நம்முடைய தீனுல் இஸ்லாம் மிகவெற்றி யடையும். அதற்கு நம்முடைய முயற்சிதான் வேண்டும். எழுங்கள், எழுங்கள், சன்மார்க்கப் பிரசாரமான இஷாஅத்தே இஸ்லாமென்னும் "ஜிஹாதேகபீர்" செய்ய எழுங்கள்.

"அவர்கள் தங்களுடைய வாயால் ஊதி அல்லாஹுத் தஆலாவின் ஒளியை அணைக்க விரும்புகிறார்கள்; நம்பிக்கை யற்றவர்கள் வெறுப்புடனிருந்த போதிலும் அல்லாஹுத் தஆலா தன் ஒளியைப் பூர்த்தி செய்வதைத் தவிர வேறுவிதம் செய்ய இணங்கான்."

"பல தேவதை வணக்கக்காரர்கள் வெறுப்புடனிருந்த போதிலும் எல்லா மார்க்கங்களைக் காட்டிலும் இச்சன்மார்க்கம்(இஸ்லாம்) சிலாக்கிய மடையும்படி அவன் (அல்லாஹ்) செய்வதற்காகவே வழிகாட்டியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் தன்னுடைய திருத்தூதரை அனுப்பியவன் அவனே" (அல்குர்ஆன் 9:32,33).

த. இ.

## சமாசாரக் கொத்து.

1920வரு நவம்பர்மீ 29உ இரவு கீழ் நாடுகளில் ஒரு முக்கிய பிரதேசமாகிய ஜாவாதீவில் ஸிர்போயா என்னு மிடத்தில் ஆம்பல் என்னும் கீர்த்தி பெற்ற பள்ளிவாயிலில் சுமார் 4000 முஸ்லிம்கள் வரையில் நபிகள் நாயகத்தின் மௌலிது ஷரீபு கொண்டாட்டத்துக்காகக் கூடியிருந்தனர்; அக்கூட்டத்தில் நமது காஜாசாகிபு "காத்



தமன் நபிய்யீன்" என்பதைப்பற்றி, ஓர் அரிய பிரசங்கம் கேட்போர் மனம் களிகூரும்படி செய்தார்கள். முஸ்லிம்களெல்லாரும் குர்ஆன் ஷரீபின் ஆழ்ந்த கருத்தை யெல்லாம் உற்றுநோக்கி உணர வேண்டுமென்று கனம் காஜாசாகிப் வற்புறுத்தினார்; மேலும் ஜாவாதீவிலுள்ள 48 ஆயிரம் கணக்குள்ள பூராஜனத்தொகையும் முஸ்லிம்களாயிருப்பதை நோக்கத் தமக்கு அதிக சந்தோஷமுண்டாவதாகவும் காஜாகமாலுத்தீன் அவர்கள் தெரிவித்தார்கள்.

லண்டனைச் சேர்ந்த வோக்கிங்மிஷன் காரர்கள் அனுப்பியிருந்த இஸ்லாமார்க்க நூல்களைப் படித்துவிட்டு ஆப்பிரிக்கா கண்டத்தின் ஸிர்ராலியோன் என்னும் தேசத்தில் பிரீடவுன் என்னுமிடத்திலிருக்கும் ஒரு கிரிஸ்தவர் ஆமஸ் ஆகஸ்டஸ் ஓ. அப்துல்கனி டிக்ஸன் என்னும் திருநாமத்துடன் தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டாரென்னும் விஷயத்தைக் கேட்க மிகச்சந்தோஷிக்கிறோம்.

1921வரு ஜனவரிமீ 5உயில் வெளியான "டைம்ஸ்" பத்திரிகையில் கீழ்க்கண்ட விஷயம் காணப்படுகிறது: "பிரான்ஸ் தேசத்துக் குடிகளாகிய அநேக முஸ்லிம்கள் அதன் தலை நகராகிய பாரிஸ் டவுனில் குடியிருந்து வருவதால் அவர்களுடைய நன்மைக்காக ஒரு பள்ளிவாயில் கட்டவேண்டியதற் குரிய பிளான்களெல்லாம் வெகு விமரிசையாய் நிறைவேறி வருகின்றன. இவ்வேலைக்காகச்சில காலத்துக்கு முன் பிரஞ்ச் பார்லியமெண்ட்டார் 500000 பிராங்ஸ் (8300 பவுன்) நன் கொடை யளித்திருக்கிறார்கள்; இன்னும் சிறிது காலத்துக்குள் பாரிஸ் நகரவாசிகள் அப்பள்ளிவாயிலுக்காக ஒரு மனையும் கொடுப்பார்கள். நெப்போலியனுடைய கல்லறையின் மண்டபத்துக்கு இணையாயிருக்கும்படி இப்பள்ளி வாயிலும் அதனருகிலேயே கட்டப்படலாம். முஸ்லிம் சிற்பிகளாலேயே இவ்வேலை முடிவு பெறும். அல்ஜீரியா மொராக்கோ தூனிஸ் இப்பகுதிகளிலுள்ள முஸ்லிம்கள் தங்களுடைய வீதமாக டவுன் ஒன்றுக்கு 150000 பிராங்ஸ் (2500 பவுன்) வீதம் இனாமளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பள்ளிவாயிலுக்கு வேண்டிய இமாம் ஏற்கனவே அல்ஜீரியாவிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டிருக்கிறார். பாரிஸ் நகருக்கு வரக்கூடிய சுற்றுப்புற மாணவர்கள் குர்ஆன் ஷரீபு ஓதுவதற்கு வசதியாயிருக்கும்படி பல பாடசாலை அறைகளும் அங்கே கட்டப்படும். கீழ்த்தேசத்துச் சித்திர வேலைகளையும் கைத்தொழில் வேலையையும் காட்டக் கூடிய கண்காட்சிசாலை போன்ற ஒரு பெரிய மஹாலும் நிர்மாணிக்கப்படும்."

சைட் ஹானரபில் லார்டு ஹெட்லி ஸைபுர்ரஹ்மான் அல்பாரூக் அவர்களுக்கும் பார்பாரா பெய்ட்டன் என்னும் சீமாட்டிக்

கும் திருமணம் முடிவுற்ற வைபவத்தைக் கேட்டு யாம் பெரிதும் அகமகிழ்கின்றோம். இந்த லார்டு ஹெட்லி என்பவர் தான் சில வருஷங்களுக்கு முன் கனம் காஜாசாகிபால் தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்தவர். இவர் ஒரு கோடீசுவர வெள்ளையர். இத் தம்பதிகள் நீடூழி வாழ்க.

30-5-21-ல் ஒரு ஹிந்து நண்பர் எமது முஸ்லிம் சங்கமூலமாகத் தீனுல் இஸ்லாத்தைத் தழுவி ஹாரூன் முஸ்தபா என்னும் நாமமும் சூட்டப்பெற்றிருக்கிறார். இவரும் இதற்கு முன் இஸ்லாமான அப்துல்லா என்னும் சிறுவனும் எமது சங்க ஆதரவிலேயே போஷிக்கப் பட்டு வருகிறார்கள் என்று எமது நண்பர்களுக்குத் தெரிவிக்கும் விஷயத்தில் மட்டில்லடங்கா மகிழ்ச்சியெய்துகின்றோம்.

இவ்வருஷம் எமது சங்கத்திற்கு அடியிற்கண்ட கனவான்கள் தங்களுடைய ஜக்காத்துப் பணத்திலிருந்து அடியிற்கண்ட தொகையைச் சன்மானம் செய்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கச் சந்தோஷப்படுகிறோம்: மேலக்காவேரி ஜனாப் உ. சூ. முஹம்மதுகனிராவுத்தரவர்கள் ரூ 50. ஷெய்யூர் ஜனாப் வா. அ. இஸ்மாலசா ராவுத்தரவர்கள் ரூ 50. ஷெய்யூர் ஜனாப் அ. ஷேய்கலி ராவுத்தரவர்கள் ரூ 25. ஷெய்யூர் ஜனாப் ஈ. அ. ஆதம்சா ராவுத்தரவர்கள் ரூ 10. கும்பகோணம் ஜனாப் மு. இ. அ. இஸ்மாயில் சாயப், தாவுத்சாயப் அவர்கள் ரூ 10. மஞ்சட் கொல்லை ஜனாப் சி. முஹம்மதுலெப்பை மரைக்காயரவர்கள் ரூ 10. திருநறையூர் ஜனாப் அ. சி. இஸ்மாலசா ராவுத்தரவர்கள் ரூ 10. துக்கையாச்சி ஜனாப் அ. சே. முஹம்மது அபூபக்கர் ராவுத்தரவர்கள் ரூ 5. நாச்சியார்கோவில் ஜனாப் கா. முஹம்மதுகனி ராவுத்தரவர்கள் ரூ 5.

## வோக்கிங் மதப்பிரசார சபை.

(நேரில் பார்த்தவரது அபிப்பிராயம்.)

இரங்கூனிலிருந்து லண்டன்மா நகருக்குச் சென்று அங்கே பாரிஸ்டர் பட்டப் பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருக்கும் மிஸ்டர், யம். யூஸுபு என்பவர் சென்ற நவம்பர் மாதம் 11-ம் தேதியிட்டு "இரங்கூன் டெய்லி நியூஸ்" பத்திரிகைக்கு எழுதியிருக்கும் வியாசத்தின் சாராம்சம் இதன் கீழ், பின்வருமாறு எழுதப்படுகிறது.

ப-ர்.

ஜனாப் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் மூலமாக வோக்கிங் பிரசார சபைக்குப் பொருளுதவி செய்யாமலிருப்பது மட்டு



மின்றி அவருடன் எவ்வகைச் சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்று வற்புறுத்தும் நோக்கத்துடன் இரங்கூன் வாசிகளான சில முஸ்லிம்கள் நடத்தின ஒரு கூட்டத்தின் நடவடிக்கைகளைப் பற்றிப் பத்திரிகையில் படித்தேன். கண்ணாரக் கண்டவன் என்ற முறையில் நான் இதனடியில் குறிப்பிடும் விஷயங்கள், மேல் நாட்டிலே கனம் காஜா சாஹிபும் அவரது பிரசார சபையும் செய்து வரும் இஸ்லாமிய சேவை எத்தகையதென்பதை நன்கு விளக்கும்.

நான் இங்கு வந்து சேர்ந்தது முதல் பிரதி வெள்ளிக்கிழமையிலும் ஜும்ஆத் தொகைக்குத் தவறாமல் செல்வதோடு லண்டனிலுள்ள பிரார்த்தனை ஆலயத்திலும் வோக்கிங் பள்ளிவாயிலிலும் ஓதப்படும் குத்பாக்களையும் உபதேசிக்கப்படும் பிரசங்கங்களையும் சிரவணம் செய்து வருகிறேன். ஆங்கில நவ முஸ்லிம்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். லண்டன்மா நகரத்தில் எஜ்வியார் ரோட் ஸ்டார்ஸ்ட்ரீட் 4-ம் இலக்கக் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் அசல் அஹ்மதிய்யாப் பிரசார சபையினர் கூட்டிவைத்த இரண்டொரு கூட்டங்களுக்கும் போய் அங்கு நடந்த வைபவங்களையும் மனதாரக் கவனித்திருக்கிறேன். இந்த அஹ்மதிய்யா நடவடிக்கையானது நம் முஸ்லிம்களின் பொதுவான நம்பிக்கைக்கு முரணானதும், நிச்சயமாக காதியானி இயக்கத்தைச் சேர்ந்ததும், கனம் காஜா சாஹிபுடைய வோக்கிங் சபையின் நோக்கத்திற்கும் நடத்தைக்கும் முற்றிலும் வேறுபட்டதும் மாறுபட்டதும், ஆனதென்றும் நான் உறுதியாகக் கூறுவேன். ஆதலின் மேற்கூறிய அசல் அஹ்மதிய்யாக் கூட்டத்தாரோடு எவ்வகைச் சம்பந்தமும் வைத்துக் கொள்ளாமல் விலகிவிட்டேன்.

நான் இரங்கூனில் இருந்த வரையில் வோக்கிங் பிரசார சபையைப் பற்றியும் ஜனாப் காஜா சாஹிபுடைய மார்க்க சேவையைப் பற்றியும் உண்மையான சமாசாரம் எனக்குத் தெரியாமலிருந்தது. ஆதலின் அவரது பேருழியத்தின் பெருமையை அறியாது, அவரைத் தாக்குவதையே சதா தமது தொழிலாகக்கொண்டு அவரது மகத்தான பரித்தியாகங்களையும் பரிசுத்தம் நிறைந்து கைம்மாறு கருதாத அவரது மதத்தொண்டையும் சிறுமைப் படுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து அதையே ஒரு பேரானந்தமாகக் கொண்டு அலைந்து திரிந்த சில முஸ்லிம்கள் கூறின கூற்றைக்கேட்டு நான் தப்பெண்ணத்தில் தாழ்ந்து கிடந்தேன். ஆனால் லண்டன்மா நகரை அடைந்து வோக்கிங் மஸ்ஜிதுக்குச் சென்று அச்சமயம் பேஷ் இமாமாக இருந்த மௌல்வி சதருத்தீன் சாஹிப், பி. ஏ. பி. டி., அவர்கள் புரிந்த மார்க்க உபந்யாசங்களைச் செவியேற்ற

பிறகு நான் அதற்குமுன் அநியாயமாகத்தான் தவறான அபிப்பிராயம்கொண்டிருந்தேனென்று உணர்ந்துகொண்டேன். மௌல்வி சத்ருத்தீன் சாஹிப் அவர்களைப்பற்றி இங்கே இரண்டொரு வார்த்தை சொல்வது பொருத்தமில்லாமற் போகாது என்றெண்ணுகிறேன். கிலாபத்துத் தூதர்கள் இங்கு விஜயம் செய்திருந்த காலையில் தினசரித் தொழுகையான ஐங்காலப் பிரார்த்தனையிலும் ஜும்ஆத் தொழுகைகளிலும் சாதாரணமாக மௌலானா மௌல்வி சையத் சுலைமான் நத்வீ அவர்களையே இமாமாக நிற்கச் செய்து அவர்களைப் பின்தொடர்ந்து மௌல்வி சத்ருத்தீன் சாஹிப் அவர்கள் தொழுது வந்தார்களென்பதிலிருந்து அவரது தாராளக் கொள்கை எளிதில் புலப்படும். இவ்விடத்தில் முதலில் அரபு பாஷையிலும் பிறகு அப்பாஷை அறியாத ஆங்கில முஸ்லிம்களது நன்மைக்காக ஆங்கில பாஷையிலும் வெள்ளிக் கிழமை குத்பா ஓதப் படுகிறது. மௌல்வி சத்ருத்தீன் சாஹிப் அவர்கள் ஓதின குத்பாக்களிலாவது அவர்கள் செய்த வேறு பிரசங்கங்களிலாவது மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியின் கொள்கையைச் சுட்டிக்காட்டவேனும் அல்லது அவரது நாமத்தை உச்சரிக்கவேனும் நான் கேட்டதேயில்லை. தற்சமயம் இமாமாக இருந்து வரும் மௌல்வி முஸ்தபாகான் பி. ஏ., அவர்களுடைய நடவடிக்கையும் அப்படியே இருந்து வருகிறது.

இனி ஆங்கில முஸ்லிம்களைப் பற்றிச் சிறிது கவனிப்போம். எனது சொந்த அனுபவத்தைக்கொண்டு ஒரு விஷயத்தை என்னால் திட்டமாகக் கூறமுடியும். அதாவது ஆங்கில முஸ்லிம்களுள் பெரும்பான்மையோருக்கு மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியுடைய நாமதேயமே தெரியாது. அப்படியாயின் அவருடைய மார்க்கபோதனைகளை அவர்கள் எவ்வளவு தூரம் அறிந்திருப்பார்களென்று நான் சொல்லவும் வேண்டுமோ? பிரிட்டிஷ் முஸ்லிம்களின் ஆண்பாலாரிலும் பெண்பாலாரிலும் அநேகரைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன். மதசம்பந்தப்பட்ட வரையில் ஆங்கில முஸ்லிம்களுடைய நம்பிக்கையானது உலகத்திலுள்ள இதரமுஸ்லிம்களின் நம்பிக்கைக்கு அணுவளவேனும் வித்தியாசப் பட்டதாகக் காணப்படவில்லை. அவர்கள் தங்களுடைய மூதாதையர் முஸ்லிம்களாக இருந்தது பற்றியோ அல்லது தாங்கள் முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தது பற்றியோ இஸ்லாத்தைத் தழுவினவர்களல்லர். ஆனால் உலகத்திலுள்ள சகல மார்க்கங்களின் தத்துவங்களையும் சல்லடைபோட்டுச் சலித்துப் பார்த்து விட்டுக் கடைசியாக இஸ்லாமார்க்கத்தில் உண்மையான ஒளி இருப்பதைக்கண்டு அதைத் தழுவியிருக்கின்றனர். ஆகவே பிரிட்டிஷ் முஸ்லிம்கள் நம்மில் அநேகரைக் காட்டிலும் உண்மை



யான சிறந்த முஸ்லிம்களென்பது யான் சொல்லாமலே விளங்கும். முஸ்லிம்களல்லாத குடும்பங்களில் பிறந்து முஸ்லிம்களிடம் சத்ரு வேஷம்கொண்டு இஸ்லாத்தைத் தாக்குகிறவர்களினிடையே வளர்ந்து வந்தவர்களாயிருந்தும், இன்னும் இஸ்லாத்தின் உண்மைகளை உணர்ந்து அவற்றைப் பின்பற்றுவதற்கு இடையூறான பல சாதனங்களால் சதாசூழப்பெற்றவர்களாயிருந்தும் ஆங்கில முஸ்லிம்கள் இஸ்லாத்தின் போதனைகளையும் தத்துவங்களையும் நம்மைக் காட்டிலும் செம்மையாக உணர்ந்தவர்களாயிருக்கிறார்கள். இந்தியாவிலும் பர்மாவிலுமுள்ள முஸ்லிம்களில் அநேகர் முஸ்லிம்குடும்பங்களில் பிறந்ததனாலாகிய காரணம் பற்றியே முஸ்லிம் பெயர்களை மட்டும் வகித்துக்கொண்டு வெளியில் வேஷதாரிகளாக இருந்து வருகிறார்கள். இங்கிலாந்திலுள்ள ஆங்கில முஸ்லிம் சிறுவர்களில் அநேகர் மிக அழகாகவும் அதிக திருத்தமாகவும் பாங்கு சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். (நம் நாடுகளிலோ பாங்கு சொல்லுவது முஅதீன் தொழிலென்றும் தொழுகை வைப்பது பேஷ் இமாம் கடமையென்றும் பலர் கேவலமாக மதித்திருக்கிறார்கள். ப-ர்). சுருங்கச்சொல்லுமிடத்து ஆங்கில நவ்முஸ்லிம்கள் இந்திய பரம்பரை முஸ்லிம்களைக் காட்டிலும் உள்ளும் புறமும் அதிகமாகச் சீர்திருத்தமடைந்திருக்கும் மெய்யான முஸ்லிம்களென்றே கூறவேண்டும். (தொடரும்)

## ஜிஹாதேகபீர்

நம்பர்—2

### ஸன்மார்க்கப்பரவுதலை மற்றைக்காரியங்களை விட மிகவும் முக்கியமானதென்றும் அவசியமானதென்றும் கொள்ளவேண்டும்

ஆண்டவன் காஜாகமாலுத்தீன் சாஹிபுக்கு எல்லா நன்மையும் நற்பதவியும் கொடுப்பானாக. அவரது பற்றற்ற தனிமையான பிரயத்தனங்களினால் ஸன்மார்க்கப் பரவுதல் விஷயத்தில் அளவற்ற மனக்கிளர்ச்சியான விஷயங்கள் உண்டாய் விட்டன. ஆனால் கல்வியிலும் செல்வத்திலும் மேம்பாடான ஸ்தானத்தை வகித்தவர்கள் ஸன்மார்க்கப் பரவுதலின் பிரயத்தனங்கள் பிரயோசனமற்ற தப்பான காரியமென்று எண்ணினார்கள். ஸன்மார்க்கப் பரவுதல் விஷயமாய் அவர்கள் கொஞ்சமேனும் கவனிக்கவில்லை; அவர்களின் கல்வித்திறமையையும் ஞான பலத்தையும் ஓய்வான காலத்தையும் இப்பெரும் புண்ணியம் வாய்ந்த அவசியமான விஷயத்தில் செலுத்தவு

மில்லை. ஆனால் இப்போது இவ்விஷயத்தில் மிகுந்த மனோரம்மியமான குதூகலம் உண்டாயிருக்கிறது. இப்போது கற்றறிந்த நிபுணர்களும் ஸன்மார்க்க விஷயத்தில் அதிகம் பேணுதலுள்ளவர்களும் ஒரு கூட்டமாக ஸன்மார்க்கப் பரவுதலைச் செய்வதற்கு ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். ஒன்று சேர்வதும் இவ்விஷயம் அவசியமானதென்று ஒப்புக் கொள்வதும் மாத்திரம் போதா; அவை பிரயோசனப்படா. அவசியமென்று ஒப்புக்கொள்வது மாத்திரமல்ல; இவ்விஷயத்தை மற்றெல்லா விஷயங்களைவிட முக்கியமானதென்று ஒப்புக்கொண்டு செயலாலும் சொல்லாலும் அவ்விதமாக நடந்து காண்பித்தாலொழிய யாதொரு பிரயோசனமுமில்லை. இதைத் தவிர இன்னும் அநேக விஷயங்கள் இஸ்லாமானவர்களுக்கு இக்காலத்தில் முக்கியமானதென்று எண்ணக்கூடும். இஸ்லாமிய கூட்டத்தாரின் அநேகங் குறைகளையும் அவற்றின் பரிகாரங்களையும் பற்றி யோசிக்குங்கால் ஸன்மார்க்கப் பரவுதலின் விஷயத்துடன் இஸ்லாத்தின் வாழ்வும் தாழ்வும் சம்மந்தப்பட்டிருக்கின்றன என்பது ஏற்படும். முதலில் இஸ்லாம் பூத்துப்பழுத்து நல்ல நிலைமையில் இருக்கக் கவலைப்படுங்கள். பிறகு அதன் குறைகளைப்பற்றிக் கவனியுங்கள். இஸ்லாத்திற்குச் சம்மந்தமான பலவிஷயங்களைப்பற்றி யோசிக்குங்கால் நாம் செய்யவேண்டிய அவசியமான காரியங்கள் சந்தேகமின்றிப் பலவிதமாய் வேறுபட்டிருக்கின்றன. ஆனால் இக்கூட்டம் (முஸ்லிம்கவும்) உயிருடன் நிலைத்திருப்பதற்கு ஆதாரமான விஷயத்தை மற்றெல்லாவிஷயங்களைவிட மிக முக்கிய மானதென்றும் அவசிய மானதென்றும் திண்ணமாக நிர்ணயிக்க வேண்டும். இஃது எந்த விஷயமென்று மிகவும் ஆழ்ந்த கருத்துடன் ஆராய்வீர்களேல் அது ஸன்மார்க்கத்தை (இஸ்லாத்தை)ப் பரவச்செய்வது தான் என்று கண்டறிவீர்கள்.

எப்பொருளும் ஒரே நிலைமையி லிருப்பதில்லை யென்பது இக்காலத்தில் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமே; எந்த ஒரு வஸ்துவும் ஒரே நிலையில் நிற்கமுடியாது. சிறுசிறு அணுக்கள் முதல் பெரும் பெரும் நட்சத்திரங்கள் வரையில் விநாடிக்கு விநாடி எல்லாம் மாறுபடும் நிலைமையில் இருக்கின்றன. இவ்விதமாறுதலில் தாதுப் பொருள்களும் தாவர வர்க்கங்களும் மனிதப் பிராணியும் ஒன்றாக இருக்கின்றன. இம்மாறுதல் எல்லாம் ஒரு வகைக் காரணமின்றிச் சும்மா நிகழ்வதில்லை. இவ்வித மாறுதல்கள் ஒவ்வொரு வஸ்துவின் உயர்வு தாழ்வுக்குக் காரணமாயும் ஆதாரமாயு மிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமாறுங் குணமானது ஒருவஸ்துவுக்கு மிகவும் மேலான உன்னதப் பதவியைக் கொடுக்குங்



காலத்தில் அதற்குச் சம்மந்தமான அதைப்போன்ற மற்றொரு வஸ்துவை இகழ்ச்சியான தாழ்மைபொருந்திய பாதாளத்தில் கொண்டு சேர்க்கிறது. "எங்கள் இறைவனே இதை (இந்தச் சிருஷ்டியை) நீ விருதாவாகப் படைக்கவில்லை; நீ சுத்தமானவன்; ஆதலால் எங்களை நரகத்தினின்றுங் காப்பாற்று," என்பது ஒரு சிறந்த வாக்கியம். ஒவ்வொரு வஸ்துவும் தன் நிலைமையில் நில்லாமல் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களெல்லாம் மாறுதல் அடைகின்றனவென்றால் எல்லாச் சிருஷ்டிப் பொருள்களையும் உள்ளடக்கிய இம்மானிடவர்க்கம் எவ்விதம் இம்மாறுதலினின்றும் தப்பித்கொள்ளக்கூடும்? முன்னேற்றத்திற்காக எக்கூட்டத்தார் எத்தனிக்கவில்லையோ அக்கூட்டத்தார் அவசியமாகப் பின்னிடைய வேண்டியதாகத்தான் நேரிடும். இவ்விஷயத்தை ஒரு கூட்டத்தார் தெரிந்துகொண்டாலும் சரியே, தெரிந்துகொள்ளாவிட்டாலும் சரியே ஆண்டவனின் சட்டம்மட்டும் (Divine Law) நிறைவேறியே நிற்கும். சிருஷ்டிப்பொருள்களிலுள்ள மாறுதல்களைப்பற்றி ஆழ்ந்து யோசித்தால் ஒவ்வொரு வஸ்துவும் மற்றொன்றின்மேல் ஜயங்கொள்ள அல்லது மேன்மையடைய (அதாவது மற்றொன்றைப் பட்சித்துவிட)ப் பிரயத்தனப்படுகிறது. ஒவ்வொரு சிருஷ்டிப் பொருளும் மற்றொன்றைப் பட்சித்து அதன் ஹஸ்தியை நாசஞ்செய்து தான் முன்னேற முயலுகின்றது. சாஸ்திர ஆராய்ச்சியில், ஒரு வஸ்து விருத்தியடைய வேண்டுமாயின் அது சதாகாலமும் வேறொரு வஸ்துவுடன் சண்டைசெய்யவேண்டியது அவசியமென்று ஏற்படுகிறது; வேறொருசக்தியுடன் எதிர்க்கவேண்டியுமிருக்கிறது. சமுத்திரத்திலுள்ள பெரியமீன்கள் சிறுமீன்களைப் பட்சித்துவிடுவது மாத்திரமல்ல; ஒவ்வொரு வஸ்துவும் தனக்குக் குறைவான சக்தியுள்ள மற்றொருவஸ்துவை ஆகாரமாக்கிக்கொள்வதை உங்கள் பிரதிதின அனுபவத்திலும் பார்க்கிறீர்கள். "நிலைத்திருக்க மன்றாடும் சண்டையில்" (Struggle for existence) எந்தவஸ்து மிகவும் மேன்மையான பராக்கிரம சக்தியை யுடையதாயிருக்கிறதோ அதுதான் நிலைத்திருக்கத் தக்கது, தகுதி வாய்ந்தது என்று அறிவீர்கள்; அதுதான் நிலைத்திருக்கவும் கூடும்; அதுதான் மற்றவஸ்துக்களின்மேல் ஜயமடையும்; அதுதான் மற்றவஸ்துக்களைத் தனக்குக் கீழ்ப்படுத்திக் தனக்கு அனுகூலமும் பிரயோஜனமும் உண்டாகும்படி உபயோகித்துக் கொள்ளும். ஒரு வஸ்து மற்றொன்றை ஜயித்து அதைத் தனக்கு ஆகாரமாக்கிக்கொள்ளுகிறதென்ற உண்மையை விசாரணையினால் வெளிப்படுத்திய சாஸ்திரத் (Science) திற்கு இக்காலத்தில் கீர்த்தி

யுண்டாயிருக்கிறது. ஆனால் இஸ்லாமார்க்கத்தில், "இதைக் கொண்டு (குர் ஆனைக்கொண்டு) அவர்களுடன் (காபிர்களுடன்) பெரும் போராகச் சமர்புரிவீராக," என்றும், "மனிதனுக்கு அவன் முயற்சித்ததேயன்றிப் பிறிதொன்றுமில்லை," என்றும் வரும் திருவாக்கியங்களினால் இவ்வறிவைப் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னேயே நம் நாயகம் திருவேதத்தின் மூலமாய்க் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த (ஜிஹாத்) சண்டையின் உண்மையைக் கண்டறியாமலும் இச்சண்டையின்றியும் மானிடவர்க்கம் உயிருடன் நிலைத்திருக்க முடியாது. இவ்வுண்மை இன்னதென்பதை அறியாமல் கண்ட கண்டவிதம் அருத்தங்கொண்டு உண்மையான தாத்பரியத்தைக் கெடுத்து உயிர் வாழ்க்கைக்கு மிகவும் ஆதாரமாகவும் அவசியமாகவுமிருக்கும் இந் நேர்பாதையினின்றும் விலகி அநேகர் அலைகிறார்கள். இஸ்லாமானவர்கள் நன்கறிய வேண்டிய விஷயமென்னவெனின், இஸ்லாத்தின் (ஸன்மார்க்கத்தின்) பிராணனை உலகின்கண் நிலைக்கச் செய்யும் எண்ணங்கொண்டவர்களாக அவர்களிருந்தால் அவர்களும் மேலே சொன்ன திருவாக்கின்படி தங்களின் தற்கால நடையை மாற்ற வேண்டும் என்பதே. இஸ்லாத்தை எவ்விதம் பாதுகாக்கமுடியுமென்னும் கேள்வியுடன் ஸன்மார்க்கப்பரவுதலின் கேள்வியும் சம்மந்தப்பட்டிருக்கிறது. நன்றாய் ஆழ்ந்து ஆராச்சி செய்வீர்களாயின் எதுவரையிலும் இஸ்லாமானவர் ஸன்மார்க்கப் பரவுதலை (இஷா அத்தே இஸ்லாத்தை)த் தங்களின் முக்கியத்தொழிலென்று விசேஷமான காரியமென்றும் அறிந்து அதையே கண்ணுங் கருத்துமாய்க் கொண்டு அதைப் பரவுதல்செய்வதில் பாடுபட்டு வந்தார்களோ அதுவரையிலும் இஸ்லாம் ஒரு பலமுள்ள கோட்டையைப்போல் இருந்தது என்று அறிவீர்கள். அதுபரியந்தம் அதைத் தாக்கவாவது அல்லது அதை எதிர்க்கவாவது யாவரும் துணிவற்றவர்களாயிருந்தார்கள். ஆனால் ஸன்மார்க்கப் பரவுதலினின்றும் அசட்டையும் பராமுகமுமாய் இஸ்லாத்தைக் காப்பாற்றும் எண்ணம் இஸ்லாமானவர்களின் மனத்தினின்றும் அகன்றவுடன் அவ்வசட்டை அல்லது பராமுகத்தின் பயன் உடனே வெளியாகாவிட்டாலும் கொஞ்சந் தாமதத்துடன் வெளியாகிவிட்டது. நாம் முன் சொன்னது போல் ஸன்மார்க்கப் பரவுதலானது இக்காலத்தில் நாம் முழு மௌனம் சாதித்திருக்கக்கூடாத காரியமாயிருக்கிறது. நீங்கள் முன்னேற்ற மடைவதினின்றும் விலகிவிடவேண்டுமென்பது என் எண்ணமல்ல. நீங்கள் உங்களுக்கிருந்த முற்பதவியிலேயே இருக்கிறதாக எண்ணுகிறீர்கள்; (இன்னும் வரும்)

17 AUG 1921


-517 முபஸ்ஸிஷன்.

# தத்துவ இஸ்லாம்

## ISLAM AS IT IS.

وَلْتَكُنْ مِنْكُمْ أُمَّةٌ يَدْعُونَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ

கமலம் - 3. | 1921வரு ஆகஸ்ட்மீ | இதழ் - 4.


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

நஹ்மதுஹூ வனுஸல்லிஅலா ரஸூலிஹில் கரீம்.

### இப்பொழுது யாம்செய்யவேண்டுவதென்ன?

இப்பூவுலகில் இந்த இருபதாவது நூற்றாண்டில் கண்ணெடுத்துப் பார்த்த இடத்திலெல்லாம் மேல்நாட்டுக் கல்வியும் மேல்நாட்டு நாகரீகமுமே தழைத்தோங்கி வருவதை நாம் கண்கூடாகப்பார்க்கின்றோம். மேல்நாட்டாரின் அறிவுநூல் சாஸ்திரத்தின் (ஸயன்ஸின்) அளவிடற்கரிய மிகப்பெரும் வெற்றியால் மனிதகோடிக்குண்டாயிருக்கும் அநேக விதமான நன்மைகளை யெல்லாம் நாம் போற்றாமலிருக்க முடியவில்லை. பௌதிக சாஸ்திரத்திலும் பௌமிய சாஸ்திரத்திலும் ரசாயன சாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் வைத்திய சாஸ்திரத்திலும் இன்னும் இவைபோன்ற எண்ணிறந்த சாஸ்திரங்களிலும் அம்மேல்நாட்டு வாசிகள் மிகவும் மேன்மைபெற்றிருப்பது மெச்சத்தக்க விஷயமே. மேல்நோக்காய்ப் பார்ப்பவருக்கு இவையனைத்தும் ஓர் ஆச்சரியமான காரியமாகவே புலப்படும்; ஆனால் சிறிது ஆழ்ந்து நோக்குவோமாயின் மேற்கூறிய ஸயன்ஸின் வெற்றிகளுக்கிடையில் மிகவும் வருந்தத்தக்க ஓர் அபாயகரமான செய்தியும் மறைந்து கிடப்பதை நாம் செவ்வனே உணர்ந்து கொள்வோம்; எவ்வளவுக் கெவ்வளவு அவர்களுடைய ஸயன்ஸ் ஞானமானது முதிர்ச்சி யடைந்து வருகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய மனதில் தெய்வபக்தியானது

குறைவு பட்டு லோகாயத (Materialism) மதத்துக்குரிய நாஸ்திகக் கொள்கையானது விருத்தியடைந்து வருகின்றது. மற்ற விஷயங்களில் எவ்வளவு உன்னதமடைந்த போதிலும் மார்க்கவிஷயத்தில் மட்டும் மேல் நாட்டார் நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டு வருகின்றனர். தாங்களெல்லாரும் கிரிஸ்து மதத்தைச் சார்ந்தவரென்று மட்டும் வீண்பெருமை பாராட்டுகின்றனரல்லாமல் கோவில்களுக்கு விஜயம் செய்பவரின் தொகையானது ஒவ்வோர் ஆலயத்திலும் மிகப்பரிதாபகரமான நிலைமையிலிருந்து வருகின்றது. சுருங்கச் சொல்லுமிடத்து மேல்நாடு முழுதுமே லோகாயத நாஸ்திகத்தில் மூழ்கிக் கிடக்கின்றது. இந்த லோகாயதக் கொள்கையானது மேல்நாட்டாரை யெல்லாம் தன் வலையில் சிக்கவைத்துவிட்டதோடு நில்லாது கீழ்நாடுகளிலும் அவ்வலையை விசிற ஆரம்பித்துவிட்டது. இவ்வுலகில் நடை பெறும் நிகழ்ச்சிகளெல்லாம் தாமாகவே நிகழ்கின்றனவென்றும், இவற்றையெல்லாம் நடத்திவைப்பதற்கு ஓர் தலைவன் இருப்பானாயின் அவன் எங்கேயிருக்கிறானென்றும் இக்காலத்தில் பலர் கேட்கத் தலைப்பட்டுவிட்டனர். மேல்நாட்டுக்கல்வியும் நாகரீகமும் புகுமிடங்களிலெல்லாம் தெய்வபக்தியானது பொதுவாகக் குறையத் தலைப்படுகின்றது என்று அநேகமனிதர்கள் சொல்லி வருகின்றனர்; இஃதுண்மைதானோவென்று நாம் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும். அவரவரும் அனுஷ்டித்துவரும் மார்க்கமானது ஆண்டவனால் அனுக்கிரகிக்கப்பட்ட தெய்விக மதமாயிருந்து, தர்க்கமுறைப்படி புத்திக்கும் யுக்திக்கும் பொருத்தமாயும் எல்லாமனிதர்களாலும் எக்காலத்திலும் எளிதில் அனுஷ்டிக்கும் படியான தன்மையுள்ளதாயும் இருக்கும் பக்ஷத்தில் அப்படிப்பட்ட மார்க்கத்துக்கு மேல்நாட்டுக் கல்வியால் ஒன்றும் தோஷமுண்டாகமாட்டாது; ஆனால் அக்கல்வியால் தெய்வபக்தியானது மிகுதிப்படவேதுவுண்டு. அவ்வாறின்றி ஒரு மதமானது பண்டைக்காலத்திலிருந்த பலகுருமார்களால் தங்களுடைய சொந்த அனுபவத்தையும் யுக்தியையுமட்டுங் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில், அது ஸயன்ஸுக்குப் பொருத்தமில்லாமலும் இவ்வுலகத்திலுள்ள எல்லா மனிதராலும் எல்லாக்காலத்திலும் அனுஷ்டிப்பதற்கு முடியாமலும் அமைக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில் நிச்சயமாகக் கல்வியின் அபிவிருத்தியானது அப்படிப்பட்ட மதத்துக்கு நமனாகத்தான் காணப்படும்; மனிதர்களுடைய ஞானமானது சூன்யத்திலிருக்குமட்டும் அப்படிப்பட்ட மார்க்கமானது தழைத்தோங்கி வருவது போல் காணப்படும்; ஆனால் எந்த நிமிஷத்தில் மனிதர்களின் அகக்கண்ணானது



கல்வியின் அறிவால் திறக்க ஆரம்பிக்கின்றதோ அந்த நிமிஷமுதலே அம்மார்க்கத்தில் சேர்ந்தவர்கள் தங்களுடைய தெய்வபக்தியை இழக்கத் தலைப்படுகின்றனர். பிறகு காலஞ் செல்லச் செல்ல அம்மார்க்கமும் அடியோடு க்ஷீணித்துப்போகின்றது. ஸயன்ஸ் ஞானமானது மன்பதைக்கு அதிக க்ஷேமத்தை உண்டுபண்ணும் போது அப்படிப்பட்ட அறிவைக் கண்டவுடன் தானே உருகி ஒன்றுமில்லாமல் க்ஷீணித்துப் போகத்தக்க மார்க்கத்தைத் தெய்விகமதமென்று யார்தான் சொல்லத்துணிவர்? கல்வியறிவானது கற்றோரின் ஞானத்தை அதிகப்படுத்தும்போது அது மனிதரின் மதப்பற்றைமட்டும் (அது சரியான மதமாயிருக்குமாயின்) ஏன் குறைக்கவேண்டும்? மனிதரின் அறிவை விருத்திசெய்து அவர்களுடைய க்ஷேமத்தையும் அதிகப்படுத்துவதால் தான் ஸயன்ஸ் ஞானத்தை அவர்கள் அதிகமாக விரும்புகின்றனர். 'நிருவாணதேசத்தில் கோவணங்கட்டினவன் பயித்தியக்காரன்' என்னும் பழமொழியானது இவ்வுலகில் நித்தியமாய் வழங்கிவந்தபோதிலும் இக்காலத்திலிருக்கும் பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் அறிவுநூல்களை அதிகமாய்க்கற்றுத் தன்ஞானத்தை அளவில்லாமல் விருத்திசெய்ய ஆசைகொள்ளுகிறான். அஞ்ஞானமானது ஆத்மாவையும் அதன் சம்மந்தமாய் மனிதனுடைய மனதையும் தேகத்தையும் வளர வொட்டாமல் தடுத்து அறிவின் குறுக்கே அணைபோட்டு அதற்கப்பாலுள்ள ஞானத்தின் மீதும் கார்மேகம் சூழ்ந்தது போல் தன் பேரிருளை வருஷித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஞானமானது நடுப்பகலிலுள்ள சூரியனைப்போல் மூலை முடுக்கிலெல்லாம் தன் கிரணத்தைப் புகுதச் செய்து இவ்வுலகத்தில் காணப்படும் இயற்கையின் இரகசியத்தை யெல்லாம் இனியில்லாவண்ணம் வெளிப்படுத்தி மனிதரின் புறக்கண்ணையும் அகக்கண்ணையும் செவ்வனே விசாலிக்கச் செய்கின்றது. சாந்தியும் சமாதானமும் நிறைந்திருக்கக்கூடிய சர்வஞான சாஸ்திரத்தின் முகட்டுக்கு மேல் மனிதன் ஏறிச் சென்று அங்கே அல்லாஹுத்தஆலாவின் அபாரமான பேரானந்தத்தை அநுபவிக்கவேண்டுமாயின் அவன் ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கும் அறிவுநூல்களின் நுண்ணிய இரகசியங்களை யெல்லாம் நன்குணர வேண்டும். இப்படிப்பட்ட அறிஞர்களின்முன் ஆண்டவனால் அருளப்பட்ட ஆத்மசாஸ்திரத்தை விளக்கிக் காட்டுவோமாயின் காந்தம் இரும்புத்துண்டைக்கவர்வதேபோல் அவ்வறிஞர்கள் ஆண்டவனுடைய சன்மார்க்கத்தைப்பற்றிப் பிடிப்பார்கள். ஆண்டவனுடைய ஸயன்ஸுக்கும் மனிதனுடைய யுக்திக்கும் பொருந்தாமல் மனிதர்களால்

அமைக்கப்பட்டிருக்கும் மார்க்கந்தான் அறிவுநூல் சாஸ்திரிகளுக்கு மிக்க அருவருப்பாய்க் காணப்படும். அதனால்தான் அந்த அறிஞர்கள் தங்களுடைய மதத்தில் பற்றில்லாதவராயும் தெய்வபக்தியில் மிகக்குறைந்தவராயும் நாளுக்குநாள் க்ஷீணித்துக் கொண்டே போகின்றனர். இதனால்தான் தெய்வத்தால் அனுக்கிரகிக்கப்படாத மதத்தை யுடைய பலர் ஸயன்ஸென்னும் பெயரைக் கேட்டவுடனேயே நடுநடுங்குகின்றனர். ஸயன்ஸ் ஞானத்துக்கு நேர் விரோதமான மார்க்கமானது ஆத்ம ஞானத்துக்குப் பொருந்தியதாயிராது; ஆதலின் அறிவுநூல்களைக் கண்டஞ்சுவோரின் மதமானது மனிதகோடிக்கு ஒரு தக்க வழிகாட்டியாயிருப்பது முடியாது; இப்படிப்பட்ட ஒருமார்க்கமானது இவ்வுலகத்தைவிட்டு ஒழியுமாயின் அது ஆண்டவனால் மனிதர்களுக்குச் செய்யப்பட்ட ஓர் அனுக்கிரகமென்றே கருதவேண்டும். கல்வியறிவைக்கண்டு அதிகம் பயப்படக்கூடிய ஒரு மார்க்கமானது எவ்வாறு மனிதர்களுக்கு நல்வழி காட்டக் கூடும்? காட்டுத் தீயானது பல்வகைப் பட்டமரங்களையும் பஸ்பமாக்குவதே போல் கல்வியறிவானது அப்படிப்பட்டமார்க்கத்தை அதிசீக்கிரத்தில் அழித்துவிடும். அம்மதம் அவ்வாறு அழியும் போது ஆண்டவனால் அனுப்பப்பட்ட பகுத்தறிவானது குற்றங்குறையுள்ள ஒரு மார்க்கத்தை நம்முடைய நன்மைக்காகவே ஒழித்து விட்டதென்று நாம் சமாதானம் செய்து கொள்ள வேண்டும்.

மேல் நாடுகளில் தற்போது கிரிஸ்து மதமானது சிறுகச்சிறுக க்ஷீணத்துக் கொண்டே வருகின்றதென்று சொல்வோமாயின் அது ஒருபோதும் மிகையாக மாட்டாது. கிரிஸ்தவ உலகத்தில் நாம் தற்போது இருவகைப் பிளவுபட்ட மனிதர்களைக் காண்கின்றோம்: "நம்புகிறவர்" களென்றும் போடு போக்கா யிருப்பவர்களென்றும் அவர்களைப் பிரித்துச் சொல்லலாம். "நம்புகிறவர்கள்" மிகச் சிறுபான்மையினராயிருக்கின்றனர். இவர்கள் ரோமன்கதோலிக் மார்க்கத்தையும் வைதிகமுள்ள கிரீக்சர்ச் மார்க்கத்தையும் இன்னும் பிராட்டெஸ்டண்ட் மார்க்கத்தின் 490 பிரிவுகளையும் தழுவினவர்களாயிருக்கின்றனர். ரோமன் கதோலிக் மார்க்கமானது சில மனிதர்களைத் தவிர மற்றெல்லாரையும் தன் கொள்கையினின்றும் இழந்து விட்டது; கிரீக்சர்ச் மார்க்கமானது சில நாடுகளில் தேசிய மதமாக மட்டுமே பேருக்கு இருந்து வருகிறது; ஆனால் பிராட்டெஸ்டண்ட் மார்க்கத்தின் 490 பிரிவுகளின் "நம்பிக்கை யுள்ளவர்"களோ இவ்வுலகில் தம் தம்முடைய உயிருக்கு மன்றாடி வருகின்றனர். உண்மையாகவே மேல் நாடுகளிலுள்ள மனிதர்களெல்லாரும்



லோகாயத மதத்தில் முழுகிப்போய்த் தம்முடைய கிரிஸ்து மார்க்கத்தில் பற்றற்றவர்களாகவே காலங் கழித்து வருகின்றனர். ஆனால் மேல் நாடுகளிலுள்ளவர்களின் ஜனத்தொகையைப் பற்றிக்கூறும் புத்தகங்களில் அவர்களெல்லாரும் கிரிஸ்தவர்களென்றே கூறிவிடுகின்றனர்; அப்படிப்பட்ட புள்ளி விவரமானது அதிகமாக மிகுதப்படுத்திப் புளுகப்பட்ட புள்ளிகளென்றே நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு தேசத்தில் ராஜாங்க மதமானது கிரிஸ்துமதமாயிருக்கும்பக்ஷத்தில் அந்நாட்டிலுள்ள எல்லாரையும், அவர்கள் அம்மதத்தை அனுஷ்டிப்பவர்களாயிருந்தாலும் அப்படி இல்லாவிட்டாலும், எல்லோரையும் கிரிஸ்தவர்களென்றே கணக்கிடுவது அத்தேசத்தார்களின் வழக்கமாயிருந்து வருகிறது. இப்படிப்பட்ட கிரிஸ்தவர்களில் ஆயிரக்கணக்கான மனிதர்கள் உண்மையாகவே ஒரு மதத்தையும் தழுவாமலே இருந்து வருகின்றனர். பேருக்கு மட்டுந்தான் கிரிஸ்தவரென்று தம்மைச் சொல்லிக் கொள்ளுகின்றனர்; மார்க்க விஷயத்தில் மகா அலக்ஷியமானவர்களென்றே நாம் இவர்களை யெல்லாம் சொல்லவேண்டும். மேல் நாட்டுக் கிரிஸ்தவரில் பெரும் பான்மையோர் ஒருபோதும் தங்கள் தேவாலயத்துக்குள் நுழைந்து பூஜை செய்வதே கிடையாது. விவாஹ முகூர்த்த காலத்திலும் மறு உலகம் சென்றோரின் மரணத்துக்குப் பின்னுள்ள பிரேத அடக்க காலத்திலும் மட்டுமே அன்னோர் ஆலயம் செல்வதுண்டு; அவ்வளவுதான் அவர்களுடைய தெய்வ பக்தி. அவர்களிடத்திற் சென்று அவர்களுடைய கொள்கை என்னவென்றும் அவர்களுடைய நம்பிக்கை எது வென்றும் கிரிஸ்து மார்க்கத்தின் உள்வயணங்கள் என்ன என்ன வென்றும் கேட்கப்புகுவோமாயின் அவர்கள் தங்களுடைய மார்க்க உண்மைகளை உணராதவர்களாயும் அவற்றை உணர்ந்து கொள்ள வேண்டுமென்னும் விருப்பமில்லாதவர்களாயும் இருப்பதைக் காண்பீர்கள்.

மேல் நாடுகளில் தற்போது இருந்துவரும் நிலைமையானது இவ்வாறிருக்கிறது. இச்சமயம் யாம் கீழ் நாட்டுவாசிகளுக்கு அறிவிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு: மேல் நாட்டார் லோகாயதமதத்தில் தலைகீழாக மூழ்கிக் கிடப்பதால் அவர்களுடைய அடிச்சுவடுகளை நாம் பின்பற்றுவோமாயின் நாமும் நமது தெய்வத்தினிடத்தில் பக்தி குன்றி நாஸ்திகராகவே மாறிவிட நேரும். மேல் நாட்டுக்கல்வியில் ஒன்றும் தோஷமில்லை; ஆனால் அவர்களுடைய நடை உடை பாவனைகளைப் பின்பற்றுவதால் தான் கீழ் நாட்டு மாணவர் பலர் கெட்டுப்போகின்றனர். கீழ் நாட்டு வாசிகளில் முக்கியமாக நமது முஸ்லிம் சகோதரர்கள் முத

ன்மையாகக் கவனிக்க வேண்டிய விஷய மொன்றுண்டு: எல்லா நபிமார்களுக்கும் இறுதியில் அவதரித்தவரும் ஆனால் அவர்களெல்லாரைக் காட்டினும் மிகப்பெரிய மகிமை வாய்ந்த வருமான காத்தமன் நபிய்யின் ஹபீபுரப்பில் ஆலமீன் அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் திருவாயின் வழியே அல்லாஹுத் தஆலாவால் 1300 வருஷங்களுக்கு முன் வெளியாக்கித்தரப்பட்ட சத்திய சன்மார்க்கவேதமாகிய புர்க்கானுல் மஜீதென்னும் குர்ஆன்ஷரீபின் உபதேசங்களையும், அவ்வுத்தம வேதத்தை இறக்கித்தந்தருளுவதற்குக் காரணபூதமாயிருந்த அந்தக்கடைசி நபிபெருமானாரவர்களின் நடைஉடைபாவனைகளையும் பின்பற்றாதவரையில் நீங்களெல்லாம் உண்மை முஸ்லிம்களாயிருக்க முடியாதென்பதை மட்டும் உங்களில் ஒவ்வொருவரும் செவ்வனே கருத்திலிருத்திக் கொள்ள வேண்டும். அல்லாவும் அவனுடைய ரஸூலும் சொன்னது போல் நடவாத எவரும் தம்மை முஸ்லிமென்று தப்பாக எண்ணிவிடவேண்டாம். ஆண்டவனும் ரஸூலும் சொன்னதை நன்றாகக் கற்றுக்கேட்டுச் சிந்தித்துத் தெளிய வேண்டும்; அதன்பின் அவ்வாறே நடக்கவேண்டும். நம்முடைய நடையால் நாம் உண்மை முஸ்லிம்களென்றும், மற்றவர்களுக்கெல்லாம் ஒரு மாதிரியென்றும் நம்மைக் கண்டோர் கருதும்படி நம்மையே நாம் செய்து கொள்ள வேண்டும். "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்பது நம்முஸ்லிம்களுக்குத்தான் மிகப் பொருத்தமாய்க் காணப்படுகின்றது. எந்த மனிதனும் தன்னையொரு முஸ்லிமென்று சொல்லிப் பெருமை பாராட்டிக்கொள்ளலாம்; ஆனால் "அவனுடைய மனமும் வாக்கும் அல்லாவும் ரஸூலும் சொன்னதுபோல் நடக்காதவரையில் அம்மனிதன் ஒருபோதும் உண்மை முஸ்லிமாக ஆய்விடமாட்டான்." அல்லாவின் மீதும் அவனது ரஸூலின்மீதும் ஈமான் (உறுதி) கொண்டுவிடுவது மட்டுமே போதுமென்று எண்ணவேண்டாம்; இது இஸ்லாத்தின் முதற்படிதானாகும். இதற்கப்பால் நாம் செய்யவேண்டிய கடமைகள் பலஉண்டு. ஆனால் மேல் நாடுகளில் ஈமான் என்பதே குதிரைக்கொம்பாயிருக்கிறது; இவ்வாறிருக்கும்போது அவர்கள் எவ்வாறு ஆத்மசித்தியடைதல் கூடும்? முஸ்லிம் சகோதர சகோதரிகளே! இவ்வுலகில் காணப்படும் லோகாயதக் கொள்கைதான் முடிவான நிலைமையென்றும் அதற்கப்பால் சூன்யம்வந்து சூழ்ந்துவிடுவதால் நாம் செல்லக்கூடிய இடம் ஒன்றுமேயில்லையென்றும் வாதிக்கவேண்டாம். மேல் நாட்டுக் கவிசிரேஷ்டராகிய வில்லியம் ஷேக்ஸ்பியர் கூறுவதேபோல் "உங்களுடைய



தத்துவ சாஸ்திரங்களால் கனவில்கூடக் காணமுடியாத இரகசியமெல்லாம் பரலோகத்தில் அதிகமாயுண்டு.". இவ்வுலகமானது பரலோகத்துக்குரிய பிரயாணத்துக்கு வேண்டிய ஆயுதங்களை மட்டும் சேகரித்துக் கொள்ளவேண்டிய ஸ்தலமாகத்தானிருக்கிறது; இவ்வுலகவாழ்க்கையானது இவ்வாறிருக்கும்போது யாமெல்லாம் நமது கடமைகளைச் செம்மையாய்ச் செய்து வருகின்றோமாவென்று சற்று ஆராயவேண்டும்.

நாமெல்லாம் முஸ்லிம்களென்றும் நமது மார்க்கமானது இணையற்ற இஸ்லாமென்றும் பெருமை பாராட்டிக்கொள்ளுகிறோம். நம்முடைய தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கமானது சிறந்தமார்க்கமென்று நீங்கள் ஒத்துக்கொண்டிருப்பது உண்மையே. இவ்வுண்மையை ஏனையோருக்கெல்லாம் உபதேசித்து அவர்களையும் நல்வழிக்குக் கொண்டுவரவேண்டு மென்று உங்களுக்கிடப்பட்டிருக்கும் கட்டளையை நீங்கள் செம்மையாய் நிறைவேற்றுகின்றீர்களாவென்று சிறிதேனும் சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? நம்முடைய நபிபெருமானாரவர்கள் தாங்கள் ஆண்டவனிடத்திலிருந்து கொணர்ந்த நற்செய்திகளையெல்லாம் மனிதவர்க்கத்துக்கு நல்லுபதேசம் செய்து அச்செய்திகளையெல்லாம் இவ்வுலக முழுதும் பரத்தவேண்டு மென்று உத்தரவும் செய்துவிட்டுச் சென்றார்கள். "நம்முடைய ரஸூலானவர் நமது நற்செய்திகளை உங்களுக்குக் கொண்டுவந்து சேர்த்ததேபோல் அவர்களிடம் கற்றுக்கொண்ட அச்செய்திகளை உலகத்தவருக்கு உபதேசிக்கும் பொருட்டே நாம் உங்களை ஓர் உயர்ந்த ஜாதியாராகச் செய்தோம்"—(குர்ஆன், 2: 143). இவ்வாக்கியத்துக் கிணங்க நம்முடைய நபி பெருமானாரவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட இஸ்லாமிய உண்மைகளை நாம் இக்காலத்தில் ஏனையோருக்கெல்லாம் உணர்த்தி வருகின்றோமா வென்பதுதான் நாம் இப்பொழுது நன்கு நோக்க வேண்டிய காரியமாயிருக்கிறது. அதாவது இஸ்லாத்தில் சொன்னபடி நடக்கிறோமா அல்லது வேறு தவறான வழியில் செல்கிறோமாவென்று ஆராய வேண்டும். ராஜீய விஷயமானது மனிதனுடைய மூளையின் சம்பந்தமான காரியமாக இருக்கிறது; ஆகலின் அக்காரியம் ஆளுக்காள் அபிப்பிராய பேதமுள்ளதாகவே யிருந்து வரும். அபிப்பிராய பேதமுள்ள மனிதகாரிய மெல்லாம் அரை குறையுள்ளதாகவே யிருக்கும்; அது ஒருபோதும் சம்பூரணமுடையதாக மாட்டாது. ஆனால் ஆண்டவனால் அருளப்பட்ட மார்க்கமானது எப்போதும் சம்பூரணமுள்ளதாகவே யிருக்கும்; அதில் குற்றம் குறையொன்றும் இருக்க ஹேதுவில்லை. இப்படிப்பட்ட சம்பூரண மதமாகிய சத்திய சன்

மார்க்கத்தில் நாம் ஜனித்தவராயிருந்தும் ஏன் இப்போது ராஜீய விஷயங்களில் நம்மவர்கள் முஸ்லிமல்லாத இதர ஜாதியாரிடம் ஒரு சிறு தயவுக்காகத் தலைவணங்கி அவரது புன்சிரிப்பை எதிர்பார்த்து நிற்கின்றனர்? ஏன் அவர்களுடைய தயவான முகமலர்ச்சியை நாம் எதிர்பார்க்க வேண்டும்? இவ்வுலகில் மற்றெல்லா ஜாதியாரைக் காட்டிலும் நாம் உயர்ந்தவராகவும் வன்மையிற் சிறந்தவராகவும் ஏன் இப்பொழுது இருக்கவில்லை? மற்றையோரைவிட நாம் தற்போது பலஹீனஸ்திதியில் இருப்பதன் காரணமென்ன? இப்பொழுது நாமிருக்கும் நிலைமையானது மேலே குறிப்பிட்ட 2: 143-வது வேதவாக்குக்கு நேர்மாறாயிருக்கிறது. ஆண்டவன் அவ்வாக்கியத்தில் பொய்யான வாக்குறுதியைக் கூறினானா? அல்லது அவ்வாக்கியத்தில் சொல்லிய வண்ணம் செய்யாததால் நமக்குத் தண்டனையைத்தான் அந்த ஆண்டவன் விதித்திட்டானா? நம்முடைய குர்ஆனே கரீமானது ஆண்டவனுடைய சத்திய வேதமாதலால் அதில் சொல்லிய தொன்றும் பொய்த்துப் போக நியாயமில்லை. ஆனால் குற்றமெல்லாம் நம்மிடத்தில் தான் நிறைந்து கிடக்கின்றது. எது வரையில் முஸ்லிம்கள் மேற்கூறிய ஆயத்தில் சொல்லப்பட்டபடி இஸ்லாமிய பிரசாரமாகிய இஷா அத்தே இஸ்லாமென்னும் புண்ணிய காரியத்தில் ஈடுபட்டிருந்தார்களோ அதுவரையில் அவர்கள் உச்சஸ்தானத்தில் தான் இருந்து வந்தார்கள். ஆனால் எந்த நிமிஷமுதல் நம்முடைய சகோதரர்கள் இஸ்லாத்தின் உண்மைகளை ஏனையோரிடம் பரத்த முயல்வதைக் கைவிட்டனரோ அந்த நிமிஷமுதலே நம் ஜாதியினர் தம்முடைய உச்சஸ்தானத்தை விட்டு உருள ஆரம்பித்தனர். சென்ற 400 வருஷங்களாக முஸ்லிம்கள் தங்களுடைய இஷா அத்தே இஸ்லாம் ஊழியத்தைக் கைவிட்டனர்; அன்று முதற்கொண்டே இஸ்லாமிய ராஜ்யங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் ஒழிந்து கடைசியில் மத்திய முஸ்லிம் ராஜ்யமாகிய கிலாபத் ராஜ்யமும் தன் உயிருக்கு மன்றாடும்படியான கதியில் வந்து விட்டது. முன்னுக்குப் போகவேண்டியவர் விடாமல் மேல் நோக்கிச் சென்றுகொண்டேயிருத்தல் வேண்டும்; இன்றேல் கீழே உருள நேரிடும். இதுதான் தேவ நீதி. இப்பொழுதுநாம் இன்னும் க்ஷீணித்துப் போகாமல் முன்னுக்கு வர வேண்டுமாயின் ஆண்டவனால் அருளப்பட்ட அந்த 2:143-வது வாக்கியமாகிய "வகதாலிக்க ஜஅல்னாக்கும்..." என்று ஆரம்பிக்கின்ற ஆயத்தில் சொல்லப்பட்டதேபோல் நம்முடைய சோம்பலைவிட்டு இஸ்லாத்தின் உண்மைகளை உள்ளது உள்ளவண்ணமே இவ்வுலக முழுதும் பரத்த ஆரம்பிக்கவேண்டும். இனி நாம் சும்மா இருப்



பது தகாது; இன்றேல் "சோம்பசென்பவர் தேம்பித்திரிவர்" என்பதற்கு இலக்காய் நாம் இன்னும் மிடிமைக்குள் மிடிமையை அனுபவிக்கும்படி நேரும். ஆதலின் முஸ்லிம் சகோதரர்களே! நீங்கள் நம்முடைய வேதத்தைக் கடைப்பிடியுங்கள்; ஆதிகாலத்தில் அஸ்ஹாபிகள் செய்து வந்ததேபோல் இப்பொழுதும் இஸ்லாத்தின் ஒளியை வெளியில் பரத்தமுயலுங்கள். ஆண்டவனுடைய அருள் வாக்கானது இன்றைக்கும் உண்மையாகவே இருந்து வருகிறது; அதில் சொல்லியதுபோல் உண்மையைப் பரத்த ஆரம்பிப்போமாயின் இப்பொழுதும் நாம் உச்சஸ்தானத்தை அடையலாம். நம்முடைய முன்னேற்றத்துக்கு இடையூறாயிருக்கும் முட்களை யெல்லாம் களைந்துவிடுங்கள். சோம்பேறித் தனத்துக்குரிய உபயோகமற்ற மூட பக்திகளையும் அனாசாரங்களையும் கைவிடுங்கள். இஸ்லாத்தில் சொல்லியபடி நடப்போமாயின் இன்றைக்கே நாம் பிறரால் வெல்ல முடியாத வெற்றியை யெல்லாம் அடைவோம். இஸ்லாத்துக்கு விரோதமான வேறு மதங்களிலுள்ள தவறான கொள்கைகளை யெல்லாம் ஒழிப்பதற்கும் இஸ்லாத்தைப் பற்றி அம்மதத்தினர் கொண்டிருக்கும் அசங்கைகளையும் அனாசாரங்களையும் போக்குவதற்கும் லண்டனுக்கடுத்த வோக்கிங் மஸ்ஜிதில் ஒரு கூட்டத்தார் இருந்துகொண்டு அல்லாவுக்காகவும் ரஸூலுக்காகவும இஷா அத்தே இஸ்லாம் ஊழியம் செய்து வருகின்றனர். மேல் நாட்டுத் தத்துவ சாஸ்திரிகளுக்கு வோக்கிங் மிஷன் காரர்கள் வேண்டிய மட்டும் சிந்தனைக்குரிய விஷயங்களை யெல்லாம் கொடுத்துக்கொண்டு வருகின்றனர்; அலக்ஷிய புத்தியுடையவர்களை யெல்லாம் அவர்கள் ஆழ்ந்து யோசிக்கும்படி செய்கின்றனர்; இஸ்லாத்தைப்பற்றி இழிவாக எண்ணியிருப்பவருக்கெல்லாம் "எது சரியான உண்மை? பார்ப்போம், வா" என்றழைப்பது போன்ற கேள்விகளெல்லாம் கேட்க ஆரம்பித்து விட்டனர். இஸ்லாத்தில் வந்து நுழைந்து கிடக்கும் அனாசாரங்களை யெல்லாம் அவர்கள் தாம் சிறிது சிறிதாக அகற்றி வருகின்றனர். முஸ்லிம் சகோதரர்களே! நீங்களெல்லோரும் ஒருங்கே சேர்ந்து செய்ய வேண்டிய இப்பெருங்காரியத்தை வோக்கிங்கிலுள்ள ஒரு சிறு தொகுதியினர் மட்டும் உங்களுக்காக மேல் நாடுகளில் உழைத்து வருகின்றனர். நீங்கள் அவ்விஷயத்தில் கவலைப்படுகின்றீர்களா? உங்களுடைய இஸ்லாத்துக்கே பேராபத்து வரும்படியான இவ்வேளையில் நீங்கள் இவ்வளவு அலக்ஷியமாயிருக்கலாமா? இது உங்களுக்குத் தர்மமாகுமா? மேல் நாடுகளில் நமது நிதியால் இஸ்லாத்தின் உண்மைகளைப் பரத்தி அங்குள்ள நமது மார்க்க விரோதிகளை யெல்லாம் முஸ்லிம் நேசர்களாகச் செய்ய வேண்டுவது உங்களின்

ஒவ்வொருவருக்கும் முக்கிய கடமையென்று கருதினீர்களா? இவ்வுலகிலுள்ள எல்லா விரோதிகளாலும் ஏற்படக்கூடிய நஷ்டத்தைக் காட்டிலும் மேல் நாட்டு விரோதிகளால் ஆயிரமாயிரம் பங்கு அதிகமானகேடு நமது இஸ்லாத்துக்கு விளையுமென்பதை நீங்கள் அறிந்துகொண்டிருக்கிறீர்களா? இஸ்லாம் இவ்வுலகில் நிலைத்திருக்கவேண்டுமாயின் நம்முடைய மேல்நாட்டு விரோதிகளையே முதன் முதல் நம்முடைய இஸ்லாத்தில் கொண்டு வந்து அவர்களுடைய சிநேகத்தைப் பெறவேண்டுமென்பதை இன்னும் நீங்கள் கண்டுகொள்ளவில்லையா? இன்று நாம் செய்ய வேண்டிய கடமையில் பின் வாங்கும்போது நாளைக்கு நமது மார்க்கத்துக்கு க்ஷீணதிசை யுண்டாகுமென்று வருந்துவதில் பயன் யாது? பழைய காலத்தில் பெரும்புகழ் பெற்றிருந்த மறுவிலா மாந்தரின் மரபிலுதித்த உத்தம மித்திரர்காள்! இப்பொழுது இவ்வுலகில் இருந்துவரும் இஸ்லாத்தைக் காப்பாற்றவும் இன்னும் இதை இவ்வுலக முழுதும் பரத்தவும் நீங்கள் ஒவ்வொருவரும் கடமைப்பட்டில்லையா? அல்லாஹுத் தஆலாவால் நபிபெருமானருக்கு அருளப்பட்டு அப்பெருமானரிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட இஸ்லாத்தின் தத்துவத்தை இவ்வுலக முழுதும் பரத்தி நிலைக்கச் செய்வதற்கு நாம் ஒவ்வொருவரும் கட்டுப்பட்டில்லையா? அப்படிச் செய்யத் தவறுவோமாயின் நாம் ஒவ்வொருவரும் நம் நம்முடைய விகிதத்துக்குரிய பாபத்துக்கு ஜவாப்தாரியாக மாட்டோமா? அல்லாஹுத் தஆலாவின் பொறுப்பை நாம் தலைமேற் கொண்டுவிட்டு அக்கடமையைச் செவ்வனே நிறைவேற்றாமற் போவோமாயின் அதற்குரிய தண்டனையினின்றும் தப்பமுடியுமோ? "உண்மையை நிரப்பி அல்லாஹுத் தஆலா இக்கித்தாபை (குர்ஆன் ஷரீபை) வெளிப்படுத்தி யிருக்கிறான்; வேதத்துக்கு நேர்மாறாக நடப்பவர்கள் நிச்சயமாக மிகப் பெரிய எதிர் கக்ஷியில் இருந்து வருகிறார்கள்"—(குர் ஆன், 2:176). ஆகலின், என்னருமைச் சகோதரர்காள்! ஆதிகாலத்தில் நமது நபிகள் நாயகத்தின் (இவர்களுக்கு இறைவனுடைய எல்லா சுபசோபனமும் உண்டாகுக) ஸஹாக்களான ஸஹாபாக்கள் செய்து வந்ததேபோல் இப்பொழுது நீங்கள் இஸ்லாமிய பிரசாரம் செய்ய முன்வருவீர்களாக. குலபா-இ-ராஷிதீன்களுடைய காலத்தில் நடந்து வந்ததேபோல் ஜிஹாதேகபீர் செய்யப் பின் வாங்காதீர்கள். உங்களுடைய மனத்தில் குர்ஆன் ஷரீபின் உண்மைகளை நன்றாக நிரப்பிக்கொண்டு அவற்றின்படி ஒரு சிறிதும் தவறாமல் ஒழுக முயலுங்கள். குர்ஆனே கரீமென்னும் அவ்வுத்தம நித்திய வேதத்தைக் கையில் வைத்துக்கொண்டு இஷா அத்தே இஸ்லாமென்னும் ஜிஹாதேகபீர் செய்ய எல்லோ





ரும் எழுந்திருங்கள். இன்றைக்கு நீங்கள் முன்னுக்கு வரா விடின் பிறகு என்றென்றைக்கும் பின்னுக்கே போகும்படியான கதிதான் உங்களுக்கு வந்து விடியும். இவ்வுலக முழுதும் உங்களுடைய இஸ்லாமிய உண்மைகளைப் பரத்த வேண்டுமென்று ஆண்டவனுடைய கட்டளை உங்களுக்கு 1300 வருஷங்களுக்கு முன் பிறந்திருக்கிறது; இன்றளவும் இவ்வுலகத்தின் நான்கிலொரு பாகத்தில் தான் நுமது தீனுல் இஸ்லாத்தைப் பரத்தியிருக்கின்றீர்கள். மிகுதி முக்கால் பாகத்திலும் நமது சத்திய சன்மார்க்கத்தைப் பரத்த முயல்வது நம்மில் ஒவ்வொருவருக்கும் முக்கிய கடமையன்றோ? அல்லாஹுத் தஆலாவின் உண்மைப் பிரகாசத்தை இவ்வுலகின் ஒவ்வொரு மூலையிலும் முடுக்கிலும் பரத்த முயல்வதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் தம் தம்மாலியன்ற பிரயத்தனத்தைச் செய்ய வேண்டாமா? ஒவ்வொருவரும் "எனக்கென்ன?" என்று பொறுப்பற்றிருக்கும் பக்ஷத்தில் நாம் எல்லோரும் ஒருங்கே பாபிகளாய்ப் போய்விட மாட்டோமா? இனிமேல் சோம்பியிருப்பது தகாது; எல்லோரும் எழுந்து இஸ்லாமிய பிரசாரமாகிய ஜிஹாதேகபீர் செய்யவேண்டும். முஸ்லிம் சகோதரர்களே! இவ்வுலக முழுதையும் இஸ்லாமார்க்கத்தால் வென்றுவிடப் பார்க்கின்றீர்கள்; உங்களுடைய ஈமான் மட்டும் இவ்விஷயத்தில் உறுதியுள்ளதாக இருக்கும் பக்ஷத்தில் அதிசீக்கிரம் வெற்றி பெறலாம். "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்." இவ்வெற்றியை அடைவதற்கு நமக்குத் தரைப்படையாவது கடற்படையாவது ஆகாயப்படையாவது ஒன்றும் வேண்டாம். அல்லாஹுத் தஆலாவின் அருள் வாக்காகிய அல்புர்க்கானென்னும் குர்ஆன் ஷரீபு ஒன்று மட்டுமே உங்கள் கையிலிருந்தால் அதுவே போதும். ஆண்டவனால் அனுக்கிரகிக்கப்பட்ட அவ்வுத்தம நித்திய வேதமே உங்களுக்குப் போதுமான ஆயுதமாயிருக்கிறது; இப்பரிசுத்தமான ஆயுதத்தை எடுத்துக்கொண்டு ஜிஹாதேகபீர் செய்ய ஆரம்பிப்போமாயின் அது மனிதர்களுடைய ஹிருதயத்தை யெல்லாம் பிளந்து அங்குள்ள அக்ஞான அந்தகாரத்தை யெல்லாம் போக்கி ஸுக்ஞானப் பேரொளியை அங்கெல்லாம் நிரப்பிவிடும். இவ்வுலகத்திலுள்ள மனிதர்களை யெல்லாம் ஓரே சகோதரத்துவத்தில் சேர்த்து அவர்களுக்கிடையிலுள்ள ஜாதி வேற்றுமையையெல்லாம் அடியோடறுத்து ஏகதெய்வக் கொள்கையை நிலை நிறுத்துவதற்கு நீங்கள் இனி ஒருக்ஷணமும் பின் வாங்கக்கூடாது. ஏ, முஸ்லிம் சகோதரர்காள்! எழுந்திருங்கள். ஏமாந்து போகவேண்டாம். உலக முழுதையும் தாருல் இஸ்லாமாகச் செய்ய ஓடிவாருங்கள்; இப்படிச்

செய்வீர்களாயின் இகலோகத்தில் இனியில்லா வெற்றியடைவதுடன் பரலோகத்திலும் பரமானந்த மெல்லாம் பெறுவீர்கள். ஆண்டவனுடைய அருளைப் பெறவேண்டுமாயின் அவனுடைய கட்டளையில் நாம் அலக்ஷியமாயிருப்பது அறவே ஆகாது.

“பல தெய்வ வணக்கக் காரர்கள் வெறுப்புடனிருந்த போதிலும் ஏனை எல்லா மார்க்கங்களைக் காட்டிலும் இச் சன்மார்க்கம் (தீனுல் இஸ்லாம்) சிரேஷ்ட மடையும்படி செய்வதற்காக ஒரு வழி காட்டியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் தன்னுடைய திருத்தூதரை அனுப்பினவன் அல்லாஹுத் தஆலாவேயாவான்”— (குர் ஆன், 9:33).

[இவ்விஷயம், முதலில் வெள்ளைக்காரக் கிரிஸ்தவரா யிருந்து இப்பால் தீனுல் இஸ்லாத்தில் நவ்முஸ்லிமாகச் சேர்ந்திருக்கும் காலித் ஷெல்ட்ரேக் என்பவரால் எழுதப்பட்டிருக்கும் வியாசத்தைத் தழுவி எழுதப்பட்டது.] ப-ர்.

## கிலாபத்.

(முன் 84-ம் பக்கத் தொடர்ச்சி)

கிலாபத்தின் மதக்கொள்கையை நோக்கும்போது ஹிஜாஸ் அரசர் ஒரு கலகக் காரராகவே கருதப்படுவார்; ஆதலின் இவ்வரசரை எமது மதச்சட்டத்தின் பிரகாரம் தண்டிப்பதற்கு எம்மிடம் ஏதேச்சையாய் ஒப்புக்கொடுத்து விடும்படி நேசதேசத்தினரை வற்புறுத்திக்கேட்பதற்கு நமக்கு எல்லாவித பாத்தியமுமுண்டு.

துருக்கி ராஜ்யமானது ஒரு பலமான ராஜ்யமாயிருக்கவேண்டுமென்பதற்கு அத்தாக்ஷியான மதசம்மந்தமுள்ள கோட்பாடுகளை மட்டும் ஈண்டு யான் எடுத்து விளக்கியிருக்கிறேனே யல்லாமல் மதசம்மந்தமல்லாத வேறு அவசியமான காரணங்களை யெல்லாம் யான் இங்கெடுத்துக் கூறவில்லை. முஸ்லிம்களின் மதாசாரப்படி கிலாபத்தானது ஓர் அத்தியாவசியமான ஆட்சிமுறையா யிருக்கிறது; அவ்வாட்சி முறைக்குச் சட்டப்படி உரியவர்கள் துருக்கியர்களேயாவர்; இந்தத் துருக்கியரிடமிருந்து கிலாபத்தைப் பிரித்து வேறொரு ஜாதியாரிடம் அதை ஒப்படைக்க வேண்டுமென்று முஸ்லிம்கள் விரும்பவில்லை; ஆனால் அதை வெறுக்கின்றனர். துருக்கி ராஜ்யத்தைப் பலஹீனப் படுத்துவதென்றால் கிலாபத்தையே பலஹீனப்படுத்துவதாக எல்லா முஸ்லிம்களும் கருதுகின்றனர்; கிலாபத் பலஹீனப்பட்டு விடுமாயின் அக்காரணத்தால் இஸ்லாமார்க்க



மே துர்ப்பலமடைந்து விடுமென்பது சொல்லாமலே விளங்கும்; இஸ்லாம் துர்ப்பலமடையுமாயின் முஸ்லிம்களின் பாதுகாப்பானது அபாயத்துக்குள்ளாகுமென்பது எமக்கு நன்குதெரியும். இக்காரணங்களால் தான் கிலாபத்விஷயமானது எமக்குள் ஒரு மதக்கொள்கையாகவே கருதப்பட்டு வருகின்றது. இப்படிப்பட்ட மதக்கொள்கையான ஒரு முக்கிய விஷயத்தை பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் அலக்ஷியம் செய்யாமலிருப்பதே அவர்களின் முதற்கடமையாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அபிப்பிராயம் மட்டுந்தான் சமாதானக் கான்பரன்ஸில் காணப்படுகிறதென்று யான் சொல்லவரவில்லை; ஆனால் எம் முஸ்லிம்களின் கிலாபத் விஷயத்தை பிரிட்டிஷ்காரர்கள் தங்களுடைய சொந்தவிஷயமாகக் கருதுவார்களாயின் சமாதானக் கான்பரன்ஸில் சம்மந்தப்பட்டிருக்கும் இதரஜாதியார்களின் அபிப்பிராய பேதங்களையெல்லாம் அழுத்திவிடும்படியான அவ்வளவு அதிகாரம் ஆங்கிலேயருக் குண்டென்பதை எவரும் மறுத்தற்கு முடியாது. எப்போதும் துன்பத்தையும் துயரத்தையும் இடைவிடாது தரத்தக்க சில பாகங்களைப் பெறுதற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தார் ஆசைப்படுவதைக் காட்டினும் இந்த கிலாபத் விஷயத்தில் அவர்கள் சரியான நீதியைச் செலுத்துவார்களாயின் இறுதியில் அவர்களுடைய ராஜ்யமானது இன்னும் அதிகமாகப் பலப்படுவதற்கு வேண்டிய நன்மைகளெல்லாம் உதயமாதல் கூடும்.

இப்பொழுது அரபு நாட்டுக்கு வெளியிலுள்ள புண்ணியஸ்தலங்களைப் பற்றிச் சிறிது ஆராய்ச்சிசெய்து பார்ப்போம். முஸ்லிம்களும் எஹூதிகளும் கிரிஸ்தவர்களும் ஒருங்கே ஒத்துக்கொள்ளும் முக்கியமான புண்ணிய பூமியாகிய பலஸ்தீனத்தை முதன் முதலாய்க் கவனிப்போம். இப்புண்ணிய ஸ்தலத்தைக் கைப்பற்றுவதற்காக ஐரோப்பாவானது சுமார் இருநூறு வருடங்கள் மட்டும் முஸ்லிம்களுடன் போர் புரிந்துவந்தது; ஆனால் அம் மகாபெரிய மதச்சண்டையில் (உலக சரித்திரத்திலெல்லாம் இதுதான் மகா மகாபெரிய மதப்போராயிருக்கின்றது) முஸ்லிம்கள் தாம் ஜயமடைந்து இப்புண்ணிய பூமிமுழுமைக்கும் தனியரசாயிருந்தார்கள். இப்பொழுது நடந்த மதச்சண்டையல்லாத ஒரு வெறுஞ்சண்டையில் இருதரப்பிலும் முஸ்லிம் வீரர்கள் போர்புரிந்தனர்; எக்காரணத்தாலும், பிரிட்டிஷ் முதல்மந்திரியாகிய மிஸ்டர் லாயிட்ஜார்ஜ் இம் மகாயுத்தத்தை ஒரு சிலுவைச் சண்டையென்று அவிவேகத்தனமாய்க் கூறியதுபோல் வேறுயாரும் இதை ஒரு மதப்போரென்றாவது பிறையுடன் யுத்தம் செய்யவந்த சிலுவைச்சண்டையென்றாவது சொல்வது தகாது; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்

அதிகமான ஜவாப்தாரித்தன்த்தை ஏற்றுக்கொண்டிருக்கும் முதல் மந்திரியார் இந்தயுத்தமானது நடந்து கொண்டிருந்தகாலத்தில் இப்படிப்பட்ட வார்த்தைகளை வெளியிட்டு, பழையகாலத்தில் இருநூறு வருஷகாலம் வரையில் சிலுவைச் சண்டைசெய்தும் ஜயிக்க முடியாத புண்ணிய பூமியைக் கைவசப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத்துடன் தான் இம்மகா யுத்தமானது ஆரம்பிக்கப்பட்டதென்று எம்முஸ்லிம்களுக்கு அவர் பகிரங்கமாய்க் கூறியிருப்பாராயின் அவர்கள் தங்களுடைய நிலைமை இன்னதென்பதை அச்சண்டையின் போதே நன்றாக உணர்ந்திருப்பார்கள். ஆனால் மதப்போரைப் போலல்லாமல் வெறும் சாதாரண யுத்தமாகவே இதை நடத்திவிட்டு, இப்பால் முஸ்லிம்களுக்கு மதப்போராலேயே கிடைத்ததையெல்லாம் திரும்பப் பிடுங்கிக்கொள்ளுவதற்கு இதையொரு நல்லசமயமாக ஆக்கிக்கொள்ள எந்தக் கிறிஸ்தவ ராஜதந்திரிக்கும் எவ்வித நியாயமுமில்லை. இந்தப்புண்ணிய பூமியானது யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சிரேஷ்டமாயிருப்பதைக் காட்டிலும் எம் முஸ்லிம்களுக்கே அதிசிரேஷ்டமாயிருக்கின்றது; ஏனெனின் அத்தேசத்திலுள்ள யூத கிறிஸ்தவப் புண்ணிய ஸ்தலங்களையெல்லாம் முஸ்லிம்களும் கௌரவமாய்ப் பாதுகாக்கின்றனர்; ஆனால் அங்குள்ளமுஸ்லிம் ஸ்தலங்களை யூதர்களும் கிறிஸ்தவர்களும் கண்ணியமாய் நடத்துவதில்லை. கிறிஸ்தவர்களெல்லாம் முஸ்லிம்களுடன் நடத்திய மகாபெரிய யுத்தத்தின் பயனாகவே இந்த பலஸ்தீன நாடானது முஸ்லிம்களின் வசத்தில் வந்துசேர்ந்தது; மேலும் கிலாபத் ஏற்பட்ட நாள்முதலே இந்நாடானது முஸ்லிம் கிலாபத்தின் ஒரு பகுதியாயிருந்துவருகின்றது; இரண்டாவது கலீபாவான உமரேபாரூக் (ரலி) அவர்களின் காலத்திலேயே இந் நாடானது முஸ்லிம் கலீபாவின் ஆட்சிக்கு உட்பட்டுவிட்டது. ஆதலின் இப்போது நியாயவரம்புக்கு முற்றிலும் முரணாய் இப்புண்ணிய பூமியை முஸ்லிம்கிலாபத்திலிருந்து நீக்கிவிடும் பக்ஷத்தில் எல்லா முஸ்லிம்களின் மதவுணர்ச்சிக்கும் அஃதோர் ஆழமான புண்ணாகவே முடியும்.

இராக் தேசத்திலமைந்திருக்கும் புண்ணிய க்ஷேத்திரங்களைப் பற்றிக் கவனிப்போமாயின் இத்தேசமானது உண்மையாகவே எல்லா விவகாரங்களுக்கும் அரபு நாட்டுடனே ஒன்றித்துவிட்டதென்றே சொல்லலாம். இத்தேசத்தில் குடியிருப்பவரெல்லாம் அரபிகளாகவே இருந்து வருகின்றனர்; ஆதலின் இராக் வேறு, அரபுஸ்தான் வேறு என்று சொல்வது முடியாது. ஆதிகால முதற்கொண்டே இத்தேசமானது பலஸ்தீனத்தைப் போலவே கிலாபத்



ராஜ்யத்தின் ஒரு முக்கியபகுதியாயிருந்து வருகின்றது; கிலாபத் சம்மந்தமான ஆதிகாலத்துச் சண்டைகளில் சில இராக் தேசத்து யுத்தகளத்திலேயே போடப்பட்டன. ஆதலின் இத்தேசமானது அரபுநாட்டைச் சேர்ந்த ஒரு பகுதியாகவே ஆய்விட்டது; இக்காரணத்தாலும் இன்னும் இப்பிராந்தியத்தில் அநேகம் புண்ணியக்ஷேத்திரங்கள் நிரம்பியிருப்பதாலும் இதுவரையிலிருந்துவந்ததேபோல் இனியும் இராக் தேசமானது முஸ்லிம் ஆட்சிக்கு உட்பட்டே இருக்கவேண்டும். மேலும் இந்த இராக் தேசத்தைத்தான் பிரிட்டிஷ் காரர்கள் தங்களுடைய சொந்தத்துக்காக எடுத்துக்கொள்ளப் பார்க்கின்றார்கள். இப்பெரிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் முஸ்லிம் வர்க்கத்தினர் ஓர் அற்பத்தொகையினராயில்லாமல் பெருந்தொகுதியினராயிருப்பதால் இந்த எட்டுக்கோடி முஸ்லிம்களின் மனப்பான்மையையும் மதித்து அவர்களுக்கு நன்மைசெய்ய நாடுவார்களாயின் ஆங்கிலேயர்கள் இந்த இராக் தேசத்தைத் தங்களுக்காக அபகரித்துக் கொள்ளாமல் கிலாபத் ராஜ்யத்துக்கே அதை விட்டுவிடலாம்.

முடிவாக யானொரு விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது: ஜஸீரத்துல் அரபைப்பற்றி யாம் சொல்லும் மதசம்பிரதாயங்களையும், இஸ்லாமிய புண்ணிய க்ஷேத்திரங்களெல்லாம் சென்ற பதின்மூன்று நூற்றாண்டுகளாக முஸ்லிம் ஆட்சியின்கீழ் தழைத்தோங்கி வந்திருக்கும் அநுபவ பாத்தியங்களையும் கவனியாது விட்டு விடுவோமாயினும், அதன் பின்னரும் துருக்கி ராஜ்யமானது யுத்தத்துக்கு முன்னிருந்தது போலவே இப்பாலும் இருக்கவேண்டுமென்று எம் முஸ்லிம்கள் வாதம் செய்வார்களாயின் அஃதொரு அசாதாரணமான மனோபாவத்தாலுண்டாகும் வெறும் அபிப்பிராயமென்று கருதிவிடவேண்டாம்; ஏனெனின் பதின்மூன்று நூற்றாண்டுகளாக முஸ்லிம்களுடைய ஆளுகைக்குட்பட்டிருந்த தேசங்களையெல்லாம் வேறுஜாதியார் பிடுங்கிக்கொள்ள நாடுவார்களாயின் அவர்களெல்லாம் பாத்தியா பாத்தியமென்னும் பொய்ச்சாக்குச் சொல்லாமல் ரணகளத்தில் பகிரங்கமாய் வந்து வீரத்தனத்துடன் யுத்தம் புரிந்து ஜயபேரிகை கொட்டி வெற்றிக்கொடி நாட்டினபின்னரே அவ்வாறு அத்தேசங்களைக் கைவசப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே இப்போதைய நிலைமைப்படி ஜஸீரத்துல் அரபானது எவ்வித சந்தேகமுமின்றி கிலாபத் ராஜ்யத்தில் சேர்ந்ததாகவேயிருக்கிறது; ஜஸீரத்துல் அரபுமட்டும் தனியேயிருந்து கிலாபத் ராஜ்யமாக ஆய்விடுமென்று தவறாக எண்ண வேண்டாம். நான் முன்னமே சொன்னதுபோல் கிலாபத்தென்பது அரப்தேசத்தை

யும் அஜம்பிராந்தியத்தையும் தன்னுள்ளடக்கிக்கொண்டிருக்கக் கூடிய ஒரு ராஜ்யமென்று ஆண்டவனுடைய திருவசனமாகிய அல்புர்க்கான் வேதத்தின் ஸ்பஷ்டமான திருவாக்கியங்களால் சிறப்பித்து வர்க்குறுதி சொல்லப்பட்ட ஒரு செங்கோலசாட்சியாகும். நெடுங்காலமாகவே கிலாபத்தின் தலைநகரானது அரபு நாட்டுக்கு வெளியிலேயே யிருந்து வந்திருக்கிறது; மேலும் இந்த ராஜ்யமானது தனக்கென ஏற்பட்ட சொந்த ஏகாதிபத்தியத்தை யுடைய சுயேச்சையான ஒரு தனிராஜ்யமாகவே யிருந்து தீரவேண்டும். ஆதலின் இதற்கு முன் பலதடவைகளில் மகாஜவாப்தாரித்தனத்தை வகித்துவரும் மிகப்பெரிய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய உத்தியோக வர்க்கத்தாரெல்லாம் வாக்குறுதிகூறியபடி எங்கள் கிலாபத் விஷயமானது முஸ்லிம்களாலேயே தீர்மானிக்கப்படவேண்டியது உண்மையாயின், அம்முஸ்லிம்களெல்லோரும் துருக்கி அரசாங்கத்தார் தவிர வேறுயாரும் கிலாபத்துக்கு உரியவராய் நியமனம் பெறுவதை ஒத்துக்கொள்ள மறுக்கும்போது அந்தத்துருக்கி ராஜ்யத்தையே தனி ஏகாதிபத்தியமான ஒரு சுயேச்சையுள்ள பலத்த ஆட்சிமுறையாக ஆக்கி அதன் குடைக்கீழ் அரபுதேசத்தையும் சேர்த்து வைக்கவேண்டுமென்னும் இம்முக்கிய விஷயமானது எங்கள் மதசம்மந்தமான ஒரு தனிப் பிரச்னையாகவே யிருக்கின்றது. துருக்கியைச் சர்வதேசசங்கத்தாரின் அதிகாரப் பந்திரத்துக்குட்பட்ட ராஜ்யமாகவாவது, அல்லது கிலாபத்தின் முக்கிய அம்சமான அரபுதேசத்தை அப்பால் பிரித்து விட்டுத் துருக்கியை மட்டும் தனி ஆட்சியாகவாவது, துருக்கியை நேசதேசத்தாரின் நிர்ப்பந்தத்துக்குள் ஒடுக்கித் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள முடியாத வெறும் தேசமாகவாவது செய்து விடுவார்களாயின் அதை எங்களுடைய சுத்த சத்திய சன்மார்க்கமாகிய தீனுல் இஸ்லாமென்னும் நன்மார்க்கத்தை அழித்துவிட இவ்வுலகத்திய கிறிஸ்தவ ராஜாங்கத்தாரெல்லாரும் ஒன்று கூடிச் செய்த சூழ்ச்சி யென்றே தீர்மானித்து இப்பூவுலகின் கண்ணுள்ள நாற்பது கோடி முஸ்லிம்களும் மனோவேதனையால் ஆத்திரப்பட நேரிடுமென்பதைச் சமாதானக்கான்பரன்ஸிலுள்ள கிறிஸ்தவ ராஜதந்திரிகளெல்லாம் நன்றாகத் தங்களுடைய கருத்திலிருத்திக் கொள்வார்களாக.

இங்ஙனம்:
தங்கள்
முஹம்மதலீ
(எம். ஏ. எல் எல். பி.)



# ஜிஹாதேகபீர்

நம்பர்—2

(முன் 124-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் திண்ணமாக நம்பவேண்டிய விஷயம் என்னவெனின், எப்போது உங்கள் பாதத்தை முன்னேற்றத்துக்காக முற்படுத்தாமலிருக்கிறீர்களோ அப்போது அப்பாதமானது பின்னிடையு மென்பதற்கு யாதொரு சந்தேகமும் கிடையாது. இதைக்கொண்டே ஸன்மார்க்கப் பாவுதலின் பேரிலேயே இஸ்லாமானவர்களின் உயிர் வாழ்வு உண்டென்பதை அறிவீர்களாக.

குர்ஆன் ஷரீபென்னும் திருவேதமானது இதத்தின் விஷயத்தைப் பற்றிச்சொல்லும் சமயத்தில் சாதாரணமாய் வெளிப்படையான விஷயத்தைச் சொல்லி ஸ்தாபனம் செய்கிறது; இஸ்லாமானவர்கள் இவ்வளவிற்கே தங்களின் புத்திசாதுரியத்தைப் பிரயோகித்திருந்தால் அவர்களுக்குத் தங்களின் பாதமானது முன்னேற்றமடையும் வழியில் போகின்றதா அல்லது ஸன்மார்க்கப்பாவுதலை விட்டு ஸன்மார்க்கவாழ்வுக்கே கெடுதலையுண்டாக்கும் பாதையில் நடக்கின்றதா என்பது ஏற்படும். இச்சங்கதியை அறியாத காரணத்தால் முஸ்லிம்களுக்குள்ளேயே சில சமயங்களில் போர்களும் சண்டைகளும் உண்டாயிருக்கின்றன. ஒரு ராஜகோத்திரத்தார் அரசுசெய்த ராஜ்யத்திலேயே இன்னொரு ராஜ குடும்பம் அரசுபுரிவதையும் படித்தும் கேட்டும் கண்டு மிருக்கிறோம்; ஆனால் இஸ்லாமானவர்கள் ஸன்மார்க்கப்பாவுதலைத் தங்கள் கடமையாகக் கொண்டு நடந்தகாலத்தில் இஸ்லாமானவர்களின் ராஜ்யங்கள் இஸ்லாமானவர்களைவிட்டு அயல் மதஸ்தர்களின் வசமானது கிடையாது; இஸ்லாமானவர்கள் தங்கள் ராஜ்யபலத்தினால் செருக்குண்டு தங்கள் பாதத்தை முன்னேற்றத்திற்கு எடுக்காமல் சொர்ப்பனமான இவ்வாழ்வின் மயக்கத்திலகப்பட்டுத் தாம் ஜயித்ததேசங்களின் கெட்டவழக்கங்களை அப்பியசித்து இஸ்லாத்தின் உன்னதகுணங்களை விட்டுச் சிற்றின்பத்திலும் ஆடம்பரத்திலும் மூழ்கியிருந்ததன் பயனாக அவர்கள் இறுமாந்து கவலையற்ற தூக்கத்தில் கிடக்குங்காலத்தில்தான் அவரது ராஜ்யங்கள் தினந்தோறும் கொஞ்சங் கொஞ்சமாய் அவர்கள் கையைவிட்டு நீங்க ஆரம்பித்து அவர்களும் பலஹீனராய் முடிவில் அவர்களின் பலஹீனம் அதிகப்பட்டு ஒன்றுக்குப்பின் ஒன்றாக அவர்கள் ராஜ்யங்கள் மாண்டு விட்டன. அம்மகாபராக்கிரமமும் பலமுமுள்ள ராஜ்யங்களின் பெயர்களும் குறிகளும் இக்காலத்தில் புலப்படாத வண்ணம் அழிந்து விட்டன. பெருக்கு

மாத்திரம் இப்போதிருக்கும் இரண்டு மூன்று இஸ்லாமிய தேசத்தரசர்களும் இது பரியந்தம் மற்ற ராஜ்யங்களுக்குண்டான அழிவினால் யாதொரு அறிவு மடையவில்லை.

இது பரியந்தம் இஸ்லாமானவர்களின் பூலோகப்பெருமையின் நிலைமையைப்பற்றிச் சொன்னோம். முஸ்லிம்கள் தங்கள் அடியை முன்னேற்றத்தினின்றும் விலக்கிக்கொண்டபோது ஆண்டவன் தன்னுடைய மாறாத என்றைக்கும் நிலையான சட்டப்பிரகாரம் "எவன் ஒருவன் முன்னேற முயற்சிக்கவில்லையோ அவன் தன்னிலையிலேயே இருக்கவும் முடியாது ; ஆனால் கீழே உருளவேண்டியிருக்கும்," என்பதேபோல் முஸ்லிம்களை ஆக்கிவிட்டான் ; பூலோகத்தினின்றும் முஸ்லிம்களின் அநேகராஜ்யங்களை நாமதேயமின்றி ஆக்கிவிட்டான். இதையறிந்து முன்போல முஸ்லிம்கள் ஸன்மார்க்கப்பாதையில் நடந்து முன்னேறுவதற்கு ஆயத்தமாகி அதற்காக முயற்சிசெய்து வருவார்களேல் முஸ்லிம்கள் யாதொன்றையுமிழந்துபோகவில்லையென்றும் இழந்துபோனவற்றில் சொற்பம் திரும்பவுமடைந்து கொண்டார்கள் என்றும் சொல்லலாம். ஒரு ஜாதியாரின் விருத்தியானது தங்கள் ராஜ்யவிருத்தியில் சம்பந்தப்பட்டிருக்கிறதென்றாவது அல்லது ஒரு ராஜன் தனக்கு இருக்கும் தேசத்துடன் இன்னொரு தேசத்தைச் சேர்த்துக்கொள்ளும் எண்ணத்துடன் படையெடுத்து அயல்தேசத்தை ஜயித்துக்கொள்வதில்தான் தொங்கித்திருக்கிறதென்றாவது ஒருபோதும் நம்பவேண்டாம். இவ்வித விருத்தியானது ஒரு ஜாதியாரின் விருத்திக்காவது அல்லது அவர்களது மார்க்கத்தின் விருத்திக்காவது காரணமாக மாட்டாது. ஆனால் அறியாத சில கிறிஸ்தவப் பாதிரிமார்கள் கிறிஸ்தவரின் ராஜ்ய விருத்தியானது கிறிஸ்து மார்க்கத்தின் விருத்தியாலென்றும் கிறிஸ்தவ அரசர்கள் ஜயமடைந்து இதரதேசங்களையும் இவர்கள் பிடித்துக்கொண்டதால் கிறிஸ்து மார்க்கத்தின் உண்மையை அது ஸ்தாபிக்கிறதென்றும் தப்பான அபிப்பிராயத்தைப் பலப்படுத்த முயற்சி செய்கிறார்கள். கிறிஸ்துமார்க்க உண்மையால்தான் இதரராஜ்யங்களைக் கிறிஸ்தவ அரசர்கள் ஜயித்துப் பிடித்துக்கொண்டார்கள் என்று தப்பாக அவர்கள் எண்ணுகிறார்கள். கிறிஸ்துமதத்தின் உண்மை இதனால் வெளியாகிறதென்பது பொய்யே. பாதிரிமார்கள் மாத்திரமல்ல, இன்னும் அநேகம் கற்றறிந்தவர்களும் இப்படிப்பட்ட பொய்யும் தப்புமான அபிப்பிராயத்தை உடையவர்களாயிருப்பதாகத் தெரிய வருகிறது. இவர்களுக்கு இக்காலத்தில் உண்டாயிருக்கும் இறுமாப்பினாலும் பெருமையினாலும் இவ்வகைத் தப்பான அபிப்பிராயமுள்ளவர்களாக இருக்கிறார்களென்பதைக் காண்பிக்கும்படியாக, "இருள் நிறைந்த அந்தகாரம்" என்னும் தகுதியான பெயரை வகிக்கத்தக்க ஒரு பத்திரிகையை முஸ்லிம் வோர்ல்டு (Muslim World) அதாவது "ஸன்மார்க்கர் உலகம்" என்று அருத்தங்கொள்ளும்படியான ஒரு போலிப்பெயரை வைத்துப் பிரசுரஞ் செய்கிறார்கள். அதில் அநேக சமயங்களில் முஸ்லிம் ராஜ்யங்கள் காலடைவில் ஒழிந்துபோன விஷயத்தைப்பற்றியும் மற்ற ஜாதியார்களின் அரசர்களுக்குக் கீழ்ப்பட்ட பிரஜைகளாய் முஸ்லிம்களிருப்பதைப் பற்றியும் எழுதி இவையெல்லாம் இஸ்லாத்தின் பல ஹீனத்திற்குச் சாட்சியமென்று எடுத்துக் காட்டிப் பலமுறையும் தங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்கிறார்கள். பொய்யையே கடவுளென்று வணங்கும் இக்கிறிஸ்தவர்கள் பலதேசங்களிலும் முஸ்லிம்களின் ராஜ்யபரிபாலனம் நடக்குங் காலத்தில் அவர்களுக்கு வெகு காலமாய்க் கீழ்ப்பட்டிருந்த கிறிஸ்தவர்களைக் கொண்டு கிறிஸ்து மதத்தின் கோட்பாடுகள் பலஹீனமுள்ளனவென்பதையும் அம்மதம்பொய்யென்று ஸ்தாபிக்கப்பட்டதையும் ஒப்புக்கொள்ளுகிறார்களா ? இல்லையே. விக்கிரஹ ஆராதனை செய்துவந்த ரோமராஜ்யத்திற்குக் கீழ்ப்பட்டுக் கிறிஸ்தவர்கள் 300 வருஷங்கள் வரையிலும் பிரஜைகளாயிருந்ததைக்கொண்டும் இவர்களின் குருமார்கள் மட்டுமல்ல, ஏசுவுங்கூட அந்த ராஜ்யத்துக்கு அடங்கியிருந்ததைக் கொண்டும் அக்கிறிஸ்தவமதம் பொய்யென்றும் அதுசாரமற்றதென்றும் சீக்கிரத்தில் நிலைகுலைந்து அழிந்துபோகுமென்றும் இவர்கள் எண்ணினார்களா ? இல்லையே. ஒரு ஜாதியாரின் மார்க்கத்துக்கும் அவர்கள் குடியிருக்கும் தேசத்தின் ராஜாங்கத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்பதுதான் சரியான உண்மை. ராஜாங்கத்திற்கும் அதன் பிரஜைகளின் மதசம்பந்தமான கோட்பாடுகளுக்கும் யாதொரு சம்பந்தமும் உண்மையில் இல்லையென்பதுதான் நிச்சயம். ஒரு மார்க்கத்தின் மேன்மையானது தான் கீழ்ப்பட்டிருக்கும் அரசனால் கொடுக்கப்பட்ட உரிமையின் காரணத்தால் அல்லவென்று அறிவீர்களாக. அதிகார வர்க்கமின்றி ஒரு நன்மார்க்கம் நிலைத்திருக்கவும் கூடும். முஸ்லிம்கள் தங்கள் ஸன்மார்க்கப் பரவுதலை மற்றெல்லா விஷயங்களை விட முக்கியமானதென்று கருதி அதற்கேற்ற படி நடந்து வருவார்களாயின் அவர்கள் யாதொருவஸ்துவையும் இழந்துவிட்டவர்களாக நாம் கருதவேண்டியதில்லை. ஆனால் ஸன்மார்க்கப் பரவுதலைக் கொண்டே அரசர்களையும் ஸன்மார்க்கத்தில் (இஸ்லாத்தில்)கொண்டுவரக்கூடும். இவ்விதமான அரசசம்பந்தத்துடன் கூடிய ராஜரீகமும் மேம்பாட்டுடன் நிலைத்திருக்கவும் கூடும். கிறிஸ்துமதஸ்தர்கள் இப்போது பெருமை பாராட்டும் ராஜரீகசம்பந்தமானது சுய

கலத்தை மட்டும் நாடிச் சத்தியத்திற்கும் நியாயத்திற்கும் விரோதமாக நடந்து கொண்ட ஒரு விக்கிரஹ ஆராதனைக்காரனை ரோம ராஜன் கிறிஸ்து மதத்தைத் தழுவினதினால் உண்டானதன்றோ? நிதானித்துக் கவனிப்பீர்களேல் ஒரு மார்க்கத்தார் வாழ்ந்து நிலைத்திருப்பதும் விருத்தியடைவதும் அம்மார்க்கப் பரவுதலைக்கொண்டேயென்று அறிந்து கொள்வீர்கள். மற்றெல்லாவிஷயங்களிலும் ஸன்மார்க்கப் பரவுதலே முக்கியமானதென்றும் அதற்காக வேண்டிய முறைகளை அனுசரித்து நடப்பதனால் தான் ஸன்மார்க்கம் நிலைத்திருக்கக்கூடு மென்றும் அறிவீர்களாக. இந்நன்மார்க்கத்தை முன்னேற்றுவதினின்றும் பராமுகமாயிருந்தால் இவர்களின் (முஸ்லிம்களின்) ராஜ்யங்களுக்கு நேரிட்ட கெதியே இவர்களின் மார்க்கத்திற்கும் கூட்டத்திற்கும் உண்டாகி நாளடைவில் இவர்கள் பெயரும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோகும். ஆனால் எம் உறுதியான நம்பிக்கை யாதெனின் இவ்வித இக்கட்டான சமயம் ஒருபோதும் நம் ஸன்மார்க்கத்திற்கு நேரிட்டிராது என்பதுதான். ஆண்டவன் ஸன்மார்க்கப் பரவுதலுக்காக அதிசீக்கிரத்தில் இப்படிப்பட்ட ஒரு சங்கத்தாரை ஏற்படுத்திவிடுவான்; இஸ்லாத்தின் விரோதிகளுடைய தாக்குதலில் நின்றும் இவர்கள் அதைக் காப்பாற்றுவார்கள். ஆயினும் இப்போது நேரிட்டிருக்கும் வாஸ்தவமான விஷயங்களைப் புறக்கணிக்கமுடியாது. இஸ்லாம் ராஜ்யங்களின் தோல்வியைப்பற்றி அழுது மனக்கிலேசமடைவது யாதொரு பிரயோசனத்தையும் கொடுக்காது.

இஸ்லாம் ராஜ்யங்களின்மீது புரளவேண்டிய பிரளயம் புரண்டுவிட்டது. இவ்விதமே அனேக ராஜ்யங்களுக்கு ஆபத்து நேரிட்டிருக்கிறது. முற்காலத்தில் கிரேக் (யூனான்), ரோம், பாரஸீகம் முதலிய ராஜ்யங்களுக்கும் சமீபகாலத்தில் ருஷ்ய ராஜ்யத்திற்கும் நேரிட்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் ராஜ்யப் பிரளயங்களை விட ஒரு மகா பெரியதான பிரளயமுண்டாக்க இடைவிடாமல் முயலுகிறார்கள். அதாவது இஸ்லாத்தையும் அதன் பரிசுத்தம் பொருந்திய ஆதாரங்களையும் இப்பூவுலகினின்றும் வேருடன் களைந்துவிட மிக மும்முரமாய் முயற்சிசெய்துகொண் டிருக்கிறார்கள். இச்சங்கதி ஸன்மார்க்கப் பரவுதலினின்றும் அஜாக்கிரதையா யிருக்கும் முஸ்லிம்களுக்கு ஒன்றும் தெரியாது. முஸ்லிம்கள் இப்பிரளயத்தைத் தடுக்க முயலாவிட்டால் சிறிது காலத்திற்குள்ளாகவே இவ்வித மும்முரமான கிறிஸ்தவ முயற்சியின் மிகக் கெடுதலான முடிவைக் கண்டு பரிதபிப்பார்கள். இன்னும் சிறிது பொழுதுக்குள் கிறிஸ்துமத போதகர்கள் இஸ்லாமானவர்களின் கிராமம்



தேசம் பட்டணம் இவற்றின் மூலைமுடுக்குக்களில் அலைந்து திரிவார்கள். இந்தியாவில் இக்கிறிஸ்தவர்களும் இதர சமயவாதிகளும் இஸ்லாத்தின்மீது பயங்கரமாகவும் பலமாகவும் தாக்க லட்சக்கணக்கான பைபிள்களையும் சாரமற்ற துண்டுப்பத்திரிகைகளையும் முஸ்லிம்களின் கையில் கிடைக்கும்படி செய்து வருகிறது அனேகருக்குத் தெரிந்த விஷயமே. இதற்கு மாறாக முஸ்லிம்கள் குர்ஆன் ஷரீபு திருவேதத்தின் அருத்தத்தை அயலார்களென்ன, தங்களுடைய சொந்த வீட்டிலுள்ளவர்களுக்கே கிடைக்கும்படி செய்வதில்லை. நம் திருவேதத்தைப் புண்ணியார்த்தமாகப் பொருளும் கருத்து மறியாமல் சிலர் மட்டும் படிப்பது மாத்திரமுண்டு. இத்திருவேதத்தைப் பலபாஷைகளிலும் மொழிபெயர்த்து யாவருடைய மனக்கண்ணையும் திறக்கும்படி பிரசுரம் செய்தாலொழியச் சகல மார்க்கத்தார்களும் ஒருவரோடொருவர் எதிர்த்துப் பலமாய்த்தாக்கித் தங்கள் தங்கள் சமயமே சிறந்ததென்றும் உண்மையானதென்றும் வாதாடும் இக்காலத்தில் இஸ்லாத்தின் மேன்மை ஜொலிக்காது. பலசமயங்களுக்கு முன்பாக இப்பரிபூரண ஸன்மார்க்கத்தை (இஸ்லாத்தை) வைத்து ஒத்து நோக்கி ஆராய்ச்சி செய்ய நேர்ந்தால் நமது இஸ்லாம் வேறு சமயங்களுக்கெதிரில் முன்னேற்ற முள்ளதாகவாவது பெருமைவாய்ந்ததாகவாவது இராதென்ற கவலை யாதொரு முஸ்லிமின் மனத்திலும் இருக்க வேண்டியதில்லை; எமக்கும் அவ்வகைக் கவலைகிடையாது. மற்றச் சமயவாதிக ளிருக்கட்டும்; நம் முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் குர்ஆன் ஷரீபின் திருவொளியை அடையாதபடி பராமுகமான நிலைமையி லிருக்கும்பொழுது இவர்கள் வாஸ்தவத்தில் ஸன்மார்க்கர்களாக இருக்கக்கூடுமோ என்னும் கவலைதான் எம்மை மிகவும் வருத்துகிறது. ஆகையால் முஸ்லிம்களும் மற்றவர்களும் திருவேதத்தின் ஜகஜ்ஜோதியான தாத்பரியங்களையும் ஆதாரங்களையும் அறிந்து தெளியும்படியாக நாம் முயற்சி செய்வோமாக. எல்லாரையும் இச்சன்மார்க்கப் பரஞ்சோதியில் கொண்டுவரக் கூடுமென்னும் திண்ணமான உறுதியுடன் இருப்போமாக. இவ்வித உறுதிப்பாட்டுடன் தாங்களும் நம்முடன் சேர்ந்து உழைப்பீர்களேல் அதிசீக்கிரத்தில் நீங்கள் ஜயமடைந்து மிகவும் பிரயோசனமுள்ள கூட்டத்தார் ஆவீர்கள். எப்போதும் இருப்பதுபோல் இப்போதும் இம் முக்கியமான விஷயத்தில் அஜாக்கிரதையாயும் பராமுகமாயும் சோம்பித்திரிபவராயும் இருப்பீர்களேல் இஸ்லாம் ராஜ்யங்களுக்கு நேரிட்டகெதியே நமது மார்க்கத் துக்கும் உண்டாகும். இவ்விஷயத்தில் நீங்கள் உங்கள் பாதத்தை முன்னே வைப்பீர்களேல் உங்

கள் வாழ்வும் நிலைத்திருக்கும்; இல்லாவிட்டால் நம் வாழ்வு நிலை குலைந்துவிடும். முன்னேற்றத்திற்கு முயற்சி செய்யாதார் பின்னிடைவது நிச்சயம்.

தேவையானால் இயற்கையில் காணப்படும் முன்னேற்றத்திற்கான முயற்சிகளைக் கண்டு தெளிந்து கொள்ளுங்கள்; இன்னும் வேண்டுமானால் இதுபரியந்தம் முஸ்லிம்களுக்கு நேரிட்டிருக்கும் தாழ்ச்சியைக் கொண்டும் இஸ்லாத்தின்மீது நாளிதுவரையில் தாக்கப்படும் எதிர்ப்புக்களைக் கொண்டும் கண்டறிவீர்களாக. பற்பல கூட்டத்தார்களும் தங்களுடைய கொள்கை (மார்க்கம்) தான் உண்மையான தென்றும் உறுதியான தென்றும் முழுப்பலத்துடன் தங்கள் தங்களின் நிலைமையை ஸ்திரமாக ஸ்தாபனம்செய்ய ஆயிரக்கணக்கான முறைகளைக் கவனிக்கும் சமயத்தில் மேலேசொன்ன முன்னேற்ற முயற்சிகளில் எல்லாரையும் விட இஸ்லாமானவர்கள் முன்னேற்ற மடைவதில் தான் அவர்களுடைய வாழ்வின் நிலைமையும் ஸ்திரப்படு மென்றறியவேண்டும். உங்கள் நிலைமையை ஸ்திரப்படுத்துவதைவிட உங்களுக்குவேறு முக்கியமான பெருங்காரியமில்லை யென்றறிவீர்களாக. எதிரிகளை இலேசில் தோல்வியடையச் செய்யும்படியான புஜபல சக்தியும் நமக்குண்டென்னுந் திண்ணமான உறுதியுடன் புறப்படுங்கள். இவ்வித நிர்ணயமான மனத்துணிவுடன் புறப்படாத வரையிலும் அயலாரைத் தோல்வியடையச் செய்து அவர்களை அடக்கி ஆளக்கூடிய ஜயத்திற்கு ஆதாரமான பூரணபராக்கிரமமும் மனத்திடமும் வீரத்தனமும் உங்களுக்குண்டாகா. அது பரியந்தம் உங்கள் முயற்சிகளும் பயன்படா. எப்போதும் ஸன்மார்க்கப் பரவுதலே உங்களின் மற்றெல்லாத் தொழில்களைவிட மிகவும் விசேஷமான தென்னுங் கவலையுடன் அதைப் பரப்பமுயலுங்கள்; இல்லாவிடின், "உங்கள் தந்தையரும் மைந்தர்களும் சகோதரர்களும் மனைவிகளும் பந்துக்களும் நீங்கள் சம்பாதித்த திரவியங்களும் எதிர் நடைபெறாமல் நின்று போகுமென்று பயப்படுகிறீர்களோ? அந்த வர்த்தகமும் நீங்கள் பொருந்திக்கொண்ட வாஸஸ்தலமும் அல்லாஹ்வைக் காட்டிலும் அவனுடைய ரஸூலைக்காட்டிலும் அவனுடைய பாதையில் சமர்புரிவதைக் காட்டிலும் உங்களுக்கு அதிகப் பிரிய முள்ளனவா யிருந்தால் அல்லாஹ் தனது ஆக்கினையை அனுப்புகிற வரையில் வழிபாருங்கள்; பாதகரான கூட்டத்திற்கு அல்லாஹ் நல்வழி காட்டுவதில்லை," என்னும் இத்திருவாக்கின்படியே உங்கள் கெதியும் நேரும். (தொடரும்)

முஸ்லிம்நேசன்.



[ஜிஹாதேகபீரென்னும் இவ்வியாசமானது லாஹூர் மௌலானா மௌல்வி முஹம்மதிலிசாஹிப், எம். ஏ., எல்எல்., பி., அவர்களால் உருதுபாஷையில் எழுதப்பட்டிருக்கும் நூலிலிருந்து நண்பர் "முஸ்லிம் நேசனால்" நம் நாட்டுவாசிகளின் நன்மைக்காக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதன் பத்து அத்தியாயங்களும் நாளடைவில் வெளி வரும். ப-ர்.]

## நான் ஏன் முஸ்லிமாயிருக்கிறேன்?

"அல்லாஹுத் தஆலாவின் ஒளியைத் தம்முடைய வாயால் அணைப்பதற்கு அவர்கள் விரும்புகின்றனர்; ஆனால் நம்பிக்கையற்றவர்கள் வெறுப்புடனிருந்த போதிலும் அல்லாஹுத் தஆலா தன் ஒளியைப் பூர்த்திசெய்து வைப்பான்."

"பல தெய்வ வணக்கக் காரர்கள் வெறுப்புடனிருந்த போதிலும் எல்லாமார்க்கங்களைக் காட்டிலும் இம்மார்க்கம் சிலாக்கியமடையும்படி அவன் செய்தற்காகவே நேர்வழியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் தன்னுடைய திருத்தூதரை அனுப்பியவன் அவனே"— (குர்ஆன், 61:8,9).

"நிச்சயமாக அல்லாஹுத் தஆலாவிடத்தில் உண்மையான மார்க்கம் இஸ்லாம்"—(குர்ஆன், 3:18).

பூவுலகின்கண் மானிடராய்ப் பிறந்தாரெல்லாரும் பெறுதற்குரிய காரியங்களுள் முதன்மையானது ஆத்மஞானம். பெறுதற்கு உரிய காரியங்களுள் ஆத்மஞானம் முதன்மையாயிருப்பதுபோல் பெறுதற்கு அரிய காரியங்களுள்ளும் இதுவே முதன்மையாயிருக்கின்றது. பெறுதற்கு அரியதும் உரியதுமாகிய இந்த ஆத்மஞானம் தான் நாம் மனிதப்பிறவி யெடுத்ததன் பலனை அடையும்படி செய்கின்றது. ஏனெனின், இவ்வுலகில் படைக்கப்பட்டிருக்கும் படைப்புக்களெல்லாம் மனிதனுக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன வென்றும், மனிதனைக் கடவுள் படைத்ததன் நோக்கம் ஜீவாத்மா பரமாத்மாவின் தன்மையை யறிந்து அதைத் தரிசித்து அதனுடன் கலப்பது தானென்றும் எம் சத்திய வேதத்தின் தத்துவத்தால் அறிந்து கொள்கிறோம். "படைத்த படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப்படைத்திட்டான் தனைவணங்க," என்பது பெரியார் கண்ட உண்மை. இறைவனை வணங்குவதென்றால் அவனைத்தொழுது அவனுடைய குணாதிசயங்களை யறிதலாகும். இறைவனுடைய குணாதிசயங்கள் இன்ன இன்னவையென்று அறிந்துகொள்ளல் வேண்டும். "தன்னை உணர்ந்தவன்

தான் தன் நாயகனை உணர்வான்'' என்பது மேலோர் கண்ட உண்மை. ஆகவே பரமாத்மாவின் தன்மையை யுணரவேண்டுமாயின் முதன் முதல் ஜீவாத்மாவின் தன்மையைத் தெளிவாக உணர்தல் அவசியமாகும். ஜீவாத்மாவின் தன்மையை யுணர்ந்து அதன்பின் பரமாத்மாவின் குணாதிசயங்களை யறிதற்கு மனிதர்கள் பல துறைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். ஆனால் மனிதர்கள் ஏற்படுத்திய துறைகளைக் காட்டிலும் கடவுளே காட்டிக்கொடுத்த வழியொன்றிருக்குமாயின் அதுதான் ஏனை வழிகளைவிடச் சிலாக்கியமானதாகும். மனிதர்கள் எவ்வளவு புத்திமான்களாயினும் இவர்களுடைய வழிகளெல்லாம் இறைவனால் காட்டப்பட்ட நேர்வழிக்கு ஈடாகமாட்டா. இதனால் தான் புத்திமான்களெல்லாம் ஆத்மஞானத்தை அடைய விரும்பும்போது மனிதர்களால் கண்டு பிடிக்கப்பட்ட துறைகளைக் காட்டிலும் இறைவனுடைய வழியையே நாடிச் செல்கின்றனர்.

மேற் கூறியபடி இறைவனால் காட்டப்பட்ட வழியொன்றுண்டோ வென்று ஆராயப்புகும்போது ஒவ்வொரு மதத்தினரும் தம் தம்முடைய மார்க்கமே நேரான வழியென்று சாதிக்கத் துணிகின்றனர். சிலர் தங்களுடைய மார்க்கம் மட்டும் தான் சிலாக்கியமான நேர்வழியென்றும், வேறு சிலர் உலகத்திலுள்ள எல்லாமதங்களும் நேர் வழியைக் காட்டக்கூடிய சமயோக்கியதையுடையவைகளே யென்றும் தம்முடைய அறிவுக்குத் தக்கவாறு கூறுகின்றனர். இவ்வாறே தம்முடைய மதமே சிறந்ததென்று சிலர் சொல்லும்போதும், எல்லா மதங்களும் சமமான உண்மையையுடையவைகளே யென்று வேறு சிலர் கூறும்போதும் யான் எந்த மதத்திலிருப்பது சிலாக்கியம் என்னும் கேள்வி உதிக்கின்றது. அப்பால், யான் ஏன் முஸ்லிமாயிருத்தல் வேண்டும் என்னும் வினா என் மனத்துக்குள் எழுகின்றது.

யான் ஏன் முஸ்லிமாயிருத்தல் வேண்டும் என்னும் கேள்வி உதிக்கும்போது, இஸ்லாமார்க்கம் இகபரம் இரண்டுக்கும் எல்லா மார்க்கங்களைக் காட்டிலும் சிறந்ததாயிருப்பதனால் யான் முஸ்லிமாயிருக்கின்றேனா, அல்லது வேறேதேனும் காரணமுண்டா என்னும் மற்றொரு வினா தோன்றுகிறது. யான் முஸ்லிம் உலகத்தில் பிறந்ததனால் மட்டும் முஸ்லிமா? அல்லது முஸ்லிமான தாய் தந்தையருக்குப் பிறந்ததனால் முஸ்லிமா? அல்லது முஸ்லிமைப்போல் பேர்வைத்திருப்பதனால் முஸ்லிமா? அல்லது என்னுடைய நடை உடை பாவனைகளில் முஸ்லிமைப்போல் நடிப்பதனால் முஸ்லிமா? அல்லது முஸ்லிம்களைப்போல் எனக்கு ஸுன்னத் செய்திருப்பதால்



முஸ்லிமா? அல்லது முஸ்லிம் பெண்ணை விவாகம் செய்துகொண்டதனால் முஸ்லிமா? அல்லது யான் இறந்துபோகும்போது முஸ்லிம்களுக்குரிய சடங்குகளின்படி எனக்குக் கருமங்கள் செய்யப் போகிறார்களே அதனால் நான் முஸ்லிமா? இக்காரியங்களாலெல்லாம் யான் முஸ்லிமாய் விடவில்லை. ஏனெனின், அல்குர்ஆனில், "உறுதியாக, நம்புகின்றவர்களுள்ளும், யூதர்களாகவும் கிறிஸ்தவர்களாகவும் சாபியீன்களாகவும் இருக்கின்றவர்களுள்ளும் எவரொருவர் அல்லாஹுத் தஆலாவின்மீதும் கடைசிநாளிலும் நம்பிக்கை வைத்து நன்மை செய்கின்றாரோ அவர்தாம் தம்முடைய நாயனிடத்திலிருந்து நன்கொடை பெறுவார், அவர்களுக்கு அச்சமில்லை, அவர்கள் வருந்த வேண்டியது மில்லை,'' என்று ஒரு வாக்கியம் (2:62) வருகின்றது; இதேகருத்து அல்குர்ஆனில் 5:69-லும் காணப்படுகிறது. ஆதலின் எத்தேசத்திற் பிறப்பினும் எச்சாதியில் தோன்றினும் முஸ்லிம்களுக்காகக் கடவுள் நியமித்திருக்கும் நியதிகளைச் செவ்வனே நடத்துபவனே முஸ்லிமாவானல்லாது மேலே சொல்லப்பட்ட வெளிவேஷங்களால் மட்டும் ஒருவர் முஸ்லிமாதல் முடியாது. வெளிவேஷங்கள் இருப்பதோடு உள்ளத்தின் பரிசுத்தமும் இருந்தால் மட்டுமே ஒருவர் முஸ்லிமாக இருத்தல் முடியும். ஆகவே யான் முஸ்லிமாயிருப்பதற்குப் போதிய காரணங்கள் மேற்கூறிய வெளிவேஷங்கள் மட்டுமல்ல; ஆனால் சத்திய சன்மார்க்கத்துக்குரிய எல்லாயோக்கியதைகளும் பொருந்தி இகபரசாதகங்களுக்குரிய இலேசான நேர்வழிகளைக் காட்டுவதில் ஏனைமார்க்கங்களைக் காட்டிலும் இஸ்லாம் சிலாக்கியமா யிருப்பதால்தான் யான் முஸ்லிமாயிருக்கிறேன்.

எல்லா மதங்களிலும் இஸ்லாமார்க்கம் சிறந்ததென்று சொல்லும்போது மார்க்கமென்றாலென்ன? இஸ்லாம் ஏனைமார்க்கங்களைக் காட்டிலும் எப்படிச் சிறந்தது? என்னும் கேள்விகள் உதிக்கின்றன. மார்க்கமென்றால், "மனிதர்கள் இகலோகத்தில் சர்வ சுகத்தையும் நாகரீகத்தையும் அடைந்து தங்களுடைய சக்தியை முற்றிலும் முதிர்ச்சி பெறும்படி செய்து இதன்தொடர்ச்சியாகப் பரலோகத்தில் நித்தியானந்தத்தையும் முத்தியின்பத்தையும் சதாசான்னித்தியமாக அடைந்து அதற்குமேல் பரமண்டலத்திலுள்ள பரமநாயகனுடன் ஒன்றிப்பதற்கு வேண்டிய அனுஷ்டான முறைகளைக் காட்டிக்கொடுக்கும் சன்மார்க்கமாகும்.'' இப்படிப்பட்ட சன்மார்க்கம் இஸ்லாம் ஒன்றுதானா அல்லது வேறு மதங்களுமுண்டா வென்னும் சந்தேகம் தோன்றலாம். ஆனால் இஸ்லாமார்க்கத்தின் தன்மையை இதரமதங்களுடன் ஒப்பிட்டு நன்றாக ஆராய்ச்சி செய்

யின் இகபரசாதகங்களுக்குரிய எல்லா நலன்களையும் அதிலேசாய்க் கொடுப்பது இம்மார்க்கமொன்றே யென்பது தெளிவாகும்.

எல்லா மதங்களிலும் இஸ்லாமார்க்கம் எப்படிச் சிறந்ததென்பதை நிரூபிக்கவேண்டுமாயின் அதன் தன்மைகளை ஒவ்வொன்றாக நன்கு ஆராய்தல் வேண்டும். முதன் முதலாக ஒருமதம் மனிதர்களுக்கு இகபரம் இரண்டிலும் எல்லா நலனும் செய்யவேண்டுமாயின் அது கடவுளிடத்திலிருந்தே தோன்றியிருத்தல் வேண்டும். மனிதன் எவ்வளவு பெரிய மகாபுத்திமானாயினும் எக்காலத்துக்கும் எத்தேசத்துக்கும் எச்சாதியாருக்கும் பொருத்தமான மதத்தை வெளிப்படுத்துவது அசாத்தியமாகும். இகபரம் இரண்டுக்கும் பயன்தரும்படி முக்காலத்துக்கு மொத்த ஒரு மதத்தை நிலை நிறுத்துவது மனிதனால் இயலும் காரியமன்று. "இவ்வேதம், இதில் ஒன்றும் சந்தேகமில்லை, (தீமையினின்றும் தம்மைக்) காப்பாற்றிக் கொள்பவருக்கு இஃதொரு வழிகாட்டியாயிருக்கிறது," என்று குர்ஆனே கரீமின் 2:2-ல் ஒருவாக்கியம் வருகின்றது. இஃதேபோல் இன்னும் பலவாக்கியங்கள் காணப்படுகின்றன. அவற்றாலெல்லாம் அல்குர்ஆன் வேதம் ஆண்டவனிடத்திலிருந்தே வெளியாயிற்றென்பது தெள்ளிதில் விளங்குகின்றது. முஸ்லிம்களுக்குரிய சுத்த சத்திய சம்பூர்ண வேதமாகிய குர்ஆன்ஷரீபைப் போல் வேறு ஜாதியாரின் வேதங்கள் கடவுளிடத்திலிருந்து வெளியானதாகக் காணப்படவில்லை. எமது சுத்த சத்தியவேதம் வெளிப்படுத்தப்பட்ட விதம் இன்னதென்றும் வேறு வேதங்கள் வெளியானவிதம் இன்னதென்றும் வேதங்களின் உற்பத்திக் கிரமத்தை ஒப்பு நோக்கி ஆராய்ந்துணர்ந்த ஒவ்வொருவரும் எம் குர்ஆன் ஷரீபைப்போல் இதர வேதங்கள் ஆண்டவனிடத்திலிருந்து வெளியாயிருத்தல் முடியாதென்றே முடிவுகட்டி யிருக்கின்றனர். எம் வேதத்தின் ஒவ்வொரு வாக்கியமும் நபிகள் பெருமானார் மூலியமாய் வெளியானவுடன் அந்த அந்த வாக்கியமும் அதிபத்திரமாய் எழுதப்பட்டும் மனஸால் பாராயணம் செய்யப்பட்டும் சிலா சாசனத்தைக் காட்டிலும் அதிபலமாக அமைக்கப்பட்டது. 1300 வருஷங்களுக்குமுன் இருந்ததுபோலவே இன்றைக்கும் அத்திருக் குர்ஆன் வேதம் ஒரு சிறிதும் மாறுபடாமல் உலகமுழுதும் ஒரே பாடமாய்க் காணப்படுகின்றது. ஆனால் இக்காலத்தில் இதர மதங்களில் காணப்படும் வேதங்கள் எக்காலத்தில் வெளிப்படுத்தப் பட்டனவென்றும், யார் மூலியமாய் வெளியாயின வென்றும், கிரந்த ரூபமாய் யாரால் எழுதப்பட்டனவென்றும் கேட்கப் புகுந்தால் அவ்வேதங்களுள் ஒன்றேனும் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட



தன்றென்பது பட்டம் பகல்போல் திட்டமாய் ஏற்படும். ஆகவே இஸ்லாத்தின் கொள்கைகளும் அனுஷ்டானங்களும் நேரே அல்லாஹ்த் தஆலாவால் வெளியாயின வென்பது உறுதியாகின்றது. இதனாற்றான் யான் முஸ்லிமாயிருக்கின்றேன். உலகத்துக்கு அவசியமானபோது உதயமாகும் மார்க்கமே உண்மையான மார்க்கமாகும். கடவுளிடத்திலிருந்து ஒரு மார்க்கம் வெளிப்படவேண்டுமாயின் இவ்வுலகத்துக்கு அவசியம் நேரிடும்போது அம்மார்க்கம் உதயமாதல் வேண்டும். உலகத்துக்கு அவசியமானபோது உதயமாகும் மார்க்கமே உண்மையான மார்க்கமாகும்; இப்படி உதயமானதுதான் இஸ்லாம். ஒரு வைத்தியனுடைய மருந்து குணத்தைத் தரத்தக்கதா இல்லையாவென்று பரீக்ஷிக்க வேண்டுமாயின் அதை ஒரு நோயாளிக்குக் கொடுத்துப் பரிசோதனை செய்தல் வேண்டும். சரீராரோக்கிய முள்ளவனுக்கு அம்மருந்தைக் கொடுத்தால் அவனுக்கும் பிரயோசன முண்டாகாது; மருந்தின் குணமும் இன்னதென்பது தோன்றாது. நோயாளிக்குக் கொடுத்து அந்நோய் தீரும்பக்ஷத்தில் அம்மருந்து சிலாக்கியமானதென்றே சிறப்பாய்ச் சொல்லலாம். அஃதேபோல் மனிதவர்க்கத்துக்கும் ஆத்மவியாதி அதிகரித்திருக்கும்போது ஒருவேதம் வெளிப்பட்டு அவர்களுடைய ஆத்மவியாதியைப் போக்கி மேன்மைபெறச் செய்யுமாயின் அவ்வேதத்தைச் சுத்த சத்திய சம்பூர்ண வேதமென்றே சொல்லலாம். அம்மதத்தையும் உண்மையான மதமென்றே ஏற்றுக்கொள்ளலாம். இப்படிப்பட்ட தன்மை வேறுமதங்களில் உண்டோவென்று ஆராயின் அவற்றில் அப்படிப்பட்ட சிலாக்கியம் ஒன்றும் காணப்படவில்லை.

பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் இவ்வுலகமானது மகா கொடிய அக்ஞானாந்தகாரத்துக்குள் மூழ்கிக் கிடந்தது. உலகமுழுதும் அக்காலத்தில் விக்கிரக ஆராதனையும், குடியும், வெறியும், பிறர் மனைவிழைதலும் (ஜினா) அதிகரித்திருந்தன. 13 நூற்றாண்டுகளுக்குமுன் இருந்ததுபோல் மனிதர்கள் அவ்வளவு தாழ்ந்த நிலைமையில் அதற்கு முன்னும் இருந்ததில்லை, பின்னு மிருந்ததில்லை. தேசசரித்திரக் காரர்களெல்லோரும் அக்காலத்தை மகா கொடிய அக்ஞானாந்தகாரம் நிறைந்த காலமென்றே சரிதித்திருக்கின்றனர். உலகமுழுதும் மிகத்தாழ்ந்த நிலைமையிலிருந்தபோதிலும் மற்றெல்லாத் தேசங்களைக் காட்டிலும் அரபுதேசம் அதிக கேடான நிலைமையிலிருந்தது. தீமைகள் யாவுமோர் திரண்டவுருக்கொண்டாற்போல் அரபுதேசம் பாபத்துக்கும் அக்கிரமத்துக்கும் ஒரு சிகரமாய் விளங்கிற்று. 1300 வருஷங்களுக்குமுன் அரபுநாடு இருந்த நிலைமையை

யும் இதர தேசங்களின் நிலைமையையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கின் ஏனைநாடுகளிலிருந்த கொடுமை அரபுநாட்டின் கொடுமைக்கு உறையிடக்கூடக் காணாது. தேச சரித்திரக்காரர்கள் கண்டு பிடித்திருக்கும் உண்மை இது. அக்காலத்தில் அரபிகள் விக்கிரக ஆராதனையை அபரிமிதமாய்ச் செய்துவந்தனர். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு தெய்வமுண்டு; ஒவ்வொரு கிராமத்துக்கும் கிராமதேவதை வேறொன்றுண்டு; ஒவ்வொரு கோத்திரத்துக்கும் வெவ்வேறு தேவதைகளுண்டு. அரபு நாட்டுக்கு நடுநாயகமாகிய திருமக்கமா நகரின்கண் விளங்கும் கஅபத்துல்லா வென்னும் தேவாலயத்தைச் சுற்றி மட்டும் 360க்கு மேற்பட்ட விக்கிரகங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அக்காலத்தவர்களுடைய வீடெல்லாம் தெய்வம், காடெல்லாம் தெய்வம், வாரையெல்லாம் தெய்வம், கூரையெல்லாம் தெய்வம், நதியெல்லாம் தெய்வம், கடலெல்லாம் தெய்வம், மலையெல்லாம் தெய்வம், அலையெல்லாம் தெய்வம், வானத்தின்கண் காணப்படும் அத்தனை நக்ஷத்திராதி கிரகங்களும் தெய்வம்; இன்னும் உலகில் காணப்படும் இயற்கைப் பொருள்களெல்லாம் அவர்களுக்குத் தெய்வமே. ஆனால் அவர்களால் தெய்வமென்று கருதப்பட்ட எல்லாத் தெய்வங்களையும் படைத்துக்காத்து அழிக்கும் பரதெய்வம் (அல்லாஹுத் தஆலா) ஒன்றுண்டென்பதுமட்டும் அக்காலத்திய அரபிகளுக்குத் தோற்றவில்லை.

இயற்கைப் பொருள்களையெல்லாம் தெய்வமென்று சொன்னதோடு நில்லாமல் அவர்கள் அபரிமிதமான "குடி"யையும் கைக்கொண்டிருந்தனர். போனகம் (போஜனம்) மூன்று வேளையும் பானகம் (மதுக்குடித்தல்) ஐந்து வேளையும் செய்து வந்தார்கள். அக்காலத்திய அரபிகளைப்போல் அவ்வளவு மிதமிஞ்சிக் "குடி"த்தவர்கள் வேறொரு ஜாதியாருமில்லை. இது மட்டுமா? இல்லை. தங்களுடைய பெண் குழந்தைகளைப் பிறந்தவுடன் புதைத்துவிடுவார்கள். பெண்ணைப் பிறந்த குழந்தைகள் பின்னொரு காலத்தில் எவனுக்கு மனைவியாகுமோ அல்லது யாருக்கு வைப்பாட்டியாகுமோவென்று பெண் சிசுக்களையெல்லாம் உயிருடன் புதைத்து வந்தார்கள். இது போகட்டும்; துஷ்டத்தனத்திலும் பழிக்குப் பழி வாங்குவதிலும் எப்படியிருந்தார்களென்று ஆராய்ச்சி செய்யின் இவ்விரண்டு துர்க்குணத்திலும் தமக்கு ஏனையோர் ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்று கண்டோர் சொல்லும்படி அவ்வளவு துஷ்டர்களாகவும் பழிக்குப் பழி வாங்கும் தூர்த்தர்களாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு ராஜ்யமென்பதும், அரசனென்பதும், குடிகளென்பதும், அரசனுக்குக் குடிகள் அடங்கி நடப்பதென்ப





தும், அரசன் ஆணை இன்னதென்பதும் ஒன்றும் தெரியாது. ஆனால் அவர்கள் கோத்திரம் கோத்திரமாகத் தமக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு "காட்டு மிராண்டிகள்"போல் இருந்தார்கள். ஒரு கோத்திரத்திலுள்ள ஒருவனை மற்றொரு கோத்திரத்தான் கொன்றுவிட்டால் இரண்டு கோத்திரத்துக்கும் பழிக்குப் பழி வாங்கும் யுத்தம் ஆரம்பமாகும். இப்படிப்பட்ட ஒரு யுத்தம் ஒருவருஷம் இரண்டுவருஷத்தோடு முடிவடைவதில்லை; ஆனால் நூற்றாண்டுக் கணக்காக நடைபெறும். இரண்டு கோத்திரத்தாருக்கு இடையிலேதான் இந்த யுத்தம் நடக்குமென்று நினைக்கவேண்டாம்; ஒவ்வொரு கக்ஷியிலும் அநேக கோத்திரங்கள் சேர்ந்துகொள்ளும். ஆகவே ஒருயிருக்காக ஒரு பெரிய மகா யுத்தம் நூற்றாண்டுக் கணக்காக நடக்கும்.

இன்னும் அக்காலத்து அரபிகளின் கெட்ட பழக்கவழக்கங்களை விரிப்பதென்றால் அது விரிக்க விரிக்க விரிந்துகொண்டேபோய் ஒரு தனிப் புத்தகமாகும். மனிதர்களின் தன்மைதான் இப்படியிருந்ததே; தேசத்தின் தன்மையாவது *குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்று சொல்லக்கூடிய நால்வகை அழகுவாய்ந்த பூமியோவெனின், அதுவுமில்லை. இடையிடையே மொட்டைமலைகள் முளைத்திருக்கும் மணல் வெளியான [illegible]ஷ்ணப் பிரதேசமாகிய பாலைவனம் தான் அரபுநாடென்பது; இப்பாலைவனத்தில் அதிக அபூர்வமாய் எங்கெங்கோ ஒவ்வோரிடத்தில் சிறு நீர்நிலைகள் காணப்படும். அரபு நாட்டை நேரில்போய்க் கண்டாலொழிய அதன் கொடுமை இத்தன்மைத்தென்று எளிதில் உணர்ந்து கொள்ளுதல் முடியாது.

"பாருமோடாது நீடோதெனும் பாலதே
சூருமோடாது கூடாதரோ சூரியன்
தேருமோடாது மாமாகமீ தேரினோர்
காருமோடாது நீள்காலுமோ டாதரோ"

என்பது இந்நாட்டுக்குத் தான் பொருந்தும்.

இப்படிப்பட்ட அரபுநாட்டில் அப்படிப்பட்ட காலத்தில் எம்முடைய திருவேதமாகிய பெருமறை வெளியாயிற்று. உடனே அரபுநாட்டின் தன்மையும் அரபிகளின் குணவிசயங்களும் மாறத் தலைப்பட்டன. உலகத்தில் இருக்குமிடம் தெரியாமல் மணல் வெளியில் மறைந்து கிடந்த அரபுதேசம் மற்றைத் தேசங்களுக் கெல்

* குறிஞ்சி-மலையும் மலைசார்ந்த இடமும்; முல்லை-காடும் காடுசார்ந்த இடமும்; மருதம்-வயலும் வயல்சார்ந்த இடமும்; நெய்தல்-கடலும் கடல் சார்ந்த இடமும்.

லாம் ஓர் உன்னத சிகரம்போல் ஆய்விட்டது. இன்றைக்கும் உலகத்தின் பல தேசங்களிலுமுள்ள பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் அரபுதேசத்துக்கு வருஷத்துக்கு ஒருமுறை யாத்திரை போகின்றனர். இது இவ்வுலகத்துக்கொரு முகமலர்போல் விளங்குகின்றது. அரபிகளின் தன்மையோ, வாதவேலையால் பரிசுத்தம் செய்யப்பட்ட 'இரும்பானது பத்தரைமாற்றுத் தங்கமாவதேபோல் முழுதும் பரிசுத்தமடைந்து விட்டது. புலியைப்போலிருந்த அரபிகள் பசுவைப்போலாகி உலகத்துக்கெல்லாம் ஞானச்சுடரைக் கொளுத்த ஆரம்பித்து விட்டனர். அவர்களைப் பீடித்திருந்த அக்ஞான அந்தகாரமான ஆத்மவியாதியும் அறவே ஒழிந்தது. விக்கிரகஆராதனை விதை முதலுக்கும் இல்லாமல் அடியோடொழிந்தது; 5 வேளை மதுபானம் 5 வேளை மதவணக்கமாக மாறிற்று. சிசுஹத்தியும் ஸ்திரீஹத்தியும் ஒழிந்து பெண்களின் நிலைமை மிக மேன்மையுற்றது. மேலும் அரபிகளைப் பிடித்திருந்த ஆத்மவியாதியானது அடியோடொழிந்தது. இக்காரணங்களால்தான் உலகத்துக்கு அத்தியாவசியமானபோது உதயமான உண்மையுள்ள உத்தம மார்க்கம் இஸ்லாமிய மார்க்க மென்றே நாம் நம்புகிறோம். இன்றைக்கும் இவ்வுலகத்தின் ஜனத்தொகையில் மூன்றிலொரு பங்குக்கு மேற்பட்டவர் இந்த இஸ்லாமார்க்கத்திலிருந்து இம்மார்க்கமே சுத்த சத்திய சன்மார்க்க மென்று நம்பி நலமடைந்து வருகின்றனர். இதனால்தான் யானுமொரு முஸ்லிமாயிருக்கிறேன்.

இதுபோன்ற இன்னுமனேக வியாசங்களை அடிக்கடி எழுதி யான் ஏன் முஸ்லிமாயிருக்கிறேன் என்பதை இன்னும் விளக்கமாய் உங்களுக்குத் தெரிவிப்பேன், இன்ஷா அல்லாஹ்.

மௌலா இஸ்லாம்.

## குர்பானி பைரம்.

ஹஜ்ஜு மாதத்தில்வரும் விசேஷப் பெருநாளான ஈதுல்லுஹா தினத்தன்று ஸ்ரீமான்களான ஒவ்வொருவரும் குர்பானி செய்ய வேண்டுவது தங்கள்மீது வாஜிபென அறியவேண்டும். குர்ஆன் ஷரீபில் அல்லாஹுத் தஆலா நபிகள் நாயகத்துக்குப் பின்வருமாறு கூறியிருக்கிறான்: "நீர் உம்முடைய இறைவனைத் தொழுதுகொண்டு குர்பானியை (பலியை) நிறைவேற்றுவீராக"—(குர்ஆன், 108:2) இந்த ஆயத்தில் தொழுகை யென்பது ஈதுல்லுஹாவின் தொழுகையென்றும் குர்பானியென்பது குர்பானி பைரமென்றும் தப்ஸீருஹுபஸாவீயில் எழுதியுள்ளார்.



குர்பானி பைரத்தை வாஜிபாய் உடையவர்கள் ஒருபோதும் அதைச் செய்யாமலிருப்பது கூடாது. "எவனொருவன் ஸ்ரீமானாயிருந்து குர்பானி செய்யவில்லையோ அவன் ஒருபோதும் எங்களுடைய முஸல்லாவினிடம் வரவேண்டாம்" என்று நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சொல்லியிருக்கிறார்கள்—(இப்னு மாஜ்ஜா). பித்ரு, ஸதகா முதலியவற்றை விதியாக 'வுடையவர்கள் குர்பானியையும் அவசியம் நிறைவேற்ற வேண்டும் — (ஷாஹுவிகாயா). பருவமடையாத சிறுவர்கள் அடிமைகள் ஆகிய இவர்களுக்கு, பித்ரு ஸதகா கொடுக்கவேண்டியது கடமையாயினும், அவர்களுக்காகக் குர்பானி கொடுக்கவேண்டியது கடமையாகாது — (ஹிதாயா). பருவமடையாத சிறுவன் ஸ்ரீமானாயிருந்தால் அவனுடைய தகப்பன் அல்லது கார்டியன் அச்சிறுவனுடைய சொத்திலிருந்து குர்பானி கொடுக்கவேண்டும்—(ஆலம்கீரி). அச்சிறுவனுக்காகக் கொடுக்கப்பட்ட குர்பானியில் அவன் எவ்வளவு இறைச்சி தின்னக்கூடுமோ அவ்வளவு இறைச்சியைத் தின்னக்கொடுத்து, எவ்வளவு இறைச்சி அவனுடைய பின் உபயோகத்திற்கு வேண்டுமோ அவ்வளவு இறைச்சியை எடுத்து வைத்துவிட்டு, மிகுதியான இறைச்சியை அந்தச் சிறுவனுடைய வஸ்திரத்துக்காக அல்லது பாதரக்ஷைகளுக்காக மாற்றிவிடவேண்டும்—(துர்ரு முக்தார்). இந்த மிகுதி இறைச்சியைக் கிரயத்துக்கு விற்று அதற்கு வேறு வஸ்துக்களை வாங்குவது கூடாது. இறைச்சியையே கொடுத்து வஸ்திரம் முதலிய இதர வஸ்துக்களை மாற்றி வாங்கிக்கொள்ள வேண்டும்—(ஷாமி). அச்சிறுவனுடைய தகப்பன் அல்லது கார்டியன் அந்த இறைச்சியைப் பகிர்ந்துவிடலாகாது; அப்படிப் பகிர்ந்துவிட்டால் அதன்கிரயத்தை அவ்வாறு செய்தவன் தண்டங்கொடுக்கவேண்டும். ஆனால் அச்சிறுவனுடைய பெண்சாதி பணிவிடைக்காரர்கள் ஆகிய இவர்களுக்குத் தின்னக் கொடுக்கலாம். தகப்பன் தன்னுடைய சொத்திலிருந்து பிள்ளையின்பேரால் குர்பானி கொடுத்தால் அது தன்னுடைய குர்பானிக்கு ஒப்பாகுமாகையால் அதைத் தன்னிஷ்டப்படி செலவு செய்யலாம்—(ஜாமி உர்ரமூஸ்.)

ஓர் ஏழை மனிதன் குர்பானி செய்யும் எண்ணத்துடன் ஓர் ஆட்டை வாங்கினால் அவன்மீது குர்பானி செய்யவேண்டுவது வாஜிபாகிவிடும். ஒரு ஸ்ரீமான் பிரயாணம் செய்துகொண்டிருந்தால் அப்பொழுது அவன்மீது குர்பானி வாஜிபல்ல—(ஆலம்கீரி.)

குர்பானி கொடுக்கும் நாட்கள் மூன்றாகும்: துல்ஹஜ்மாதத்தின் பிறை 10, 11, 12 ஆகிய தேதிகளாகும். 11-ந் தேதியைவிட 10-ந் தேதி விசேஷமானதாகும்; 12-ந்தேதியைவிட 11-ந்தேதி விசேஷ

முள்ளதாகும்; 12-ந் தேதியில் குர்பானி கொடுப்பது சொற்ப தவாபை யுடையதாகும்—(ஆலம்கீரீ). பட்டணங்களிலுள்ளவர்களுக்குக் குர்பானியின் அவ்வல்வக்தானது ஈதுல்லுஹாத் தொழுகைக்குப் பின்னாயிருக்கும். நாட்டுப்புறத்திலுள்ளவர்களுக்கு தீஹஜ்ஜின் 10-ந் தேதி ஸுபுஹுஸாதிகிலிருந்து வந்து ஆரம்பமாகும். அதாவது பட்டணங்களிலுள்ளவர்கள் ஈதுத் தொழுகைக்கு முன் குர்பானிகொடுப்பது ஆகாது; நாட்டுப்புறவாசிகள் ஈதுத் தொழுகைக்கு முன்னமே குர்பானிகொடுப்பது ஆகும். இவ்விருதாரத்தாரின் குர்பானியின் முடிவு நேரம் தீஹஜ்ஜு மாதத்தின் 12-ந் தேதியின் சூரியாஸ்தமனம் வரையிலாகும்—(துர்ருமுக்தார்).

ஒருவன் குர்பானியை நிறைவேற்றாமல் நாட்கள் கழிந்துவிட்டால் அதற்காக மூன்று ஹுக்கும்களுண்டு: (1) ஒருவன் ஏழையானாலும் பணக்காரனானாலும் ஓர் ஆட்டைக்குறித்து அல்லாவுக்காக இதையே குர்பானிகொடுப்பேனென நிச்சயம்செய்து குர்பானி செய்யுமுன் நாட்கள் சென்றுவிட்டால் அவன் அந்த ஆட்டை உயிருடன் மிஸ்கீனுக்குக் கொடுத்துவிடவேண்டும். (2) ஒருவன் பக்கீராயிருந்து குர்பானிசெய்யவேண்டுமென்னும் எண்ணத்துடன் ஓர் ஆட்டை விலைக்குவாங்கி நாட்சென்றுவிட்டால் அப்பொழுதும் அந்த ஆட்டை உயிரோடு மிஸ்கீனுக்குக் கொடுத்துவிடவேண்டும். (3) ஒருவன் ஸ்ரீமானாயிருந்து வேண்டுதல் புரியாமலிருந்தால் ஆட்டின் கிரயத்தை இனாம் கொடுத்துவிடவேண்டும்—(ஷரகுவிகாயா).

குர்பானிக்குரிய முதல்நாளும் இரண்டாம் நாளும் ஒருவன் பக்கீராயிருந்து மூன்றும்நாள் ஸ்ரீமானாகிவிட்டாலும், அல்லது காபிராயிருந்து இஸ்லாமாகிவிட்டாலும், அல்லது குழந்தை பிறந்துவிட்டாலும் அவன்மீது குர்பானி வாஜிபாகிவிடும். மேற்சொன்ன நாட்கணக்குப்படி ஸ்ரீமானாயிருந்து பக்கீராகிவிட்டாலும், அல்லது ஜீவித்திருந்து இறந்துவிட்டாலும் குர்பானி அவனை விட்டு நீங்கிப்போம். இவ்விதமே மேற்கண்டபடி சிறுவனாயிருந்து வயதை அடைந்து விட்டாலும் முஸாபிராயிருந்து முகீமாகி விட்டாலும் குர்பானி வாஜிபாகும். இவ்விதமே மேற்கண்டபடி முகீமாயிருந்து முஸாபிராகிவிட்டாலும் இஸ்லாமாயிருந்து வேறு ஜாதியில் சேர்ந்துவிட்டாலும் குர்பானி நீங்கிவிடும்—(ஜாமி உர்ரமூஸ்). ஆனால் ஒரு ஸ்ரீமான் குர்பானியை நிறைவேற்றாமல் ஹஜ்ஜுமீ பிறை 12ம் கழித்து மரணமானால் குர்பானியானது அவன் பொறுப்பை விட்டு நீங்கிவிடாது; ஆதலின் அவன் குர்பானி கொடுக்கும் விஷயத்தைப் பற்றி வஸிய்யத்துச் செய்யவேண்டியது அவனுக்குக் கடமையாகும்—(ஆலம் கீரீ).



ஒட்டகம் பசுமாடு காளைமாடு ஆடுகள் இவைகளைத்தான் குர்பானி செய்யவேண்டும்—(கன்ஜுத் தகாயிக்). எருமை மாட்டைக் குர்பானி கொடுப்பதாலும் குர்பானி நிறைவேறிவிடும்; ஏனெனின் இதுவும் மாட்டின் இனம் என்பதே காரணமாம்—(ஐனி ஷரஹு கன்ஜ்). குர்பானி கொடுக்கும் பிராணி பசுமாடானாலும் காளைமாடானாலும் இரண்டு வருஷம் சென்றவைகளாக விருக்கவேண்டும்; ஒட்டகமானால் ஐந்துவருஷம் சென்றதாயிருக்கவேண்டும். தும்பையாடானால் ஆறுமாதம் சென்றதாயிருந்தால் போதும். வேறுவகை ஆடுகளானால் ஒருவருஷம் சென்றதாயிருக்கவேண்டும். ஆறுமாதம் சென்ற தும்பைஆட்டின் ஷரத்தாவது: அது ஆறுமாதம் சென்றவுடன் வேறு பெரிய ஆடுகளுடன் கலந்திருந்தால் பார்க்கிறவர்கள் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாதபடி பெரிய ஆட்டிற்குச் சரியானதாயிருக்கவேண்டும்—(ஹிதாயா). ஒருவருஷம் சென்ற தும்பையாட்டைக் குர்பானிகொடுப்பதே ஆறுமாதக் குட்டியைப் பார்க்கிலும் விசேஷமாயிருக்கும்—(பதாவீ காஸீகான்).

உல்ஹிய்யாக் கொடுக்கும் கிடாய் பெருங் கொம்புள்ளதாகவும் உறுப்புக்களில் குற்றக்குறை யில்லாததாகவும் கண்பார்வை யுள்ளதாகவும் அழகியதாகவும் பெரியதாகவும் கொழுத்ததாகவும் இருக்கும்படி தெரிந்தெடுத்துக் கொடுத்தல் வேண்டும். ஆனால் ஆடு அல்லது மாடு அல்லது ஒட்டகம் பைத்தியங் கொண்டிருந்து அல்லது நொண்டியாயிருந்து அறுக்கிற இடம் வரையில் நடந்துவரக் கூடுமானால் அதன் குர்பானி ஆகும்—(ஜாமி உஸ்ஸகீர்). கிழ ஆடு, விதையடித்த ஆடு, பைத்தியங் கொண்டதாயினும் இரைமேயக் கூடிய ஆடு, சொறி பிடித்ததாயினும் புஷ்டியான ஆடு ஆகியவைகளின் குர்பானி ஆகும்—(துர்ருமுக்தார்). கொம்பில் கொஞ்சபாகம் முறிந்திருக்கிற ஆட்டின் குர்பானி ஆகும்; ஆனால் அடியோடு கொம்பு முறிந்து போயிருந்தாலும் கால் ஒடிந்துபோயிருந்தாலும் அந்த ஆட்டின் குர்பானி ஆகாது—(ஷாமி). பிறக்கும்போதே காதில்லாமல் பிறந்த பிராணியின் குர்பானி கூடாது—(ஹிதாயா). காது வால் பின்தொடைகள் ஆகிய இவற்றில் மூன்றிலொருபங்குக்கு அதிகமாக அறுபட்டிருக்கும் பிராணியின் குர்பானி ஆகாது—(ஜாமிஉஸ்ஸகீர்). வாயில் பல்லில்லாத பிராணி தீனி தின்னக் கூடுமானால் அதன் குர்பானி நிறைவேறும்; தீனி தின்னாவிட்டால் நிறைவேறாது—(ஆலம்கீரீ). காது மாத்திரம் பிளக்கப்பட்டிருந்தாலும் அல்லது அது அறுந்து தொங்கிக்கொண்டிருந்தாலும் அல்லது மாறு கண்ணுள்ளதா யிருந்தாலும் அல்லது தேகத்தின் உரோமங்கள் எடுக்கப்பட்டிருந்தாலும் அல்லது அதற்கு இருமல்

இருந்தாலும் அதன் குர்பானி ஆகும்—(ஷாமீ).

ஆட்டைக் குர்பானி கொடுப்பதானால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் ஆடுவீதம் கொடுக்கவேண்டும். பசுமாடு எருமைமாடு ஒட்டகம் ஆகிய இவைகளில் ஒன்றினால் ஏழுபேருக்கு ஒருபிராணி வீதம் குர்பானி செய்யலாம்—(ஹிதாயா). நல்ல விதமாக அறுக்கத் தெரிந்தவர்கள், தங்களுடைய குர்பானியைத் தாங்களே அறுக்கவேண்டும்—(முக்தசருல் விகாயா). பிறரைக்கொண்டு அறுக்கச்செய்யும் போது குர்பானிக்கு உடையவரும் கூட இருக்கவேண்டும்.

"குர்பானியின் இறைச்சியை நீங்களும் தின்னுங்கள்; பிறருக்கும் தின்னக்கொடுங்கள்; நாளைக்காகவும் வைத்துக்கொள்ளுங்கள்" என்று நபி பெருமானவர்கள் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள். குர்பானியின் எல்லா இறைச்சியையும் மூன்று சரிபங்காக்கி ஒருபங்கை ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டும்; இன்னொருபங்கைத் தன்னுடைய சொந்தக்காரர்களுக்கும் சிநேகிதர்களுக்கும் கொடுக்கவேண்டும்; மற்றொருபங்கைத் தனக்காக வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதே மேன்மையென ஆலம்கிரியில் எழுதப்பட்டிருக்கிறது. குர்பானியின் தோலை யாருக்கேனும் இனாம் கொடுத்து விடலாம்; அல்லது தான் வைத்துக்கொண்டு படுக்கை விரிப்பு தண்ணீர்ப்பை முதலியவைகளாகச் செய்து கொள்ளலாம்—(ஹிதாயா).

கசாயினுடைய கூலிக்கு ஈடாகக் குர்பானி இறைச்சியிலிருந்து ஒன்றும் கொடுக்கக்கூடாது—(துர்ருல்முக்தார்).

[இவ்விஷயம், ஜனாப் மௌலானா மௌல்வி ஷம்ஸுல் உலமா ஹாஜி குலாம் ரஸூல் சாஹிப் அவர்களால் ஹிந்திபாஷையில் எழுதப்பட்டதிலிருந்து, சென்னை ஹக்கீம்—பா. முஹம்மது அப்துல்லா சாஹிப் அவர்கள் மொழிபெயர்த்தெழுதிய நோன்பாளி நன்கொடை சீமான்கள் செங்கோடை என்னும் தமிழ்க்கித்தாபிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது. இதுபோன்ற இன்னும் அரியவிஷயங்களெல்லாம் ஷை தமிழ்நூலில் காணப்படுகின்றன. இதன் விளம்பரம் இச்சஞ்சிகையின் இறுதியில் காணப்படும். ப—ர்]

## நாயகச் சரித்திரச் சுருக்கம்

(முன் 107-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு கொஞ்சங் கொஞ்சமாய் முஸ்லிம் தொகை வலுக்க ஆரம்பித்தது. நுபுவ்வத்து வந்து 4 வருஷகாலத்தில் சுமார் 40 பேர்கள் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டனர். அப்பால் நபிகள் பெருமானார்



பகிரங்கமாய்ப் பிரசங்கம் செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் ஒன்றும் நூதனமான மார்க்கத்தை உண்டுபண்ணவரவில்லை. நபி ஆதம் (அலை) அவர்கள் காலமுதல் போதிக்கப்பட்டு வந்து பிறகு நபி இபுராஹீம் (அலை) அவர்களால் நிலைநிறுத்தப் பட்ட ஏகதெய்வக்கொள்கை யென்னும் இஸ்லாமார்க்கத்தையே எமது நபிகள் நாயகமும் அசையாமல் நிலைநாட்ட வந்தார்கள். எல்லாமகான்களாலும் இதுவரையில் போதிக்கப்பட்டு வந்ததெல்லாம் அதே உண்மைதான். கஃபதுல்லாவைச்சுற்றி வைக்கப்பட்டிருந்த தங்களுடைய 360 விக்கிரகங்களுக்கும் ஆபத்து வருமென்றும் அந்தத் தேவாலயத்துக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் வரும் யாத்திரைக்காரர்களால் ஏற்படும் லாபகரமான தங்கள் காணியாட்சிக்கு மோசம் வருமென்றும் அஞ்சி மக்காஷரீபிலுள்ள காபிர்கள் எம்பிரான்மீது அதிகவைஷம்யம் பாராட்டினார்கள். ஈதெல்லாம் பொறாமையாலும் வீண்புழுக்கத்தாலும் விளைந்த விரோதங்களேயொழிய வேறொன்றில்லை. அப்படிப் பட்ட விரோதகாலத்தில் நபிபெருமானாரை மக்கமாநகரை விட்டு வேறொரு வெளியிடத்தில் வைத்துப் பாதுகாக்கலா மென்று அபூதாலிப் யோசனை செய்தார்கள். அவ்வேளையில் நபி பெருமானின் பிரியநாயகியும் காலகதியால் தேகவியோகமானார்கள்; பின்னர் அபூதாலியும் உயிர்துறக்கலாயினர். அதனால் அவர்களுக்கு இகலோகச் செல்வாக்குக் குறைவும் சம்பத்துக்குறைவும் அதிகமாயுண்டாயின. ஆயினுமென்ன! ஆண்டவனிட்ட கட்டளையை நிறைவேற்றுவதில் மட்டும் அவர்கள் குன்றாஊக்கத்துடன் இருந்து வந்தார்கள். தாயிபு என்று சொல்லத்தக்க ஓரூருக்குச் சென்று அங்கே எம்பெருமானார் அதிக அவஸ்தைப் பட்டு உயிரைமட்டும் காப்பாற்றிக்கொண்டு திரும்பி விட்டார்கள். இவ்வாறு மக்கமாநகரில் சுமார் 13 வருஷகால மட்டும் படாதபாடுகளெல்லாம் பட்டுச் சுமார் 100 பேர்வரையில் முஸ்லிம்களைச் சேர்த்தார்கள். இவ்வாறிருக்கும் போது யத்ரிபு என்று சொல்லத்தக்க நகரிலிருந்து மக்கமாநகருக்கு யாத்திரையாக வந்தவர்களில் பலரை எம்பெருமானார் இஸ்லாத்தில் சேர்த்தார்கள். இந்த யத்ரிபுதான் பின்னால் மதீனா ஷரீபு என்று அழைக்கப்பட்டது. மறுவருஷம் மதீனாவிலுள்ளவர் யாத்திரை வந்தபோது இன்னும் பலர் இஸ்லாமார்க்கத்தில் சேர்ந்து கொண்டதால் அவர்களுடன் நபிகள் பிரான் ஓர் உடன்படிக்கையும் செய்து கொண்டார்கள். பிறகு ஒருநாளிரவில் மக்கா ஷரீபிலுள்ள காபிர் எதிரிகள் எம்பெருமானைக் குத்திக்கொன்றுவிடச் சதியாலோசனை செய்திருந்த போது நபிகள் பிரான் தேவ அருளால் அதனை உணர்ந்து கொண்டு அன்றிரவே

மக்கமாநகரை விட்டு மதீனமா நகருக்குப் புறப்பட்டுவிட்டார்கள். இதுதான் இஸ்லாத்தில் ஹிஜிரத் எனப்படுவது; முஸ்லிம்களின் ஹிஜிரிக்கணக்கும் அன்றுமுதல் தான் ஆரம்பமாயிற்று.

திருமதீனாவுக்குச் சென்ற பின்னர் நபிபெருமானாருக்குப்பல நண்பர்கள் ஏற்பட்டனர்; இஸ்லாத்தில் சேர்பவர்களின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. மக்கமா நகரில் உதாசினத்துடன் வெறுக்கப்பட்டு வந்த எம்பெருமானார் திருமதீனாவுக்கு வந்தவுடன் அந்த நகருக்குத் தலைவராகவும் அங்குள்ள இரண்டு கூட்டத்தாருக்கு ஞானகுருவாகவும் அமர்ந்தார்கள்; இந்த இரண்டு கூட்டத்தார்களும் அந்த நகரில் அதிக செல்வாக்குள்ளவர்களா யிருந்ததன் காரணமாக நபிபெருமானின் கீர்த்தியானது வளர்பிறைபோல் நாளுக்கு நாள் முன்னேறி வளர்ந்து வந்தது. அரபு தேசத்திலுள்ள எல்லாப்பகுதிகளுக்கும் இஸ்லாமதத் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள்; இன்னும் பாரஸீகத்துக்கும் மிஸிர் (எகிப்து) தேசத்துக்கும் இவ்விதமாகவே இஸ்லாமதப்பிரசாரகர்கள் அனுப்பப்பட்டார்கள். அதற்கு மறுவருஷம் எம்பெருமானார் (ஸல்) அநேக ஸஹாபாக்களுடன் எதிரிகள் வசிக்கக் கூடிய மக்காஷரீபுக்கு ஹஜ்ஜு யாத்திரை போனார்கள். கடைசியில் சில வருஷங்களுக்குள் இம்மக்கமா நகரமானது ஒரு துளி இரத்தங் கூடச் சிந்தப் படாமல் எம்பிரான் கைக்குள் வீழ்ந்து விட்டது. அதன் பின்னர் அரபு தேசத்திலுள்ள எல்லாக் கூட்டத்தார்களும் அவர்களை நபியென்றும் ஞானகுருவென்றும் கூசாமல் ஒத்துக்கொண்டார்கள். இப்படிப்பட்ட இணையில்லா வெற்றி பெற்ற எம்பெருமானாருக்கு இறைவனருளும் அவனன் மாராயமும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆரம்ப காலத்தில் அதிக விரோதம் பாராட்டின எதிரிகளெல்லாம் பிறகு அளவிடற் கரிய அவமானத்துக்குள்ளாயினர். அக்காலத்திய அறிவில்லா அரபிக் காபிர்களால் ஆரம்பத்தில் அதிக கஷ்டப்பட்டிருந்தும் எமது நபிபெருமானார் மக்காஷரீபு பிடிபட்ட பின்னர் எல்லோரையும் ஏகமாய் மன்னித்து விட்டார்கள். என்ன பெருந் தன்மை! என்ன காருண்யம்!! தங்களுடைய நுபுவ்வத்துக்காலமாகிய 23 வருஷங்களுக்குள் விக்கிரக ஆராதனையை வேரறுப்பாக அறுத்துப் பழைய மௌட்டீக அநாசாரங்களைப் போக்கி இஸ்லாமிய சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் ஸ்திரப்படுத்தி ஸ்திரீகளின் நிலைமையையும் அடிமைகளின் கதியையும் உன்னதமாக்கினார்கள். ஈதெல்லாம் தெய்வசக்தியாலுண்டான தீர்க்க தரிசன வெற்றியாகும்.

கடைசியில் அவர்கள் தங்களுடைய ஆயுள்காலம் முடிவடை



யப் போவதை முன்னறிந்து கொண்டார்கள். தங்களுடைய ஸஹாபாக்களும் அவர்களுக்குப் பின்னோர்களும் எப்பொழுதும் சன்மார்க்கத்தில் ஒழுகிக்கொண்டும் இஸ்லாமிய சகோதரத்துவத்தை வளர்த்துக்கொண்டும் வேதக்கட்டளையின்படி ஏவல் விலக்கல்களை இடைவிடாது அனுஷ்டித்துக்கொண்டும் எப்பொழுதும் பெண்டுகளைக் கௌரவம் செய்துகொண்டும் உலகத்தவருக்கெல்லாம் முஸ்லிம்கள் ஒரு முன்மாதிரி (நமூனா) என்று கண்டோர்மெச்சும்படி அறிவிலும் ஆத்ம ஞானத்திலும் சிறந்து விளங்கும்படி ஆகவேண்டுமென்று நபிபெருமானார் அடிக்கடி நல் உபதேசம் செய்து வந்தார்கள். எல்லா முஸ்லிம்களும் ஏகசகோதர கோஷ்டியைச் சேர்ந்தவரென்றும் அவரவரும் தன் தன் நிலைமையைத் தானே உயர்த்திக்கொண்டு ஈடேற்றம் பெறவேண்டுமென்றும் அவர்கள் ஓயாமல் உபதேசம் செய்துகொண்டேயிருப்பார்கள். ஒருவருடைய பாபத்தை மற்றொருவர் ஏற்றுக்கொள்ள முடியாதென்பது அவர்களுடைய சித்தாந்தம். இவ்வாறிருக்கும்போது கடைசியாய் ஒரு நாள் நபி பெருமானின் அருமைப்பத்தினியாகிய ஆயிஷா (ரலி) அவர்களின் மடியில் தங்கள் தலையைச் சார்த்திக்கொண்டிருக்கும்போது வாயால் ஆண்டவனுடைய ஸ்தோத்திரத்தை உச்சரித்துக்கொண்டே அவர்களுடைய ஆவியானது பரகதியடைந்தது. அவர்களுடைய ஆவி இதலோகத்தை விட்டேகுமட்டும் தங்களுடைய உம்மத்து (நபியைப் பின்பற்றினோர்) களுக்காகவே ஆண்டவனிடம் குறையிரந்தவர்களாய் மன்றாடிக்கொண்டிருந்தார்கள்.

நபிகள் பிரான் நம்முலகை விட்டேகியதும் அவர்களுடைய நண்பர்களெல்லோரும் அதிகமாகக் கிலேசப்பட்டார்கள். அச்சமயம் உமருபுனுல்கத்தாப் (ரலி) அவர்கள் மிக்க ஆவேசத்துடன், "யாரேனும் நபிபிரான் காலஞ்சென்று விட்டதாகச் செப்புவாராயின் அவரது சிரத்தை என் வாளாயுதத்தால் கொய்வேன்" என்று ஆரவாரம் செய்தார்கள். நபிகள் நாயகம் காலஞ்சென்றார்கள் என்பதில் சந்தேகம் பிறந்தவர்களாய் இங்ஙனம் உமரோபாரூக் (ரலி) அவர்கள் பகிரங்கம் செய்தார்கள். இதை யறிந்த அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள், உமர் (ரலி) முதலியோரின் தப்பெண்ணத்தை மாற்றித் தேற்றினார்கள். "வமாமுஹம்மதுன் இல்லா ரஸூலுன் ..." என்னும் அல்குர்ஆன் 3:143-வது ஆயத்தை அபூபக்கர் (ரலி) அவர்கள் ஓதிக்காட்டி எல்லோரையும் சமாதானம் செய்தார்கள்.

எமது நபிபெருமானார் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் உங்களெல்லாரையும் போல் ஒரு சாதாரண மனிதராகத்தான் இருந்தார்கள். அவர்கள் சாமுத்திரிகாலக்ஷணங்களெல்

லாம் பொருந்திய கம்பீரத்தோற்ற முடையவர்களாயிருந்தார்கள். உயர்ந்த தோற்றமும் அகன்ற மார்பும் ஆஜானுபாகுவுக்குரிய கைகளும் அமையப்பெற்று வெகு திடதேகமுள்ளவர்களா யிருந்தார்கள். அழகிய வடிவும் புன்சிரிப்போடு கூடிய முகமும் மகா மேதாவிக்குரிய கூரிய பார்வையும் உடையவர்கள். கொவ்வைக்கனியன்ன செவ்விய இதழ்களும் அழகிய மோவாயினின்றும் நீண்டு தொங்கிக்கொண்டிருக்கும் அழகிய அகன்ற வட்டத்தாடியும் வாய்க்கப் பெற்றவர்கள். அவர்களுடைய ரோமமும் கண்விழிகளும் கருமையாயிருக்கும். அவர்களுடைய ஞாபகசக்திக்கும் மனோசக்திக்கும் ஒருவரையறை சொல்ல முடியாது. இப்படிப்பட்ட மகானுயிருந்தும் சிறியோர்கள் முதல் பெரியோர்கள் வரையில் எல்லோரும் விரும்பத்தக்க சௌலப்பிய குணமுடையவர்களா யிருந்தார்கள். நற்குணத்திலும் தயாளத்திலும் அவர்களை வெல்ல யாராலும் முடியாது. பொறுமையின் சொரூபத்தை இவ்வுலகில் காண[illegible]ண்டுமாயின் எம்பெருமானையே அதற்கோர் உதாரணமாகக் காணலாம். அவர்களுடைய ஜீவதிசை முழுதும் விளையாட்டுக்காகவேனும்ஒருவெள்ளைப் பொய்யேனும் உரைத்தறியார்கள். யாரிடத்திலும் வெகு பிரியமாக முகமலர்ச்சியுடன் வசனிப்பார்கள். ஆனால் சுருக்கமாகவும் வேடிக்கையாகவும் பேசுவார்கள். மனோதிடமும் விடாமுயற்சியும் ஆண்டவனிடத்தில் அழுத்தமான பக்தியும் மனிதவர்க்கத்துக்கெல்லாம் மாதிரியா யிருக்கத்தக்க ஞானமுதிர்ச்சியும் சீல ஒழுக்கமும் வாய்க்கப் பெற்றவர்கள். அவர்கள் பால்யகாலத்தில் மகாநிதான புத்தியுடன் தங்கள் வாழ்நாளைக்கழித்து எல்லோராலும் மெச்சத்தக்க **அல்அமீன்** (சரியான நியாயஸ்தர், உண்மையான நம்பிக்கைக் குரியவர்) என்னும் பட்டத்தைப் பெற்றார்கள். அவர்கள் மதினமா நகரில் வாழ்ந்து வந்தபோது எதிர் மதத்தினரான எஹூதிகளும் நஸாராக்களும் காபிர்களும் எம்பெருமானாரிடமே [illegible]யம் பெற வருவார்கள். குடும்பவாழ்க்கையில் அவர்கள் தங்கள் வீட்டுப் பெண்டுகளிடம் அதிஅன்னியோன்யமாய் வாழ்ந்து வந்தார்கள். யாருக்கும் மனங் கோணமல் திருப்திகரமாகவே நடந்துகொள்ளுவார்கள். அரபுதேசமுழுதுக்கும் அரசாயிருந்தும் அக்காலத்திய 1000000 முஸ்லிம்களுக்கு ஞானகுருவாயிருந்தும் ஒரு சாதாரணமான சிறிய விடுதியில் குடியிருந்துகொண்டும் மகா எளிமைத்தனமான உணவுகளை உண்டுகொண்டும் தங்களுடைய அடுப்பைத் தாங்களே பற்றவைத்துக்கொண்டும் தங்களுடைய வஸ்திரங்களையும் பாதரக்ஷைகளையும் தாங்களே பழுது பார்த்துத் தைத்துக் கொண்டும் சர்வசாதாரணமாய் உயிர் வாழ்ந்துவந்தார்கள். தங்களுடைய



அடிமைகளையெல்லாம் விடுதலை செய்துவிட்டு மற்றையோரையும் அப்படியே விடுதலை செய்யச்சொல்வார்கள். தங்களுடைய சாதாரண உணவையும் அடிக்கடி ஏழைகளுக்கும் விருந்தினருக்கும் பங்கிட்டுக்கொடுத்து விட்டுப் பலமாதங்கள் வரையில் அரைவயிற்றுடனே பட்டினி கிடப்பார்கள். அவர்களுடைய உதார[க்]குணத்தால் அநேக ஏழைகள் அவர்களை அண்டியே காலங்கழித்து[வ]ந்தார்கள். சாதாரண மனிதர்களால் கஷ்டமென்றெண்ணத்தக்க [எ]வ்வகைத் துன்பத்தையும் அவர்கள் பொருட்படுத்தாமல் ஆண்டவன் மீதே குறையாத உறுதிவைத்திருப்பார்கள். தங்களுடைய உயிருக்கு ஆபத்து வரும்போதும் ஆண்டவன் மீதுவைத்த நம்பிக்கையை மட்டும் ஒரு சிறிதும் கைவிடமாட்டார்கள். இதை இரண்டு உதாரணங்களால் விளக்கிக்காட்டிவிட்டு இச்சரித்திரச்சுருக்கத்தை இப்பொழுது முடித்துக்கொள்வோம். மக்கமாநகரைவிட்டு மதினமாநகருக்குப் புறப்பட்டு ஹிஜிரத்துப்போனபோது நபிகள் நாயகமும் அபூபக்கர்ஸித்தீக் (ரலி) அவர்களும் வழியில் ஒருகுகைக்குள் தங்கியிருந்தார்கள். அப்பொழுது மக்கமாநகரில் எம்பெருமானைக் கொன்று விடவேண்டுமென்று கங்கணங்கட்டியிருந்த காபிர்களான எதிரிகள் தொடர்ந்துவந்து அந்தக் குகையின் வாயிலண்டை நின்று எம்பிரானைத் தேடுகிறார்கள். எதிரிகளின் அடிச்சுவட்டின் சப்தமும் கேட்கிறது; நபிபிரானைக்கண்டால் உடனே கொன்றுவிடுவதாக அவர்கள் பேசும் குரலும் குகைக்குள் கேட்கின்றது. அப்பொழுது அபூபக்கர் (ரலி) அவர்கள் மனங்கலங்கி நபிபெருமானாரிடம், "இப்பொழுது என் செய்வது? அவர்கள் பலபேர் இருக்கின்றனர்; நாம் இருவர்தாமே யிருக்கிறோம்," என்றார்கள். உடனே எமது நபிகள் பிரான், "அப்படிச் சொல்லவேண்டாம்; நம்மிருவருடன் ஆண்டவனும் இருக்கிறான்; அவனைச்சேர்த்து மூவர் இருக்கிறோம்," என்று வெகு நிதான புத்தியுடன் அதிசாந்தமாகச் சொன்னார்கள். என்ன ஆழமான தெய்வபக்தி, பார்த்தீர்களா! இன்னும், யுத்தகளத்தில் ஒருநாள் எம்பிரான் தனித்துப்போய் ஒரு மாநிழலில் கண்ணுறக்கங்கொண்டார்கள். துஉதூர் என்னும் பெயருடைய ஒரு எஹூதி உருவியவாளுடன் அவர்களுடைய கழுத்தில் கையை வைத்துக்கொண்டு, "ஓ, முஹம்மதே (ஸல்)! இப்பொழுது உம்மை யார் காப்பாற்றுவார்?" என்று அதட்டிக் கேட்டான். உடனே நபிகள் நாயகம் சிறிதும் மனங்கலங்காமல் வெகு தீரத்துடன் "லோகரக்ஷகன் என்னைக் காப்பான்," என்று மறுமொழி சொன்னார்கள். உடனே எஹூதியின் கையிலிருந்த வாளாயுதம் நழுவிற்று; அப்பொழுது அதை எம்பிரான் எடுத்துக்

கொண்டு துஉதூரின் கழுத்தில்வைத்து "ஓ, துஉதூர்! இப்பொழுது உன்னையார் காப்பாற்றுவார்?" என்று கேட்க அந்த எஹூதி வாய் குளறி மெய்விதிர், "உம்மைத்தவிர வேறு யாருமில்லை; இச்சமயம் உயிர்ப்பிச்சையளியும்," என்று மனங்கசிந்து வேண்டினான். உடனே நபிபெருமானார், "இதோ, மன்னித்தேன்; இனி இரக்கமென்பதை என்னிடம் கற்றுக்கொள்," என்று சொல்லி அவனிடமே அந்தவாளாயுதத்தையும் திரும்பக்கொடுத்து விட்டார்கள். உடனே அந்த எஹூதி இஸ்லாமாகி எம்பெருமானாருக்கோர் அரிய தோழரானார். இஃதெப்படிப்பட்ட தெய்வ பக்தியென்று கருதுகின்றீர்கள்! இதுதான் அவர்களுடைய தெய்வபக்தி. இதுதான் அவர்களுடைய சரித்திரச் சுருக்கம். இப்படிப்பட்டவர்கள் தாம் எம்பெருமானார் அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்று சொல்லப்படும் கடைசி நபியான காத்தமன் நபிய்யீனவர்கள்.

## "தத்துவ இஸ்லாம்"

நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கத்தாரால் மாதாமாதம் வெளியிடப்படும் "தத்துவ இஸ்லாம்" பத்திரிகையின் ஜூலை மாதத்திய சஞ்சிகை வரப்பெற்றோம். தீனுல் இஸ்லாத்துக்கு நேரிட்டுள்ள துன்பத்தையும், முஸ்லிம் கிலாபத்துக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தையும் செம்மையாய் எடுத்துக்காட்டி உண்மையான முஸ்லிம்களின் கடமை தற்சமயம் என்னவென்று ஓர் அருமையான தலையங்கம் இச் சஞ்சிகையில் எழுதப்பட்டிருப்பதோடு "ஒத்துழையாமையும் உத்தியோகத் துறவும்" என்ற விஷயமாய், ஜனாப், பா. தாவூத்ஷா சாஹிப், பி. ஏ., மிக்காரஸமான ஓர் கடிதம் எழுதியிருப்பதும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது. அக்கடிதத்திலிருந்து மேற்படி முஸ்லிம் சங்கப் பிரஸிடெண்டின் தேசாபிமானமும் மதாபிமானமும் செவ்வனே விளங்குகின்றன. "இஸ்லாம் என்றால் என்ன" என்பது போன்ற, மற்ற மதத்தினர் வாசித்துப் பயனடையக் கூடிய வேறு சில வியாசங்களும் பிரஸ்தாப சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

"சுதேசமித்திரன்"
8—7—21

முபஸ்மிலன்.

# தத்துவ இஸ்லாம்

# ISLAM AS IT IS.

وَلْتَكُن مِّنكُمْ أُمَّةٌ يَدْعُونَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُونَ بِالْمَعْرُوفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ

கமலம் - 3. | 1921௵ செப்டம்பர்௴ | இதழ் - 5.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

நஹ்மதுஹூ வநுஸல்லீ அலா ரஸூலிஹில் கரீம்.

## இஸ்லாத்தின் தாத்பரியம்.

[கனம் காஜா சாஹிப் அவர்கள் தங்களுடைய தேகாரோக்கியத்தின் நிமித்தம் தேசசஞ்சாரஞ் செய்வான் வேண்டி ஜாவா, சிங்கப்பூர் முதலிய கீழ்நாடுகளுக்கு யாத்திரை சென்றிருந்தது நம் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். மௌலானா அவர்களுக்கு எப்பொழுதும் இஸ்லாமிய பிரசாரமே முக்கிய நோக்கமாதலின் தங்களுடைய சிங்கை விஜயத்தை வீண்செய்யக் கூடாதென்று கருதி அவ்வூரில் சில உபன்யாசங்கள் புரிந்தார்கள். இதன்கீழ்க்காணும் விஷயமானது, ஜனாப் காஜா சாஹிபால் சிங்கப்பூர் டௌன் ஹாலில் 7-2-21ல் அந்நாட்டு (S. S. & F. M. S.)க் கல்வி இலாக்காவின் தலைவராகிய டாக்டர், ஆர். ஓ. வின்ஸ்டெட்துரை யவர்களின் அக்ராஸனத்தின் கீழ்ச் செய்யப்பட்ட உபன்யாசத்தின் சாராம்சமாயிருக்கிறது. ப-ர்.]

உங்களைச் சூழ்ந்துள்ள அண்டகோளத்தின் அதிசயங்களையெல்லாம் நீங்கள் சற்று நிதானித்து நோக்குவீர்களேல் அவ்வண்டத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் மேன்மேலும் விருத்தியடைந்து கொண்டே செல்வதை நீங்கள் செவ்வனே காண்பீர்கள். இவ்வண்டத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும் அந்தரங்கமான ஒரு தெய்விகசக்தி நிறைந்திருப்பதைக் காண்கின்றோம்; அவ்வஸ்துவா

னது தன்னுடைய அந்தரங்க சக்தியைப் பகிரங்கப்படுத்தி அதனால் தனக்குரிய முழுப்பலனையும் அடைவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டேயிருக்கிறது. இப்படிப்பட்ட ஒவ்வொரு வஸ்துவுக்கும் நிச்சயமான ஒவ்வொரு வழியானது குறிப்பிடப்பட்டிருக்கிறது; அவ்வழியைப் பின்பற்றி அவ்வஸ்துவானது சற்றுந் தவறாமல் நடந்து வருமாயின் அதன் அந்தரங்க சக்தியெல்லாம் பகிரங்கமாகிப் பெருத்த நன்மையெல்லாம் அதிலின்றும் உதயமாகின்றது. சட்டமென்பதும் அச்சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதென்பதும் இவ்வுலகின் கண்ணுள்ள ஒவ்வோர் அணுவிலும் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட சட்டதிட்டங்களுக்கு முற்றிலுங் கட்டுப்பட்டு நடப்பதனால் தான் ஒவ்வொரு வஸ்துவும் சரியானபடி உற்பத்தியாகி, சரியானபடி வளர்ந்து, சரியானபடி பலன் பெறுகின்றது. இவ்வண்டத்தில் காணப்படும் ஒவ்வோர் அணுவும் தன் தனக்கு விதிக்கப்பட்ட சட்டத்தின்படி சற்றும் தவறாமல் நடந்துவருவதால்தான் அவ்வணுக்களின் சேர்க்கையால் ஆக்கப்பட்டிருக்கும் வஸ்துக்களெல்லாம் ஒன்றோடொன்று பரஸ்பரம் உதவி புரிந்துகொண்டு தங்களாலியன்ற முழுப்பலனையும் பெறுகின்றன. இவ்வாறு தெய்வத்தின் இயற்கைச் சட்டத்துக்கு (Divine Laws of Nature) முற்றிலும் கட்டுப்பட்டு நடப்பதே இஸ்லாம் என்னப்படுகின்றது. "ஆண்டவனால் அனுப்பப்பட்ட சன்மார்க்கத்தைத் தவிர வேறொரு மதத்தை இம்மனிதர்கள் தங்களுக்காக வேண்டுமென்று தேடிக்கொண்டு திரிகிறார்களோ? தங்களைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்களை யெல்லாம் அவர்கள் பார்க்கிறதில்லையா? ஆகாயத்திலும் பூமியிலுமுள்ள ஒவ்வொரு வஸ்துவும் தன்னுடைய நிலைமை ஸ்திரப்படுதற்காக ஆண்டவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவில்லையா?" "ஆண்டவனுக்குப் பொருத்தமான மார்க்கம் இஸ்லாம்தான்"— என்று அல்லாஹுத் தஆலா தனது திருவசனமென்னும் குர்ஆனே கரீமில் விளக்கியிருக்கிறான்.

குர்ஆன் ஷரீபிலுள்ள இவ்வாக்கியங்களால் இறைவனால் படைக்கப்பட்ட இயற்கையான மதம் இன்னதென்றும் இப்படிப்பட்டதென்றும் தெரிந்துகொண்டோம். இப்படிப்பட்ட இயற்கையில் மனிதனும் ஒருவனல்லவா? இவ்வுலகில் காணப்படும் ஒவ்வோர் அணுவும் இறைவனது சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும்போது இப்படிப்பட்ட பல்கோடிக் கணக்கான அணுக்களால் படைக்கப்பட்டிருக்கும் மனிதனும் அச்சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்காமலிருக்க முடியுமோ? இவ்வண்டத்திலுள்ள படைப்புக்களுக்குள்ளெல்லாம் மனிதனைவன் மிக நேர்த்தியாய் அமைக்கப்



பட்டிருக்கிறானென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவனைக் காட்டிலும் மிகத் தாழ்ந்த பொருள்களாகிய அசேதன வஸ்துக்களெல்லாம் அல்லாஹுத் தஆலாவின் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்குங் காலையில் மனிதனும் அச்சட்டத்துக்கு முற்றிலுங் கட்டுப்படுதல் அத்தியாவசியமாகின்றது. மற்றும் அசேதனப்பொருள்களெல்லாம் தத்தமக்குரிய மார்க்கத்தில் சற்றும் விலகாமல் நடந்து வருகின்றன. இவ்வாறிருக்கும்போது அசேதனப் பொருள்களின் சேர்க்கையாலுண்டான தேகத்தையுடைய மனிதன்மட்டும் ஆண்டவனது இயற்கையான மார்க்கத்தினின்றும் விலகி நடத்தல் முடியுமோ? அப்படி விலகி நடக்கப் பிரயத்தனம் பண்ணினபோதிலும் அது அவனுக்கு யோக்கியமான காரியமாயிருக்குமோ? இவ்வுலகில் காணப்படும் ஒவ்வொரு வகையான அணுவும் மனித தேகத்திலும் காணப்படுகின்றது; இக்காரணித்தால்தான் அண்டத்துக்கு இப்பிண்டம் ஒத்திருக்கிறதென்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஆகவே அண்டத்திலுள்ள ஒவ்வோர் அணுவும் ஆண்டவனது சட்டத்துக்குக் கட்டுப்பட்டே நடக்கும்போது பிண்டத்திலுள்ள அணுக்களும் அவ்விதமாகவே ஆண்டவனுடைய சட்டத்துக்குக் கட்டுப்பட்டே நடக்கின்றன. அஃதாவது, மனித தேகத்திலுள்ள ஒவ்வோர் அவயவமும் தன் தனக்குரிய சட்டத்தின்படியே நடக்கின்றது; எந்த நிமிஷத்தில் ஓர் அவயவமானது தனக்குரிய சட்டப்படி தன் தொழிலைச் செய்ய மறுக்கின்றதோ அந்த நிமிஷமுதலே தேகத்தில் ஆரோக்கியக்குறைவுண்டாகிச் சாக்காடும் கிட்டிவிடுகின்றது. ஆதலின், நம்முடைய தேகமானது சுகமாக இருக்கவேண்டுமாயின் நம்முடைய அவயவங்களெல்லாம் தம் தம் தொழிலை இறைவனது சட்டத்துக்குக் கட்டுப்பட்டே செய்து தீரவேண்டும்; இஃதேபோல் நமது ஆத்மாவும் கடைத்தேறவேண்டுமாயின் அதுவும் ஆண்டவனது சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டே நடந்துகொள்ளவேண்டும். மனிதனுடைய தேகம் ஒருவகைச் சட்டத்தை அனுஷ்டிக்கும்போது அவனுடைய ஆத்மாவானது அதற்கு நேர்மாறான வேறொரு சட்டத்தை அனுஷ்டிப்பதென்றால் அதனால் மெத்தக் கேடுகளெல்லாம் விளையும். ஆதலின் மனிதனுக்கு ஒரு மார்க்கம் இருக்கவேண்டுமாயின் அது அவனுடைய இயற்கைக்கு ஒத்த வண்ணமாகவே அமைக்கப்பட வேண்டும். மனிதனை ஒருவித இயற்கையுடன் அமைத்துவிட்டு அதற்கு முரணான வேறொரு தன்மையில் அவனுடைய மார்க்கத்தை ஏற்படுத்துவதென்றால் அளவிடற்கரிய அனந்தந் தீமைகளெல்லாம் விளைதல் கூடும்; ஆதலின் மனிதனை எத்தன்மையுடன் ஆண்டவன் படை

த்திருக்கிறானோ அத்தன்மைக்கு ஒத்த வண்ணமாகவே அவனுடைய மார்க்கத்தையும் அமைத்திருத்தல் வேண்டும். இக்காரணத்தால்தான் எமது குர்ஆன் ஷரீபில், "அல்லாஹுத் தஆலாவால் அமைக்கப்பட்ட இயற்கை; இந்த இயற்கைக்கு ஒத்த வண்ணமாகத்தான் மனித தேகமானது அமைக்கப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மையான மார்க்கம்," என்று ஆண்டவன் கூறியுள்ளான். குர்ஆனேகரீமில் கூறியபடி இப்பொழுது இஸ்லாம் என்பதென்னவென்று தெரிந்துகொண்டோம்; அதாவது, ஆண்டவனது சட்டத்துக்கும் கட்டளைக்கும் முற்றிலும் கட்டுப்பட்டு நடத்தலென்பதுதான். நம்முடைய அந்தரங்க சக்தியையெல்லாம் வெளிக்கிளப்பி அதனாலடையக்கூடிய முழுப்பயனையும் தரத்தக்க இறைவனது இயற்கைச் சட்டத்துக்கு (Divine Laws of Nature) முற்றிலுங்கட்டுப்பட்டு நடப்பதே தீனுல் இஸ்லாம் எனப்படுவது.

## மதத்தின் நோக்கம் யாது?

மேலே சொல்லிவந்த விஷயங்களைக் கவனிக்கும்போது அவற்றினின்றும் இன்னொரு விஷயம் உதிக்கின்றது: மதத்தின் நோக்கம் யாது? என்னும் இவ்விஷயம் நம்முடைய மனத்தின்கண் ஒரு கிளர்ச்சியையுண்டுபண்ணுகிறது;—"ஆண்டவனிடத்திலிருந்து வெளியானவற்றைப் பின்பற்றுவதுதான் சரியான மார்க்கமாகும்; இப்படிப் பின்பற்றுகிறவர்கள்தாம் சரியான வழியில், அதாவது இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து முன்னுக்குக் கொண்டுவருகிறவனாகிய ரக்ஷகனிடத்திலிருந்துண்டான சன்மார்க்கத்தில் இருக்கிறார்கள்; இவர்கள்தாம் விசேஷ ஜயமுடையவர்களாவார்கள்," என்றுகூறி அல்லாஹுத் தஆலா தன் திருமறையாகிய புர்க்கானுல் மஜீதில் மதத்தின் நோக்கம் இன்னதென்பதைத் தெரிவித்திருக்கிறான். மனிதன் ஜயம்பெறவேண்டுமாயின் அவன் தன்பாலுள்ள அபாரசக்தியையெல்லாம் வெளிப்படுத்தி அதனாலுண்டாகும் முழுப்பலனையும் அடைதல் வேண்டுமென்று இவ் வேதவாக்கியத்தில் ஆண்டவனே குறிப்பிட்டுள்ளான். நாம் மேலே "விசேஷ ஜயம்" என்று எழுதியுள்ள பதமானது அரபு பாஷையில் பலாஹ் என்று கூறப்பட்டிருக்கிறது. பலாஹ் என்பதன் தத்துவார்த்தமானது, மனிதனிடத்தில் கடவுளால் அமைக்கப்பட்டிருக்கும் எல்லாச் சக்திகளையும் வெளிக்கிளப்பி அவற்றாலுண்டாகக்கூடிய முழுப்பலனையும் அடைதல் என்பதாகும். இவ்வுலகில் காணப்படும் ஒவ்வொரு வஸ்துவிலும் ஒவ்வொரு விதமான சக்தி அமைந்திருப்பதே போல் மனிதனிடத்திலும் அநேகவிதமான அந்தரங்க சக்திகளெல்



லாம் அமைந்துகிடக்கின்றன. கடுகைக் காட்டிலும் மிகச் சிறியதாகிய ஓர் ஆலின் விதைக்குள் எவ்வளவோ பிரம்மாண்டமான மரமாகக்கூடிய சக்தியெல்லாம் நிறைந்திருக்கும்போதும், இப்படியே ஒருசிறு மாவிதைக்குள் ஒரு பெரிய விருக்ஷமாகக் கூடிய தன்மையும் அதைக் காட்டிலும் சிறியதாகிய ஒரு புளியங்கொட்டைக்குள் அதிக அபாரமான மரமாகக் கூடியவன்மையும் மறைந்திருக்கும்போதும் நம்முடைய சரீரத்துக்குள்ளும் ஆயிரக்கணக்கான அபார அந்தரங்க சக்திகளெல்லாம் நிறைந்திருக்கத்தான் வேண்டுமென்று எதிர் பார்ப்பது ஓர் ஆச்சரியமன்று. ஒரு பெரிய ஆலமரத்தின் தழைகளும் கிளைகளும் தளிர்களும் மலர்களும் பழங்களும் காய்களும் அதிநுட்பமான விதைக்குள் மறைந்துகிடக்கும்போது மனிதனுடைய தேகத்திலும் அப்படிப்பட்ட அநேக சக்திகள் நிறைந்துகிடப்பது எங்ஙனம் ஆச்சரியமாகும்? அருகம்புல் நுனியில் தங்கக்கூடிய அவ்வளவு சிறுதுளியாகிய விந்து நாதத்திலிருந்து நம்முடைய இவ்வளவு பெரிய தேகத்தை ஆண்டவன் படைத்திருக்கும்போது, இத்தேகத்தின் மூலமாய் மானஸ உலகத்திலும் ஆத்ம உலகத்திலும் அளவிடற்கரிய அபார ஜயத்தையெல்லாம் பெறுதற்குரிய அந்தரங்க சக்திகளை நமக்கு அவ்விறைவன் கொடுத்திருப்பது ஓர் ஆச்சரியமாகுமோ? கர்ப்பக்கோழையில் அனுஷ்டிக்கப்படவேண்டிய சில சட்டங்களுக்கு அணுவளவும் மீறாமல் கீழ்ப்படிந்து நடப்பதனால் மிகச் சிறு விந்து நாதத்துளியிலிருந்து இவ்வளவு பெரிய சரீரம் வளர்ந்திருப்பதே போல் இச்சரீரத்தை வைத்துக்கொண்டு ஆண்டவனால் அருளப்பட்ட மற்றும் சில சட்டங்களுக்கு நாம் கீழ்ப்படிந்து நடப்போமாயின் மானஸ உலகத்திலும் ஆத்ம உலகத்திலும் அளவிடற்கரிய அபாரஜயத்தையெல்லாம் அடையலாம். இப்படிப்பட்ட ஜயத்தையெல்லாம் அடைதற்குரிய சட்டதிட்டங்கள் இன்ன இன்னவையென்று வரையறுத்துச் சொல்லவேண்டியதுதான் மதத்தின தொழிலாயிருக்கிறது. ஆகவே, சுருங்கச் சொல்லுமிடத்து மனிதனுடைய அந்தரங்க சக்திகளையெல்லாம் வெளிப்படுத்தி அவற்றாலாகக்கூடிய முழு ஜயத்தையெல்லாம் அடைதற்குரிய எளிய வழிகளை வெளிப்படுத்துவதுதான் சத்திய சன்மார்க்கத்தின் நோக்கமாயிருத்தல்வேண்டும்.

## எந்த இடத்துக்கு எந்த மதம்?

யாருக்கு இப்படிப்பட்ட சன்மார்க்கம் அளிக்கப் பட்டிருக்கிறதென்றும், அது எக்காலத்தில் எவ்விடத்தில் அருளப்பட்டதென்றும் நாம் இப்பொழுது உசாவவேண்டும். இவ்வினாவுக்கு விடை

பகர்வது வெகு எளிதுபோல் காணப்படினும் எந்த மதத்தினரும் இதற்குச் சரியான சமாதானம் சொல்வது கிடையாது. மனித கோடிகளுக்கெல்லாம் பயன் தரத்தக்க ஒரு சன்மார்க்கம் இருக்க வேண்டுமாயின் அது இவ்வுலகின் ஒவ்வோரிடத்திலுமுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் அனுஷ்டிப்பதற்குரியதாயிருத்தல் வேண்டுமன்றோ? ஆத்மசக்தியை யெல்லாம் வெளிப்படுத்தி அபார ஜயமெல்லாம் அடையவேண்டியதே மதத்தின் முக்கிய நோக்கமாயிருக்கும்போது அப்படிப்பட்ட மதமானது எல்லாத் தேசத்துக்கும் எல்லாக்காலத்துக்கும் எல்லாவித மனிதர்களுக்கும் பொருந்தும்படியாகவும் அமைக்கப்படுதல்வேண்டும். மனிதர்களின் ஸ்தூல தேகம் சம்பந்தப்பட்டமட்டில் இவ்வுலகில் வெவ்வேறு தேசத்துக்கு வெவ்வேறு காலத்துக்கு வெவ்வேறு ஜாதியாருக்கு வெவ்வேறு கடவுள் இருப்பதாய்க் காணப்படவில்லை. மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதன வாகிய சூரிய சந்திர நக்ஷத்திர கிரகங்களும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும், இன்னும் மலை கடல் நதிமுதலிய இயற்கைப் பொருள்களும் ஒரு வர்க்கத்தாரின் நன்மைக்காக மட்டுமே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனவென்று ஒருவராலும் சொல்ல முடியாது. இவ்வாறே இவ்வுலகில் காணப்படும் தாவர வஸ்துக்களும் தாதுப் பொருள்களும் எல்லாவித மனிதர்களின் நன்மைக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்தூலதேகம் சம்பந்தமான இவ்விஷயங்களிலெல்லாம் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையில், ஒரு ஜாதியாருக்கும் மற்றொரு ஜாதியாருக்கும் இடையில் ஆண்டவன் எவ்வகை வேறுபாட்டையும் அமைக்காமலிருக்கும்போது ஸூக்ஷ்ம தேக சம்பந்தமான ஆத்ம சக்திக்குரிய விஷயங்களில் மட்டும் அந்த ஆண்டவன் வேற்றுமை செய்வதாக ஏன் சிலர் வாதித்து வருகின்றனர்? ஆத்மார்த்தத்துக்குரிய ஒரு சன்மார்க்கமானது உண்மையாகவே ஆண்டவனிடத்திலிருந்து உதயமாயிருக்கும் பக்ஷத்தில் அது இவ்வுலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலுமுள்ள ஒவ்வொரு மனிதப் பிராணிக்கும் பொதுவானதாகவும் பொருத்தமுள்ளதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்; ஜாதி வித்தியாசமாவது பாஷை வித்தியாசமாவது அல்லது தேசபேதமாவது நிறபேதமாவது அந்த ஸர்வலோக ரக்ஷகன் என்று சொல்லப்படக்கூடியவன் பாராட்டவே கூடாது. இவ்வுண்மையானது எவ்வளவோ சர்வ சாதாரணமாயும் யுக்திக்குப் பொருத்தமுள்ளதாயும் காணப்படினும் இஸ்லாமான மார்க்கம் இவ்வுலகில் தோன்றுமுன் வேறெந்த மதத்தினரும் தம்முடைய மதமானது இவ்வுலகத்து மாந்தருக்கெல்லாம்



பொதுவாகவே அமைக்கப்பட்டதென்று நிராடங்கமாய் ஒத்துக் கொள்ளவில்லை. இஸ்லாத்துக்கு முன்னிருந்த ஒவ்வொரு மதத்தினரும் தம்தம்முடைய மதமே தெய்வத்தினிடத்திலிருந்து வெளியாக்கப்பட்டதென்று வாதித்து வந்தபோதிலும், "என் தெய்வம் எனக்குமட்டுமே சொந்தம்; என் மதம் என் தேசத்துக்கும் என் ஜாதிக்குமட்டுமே சொந்தம்; என் தெய்வத்துக்கும் உனக்கும் ஒன்றும் சம்பந்தமில்லை," என்றே சொந்தம் பாராட்டி வந்தனர். தங்களுடைய மதம் மட்டுமே தேவானுக்கிரகத்தால் உதயமானதென்றும் ஏனையோரின் மதமெல்லாம் அப்படியல்லவென்றும் வாதம் புரிந்து வந்தார்கள். இப்படிப்பட்ட குறுகுதலான மனமுடையவர்களாய் அவர்கள் இருந்துவந்ததனால் ஒருவருக்கொருவர் இடையில் மாச்சரியமும் மத வைராக்கியமும் மனஸ்தாபமும் வளர்ந்து கொண்டிருந்தன. அவர்களுடைய துவேஷ புத்தியானது சகோதரர்களுக்கிடையில் சச்சரவை அதிகமாக விருத்தி செய்துகொண்டிருந்தது. ஒரே பிதாவாகிய ஏக நாயகனால் படைக்கப்பட்டுள்ள மனிதவர்க்கத்தினரெல்லாம் ஒரே சகோதரத்துவமாய்க் காலங்கழிப்பதைவிட்டு ஒருவரோடொருவர் சண்டையிலும் சச்சரவிலும் தலையிட்டுத் தமக்குள்ளிருக்கவேண்டிய ஒற்றுமையை யெல்லாம் குலைத்துக்கொண்டனர். இப்படிப்பட்ட கெட்ட குணமானது எமது குர்ஆனெனும் வேதம் வெளியாகுமட்டும் இவ்வுலகில் குடிகொண்ட வண்ணமாகவே இருந்துவந்தது; ஆனால் குர்ஆன் ஷரீபின் முதல் அத்தியாயத்தின் முதல் வாக்கியத்தில், "அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்" என்று அல்லாஹ் தஆலா ஆரம்பம் செய்தபோதே "ஆண்டவன் சர்வலோகங்களுக்கும் நாயகன்" என்னும் உண்மையை இவ்வுலகத்தவர் முதன் முதலில் உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டனர். "ஒரு ஜாதியார் அல்லது இரு ஜாதியார், ஒருதேசத்தினர் அல்லது இருதேசத்தினர், ஒரு வர்க்கத்தினர், அல்லது இரு வர்க்கத்தினர், ஒருலகிலுள்ளவர் அல்லது ஈருலகிலுள்ளவர் என்னும் வேறுபாடில்லாமல் சர்வலோகங்களிலுமுள்ள சர்வப்பிராணிகளையும் படைத்துக்காத்து மேன்மைப்படுத்தக்கூடிய ஏக நாயகனுக்கே எல்லாப்புகழும் தகும்," என்பதுதான் மேற்கூறிய குர்ஆன் ஆயத்தின் தாத்பரியம். மேலும் மற்றோரிடத்தில் அல்லாஹ் தஆலாவானவன், "ஆண்டவனிடத்திலிருந்து அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியவர் அனுப்பப்படாத ஜாதியார் இவ்வுலகில் இருந்ததே யில்லை," என்று தன் நித்திய வேதத்தில் கூறியுள்ளான். ஒவ்வொரு தேசத்தினருக்கும் ஒவ்வொரு ஜாதியினருக்கும் ஆண்டவன் தன் தூதர்களை அனுப்பியிருக்கிறா

னென்னும் உண்மையை எமது புர்க்கானுல் மஜீதென்னும் குர்ஆன் ஷரீபானது திராடங்கமாய் ஒத்துக்கொண் டிருக்கிறது. ஆகவே அக்காலத்தில் இவ்வுலகில் காணப்பட்ட மதங்களெல்லாம் ஆண்டவனிடத்திலிருந்தே உற்பத்தியாயின வென்பதை அவ்வேதமானது ஒத்துக்கொண் டிருக்கிறது. ஆதலின் எமது திருமறையில் வருணிக்கப்படும்தெய்வமானது இஸ்ரவேல் கூட்டத்தாருக்குமட்டும் சொந்தமென்றாவது இந்தியருக்கு மட்டும் உரியதென்றாவது அல்லது அரபிகளுக்குமட்டும் பிரத்தியேகமானதென்றாவது கொள்வதற்கு இடமில்லை; ஆனால் அத்தெய்வம் சர்வலோகங்களிலுமுள்ள சர்வப் பிராணிகளுக்கும்சொந்தமாயிருக்கிறது. இக்காரணத்தால்தான் இந்தியா, சீனா, ஜப்பான், பர்ஷியா, அரபியா, ஆசியாமைனர், பலஸ்தீனம், எகிப்து, ரூம், ஷாம், ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய எல்லாப்பகுதிகளிலும் உதயமாயிருக்கும் எல்லாத் தீர்க்கதரிசிகளின் மீதும் நம்பிக்கை வைக்க வேண்டுவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் முக்கியகடமையாயிருக்கிறது. இன்னும் இவ்வுண்மையை அதிகமாக உறுதிப்படுத்த வேண்டுமாயின் குர்ஆன் ஷரீபிலுள்ள மற்றொரு வாக்கியத்தின் கருத்தைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

“முஸ்லிம்களாகிய நீங்கள் உலகத்தவருக்குப் பின்வருமாறு அறிவியுங்கள்: ‘நாங்கள் அல்லாவின் மீதும், அல்லாவினால் முஹம்மதுநபி (ஸல்) மூலமாய் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட வேதத்தின்மீதும், இப்ராஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை), இஸ்ஹாக்(அலை), யாக்கூப் (அலை) ஆகிய நபிமார்களுக்கும் அந்நபிமார்களின் ஜாதியார்களுக்கும் வெளியிடப்பட்டவற்றின்மீதும் உண்மை கொள்ளுகிறோம்; மூஸா (அலை), ஈஸா (அலை) முதலிய இவ்வுலகத்திய எல்லா நபிமார்களுக்கும் வெளியாக்கப்பட்டதை யெல்லாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். நபிமார்களுக்குள் ஒருவருக்கொருவர் இடையில் நாங்கள் வேறுபாடு காட்டமாட்டோம். நாங்கள் ஆண்டவனுக்கு மட்டுமே தலை சாய்க்கிறோம்.’’ நாங்கள் ஆண்டவனை மட்டுமே பூஜிப்போமல்லாமல் அவ்வாண்டவனால் அனுப்பப்பட்ட யாதொரு தீர்க்கதரிசியையாவது அல்லது வேறெந்தப் பிராணியையாவது படைப்பையாவது ஒருபோதும் பூஜிக்கமாட்டோம். ஆண்டவனிடத்திலிருந்து வேதங்களையும் ஆகமங்களையும் வரவழைத்துக்கொடுத்ததற்காக நபிமார்களிடம் யாங்கள் மிக்க நன்றியும் அதிக மரியாதையும் காட்டியபோதிலும் ஒருகாலும் நாங்கள் அந்தத் தீர்க்க தரிசிகளை வணங்குவதில்லை. ஒரு ஜாதியாருக்கு நல்வழிகாட்டும் பொருட்டு ஒரு நபியிருந்தாரென்றும் அவர் மூலமாய் வெளிவந்த ஆகமமானது இன்னதுதானென்றும் எண்பிப்பி



ராயின் உடனே அந்தத் தீர்க்க தரிசியையும் அவருடன் வெளியான ஆகமத்தையும் ஒத்துக்கொள்ளவேண்டியது முஸ்லிமாகிய என்மீது கடமையாகின்றது; கடைசிநபி யென்னப்படும் “காத்தமந் நபிய்யீ’’னாகிய எமது முஹம்மதுநபி (ஸல்) அவர்களின் காலத்துக்கு முன் அவதரித்த தீர்க்க தரிசியொருவர் எத்தேசத்தி லுதித்தவராயினும் எக்காலத்திலிருந்தவராயினும் எச்சாதியாரைத் திருத்தவந்தவராயினும் அவர்மீதும் அவருக்காகவெளியான ஆகமத்தின்மீதும் உறுதிகொண்டுவிடுவேன். இது என் வேதக்கட்டளை.

## குர்ஆன் ஷரீபு உலகுக்கெல்லாம் போது.

இவ்வுலகில் இதுவரையில் தோன்றியிருக்கும் எல்லா நபிமார்களின்மீதும் ஒவ்வொரு முஸ்லிமும் உறுதிகொள்ள வேண்டியது ஒரு முக்கிய கடமையா யிருந்தபோதிலும் யாங்கள் இவ்வுலகிலுள்ள இதர வேதங்களைக் காட்டிலும் எமது குர்ஆன் ஷரீபின் மீதே மிகுதியான நம்பிக்கைவைத்து வருகிறோம்; ஆனால் இதுவரையில் மேலே கூறிவந்த விஷயங்களைக் கவனித்துவந்தவர்களுக்கு யான் இங்கே கூறுவது சிறிது முரணாய்க் காணப்படலாம். ஆனால் விஷயங்களை உற்று நோக்குவீர்களேல் உங்களுக்கொன்றும் அப்படிப்பட்ட அனாவசியமான சந்தேக முண்டாக மாட்டாது. இவ்வுலகில் வேறுபல வேதங்கள் இருந்து வரும்போது குர்ஆன் ஷரீபு வெளியாக வேண்டிய காரணம் என்னவென்று விஸ்தரிக்குமிடத்தில் அந்தக் குர்ஆன் ஷரீபே தான் வெளிவரநேர்ந்த அவசியத்தைக் குறித்து மிக விளக்கமாகக் கூறுகின்றது: “ஒருபொருள் தன்னுடைய தன்மையை யிழந்து விடும்போதும் அல்லது அப்பொருள் இவ்வுலகினின்றும் மறைந்து விடும்போதும் நாம் (அல்லாஹுத் தஆலா) முன்போன்ற வேறொரு பொருளையாவது அல்லது அதைக்காட்டிலும் சிறந்ததை யாவது அனுப்புகிறோம்.’’ இவ்வாக்கியத்தில் ஆண்டவன் தன்னால் படைக்கப்பட்ட வஸ்துக்களினின்றும் உதாரணம் காட்டுகின்றான். இவ்வுலகில் நம்முடைய நன்மைக்காக ஆண்டவனால் படைக்கப்படும் பொருள்கள் பிரயோசனமில்லாமல் கெட்டுப்போன போதிலும் அல்லது அழிந்துபோனபோதிலும் அவற்றிற்கு ஈடாக வேறுபொருள்கள் ஆண்டவனால் அமைக்கப் படுகின்றன. இயற்கைப்பொருள் ஒவ்வொன்றிலும் இப்படிப்பட்ட மாற்றுதற்கரிய சட்டத்தை நாம் காண்கின்றோம். மழை நீரை நாம் சிறிது கவனிப்போம். ஒருமுறை மேகத்தினின்றும் வருஷிக்கும் ஜலமானது இவ்வுலகின் அசுத்தப் பொருள்களுடன் கலந்து தன்னுடைய இயற்கைப் பரிசுத்தத்தை இழந்துவிடும்

போதும் அல்லது இவ்வுலகில் அம்மழைநீர் செலவழிந்து போகும் போதும் வேறுமழை பெய்யவேண்டிய அவசியம் நேரிடுகின்றது. குர்ஆன் ஷரீபு வெளியாகுமுன் ஒவ்வொரு தேசத்தினருக்கும் ஒவ்வொரு ஜாதியினருக்கும் ஆண்டவனுடைய வேதமும் ஆகமமும் இருந்து வந்தன. ஆனால் அவையெல்லாம் பல்காரணங்களால் அழிந்தோ மாறுபட்டோபோயின. அவை என்ன என்னகாரணங்களென்று இங்கே விஸ்தரிக்கத் தேவையில்லை. ஆனால் உதாரணமாக ஒரு காரணத்தை மட்டும் எண்டு எடுத்துரைக்கலாம். அவ்வேதங்களும் ஆகமங்களும் தக்க பந்தோபஸ்துடன் பத்திரமாகப் பாதுகாக்கப் படாமையால் அவையெல்லாம் தமது பரிசுத்தத்தன்மையை யிழந்துவிட்டன. பத்திரமாகப் பாதுகாப்புச் செய்யாமல் விட்டுவிட்டதோடு நில்லாமல் மனிதர்கள் தங்களுடைய விஷமத்தனத்தையும் அவற்றுள் நுழைத்து விட்டார்கள். ஆகவே ஆண்டவனால் ஆதியில் அனுப்பப்பட்டிருந்த ஆகமங்களும் வேதங்களும் தமது இயற்கைப் பரிசுத்தத்தை இழந்து மனிதசேஷ்டையால் மாறுபட்டுக்கிடந்தன. அநேக ஆகமங்கள் அடியோடு ஒழிந்துவிட்டன; எஞ்சிநின்ற சிலவற்றுள்ளும் பரிசுத்தமென்பதே குறைந்துபோய் மனிதசேஷ்டையே மலிந்துகிடந்தன. குர்ஆன் ஷரீபானது அடிக்கடி இவ்வுண்மையைப்பற்றி விஸ்தரித்திருக்கின்றது; குர்ஆன் ஷரீபென்னும் ஒரு புதியவேதம் வெளிப்படவேண்டிய பல காரணங்களுள் மேற்கூறியதும் ஒன்றென்று அவ்வேதமே அறைகின்றது; ஆனால் குர்ஆன் ஷரீபில் 1300 வருஷங்களுக்கு முன் வாதிக்கப்பட்ட இவ்வுண்மையை இப்பொழுதுதான் இவ்வுலகத்தினர் உணர ஆரம்பித்திருக்கின்றனர். மனிதசேஷ்டையால் பைபிள் வேதமானது அதிகமாக மாறுபாடுற்றிருக்கிறதென்று சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் சொல்லியிருப்போமாயின் கிறிஸ்தவ உலகத்திலுள்ள ஒருவர்கூட ஒத்துக்கொண்டிருக்கமாட்டார். ஆனால் இப்பொழுதோ, எமது குர்ஆன்ஷரீபு ஒன்றுதவிர இவ்வுலகிலுள்ள இதரவேதங்களில் பெரும்பான்மையன தமது இயற்கைப் பரிசுத்தத்தை யிழந்து மாறுபட்டுக்கிடக்கின்றனவென்றும், ஆனால் சிறுபான்மையான ஒன்றிரண்டு மட்டும் மனிதனுடைய மூளைக்கு எட்டமுடியாத அவ்வளவு அர்த்தம் விளங்காத பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றனவென்றும் எல்லா அறிஞர்களும் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். பைபிளின் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் ஆதியோடந்தமாய் மாறுபட்டுக்கிடக்கின்றனவென்று யூதசாஸ்திரிகளும் கிறிஸ்தவப் பாதிரிகளும் சந்தேகமில்லாமல் ஒத்துக்கொண்டுவிட்டார்கள். ஆனால் பரதகண்டத்திலுள்ள



பல ரிஷிபுங்கவர்களால் எழுதப்பட்ட வேதசூத்திரங்களைப்பற்றிச் சிறிது பார்ப்போம். அவர்களால் எழுதிவைக்கப்பட்ட வேதங்களைப்பற்றிச் சொல்லும்போது ஸ்ரீ வால்மீகிமகரிஷியானவர், வேதபுத்தகம் பூர்த்தியானதாயில்லையென்றும் அதில் பல சூத்திரங்கள் குறைகின்றனவென்றும் சொல்லியிருப்பதாய் நாம் கேள்விப்படுகின்றோம். இம்முனிசிரேஷ்டர் சொல்வது தவறென்று எண்பிக்க வேறு ஆதாரமொன்றும் கிடைக்கவில்லை. மனிதர்களுக்கு இக்காலத்தில் வேண்டியவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்ப்போமாயின் ஆரியர்களால் அநேகமாயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதிவைக்கப்பட்ட சூத்திரங்கள் இப்பொழுது போதுமான வழிகாட்டியாயிருத்தல் முடியா; இப்பொழுது நமது கைக்கு எட்டியிருக்கும் சூத்திரங்களையெல்லாம் வைத்துக்கொண்டு அவை இவ்வுலகமுழுதுமுள்ள 200 கோடி ஜனங்களுக்கும் போதுமோவென்று சற்று நிதானிப்போமாயின் இப்பூவுலகின் பற்பல பகுதியிலுள்ள மனிதகோடிகளுக்கு அவை பற்றாமலே யிருப்பதைக் கண்டுகொள்வோம். அச்சூத்திரங்களில் அளவிடற்கரிய ஆழ்ந்த ஞானங்களிருக்கலாம்; ஆனால் அந்த ஞானச்சுரங்கமெல்லாம் இக்காலத்திய மனிதர்களுக்கு ஒரு முத்திரையிடப்பட்ட பொக்கிஷம்போலிருந்து வருகிறது. பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னேயே உலக வழக்கற்றுப்போன சமஸ்கிருத பாஷையில் அச்சூத்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. ஆதலின் அவற்றிற்கு வியாக்கியானம் செய்யும்போது பலர் பலவிதமாய்த் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். வேத சூத்திரங்களுக்கு வியாக்கியானம் செய்தவர்களெல்லாம் தத்தம் அபிப்பிராய பேதத்துக்கு ஆதாரம் அச்சூத்திரங்களிலேயே யிருப்பதாய்க் கூறுகின்றனர். வியாக்கியானிகள் தங்களுடைய கொள்கையிலும் அனுஷ்டானத்திலும் ஒருவருக்கொருவர் நேர்முரணாய் மாறுபட்டிருந்த போதிலும் தத்தம் வியாக்கியானமே சரியென்று வாதிக்கின்றனர். இப்பூமியின் வடக்கு மூலையும் தெற்கு மூலையும் எவ்வளவு தூரத்தில் அமைந்திருக்கின்றனவோ அவ்வளவு வேறுபாடான வியாக்கியானங்களை உடையவர்களும் தத்தம் அபிப்பிராயங்களுக்கு மேற்கோள் அம்மூலகிரந்தத்திலேயே இருப்பதாய்ச் சொல்லுகின்றனர். ஆதலின் அவர்களுடைய வேதங்களின் உண்மையான பொருள் இன்னதுதானென்று செவ்வனே உணர்ந்துகொள்ள ஒருவராலும் முடியவில்லை. எத்தனை வகையான வியாகரணங்களும் அகராதிகளும் இருந்தபோதிலும் பழைய கால சூத்திரங்களுக்குச் சரியான வியாக்கியானம் செய்வது கஷ்டமாயிருக்கிறது. அநேகமாயிரம் வருஷங்களுக்கு முன் ஹிமா

சலப் பிராந்தியங்களில் வசித்துவந்த முனிசிரேஷ்டர்களால் எழுதி வைக்கப்பட்ட சூத்திரங்கள் இக்காலத்துக்குப் போதுமானவையாயில்லாமலிருப்பதோடு அவற்றின் உண்மையான பொருளும் இன்னது தானென்பது தீர்க்கமாய் விளங்கவில்லை.

ஆகவே ஆதியில் ஆண்டவனால் அனுப்பப்பட்டிருந்த வேதங்களின் கதியும், ஆகமங்களின் தன்மையும் இவ்வாறாய்ப்போய் விட்டமையால் கடைசியில் 1300 வருஷங்களுக்கு முன் அவ்வாண்டவனாலேயே புதியதோர் வேதம் நமது ஆத்மார்த்தத்தின் பொருட்டு அருளப்பட்டது. பழய நீரானது உபயோகமற்றுப் போனவுடன் புது மழை பெய்வதேபோல் இப்புதிய வேதமானது எல்லாருக்கும் எக்காலத்துக்கும் உபயோகப்படுமாறு அனுப்பப்பட்டிருக்கிறது. உண்மையானது இவ்வாறிருக்கும்போது மனிதர்களுள் பலர் தங்களுடைய அறியாமையாலோ அல்லது அசிரத்தையாலோ இவ்வுத்தம வேதத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். மனிதனுடைய கைபடாமல் சுயப்பரிசுத்தத்துடன் இருந்துவரும் ஆமிர்தந்தான் சுகிர்தந்தருமல்லாமல் மனித சேஷ்டையால் தனது பரிசுத்தத்தை யிழந்து விட்ட எந்த வஸ்துவும் நமக்கு நன்மை பயக்காது. ஆதியில் ஆண்டவனால் நமது பானத்துக்கென்று அருளப்பட்ட நல்ல ஜலமானது காலக்கிரமத்தில் இவ்வுலகில் அசுத்த மடைந்து விஷ நீராக மாறி விடுமாயின் அப்படிப்பட்ட ஜலத்தை யாரும் உட்கொள்ளுவதற்கு உடன் படார். இஃதேபோல் நமது ஆத்மார்த்தத்தின் பொருட்டு ஆண்டவனால் அருளப்பட்ட வேதமானது மனித சேஷ்டையால் மாறுபட்டோ அல்லது தன் பொருள் செவ்வையாய் விளங்காமல் மறைப்பட்டோ போய்விடுமாயின் அப்பொழுது வேறொரு புதிய வேதம் வெளியாக வேண்டியது அத்தியாவசியமாகின்றது. மனிதனுடைய ஏடேற்றத்துக்காக ஒரு காலத்தில் ஆண்டவனிடத்திலிருந்து ஒரு வேதம் தோன்றியிருக்குமாயின், அவ்வேதம் மனித கோடிகளுக்கு அதிகமாகப் பயன்படாமற் போகும்படி அதன் பரிசுத்தத் தன்மை அழிந்து விடும்போது மறுமுறையும் வேறொரு புதிய வேதத்தை அனுப்பாமலிருப்பது தேவ நீதியாகுமோ? அத்தெய்வமானது பழய காலத்திலிருந்த அதே தெய்வமாயின், மனிதவர்க்கத்தில் அத்தெய்வத்துக்கிருந்த கரிசனமும் கண்ணோட்டமும் இன்றைக்கும் அப்படியேயிருக்குமாயின் தன் பழைய வேதங்களின் பரிசுத்தத்தன்மையானது அழிந்து போனவுடன் புதியதோர் வேதத்தை அருளவேண்டியது அத்தெய்வத்தின் கடமையன்றோ? பழய வேதங்கள் பல இவ்வுலகிலிருக்கும்போது புதிய வேதமொன்று உதயமாக வேண்டிய அவசியம் இன்ன



தென்று எமது குர்ஆன்ஷரீபு விஸ்தரிக்கும்போதெல்லாம் மேற்சொன்ன காரணத்தையே அவ்வேதம் அடிக்கடி எடுத்தோதுகின்றது. இதனால் தான் அவ்வேதமானது இவ்வுலகுக்கெல்லாம் பொதுவாக அனுப்பப்பட்டிருக்கிறதென்று நம்புகிறேன்.

(தொடரும்.)

## வேத வியாசம்

இத்தலைப்பெயர்பூண்ட வியாசமானது எமது சத்திய சம்பூரண வேதமாகிய புர்க்கானுல் மஜீதென்னும் குர்ஆன் ஷரீபு எவ்வாறு 1300 வருஷங்களுக்கு முன் பல ஏடுகளிலிருந்து சேகரஞ் செய்யப்பட்டு ஒரே வால்யமாகத் தொகுக்கப்பட்டது என்னும் விஷயத்தை ஆதார ஆதேயங்களுடன் எடுத்துரைக்கும். இது மௌலானா மௌல்வி முஹம்மதலிசாஹிபின் வியாசத்தினின்றும் எடுத்தெழுதப்பட்டது. இவ்வியாசத்தின் அருமையும் பெருமையும் இதை முழுதும் படித்தபின்னர்தான் நன்கு விளங்கும். ப-ர்.

எமது திருமறையின் பெயரானது அவ்வேதத்திலேயே பல்வகைத் திருநாமங்களால் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இவ்வேதத்துக்கு அல்கித்தாப் அதாவது "அந்தக்கிரந்தம்" என்று ஒரு பெயருண்டு (2:2 முதலியன). அல்குர்ஆன் அதாவது "படிக்கப்படுகிறது" அல்லது "படிக்கத்தகுந்தது" என்று வேறொரு பெயருண்டு (2:185 முதலியன); மற்றோரிடத்தில் அல்புர்க்கான் அதாவது "உண்மைக்கும் உண்மையல்லாததற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை விளக்கிக்காட்டுவது" என்று அது அழைக்கப்படுகிறது (25:1 முதலியன); அல்திக்ர் அதாவது "ஞாபகமூட்டுவது" என்பது இன்னும் ஒரு பெயராகும் (15:9 முதலியன); "அல்திக்ர்" என்பதன் சம்பந்தமான இதர நாமங்கள் திக்ரா தத்கிரா என்பனவாம். அல்தன்ஸீல் அதாவது "இறக்கி வெளியாக்கப்பட்டது" என்றும் அவ்வேதம் அழைக்கப் படுகிறது. (26: 192 முதலியன); அல்ஹதீது அதாவது "(ஆண்டவனது) திருவாக்கியம்" என்று வேறொரு பெயருண்டு (18:6 முதலியன); அல்மௌஇலா அதாவது "கண்டிப்பு" என்பது இன்னும் ஒரு பெயராகும் (10: 57 முதலியன); அல்ஹுக்ம் அதாவது "தீர்ப்பு" அல்லது "ஞானம்" என்று மற்றொருபெயர் காணப்படுகிறது (13: 37 முதலியன); அல்ஹுக்ம் என்பதன் சம்பந்தமான இதரநாமங்கள் ஹிக்மத் ஹகீம் முஹ்கம் என்பனவாம். அஷ்ஷிபா அதாவது "ஆற்றுதல்" என்று ஒரு பெயருண்டு (10: 57 முதலியன); இன்னும் இத்திருவேதத்

துக்கு வந்துள்ள இதரநாமங்களாவன: அல்ஹுதா அதாவது "வழிகாட்டி" (2:2 முதலியன); ஹப்லுல்லா அதாவது 'அல்லாஹ்வின் உடன்படிக்கை" (3: 102); அர்ரஹ்மத் அதாவது "தயாளம்" (17: 82); அல்கைர் அதாவது "நல்லது" (3: 103); அர்ரூஹ் அதாவது "உயிர்" அல்லது "ஆவி" (42: 52); அல்பயான் அதாவது "வியாக்கியானம்" (3: 137); அந்நிஅமத் அதாவது "அனுக்கிரகம்" (93: 11); அல்புர்ஹான் அதாவது "நியாயவிவாதம்" (4: 175); அல்கையிம் அதாவது "உண்மையைச் சாதிப்பது" (18: 2); அல்முஹைமின் அதாவது "(முன்வெளியானதைப்) பாதுகாப்பது (5: 48); அந்நூர் அதாவது "பிரகாசம்" (7: 157); அல்ஹக் அதாவது "உண்மை" (17: 81); அல்முபாரக் அதாவது "இடையறாத ஆசீர்வாதத்தை யுடையது" (21: 50 முதலியன). மேலேகூறப்பட்டவை யல்லாமல் இன்னும் பல பெயர்களும் அவ்வேதத்துக்குண்டு. குர்ஆன் ஷரீபிலேயே அவ்வேதத்தின் பெயர்கள் முப்பத்தொரு விதமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றனவென்று அவ்வேத வியாக்கியானிகள் கூறுகின்றனர்.

ஒவ்வொரு ஸூராவிலும் (அத்தியாயத்திலும்) காணப்படும் ஆயத்துக்களெல்லாம் (வாக்கியங்களெல்லாம்) விஷயப்பொருத்தமில்லாமல் ஒன்றன்பின் ஒன்றாய்த் தாறுமாறாய் அடுக்கப்பட்டிருப்பதல்லாமல் அந்தக் குர்ஆன் ஷரீபிலுள்ள 114 ஸூராக்களும் அவ்வாறாகவே தம்முள் விஷயப்பொருத்த மில்லாமல் ஒன்றன்பின் ஒன்றாகத் தாறுமாறாக அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று வீண்பழி தூற்றுவதற்காகவே அயல்மதத்தினர்கள் வேண்டியமட்டும் பிரயாசை யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எமது அரிய திருமறையாகிய அல்புர்க்கான் வேதமானது ஒரு சிறிதும் ஒழுங்கில்லாமல் ஒவ்வொரு வாக்கியமும் ஒவ்வொரு அத்தியாயமும் தாறுமாறாய் அமைக்கப்பட்டிருக்கிறதென்று சாதிப்பதற்காக அம்மதத்தினர்கள் படும்பாட்டுக்கோர் அளவில்லை. அன்னார்களின் வேதமெல்லாம் அடியோடு மாறிக்கிடப்பதாலும் அப்படியில்லாமல் எமது சுத்த சத்திய சம்பூரண வேதமட்டும் சென்ற 1300 வருஷங்களாக ஓர் அக்ஷரமேனும் மாறுபாடுறாமல் இருப்பதாலும் அதைக்கண்டு பொறாமை யுற்றவர்களாய் எப்படியேனும் இவ்வேதத்தைக் குறை செய்து காட்டவேண்டுமென்னும் பேரவாவினால் இப்படியெல்லாம் பிரயாசை யெடுத்துக்கொள்ளுகின்றனர். குர்ஆன் ஷரீபில் ஒழுங்கீனமென்பது உண்மையில் உண்டோவென்று சற்றும் நிதானித்துப் பாராமல் வாஸ்தவமாகவே அத்திருமறையானது மகா ஒழுங்கீனமாகவே அமைந்து கிடக்கிறதென்று கிறிஸ்தவ மதத்தினர் மொத்த



மாக நம்பிக்கை கொண்டு அவ்விஷயத்தை ஒருவருக்குப் பின் மற்றொருவராக நகல் செய்து வருவதிலேயே திருப்தியாயிருக்கிறார்கள். தங்களுடைய கொள்கையானது சரியானது தானோவென்று இஞ்சித்தும் கவனியாமல் கண்மூடித்தனமாகவே அவ்விஷயத்தை நம்பி வருகிறார்கள்.

உதாரணமாக ஸேல் என்னும் கிறிஸ்தவர் எமது புர்க்கானுல் மஜீதைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறாரென்று கவனிப்போம்; தாம் எழுதிய ஆங்கிலக் குர்ஆன் மொழிபெயர்ப்பின் முன்னுரையில் அவர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்: "புதிய ஆயத்துக்கள் நபி பெருமானாரின் திருவாயிலிருந்து வெளிவந்தவுடன் அவருடைய எழுத்துக்காரர் ஏட்டில் எழுதிக்கொண்ட பிறகுதான் மற்றையோருக்கு அவர்களுடைய சொந்த உபயோகத்துக்காக அவ்வாக்கியங்கள் வெளியிடப்படும்......நபிபிரானுடைய ஸஹாக்கள் அவ்வாக்கியங்களை நகல்செய்துகொண்ட பின்னர் முதலில் எழுதப்பட்ட ஏடுகளெல்லாம் திரும்பி வந்தவுடன் தாறுமாறாய் ஒருபெட்டியில் போடப்படும்." மறுபடியும் அந்தக்கிறிஸ்தவரே சொல்கிறார்: "முஹம்மது நபி (ஸல்) இவ்வுலகை விட்டுச்செல்லு முன் குர்ஆனின் எல்லா அத்தியாயங்களையும், இப்பொழுது நம்முடைய குர்ஆனில் இருப்பது போலவே ஒழுங்கு படுத்திவிட்டுச் சென்றார்; ஆனால் தமக்குப்பின் வருபவர்கள் தங்களுடைய மனப்பாடத்துக்குத் தக்கபடி சில ஆயத்துக்களைமட்டும் சேர்க்கவும் மாற்றவும் இடம் வைத்துவிட்டு அந்நபி சென்றுபோனார்."

எமது குர்ஆன் ஷரீபைக் கடைசியாய் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பால்மர் என்னும் கிறிஸ்தவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்: "குர்ஆனின் தனித்தனியான பகுதிகள் அவை வெளிப்படுத்தப்பட்ட அப்பொழுதைக் கப்பொழுதே சதாகாலமும் எழுதப்பட்டதில்லை." மறுபடியும் அவரே சொல்கிறார்: "குர்ஆனில் காணப்படும் உள்வயணங்களையும் இன்னும் கர்ண பரம்பரையான சரித்திரங்களையும் நோட்டமிடுங்கால் குர்ஆனிலுள்ள ஸூராக்களாகட்டும் ஆயத்துக்களாகட்டும் இப்பொழுதிருப்பது போல் நபிபெருமானின் காலத்தில் இருந்திருக்கமுடியாவென்பது விளக்கமாகிறது." மேலும் அந்தப் பால்மரே இவ்வாறும் எழுதுகிறார்: "கடைசியாய்க் கவனிக்குமளவில் அநேகம் சில்லறை ஆயத்துக்கள் சில சில ஸூராக்களில் நுழைக்கப்பட்டிருக்கின்றன; இவையெல்லாம் எதுகை மோனை நயத்துக்காகவே இப்படிச் சேர்க்கப்பட்டிருப்பதாய்க் காணப்படுகின்றனவே யொழிய வேறு காரணம் ஒன்றும் புலப்படவில்லை."

இவ்வாறு கிரிஸ்தவர்கள் சொல்வதன் காரணம் யாதெனின், இப்பொழுது குர்ஆன் ஷரீபில் ஸூராக்கள் அமைந்திருக்கும் ஒழுங்கானது அந்த ஸூராக்கள் வெளிப்பட்ட காலக்கிரமப்படி ஏற்படவில்லை யென்பதுதான். எந்த எந்தக் காலத்தில் எந்த எந்த ஸூரா வெளிவந்ததோ அந்த அந்த முறைப்படி எல்லா அத்தியாயங்களும் அமையவில்லை யென்பதைத்தான் ஆதாரமாக வைத்துக்கொண்டு அந்தக்கிரிஸ்து மதத்தினர் நம்முடைய திருவேதத்தின் மீது அடாத வீண்பழியெல்லாம் கூறுகின்றனர். ஒரு சாதாரணப் புத்தகத்தை எழுதுகிறவரும் எந்த எந்தத் தேதியில் எது எதை எழுதுகிறாரோ அந்த அந்த முறைப்படி அது அதை வைப்பதில்லை; முன்னால் எழுதியதை முன்னாலும் பின்னால் எழுதியதைப் பின்னாலும் வைக்க வேண்டுவதுதான் முறையென்று ஒரு சாதாரண நூலாசிரியனும் நினைப்பதில்லை. விஷயப்பொருத்தந்தான் புத்தகத்தின் அமைப்புக்கு அவசியமே யொழியத் தேதிப்பொருத்தத்துக்கும் நூல்விஷயத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. சாதாரண நூலின் விஷயமே இவ்வாறிருப்பதை அக்கிரிஸ்தவர்கள் சிறிதும் கண்டதில்லை போலும். இப்படியே எமது குர்ஆன் ஷரீபின் ஆயத்துக்களும் ஸூராக்களும் விஷயப் பொருத்தத்துக்குத் தக்கபடியே ஒன்றன் பின் ஒன்றாய் அமைக்கப் பட்டிருக்கின்றன. குர்ஆன் ஷரீபின் வியாக்கியானிகள் (தப்ஸீர்காரர்கள்) இவ்விஷயத்தைப்பற்றி அடிக்கடி அதிகவிவரமாகக் குறித்திருக்கும் அதையெல்லாம் கிரிஸ்தவ நூலாசிரியர்கள் ஏன் கவனிப்பதில்லையோ? அந்த வியாக்கியானிகளின் கிரந்தங்களிலிருந்து அநேக அரிய விஷயங்களை யெல்லாம் அக்கிரிஸ்தவ சகோதரர்கள் எடுத்துக்கொண்டிருக்கும்போது மேற்கூறிய விஷயத்தை மட்டும் அன்னார் எடுத்தாளாமற்போனது என்னே? எமது திருவேதத்திலுள்ள ஒவ்வொரு ஸூராவையும் அந்த அந்த ஸூராவிலுள்ள ஒவ்வொரு உட்பிரிவையும்(ருக்கூஉ) அவ்வுட்பிரிவிலுள்ள ஒவ்வொரு ஆயத்தையும் சிறிது உற்றுநோக்கி ஆராய்வோமாயின் அவற்றிற்கிடையிலுள்ள தெய்விக ஒற்றுமையான ஒழுங்குகளின் அழகு நன்கு விளங்கும். நடுநிலைமையுள்ள ஒவ்வொருவருக்கும் இவ்வுண்மை செவ்வனே வெளிவராமற்போகாது. இதற்குச் சற்று நிதான புத்தி மட்டும் வேண்டும். அப்படிப்பட்ட நிதானத்துடன் ஆராயும்போது குர்ஆன்ஷரீபிலுள்ள 6666 ஆயத்துக்களும் வேறு விதமாக மாற்றி அமைக்கமுடியாதபடி அவ்வளவு அழகாகவும் புத்திக்குப் பொருத்தமாகவும் இப்போது அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் இவ்விதமாகவே எல்லா ருக்கூஉகளும் ஸூராக்களும் ஒழுங்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் உணர்ந்துகொள்ளுவீர்கள்.



எமது திருவேதம் எவ்வாறு முதலில் அமைக்கப்பட்டதென்பதை நன்குணர்ந்துகொள்ளுதற்கு இதனடியிற்கண்ட ஐந்து அம்சங்களையும் ஆராய்ச்சி செய்யவேண்டும்:

1. எம்பெருமானார் நபிமுஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய ஜீவதசையிலேயே அவர்களுடைய உத்தரவின் பிரகாரம் குர்ஆன்ஷரீபின் முழுப்பாகமும் எழுதப்பட்டுவிட்டது.

2. நபிபெருமானாரின் காலத்தில் அவர்களுடைய ஸஹாபாக்களில் பெரும்பான்மையோரால் முழுக்குர்ஆனும் மனப்பாடம் செய்யப்பட்டிருந்தது.

3. குர்ஆன்ஷரீபிலுள்ள எல்லா ஆயத்துக்களும் எல்லா ஸூராக்களும் நபிபெருமானாரின் உத்தரவின் பிரகாரம் அவர்களுடைய காலத்திலேயே ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டன.

4. அபூபக்கர்ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஆட்சியில் சேகரம்செய்து தொகுக்கப்பட்ட குர்ஆன் என்பது, நபிகள் நாயகத்தின் காலத்திலேயே ஒழுங்குசெய்து அமைக்கப்பட்ட அவ்வேதமானது பல இடங்களிலிருந்த பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு ஒரே புத்தகமாக (வால்யமாக)ச் சேகரம் செய்யப்பட்டதுதான்.

5. ஏதோ சில ஏட்டுப்பிரதிகளை வைத்துக்கொண்டு அவற்றில் சில பதங்கள் இப்போதுள்ள குர்ஆன்ஷரீபிலிருப்பதுபோலில்லாமல் வேறுபதங்களாயிருப்பதாகவும் அதனால் எமது திருமறையில் மாறுபாடுகள் உண்டென்றும் கிரிஸ்தவநண்பர்கள் கூறுகின்றார்கள். ஆனால் அப்படிப்பட்ட பதவேறுபாட்டால் ஒன்றும் அர்த்தவேறுபாடு உண்டாவதில்லை. மேலும் கிரிஸ்தவர்கள் வேறுபாடென்று நம்பும் அப்பதங்கள் உண்மையில் வேறுபாடான பதங்களாகமாட்டா.

மேற்கூறிய 5 அம்சங்களையும் ஸ்தாபிப்பதற்குப் போதுமான அகச்சாக்ஷியமும் புறச்சாக்ஷியமும் இருக்கின்றன; ஆதலின் இவ்வைந்துவிஷயங்களையும் ஒவ்வொன்றாக இதன்கீழ் ஆராய்ச்சி செய்வோம்.

### 1. குர்ஆன்ஷரீபு எழுதப்பட்டதற்குச் சாக்ஷியம்.

எமது திருவேதமாகிய புர்க்கானுல் மஜீது என்னும் குர்ஆன் ஷரீபு நாளிதுவரையில் ஒரு சிறிதும் மாறுபடாமல் சுத்தப்பரிசுத்தத்துடன் இருந்து வருவதற்கு முக்கியமுதற்காரணம் யாதெனின், அவ்வேதத்திலுள்ள ஒவ்வொரு ஆயத்தும் அந்த அந்த ஆயத்து

வெளிப்பட்டவுடன் எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய காலத்திலேயே அவர்களுடைய கண்ணெதிரில் எழுதிச் சிலாசாசனமாய் வைக்கப் பட்டது தான். எமது திரு நபியவர்கள் இவ்வுலகில் திருவவதாரம் புரியுமுன்னேயே மக்காஷரீபிலும் மதீனாஷரீபிலும் எழுதிப்படிக்கும் வித்தை நன்றாகத் தெரிந்திருந்தது; அக்காலத்திய அரபிகளுக்கு ஞாபகசக்தி அதிகமாயுண்டு; அவர்கள் ஆயிரக்கணக்கான செய்யுள் களையும் அதிக நீளமான வம்சாவழிப் பட்டிகளையும் தங்களுடைய அதிவிசித்திரமான மூளையில் ஞாபகப்படுத்திச் சேமித்து வைத்துக் சொள்வது பொது வழக்கமாயிருந்த போதிலும் அதிக சிலாக்கிய மான சில விஷயங்களைத் தங்களுடைய தேசவாசிகள் கண்ணுற்று வியப்புறுவதற்காக ஒரு பகிரங்கஸ்தலத்தில் அவற்றை எழுதித் தொங்கவிடுவதுண்டு. இப்படித் தொங்க விடப்பட்டிருந்த செய்யுள் களில் ஏழு முக்கியமான பாடல்களுக்கு அஸ்ஸபஉல்மு அல்லக்காத் (அதாவது "தொங்க விடப்பட்ட ஏழ்") என்று பேர். மகா ஆச் சரியமும் அருமையும் பொருந்திய இந்த ஏழு பாடல்களையும் யாத் திரை காலங்களில் கஅபாவின் வாயிலில் கட்டிச் சிலகாலம் வரையில் தொங்கவிட்டு வைப்பது அக்காலத்தில் வழக்கம். பாடல்களின் அருமை பெருமைகளைப் பலரும் அறிந்து ஆனந்தம் அடைய வேண் டியே அவர்கள் இவ்வாறு தொங்கவிட்டு வைப்பார்கள். இக்காரணத் தால்தான் அந்த ஏழு செய்யுள்களுக்கும் அப்பெயரிட்டிருந்தார்கள். இந்த ஏழு பாட்டுக்களும் இஸ்லாம் உதயமாகுமுன் அரபு தேசத்தி லிருந்து விளங்கிவந்த ஏழுபெயர்போன வித்துவான்களால் பாடப் பட்டவை; இவ்வேழு பாட்டுக்களும் எழுதித் தொங்கவிடப்பட் டிருந்தனவென்பதைக் கவனிக்கும்போது அக்காலத்திய அரபிக ளுக்கு நன்றாக எழுதப்படிக்கத் தெரியும் என்பது செவ்வனே விளங்கும். அவர்களுடைய அருமையான பாடல்களெல்லாம் இவ் வாறே எழுதிக் கஅபாவுக்குமுன் வரயிலில் தொங்கவிடப்பட்டிருந் தன வென்பதும் தெளிவாகும்.

குர்ஆன் ஷரீபு முழுதுமே ஒரே நூலாக எம்பெருமானார் காலத்திலேயே எழுதப்பட்டிருந்ததென்பதற்கு ஆதாரமான மேற் கோள்கள் பல உண்டு. குர்ஆனே கரீமின் ஒவ்வொரு வாக்கியமும் நபிகள் நாயகத்தின் கண் முன்பாகவே ஏடுகளில் எழுதிவைக்கப் பட்டதென்னும் விஷயத்தை அநேகம் முஸ்லிம் பிரமுகர்களும் வியாக்கியானிகளும் ஒத்துக்கொண்டிருப்பதோடு இஸ்லாத்தின் மகாகொடிய எதிரியாகிய ஸர்வில்லியம்மூர் என்னும் ஆங்கிலக் கிறிஸ்தவரும் அடியிற்கண்டபடி குறிப்பிட்டுள்ளார். குர்ஆனே



கரீம் நபிகள் நாயகத்தின் ஜீவதசையிலேயே பூர்த்தியாய் எழுதப் பட்டு விட்டதென்னும் உண்மையை அந்த எதிர்மத வாதியாலும் மறுக்கமுடியவில்லை.

"ஆனால் குர்ஆனின் முழுப்பகுதியையோ அல்லது அதன் பெ ரும்பான்மையான முழுவதையுமோ தம்முள் அடக்கிக்கொண்டிருக் கக்கூடிய அநேகம் துண்டுதுண்டான ஏட்டுப் பிரதிகள் நபிபெருமா னின் காலத்திலேயே அவர்களுடைய ஸஹாபாக்களால் எழுதப்பட்டன வென்று நம்புதற்குப் போதுமான நல்ல காரணம் அமைந்து கிடக் கின்றது. முஹம்மது நபி (ஸல்) அவர்களுடைய[illegible]க்கு முன்னரே மக்காவில் பெரும்பாலும் எழுதப் படிக்கும் வித்தை மிக நன்றாகத் தெரிந்திருந்த தென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. மேலும் மதீனமாநகரில் நபிபெருமானார் இருந்தகாலத்தில் அவர் களுடைய ஸஹாபாக்களில் மிகுதம் பேர் நாயகத்தின் கடிதங்களை யும் உடன்படிக்கைகளையும் எழுதுவதில் ஈடுபட்டிருந்தார்கள்..... மதீனத்திலிருந்த பல மனிதர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொ டுத்ததன் பயனாக, பதுருயுத்தத்தில் யுத்தக்கைதிகளாய் அகப்பட்ட வரில் பெரும்பான்மையோர் விடுதலையடைந்தார்கள். மதீனாவிலிரு ந்த அரபிகளுக்கு மக்கமாநகரிலுள்ளவர்களைப்போல் அவ்வளவு அதிகமாய்ப் படிக்கத்தெரியாமலிருந்தபோதிலும் மதீனாவில் பெரும் பான்மையோருக்கு இஸ்லாத்தின் உதயத்துக்கு முன்னேயே நன்றாக எழுதப்படிக்கத்தெரியும்." (மூர் எழுதிய முஹம்மதுவின் (ஸல்) சரிதைக்கு முன்னுள்ள பீடிகை, பக்கம் 28).

குர்ஆன் ஷரீபானது ஆதிமுதலே எழுத்து மூலமான கிரந்த மாகவேயிருந்து வருகிறதென்று எண்பிப்பதற்குப் போதுமான சாக்ஷியம் அவ்வேதத்திலேயே அமைந்து கிடக்கின்றது. குர் ஆன் ஷரீபானது அதன் வாக்கியங்களிலேயே பன்முறையும் கித் தாப் என்று திரும்பத்திரும்பக்கூறப் படுகின்றது. "கித்தாப்" என் பதன் தாத்பரியம் "சம்பூரணமாய் எழுதிமுடிக்கப் பட்டிருந்த ஒரு கிரந்தம்" என்று வியாக்கியானிகள் சந்தேகமில்லாமல் கூறியிருக்கி றார்கள். "கித்தாப்" என்பதன் மூலப்பதம் க(த்)தப என்பதாகும். "க(த்)தப" என்பதன்பொருள் "அவன் எழுதினான்" என்பதாகும்; "ஒன்று சேர்த்தான்" என்றும் வேறொரு பொருளுண்டு. ஆதலின் "கித்தாப்" என்பதன் உண்மையான பொருள் "ஒன்றாகத்திரட்டி எழுதி முடிக்கப்பட்ட கிரந்தம்" என்பதாகும். எழுதிமுடிக்கப்பட்ட கடிதத்தையும் "கித்தாப்" என்று சொல்வதுண்டு; இப்பொருளில் அல்குர்ஆன் 27:வது ஸூரா 28, 29வது ஆயத்துக்களில் "கித்தாப்" என்னும் பதம் உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. குர்ஆன் ஷரீ

புக்குக் "கித்தாப்" என்னும் பேரானது ஆதிமுதலே உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே ஆதிமுதலே குர்ஆனே கரீமானது பூர்த்தியாய் எழுதி முடிக்கப்படக்கூடிய ஒரு கிரந்தமாகவே அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறதென்பது நன்கு புலனாகும். குர்ஆன் ஷரீபானது பலபேருடைய ஞாபகத்தில் மனப்பாடமாய்ப் பதிந்திருந்தபோதிலும் அவ்வேதமானது எழுத்து மூலமாய் எழுதி முடிக்கப்பட்டு ஒரு சம்பூரண நூலாயிருந்ததென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. எழுத்து மூலமாய் எழுதிமுடிக்கப்பட்டிருந்த ஒரு கரந்தம [illegible] பரம்பரையான எழுதாக் கிளவியாயிருந்திருக்குமாயின் அவ்வேதமானது "கித்தாப்" என்று அழைக்கப்பட்டிருக்கவேண்டுவதின்று. "அல்கித்தாப்" என்று இத்திருமறை ஆதிமுதலே அடிக்கடி கூறப்பட்டு வருவதால் இவ்வேதமானது எம்பெருமானாருடைய காலத்திலேயே ஒழுங்கான முறைப்படி அமைக்கப்பட்ட ஓர் அரிய கிரந்தமென்பது வெகு விசிதமாய் விளக்கமாகின்றது. பிற்காலத்தில் காணப்படும் வால்யூம் (ஜில்தும்) நபிகள் நாயகத்தின் ஒழுங்கையே பின்பற்றி யிருக்கிறதென்பது மேலேபோகப் போகத் தெரிந்து கொள்வீர்கள். குர்ஆனே கரீமுக்கு "ஸுஹுபு" என்று மற்றொரு பெயருண்டு; "ஸுஹுபு" என்பதற்குப் பொருள் "எழுதப்பட்ட ஏடுகள்" என்பதாகும். அவ்வேதம் 98-வது ஸூரா 2, 3-வது ஆயத்துக்களில், "எல்லா நல்ல கிரந்தங்களையும் (அல்லது நல்லகட்டளைகளையும்) தம்முள் அடக்கிக்கொண்டிருக்கும் பரிசுத்தமான ஸுஹுபை (எழுதப்பட்ட ஏடுகளை) ஓதி உணர்த்தக்கூடிய அல்லாஹ்வினிடத்திலிருந்து வந்திருக்கும் ஒரு தூதர்," என்னும் விஷயம் காணப்படுகிறது. எமது திருமறையில் இவ்வாக்கியங்கள் வெகு விளக்கமாய் அமைந்திருக்கின்றன; "எழுதப்பட்ட ஏடுகள்" என்பது குர்ஆன் ஷரீபின் பக்கங்களையும் "நல்ல கிரந்தங்கள்" என்பது அவ்வேதத்திலுள்ள அத்தியாயங்களையும் குறிக்கும். குர்ஆனே கரீமானது ஆதிமுதல் எழுதப் பட்டிராத பக்ஷத்தில் அதை "ஸுஹுபு" என்றுகூற நியாயமில்லை. எமது திருமறையின் ஏடுகளெல்லாம் "ஸுஹுபு"களென்றும் அத்தியாயங்களெல்லாம் "கிரந்தங்கள்" என்றும் கூறப்பட்டுள்ளன. இன்னும் அல்குர்ஆன், ஸூரா 80: ஆயத்து 11-16-ல் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது: "இன்றிப் பின்னும், அது (அல்குர்ஆன்) உன்னதத்துக்கொரு மூலமாயிருக்கிறது; ஆதலின் விருப்பமுள்ளவன் அதை மனத்திலிருத்தட்டும்; மேன்மைதங்கிய நன்னடத்தையுள்ள எழுத்துக்காரர்களின் கையிலிருக்கும் கௌரவம் மிக்க பரிசுத்தமான ஸுஹுபுகளில் (அவர்களுக்கு வேண்டிய உன்னதத்தின் மூலம் அமைந்து கிடக்கிறது)."



"ஸுஹுபு" என்னும் பதம் பன்மை; இதன் ஒருமை ஸஹீபா என்பதாகும். அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களுடைய கலீபத்தில் ஸைத் என்பவரால் சேகரம் செய்யப்பட்ட வால்யத்துக்கு ஸஹீபா என்றே பேர் வைக்கப்பட்டிருந்தது; பிறகு உதுமான் (ரலி) அவர்களுடைய காலத்தில் எழுதப்பட்ட உத்தியோக முறையான நகலுக்கும் "ஸஹீபா" என்றே பேர் சொல்லப்பட்டு வந்தது. ஆகவே இதுவரையில் நாம் மேலே சொல்லிவந்த விஷயத்தை யெல்லாம் கவனிக்குங்கால் எமது திருமறைக்குக் "கித்தாப்" என்றும் "ஸஹீபா" என்றும் அழுத்தமாகவும் திருத்தமாகவும் இரண்டு பேர்கள் உண்டென்பதைச் செவ்வனே யுணர்ந்து கொண்டோம். எழுதி முடிக்கப்பட்ட சம்பூரணமான கிரந்தத்துக்கே "கித்தாப்" என்றும் "ஸஹீபா" என்றும் பெயர் சொல்வது வழக்கம்; இதுதான் அரபு அகராதிக்காரர்களின் அபிப்பிராயம். இதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. "ஸஹீபா" என்பதின் மூலப்பதம் "ஸஹப்" என்பதாகும்; "ஸஹப்" என்பதிலிருந்து "முஸ்ஹப்" என்னும் பதம் பிறக்கின்றது. இப்பதமானது இன்றைக்கும் குர்ஆன் ஷரீபுக்கு ஒருபெயராயிருந்து வருகின்றது. இந்த "முஸ்ஹப்" என்பதற்கு "ஸஹீபாக்கள் (அதாவது எழுதப்பட்ட ஏடுகள்) நிறைந்த ஒரு வால்யம் அல்லது புத்தகம்" என்பதுதான் தாத்பரியம். இன்னும் இவ்வேதத்துக்கு "அல்குர்ஆன்" என்று மற்றொரு பெயருண்டு. இப்பெயர் அடிக்கடி அவ்வேதத்திலேயே காணப்படுகின்றது. "குர்ஆன்" என்னும் பெயர் கரஅ என்னும் மூலப்பதத்திலிருந்து பிறந்திருக்கிறது. "கரஅ" என்பதன் முதல் தாத்பரியம் "அவ்வஸ்துக்களை அவன் சேகரம் செய்தான்," என்பதாகும்; அதேபதத்தின் மற்றொரு தாத்பரியம் "(ஒரு கிரந்தத்தை) ஓதுதல் அல்லது ஒப்பித்தல்" என்பதாகும். ஓதுவதற்கும் ஒப்பிப்பதற்கும் "கரஅ" என்னும் பதம் உபயோகமாகிற காரணம் யாதெனின், ஓதுவதிலும் ஒப்பிப்பதிலும் எழுத்துக்களும் சொற்களும் ஒருவிதமான சீழுகிய ஒழுங்கு முறைப்படி அமைக்கப்பட்டிருப்பதுதான். (ராகிப் இமாம் எழுதிய முபுரதாத் என்னும் நூலைப் பார்வையிடுக.) ஆகவே "குர்ஆன்" என்னும் பதம் மேலேசொன்ன இரண்டுவகைப் பொருளையுங்கொள்ளும்; ஏனெனின், அதற்குமுன்னிருந்த எல்லா வேதங்களின் உண்மைகளையும் இவ்வேதம் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதால் இதற்கு "குர்ஆன்" என்று பேர்; இவ்வுண்மையானது குர்ஆனே கரீம் 98-வது ஸூரா 4-வது ஆயத்தாலும் இன்னும் இதர ஆயத்துக்களாலும் நன்குவிளங்கும். (முபுரதாத்

ராகிப்), இன்னும் "குர்ஆன்" என்பதன் மற்றொரு பொருள், ஓதப்படுகின்ற அல்லது ஓதவேண்டிய அவசியமான நூல் என்பதாகும். "இவ்வுலகிலுள்ள எல்லா நூல்களிலும் மிக அதிகமாக ஓதப்பட்டு வருவது குர்ஆன் ஷரீபுதான் என்று சொல்வதில் மிகுதியான உண்மை நிறைந்திருக்கிறது," என்று என் ஸைக்ளோ பீடியா என்னும் மண்டலமகா வித்யாகிரந்தத்தில் ஓங் ஆங்கிலேயர் குறிப்பிட்டுள்ளார். இதனையெல்லாம் புலப்படுவது யாதெனின், எமது குர்ஆனே கரீமின் ஒவ்வொரு வாக்கியமும் வெளிப்பட்டவுடன் அப்பொழுதைக் கப்பொழுதே எழுத்துமூலமாய் எழுதப்பட்டும் மனிதர்களின் மனதில் பாடம்பண்ணப்பட்டும் வந்ததென்பதுதான்.

(இன்னும் வரும்)

மௌல்வி முஹம்மது அலீ
(எம். ஏ., எல் எல். பி.)

# மனிதருக்கேற்ற மனித நபி.

"ஆண்டவன் ஒரு மனிதனையா தன் தூதாக அனுப்பியிருக்கிறான்?" என்று அவர்கள் கேட்கிறார்கள்; 'உலகில் வழக்கமாய் உலவுகிறவர்கள் அமரர்களாயின் அவர்களுள் ஒருவரை [illegible]மாக நாம் தூதாக அனுப்பியிருப்போம்,' என்று அவர்களுக்கு விடை பகர்வீராக." (குர்ஆன். 17:96,97).

"உண்மையில் உங்களைப்போல் நானும் (நபிகள் நாயகம்) ஒரு மனிதன்தான்; உங்களுடைய ஆண்டவன் ஒரே நாயனென்பது எனக்கு வெளியாக்கப்பட்டிருக்கிறது"—(குர்ஆன்).

"முஹம்மது நபியின் (இவர்களுக்கு இறைவனருளும் அவன் நன்மாராயமு முண்டாகுக) ஜீவிய சரித்திரம் சாதாரண பிறவியையுடைய ஒரு மனிதரின் சரித்திரமாக இருக்கிறதல்லாமல் ஒருதெய்வத்தின் கதைபோலில்லை. ஆதிமுதல் அந்தம் வரையில் அது மனிதசரித்திரமயமாகவே யிருக்கிறது"—(லேன்பூல் என்னும் கிறிஸ்தவ கிரந்த கர்த்தா).

"அல்லாவின் தூதரிடத்தில் மேன்மையான மாதிரி (நமூனா) உங்களுக்கிருக்கிறது" —(குர்ஆன், 33:21).

"ஏனெனின் உம்மிடத்தில் (திருத்தூதரிடத்தில்) மேன்மையான குணாதிசயமெல்லாம் காணப்படுகிறது"—(குர்ஆன், 68:5).

"ஆண்டவனை நீங்கள் விசுவசித்தால் என்னை (திருநபியவர்களை)ப் பின்பற்றுங்கள்,' என்று சொல்வீராக"—(குர்ஆன், 3:29).



"எதுவரையில் உங்களுடைய பெற்றோர்களையும் பிள்ளைகளையும் விட நபிகள் நாயகத்திடம் உங்களுக்கு அதிகமான ஆசையும் அபிமானமும் அன்பும் இல்லாமற்போகின்றதோ அதுவரையிலும் உங்களுடைய உறுதிப்பாடு (ஈமான்) பொய்யானதென்றே அறியுங்கள்"—(நாயகவாக்கியம்).

"எல்லாப் பிராணிகளுக்கும் ஒரு தயாளமாகவல்லாமல் வேறு காரணத்தால் உம்மை (ரஸூலுல்லாவை) நாம் அனுப்பவில்லை"—(குர்ஆன்.)

# மதுபானம்.

"மதுபானம் செய்வதும் பந்தயம் வைத்துப் பகடையாடலும் கட்டுவைத்த கற்களுக்குப் பூஜை செய்வதும் பாணப்பிரிவினையால் பந்தயவிளையாட்டு விளையாடுதலும் ஆகிய இவையாவும் ஷைத்தானுடைய செயலிலுள்ள அசுத்தமான காரியங்களாகின்றன; ஆதலின் அவற்றை விட்டுத்தவிழ்ந்து அப்புறப்படுங்கள்; அப்பொழுது நீங்கள் ஜயம் பெறக்கூடும்"—(குர்ஆன்).

இவ்விஷயம் எமது பரிசுத்த வேதமாகிய குர்ஆன் ஷரீபின் 5-வது அத்தியாயம் 90-வது திருவாக்கியத்தில் காணப்படுகின்றது. இவ்வாக்கியத்தில் மதுபானத்துடன் இன்னும் மூன்று விஷயங்களும் விலக்கப்பட்டிருக்கின்றன. இவ்வேதவாக்கியம் வெளிப்பட்ட காலத்தில் இவ்வுலகமானது, இந்த 20-வது நூற்றாண்டிலிருப்பதைக்காட்டிலும் மிகக் கேடான மதுபானத்தில் மூழ்கிக்கிடந்தது; இப்படிப்பட்ட "குடி" வெறியினின்றும் அக்காலத்திய அரபிகள் தப்பமுடியாமல் தினம் ஒன்றுக்கு மூன்றுவேளை ஆகாரமும் ஐந்துவேளை மதுபானமும் செய்துவந்தார்கள். அவர்களைப்போல் அக்காலத்தில் மிதமிஞ்சிய மதுவைக் குடித்தவர்கள் வேறு ஜாதியார் யாருமில்லை. அவர்களைக் காட்டிலும் அதிகமாகவோ அல்லது அவர்களுக்குச் சமானமாகவோ "குடிக்கக்கூடியவர்கள்" இக்காலத்திலும் எவருமில்லையென்றே உறுதியாகக்கூறலாம். ஆனால் இக்காலத்திய மனிதர்கள் குடிக்கும் "குடியே" நமக்கெல்லாம் சகிக்கமுடியாமலிருக்கின்றது. இந்தியன் பீனல் கோடில் காணப்படும் குற்றங்களுள் முக்காற்பங்குக் கதிகமான குற்றங்களுக்கெல்லாம் மூலகாரணம் "குடி" யாகவேயிருக்கிறது. மதுபானத்தால் அநேக மறக்கமுடியாத படுகொலைகளெல்லாம் நிகழ்கின்றன. சாதாரணமான நெருக்கூச்சல் முதல் பெருங்கொலைகள் வரையில் குடிவெறியாலேயே நிகழ்கின்றன.

மஹாத்மா காந்தியடிகள் சென்ற 20—7—21ல் உபந்யசித்தது

போல், "நாகபூர், அலிகார், தார்வார் முதலிய இடங்களில் மதுபானக்கடைகளே பலபேர்களுடைய மரணத்துக்குக் காரணமாயிருந்தன. மதுபானக் கடைகளுக்கு மனிதர்களைப் போகாமல் தடுத்ததனால்தான் அலிகாரில் அமளிநடக்கலாயிற்று. பாரிஸ்டர் ஜனுப் ஷேர்வானியும் அக்காரணத்தாலேயே கைது செய்யப்பட்டார். இவ்வாறெல்லாம் தேசாபிமானிகளைச் சிறைக்கனுப்பி வருவதை நீங்கள் (மதுபானக்கடைக்காரர்கள்) பார்த்து வருவது தர்மமா? உங்கள் கடைகளை மூடிவிடுவதால் உங்கள் தேசத்துக்கு மட்டுமல்ல, ஆனால் உங்களுக்கும் நன்மை செய்து கொண்டவர்களாவீர்கள். இனி உங்கள் கடைகளைத் திறந்து வைக்கும் பக்ஷத்தில் நீங்களெல்லாம் தேசத்துரோகிகளென்றே நான் கூறுவேன்," என்னும் விஷயம் மிகவும் விசனிக்கத் தக்கதாயிருக்கிறது. மேல் நாடு முழுவதும் கெடுவது "குடியால்" தான். இக்காரணத்தால் தான் அம்மேல் நாட்டாரால் ஆளப்பட்டு வரும் நம் கீழ் நாடும் குடிமயக்கத்தில் மூழ்கிக்கிடக்கின்றது. ஹிந்து மதமும் இஸ்லாமார்க்கமும் கூறுவதேபோல் மதுபானம் செய்வதை அக்கிறிஸ்தவ மேல் நாட்டார் ஒரு மகாபாதகமென்று கருதுவதில்லை. இதற்குக் காரணம் மேல் நாட்டில் தலையோங்கி நிற்கும் லோகாயத மதமென்று மட்டும் எண்ண வேண்டாம். லோகாயத மதத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இம்மதுபானத்தை ஒரு பாதகத்தொழிலாக மதிக்காமலிருப்பதோடு மேல்நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்களும் இதையொரு பாபகாரியமென்று கருதுவதில்லை. ஏனெனின் அவர்களுடைய பைபிள் வேதத்தில் கூறப்பட்டிருப்பதே போல் ஏசுநாதர் முதன் முதலாகச் செய்து காட்டிய அற்புதமானது தண்ணீரைச் சாராயமாக்கிய மகிமைதான். இம்மட்டுமோ! இன்னுமோர் அதிசயமுமுண்டு. இன்றைக்கும் மதுவை ஏசுநாதரின் உதிரமென்று அம்மதத்தினர் கருதிவருகின்றனர். இன்னோரன்ன பல காரணங்களால் தான் ஏனைமதத்தினரெல்லாராலும் பாதகமென்று கருதப்படும் இம்மதுபானமானது மேல் நாட்டாரிடத்தில் ஒரு தீச்செயலாகக் காணப்படவில்லை. தற்போது நம்மை ஆண்டுவரும் ஜாதியாராகிய ஆங்கிலேயர்களும் மேற்கூறிய லோகாயத மதத்திலும், கிறிஸ்து மதத்திலும் சேர்ந்தவர்களாயிருந்து வருவதால் தான், அவர்கள் இப்போது இந்தியாவில் வேரூன்றிக் கிடக்கும் "குடி" யை நீக்க ஒன்றும் ஏற்பாடு செய்யாமலிருந்து வருகிறார்கள். இதுமட்டுமன்று; இன்னும், இந்தியா கவர்ன்மெண்டாருக்கு மதுபானக்கடைகளால் உண்டாகும் வரும்படியானது பலகோடிக் கணக்கான ரூபாயாக இருந்துவரும்போது அவர்கள் எளிதில் தமது வருவாயை விட்டுக்கொடுக்க மனந்துணிவரோ?



இதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட குர்ஆன் ஆயத்தானது (5: 90) "வெளிப்படுத்தப் பட்டவுடன் ஒரு கூவுகிறவர் (முஅத்தின்) மதினமாநகரின் தெருக்களில் 'சாராயம் மறுக்கப்பட்டிருக்கிறது' என்று அறிவித்தபோது, அதைக்கேட்டவுடன் ஒவ்வொரு வீட்டிலுமிருந்த சாராயஜாடி ஒவ்வொன்றும் தெருவில் கவிழ்க்கப்பட்டது; இதனால் வீதிகளில் சாராயம் வெள்ளமாகப் பெருகிற்று," என்று ஸஹீஹ்புகாரியில் ஸ்ரீமான் அபூஅப்துல்லா முஹம்மத்பின் இஸ்மாயீல் அவர்கள் வரைந்துள்ளார். இஃதுண்மையே. இவ்வொரே வாக்கியத்தால் திருமதீனாவில் சாராயம் அடியோடொழிந்தது. அன்றுமுதல் இன்றளவும் ஆயிரத்து முந்நூறு வருஷங்களாகியும் ஒருதிவலை மதுவேனும் அரபு நாட்டுக்குள் பிரவேசித்ததில்லை. உலகத்துக்கெல்லாம் முதல் நம்பர் குடியர்களாயிருந்த அந்த அரபிகளின் ஐந்துவேளை மதுபானமும் ஐந்துவேளைத் தொழுகையாக மாறிவிட்டது. இன்றைக்கும் அந்த அரபி முஸ்லிம்கள் மதுபானத்தை அடியோடு விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அதிசய சீர்திருத்தம் உலக சரித்திரத்தில் மற்றோரிடத்தில் காணக்கிடைக்காது; தேச சரித்திரங்களை நாம் புரட்டிப்புரட்டிப் பார்ப்போமாயினும் ஓரிடத்திலும் இதைப்போன்ற அதிசயம் அகப்படுவதில்லை. மதசீர்திருத்தக் காரர்களாகட்டும், ஆசார சீர்திருத்தக்காரர்களாகட்டும், எமது நபிகள் பிரானவர்கள் மேலேசொன்ன ஒரே திருவாக்கியத்தால் எவ்வளவு முழுவெற்றியும் அடைந்தார்களோ அதில் நூற்றில் ஒன்றுகூட மற்றவர்கள் அடைந்ததில்லை. புராதன அரபிகளிடத்தில் காணப்பட்ட மகாகொடிய தீமைகளுள் "குடி" யென்பது ஒன்று. அவர்களுடைய வீடுகளிலும் திண்ணைகளிலும் சாராய ஜாடிகளும் பிப்பாய்களும் அடுக்கடுக்காய் நிரப்பிவைக்கப்பட்டிருக்கும். ஆனால் கடைசியில் மதுபானத்தை ஒழிக்கும் வேளை வந்து மேற்கூறிய குர்ஆன் ஆயத்து வெளிப்படுத்தப்பட்டுப் பகிரங்கமானவுடன் மதினமாநகரின் தெருக்களில் சாராயவெள்ளம் மடைதிறந்து ஓடிற்று. பரம்பரையாய் வேரூன்றி வந்த அக்கொடுந்தொழில் ஆண்டவனது ஒரே திருவாக்கியத்தால் அடியோடொழிந்தது. அம்மதுபானத்தை ஒழிக்கப் பார்லியமெண்ட் முதலிய சட்ட சபைகளும், மதுவிலக்குச் சங்கம் முதலிய இஸ்தாபனங்களும் தேவையில்லை. "அடுத்த செப்டம்பரில் இரத்த ஆறு ஓடுமென்று நான் கூறியதைப்பற்றி நீங்கள் கவலைப்பட்டுப் பயனில்லை. ஸ்ரீமான்களான ஷேர்வானியும் முஹம்மதலியும் நானும் தடையாட்களாக நின்று வேலைசெய்யத் தீர்மானித்திருக்கிறோம். எங்களைக் கைதுசெய்தால் நூறுபேர் எங்கள் ஸ்தா

ணத்தில் வேலைசெய்யக் காத்திருக்கிறார்கள். அவர்களையும் கைது செய்தால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கிளம்பிவிடுவார்கள். தியாகத்துக்கு அஞ்சமாட்டார்கள். இஷ்டமானால் ஜனங்களைச் சுட்டு இரத்த ஆறு ஓடும்படி செய்யலாம். ஜனங்கள் கல்லெறிந்தால் அதிகாரிகள் குண்டெறிவது என்றைக்கும் சகஜம்தானே. கள்ளுக் கடைக் குத்தகைக்காரர்களுக்கும் குடியர்களுக்கும் கவர்ண்மெண்டாருக்கும் இடையில் ஜனங்கள் கஷ்டப்பட நேர்ந்தால் நிலைமை என்னாகுமென்று நான் சொல்லவேண்டியதில்லை. ஆகையால்தான் 'செப்டம்பரில் இரத்தவெள்ளம்' என்றேன்,'' என்று மஹாத்மா எச்சரிக்கைசெய்வதுபோல் அக்காலத்தில் இரத்தவெள்ளச் சம்பந்தமான எச்சரிக்கையொன்றும் வேண்டியில்லை. அல்லாஹ் இடத்திலிருந்தும் அவனது ரஸூலிடத்திலிருந்தும் ஒரு திருவாக்கியம் வெளிப்பட்டது; உடனே ஐந்து வேளை மதுபானமும் ஐந்து வேளைத் தொழுகையாய் மாறிவிட்டது. என்ன ஆச்சரியம்! என்ன மகிமை!! என்ன மாறுதல்!!! இப்படிப்பட்ட இலேசான அதிசயமாறுதலை உண்டுபண்ணுதற்கு ஆண்டவனுடைய உண்மையான வாக்கியமும் அதை வெளிப்படுத்துவதற்கு உண்மையான தூதரும் இருந்தால் மட்டுமே அதிசீக்கிரம் ஜயமுண்டாகும். இப்போது இவ்வுலகில் மதுவிலக்குச் சங்கங்கள் எத்தனையோ ஆயிரக்கணக்காய்க் காணப்படுகின்றன. அதன் சம்பந்தமான பிரசாரகர்களும் எத்தனையோ இலக்ஷக்கணக்காய் உபந்யசித்து வருகின்றனர். இதனாலெல்லாம் உண்டான முடிவென்ன? சுருங்கச்சொல்லுமிடத்து இதனாலெல்லாம் ஒன்றும் பயனுண்டாகவில்லையென்றே திட்டமாய்க் கூறலாம். எவரொருவர் இஸ்லாத்தில் உண்மையான உறுதியுடனிருக்கின்றாரோ அவரே மதுவை மனமார வெறுக்கின்றார். அரபுநாட்டாரைப்போல் ஏனை நாடுகளிலுள்ள ஹிந்து முஸ்லிம் சகோதரர்களும் ஆண்டவனுடைய திருமறையில் காணப்படும் மேற்கூறிய வாக்கியத்தைச் சிறிது கவனமாகக் கைக்கொள்ளாததால் தான் இப்பூவுலகம் இவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது. அந்தோ, பரிதாபம்! ஆண்டவனது திருவாக்கியத்தை நன்கு நோக்குவதற்கு நமக்கெல்லாம் கண்ணிருந்தும், மக்கள் பலர் குருடராவதேன்!! ஏ, ஹிந்து முஸ்லிம் சகோதரசகோதரிகாள்! அல்லாஹுத்தஆலா தன் குர்ஆனே கரீமில் கூறுவதை நீங்கள் முழுதும் நம்பி நம்நாட்டின் குடியைக்கெடுக்கும் "குடியை" ஒழியுங்கள்; "குடியை"ப் பெருக்கும் கடையையும் ஒழியுங்கள்; மதுபானம் செய்வதும் மதுபானக் கடையை வைத்திருப்பதும் எவ்வளவு பாதகமான காரியமோ அவ்வளவு பாதகமான தொழில்தான் கள்



இறக்க மரம்விடுவதும். ஆதலின் அமிர்தமீயும் அழகிய தென்னமரங்களை வைத்திருப்போர் அவ்வமிர்தத்தைப் போக்கி ஆலகால விஷத்தை (மதுவை) யுண்டுபண்ண இடங்கொடாதிருப்பார்களாக. இவ்வாறே இஸ்லாத்தின் விதிகளெல்லாம் இகலோகவாழ்க்கையில் சர்வ சுகமடைவதற்கும் பரலோகத்தில் பரமபத மடைவதற்கும் வேண்டிய வண்ணமாக அதிலேசாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வுண்மையைக் கடைப்பிடித்தோர் இகத்திலும் பரத்திலும் இன்பமெய்துவர்.

கலால் மறுப்போன்.

## வோக்கிங் மதப்பிரசார சபை.

(முன் 121-ம் பக்கத் தொடர்ச்சி)

மௌல்வி முஹம்மதலி சாஹிப், எம். ஏ., எல் எல். பி., அவர்களுடைய குர்ஆன் ஷரீபின் மொழிபெயர்ப்பைப் பற்றி இரங்கூனில் கூடிய பொதுக்கூட்டத்தினர் ஏதேதோ பிரஸ்தாபித்திருக்கக்காண்கின்றேன். அம் மொழிபெயர்ப்புச் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு சாதாரண முஸ்லிமுடைய நம்பிக்கைக்கு ஒவ்வாமலோ அல்லது முரணாகவோ இருக்கக்கூடிய ஒரு சிறு வாக்கியத்தையேனும் அவர்கள் எடுத்துக் காண்பிப்பார்களா? என்று யான் கேட்கின்றேன். மௌல்வி முஹம்மதலி சாஹிப்' அவர்கள் தமது மொழிபெயர்ப்பையொட்டி வியாக்கியானங்கள் செய்திருப்பதோடு ஆங்காங்கே குறிப்புக்களும் எழுதியிருப்பது உண்மையே. இவற்றையெல்லாம் மௌல்வி சாஹிபின் சொந்த அபிப்பிராயமான வியாக்கியானங்களாகவும் குறிப்புக்களாகவும் மட்டுமே கொள்ளவேண்டுமல்லாமல் அவற்றை அவரது மொழிபெயர்ப்புடன் சம்பந்தப்படுத்த எவ்வகை நியாயமுமில்லை. (அவரால் எழுதப் பெற்றிருக்கும் வியாக்கியானங்களும் குறிப்புக்களும் ஆதார மற்றவையல்லவென்பதையும், குர்ஆன் ஷரீபையும், ஹதீது ஷரீபையும் அடிப்படையாகக் கொண்டு எவராலும் அசைக்க முடியாதபடி அமைக்கப்பட்டிருக்கின்ற ஆதாரங்களையே மேற்கோளாகக் கொண்டு எழுதப் பெற்றவையென்பதையும் இதைப் படிப்பவர் ஒவ்வொருவரும் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.) மேலும் ஒரு நூலை மொழிபெயர்க்கும் ஆசிரியர் அம் மொழிபெயர்ப்பின் கீழ் தன்னுடைய வியாக்கியானத்தையும் சேர்த்தெழுத உரிமைபெற்றவரன்றோ? ஏற்கனவே திருக் குர்ஆனை மொழி பெயர்த்திருக்கும் மௌல்வி நஸீர் அஹ்மத் தஹ்லவீ என்பவரும் அவர் காலத்திலிருந்த மகாமேதாவிகளான உலமாக்களின் அபிப்பிராயங்களுக்கு

மாருகப் பற்பல இடங்களில் வியாக்கியானம் செய்து அம்மொழிபெயர்ப்பில் சேர்த்திருக்கவில்லையா? மௌலானா முஹம்மதலியும் ஷௌக்கத்தலியும் சேர்ந்து மௌல்வி முஹம்மதலி சாஹிபின் மொழிபெயர்ப்பைப் பற்றி எழுதி வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தை இரங்கூனில் மீட்டிங்கூட்டி வைத்தவர்கள் சற்றுப் பொறுமையோடு வாசித்துப்பார்க்க மாட்டார்களா? (அலிசகோதரர்களின் அபிப்பிராயம் "தத்துவ இஸ்லாம்" இரண்டாவது சஞ்சிகையில் வெளியாயிருக்கிறது. ப—ர்.) வோக்கிங் மஸ்ஜிதில் நான்கு வருடகாலம் வசித்துவந்த காதியானைச்சேர்ந்த ஷெய்கு முஷீர் ஹுஸைன் கித்வை அவர்கள் எவ்விதத்திலும் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியைப் பின்பற்றியவரல்லரே. இரங்கூன் வாசிகள் இவருக்கேனும் ஒருதந்திகொடுத்து ஏன் கேட்டிருக்கக்கூடாது? அல்கித்வையவர்கள் இஸ்லாத்தைப் பற்றி அநேக நூல்கள் இயற்றியுள்ளார். இஸ்லாத்தின் உண்மையான கொள்கைகளுக்குக் கீழ்ப்பட்டே காஜாசாஹிப் நடந்துவருவதை அவரது தினசரி நடவடிக்கைகளால் கண்டுகொண்டு அல்கித்வையவர்கள் அவரை ஆதரித்தது மட்டுமின்றி அவருடைய "இஸ்லாமிக் ரெவியூ" வென்னும் இங்கிலீஷ் மாதாந்த சஞ்சிகைக்குச் சுமார் மூன்றுவருடம் வரையில் உதவிப்பத்திராசிரியராகவும் தாமே வலிய வேலைபார்த்து வந்திருக்கிறார். மேற்கூறிய குர்ஆன் மொழிபெயர்ப்பு அச்சிலிருந்த பொழுது ஆதிமுதல் அந்தம் வரையில் அல்கித்வை யவர்கள் பரிசோதித்துப் பார்த்திருக்கிறாரென்பதையும் அதில் ஒரு தவறேனுமிருக்க அவர் கண்டதில்லையென்பதையும் யான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவர் இன்னும் உயிரோடுதா னிருக்கிறார். மௌல்வி சாஹிபின் மொழிபெயர்ப்பைப் பரிசீலனைசெய்ய நியமிக்கப் போவதாக இரங்கூன் வாசிகள் பிரஸ்தாபித்துவரும் கம்மிட்டிக்குத் தலைவராக அமரும்படி பிரேரேபிக்கப் பட்டிருக்கும் மௌலானா மௌல்வி பரங்கிமஹாலீ அவர்கள் மூலமாகவே ஷெய்கு கித்வையின் அபிப்பிராயம் இன்னதென்று அறிந்துகொள்ளலாம். பிரஸ்தாப மொழிபெயர்ப்பின் பிரதியொன்றை மௌலானா அப்துல்பாரி அவர்களின் பார்வைக்கு அல்கித்வை அனுப்பினார். அப்பொழுது அப்துல்பாரி யவர்கள் கொடுத்திருக்கும் அபிப்பிராயத்தையும் இரங்கூன் வாசிகள் சிந்தித்துப் பார்க்கட்டும்.

இனி வோக்கிங் பிரசாரசபை பிரத்தியக்ஷமாகச் செய்துவரும் வேலைகளைப்பற்றிச் சிறிது கூறத் துணிகின்றேன். இஸ்லாமிக் ரெவியூ என்னும் ஒரே பத்திரிகைதான் மேனாட்டிலே மங்காத ஒளி



யுடன் நின்று நிலவி என்று மழியாப் புகழ்பெற்றிருக்கிறது. இதைப் பற்றி நான் அதிகம் விவரிப்பது அநாவசியமாகும். இஸ்லாமார்க்கத்தை நிந்தித்துத் தாழ்த்துவதையே தங்களுடைய முக்கிய நோக்கமாகக்கொண்டிருக்கும் ஒரு கிறிஸ்தவக் கூட்டத்தாரால் கெய்ரோ நகரில் பிரசுரிக்கப்பட்டுவரும் "முஸ்லிம் வர்ல்டு" போன்ற அசட்டுப்பத்திரிகைகளின் வாய்களை அடக்கிவிட்டது மட்டுமின்றிக் கீழ்நாட்டுக் கவிஞரொருவர் கூறியிருக்கிறபடி "பெயருக்கு மட்டும் முஸ்லிம்களாக இருந்தோரை உண்மை முஸ்லிம்களாக" இந்த "இஸ்லாமிக்ரெவியூ"வானது செய்திருக்கிறது. (இக்கவிஞர் கூறுவது ஆயிரமாயிரம் பங்கில் உண்மையென்றே எனது சொந்த அநுபவத்தைக்கொண்டே அறுதியிட்டு உறுதியாகச் சொல்வேன். யானும் "இஸ்லாமிக் ரெவியூ"வைப் பார்வையிடுமுன் இஸ்லாமார்க்கத்தை வெகுவாய் அலக்ஷியம்செய்து லோகாயதமதத்தில் சேர்ந்தவனாயிருந்து பெரு நரகில் வீழ்ந்து வெந்துகொண்டு கிடந்தேன். ஆனால் ஆத்மரோக நிவாரண கர்த்தராகிய காஜா சாஹிபின் "இஸ்லாமிக் ரெவியூ"வை இரண்டு மூன்று வருஷம் வரையில் படித்தவுடன் என் ஈமான் அதிகமாக உறுதியடைந்து, இப்பொழுது இங்கிலாந்து சென்று காஜாசாஹிபுடன் இஸ்லாத்துக்கு உழைக்கும்படி இம்மிஸ்கீனை ஆக்கிவிட்டது. இஸ்லாத்துக்காக யான் இப்பொழுது உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறேன். இம்மிஸ்கீனைப் போலவே இன்னும் அநேகர் உண்டென்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம். ப—ர்.) கிறிஸ்தவர்களை இஸ்லாத்தில் சேர்க்கும் விஷயத்தில் இப்பத்திரிகை செய்திருக்கும் பேருழியம் சாமான்ய மானதன்று. (இப்பத்திரிகையின் உதவியால் யாமும் பல அந்யசமய வாதிகளை இஸ்லாத்தில் சேர்த்திருக்கிறோம். ப—ர்.) கனம் காஜாசாகிபவர்கள் இங்கிலாந்தில் விதைத்திருக்கும் விதையானது எவ்வளவு விஸ்தாரமாக வளர்ந்து கொடிபடர்ந்து விருத்தியடைந்திருக்கிறதென்பதையும் இன்னும் எவ்வளவு விசேஷமான பெரும்பலனைக் கொடுக்க இருக்கிறதென்பதையும் இதனடியிற்கண்ட கனவான்கள் தங்களுடைய கிறிஸ்தவ மதத்திலிருந்து எமது இஸ்லாத்தைத் தழுவியிருப்பதினின்றும் நீங்கள் செவ்வனே தெரிந்து கொள்ளலாம். புதிதாக முஸ்லிம்களான இக்கனவான்களும் சீமாட்டிகளும் எனக்கு நேரே அறிமுகமானவர்களாவார்கள்.

ஆனால் இஸ்லாத்தைச் சன்மார்க்கமெனக் கண்டு அதைத் தழுவிய மேதாவிகளுள் புரொபெஸர் அமீன், ஜே. டபிள்யூ., வைமண்ட், பிஎச். டீ., லிட். டீ., (அக்டோபர் 1915) ஒருவராவர்; இவர் கேம்

பிரிட்ஜ் சர்வகலா சாலையைச் சார்ந்த புத்தகசாலையில் "இஸ்லாமிக் ரெவியூ" வை வேடிக்கையாகப் படித்து வந்ததிலிருந்து முஸ்லிமாகிவிட்டார். கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு முதலிய சர்வகலா சாலைகளில் போதகாசிரியராக இருப்போரது மகிமை ஈத்தன்மையுடையதென்பதை இதைவாசிப்போர் (கேள்வி முகத்தாலேனும்) அறிந்திருக்கலாம். "இஸ்லாமிக்ரெவியூ" ஆங்கிலக் கிறிஸ்தவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகின்றது. இப்பத்திரிகையைப் படித்ததனாலேயே முஸ்லிமானவர்களுள் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கோர் அடியிற்கண்டவராவார்:—1 காப்டன் அப்துர் ரஹ்மான் மஸ்கிரேவ் (மே 1915); 2 புரொபெஸர் நூருத்தீன்ஸ்டீவன் ஆவ் கார்டிப் (டிஸம்பர் 1915); 3 லெப்டினெண்ட் முஹம்மது அப்துல்லாகிப் பண்ட் (ஜனவரி 1916); 4 அலெக்ஸாண்டர் மக்லாவின் பாதிரியாருடைய குமாரர் காப்டன் அப்துல்லா மக்லாவின் (ஏப்ரில் 1916); 5 மிஸ்டர் ஹபீபுல்லா லவ்கிரோவ் (ஜூன் 1916); இவர்களும் இன்னும் நூற்றுக்கணக்கான ஆங்கிலேயருமாவார். பல வருடங்களாக நம்பிக்கையால் மட்டும் முஸ்லிம்களாயிருந்து "இஸ்லாமிக்ரெவியூ" வைப் படிக்குந் தனையும் இஸ்லாத்தின் உண்மைகளை அறியாதிருந்தோர் பலர். அப்படிப்பட்டவர்களுள் அடியிற்கண்டவர்களைக் குறிப்பிடவேண்டும்: லார்டு ஹெட்லி ஸைபுர் ரஹ்மான் அல்பாரூக், பி. ஏ. (காண்டப்), எப். எஸ். பீ., யம். ஐ. ஸீ. ஈ. ஐ., முதலியன, (டிஸம்பர் 1913). புரொபெஸர் ஹாரூன், ஹெச். முஸ்தபா லியோன், யம். ஏ., பீ. ஹெச். டீ., எல் எல். டீ., எப். எஸ். பீ., முதலியன (மே 1915). மேடம் மரியம் லியோன் வைக்கௌண்டீ போட்டியர் ஆவ் நாமூர் (ஜூலை 1915). ருஷ்யராஜ குமாரர் ஜனரல் டிக்ஸன் யாக்கூப்; (இவர் 600 ருஷியர்களோடு இஸ்லாத்தைத்தழுவினர். இவருக்கும் ராஜகுமாரி ஸாலிகா பெருமாட்டி அவர்களுக்கும் வோக்கிங் மஸ்ஜிதில் காஜா சாஹிபவர்களால் இஸ்லாமிய மதாசாரப்படி திருமண வைபவம் நடத்திவைக்கப் பட்டது.) மிஸ்டர் முஹம்மது ஸாதிக் டட்லீரைட் (மே 1916); (இவர் ஒரு வாரந்தப் பத்திரிகையின் ஆசிரியராவார். பத்திராசிரியர் கூட்டத்தில் மிகவும் நன்குமதிக்கப் பெற்றவர். இவரது திறமைவாய்ந்த வியாசங்கள் "இஸ்லீமிக்ரெவியூ" வில் அடிக்கடி வெளியாகின்றன.) "பாம்பே கிரானிக்கிள்" என்னும்கீர்த்திவாய்ந்த தினசரிப்பத்திரிகையின் தற்கால ஆசிரியரான மிஸ்டர் முஹம்மது மார்மடியூக் பிக்தால் என்பவர் மற்றொரு முஸ்லிம் பிரமுகராவார்; (இவரைப்பற்றி நான் ஒன்றும் அதிகமாய்ச் சொல்லத்தேவையில்லை; இவர் ஒரு பக்கா முஸ்லிம்; நமது பரிசுத்தவேதமாகிய குர்ஆன் ஷரீபை மனப்பாடஞ்



செய்திருக்கும் ஹாபில் [இவர் ஆறு பாஷைகளில் தேர்ச்சி பெற்றிருக்கும் மகாநிபுணரென்று ஜனாப் யாக்கூப் ஹஸன் சேட் கூறியிருக்கின்றார். ப—ர்.] பல சமயங்களில் ரமலான் மாதங்களில் தராவீஹ் தொழுகைக்கு இமாமத்துச் செய்திருக்கிறார். காஜா சாஹிப் இல்லாத காலங்களில் வோக்கிங் பள்ளிவாயிலில் பேஷ் இமாமாக வேலைபார்த்திருக்கிறார். இவர் இஸ்லாத்தைக் குறித்துப் பல நூல்கள் இயற்றியிருப்பதோடு துருக்கியின் நன்மைக்காக மிகுதியும் உழைத்துக் கீர்த்தி வாய்ந்தவர். சமீபத்தில்தான் இவரது மனைவியாரை இவர் தாமே முஸ்லிமாவாக்கினார். இத்தம்பதிகளிருவரும் இப்பொழுது பம்பாயில் வசித்து வருகிறார்கள்.)

கனம் காஜா சாஹிபவர்கள் நீண்டகாலமாக ஏராளமான பொருள் வருவாயைப் பொழிந்து கொண்டிருந்த தமது லாயர் தொழிலைத் துறந்து, தமது உயிரினுமினிய மனைவிமக்களை விட்டுப் பிரிந்து, பற்பல பரித்தியாகங்களுக்குக் கட்டுப்பட்டு இங்கிலாந்திற்குச் சென்று, சொல்லொணாத கஷ்ட நஷ்டங்களுக்கிடையே இஷா அத்தே இஸ்லாமென்னும் இஸ்லாமிய பிரசாரம் செய்யாதிருந்திருப்பாராயின், மேற்குத்திசையை நோக்கித் தொழுவதால் முஸ்லிம்கள் சூரியனை ஆராதிப்பவர்களென்று தப்பாக எண்ணியிருந்த மிஸ்டர் ஷம்ஸுத்தீன் ஸிம்ஸ் (பிப்ரவரி 1916) போன்றவர்கள் ஒருகாலும் இஸ்லாத்தில் சேர்ந்திருக்க மாட்டார்கள். இஸ்லாத்தையும் துருக்கியையும் நேசித்த பாவத்திற்காகப் போலீஸாருடைய அலைக்கழிவுக்கு உட்படுத்தப் பட்டவர்களான மிஸ்டர் உஸ்மான் பிஷர், பாரிஸ்டர் அட்லா (தற்போது லண்டனில் நியாயதுரந்தராயிருப்பவர்), மிஸ்டர் உமர்பினாட் போன்றவர்களும், இன்னும் அதே குற்றத்துக்காகச் சிறைவாசஞ் செய்து திரும்பியவர்களான மிஸ்டர் ஜான் ஆர்னால்ட், மிஸ்டர் சார்ள்ஸ்ரோஷர் முதலியவர்களும், "இஸ்லாமிக் ரெவியூ" வும் வோக்கிங் மதப்பிரசார சபையும் தோற்றுவித்த நவசக்தியின் பலனுக்குப் பிரத்தியக்ஷப் பிரமாணமாக நின்று நிலவும் வீரர்களுள் சிலராவர். மேற்கூறிய சாதனங்களால் இங்கிலாந்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்களுள் எனக்கு நேரில் பரிச்சியமான வேறு பலரைப்பற்றி இங்கு எழுதுவதென்றால் பத்திரிகை இடந்தாராதென்றஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். தங்களுடைய பத்திரிகையைப் படிப்பவர்களுள் எவரேனும் வேறு தகவல்கள் தெரிந்து கொள்ள நாடுவாராயின் அந்நாட்டத்தைப் பூர்த்தி செய்துவைக்க யான் சித்தமாயிருக்கிறேன். யான் எழுதியிருக்கும் விஷயங்களை இந்திய முஸ்லிம்கள் நிதானமாய்ச் சிந்தித்துப் பார்ப்பதோடு, அற்ப அபிப்பிராய பேதங்களைப் பிரமாதமாகக்

கொண்டு இஸ்லாத்தின் வளர்ச்சிக்குத் தடையாகவில்லாமல் துணையாகநிற்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள்ளுகின்றேன்.

மேலே ஒவ்வொருவருடைய பெயருக்குப் பின்னால் காட்டப்பட்டிருக்கும் மாதமும் வருடமும் அவரவருடைய உருவப்படங்கள் "இஸ்லாமிக் ரெவியூ" வில் வெளியான காலத்தைக் குறிக்கும்.

லண்டன், 11-11-1920 } தங்களுண்மையுள்ள
யம். யூஸுபு

இவ்வியாசத்தை ஆங்கிலத்திலிருந்து செந்தமிழில் மொழிபெயர்த்து எமக்கு உதவிய இரங்கூன் ஸித்தீக் அவர்களுக்கு மிகுதியும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். ப-ர்.)

## இஸ்லாம் என்னும் பெயர்

எமது சன்மார்க்கத்தின் பெயர் இஸ்லாம் என்பதாகும். (இதை "முஹம்மதிய மார்க்க"மென்று அறியாதார் தம் அறியாமையாற் கூறுவர்.) "இஸ்லாம்" என்னும் இப்பெயர் இம்மதத்தைத் தழுவியவர்களால் ஏற்படுத்தப்பட்டதன்று; அல்லது வேறு சில மதங்களிலிருப்பதுபோல் இம்மதத்தலைவரின் பெயரை ஒட்டி "இஸ்லாம்" என்னும் பெயர் உண்டாய் விடவில்லை. ஆனால் இப்பெயரானது இம்மதத்துக்கு இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது; குர்ஆன் ஷரீபில், "இன்று உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தைப் பூர்த்திசெய்து விட்டேன்; உங்கள் மீது என்னுடைய கிருபையை இன்று சம்பூரணமாக்கி விட்டேன்; உங்களுக்காக இஸ்லாத்தை ஒரு சன்மார்க்கமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்"—(5:3) என்று ஆண்டவன் கூறியிருக்கிறான். மற்றோரிடத்தில், "நிச்சயமாக அல்லாஹுத் தஆலாவிடத்தில் உண்மையான மார்க்கமாயிருப்பது இஸ்லாம் தான்"—(3:18) என்றும் கூறியுள்ளான். "இஸ்லாம்" என்பது இடுகுறிப்பெயரன்று; ஆனால் இப்பெயருக்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் முதன்மையான முக்கிய காரணம் யாதெனின், இம்மார்க்கம் இன்பமயமான சாந்தியை மிகுதியும் போதிப்பதால் இதற்கு "இஸ்லாம்" எனப் பெயரிடப் பட்டிருக்கிறது. இஸ்லாமார்க்கத்தில் மிகுதமாகக்காணப்படுவது "சாந்தி" தான். ஆண்டவனிடத்திலிருந்துண்டாகும் சாந்தியின் காரணமாக அவனுடைய படைப்புக்களிடத்தில் எவனொருவன் சாந்தியுடன் நடந்துகொள்ளுகின்றானோ அவனே இஸ்லாத்துக்குரியவன்; அவனுடைய மார்க்கந்தான் "இஸ்லாம்" எனப்படுவது. ஆண்டவனிடத்தில் சாந்திபெறுவதென்பது பரிசுத்தமும் நன்மையும் நிறைந்துள்ள அவ்



விறைவனுடைய சட்டத்துக்கு நாம் முற்றிலும் கட்டுப்படுதலைக் குறிக்கும்; அவனுடைய படைப்புக்களிடத்தில் சாந்தி செய்வதென்பது இவ்வுலகிலுள்ள இதர வஸ்துக்களிடத்தில் நாம் காட்டும் கருணையைக் குறிக்கும். இவ்விரு கருத்தையும் நன்குவிளக்கும் பொருட்டு ஆண்டவனே அடியில் கண்டவண்ணம் தன் திருமறையில் திருவுளம்பற்றியுள்ளான்: "அல்லாவுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடப்பவன் எவனோ அவனே ஏனையோருக்கும் நன்மை செய்வான்; தன் நாயனிடத்தில் இவன்தான் சன்மானம் பெறுவான்; இவன் அச்சங்கொள்ளவாவது மனவேதனையடையவாவது தேவையில்லை"—(2:112). இதுதான் இஸ்லாத்தில் மோக்ஷமெனப் படுவது; இப்படிப்பட்டவனே உண்மை முஸ்லிமெனக் கருதப்படுவான். ஆண்டவனிடத்திலும் அவனது படைப்புக்களிடத்திலும் சாந்தியடைந்தவனே தன் மனத்தில் சமாதானத்தையும் சந்துஷ்டியையும் பெறுகின்றான். முஸ்லிம்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது முதலில் சொல்லவேண்டிய வந்தனம், "சலாம்" (சாந்தி—சமாதானம்) என்பதுதான். சுவர்க்கலோகத்தில் முஸ்லிம்கள் முகமன் செய்து கொள்ளும்போதும் "சலாம்" என்னும் பதத்தை மிகுதமாய் உபயோகிப்பார்கள்: "அவர்கள் ஒருவரையொருவர் அளவளாவும்போது 'சலாம்' அதிகமாகச் சொல்லிக்கொள்ளுவார்கள்"—(10:10). இஸ்லாமார்க்கத்தில் இறைவனால் வருணிக்கப்பட்டிருக்கும் சுவர்க்கத்தில் "சலாம், சலாம்" என்னும் பதத்தைத் தவிர வேறொன்றும் காதில் விழாது. "அங்கே 'சலாம், சலாம்' என்று சொல்லக்கூடிய பதங்கள் தவிர வேறு வெறும்பேச்சையாவது பாபமொழிகளையாவது அவர்கள் கேட்கமாட்டார்கள்"—(56: 25, 26). அல்லாஹுத் தஆலாவுக்குரிய திருநாமங்களுள் "சாந்திமூர்த்தி" என்பது ஒரு சிறந்த பெயராகும் (59: 23). இஸ்லாத்தின் முறைப்படி நடப்பவர்கள் இறுதியில் எய்தக்கூடிய ஸ்தானத்துக்குச் "சாந்தி ஆசிரமம்" என்று பெயர் என ஆண்டவனே கூறுகின்றான் (10: 25): "ஆண்டவன் சாந்தி ஆசிரமத்துக்கு அழைக்கிறான்" என்பது குர்ஆன் ஷரீபின் வாக்கியம். ஆதலின் "சாந்தி" என்பது இஸ்லாத்துக்கு ஒரு சிறந்த குணமாயிருக்கிறது; இஸ்லாத்தின் இரகசியமே இதுதான். இக்காரணத்தால்தான், இம்மார்க்கத்தைச் "சாந்தி மார்க்கம்" என்று சிறப்பித்துக் கூறுகின்றனர்.

மௌல்வி முஹம்மதலி.

## சமாசாரத்திரட்டு

இஸ்லா மார்க்கத்தில் ஏககாலத்தில் ஒரு புருஷன், தக்க காரணங்களிருக்குமாயின், நான்கு மனைவிகள் வரையில் விவாகம் செய்துகொள்ளலாமென்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் ஸ்திரீபுருஷருக்கிடையில் மனவோர்மை யில்லாமல் போகுங்காலங்களில், தக்ககாரணங்களிருக்குமாயின் அவர்களுடைய விவாகத்தை ரத்துசெய்து விடவும் மார்க்கச்சட்டமுண்டு. எமது மார்க்கமானது மனிதனுடைய இகலோக வாழ்க்கையை எவ்வளவு இலகுவானதாயும் இன்பமுள்ளதாயும் செய்யமுடியுமோ அவ்வளவு இலகுவாயும் இன்பம் நிறைந்ததாயும் இறைவனால் அமைக்கப்பட்டிருப்பதனால் விவாக விஷயமும் இவ்வளவு சௌகரியமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இலகுவான சட்டதிட்டங்களைக்கண்டு இவற்றின் பலாபலனைச் செவ்வனே சீர்தூக்கிப் பார்க்கமுடியாத சிலர் எமது இஸ்லாமார்க்கத்தைப்பற்றித் தாறுமாறாய்த் தூஷிப்பதுண்டு. இப்படிப்பட்ட விவாகவிதியினால் மனிதவர்க்கத்துக்குப் பெருந்தீங்கு விளைந்து குடும்பங்களில் அல்லல் அதிகப்பட்டுப்போம் என்று மேல்நாட்டுக் கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தை ஏளனம் பண்ணுவதுண்டு. இஸ்லாத்தில் விவாக விலக்கு (தலாக்கு)க்குரிய சட்டம் கெட்டியா யில்லாததால் முஸ்லிம் உலகத்தில் ஒவ்வோர் ஆண்டிலும் அளவற்ற தலாக்குக் கேஸ்கள் நடைபெறுமென்றும், ஆனால் தங்களுடைய கிறிஸ்தவ நாடுகளில் விவாகவிலக்குச் சட்டமானது மிகக் கடினமா யிருப்பதால் அத்தனை தலாக்குக் கேஸ்கள் நடைபெறுவதில்லை யென்றும் அம்மேல் நாட்டினர் வாதித்து வருகின்றனர். ஆனால் உண்மை இவ்வாறில்லை. இஸ்லாமானது மனித சுபாவத்துக்கு ஒத்தவிதமாய் அதிலகுவாய் அமைக்கப்பட்டிருப்பதால் அவசியம் வேண்டிய சிலர் மட்டும் அவசியம் வேண்டிய சில வேளைகளில் அவசியமான காரணங்கள் இருக்கும்போது ஒருதாரத்துக்கு மேல் இரண்டு மூன்று நான்குவரையில் விவாகம் செய்துகொள்ளுகின்றனர். ஏனையோரெல்லாம் ஒரே தாரத்துடனேயே காலங்கழித்து வருகின்றனர். அவசியம் நேரும்போது ஒன்றுக்குமேல் விவாகம் செய்துகொள்ள மார்க்கச் சட்டமிருப்பதால் யாதோர் ஆடவரும் தன் தாரம் தவிர, பிறர் தாரத்தினிடம் இச்சைகொள்ள இடமில்லாமலிருக்கிறது. ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் ஒரு தாரம் உயிருடனிருக்கு மட்டும் வேறொரு தாரம் விவாகம் செய்துகொள்ளவே கூடாதென்று கிறிஸ்தவ நாடுகளில் கடுமையான* சட்டம்பிறந்திருப்பதால் அவர்களுக்குள் எத்தனை



எண்ணைத்தொலையாத ஸ்திரீகளும் புருஷர்களும் தத்தம் நெறிதவறி நடக்கின்றாரென்பது அந்நாட்டிலுள்ளவர்களுக்கு நன்கு தெரியும். இவ்வாறே தலாக்கு விஷயமும் முஸ்லிம் உலகத்தில் வெகு அபூர்வமாயிருக்கும்போது அதிகக் கடுமையான சட்டதிட்டங்களையுடைய கிறிஸ்தவ நாடுகளில் விவாக விலக்குக் கேஸ்கள் ஒவ்வோர் ஆண்டிலும் பல்லாயிரக்கணக்காக உற்பத்தியாகின்றன. அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களில் (U. S. A.) மட்டும் 1910 முதல் 1920 வரையிலுள்ள பத்துவருஷ காலத்துக்குள் பதினொரு லக்ஷத்து நாற்பத்தொன்பதினாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றாறு கேஸ்கள் விவாக விலக்கு (தலாக்கு) விஷயமாய் நடந்திருக்கின்றன. இஸ்லாமார்க்கத்தில் இலேசான விதிகள் ஏற்பட்டிருப்பதால் இல்லறவாழ்க்கையானது மகா துக்கசாகரமான காரியமாய் முடியுமென்று அம்மேல் நாட்டார் நம்மை ஏளனம் பண்ணினபோதிலும் எமது முஸ்லிம் உலகத்தில் இத்தனை பயங்கரமான தலாக்குக் கேஸ்கள் நடைபெறுவதில்லை. ஏசுநாதர் விவாக வாழ்க்கையிலிருந்து விவாகப் பொருத்தத்துக்கும் விவாக விலக்குக்கும் வேண்டிய விதிகளை ஏற்படுத்தாமல் காலகதியடைந்து விட்டபடியால் கிறிஸ்தவ நாட்டார் தமக்கொன்றும் வேத ஆதாரமில்லாமலிருப்பதைக் கண்டு தம்முடைய சொந்த யுக்தியைக்கொண்டு சில அசம்பாவிதமான சட்டங்களை ஏற்படுத்திக் கொண்டதால்தான் இப்படிப்பட்ட அனாசாரமான விஷயம் மேல் நாடுகளில் காணப்படுகின்றது.

* * *

ஜனாப் காஜா சாஹிப் அவர்கள் சிங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது விக்டோரியா தியேட்டரில் நீண்டதோர் பிரசங்கம் அதி நேர்த்தியாய்ச் செய்தார்கள். அதைப்பற்றி அவ்வூரிலுள்ள ஆங்கில தினசரிப் பத்திரிகையின் ஆசிரியர் பின்வருமாறு கூறி யிருக்கின்றார்:—

"இஸ்லாமிக் ரெவ்யூ அண்டு முஸ்லிம் இண்டியா" என்னும் பத்திரிகையின் ஆசிரியரும் வோக்கிங் மதப்பிரசார சபையின் ஸ்தாபகருமான மகா பிரசித்தி பெற்ற முஸ்லிம் மதப்பிரசாரகராகிய காஜாகமாலுத்தீன், பி. ஏ., எல் எல். பி., அவர்கள் திங்கட்கிழமை மாலையில் விக்டோரியா தியேட்டரில் சிங்கை வாசிகளான

*ஒரே தாரம்தான் மணந்துகொள்ளவேண்டு மென்பதற்குக் கிறிஸ்து மதத்தில் வேத ஆதாரம் ஒன்றுமில்லை; எல்லாம் அரசாங்கத்தார் செய்திருக்கும் சட்டம்தான். இவ்வாறே விவாக விலக்குக்கும் வேதக்கட்டளை ஒன்றுமில்லை; அரசாங்கத்தார் செய்திருக்கும் சட்டமானதால் தான் கிறிஸ்தவ நாடுகளில் தலாக்கு விஷயமும் மகாசங்கடமானதா யிருக்கிறது.

முஸ்லிம்களின் பெருந்திரளான கூட்டத்தின் முன் கேட்போர் மனதில் நன்கு பதியத்தக்க நீண்டதோர் பிரசங்கம் புரிந்தார்கள்.

ஆரம்பத்தில் குர்ஆன் ஷரீபிலிருந்து சில வாக்கியங்களை ஓதி முடித்துவிட்டுப் பிறகு உபந்யாசகர் இஸ்லாமார்க்கமானது ஆண்டவனுடைய இயற்கைச் சட்டங்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்கக் கூடிய ஒரு மதமாயிருக்கிறதென்று விளம்பிக்கத் தொடங்கினார். அல்லாஹுத் தஆலாவின் சட்டங்களே இஸ்லாமார்க்கமாய் அமைந்திருக்கின்றன; இறைவனால் இவ்வுலகில் அமைக்கப்பட்டிருக்கும் அவனுடைய சட்டங்களுக்கு ஒத்தவண்ணமாகவே அம்மதம் ஏற்பட்டிருக்கிறது; ஆண்டவனிடத்தில் அவனுடைய சட்டத்துக்குப் பொருத்தமாய்க் காணப்படக்கூடிய மார்க்கமாயிருப்பது இஸ்லாம்தான்; இஸ்லாத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதென்பது இறைவனுடைய இயற்கைச் சட்டங்களுக்கு முற்றிலும் தலைசாய்ப்பதாகும்.

உபந்யாசகர் தமது பிரசங்க விஷயத்தை விளம்பிப்பதற்காக இவ்வுலகில் காணப்படும் இயற்கைச் சட்டங்களிலிருந்து அநேக உதாரணங்களை எடுத்துக் காட்டினார்; ஆதிகாலத்திலிருந்து இஸ்லாமார்க்கமானது எவ்வாறு விருத்தியடைந்து வந்திருக்கிறதென்பதை நன்றாக விளக்கிக்காட்டி, குர்ஆன் ஷரீபிலிருந்தும் அடிக்கடி மேற்கோள்களை எடுத்துக் காட்டிக்கொண்டே வந்தார். உலகத்தில் காணப்படும் எல்லாமதங்களின் தத்துவங்களையும் இவர் அதிக ஜாக்ரதையாகப் படித்திருப்பதோடு பைபிள் வேதத்தையும் நன்றாகக் கற்றுணர்ந்திருக்கிறார். இஸ்லாமார்க்கத்தைத் தவிர வேறெந்த மதமும் அவ்வளவு அதிகமான தாராளச் சிந்தையுடன் அமைக்கப்படவில்லையென்று தாம் அபிப்பிராயப்படுவதாகக் கூறினார். முஸ்லிம்கள் ஆண்டவன்மீது நம்பிக்கை வைப்பதோடு அவனால் முஹம்மது நபி (ஸல்) மூலமாக இறக்கப்பட்ட வேதத்தின்மீதும் உறுதிகொள்ள வேண்டுமென்றும் சொன்னார். அவர் தர்க்கசாஸ்திரத்தில் மகா நிபுணரென்பது அவருடைய பிரசங்கத்தால் ஏற்படுகின்றது. அவருடைய அபிப்பிராயப்படி குர்ஆன் ஷரீபிலுள்ள விஷயங்கள் புதியனவல்ல. ஆதிகாலமுதல் மனிதவர்க்கத்தாருக்கு அப்போதைக்கப்போது ஆண்டவனால் வெளிப் படுத்தப்பட்டு வந்த ஆகமங்களின் சாரமெல்லாம் குர்ஆன் ஷரீபில் புகுத்தப்பட்டிருக்கிறது.

பிறகு பிரசங்கியார் மதத்துக்கு இருக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் என்ன என்ன வென்றும் மனிதனுக்கும் கடவுளுக்கும் இருக்கும் சம்பந்தம் இன்னதென்றும் குறிப்பிட்டுக் காட்டினார். இவ்விரண்டுக்கெல்லாம் தக்கவிடை இஸ்லாமார்க்கத்தில் தான் காணப்படக் கூடுமென்றும் கூறினார். ஆண்டவனுக்கும் மனிதனுக்கு முள்ள சம்பந்தமெல்லாம் குர்ஆன்ஷரீபில் விரித்துக் கூறப்பட்டிருக்கிறது. காலக்கிரமத்தில் மனிதவர்க்கத்தார் இவ்வுலக சம்பந்தமான லோகாயத மதத்தையும் அதன் சார்பான கீழ்த்தரக் கொள்கைகளையும் கைவிட்டு மேன்மையான பரிசுத்தம் நிறைந்த ஆத்மார்த்த வாழ்க்கையைக் கைக்கொள்ளுவார்கள். காலக்கிரமத்தில் ஆண்டவனுடைய காரியம் நிறைவேறி விடுமென்றும் (நம்முடைய) நபிபெருமானார் அவதரித்த பிறகுதான் அறிவு நூல்கள் விருத்தியாயினவென்றும் கூறினார். இஸ்லாமார்க்கத்திலிருந்துதான் ஜனநாயகக் கொள்கை இவ்வுலகில் பரவியிருக்கிறதென்று கடைசியில் கூறிமுடித்தார்."



## ஜிஹாதேகபீர்

நம்பர்—3

(ஸன்மானத்தை எதிர் பார்த்தல்)

நாம் ஆரம்பம் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் முதன்முதல் இவ்விஷயத்தில் என்ன பலன் கிடைக்குமென்று யோசிப்பது நம்மிடத்தில் ஒரு சாதாரண வழக்கமாயிருந்து வருகிறது. நாம் எடுத்துக்கொண்ட ஒரு விஷயத்துக்காகப் படும் பிரயாசையையும் அதற்காகச் செலவாகும் ஐசுவரியத்தையும் அதை முடிப்பதற்கான காலச் செலவையும் நிதானித்து அவ்விஷயத்தில் தக்கலாபம் உண்டாகுமா இல்லையா வென்று கவனிப்பதுண்டு. முற்காலத்தில் ஆண்டவன் பெயரையும் அவன் பாதையில் உழைப்பதையும் பற்றிச் சொன்னமாத்திரத்தில் அப்பொழுதிருந்த முஸ்லிம்களுக்குண்டான மனக்கிளர்ச்சியும் ஆவேசமும் ஆசையும் இந்நவீன காலத்தில் மிகவும் குறைவாகவே இருக்கின்றனவென்று அறியுங்கள். எங்கே ஒரு விஷயத்தை நிறைவேற்றுவதற்குப் பணச் செலவு அதிகமாயிருக்கிறதோ, எங்கே செலவாகும் பணத்துக்குத் தக்க வண்ணம் காரிய சித்தியாகுமென்று தோன்றுகின்றதோ அப்படிப்பட்ட இடத்திலெல்லாம் ஸன்மார்க்கப் பரவுதலின் (இஷா அத்தே இஸ்லாத்தின்) பலனைப்பற்றிச் சந்தேகப்பட்டுச் சும்மா வீண்காலம் கழித்துவிட்டோமே யொழிய யாதொரு பயன்தரக்கூடிய காரியத்தையும் நாம் இதுவரையில் ஸன்மார்க்கப்பிரசார விஷயத்தில் செய்தது கிடையாது. சிலர் நம்முடைய சன்மார்க்கம் மூடர்களின் கூட்டத்திலும் அஞ்ஞானிகளிடத்திலும் தான் பரவுமேயன்றிக் கற்றறிந்த அறிஞர்கள் ஒருவரும் இம் மார்க்கத்தைப் பின்பற்ற மாட்டார்களென்றும், அவர்கள் தங்கள் தங்களுடைய

பெற்ருேரின் மதத்திலேயே இருக்கச் சம்மதிப்பார்களென்றும்
தவருக எண்ணுகிருர்கள்; ஆகவின் இதரஜாதியார்கள் தங்கள்
தங்கள் மூதக் கோட்பாடுகளை உலகமுழுதும் பாவச் செய்யும்
முயற்சிகளைப் போல் நாமும் முயற்சி செய்ய முயலுவது வீண்காரிய
மென்றும் அன்னர் அபிப்பிராயப் படுகின்றனர். இவ்வகைத்தப்
பெண்ணமும் சந்தேக அபிப்பிராயமும் முழுப்பிசகென்று நாம் சந்
தேகமில்லாமல் கூறுவோம். ஆராய்ச்சிக் குணமில்லாத மூடர்மாக்
கள் மாத்திரந்தான் தங்கள் மூதாதைகளின் மதத்தை மௌட்டீக
மாகப் பின்தொடர்ந்து வருவார்கள். அறிஞர்களெல்லாரும் தங்க
ளுடைய கல்வித்திறமையால் தங்கள் முன்னேர்களின் கோட்
பாடுகளைப்பற்றிய உண்மையை ஆராய அதிகமாக ஆரம்பித்து விட்
டனர். நமது இஸ்லாமிய ஸன்மார்க்கத்தை அதன் பரிசுத்தத்தன்
மையுடன் அந்த அறிஞர்களிடம் நாம் போதிக்காமலிருப்பதனு
லேயே அவர்கள் தங்களுடைய புராதன மதத்திலேயே யிருந்து
கொண்டு இவ்வுலகமுழுதும் தங்கள் அபிப்பிராயத்துக்கு ஒத்
திருக்கும் வண்ணம் செய்வான் வேண்டித் தங்களுடைய பழைய
கோட்பாடுகளைச் சீர்திருத்தியும் தங்கள் மதத்தின் தப்புக்களை
யும் தீகாதாக்களையும் களைந்துவிட்டுப் புதிதான ஆதாரமற்ற விஷ
யங்களைச் சேர்த்தும் அவர்கள் இரவும்பகலும் செய்துவரும் பெரு
முற்சிகளுக்கோர் அளவில்லை. ஆனல் முஸ்லிம்களோ தங்க
ளுடைய உண்மையான பேரொளியை இவ்வுலகில் நன்ருகப் பரவச்
செய்யாமல் சும்மா இருந்து வருகின்றனர். இதரமதங்களிலிருப்
பதுபோல் நம்முடைய தீனுல் இஸ்லாத்தில் புதிதாய்ச் சேர்க்கவே
ண்டியதும் கழிக்கவேண்டியதும் சீர்திருத்தம் செய்யவேண்டியதும்
ஒன்றுமில்லை. ஆனல் நம் கொடிய எதிரிகள் பொருமையாலும் சுயப்
பிரயோசனத்தை நாடியும் நம் ஸன்மார்க்கத்தைப் பற்றிப் பொய்
யாகவும் தாறுமாருகவும் தப்பு அபிப்பிராயங்களை யெல்லாம் பல
விதமாகப் பரவச்செய்து நம் "இஸ்லாமார்க்கத்தின் தன்மையையே
மாற்றிவிட்டனர்; முஸ்லிம்களும் சும்மா இராமல் தாங்கள் ஜயித்த
தேசங்களின் பழக்க வழக்கங்களை யெல்லாம் மேற்கொண்டு இஸ்
லாத்தின் இயற்கைப் பரிசுத்த குணத்தைச் சிறிதுமாற்றிவிட்டனர்.
ஆயினும் இவ்விதம் மாசுபடிந்து இஸ்லாத்தின் உண்மையான ஒளி
யானது உள்ளபடியே பிரகாசிக்க முடியாமல் நம்முடைய ஸன்மார்க்
கம் அவ்வளவு மந்தாரத்தில் மழுங்கிக் கிடக்கும்போது அதன் மீது
படிந்திருக்கும் மாசை நீக்குவதற்கு நம் முஸ்லிம்கள் மிக அதிக
மான அசட்டையுடன் தற்போது இருந்து வருகிருர்களென்பதை
எல்லோரும் ஒளியாமல் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கி



றது. இவ்வித முன்னேற்ற மில்லாத காரணத்தினுலேயே சென்ற
சில நூற்றுண்டுகளாகப் பல துன்பங்களையும் தொந்தாவுகளையும்
முஸ்லிம்கள் சகித்துக்கொண்டு சஞ்சலக்கடலில் ஆழ்ந்து கிடக்க
நேர்ந்திருக்கிறது. இகலோக காரியங்களில் கூட நம் முஸ்லிம்கள்
துக்க சாகரத்தில் மூழ்கி இந்நாகரீக உலகத்தில் இதர ஜாதியார்க
ளைக் காட்டிலும் பின்னிடைந்து கொண்டே போகிருர்கள். முஸ்
லிம்கள் ஸன்மார்க்கப் பாவுதலைக் கைவிட்டு வேறு பல வழிகளி
லும் செய்துவந்த முயற்சியின் பலனுக அவர்களுக்கு இடைவிடாது
நேரிட்ட நஷ்டத்தினுலும் கஷ்டத்தினுலும் இனித்தங்களுக்கு
யாதொரு விமோசனமும் கிடையாதென்று அதைரிய மடையவே,
அவர்களின் ஊக்கமும் மனக்கிளர்ச்சியும் அதற்குத் தக்கவண்ணம்
தளர்ச்சியடைந்து விட்டன; இக்காரணத்தால் தான் எல்லா வழியி
லும் மற்றவர்களைவிட இவர்கள் பின்னிடைய வேண்டியதாயிற்று.
இவ்வகைப் பிற்போக்கினுலும் எடுத்த காரியத்திலெல்லாம் ஒன்றன்
குப் பின் ஒன்ருகத் தொடர்ந்துண்டான நஷ்டத்தினுலும் கஷ்டத்தி
னுலும் இப்பொழுது யாதொரு காரியமும் ஆரம்பிப்பதற்கு முன்னே
அதற்கு அவசியமாக வேண்டியிருக்கும் தீரமும் திடசித்தியும்
மெய்நம்பிக்கையும் இல்லாத கோழை மனமுள்ளவர்களாய் விட்
டோம். இவ்விதமான மனக்கிலேச மடைந்தவர்களைப் பற்றி நம்
திருவேதத்தில் என்ன சொல்லியிருக்கிறதென்றும், இவர்கள் நற்
கதி அடைவதற்கும் திரும்பவும் இவர்கள் முன்னிருந்த உன்னத
நிலைமைக்கு ஏறுவதற்கும் என்ன என்ன வழிகள் காண்பிக்கப்பட்
டிருக்கின்றன வென்றும் நாம் இங்கே ஆராய்ச்சி செய்வோம்.

ஒவ்வொரு விஷயத்திலும் நமக்கு நன்மார்க்கம் போதிக்க வல்
லது குர்ஆன் ஷரீபாகிய அத்திருவேதமே யென்று நாம் உறுதி
கொண்டிருக்கிருேம். துக்கமும் துயரமும் மேலிட்டு, அதாவது
நமது பராக்ரமமும் தீரமும் அழிந்து எல்லாப் பலமும் குன்றி, எடு
த்த காரியங்களிலெல்லாம் இடைவிடாது இக்கட்டுண்டாகிக் கரு
திய கருமங்களெல்லாம் பிரயோசன மில்லாமற்போய் நாம் சலித்து
மனங்கசந்து சஞ்சலத்துடன் மிஞ்சி நிற்கும் இக்காலத்தில், சகல
துன்பங்களும் துக்கங்களும் நம் தலைக்குமேல் கார்காலத்துக் கான
மேகம்போலவும் சூறைமுற்றிய சண்டமாருதம் போலவும் பயங்கர
மாய்க் காணப்படும் இக்காலத்தில் காரிருளில் நின்றும் நம்மை நீக்
கிப் பேரொளி கொடுக்கவல்ல பெருவிளக்கமான திருவேதமென்
னும்" ஒரு வேதமாகிய ஒப்பற்ற குணக்குன்ருகிய உயரிய அரிய
அல்புர்க்கானில் தான் நாம் முழுநம்பிக்கையும் வைக்கவேண்டும்;
என்றென்றைக்கும் வறண்டுபோகாத ஞானமயமாகிய அந்நீரூற்று

நம்முடைய மனதிலுண்டான பிலேசந்தையும் திகிலையும் நீக்கவும் தீராத தாகத்தைத் தீர்க்கவும் ஆழத்தில் அழுந்திக் கிடக்கும் நம்முடைய பழய வீரத்தையும் தைரியத்தையும் திரும்பக் கொடுக்கவும் நம்முடைய நொந்த மனதிற்குத் திடமுண்டாக்கவும் துன்பங்களைக் களைந்து தூய்மை யுண்டாக்கவும் நம்மவரின் அமானுஷீகத் தன்மையைப்போக்கி அவர்களை மானிடக் குணமுள்ளவர்களாக்கவும் வல்லதிருஷற்று யிருக்கிறது; குர்ஆன் ஷரீபென்னும் அந்தேவ வேதத்தின் பக்கம் நாம் ஆவலுடன் திரும்பும்போது அது நமக்கொன்றும் தேறுதல் சொல்லாமல் மௌனஞ் சாதித்திருக்குமாயின் இனித்தேறுவோம், இனி முன்னுக்கு வருவோம் என்னும் நம்பிக்கையை நாம் அடியோடு கைவிடவேண்டி யிருக்கும். ஆனால் அந்த ஸன்மார்க்க வேதமானது இவ்வித அவநம்பிக்கைக்கு ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டாது; ஆதலின் உண்மையும் உறுதியும் கொண்ட முஸ்லிம்களின் மனதில் எவ்வகை அவநம்பிக்கையும் அதைரியமும் உண்டாகக் காரணமில்லை. “முஸ்லிம்கள் ஆண்டவனது கிருபாகடாக்ஷத்தி லிருந்து நீங்கி ஒருபோதும் அவநம்பிக்கை யுள்ளவர்களாக இருக்க வேண்டியதில்லை.” ஒப்புயர் வற்ற தனிமுதற் கடவுளை வணங்காமல் அக்கடவுளுக்கு இணைவைத்து வேறொரு வஸ்துவைத் தெய்வமென்று வணங்குகிறவர்கள் தான் அவ்வித அவநம்பிக்கையை உடையவர்களா யிருப்பார்கள். நம் சன்மார்க்கத்தை எதிரிகளின் தாக்குதல்களி னின்றும் காப்பாற்றுவதைப் பற்றியும், விரோதிகளுக்கு அபஜயத்தையும் அதைரியத்தையும் கொடுத்துப் பரிசுத்தமான இம்மார்க்கத்தை ஓங்கிவளரச்செய்து நிலைத்திருக்கும்படி செய்யும் விஷயத்தைப் பற்றியும் எம் திருவேதத்தில் ஆண்டவன் ஒருதடவையில் ஓரிடத்தில் மாத்திரம் கூறாமல் இரண்டிடத்தில் ஸ்பஷ்டமாகவும் பகிரங்கமாகவும் சொல்லி யிருக்கிறான். ஒன்றைமட்டும் இங்கே கூறுவோம்:—“32 அவர்கள் தங்களுடைய வாயால் ஊதி அல்லாஹுத் தஆலாவின் ஒளியை அணைக்க விரும்புகிறார்கள்; நம்பிக்கையற்றவர்கள் வெறுப்பா யிருந்தபோதிலும் அல்லாஹுத் தஆலா தன் ஒளியைப் பூர்த்தியாக்குவதைத் தவிர வேறு விதம் செய்ய இணங்கான். 33 பல தேவதை வணக்கக்காரர்கள் வெறுப்புடனிருந்தபோதிலும் எல்லா மார்க்கங்களைக் காட்டிலும் இச்சன்மார்க்கம் சிலாக்கிய மடையும்படி அவன் செய்தற்காகவே வழிகாட்டியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் தன்னுடைய திருத்தூதரை அனுப்பியவன் அவனே” — (ஸூரா 9 அல்பராஅத்). இன்னும் அத்தியாயம் 61 வாக்கியங்கள் 8, 9, இவற்றையும் நோக்குவீர்களாக.

(தொடரும்)

97
20 OCT 1921

முஸ்லிமன்.

# தத்துவ இஸ்லாம்

# ISLAM AS IT IS.

وَلْتَكُن مِّنكُمْ أُمَّةٌ يَدْعُونَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُونَ بِالْمَعْرُوفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ

கமலம் - 3. | 1921ஞு அக்டோபர்மீ | இதழ் - 6.

بسم الله الرحمن الرحيم
نحمده ونصلي على رسوله الكريم

## இஸ்லாத்தின் தாத்பரியம்

[மௌலானா மௌல்வி கனம் காஜாகமாலுத்தீன் சாஹிப், பி. ஏ., எல் எல். பி., அவர்களின் சிங்கை விஜய பிரசங்கம். முன் 177-ம் பக்கத் தொடர்ச்சி]

### இறைவன்வேதத்தில் இருக்கவேண்டியவை.

நான் ஏற்கனவே சொன்னதுபோல் மனிதனுடைய மறைவான மகோன்னத சக்திகளை யெல்லாம் பயன் தரும்படி செய்ய வேண்டியது தான் மதத்தின் நோக்கமாயின் ஆண்டவனிடத்திலிருந்து வெளிவந்திருக்கும் வேதத்தில் அடியிற்காணும் ஏழு அம்சங்களும் காணப்படல்வேண்டும்.

1 மனிதனுடைய சக்தியும் சாமர்த்தியமும் யாவை?

2 அவற்றை வெளிப்படுத்தும் முறை யாது?

3 அப்படி வெளிப்படுத்துவதில் மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள சம்பந்தம் யாது?

4 மனிதனுக்கும் அவனைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்களுக்குமுள்ள சம்பந்தம் யாது?

5 மனிதர்களுள் ஒருவருக்கொருவருள்ள சம்பந்தம் யாது?
6 இச்சம்பந்தங்களை யெல்லாம் அநுஷ்டிக்கும் முறையாது?
7 மாணத்துக்குப்பின்னுள்ள மனித நிலைமை யாது?

இவ்விஷயங்களைப்பற்றி யான் வியாக்கியானம் செய்யும்போது இதாமதங்களைப் பற்றி ஒன்றும் கூறத்தேவையில்லை; அந்த அந்த மதத்துக்குரியவர்கள் தம்தம்முடைய மார்க்கங்களில் இவ்வேழு விஞக்களுக்கும் தக்க விடைகளுண்டோ வென்று தாமே உய்த்து ணர்ந்துகொள்ளுவார்களாக. இஸ்லாமார்க்கத்தின் திருவேதமாகிய குர்ஆன் ஷரீபானது இவ்வேழு விஷயங்களையும் பற்றி மிகவிரிவாக வுப் விளக்கமாகவும் கூறியிருக்கின்றது. இவ்வேழு விஷயங்களைப் பற்றி எம்து திருமறையானது வியாக்கியானம் செய்வதோடு நில் லாமல் அவ ற்றைப் பரிபூர்ண நிலைமைக்குக் கொண்டுவரும்படியான வழிகளைப்ப றியும் விஸ்தாரமாக விளக்கியி ருக்கின்றது.

என்னு டைய சொந்த அபிப்பிராயத்தில் மேற்கூறிய ஏழுஅம் சங்களைப்ப றியும் வியாக்கியானம் செய்து அவற்றிற் குரிய சமா தானங்களை ம் ஒரு மதமானது சொல்லத் தவறி விடுமாயின் அது தெய்வசம்ப தமான மார்க்கமாயிருத்தல் முடியாது. நம்முடைய ஆத்மசக்தி ளை யெல்லாம் வெளிப்படுத்தி அவற்றாலாகிய முழுப் பயனையும் டையக் கூடிய மார்க்கத்தைக் காட்டாமலிருக்கும் மத மானது எ வாறு தெய்வத்துக்குப் பொருத்தமுள்ளதாயிருத்தல் கூடும்? வேழையும் இப்பொழுது யான் ஒவ்வொன்றாக எடு த்துக்கொ ளுகிறேன்

## மனிதனுடைய சக்தியும் சாமர்த்தியமும்

“நி மாக நாம் மனிதனை மகா உன்னதமான அமைப்பில்
சிருஷ்டி ருக்கிறோம்; ஆயினும் அவனைக் கீழான வற்றிற்கெல்
லாம் கீ வனாகவும் இருக்கச் செய்கின்றோம்”—(குர்ஆன், 95:4,5)

கின் சிருஷ்டிப் பொருள்களில் காணப்படும் தத்துவங் களெ நம்முடைய சரீரத்தில் ஒருங்கே அமைந்து கிடப்ப தால் மனிதப்படைப்பானது மகா சிலாக்கியமான சிருஷ்டி யென் தப்படுகின்றது. ஆதலின் அவன் மேலான வற்றிற் கெல் மலான பதவியை அடைதல் கூடும்; ஆனால் அதேசமய யத்தி அவன் கீழான வற்றிற்கெல்லாம் கீழாகவும் தாழ்ந்து விட லாம். மனிதனைத் தவிர மற்றெல்லா வஸ்துக்களுக்கும் அவற்றின் வள சியில் மட்டுத்திட்டமான ஓர் அளவுண்டு. ஆனால் மனிதனு டை ஆத்மசக்திக்கோ எவ்வகை மட்டுத் திட்டமும் இல்லை. தன் னுட ய ஆத்ம சக்தியால் அவன் மேலானவற்றிற் கெல்லாம் மே லா பதவியை அடைந்து மலக்குகளுடைய (அமரர்களுடைய)



நிலைமைக்கு எட்டலாம்; ஆனால் கீழ்த்தரத்துக்கெல்லாம் கீழான மிருகத்திலும் கேவலமான நிலைமைக்கும் அவன் வந்து சேரலாம்.

இதுவரையில் மனிதர்களுடைய மனத்தில் குழப்பத்தை உண்டுபண்ணி யிருப்பதெல்லாம், மனிதனுக்கு எவ்வளவு ஆத்ம சக்தி யுண்டென்பதை அளவிடமுடியாமலிருக்கும் அந்த ஆழமான நிலைமைதான். பல்வேறு மனிதர்கள் இவ்விஷயத்தைக் குறித்துப் பல் வகைப்பட்ட அபிப்பிராயங்களை வெளியிட்டிருப்பதனால்தான் மனிதனுடைய ஆத்மசக்திசம்பந்தமாக இவ்வுலகில் பல்வேறு அபிப் பிராயங்கள் பரவிக்கிடக்கின்றன; இப்பூவுலகில் காணப்படும் பல் வேறுவகை ராஜ தந்திரங்களும் இக்காரணத்தால்தான் ஒன்றோ டொன்று விகற்பப்பட்டுக்கிடக்கின்றன. இதைப்பற்றி இன் னும் விரிவாக விவரித்துச் சொல்வதென்றால் எனக்கிப்பொழுது கிடைத்திருக்கும் அவகாசமானது போதாதென்றே கருதுகின் றேன். ஆனால் இங்கே ஒருவிஷயத்தைப் பற்றி மட்டும் குறிப்பிட் டுச் சொல்வது போதுமானதா யிருக்குமென் றெண்ணுகிறேன்: இஸ்லாமார்க்கம் இவ்வுலகில் தோன்றுமுன்னே இதாமதத்தி னர்களும் தத்துவசாஸ்திரிகளும் மனித வர்க்கத்துக்கு மிக்க அநீதி செய்திருக்கிறார்களென்றே சொல்லவேண்டும். அக்காலங்களிலெல் லாம் மனிதனை மிகக்கேவலமாகவே மதித்துவந்திருக்கிறார்கள். துரா சைகளும் துர்க்குணங்களும் திரண்டுருண்டு ஒன்றாய்ச் சேர்ந்த உரு வம்தான் மனிதப்பிறவி யென்று சொல்லி வந்தார்கள். மனிதன் பிறக்கும்போதே அவனுடன் அஞ்ஞானமும் கருமமும் பாபமும் கூடப் பிறக்கின்றனவென்று அவர்கள் வாதித்து வந்தார்கள். மனி தனுடைய ஆத்மசக்தி விருத்தி யடையவேண்டு மாயின் அதற்கு இப்பஞ்ச பூதத்தாலாகிய சரீரமானது ஒரு தடை கல்லாயிருக்கிற தென்று கருதினார்கள். இல்லறத்தை வெறுத்துத் துறவறத்துக்குச் சென்றால்தான் மோக்ஷப்பேரானந்தத்தை அடைதல் முடியுமென் றும் எண்ணினார்கள். பிறக்கும் பொழுதே மனிதனுடன் பாபமும் தோன்றுவதால் அப்பாபத்தைப் போக்குவதற்கு ஆண்டவனால் அனுப்பப்பட்ட ஓர் “ஏற்பாட்டை” ஒப்புக்கொண்டா லல்லாமல் அவன் அப்பாபத்திலின்றும் தப்பமுடியாமல் ஆழ்நரகில்தான் போய் வீழ்வானென்று சொல்லி வந்த கூட்டத்தார்களும் இருந்தார் கள். ஏசுவின் மதந்தான் இவ்வாறாய் விட்டதென்றால் புத்தருடைய மார்க்கமோ அதைக்காட்டிலும் கேவலமாய் விட்டது; அவருடைய சித்தாந்தத்தின்படி மனிதன் இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கே அரு கனல்லாதவனாய்ப் போய்விட்டான். துக்கமும் துன்பமும்தான் மனிதனுக்கு இவ்வுலகில் கிடைக்கக்கூடிய கூலியென்று கௌதம

புத்தர் அபிப்பிராயப்பட்டார். துக்கம் துக்கோற்பத்தி துக்க நிவாரணம் துக்கநிவாரணமார்க்கம் இந்நான்கும் தான் பௌத்ததர்மத்தில் "நால்வகை வாய்மைகள்" என்று கூறப்படுகின்றன. தன்னையே நிக்கிரகம் செய்து நிருவாண திசையை அடைந்தால்தான் மனிதன் தன்னுடைய பிறவித்துன்பத்தைப் போக்கிக் கொள்ள முடியுமென்பது அவரது கொள்கை.

("பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவ தறிக." — மணிமேகலை,
உ. ஊரலருரைத்த காதை, ௬௪—௬௭. ப-ர்.)

இந்திய நாட்டுப் புராதன வேதாந்தக் கொள்கைகளை உற்று நோக்கும் பக்ஷத்தில் ஆத்மசித்திக்கு வழிவிடாமல் தடை செய்து கொண்டிருக்கக்கூடிய விலங்குதான் இச்சரீரமென்று அவர்கள் நினைத்திருந்தார்களென்பது செவ்வனே புலனாகின்றது. அருவருக்கத்தக்க ஐம்புலன்களோடுகூடிய இச்சரீரத்தை ஓர் ஆபாசக்களஞ்சியமான தண்டகல்லென்றே அவ்வேதாந்திகளெல்லாம் கருதியிருந்தார்கள். பாரசீக தேசத்து மதமானது மனிதனை நன்மை தீமைகளுக்குக்குரிய தெய்வங்களின் கையில் இருக்கக்கூடிய விளையாட்டுக்கருவியாகிய ஒரு மரப்பாவையாகச் செய்துவிட்டது. கிரீஸ் (யூனான்) தேசத்து ஞானமோ பழிவாங்கும் தெய்வத்துக்கும் மற்றப் பாமரக் கொள்கைக்கும் மனிதனைக்கதியற்ற ஆளாக்கிவிட்டது. இவ்வாறு வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தேசத்தில் விருத்தியடைந்துவந்த வெவ்வேறு வகைப்பட்ட மதக்கொள்கைகளினால் அவ்வவ்விடங்களிலுள்ளவர்கள் தங்களுடைய யுக்திக்கும் புத்திக்கும் ஏற்றவண்ணமாக வெவ்வேறு விதமான பலிகளையும் பிராயச்சித்தங்களையும் தவங்களையும் ஏற்படுத்திவிட்டார்கள். ஆனால் தற்காலத்திய தத்துவ சாஸ்திரமோ மனிதனுடைய நிலைமையைப்பற்றி மேற்கூறியவற்றிற்கு நேர்மாறான அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றது. மனிதனைப் பற்றிப் பழைய மதங்களெல்லாம் மிகக்கேவலமான அபிப்பிராயம் கொண்டிருந்ததை மாற்றும் பொருட்டு வந்த தற்காலத்திய தத்துவ சாஸ்திரமானது தனக்குரிய நிலைமைக்கு மேல் அதிகம் தாவ ஆரம்பித்து விட்டது.

முற்காலத்திய பழைய கொள்கைகளும் தற்காலத்திய புதிய கொள்கைகளும் ஒன்றோடொன்று மாறுபட்டிருந்த போதிலும் அவையெல்லாவற்றிலும் சிறிது சிறிது உண்மையுண்டென்றே நான் கூறத்துணிவேன். ஆனால் இஸ்லாமார்க்கமானது எல்லாவற்றையும்



சமாசப் படுத்திச் சரியான நிலைமையைச் சந்தேகமற மனிதனுக்குக் கொடுத்திருக்கிறது. நான் சற்றுமுன் கூறிய குர்ஆன் ஆயத்தானது மனிதனுடைய உண்மையான தன்மையை உள்ளவண்ணம் வெளியாக்குகின்றது. ஸ்தூலதேக சம்பந்தமாகவும் சூக்ஷும தேகசம்பந்தமாகவும் மனிதனானவன் மகாஉன்னதமான அமைப்பாகப்படைக்கப்பட்டிருக்கிறான். இஸ்லாமிய கொள்கைப்படி மனிதன் பிறக்கும்போதே எவ்வகைக் கருமமாவது பாபமாவது இல்லாமலே பிறக்கிறான். ஆண்டவனுடைய சட்டதிட்டங்களை இயற்கையாகவே அவனால் அனுஷ்டிக்க முடியும். இவ்வாறு இயற்கைச் சட்டங்களை இடைவிடாது அனுஷ்டித்து வருவோமாயின் நாம் அளவில்லா அபிவிருத்தியை அடையலாம். இஸ்லாமார்க்கத்தில் ஒரு சிசுவானது பிறந்தவுடன் இறக்குமாயின் அது நேரே சுவர்க்கம் போய்ச் சேருகிறது. எங்கள் இஸ்லாமார்க்கத்துக்கு நேர்மாறான வேறு சில மதங்களுமுண்டு; அம்மதங்களின் சித்தாந்தப்படி மேற்கூறிய குழந்தையானது நேரே நரகத்துக்குத்தான் போகவேண்டும். மனிதன் பிறக்கும் பொழுதே பாபத்துடன் தோன்றுவதால் அப்பாபத்தைப் போக்குவதற்காகக்குருமார் வந்து சிற்சில சடங்குகளைச் செய்யாதவரையில் அக்குழந்தை மரணமாய் விட்டால் நேரே நரகத்துக்குத்தான் போய்ச்சேரவேண்டும். அம்மதத்தினரின் அபிப்பிராயப்படி பாபியாய்ப்பிறப்பவன் பரிசுத்தமடையாவிடின் பாழ்நரகில் வீழ்வது நியாயந்தானே! இவ்வளவு கேவலமாக மதிக்கப்பட்டுவந்த மனிதனை மகோன்னதமான நிலைமைக்குக் கொண்டுவந்தவர் எங்களுடைய நபிபெருமானார் முஹம்மது முஸ்தபா (இவர்களுக்கு இறைவனது கருணையும் கடாக்ஷமும் அதிகமாய் உண்டாவதாக) அவர்களன்றோ? இவ்வுலகில் அவதரிக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஒரு சிறிதும் அசுத்தமில்லாமல் மிகப்பரிசுத்தத்துடனேயே ஜனிக்கிறதென்று எம்பெருமானார் கூறியிருக்கின்றார்கள்; மேலானவற்றிற்கெல்லாம் மிகமேலான நிலைமையை அடைதற்குரிய ஆத்ம சக்தியானது நம்மிடத்தில் பிறக்கும் பொழுதே ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கிறதென்று அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். முஸ்லிமுடைய வயிற்றிற்பிறந்த குழந்தைக்குத் தான் இப்படிப்பட்ட ஆத்ம சக்தி உண்டென்றும் மற்றவர்களுடைய குழந்தைகளுக்கு அச் சக்தி இல்லை யென்றும் அவர்கள் சொல்லவில்லை. "மனிதனுடைய" மகவாகப் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் இப்படிப்பட்ட சக்தியெல்லாம் உண்டென்று நம் நபிபெருமானாரவர்கள் விளக்கியிருக்கின்றார்கள். மேலானவற்றிற்கெல்லாம் மேலான பதவியாகிய அமரர்களின் நிலைமையை

அடைதற்குரிய பாத்தியதை யானது ஆண் பெண்ணாகிய ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் கீழான வற்றிற்கெல்லாம் கீழாக மிருகத்திலும் கீழே தாழ்ந்து விடுதற்குரிய துர்க்குணமும் மனிதனிடத்தில் அமைந்திருக்கிறது. இக்காரணத்தால் தான் குர்ஆன் ஷரீபில் ஆண்டவன், "அவனைக் கீழான வற்றிற்கெல்லாம் கீழானதாகவும் செய்கின்றோம்," என்று கூறியுள்ளான். நம்முடைய பிறவிச்சுதந்தரமாகிய அமரர்களின் நிலைமையை எவ்வாறு அடையக் கூடுமென்றும் நம்முடைய துர்க்குணத்தின் சேஷ்டையால் நம்மை நரகத்துக்குள் வீழாமல் எவ்வாறு காப்பாற்றிக் கொள்ளக்கூடுமென்றும் எம் குர்ஆனே கரீமானது மேற்கூறிய ஆயத்துக்கு அடுத்தவாக்கியத்தில் மிகத்தெளிவாகக் கூறுகின்றது: "ஆண்டவனுடைய சட்டதிட்டங்களில் நம்பிக்கை வைத்து அவற்றின்படி நன்மை செய்பவர்கள் எப்பொழுதும் அழிவடையாத சன்மானத்தைப் பெறுவார்கள்"—(குர்ஆன், 95: 6). என்றென்றைக்கும் அழியாமல் வளர்பிறைபோல் மேன்மேலும் விருத்தியடைந்து வருவது தான் இஸ்லாமிய சுவர்க்கத்தின் தன்மையாயிருக்கிறது. மனிதன் தன்னுடைய ஆத்ம சக்தியால் அமரர்களுக்குரிய மகோன்னத பதவியை அடைவதற்கும் அவன் தன்னுடைய துர்க்கிருத்தியங்களால் மிருகங்களினும் தாழ்ந்த கதியில் சென்று சேர்வதற்கும் வேண்டிய நற்குணங்களும் துர்க்குணங்களும் அவனிடத்தில் இயற்கையாய் அமைந்து கிடப்பதால் அவன் தீமையை ஒழித்து நன்மையைப் பெறுதற்குரிய மார்க்கமாயிருக்கத் தக்க உத்தம மதமானது என்னென்ன இலக்ஷணங்களுடன் இறைவனால் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று நாம் இப்பொழுது ஒருவாறு தெரிந்து கொண்டோம். ஆகவே மனிதனுக்கேற்ற மதமாயிருக்கத்தக்க அச்சன்மார்க்கத்தில் நம்முடைய அந்தரங்கமான ஆத்ம சக்திகளெல்லாம் வெளிப்பட்டு அவ்வவற்றிற்குரிய பலன்களை அடைதற்குவேண்டிய எளிய துறைகளெல்லாம் நம் கண்முன் காணப்படுதல் வேண்டும். ஆதலின் நாம் பிறக்கும் பொழுதே பாவக்குழியாகிய பாதாளத்தில் கிடப்பதாகவும் நம்மை அப்படுகுழியினின்றும் கரையேற்றுவதற்கு வேறொருவருடைய உதவிவேண்டுமென்றும் நாம் பயப்பட வேண்டியதில்லை. நாம் பிறப்பதற்கு முன்னே நாமாகவே ஒரு பாபத்தையும் செய்யாமலிருக்கும் போது நம்முடைய ஜனனத்துக்குப் பின் பிராயச்சித்தம் செய்து கொள்ளாவிடின் பாழ் நரகில் வீழ்வோமென்று ஏன் அனாவசியமாக அஞ்சவேண்டும்? வேறுயாரோ செய்த பாபத்துக்காக நாம் தீ நரகுக்குச் செல்லவேண்டுமென்பது தேவ அநீதியாய்க் காணப்படவில்லையா? மற்றவர்களின் பாபத்துக்காக



நாம் பிராயச்சித்தம் பெறவேண்டுமென்பது எவ்வாறு நியாயமாகும்? நாம் பிறக்கும்போது நம்மிடத்தில் எவ்வகைப் பாபமும் பரிசுத்தக் குறைவும் கலந்திராதபோது நமக்காக வேறொருவர் பலியாகவேண்டியதில்லை. சுருங்கச் சொல்லுமிடத்து, பாபமானது பிதிரார்ஜிதமாய் வரக்கூடிய ஒரு கர்மமன்று; ஆனால் அது ஒருவருடைய சுயார்ஜிதத்தாலேயே வரக்கூடியதாயிருப்பதனால் அப்பாபத்தை, நாம் விரும்பினால், தடுத்துக் கொள்ளலாம். இக்காரணத்தால்தான் இஸ்லாமார்க்கத்தின் நோக்கமானது பாபத்தினின்றும் வெளியேறுவதுதான் என்று எம்திருமறையானது கூறவில்லை. ஆதலின் முஸ்லிம்களாகிய நாங்கள் ரக்ஷண்யத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டில்லை. ரக்ஷண்யம் என்னும் பதமே மகா அநாசாரமுள்ளதாயிருந்து கொண்டு மனிதனுடைய கௌரவப் பிறவியை மிகத்தாழ்மையாக்கிவிடுகிறது. ரக்ஷண்யம் பெறுவதையே நாம் முக்கிய நோக்கமாகக் கொள்வோமாயின் மனிதன் பிறக்கும் பொழுதே பாபத்துடன் பிறக்கிறானென்று ஒத்துக்கொள்ள நேரும்; அப்படி ஒத்துக்கொள்ளுவது மனிதனுடைய அந்தஸ்துக்கு மிகக் கேவலமான தன்மையைக் கொடுக்கின்றது. சில சமயங்களில் மனிதன் தன்னுடைய பகுத்தறிவைச் செம்மையாய் உபயோகிக்காததனால் மிருகத்திலும் மிகத் தாழ்ந்தவனாய்ப் போகிறான். அவன் அப்பொழுது அம்மிருகப் பிராயமான தன்மையினின்றும் வெளியேறவேண்டுவது அவசியமாகத்தானிருக்கிறது; ஆனால் மனிதன் தன் பிறவிக்குணத்தாலேயே பாபியாயிருக்கிறானென்று சொல்வது புத்திக்குப்பொருத்தமாய்ப் புலப்படவில்லை. மனிதன் தன் செயலினாலேயே பாபத்தை வருவித்துக் கொள்ளுகிறான்; அதை அவன் தன் புத்திசாதுரியத்தால் வாராமலும் தடுத்துக்கொள்ளலாம். ஆனால் பாபமானது ஒருபோதும் கடவுளால் இயற்கையாகக் கொடுக்கப்படுவதில்லை. மனிதன் பிறக்கும் பொழுதே பாபத்துடன் பிறக்கிறானென்போமாயின் ஆண்டவனே அப்பாபத்தைச் சிருஷ்டிக்கிறானென்று நாம் ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கும்; இது இஸ்லாமார்க்கத்தின்படி அல்லாஹுத் தஆலாவுக்கு ஒரு பழிப்பான இழிவை உண்டு பண்ணுவதாயிருக்கும். ஆனால் எம்முடைய திருமறையின் கொள்கையின்படி மனிதன் அடைய வேண்டியதாயிருக்கும் முக்கியபலனானது பலாஹ் என்பதாகும். பலாஹ் என்பதன் தாத்பரியம் "விசேஷ ஜயம், தன் ஆத்மசக்திகளை முழுதும் வெளிப்படுத்தல், அதனாலுண்டாகும் பலனை அடைதல்" என்பனவாகும். நம்மிடத்தில் மறைந்து கிடக்கும் ஆத்ம சக்திகளையெல்லாம் வெளிப்படுத்தி அவற்றாலாகிய பலனையெல்லாம் அனுபவிப்

பதுதான் எம் இஸ்லாத்தின் நோக்கம். இதுதான் "பலாஹ்" என்னப்படுவது. ஜன்னத் என்று சொல்லப்படுகின்ற இஸ்லாமிய சுவர்க்கமும் இதுதான். ஜன்னத்துல் பிர்தௌஸில் நாம் அடையக்கூடிய ஆனந்தமும் இதுதான். நல்ல பகுத்தறிவுள்ள மனமுடையவர்களும் ஊன்றிக் கேட்கக்கூடிய செவியுடையவர்களும் நான் இப்பொழுது முஸ்லிம் சுவர்க்கமாகிய ஜன்னத்தின் தன்மையைப்பற்றிக் கூறிவந்ததை ஆழ்ந்து நோக்குவார்களாக.

### அந்தரங்க சக்திகளை வெளிப்படுத்தும் முறை.

நான் இதுவரையில் சொல்லிவந்ததை நீங்கள் கவனித்திருப்பீர்களேல் நம்முடைய அந்தரங்க ஆத்ம சக்திகளை எவ்வாறு வெளிப்படுத்தக் கூடுமென்பதை நீங்கள் ஒருவாறு உணர்ந்திருக்கலாம். நம்முடைய சக்தியாலும் சாமர்த்தியத்தாலும் எவ்வளவுதூரம் சாதிக்கமுடியுமென்னும் அந்த அளவானது நம்மைப்படைத்த அந்தச் சர்வலோக ரக்ஷகனுக்குத்தான் தெரியும்; ஆதலின் அவனைத்தான் நாம் வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும். இதற்கு வேண்டிய வழியை நமக்குக் காட்டவேண்டுமென்று அல்லாஹுத் தஆலாவினிடத்தில் முறையிட்டால் அவன் அதற்குத்தக்க நேர்வழியைக் காட்டுகிறான். "நேரானவழியின் சீரான மார்க்கத்தைக் காட்ட வேண்டிய பொறுப்பு அவனைச்சார்ந்ததா யிருக்கிறது"--(குர்ஆன்) நம்முடைய ஸ்தூலதேகத்திலும் ஸூக்ஷ்மதேகத்திலும் அளவிடற்கரிய ஆழ்ந்த அழகிய சக்திகளெல்லாம் அமைந்திருக்கும்போது அவற்றை யெல்லாம் சரியான முறைப்படி வெளிப்படுத்தாமல் 'மந்திரத்தில் மாங்காய் விழும்' என்பதேபோல் சாமான்யமான வெறுங்கொள்கையில் நம்பிக்கை வைப்பதால் யாது பயனுண்டாகும்? ஒரு வைத்தியனுடைய சாமர்த்தியத்தைப்பற்றி நான் அதிகமாக நம்பிக்கைமட்டும் வைப்பேனாயின் என்னுடைய தலைவலியானது நீங்க மாட்டாது; ஆனால் எனக்குத் தலைவலி அதிகமாயிருக்கிறதென்று அவ் வைத்தியர் என் தலையை அறுத்து விடுவதாலும் அந்நோய் நீங்காது எனக்குள்ள தலைவலி நீங்கவேண்டுமாயின் அவ்வைத்தியர் சொல்லும் முறைபோல் நான் சிகிச்சை செய்துகொள்ளவேண்டும். வைத்தியருடைய முறையை நான் அனுஷ்டித்தால் மட்டுமே என் தலைநோய் நீங்கும். அம்முறையில் நான் நம்பிக்கைமட்டும் வைத்துச் சும்மா இருந்து விடுவேனாயின் என்நோய் என்னை விட்டு நீங்காது. இவ்வாறே நாம் பின்பற்றக்கூடிய மதமும் நம்முடைய சக்திகளை யெல்லாம் நற்பய னெய்தும்படி செய்தற்குரிய சில இலேசான சட்ட திட்டங்களையும் கட்டளைகளையும் நமக்குக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட மதம்தான் இஸ்லாமார்க்க மெனப்படு



வது. இதுதான் ஏசுநாதர் உட்பட எல்லாத் தீர்க்கதரிசிகளாலும் உபதேசிக்கப்பட்டு வந்தது. "ஆண்டவனுடைய சட்டத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் நான் வந்தேனல்லாமல் அதை அழிப்பதற்காக வரவில்லை. ஏனெனின் எல்லாக்காரியங்களும் பூர்த்தியாகும் வரையில் வானமும் பூமியும் அழியுமட்டும் ஆண்டவனுடைய சட்டத்திலிருந்து ஓர் அணுவேனும் எப்பொழுதும் மாறுபாடடையாதென்று நான் உங்களுக்கு நிச்சயமாகச் சொல்லுகிறேன்," என்று ஏசுநாதர் உபதேசித்தபோது அவர் இஸ்லாத்தைத் தவிர வேறொன்றையும் சொல்லவில்லை. அல்லாஹுத் தஆலாவின் ஆணையைச் சிரமேற்கொண்டு அதன்படி நடப்பவரெல்லாம் பரலோகத்தில் மேன்மை பெறுவார்கள்; ஆனால் இவ்வுலகில் எவரொருவர் ஆண்டவனுடைய சட்டதிட்டங்களுக்கு இணங்காமல் மீறி நடக்கின்றாரோ அவர் அவ்வுலகிலும் அவமானத்துக்குள்ளாவார். இவ்வாறு ஏசுநாதர் தம்முடைய மலைமேல் செய்த உபதேசத்தில் கூறியுள்ளார். இவ்வண்ண மெல்லாம் ஏசுநாதர் தம்முடைய உபதேசங்களில் "இஸ்லாமார்க்கத்தை"ப் போதித்திருக்கும்போது அவருக்குப்பின் வந்த பௌல்முதலிய குருமார்கள் மேல்நாடுகளில் வேறு என்னென்னவோ தப்பான கொள்கைகளை யெல்லாம் ஏற்படுத்திவிட்டு அவையெல்லாம் ஏசுவின் கொள்கைகளென்று வாதாடி வருகின்றனர். நம்முடைய முன்னேற்றத்துக்காக ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கும் சட்டங்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடப்பதுதான் நமக்கு வெற்றியைத்தரும்; இதில்தான் எல்லா இரகசியமும் பொருந்தி யிருக்கிறது. அல்லாஹுத் தஆலாவின் சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடப்பதால் நமக்குண்டாகும் ஆத்மசக்தியின் வெற்றியைக் கண்டால் அவனுக்கெவ்வளவு சந்துஷ்டியுண்டாகுமோ அதில் ஏகதேசமேனும் ஆண்டவனால் கோரப்பட்ட வெற்றியை யடையாமல் சும்மா அவனுக்கு வெறும்பூஜை செய்வதால் மட்டும் உண்டாக மாட்டாது. இஸ்லாத்தின் முறைப்படி ஆண்டவனுடைய ஸ்தோத்திர மெல்லாம் நம்மையே நாம் முன்னுக்குக் கொண்டுவருவதில்தா னிருக்கிறது. நம்முடைய ஆத்மசக்திகளை யெல்லாம் வெளிக்குக் கொண்டுவராமல் ஆண்டவனை வாயால் வெறும் ஸ்தோத்திரம் மட்டும் செய்வதானது" அல்லாஹுத் தஆலாவுக்கு ஒன்றும் திருப்தியை உண்டுபண்ண மாட்டாது. ஆண்டவன் நம்மைப் படைத்ததற்காக நாம் அவனுக்கு நன்றிசெலுத்த வேண்டுமாயின் அதற்கு ஒரேவழிதானுண்டு: ஆண்டவன் நம்மை எதற்காகப் படைத்தானோ அந்தக் காரியத்தை நாம் பூர்த்திசெய்தாலொழிய வேறு வழியால் நாம் அக்கடவுளுக்கு நன்றிசெலுத்த

முடியாது. நான் ஏற்கனவே சொன்னதுபோல் மனிதன் மேலானவற்றிற்கெல்லாம் மேலானதாகவும் கீழானவற்றிற்கெல்லாம் கீழானதாகவும் போகும்படி அமைக்கப்பட்டிருக்கிறான். ஆனால் அவன் கீழானவற்றிற்கெல்லாம் கீழானதாக ஆகாமல் மேலானவற்றிற்கெல்லாம் மேலான தன்மையை அடையவேண்டுமாயின் அவன் ஆண்டவனால் உண்டுபண்ணப்பட்ட சட்டதிட்டங்களின்படி சற்றும் விலகாமல் நடந்துகொள்ள வேண்டும்.

ஆண்டவனுடைய சட்டதிட்டங்களை ஒழுங்காய் அனுஷ்டிப்பதற்கான பிரியத்தை நாம் உண்டுபண்ணிக் கொள்ளவேண்டுமாயின் நமக்குச் சில வழிகள் காண்பிக்கப் படவேண்டும்; அவ்வழிகளின்படியே நாம் சிறிதும் தவறாமல் அப்பியசித்து வரவேண்டும். ஆண்டவனுடைய சட்டதிட்டங்களுக்கு மாறுசெய்வதால்தான் பாபமென்னும் தீமையானது பற்பலவிதமாய் ஜனிக்கின்றது. இப்படிப்பட்ட பாபத்தை விலக்கிக்கொண்டு நன்மையான வழியில் செல்லவேண்டுமாயின் நாம் ஆண்டவனுடைய ஏவலாகிய சட்டங்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிக் கற்றுக்கொள்ளுவதற்கு நாம் பாடுபட வேண்டுமாயின் நம்முடைய உடைமைகளை நாம் முதலில் பரித்தியாகம் பண்ணப் பழகிக்கொள்ளவேண்டும். நம்மிடத்திலுள்ளதைப் பிறருக்குக் கொடாமல் பிறரிடத்திலுள்ளதை நாம் பற்றிக்கொள்ள நாடுவோமாயின் நமக்கு அப்பொழுதுதான் பாபச்செயலுக்கு மூலகாரணமாயுள்ள கெட்ட எண்ணங்களெல்லாம் உதயமாகின்றன. சுருங்கச்சொல்லுமிடத்து, நாம் ஓர் உதாரணத்தை ஈண்டுக்கவனிப்போம்: எனக்குக் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம்; அப்பணத்தைப் பிறரிடமிருந்து நான் தீயவழியால் கவர்ந்து கொள்ள நாடுவேனாயின் அது எனக்கொரு பாபச்செயலாய் முடிகின்றது. ஆனால் என்னிடத்திலுள்ள பணத்தையே பிறருக்குத் தானம் செய்யும் பழக்கமானது எனக்கு அதிகமாயிருக்கும் பக்ஷத்தில் பிறருடைய திரவியத்தை அபகரிக்கும்படியான கெட்ட எண்ணம் என்மனத்தில் எவ்வாறு குடிகொள்ளும்? இவ்வாறே நம்முடைய ஒவ்வொரு காரியமும் நடைபெற்று வருகின்றது. நம்முடைய சொந்தவிஷயத்தில் அதிக சுயநயம் பாராட்டாமல் பிறருக்காக விட்டுக்கொடுக்கப் பழகிக்கொள்வோமாயின் நம்முடைய குணாதிசயமானது நாளுக்குநாள் முன்னுக்கு வரத்தலைப்படும். இவ்வாறின்றி நமக்குள்ளதில் ஒருபைசா அளவில் விட்டுக் கொடுக்காமல் ஒவ்வொரு காரியத்திலும் பிறருடைய பொருளையே கவர்ந்துகொள்ள விரும்புவோமாயின் ஒவ்வொருநாளும் நாம் அதிக



மாகத் தாழ்ந்துகொண்டே போவோம். ஒருமனிதன் பசிப்பிணியால் வருந்துங்காலையில் தனக்குச் சொந்தமானவஸ்துவைக் கூடத் தின்னாமல் தன் பசித்துன்பத்தைச் சகித்துக்கொள்ளப் பழகிவருவானாயின் அவன் பசியில்லாதபோது பிறருடைய பொருளை அபகரிக்க நாடுவானோ? இப்படிப்பட்ட படிப்பினையைத்தான் நாம் நம்முடைய ரம்ஸான்மாதத்து நோன்பால் கற்றுக்கொள்ளுகிறோம். முஸ்லிம்களின் நோன்பென்பது வீண்பட்டினியென்று பலர் தவறாகக் கருதி வருகின்றனர். இரவைப் பகலாகவும் பகலை இரவாகவும் மாற்றிக்கொண்டு இரவெல்லாம் விலாப்புடைக்கப் புடைக்கத் தின்பதும் பகலெல்லாம் பட்டினி கிடந்து உறங்குவதுந்தான் துலுக்கர்களின் ரம்ஸான் நோன்பென்றும் பலர் தமது அறியாமையால் கூறுவதுண்டு. சாதாரணகாலங்களில் பகலில் பசியுண்டாகும்போது அதைத்தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஏதேனும் ஆகாரம் உட்கொள்ளுகிறோம்; ஆனால் நோன்பு காலங்களில் அப்படிப்பட்ட பசிப்பிணியை நமக்குச் சொந்தமான பொருளைக்கொண்டும் தணித்துக்கொள்ளாமல் அப்பசித்துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளப் பழகிக்கொள்ளுகிறோம். பசிதாகத்தாலுண்டாகும் துன்பங்களையும் மோகத்தாலும் கோபத்தாலுமுண்டாகும் ஆத்திரங்களையும் அடக்கிக்கொண்டு நம்முடைய சொந்தவஸ்துவைக்கூட அநுபவிக்காமல் சும்மா இருக்கப் பழகிக்கொண்டுவிட்டால் பிறகு அப்படிப்பட்ட ஆத்திரங்கள் உண்டாகுங்காலங்களில் பிறருடைய பொருள்களின் மீது நம்முடைய நாட்டம் செல்லாது. நோன்புதினத்தில் நான் ஆண்டவனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு அவனுக்குத் திருப்தியை உண்டாக்கும் பொருட்டு என் சொந்தமனைவியிடத்திலுங்கூட நான் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமலிருக்கப் பழகிக்கொள்வேனாயின், அந்த ஆண்டவனுடைய கட்டளைக்கு விரோதமாக அவனுக்கு மனவருத்தமுண்டாகும்படி அன்னியஸ்திரீகளை நான் நாட முயல்வேனோ? இப்படிப்பட்ட படிப்பினைதான் எம்இஸ்லாத்தின் ஐந்து தூண்களான ஐந்து பர்ளுகளால் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. உறுதிகொள்ளுதல் தொழுது கொள்ளுதல் நோன்பு வைத்தல் ஏழைவரி கொடுத்தல் மக்காஷரீபுக்கு யாத்திரை செல்லுதல் ஆகிய இவைதான் இஸ்லாத்தின் ஐந்து முக்கிய கடமைகளாயிருக்கின்றன. சாதாரண காலங்களில் நமக்குச் சொந்தமான பொருள்களைப் பிறருக்குத்தானம் செய்வதற்கு நாம் முன்வரவேண்டுமென்று ஆண்டவன் கட்டளையிடும்போது மேற்கூறிய ஐந்து கடமைகளிலும் நாம் சட்டப்படி நடந்துகொள்ளாமல் பிறருடைய பொருள்களில் ஆசைவைப்பதனால்தான் இவ்வுலகில் காணப்படும் எல்லா வகைக்

குற்றங்களும் இழைக்கப்படுகின்றனவென்று தெரிந்து கொள்வீர்கள். ஆனால் நமக்குச் சொந்தமான காரியங்களில் நாம் விட்டுக் கொடுப்பதனால்தான் பிறருடைய பொருள்களில் நமக்குண்டாகக் கூடிய அபிலாசையானது குறையத் தலைப்படுகின்றது. ஆண்டவனுடைய திருப்திக்காக நாம் இவ்வாறெல்லாம் செய்யப் பழகிக்கொள்வோமாயின் பிறருடைய பொருளைக் கவர்ந்து கொள்ளவேண்டுமென்னும் துராசையும் நமக்குண்டாக வழியேற்படுமோ?

நம்முடைய பொருள்களில் மிகப்பெரிய பேராசையை வைக்கப் பழகிக் கொள்வதாலும் நம்முடைய அபிப்பிராயமே சரியென்று பிடிவாதமாய் வாதாடத் தலைப்படுவதாலும் ஒரு விஷயத்தில் நாம் செய்யும் தீர்மானமே சரியென்றும் அதை மற்றெல்லோரும் ஏகமனதாய் ஒத்துக்கொள்ள வேண்டுமென்றும் நிர்ப்பந்தம் செய்யப் பிரயத்தனப்படுவதாலுமே இவ்வுலகில் காணப்படும் தீமைகளுள் பெரும்பான்மையன இழைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் எம் முஸ்லிம்கள் லாஇலாஹ இல்லல்லாஹு (வணக்கத்துக்குரியவன் ஓரே ஆண்டவனைத் தவிர வேறொரு தெய்வமுமில்லை) என்று உறுதிகொள்ளும்போது அவர்களெல்லோரும் அல்லாஹுத் தஆலாவின் அபிப்பிராயத்துக்குத் தங்களுடைய அபிப்பிராயத்தை எப்பொழுதும் தாழ்மையாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். காலமெல்லாம் நம்முடைய சொந்தவேலைகளையே கவனித்துக்கொண்டு பிறருக்காக ஒருவினாடியும் நாம் செலவுசெய்ய மனமில்லாமலிருப்பது மற்றும் பல துன்பங்களுக்குக் காரணமாயிருக்கிறது. ஆனால் நமக்கு ஏற்பட்டிருக்கும் ஐந்து வேளைத் தொழுகையாலும் நம்மிடத்தில் தோன்றக்கூடிய சுயநயமாகிய எல்லாத் தீக்குணங்களையும் அப்போதைக்கப்போது போக்கிக் கொள்ளுகிறோம். விபசாரமான அனாசார விஷயத்தினாலும் குடிப்பதனாலும் பிறர்மனை விழைதலாலுமே இவ்வுலகத்தின் பீனல்கோடிலுள்ள குற்றங்களில் முக்கால்பாகம் நடைபெறுகின்றன. மனிதனிடத்திலுள்ள அபிலாசையாலுண்டாகும் தீமைகளை ஒழிப்பதற்கு எமது ரம்ஸான் மாதத்தின் முப்பது நோன்பைப் போன்ற அவ்வளவு அருமையான அருமருந்து வேறொன்றுமில்லையென்று உறுதியாகக் கூறுவேன். இன்னும் பணவிஷயத்தில் நாம்வைக்கும் பேராசையானது மற்றும் பல தீங்குகளுக்குக்காரணமாயிருக்கிறது; இப்படிப்பட்ட துராசையைப் போக்குவதற்கு எங்களுடை ஸக்காத்தென்னும் ஏழைவரியானது தக்கபக்குவத்தைச் செய்கின்றது. முஸ்லிம்கள் தங்களுடைய திரவியத்தை அதிகமாகத்தானமும் தர்மமும் செய்யப் பழகிக்கொண்டிருப்பதால் பிறருடைய பணப்பித்தான பேராசையைக் கண்டு எம்முஸ்லிம்



சகோதரர்கள் நகைக்க ஹேதுவுண்டாகிறது. அவரவரும் தம்தம்முடைய ஜன்னதேசத்தை விசுவசிக்கவேண்டியது அத்தியாவசியமே; இப்படிப்பட்ட தேசாபிமானமும் மெச்சத்தக்கதே. ஆனால் "தேசாபிமானம்" என்னும் சாக்கைச் சொல்லிக்கொண்டு பலர் இவ்வுலகில் மகா அடாதகாரியங்களை யெல்லாம் இழைத்து வருகின்றனர். இதனால் அளவற்ற இரத்தப் பெருக்கெல்லாம் மடையெடுப்பதுண்டு. தேசாபிமானமென்னும் பொய் வியாஜத்தை வைத்துக்கொண்டு மனிதவர்க்கத்தார் ஒருவரோடொருவர் சண்டைகளும் சச்சரவுகளும் செய்துகொண்டு வீணான காரியங்களில் தம் வாணாளைப் போக்குகின்றனர். எல்லாயுத்தங்களுக்கும் இதுதான் மூலகாரணமாயிருந்து வருகிறது. அவரவரும் தம்தம்முடைய ஜனனதேசத்தை அபிமானிக்கவேண்டுவது அவசியமான காரியமே; இது மிகவும் சிலாகிக்கத்தக்கதுதான். ஆனால் ஆண்டவனுடைய விருப்பத்துக்கு மாறாக ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரை, "தேசாபிமானம்" என்னும் வியாஜத்தின் கீழ் ஹிம்சிக்கத் தலைப்படுவதானது மகா கொடிய பாதகமாகக் கருதப்படுமென்றே நான் நம்புகிறேன். ஆனால் அல்லாஹுத் தஆலாவின் ஆணையின் பிரகாரம் ஒருவர் தம் சொந்த ஊரையும், சொந்த தேசத்தையும் விட்டு அப்பால் செல்லப் பழகிக் கொள்ளுவாராயின் அவர் தம்முடைய தேசாபிமானத்தை வீணான வழியில் செலவுசெய்ய மனந்துணியார்; இப்படிப்பட்ட பழக்கத்தை அடைவதற்கு எம்முடைய ஹஜ்ஜு யாத்திரையானது பெரிதும் பயன்படுகின்றது; ஒருவர் ஹஜ்ஜு யாத்திரை செய்யும் பொருட்டுப் புண்ணிய பூமியாகிய ஹிஜாஸ் எல்லைக்குள் பிரவேசித்தவுடன் இவ்வுலகவாழ்க்கையின் அலங்காரமாகிய ஆபரணங்களையும் அழகிய உடைகளையும் களைந்துவிடவேண்டும்; தன்னுடைய உடம்பைமட்டும் மூடிக்கொள்ளுவதற்குப் போதுமான இரண்டொரு தையலில்லாத சாதாரணத் துணிகளை மட்டும் உடுத்திக்கொள்ளவேண்டும். ஹஜ்ஜுக்குப் புறப்பட நாடியவர் தமக்குரிய சொத்து ஸ்வதந்தரம், பெண்டுபிள்ளை, வீடுவாசல், உற்றார் பெற்றார் முதலிய எல்லாரையும் விட்டுவிட்டுத் தம்முடைய ஜனனதேசத்தையும் துறந்து தன்னந்தனியே ஆண்டவனுடைய திருச்சந்நிதானத்துக்குப் போய்ச் சேர்கின்றார். இவ்வுலகவாழ்க்கையின் இன்பத்துக்குரிய எல்லாவற்றையும் அடியோடு வெறுத்துவிட்டு நம்மைப்படைத்த இறைவன் முன் மிகத்தாழ்மையுடன் சிரங்குனிந்து செல்கின்றோம். ஆண்டவனை நாம் அதிகம் நேசிப்பதன் அறிகுறியாக அரபுநாட்டின் நடுநாயகமாகிய மக்கமா நகரில் மகிமையுடன் பொலிந்து நிற்கும் கஅபத்துல்லா வென்னும் திவ்ய

தேவாலயத்தைச் சுற்றிச்சுற்றி வருகின்றோம்; அங்கே ஆண்டவன் சன்னிதானத்தில் சிரங்குனிந்து நம்முடைய தாழ்ச்சியைக் குறிக்கும் பொருட்டு வெறுந்தரையில் சென்னியைச் சாய்க்கின்றோம். "அவன் மண்ணிலேபிறந்து மண்ணிலே இறக்கிறான்" என்பது அவ்விடத்தில் வெளிப்படையாய் அநுஷ்டித்துக் காட்டப்படுகின்றது. ஹாஜியானவர் தன்னிடத்திலுள்ள மிருகப்பிராயமான துர்க்குணங்களையெல்லாம் போக்கிக் கொண்டதற்கு அறிகுறியாயிருக்கும்பொருட்டு ஒரு மிருகத்தையும் பலியிடுகிறார். எங்கள் நபிபெருமானார் கூறியிருப்பதேபோல் மனிதவர்க்கத்தாரிடத்தில் இஸ்லாத்துக்குரிய நல்லுணர்ச்சியை நன்கு நிலைநாட்டுவதற்கு இந்த ஹஜ்ஜு யாத்திரையானது மிகுதியும் பயன்படுகின்றது. இப்படிப்பட்ட யாத்திரையால் பாபத்துக்கெல்லாம் மூலகாரணமாகிய எல்லாப் பொருள்களையும் ஒருவர் தாமாகவே சுயேச்சையாய் விட்டுவிடக் கற்றுக்கொள்ளுகிறார். ஏ, ஈண்டுவிஜயம் செய்திருக்கும் முஸ்லிம் சகோதரர்காள்! ஹஜ்ஜு யாத்திரை தினமாகிய ஈதுல் அல்ஹாவின்போது நீங்கள் கொடுக்கும் குர்பானியையாமாகிய மிருகபலியால் உங்கள் பாலுள்ள மிருகத்தன்மையை ஒழிப்பதற்கு நீங்கள் ஒப்புக்கொண்ட விவரத்தை உங்கள் ஆண்டவனுக்கு அறிவித்தவராக ஆகின்றீர்களென்பதை இன்று என்மூலமாய்த் தாங்களெல்லோரும் தெரிந்து கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் மிருகபலி கொடுத்த பின்னர் உங்களிடத்திலுள்ள மிருகத்தன்மையை ஒழித்து மலக்குகளின் (தேவர்களின்) பதவியை எட்டாதமட்டில் நீங்கள் செய்யும் குர்பானியால் யாதொன்றும் பயனுண்டாக மாட்டாது. சம்பிரதாயத்துக்காகச் சில சடங்குகளைமட்டும் கழித்தவராகக் கருதப்படுவீர்களல்லாமல் உண்மையில் நீங்கள் பலியின் தாத்பரியத்தை உணர்ந்தவராக மதிக்கப்படவே மாட்டீர்களென்பது திண்ணம். (இன்னும் வரும்)

## நாயக வாக்கியங்கள்

1. ஆதியந்தமில்லாமல் சுயம்புவாயிருக்கிறவரும் அல்லாஹ் ஒருவனையே அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் ஒவ்வொருவரும் வழிபட்டு வணங்க வேண்டும்.

2. வாழ்வுவந்த காலத்திலும் தாழ்மையுற்றபோதும் நியாய முறைப்படி உண்மையையே பேசவேண்டும்.

3. வறுமையிலும் பெருமையிலும் அடக்கத்துடனிருப்பது சாலவும் நன்மை பயக்கும்.



4. உற்றாரும் உறவினரும் நமக்கு உதவாவிடினும் நாம் அவர்களுக்கு உதவிபுரிவதே உத்தமமான காரியம்.

5. நமக்குத் தர்மம் செய்ய மறுத்தவருக்கு நாம் அவர்களுடைய கஷ்டதிசையில் தர்மம் செய்யப் பின்வாங்குதல் உசிதமன்று.

6. நமக்குத் தீமைசெய்ய நாடினவருக்கு நாம் நன்மையே செய்ய முயலவேண்டும்.

7. நம்முடைய மௌனமானது ஆண்டவனது ஞானத்தை அடைதற்குரியதாயிருத்தல் வேண்டும்.

8. நாம்பேச வாய்திறக்குமுன் ஆண்டவனது திருநாமத்தை மனனஞ் செய்துகொண்டு பின்னால் பேசவேண்டும்.

9. கடவுளுடைய சிருஷ்டிப் பொருள்களை நாம் நோட்டமிடும்போது அவற்றினின்றும் ஏதேனுமொரு படிப்பினையை அறியும்படியான விதத்தில் கவனிக்கவேண்டும்.

10. செய்கைகளை அவற்றின் நோக்கங்களிலிருந்து நிதானித்தல் வேண்டும்.

## கலம்பகம்

### "மக்கா" என்னும் நாடகம்.

லண்டன்மா நகரிலுள்ள ஜார்ஜ் சக்ரவர்த்தியின் நாடகசாலையில் "மக்கா" என்னும் தலைப்பெயரையுடைய ஒருநாடகம் நடைபெற்று வந்தது. முஸ்லிம்களின் பரிசுத்த நகரமாகிய மக்கா என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தின் கௌரவம் வாய்ந்த நற்பெயரை ஒரு நாடகத்துக்கு வைப்பதால் பிரிட்டிஷ் ராஜ்யத்திலுள்ள முஸ்லிம்களுக்கு மனவருத்தமுண்டாகுமென்று கண்டுகொண்ட லார்டு சேம்பர்லேனாகிய வைக்கவுண்ட் ஸான் தார்ஸ்ட் என்பவர் அந்நாடகத்தின் ஆசிரியருக்கு அதன் பெயரை மாற்றிவைக்கும்படி உத்தரவிட்டிருக்கிறாரென்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகின்றோம். "இஸ்லாமிக் ரெவியூ"வும் காஜாசாஹிபின் வோக்கிங் மதப் பிரசார சபையும் ஏற்பட்டபின் மேல்நாட்டு வாசிகள் நம் இஸ்லாமார்க்கத்தின் உண்மைகளை உணரத்தலைப்பட்டதோடு முஸ்லிம்களின் எண்ணத்தையும் மதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதற்கு மேற்கூறிய விஷயமே ஒருதாரணமாயிருக்கிறது.

### ஆபிரிக்காவில் இஸ்லாம்

ஆபிரிக்கா கண்டத்திலுள்ள பூர்வ குடிகள் நமது தீனுல் இஸ்லாத்தை அதிகமாகத் தழுவிவருவதால் ஐரோப்பிய கிறிஸ்தவப் பாதிரிமார்கள் அதைக்கண்டு மனம் பொறுதவராய் அங்கிகைகொ

ண்டு அவ்வியக்கத்தைத் தடுப்பதற்குப் பெருமுயற்சி யெல்லாம் செய்து வருகின்றனர். "நம்பிக்கையின் பிரகாசம்" (Light of Faith) என்னும் ஒரு கிரிஸ்தவப் பத்திரிகை ஏப்ரில் மாதம் 13-ம் தேதியில் ஸூடான் பிராந்தியத்தில் அதிகமான மனிதர்களை அனுப்பிக் கிரிஸ்துமத பிரசாரம் செய்யவேண்டு மென்று சிபாரிஷ் செய்வதுடன் பின்வருமாறும் எழுதியிருக்கின்றது:—

"நைஜீரியா பிராந்தியத்தில் ஸூடான் யுனைட்டெட் மிஷ்ஷன் காரர்களுக்கு அதிக வசதியெல்லாம் ஏற்பட்டிருக்கிறது; இதற்கு வேண்டிய மனிதர்கள் மட்டும் முன்வருவார்களாயின் அத்தேசத்து அஞ்ஞானிகளிடம் இந்த மிஷ்ஷன் காரர்கள் அதிதுரிதமாய்த் தம்முடைய வேலையைச் செய்யலாம்." "ஆங்கிலோ இஜிப்தியன் ஸூடானிலும் இதேநிலைமைதான் காணப்படுகிறது." "மிருதமான கூட்டத்தார்களைப்பற்றிக் கவனிக்கும்படி கவர்ன்மெண்டார் அந்த மிஷ்ஷன்காரர்களுக்கு உத்தரவு செய்திருந்தும் போதுமான மிஷ்ஷனரிகள் கிடைக்கவில்லை. இந்த இரண்டு தேசங்களுக்கும் இடையில் பிரஞ்ச் ஸூடானின் ஒரு பகுதி அமைந்திருக்கிறது; அங்கே நூற்றுக் கணக்கான அஞ்ஞானிகள் பைபிள் வேதத்தைப் பின்பற்ற மார்க்கமில்லாமல் இஸ்லாத்தைத் தழுவிவருகிறார்கள். இந்த பிரஞ்சு தேசத்தில் மிஷ்ஷனரி வேலையை அதிகமாய் ஆரம்பிக்க வேண்டுமென்று ஸூடான்யுனைட்டெட்மிஷ்ஷன் காரர்கள் பெரும் பிரயத்தனங்கள் செய்து வருகின்றனர்; ஆனால் பிரஞ்சு கவர்ன்மெண்டிலிருந்து அதற்குவேண்டிய அனுமதி இன்னும் கிடைக்கவில்லை."

இதுவரையில் இஸ்லாமார்க்கத்துக்குமட்டும் உரிய இடமாயிருந்து பைபிள்வேதத்துக்கு நுழைய இடந்தராமலிருந்து வந்த பிராந்தியங்களிலெல்லாம் கிரிஸ்தவப்பாதிரிமார்கள் தங்களுடைய மார்க்கத்தைப்பரத்தப் புதிய்முறைகளையெல்லாம் அனுஷ்டிக்கப் பிரயத்தனப்படுகிறார்களென்பதை மேற்கூறிய விஷயத்தால் நன்கு தெரிந்துகொள்ளுகிறோம். இப்படிப்பட்ட சமயத்தில் நம்முஸ்லிம்கள் என்னசெய்ய வேண்டுமென்பது ஒரு முக்கிய பிரச்னையாயிருக்கிறது. ஆண்டவனிடத்திலிருந்து தாங்கள் உணர்ந்து கொண்ட உண்மைகளை நமக்கெல்லாம் நபிகள் நாயகமவர்கள் உபதேசித்த தேபோல் அவர்களிடமிருந்து அறிந்துகொண்ட அவ்வுண்மைகளை இவ்வுலகமுழுதும் பரத்த வேண்டுவது நம்முடைய முக்கியகடமையென்று நமது குர்ஆன் ஷரீபு வேதம் முறையிடும்போது நம்முஸ்லிம் சகோதரர்களையே மேற்கூறிய பிரச்னைக்கு என்னயோசனை செய்யலாமென்று விடையளிக்குமாறு விட்டு விடுகின்றோம்.



முஸ்லிம் பெண்டுகள்

நம் இஸ்லாமார்க்கத்தில் முஸ்லிம் பெண்டுகளின் நிலைமையானது மகாகேவலமாக அமைக்கப்பட்டிருக்கிறதென்று மேல் நாட்டுக் கிரிஸ்தவர்கள் அடிக்கடி தாறுமாறாக எழுதிவருகின்றார்கள். அப்படிப்பட்ட தப்பான அபிப்பிராயத்தை யுடையவர்களுக்கு டேய்லி எக்ஸ் பிரஸ் பத்திரிகையில் காப்டன் ஸி. பீ. டிக்ஸன் ஜான்ஸன் என்பவர் பின்வருமாறு எழுதியிருப்பது தக்க அறிவைப் புகட்டுமென்று நம்புகிறோம்:—

"ஐயா! சிறு குழந்தைகளின் பாதுகாப்புச் சம்பந்தமான மசோதாவை ஆதரித்துப் பேசும்போது துருக்கியர்களைப் பற்றிப் பொருத்தக் கேடாக லேடி ஆஸ்டார் என்னும் பெண்மணி தூஷித்ததை நோக்கும்போது முஸ்லிம் பெண்டுகளின் நிலைமையை நாம் செவ்வனே உணர்ந்து கொள்ளாமலிருக்கும் அறியாத்தனமானது பட்டம் பகல்போல் திட்டமாய் வெளியாகின்றது.

இவ்விஷயத்தைப் பற்றி என்னை அடிக்கடி பலர் பலவாறு வினவி வருகின்றனர்; பொது ஜனங்களின் நன்மைக்காக நான் என் அபிப்பிராயத்தை இதன் கீழ் வெளியிடுகின்றேன்; இஸ்லாமார்க்கம் வெளியாக்கப்பட்டு இப்போது 1300 வருஷங்களாகியும் இக்காலத்தில் ஆங்கிலமாதர்களுக்குக் கிடைத்திருக்கும் எல்லாச் சுதந்தரத்தையும் பாதுகாப்பையும் காட்டிலும் அதிக மேலான சுதந்தரமும் பாதுகாப்பும் முஸ்லிம் பெண்டுகளுக்கு ஆதிகாலத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்று இதைப் படிப்பவருக்கு நான் அறிவுறுத்துகிறேன். நாம் இஸ்லா மார்க்கச் சட்டங்களை இப்பொழுது ஆழமாய் ஆராய்ச்சி செய்யவேண்டியதில்லை. சிறு குழந்தைகளைக் காப்பாற்றக் கூடிய பொறுப்பானது தகப்பனைக்காட்டிலும் தாய்க்கே அதிகமாய் உண்டென்பது அதன் நியதிகளுள் ஒன்றாகும். புருஷனுடைய சொத்தில் பெண்ஜாதிக்குப் பாகமுண்டு; இறந்துபோன மகனுடைய சொத்திலும் தாய்க்குவீதமுண்டு. முஸ்லிம் பெண்களுக்குக் கிடைக்கும் சொத்தில் அவர்களுக்கு முழு அதிகாரமும் உண்டு; விவாகத்துக்கு முன் வந்தசொத்தாயிருப்பினும் அல்லது அதற்குப் பின்வந்த சொத்தாயிருப்பினும் அதில் வேறொருவருக்கும் அதிகாரமில்லை. (ஹிந்துலா முதலிய வேறு சில சட்டங்களில் இருப்பது போலில்லாமல் இஸ்லாமார்க்கத்தில் தகப்பனுடைய சொத்திலும் பெண்களுக்குப் பங்குண்டு. ப-ர்)

துருக்கி ஸமஸ்தானத்துத் தேசிய மகாநாட்டு அரசாங்கமுறையில் மேடம் காலித் எதிப் கானம் என்னும் சீமாட்டியைக் கல்வி

இலாகாவின் மந்திரியாக அமைத்தபோது அப்படிப்பட்ட உத்தியோக நியமனத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்று ஒருவரும் ஓட்டுச் சுதந்தரத்துக்காகக் கிளர்ச்சி செய்யவில்லை. அதற்காகப் பார்லியமெண்ட்டின் பிரத்தியேக சட்டமொன்றும் அவசியமாகக் காணப்படவில்லை. இம்மாது சிரோமணிதான் இவ்வுலகில் முதன் முதலாக மந்திரிப் பதவியை அடைந்திருக்கிறார்கள்."

*          *          *          *          *

இங்கிலாந்தில் ஈதுல் பித்ர்

லண்டன் மாநகருக்கடுத்த வோக்கிங்கிலுள்ள மதப்பிரசார சபையின் (இதுதான் காஜாகமாலுத்தீன் சாஹிப் அவர்களால் நடத்தப்படும் சபை) சம்பந்தமாக அவ்வூரிலுள்ள போபால் மகாராணியவர்களால் கட்டப்பட்டிருக்கும் பள்ளிவாயிலின் எதிரிலுள்ள அழகிய மைதானத்தில் மௌல்வி முஸ்தபாகான் பி. ஏ., அவர்களால் (இவர்தாம்அப்பள்ளிவாயிலின் பேஷ்இமாம்)சென்ற ரமலான் மாதத் துத்தொழுகையானது வெகு விமரிசையாக நடத்தப்பட்டது; அப்பொழுது ஹைதராபாத் நைஜாம் வம்சத்தைச் சேர்ந்த நவாப் இமாதுல் முல்க், துருக்கியிலிருந்து வந்திருந்த ரஷீத்பாஷா, அவருடைய அங்கக் காவலரான வீரர்கள், ஆப்கானிஸ்தானத்திலிருந்து விஜயம் செய்திருந்த கிலில் பாஷா, இந்தியாவிலுள்ள மங்ரோல் நாட்டின் ஸித்திக் என்னும் இளவரசர், குர்வி நாட்டிலுள்ள இளவரசர் பிரின்ஸ் அப்துல் ஹமீத், காதியானிலுள்ள ஷெய்கு யம். ஹெச். கித்வை, மிர்ஸா ஹாஷிம் இஸ்பாஹிம், டாக்டர் லியான், மிஸ்டர் இஸ்பஹானி, மிஸஸ் இஸ்பஹானி, மிஸ்டர் லவ்குரோ, மிஸ்டர் பெர்ல், முதலிய பல பிரமுகர்கள் பிரசன்னமாயிருந்தார்கள். இன்னும் இந்தியா, பர்மா, மலாய், ஸ்ட்ரெயிட்ஸ், துருக்கி, பாரஸீகம், மிஸிர் (எகிப்து), சௌதான், அரேபியா, சோமாலி தேசம், ஸீரியா (ஷாம்), முதலிய நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் பலர் ஹாஜிராயிருந்தார்கள்; ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் (ஆர்டர்லி) ஏவலாளரான நான்கு இந்திய முஸ்லிம் போர் வீரர்களும் அவ்வமயம் ஹாஜிராயிருந்ததோடு நவ் முஸ்லிம்களான ஆங்கில ஆண்களும் பெண்களும் சுமார் 200 பேர்கள் வரையில் அச்சமயம் தொழுகைக்கு வந்திருந்தார்கள். தொழுது முடிந்தவுடன் பேஷ் இமாம் அவர்கள் எழுந்து குர்ஆன் ஷரீபிலுள்ள 3-வது அத்தியாயத்தின் 14 முதல் 18 வரையிலுள்ள திருவாக்கியங்களை ஓதி இஸ்லாமார்க்கமானது இவ்வுலகத்துக்கெல்லாம் பொருத்தமான மதமாயிருக்கிறதென்று ஓர் அரிய பிரசங்கம் செய்து, இச் சன்மார்க்கத்தின் 5 முக்கிய கடமைகளைப் பற்றியும்



விரித்துரைத்தார்கள். பிரிட்டிஷ் முஸ்லிம் சொஸைட்டியின் தலைவராகிய லார்டு ஹெட்லி ஸைபுர்ரஹ்மான் அல்பாரூக் அவர்கள் வரமுடியாமற் போனது மட்டும் தான் ஒருகுறை; ஆனால் எல்லாவைபவமும் மிககேர்த்தியாக நடந்தது. பிரசங்கத்துக்குப்பின் இந்திய முறைமைப்படி விருந்தொன்றும் விசேஷமாய் நடைபெற்றதென்று இங்கிலாந்தில் வெளியாகும் 8 ஆங்கிலப் பத்திரிகைகள் சிறப்பித்துக் கூறுகின்றன.

இந்த வோக்கிங் மதப்பிரசார சபையானது 1913ல் காஜா கமாலுத்தின் சாஹிப், பி. ஏ. எல் எல். பி., அவர்களால் நிலைநிறுத்தப்பட்டது. இச்சபையானது ஆண்டவனருளால் நாளிதுவரையில் இஷாஅத்தே இஸ்லாம் (ஸன்மார்க்கப் பரவுதல்) வேலையில் ஈடுபட்டு அநேக மேல்நாட்டு ஆண்களையும் பெண்களையும் தீனுல் இஸ்லாத்தில் கொண்டுவந்திருக்கிறது. ஆதிகாலத்தில் ஸஹாபாக்களால் செய்யப்பட்டு வந்த அந்தப் பரிசுத்தமான வேலையை இச் சபையார் செய்து வருகின்றனர். இதற்குக் காரண பூதமாயிருக்கும் காஜாசாகிபின் பெருமுயற்சியால்தான் இஸ்லாத்தின் மீது மேல் நாட்டினர் சிறிதேனும் இக்காலத்தில் கவனம் செலுத்தத் தலைப்பட்டிருக்கின்றன ரென்றும், இன்றேல் இஸ்லாத்தின் அருமையும் பெருமையும் அம் மேல் நாடுகளில் மிகக்கேவலமான நிலைமைக்கு இதுவரையில் வந்திருக்குமென்றும், இப்படிப்பட்ட காஜாசாஹிப்கள் எண்ணிறந்தபேர் மேல் நாட்டுக்குச் செல்லவேண்டியது அவசியமென்றும் ஜனாப்மௌலானாயாக்கூப் ஹஸன்ஸேட் அவர்கள் ஒரு முறை சொல்லியிருக்கின்றார்கள்.

## ஆசியா வாசிகளைவிட ஐரோப்பியவாசிகள் உயர்ந்தவர்களா?

(மௌல்வி மார்மடியூக் பிக்தாலின் பேச்சும் மௌலானா முஹம்மதலியின் பிரசங்கமும்)

பம்பாய் நகரில் சென்ற ஜூலை மீ 6வ. கூடிய ஒரு பொதுக் கூட்டத்தில் மௌலானா மௌல்வி மார்மடியூக் பிக்தால் அவர்களின் அக்ராஸனத்தின்கீழ் தேச பக்தராகிய மௌலானா முஹம்மதலி அவர்கள் அடியிற்கண்ட வண்ணம் ஓர் அரிய பிரசங்கம் செய்தார்கள்:—

### ஜனாப் பிக்தாலின் முன்னுரை

கலீபத் அரசராகிய துருக்கி சுல்தான் நன்மை செய்தாலும் தீமை செய்தாலும் அவருடைய கிருத்தியத்தை யெல்லாம் இந்திய முஸ்லிம்கள் ஆதரித்து வருகின்றார்களென்று நம்மைச் சுட்டிக்

காட்டிக் குற்றஞ்சாட்டிட் "டைம்ஸ் ஆப் இந்தியா" என்னும் பம்பாய்ப் பத்திரிகை ஒரு வியாசம் எழுதியிருக்கிறது. முன்னொருமுறை பகுதாதிலிருந்த மௌலானா மௌலவி ஒருவரைக்கண்டு, கெட்ட காரியம் செய்யும் சுல்தானை முஸ்லிம்கள் கலீபாசாக ஒத்துக்கொள்ளவேண்டியது அவசியந்தானோ வென்று கேட்டபொழுது, அவர் எவ்வாறிருந்த போதிலும் சுல்தானை ஆதரிக்கவேண்டியது முஸ்லிம்களின் கடமை யென்று அந்த மௌல்வி கூறிவிட்டார். ஆனால் இந்திய முஸ்லிம்கள் நியாயமாகத்தான் துருக்கி சுல்தானை ஆதரிக்கின்றனரா அல்லது அநியாயமாக ஆதரிக்கின்றனரா வென்று நாம் இப்பொழுது கவனிக்கவேண்டும். துருக்கி சுல்தான் தவறான வழியில் சென்றதாகவே வைத்துக்கொள்ளுவோம்; துருக்கி ராஜ்யமும் தப்பாகவே நடந்ததாக வைத்துக்கொள்ளுவோம். ஆயினும் இவ்வுலகில் மற்ற நாடுகளைக்காட்டிலும் எங்கள் துருக்கியானது அதிகமான பிழை யொன்றும் செய்துவிட்டதாகச் சொல்வதற்கில்லை. 'நீங்கள் ஒருவித அநீதியும் செய்ய வில்லையா'? என்று ஒவ்வொரு நாட்டினரையும் நான் கேட்கின்றேன். 'நீங்கள் ஆசியாவிற்குத் தீங்கிழைக்கவில்லையா'? என்று என்னை ஆளும் ஜாதியாரை நான் கேட்கிறேன். அநீதி செய்ததாகச் சொல்லப்படும் துருக்கியின் நிலைமையைவிட என்னுடைய அரசாங்கத்தின் நிலைமை தற்போது அதிக அபாயகரமான கதியிலிருக்கிறது. ஜிஹாத் என்னும் பதத்தைக் கேட்டவுடனே அவர்கள் அதிக திகில்கொள்ளுகிறார்கள்; ஆனால் கலீபாசர் அக்ரமம் செய்வாராயின் அவருக்காக முஸ்லிம்கள் ஜிஹாத் செய்ய மாட்டார்கள். நன்மைதீமைகளை நன்குணர்ந்துதான் ஜிஹாத் செய்ய ஆரம்பிப்போம்; சத்தியத்துக்காக ஜிஹாத்செய்ய எத்தனித்து விட்டால் இங்கிலாந்திலிருந்தாலும் சரி, இந்தியாவிலிருந்தாலும் சரி, முஸ்லிம்களெல்லோரும் ஜிஹாத் செய்தே தீரவேண்டும். ஹிந்துநண்பர்களும் பாரஸீக நாட்டுச் சகோதரர்களும் அதற்கு உதவி புரியவேண்டும். இவ்விஷயம் ஒருமதத்தினருக்கு மட்டும் சம்பந்தப்பட்டதெனக் கருதாமல் ஆசியா வாசிகளனைவருக்கும் அவசியமானதென்றே கொள்ளவேண்டும்.

ஐரோப்பா கண்டத்திலிருந்து முஸ்லிம்களும் துருக்கியர்களும் விரட்டப்பட்டு விட்டார்கள். ஏனெனின் இவர்கள் ஆசிய வாசிகளாம். ஆசிய வாசிகள் ஐரோப்பாவிலிருக்கக் கூடாதென்பதற்கு அந்த ஐரோப்பியர்கள் எந்த வழியில் உயர்ந்தவர்களென்பது நமக்கு விளங்கவில்லை. ஈசு (அலை) நாதர் ஆசியாவில் அவதரித்தார்; இவரைப் போன்ற சற்குண சீலர்கள் இன்னும் பலர் ஆசியாவில் இருக்கலாம்; ஆனால் ஐரோப்பா கண்டத்திலோ ஏசுவின் குணமு



டையோர் ஒருவரைக் காண்டலரிது. குளிர்ச்சியான பிரதேசங்களிலுள்ளவர்கள் உஷ்ண தேசத்தாரால் செய்ய முடியாத பல காரியங்களைச்செய்து முடிக்கக்கூடும்; இதனால் அவர்கள் பெரியவர்களாகி விட மாட்டார்கள். அல்லாஹுத்த ஆலா நமக்கு உஷ்ணப்பிரதேசத்தை அளித்திருக்கிறான். குளிரிலே பிறந்து குளிரிலேவளர்ந்து குளிரிலே வாழ்பவர் எப்பொழுதும் சுயநலப் பிரியர்களாகவே இருக்கின்றார்கள். இதற்கு இந்தியர் அவர்களுடைய சுயநலத்திற்காகச் சிறிது மன்னிப்புக் கொடுக்கவேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் ஆசியாகண்டத்திற்கு வந்தால் ஆசியர்கள் அயோக்கியர்களென்று கூறுகின்றார்கள்; அன்றியும் அவர்கள் தந்நலங்கருதுவோராதலின் ஆசிய வாசிகளை நம்பலாகாதென்று நம்மை மேல் நாட்டினர் கூறுகின்றனர். இப்படிக் கூறுவது பெருந்தவறேயாகும். துருக்கிதேசம் அரிய பெரிய தியாகங்களை யெல்லாம் செய்துவந்த பொழுது நான் அத்தேசத்திலிருந்தேன். துருக்கியர் கிளர்ச்சி செய்வதில் காட்டிய நன்னெறி, அதற்குமுன் அவர்கள் வகித்திருந்த பொறுமை இவற்றை யெல்லாம் கவனிக்குங்கால் அம்மாதிரிப் பொறுமையும் நெறியும் ஐரோப்பியர்களுக்கு ஒருபோதும் வாராவென்று நான் உறுதியாய்க்கூறுவேன். ஆசிய வாசிகள் கல்நெஞ்சுடையவர்களென்று ஐரோப்பியர் பழிதூற்றுவதுண்டு. ஆனால் துருக்கியரைப் போலவே இந்தியாவிலும் தெய்வபக்தியும் மானிடர்களின் சகோதர பாவமும் மேலோங்கி நம் இந்தியர்கள் கிலாபத் இயக்கத்தை அதிக அமைதியுடன் நடத்திவருகின்றனர்; இந்த இயக்கத்திற்கு ஹிந்துக்களும் பாரஸீகர்களும் ஆதாவளித்து வருகிறார்கள்; இது மிகவும் பாராட்டத்தக்கதே.

## மௌலானாமுஹம்மதலியின்பிரசங்கம்

பின்னர் மௌலானா எழுந்து பின்வருமாறு பிரசங்கம் செய்தார்: இந்தியர்கள் தங்கள் தேசத்தையே கவனித்து வருகிறார்களன்றித் தமது தேசத்துக்கப்பால் என்ன நடக்கிறதென்று சிறிதும் கவனிப்பதே கிடையாது. வடக்குத் திசையில் இமயமலையானது இருந்து கொண்டு தடைசெய்தாலும் கூட அதற்கப்பாலுள்ள நாடுகளின் விஷயத்தில் இந்தியர்கள் அக்கறை காட்டவேண்டியது அவசியந்தான். இந்தியாவில் முஸ்லிம்களைப்போல் இதரவகுப்பினரும் அன்னியதேச விஷயங்களை அதிகம் கவனிப்பதேயில்லை. ஆசியாவில் சீனாவைவிட வேறெந்தத் தேசமும் சுதந்தரமான ராஜபாரத்தைக் கொண்டு நடைபெறவில்லை. ஜப்பான் சுதந்தர நாடாயிருந்தும் அது பிற நாடுகளுக்குப் பயந்தே யிருக்கிறது. இந்தியர்கள் இனிச் சற்று விசாலமான நோக்கத்தோடு, இந்திய தேசாபிமானத்தை

மட்டும் கருதி இதரநாடுகளைப் புறக்கணிக்காமல் ஆசியாகண்டமுழுதும் தமது கவனத்தையும் சம்பந்தத்தையும் அதிகப்படுத்தவேண்டும். ஐரோப்பியர்கள் நாலு பக்கங்களிலும் தமதுவலையை வீசிவிட்டார்கள். மேலும் கொஞ்சங்கொஞ்சமாகத் துருக்கியின் மாகாணங்களை அதனிடமிருந்து அப்புறப்படுத்திவிட்டார்கள். ஐரோப்பிய தேசத்தார் இப்பிரதேசங்களை ஆக்ரமிக்காமல் நடுவில் தடையாக நின்று அத்தேசங்களையெல்லாம் பாதுகாத்துக்கொண்டிருந்தது துருக்கி ஒரு தேசமேயாகும். துருக்கியர் தாம் முதன் முதல் ஐரோப்பாவில் சேனைகளை அமைத்துக்கொண்டார்கள். அதன் சேனை அமைப்பைக் கண்டே அதைப்போல் ஐரோப்பாவிலுள்ள இதரநாட்டினரெல்லாம் தங்கள் சேனைகளை அமைத்துக் கொண்டார்கள். இஸ்லாமார்க்கத்துக்குத் துருக்கி என்ன செய்திருக்கிறதென்று நீங்கள் கேட்பீர்களாயின் துருக்கி தேசம் ஒன்றே சென்ற பல நூற்றாண்டுகளாக உண்மையான முஸ்லிம் வாழ்க்கையைப் பெற்று இஸ்லாத்தின் சரியான பாதுகாவலனாயிருந்து வந்திருக்கிறதென்று நான் உங்களுக்குத் திடமாய்க் கூறுவேன். அராபியர் பாரஸீகர் ஆகிய இவர்களைக்காட்டிலும் இஸ்லாமத முன்னேற்றவிஷயத்தில் அதிகம் பாடுபட்டு உழைத்தவர்கள் துருக்கியக் குடிகளேயாவர். இவர்கள் அதிகதெய்வபக்தியும், சாந்தகுணமும், மதநெறிப்படி நடக்கும் ஒழுக்கமும் உடையவர்களாயிருக்கின்றார்கள். இவர்கள் யுத்தம் நிகழுங்காலங்களில் ஆயுதபாணிகளாகச் சென்று போர்புரிந்து மீண்டு வந்தவுடன் தமது விவசாயத் தொழிலைக் கவனித்துக்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட மகாராஜ்யமாகிய துருக்கிக்குள் அதன் எதிரிகள் சாந்தமாகப் பிரவேசித்து அதன் பாக்கியத்தை அடியோடு கெடுத்து விட்டார்கள்.

பாரஸீகம் தன்னுடைய கலை ஞானங்களை வட இந்தியாவுக்கு அதிகமாய் வழங்கியிருக்கின்றது; இதற்கு இந்தியாவானது என்நாளும் நன்றி செலுத்தவும் உதவி புரியவும் கடமைப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பாரஸீகதேசமானது கிலாபத் ராஜ்யமாகிய துருக்கியின் செல்வாக்கையும் மதக்கொள்கையையும் மதித்திருந்தது. அப்படிப்பட்ட துருக்கியும் பாரஸீகமும் இங்கிலாந்திற்குப் பல யுத்த சமயங்களில் உதவி புரிந்திருக்கின்றன. (இந்தியர்களும் சென்ற ஐரோப்பிய மகாயுத்தத்துக்கு வேண்டியமட்டும் உதவி செய்திருக்கின்றனர். ப-ர்) ஆனால் இங்கிலாந்தோ துருக்கிக் கொன்றும் பதிலாக உதவிபுரியவில்லை. ஆனால் பிரிட்டிஷார் தங்கள் கொள்கையைச் சிறிது சிறிதாக மாற்றிக்கொண்டு நாளடைவில் துருக்கிக்கு விரோதமாகக் கிளம்பி விட்டனர்.



## துருக்கியின்மீது பிரிட்டிஷார் கொண்டிருக்கும் மனப்பான்மை.

பிரிட்டிஷார் துருக்கியர்மீது முன்கொண்டிருந்த மனப்பான்மையை நீண்ட காலத்திற்கு முன்னரே மாற்றிக்கொண்டு விட்டார்கள். டிஸ்ராலி காலத்திலிருந்து ஸாலிஸ்பரி பிரபு, ஸ்ரீ கிளாட்ஸ்டன், லாயிட்ஜார்ஜ் இவர்கள் காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக இங்கிலாந்து தேசமானது துருக்கியின்மீது கொண்டிருந்த நேசப்பான்மையை விடுத்து அதன் சத்துருவாகிவிட்டது. துருக்கிக்கு விரோதமான ருஷ்யாவுடன் இங்கிலாந்து சிநேகம் செய்துகொண்டது. லாயிட் ஜார்ஜ் கொடுத்த வாக்குறுதிகளெல்லாம் பொய்யாய்ப்போய்விட்டன. இப்படி வாக்குறுதி மாறிய பிரிட்டிஷ்ராஜ தந்திரிகள் பலராவர். லாயிட்ஜார்ஜ் மட்டுமல்ல; இவருக்கு முன்னால் கிளாட்ஸ்டனும் கிரேயும் இம்மாதிரியே தமது வாக்குறுதியைப் பங்கப்படுத்தியிருக்கிறார்கள்.

நான் பிரான்ஸுக்குச் சென்றிருந்தபோது ஸிரியாவை ஆக்ரமித்துக்கொண்ட அக்ரமத்தைப் பற்றிப் பேசினேன். பிரான்ஸுக்காரர்களுக்கு எப்பொழுதும் ஸிரியாவிலும் ஹிஜாஸிலும் ஆபத்து நிகழ்ந்து வருகின்றது. அதன் வேகம் அல்ஜீரியா முதலிய முஸ்லிம் பிரதேசங்களிலும் பரவி வருகின்றது.

பாரிஸில் திரிபோலியிலிருந்து வந்திருந்த ஜனங்களைக்கண்டு பேசிக்கொண்டிருந்தேன். ஸிரியாவை பிரான்ஸுக் காரர்கள் விட்டுப்போகாவிடின் தாங்கள் டூனிஸிற்குச் சென்று கிளர்ச்சிசெய்து அங்குள்ளாரைச் சுதந்தரமுள்ளவராக ஆக்கிவிடுவதாய் அவர்கள் கூறினார்கள். 1881ம் வருஷத்தில் ஆங்கிலேயரால் பிடித்துக்கொள்ளப்பட்ட எகிப்துதேசத்தை இந்தியர்கள் கவனித்துப்பார்க்கட்டும். பிரிட்டிஷார் இதை விட்டுவிடுவதாக வாக்குறுதி கூறினபிறகும் கூட இன்னும் தங்கள் ஆளுகையின் கீழ் இத்தேசத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எகிப்தியர்கள் இதற்கென்ன செய்தார்கள் தெரியுமா? ஐரோப்பியர்களுக்குத் தங்கள் விஷயங்களை அறிவித்துப் பார்த்தார்கள்; இதனால் அவர்களே முட்டாளாகிவிட்டார்கள். பிறகு இந்திய முஸ்லிம்கள் எந்த முறையைக் கையாண்டிருக்கிறார்களோ அந்த முறையையே தாமும் கையாள வேண்டுமென்று கருதினார்கள். ஈடுகொடுக்கவேண்டுமென்னும் வியாஜத்தைச் சொல்லி இங்கிலாந்தானது மெஸபொட்டேமியாவையும் பிரான்ஸானது ஸிரியாவையும் எடுத்துக் கொண்டன. இங்கிலாந்துடன் பிரான்ஸ் ஏற்பாடு செய்துகொண்டு பிரான்ஸுக்காரர்கள் மொராக்கோவைப் பற்றிக்

கொண்டு விட்டார்கள். ஆனால் ஐரோப்பாவில் பைரென்னஸ் வரையில் சென்று வெற்றிக்கொடி நாட்டி ஜிப்ரால்டரைப் பிடித்து ஜயங்கொண்ட ஜாதியார் நீண்ட காலைக்குப் பிறருடைய கட்டுக்குள் அடங்கியிருக்க மாட்டார்கள். ஒவ்வொரு துருக்க மாகாணமும் ஒன்றன்பின் ஒன்றாய் ஒழிந்துவிட்டன. துனிஸ் போய் விட்டது; அல்ஜீரியா போய் விட்டது; எகிப்து போய் விட்டது. இப்படியே பற்பல மாகாணங்கள் துருக்கர் கையினின்றும் நழுவிவிட்டன.

நான் ஸ்ரீ லாயிட் ஜார்ஜுடன் சம்பாஷணை செய்துகொண்டிருந்தபோது, 'துருக்கியர் அர்மீனியர்களைத் தாக்கிச் சித்திரவதை புரிந்தார்களென்று எண்பித்துவிட்டால் நான் துருக்கிவிஷயத்திலேயே தலையிடாமல் விட்டுவிட்டுப் போய் விடுகிறேன்,' என்று கூறினேன். துருக்கியர் தாங்கள் நிரபராதிகளென்று ருசுப்படுத்திக்கொள்ளக்கூட பிரிட்டிஷார் அவர்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. துருக்கியர்கள் நீண்ட காலமாக அதிக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஜீவகாருண்யமுள்ளவர்கள். ஒரு நாயைக்கூடக் கொல்ல மனமில்லாதவர்கள். இப்படிப்பட்ட துருக்கியர் மனிதப் பிராணியைக்கொல்லத் துணிவார்களா? அர்மீனியர்கள் எந்த இடத்திலும் அதிகம் பேரில்லை. அப்படிச் சிறுபான்மையாயிருக்கும் ஜனங்களைத் துருக்கியர்கொல்வரோ? அவர்கள் சிறுபான்மையினராயிருந்தும் துருக்கிக்கு முக்கியமானதொரு பெரியமாகாணத்தைத் தங்களிடம் கொடுத்துவிடவேண்டுமென்று யாசித்து வருகின்றனர். அர்மீனியர்களும் வீரியவான்களே யாவர். ஆனால் சமீபயுத்தத்தில் அவர்கள் நிரபராதிகளான துருக்கியர்களை அநியாயமாய்ப் படுகொலை புரிந்துவந்தார்கள். இந்த அர்மீனியர்கள் இங்கிலாந்தை வேண்டிக்கொள்ள ஆங்கிலேயரின் நேசர்களான அர்மீனியர்கள் சமாதானக்கான்பரன்ஸில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். துருக்கியைப் படுகொலை செய்யும்படி அர்மீனியர்களுக்கு கிரீஸிலுள்ள ஜெனிவா—லாஸினிட மிருந்து பணம் அனுப்புவிக்கப்பட்டது. அர்மீனியர்கள் செய்த பிரேரபணைகளை இங்கிலாந்தும் பிரான்ஸும் விரும்பவில்லை. அதன் காரணம் அங்கே பொருள் சம்பாதிக்க எவ்வித ஆதாரமுமில்லை. அமெரிக்காவை அர்மீனியர் உதவிபுரியக் கேட்டபோது அது இனிமேலும் தான் முட்டாள் தனத்தில் அகப்பட்டுக் கொள்ளக்கூடாதென்று பதிலளித்து விட்டது.

[இப்பிரசங்கத்தில் அக்ராஸனம் வகித்த ஜனாபெ ஆலி முஹம்மது மார்மடியூக் பிக்தால் என்பவரைப்பற்றிய விவரமெல்லாம் முன் 194-ம் பக்கத்தில் விரிவாய்க் காணப்படும். இவர் கனம் காஜா சாஹிபால் தீனுல் இஸ்லாத்தைத் தழுவியவர்; தற்போது "பாம்பே



கிரானிக்கிள்" என்னும் இங்கிலீஷ் தினசரிப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்து வருகிறார்.

மேற்கூறிய கிலாபத் விஷயத்தைப்பற்றிய உண்மைக் கொள்கையை வேத ஆதாரங்களுடன் அறிய விரும்பும் ஒவ்வொரு ஹிந்து முஸ்லிம் சகோதரரும் எம்மால் வெளியிடப்பட்டிருக்கும் "முஸ்லிம் கிலாபத்" என்னும் தமிழ் நூலைப் பார்வையிடுவார்களாக. இதன் விலை அணா 4 தான். ப-ர்]

---

## நபிகள் நாயகம் ஓர் உண்மை முஸ்லிம்

"முகம்மதியமார்க்கம்" என்று சொல்லப்படுகின்ற மதத்தின் கொள்கைகள் என்ன என்ன வென்று ஓர் ஆங்கிலமாது ஒரு சமயம் தன்னுடைய பாதிரியை நோக்கிக் கேட்டாள். அவ்வினாவிற்கு அந்தப் பாதிரியார் கொடுத்த விடையானது நாமெல்லாம் நன்கு நோக்கத் தக்கதாயிருக்கிறது: "முகம்மது (ஸல்) என்பவர் ஓர் உண்மையான மனிதராயிருந்தார்; அவர் ஆண்டவனை அதி பக்தியுடன் பூஜித்து வந்தார்; ஆனால் அவர் மாதா கோவிலின் மகிமையான அனுக்கிரகங்களை மட்டும் மதிக்காமலிருந்து வந்தார்; ஆதலின் கஷ்டத்திலான ஜீவன்களுள் இவரும் ஒருவராய்ச் சேர்ந்து விட்டார்," என்று கூறி மறுபடியும் அப்பாதிரியார் சொல்லத் தொடங்கினார்: "கிறிஸ்துவின் உபதேசங்களை நாம் பின்பற்றுவதைக் காட்டிலும் அதிகமாக அந்த நபியின் உபதேசங்களை முஹம்மதியர்கள் பின்பற்றுகிறவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் கடவுளின் மீதும் கடைசித் தீர்ப்பு நாளின் மீதும் நம்பிக்கை யுடையவர்கள்; அவர்களுடைய சன்மார்க்கமானது மேலானதாயிருக்கிறது," என்றார். அதற்கு அந்த மாது, "அவர்களின்விஷயம் அவ்வாறாயின் அம் மார்க்கத்தினரிடத்தில் மிஷனரிகளை அனுப்புவதற்காக ஏன் ஏராளமான திரவியத்தை வீணாக்கவேண்டும்?" என்று தடுத்துக் கேட்டாள். அதற்கு அந்தப்பாதிரியார், "ரக்ஷண்யம் பெறுவதாயின் சிலுவையில் அறைபட்ட அந்த ஒருவரையே (ஏசுநாதரையே) நம்பவேண்டுமென்று உபதேசிப்பதற்காக மிஷனரிகளை அனுப்ப வேண்டும்," என்று மறுமொழி கூறினார்.

இவ்விஷயத்தைக்குறித்து நாம் இங்குச் சிறிது ஆராய்ச்சி செய்து பார்ப்போம். "முஹம்மது (ஸல்) என்புவர் ஓர் உண்மையான மனிதராயிருந்தார்; அவர் ஆண்டவனை அதிபக்தியுடன் பூஜித்து வந்தார்," என்று அந்தப் பாதிரியாரே ஒத்துக்கொள்ளுகிறார். இவர் சொல்வது மெய்யாயின், இப்படிப்பட்ட உயிர்வாழ்க்கைக்

குச் சன்மானம் கிடைக்கக் கூடுமாயின், அது அவர்க்க மாகத்தானிருக்கவேண்டும்; மேற்கூறியபாதிரியார் "உண்மையான மனிதர்" என்று நம் நபிபெருமானாரைப் புகழ்ந்திருக்கும் தன்மையை நோக்கும்போது, மனிதவர்க்கத்தாருக்கு ஒருவர் செய்யக் கட்டுப்பட்டிருக்கும் கடமைகளெல்லாம் அந்தப்புண்ணிய மூர்த்தியிடம் நிறைந்திருப்பதாய்ப் புலப்படவில்லையா? எங்கள் நபிகள் நாயகமவர்கள் இவ்வுலகில் அவதரித்தது முதல் இகலோக வாழ்க்கையை விட்டு நீங்கும் வரையில் மெய்யாகவே "ஓர் உண்மை மனிதராக" இருந்து வந்தார்களென்பது எம்முஸ்லிம்களுக்கு நன்கு தெரிந்தவிஷயமே. "நானும் உங்களைப்போல் ஒரு சாதாரண மனிதன்தான்"—(குர்ஆன்), என்று எம்பெருமானார் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஏசுநாதர் தம்மைக் கடவுளென்றும் கடவுளுடைய குமாரரென்றும் சொல்லிக்கொண்டாரென்று இக்காலத்திய கிறிஸ்தவர்கள் நம்புவதேபோல் எங்கள் நபிகள் பிரான் ஒருபோதும் தங்களைப்பற்றிக் கடவுளென்றாவது கடவுளுடைய குமாரரென்றாவது அல்லது கடவுளுடைய பக்தனென்றாவது சொன்னதேயில்லை. ஆனால் மேற்சொன்ன பாதிரியார் புகழ்ந்திருப்பது போல் எம்பெருமானார் தம்மை "ஓர் உண்மை மனிதர்" என்றே சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய பாட்டனாராகிய அப்துல் முத்தலிபுடன் எவ்வாறு தங்கள் இளமைப்பருவத்தைக் கழித்து வந்தார்களென்றும் மற்றவர்களிடத்தில் அவர்கள் எப்படி நடந்து கொண்டார்களென்றும் நாம் இப்பொழுதும் சிரத்தையாகப் படிக்கின்றோம். அவர்களுடைய சிறியதகப்பனாராகிய அபூதாலிபுடன் எவ்வண்ணம் காலங்கழித்து வந்தார்களென்றும் இவர்கள் பாலியமாயிருக்கும்போது மக்கத்திலுள்ள மனிதர்களெல்லாரும் எப்படி இவர்களை நன்கு மதித்தார்களென்றும் நன்குதெரிந்து கொள்ளுகிறோம். மக்கத்தைச் சூழ்ந்துள்ள மைதானங்களில் நமது நாயகமவர்கள் இளமையில் எவ்வாறு ஆடுமேய்த்துக்கொண்டும் ஆண்டவனைத் தியானம் செய்து கொண்டும் இருந்தார்களென்றும் தெரிந்துகொள்ளுகிறோம்; அப்பொழுதெல்லாம் அவர்களுடைய மனமானது 'மனிதன் எங்கிருந்து வருகிறான்? அவன் மீண்டும் எங்கே போகிறான்? அவன் இவ்வுலகில் செய்யவேண்டிய காரியமென்ன?' என்று சிந்தித்துக்கொண்டிருந்தது. பிறகு அவர்கள் வியாபார நிமித்தமாக வெளிநாடுகளுக்கு எப்படிச் சென்றார்களென்ற சரித்திரத்தை இன்றைக்கும் படிக்கிறோம். கதீஜா (ரலி) அவர்கள் நாயகத்தினிடத்தில் எவ்வளவு அன்போடும் அமைதியோடும் நடந்து வந்தார்களென்றும் அப்பெண்கள் சிரோமணிக்கு இவர்கள் எவ்வளவு அருமையான மணமகனாயிருந்தார்களென்றும் நன்றாகப் படித்தறிந்துகொள்ளுகிறோம். ஒருமுறை கதீஜா நாயகமவர்கள் தங்கள் உப்பரிகையிலுள்ள சாளரத்தின் வழியே நபிபெருமானாரைக்காணவேண்டுமென்று எட்டிப் பார்த்தபொழுது நெடுந்தூரத்தில் அவர்களுடைய தலைக்குமேல் அமரர் ஒருவருடைய சிறகுகள் விரிக்கப்பட்டிருந்தது போல் காணப்பட்டதை நாம் இன்றைக்கும் அப்பெண்மணியின் வாய்மொழியால் தெரிந்துகொள்ளவில்லையா? பிறகு இவ்வண்டகோளத்தின் இரகசியத்தை அறிய விரும்பி அவர்கள் ஹிரா என்னும் குகைக்குள் சென்று அல்லும் பகலும் அகோரதவம் புரியவில்லையா? காடு முரடான கற்கள் நிறைந்த இந்த ஹிராமலைதான் பிறகு அல்லாஹுத் தஆலாவின் ஒளியைப் பெறும்படியான நற்றவம் பெற்றது. அக்குகைக்குள் இரவும் பகலும் எம்பெருமானார் தங்கியிருந்து ஆண்டவனுடைய இரகசியத்தை அறிய அருந்தவம் புரிந்தார்கள். அக்காலத்திலெல்லாம் அவர்களுடைய அருமைப்பத்தினியாகிய கதீஜாநாயகமவர்கள் தங்கள் பர்த்தாவுக்கு எவ்வாறு ஆகாராதிகளைக்கொண்டு சென்றார்களென்று நாம் தக்க கிரந்தங்கள் மூலமாய்த் தெரிந்து கொள்ளுகிறோம். நபிபெருமானாரவர்கள் சுகமாகவும் அதிக இன்பமாகவும் தங்களுடைய வாழ்நாளைக்கழிப்பதற்குப் போதுமான செளகரியங்களெல்லாம் இருந்தும், தங்களுடைய உலகவாழ்க்கையின் இன்பங்களை ஒன்றுக்குப்பத்தாகப் பெருக்கிக்கொள்வதற்கு வேண்டிய பண வசதிகளெல்லாம் அமைந்திருந்தும் அவர்கள் ஏனை அரபிகளைப் போல் இவ்வுலக இன்பத்தில் காலங்கழிக்க மனமில்லாமல் அதிக சிக்கனமாக ஜீவனம் செய்துகொண்டு அந்த ஹிராவின் கரடுமுரடான கற்களின்மீது அநேகநாள்கள் வரையில் படுத்துறங்கிவந்தார்கள். ஆனால் அவர்கள் இல்லறத்தை வெறுத்துத் துறவறத்துக்கு அடியோடு சென்றுவிட்டதாக ஒருவரும் தவறாக எண்ணவேண்டாம். எங்கள் முஹம்மது நபியவர்கள் (இவர்களுக்கு இறைவனருளும் அவனன் மாராயமும் உண்டாகுக) இல்லறத்திலிருந்து கொண்டே துறவறத் தர்மத்தையும் நன்கு நடத்திவந்தார்கள்.



தங்களுடைய ஊரார்களுடன் கலந்துகொண்டு எம்பெருமானார் எல்லாரையும்போல் சர்வசாமான்யமாய் நடந்துவருவார்கள்; நேசத்தோடொத்து வாழ்ந்துகொண்டும் ஊர்ஒப்புரவில் கலந்துகொண்டும் எல்லோருக்கும் புத்திமதி சொல்லிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் "ஓர் உண்மை மனிதராக" இருந்து வந்ததனால் பன்னிரண்டு வயதுக்குள் தம்முடைய ஊரார்களால் 'அல் அமீன் (சரியான நியாயஸ்தர் அல்லது நம்பிக்கைக்குரியவர்) என்று அழைக்கப்படும் படியான

யோக்கியதையையும் தன்மதிப்பையும் பெற்றார்கள். ('அல்-அமீன்' என்பது போன்ற அரிய கௌரவப்பட்டத்தை இவ்வுலகில் எமது நபிகள் நாயகத்தைத் தவிர வேறு யாரும் இதுவரையில் அடைந்ததில்லை என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்; வேறெந்த நபியாவது மகானாவது மகாத்மாவாவது இப்படிப்பட்ட பட்டத்தைப்பெற்றதில்லை. ப-ர்.) இவர்களுக்கு வயது நாற்பதானபோது மேற்கூறிய ஹிராவென்னும் இருண்ட குகைக்குள் லைலத்துல்கத்ர் என்னும் மாட்சிமைதங்கிய இரவில் ஆண்டவனுடைய ஒளியானது முதன் முதல் அவர்கள் மீது இறங்கிற்று. உலகத்துக்கெல்லாம் ஒரே மதமாகிய இஸ்லாமார்க்கத்தை எல்லோருக்கும் போதிக்கும்படியான தேவகட்டளை இந்தக் கடைசி நபிக்குத்தான் கொடுக்கப்பட்டது. அன்றுமுதல் இன்றளவும் அவர்கள் அல்லாஹுத் தஆலாவின் திருத்தூதராய் விளங்கி வருகின்றார்கள். ஆண்டவன் மனிதவர்க்கத்தாருக்குக் கடைசியாக அளிக்க நினைத்திருந்த சம்பூர்ணமான அநுக்கிரகங்களையெல்லாம் இவர்கள் மூலமாகத்தான் வெளியிட்டருளினான். இங்கே நாம் அவர்களுடைய யோக்யதையைப்பற்றி யோசிக்கவேண்டும். அதிபால்யத்தில் மக்கத்து மாந்தரால் "அல் அமீன்" என்றழைக்கப்பட்டவர்கள் பின்னர் வயது முதிரமுதிர யோக்யப் பொறுப்பும் நம்பிக்கையும் அதிகமாய் வளர்ந்தோங்கி நாற்பதாவது வயதில் நாயனுடைய நன்னம்பிக்கைக்குரிய நபிப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்கள். அதற்குமுன் பன்முறைகளில் அந்த அரபு தேசத்துப் பாலைவனத்தில் ஆண்டவனுடைய அருள்வாக்கு வெளியானதே போல் எங்கள் நபிபிரானுடைய காலத்திலும் அவ்வனாந்தரத்திலேயே அல்லாஹுத் தஆலாவின் அருட்பரஞ்சோதியானது உதயமாயிற்று. அப்பொழுது ஆண்டவனுடைய அருள் வாக்காகிய இடியேற்றால் இவ்வுலக முழுதும் கிடுகிடென நடுநடுங்க ஆரம்பித்தது. ஏசுநாதருக்குப்பின் அறுநூறு வருஷகாலம் வரையில் இவ்வுலகை மூடிக்கொண்டிருந்த அஞ்ஞானமாகிய அந்தகாரம் அந்த மாட்சிமையான இரவுக்குப் பின் அடியோடு ஒழியத் தலைப்பட்டது; முழுமக்கள் சிரத்திலிருந்த மூட பக்தியெல்லாம் முற்றிலும் தொலையத்தலைப்பட்டது. நாம் ஒவ்வோராண்டிலும் ரமலான் மாதத்தின் இருபத்தேழாவது தினத்தில் கொண்டாடும் மாட்சிமையான இரவில், அந்த இரவானது இவ்வுலகின் கன்னிருளை நீக்கி ஞானப்பேரொளியை மூட்டுவதற்கு எவ்வளவு தூரம் காரண பூதமாயிருந்த தென்பதைப்பற்றி நாம் இன்றைக்கும் ஆண்டவனுக்கு நன்றி பாராட்டுவதில்லையா? இவ்வுலகத்திலுள்ள மனித கோடிக்கு இம்மாட்சிமை



யான இரவானது எவ்வளவு சிலாக்கியமான இரவாயிருக்கிறதென்பதை நீங்கள் சற்று நிதானித்துப் பாருங்கள். ஒரு நபிக்குப்பின் மற்றொரு நபியாக எண்ணிறந்த நபிமார்கள் இவ்வுலகில் தோன்றி மறைந்தார்கள். அந்த அந்த நபிக்குப்பின் அவரவருடைய கூட்டத்தார்கள் தங்கள் நபிமார்களின் உபதேசங்களையெல்லாம் தலைகீழாகப் புரட்டிக்கொண்டே வந்திருக்கிறார்களென்பது இவ்வுலகமறியக்கிடக்கும் உண்மையன்றோ? தங்கள் தங்களுடைய சௌகரியங்களுக்குத் தக்கபடி தங்களுடைய வேதங்களையும் ஆகமங்களையும் மாற்றிக்கொண்டே வந்திருக்கிறார்கள். எம் நபிகள் நாயகத்துக்குமுன் தோன்றிய எல்லா வேதங்களும் ஆகமங்களும் அடியோடு மாற்றப்பட்டுப் போய்விட்டன. அப்பொழுதிருந்த மனிதர்களெல்லோரும் பழய வேதங்களில் "வாக்களிக்கப்பட்ட தீர்க்கதரிசி" எப்பொழுது அவதாரம் செய்வாரோவென்று ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார்கள். அப்படி எதிர்பார்க்கப்பட்ட தீர்க்க தரிசியானவர் கடைசியில் பாரான் வனாந்தரத்தில் (அரபு நாட்டில்) திருவவதாரம் செய்தார். அப்பொழுதுதான் அல்லாஹுத் தஆலாவின் அருள் வாக்கானது அம்மணற் பிரதேசத்தில் "கணீரென்று" தொனிக்க ஆரம்பித்தது. ஆண்டவனால் அளிக்கப்பட்ட நபிப்பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் நபிபெருமானார் மக்கமா நகரில் என்ன செய்துகொண்டிருந்தார்கள், தெரியுமா? கடவுளுடைய கட்டளையைக் கம்பீரமாய் வெளிப்படுத்தி அங்குள்ளவர்களுக்கு உபதேசிக்கத் தலைப்பட்டார்கள். உடனே உற்றோரும் பெற்றோரும் ஊரிலுள்ள மற்றோரும் எம்பெருமானாரைத் தூஷிக்கவும் துன்புறுத்தவும் ஏற்பாடு செய்தனர். ஒரு நாள், இரண்டு நாளன்று அவர்கள் பட்ட கஷ்டம்; ஓயாமல் பதின் மூன்று வருஷமாகிய ஓர் நீண்டகாலம் வரையில் மக்கத்துக் காபிர்கள் கையில் அவர்கள் துன்பப்பட்டும் துயரப்பட்டும் பகைக்கப்பட்டும் பழிக்கப்பட்டும் வெறுக்கப்பட்டும் துரத்தப்பட்டும் பல்லாயிரக் கணக்கான வேதனைக்குள்ளாக்கப்பட்டார்கள். பன்முறையும் நபிபிரானைக் கொன்றுவிடவும் அவர்கள் சதியாலோசனை செய்துவந்தார்கள். தற்காலத்தில் கொஞ்சமும் பொறுமையில்லாமல் அவசரக் கோலத்துடன் ஆத்திரப்படும் அன்பர்காள்! நீங்கள் நம்முடைய நபிகள் நாயகமவர்களிடமிருந்து பொறுமையென்னும் புண்ணிய குணத்தைக் கற்றுக்கொள்ளமாட்டீர்களா? நீங்கள் முஸ்லிமாயிருந்து உங்களுடைய தீனுல் இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காகப்பாடுபடும்போது உங்களைப்பிறர் ஏளனம் பண்ணினாலும் துன்புறுத்தினாலும் நீங்கள் அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு ஆண்டவனுடைய திருத்தூதரைப்போல் நன்

மையான வழியிலேயே உழைப்பதாய்ச் சமாதானத்துடன் சாந்தியடைவீர்களாக. எதிரிகளின் ஏளனமும் அவர்களால் இயற்றப்படும் துன்பங்களும் உங்களுடைய சமாளை (மனவுறுதியை)ப் பரிசோதிக்கவும் பலப்படுத்தவுமே ஏற்பட்டனவென்று திடசித்தம் செய்து கொள்ளுங்கள். அமைதியுடனும் ஆனால் மனோதிடத்துடனும் இருக்கப்பழகிக் கொள்ளுங்கள்; தங்களுடைய பொறுமையாலும் மனோதிடத்தாலும் நம்பெருமானாரவர்கள் தங்கள் எதிரிகளையெல்லாம் இனிய நண்பர்களாகச் செய்துவிடவில்லையா? நாமெல்லாம் ஸுன்னத் ஜமா அத்தில் சேர்ந்தவர்களானமையின் நம்முடைய குணாதிசயங்களையும் நடை உடை பாவனைகளையும் நபிகள் நாயகத்தின் குணாதிசயங்களுக் கொத்தவண்ணமாகவும் அவர்களுடைய நடை உடைபாவனைகளுக்கு ஏற்றவாறாகவும் அழகுபட அமைத்துக் கொள்ள வேண்டாமா? ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களைப் பின்பற்றி அவர்களைப்போல் நாம் நடக்க முன்வரவேண்டாமா? இவ்வுலகில் வாழ்ந்துவரும் ஒவ்வொரு தொழிலாளரும் தோட்டிமுதல் தொண்டமான் வரையில் நம்பெருமானாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முன்வரமாட்டார்களா? "அல்லாஹுத் தஆலாவின் திருத்தூதரிடத்தில் நிச்சயமாக உங்களுக்கொரு நேர்த்தியானமாதிரி (நமூனா) இருக்கின்றது"—(குர்ஆன், 33:21). நம்முடைய நபிபெருமானாருக்கும் ஜன்ம சத்துருக்களெல்லாம் ஏற்பட்டிருந்தார்கள்; அந்தத் திருநபியவர்களும் ஆதியில் சின்னகூடியில் சேர்ந்தவராகவே இருந்து வந்தார்கள். ஆனால் இறுதியில் தங்களுடைய சிஷ்யவர்க்கமெல்லாம் அதிகமாய் விருத்தியடைந்து தம்முடைய ஜன்ம விரோதிகளையெல்லாம் வென்றடக்கினார்கள். அவர்களை ஆதியில் துன்புறுத்திய பகைவர்களெல்லாம் அடியோடு தோல்வியடைந்து அவர்களுடைய பாதத்தடியில் தலைவணங்கி நின்ற காலையில் எம்பெருமானார் ஒரு சிறிதேனும் தங்களுடைய பழய துன்பங்களையெல்லாம் பாராட்டினார்களா? அவர்களுடைய தெய்விக மனதில் பழிக்குப் பழிவாங்கும் குணம் எள்ளளவும் காணப்பட்டதா? ஜயமடைந்தவர்கள் தோல்வியடைந்தவர்களை இக்காலத்தில் என்னென்ன விதமாகவோ நடத்திவிட்டு அஃதெல்லாம் நியாயதண்டனைதானென்று அறைகின்றனரே, அஃதேபோல் நமது திருநபியவர்கள் தங்களுடைய தோல்வியடைந்த எதிரிகளை நடத்தினார்களா? அவ்வாறெல்லாம் ஒன்றும் செய்யவில்லையே. அவர்கள் அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹுத் தஆலாவின் அருமை நபியானதால், "இன்றைக்கு உங்களுக் கொன்றும் நிந்தனையில்லை,' (குர்ஆன், 12:92) என்று என் சகோதரர் யூஸுபு சொன்னதுபோல் யானும் சொல்லி



றேன்," என்று சொல்லித் தங்களுடைய எதிரிகளையெல்லாம் அடியோடு மன்னித்து விட்டார்கள். எதிரிகளை ஜயித்து வெற்றிக்கொடி நாட்டினபிறகேனும் அல்லாவின் திருத்தூதரின் தன்மையானது ஒருசிறிதும் மாறுபாடடைந்ததா? அவர்கள் எப்பொழுதேனும் தற்பெருமையில் மூழ்கி அகங்கார மமகாரங்களில் சம்பந்தப்பட்டார்களா? ஒருபோதும் அவர்கள் அவ்வாறில்லையென்பது நமக்கெல்லாம் நன்கு தெரியும். இக்காரணத்தால் தான் அந்தக் கிரிஸ்தவப் பாதிரியார் சொன்னது போலவே எம்பெருமானாரவர்கள் இன்றைக்கும் "ஓர் உண்மை மனிதரா"யிருக்கின்றார்கள்.

அப்பாதிரியார் சொல்வதுபோல் "அவர் ஆண்டவனை அதிபக்தியுடன் பூஜித்து வந்தார்." இஃதோர் உண்மையான விஷயந்தானென்பது எம்போன்ற முஸ்லிம்களுக்கு நன்கு தெரிந்தகாரியமே. எங்களுடைய திருநபியவர்கள் ஒழுங்கீனமில்லாத நிரந்தரமான நீண்டதோர் வணக்கத்தால் ஆண்டவனை அல்லும் பகலும் அனவரதமும் இடைவிடாமல் வணங்கிவந்ததுடன் வேறு எல்லாவழிகளாலும் அந்த இறைவனைச் சதா சர்வகாலமும் பூஜித்து வந்தார்கள். எல்லாச் சிருஷ்டிப் பொருள்களிலும் அவர்கள் எப்பொழுதும் கருணைபாராட்டி வந்தார்கள்; மனிதர்கள் எப்பொழுதும் துன்பமற்றிருக்கவேண்டுமென்பதே அவர்களின் முக்கிய நோக்கமாயிருந்து வந்தது. ஆனால் இப்படிப்பட்ட "உண்மையான மனிதரொருவர்" சதா ஆண்டவனையே தியானம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, மனிதனுடைய குயுக்தியால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறகு காலக்கிரமத்தில் அநேக ஆலோசனைக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு வந்திருக்கும் தவறான கொள்கைகளாகிய 'மாதாகோவிலின் மகிமையான அனுக்கிரகங்களை மதிக்காமலிருந்துவந்த" தனால் அந்த உண்மை முஸ்லிமாகிய முஹம்மது நபியவர்கள் (ஸல்) "நஷ்டத்திலான ஜீவன்களுள் ஒருவராய்ச் சேர்ந்துவிட்டா"ரென்று ஆண்டவன் தன் திவ்ய ஞானத்தில் அறிந்துகொண்டு அந்தத் தீர்க்கதரிசியைத் தன்னுடைய நரகில் வீழ்த்தி வெதுப்புவானென்று அந்தப் பாதிரியார் நம்பியிருப்பதுதான் எனக்கு மெத்த ஆச்சரியத்தை விளைக்கின்றது. இந்தப்பாதிரியாரின் மனோ நிலைமையையும் இவரது ஆண்டவனுடைய அறிவு நிலைமையையும் நோக்கும்போது அவர்கள் எப்படிப் பட்ட பிராணியாயிருப்பார்களென்று யான் மறுபடியும் ஆச்சரிய மடைகின்றேன். தாங்கள் மதாபிமானிகளென்றும் மதாசாரியர்களென்றும் பெருமை பாராட்டிக்கொள்ளும் புத்திமான்களான பாதிரிமார்களின் புத்தியானது இப்படியும் மழுங்கிக் கழுந்தாகிவிடுமோ! இவர்களையெல்லாம் அல்லாஹுத் தஆலா தன் திரு

வருளால் மன்னித்தருள்வாராக. அந்த அல்லாஹுத் தஆலாவின் திருச்சன்னிதானத்தில் எங்கள் திருநபியவர்களின் திவ்ய ஆவியானது இன்றைக்கும் மங்காத ஒளியுடன் மேலான சுவர்க்கத்தில் நின்று நிலவுகின்றதென்பதை அப்படிப்பட்ட பாதிரிமார்கள் நன்றாக உணர்ந்து கொள்வார்களாக. ஏ, முஸ்லிம் சகோதரர்காள்! அல்லாஹுத் தஆலாவின் அருட் பரஞ்சோதியாகிய அளவிலாக் கிரணத்தின் அந்தமில் பேரின்பத்தை அடையாமல் அநேகங் கிறிஸ்தவர்கள் அந்தகாரத்தில் அலைவதைக்கண்டு அருள் கூருங்கள். அவர்களையெல்லாம் தீனுல் இஸ்லாமென்னும் நேர்வழி மதத்தில் கொண்டு சேர்க்க முன்வாருங்கள், முன்வாருங்கள்.

இப்பொழுது நாம்அப்பாதிரியாரின் மற்றொரு வாக்கியத்தைக் கவனிக்கவேண்டும்: "கிறிஸ்துவின் உபதேசங்களை நாம் பின்பற்றுவதைக்காட்டிலும் அதிகமாக அந்த நபியின் உபதேசங்களை முஹம்மதியர்கள் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறார்கள்; அவர்கள் கடவுளின்மீதும் கடைசித் தீர்ப்புநாளின் மீதும் நம்பிக்கையுடையவர்கள்; அவர்களுடைய சன்மார்க்கமானது மேலானதா யிருக்கிறது," என்று அவர் சிறப்பித்துச்சொல்லுகிறார். அவருடைய வார்த்தையே உண்மையை விளக்குவதற்குப்போதுமான சாக்ஷியமாயிருக்கும்போது அதைக்குறித்து நான் ஒன்றும் அதிகமாய்ச்சொல்லத்தேவையில்லை யென்று எண்ணுகிறேன். ஆனால் அக்கிறிஸ்தவர்களின் மதப்பிரசாரவேலையானது பிரயோசனமற்ற வீண்வேலை என்பதைக் குறித்து மட்டும் யான் சிறிது இங்கு எழுதவேண்டியிருக்கிறது. "ரக்ஷண்யம் பெறுவதாயின் சிலுவையில் அறைபட்ட அந்த ஒருவரையே நம்பவேண்டுமென்று உபதேசிப்பதற்காக மிஷனெரிகளை அனுப்பவேண்டும்," என்று அவர் உபதேசிக்கின்றார். எல்லாவற்றினும் இதுதான் மிக்க விந்தையாயிருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் எந்த முஸ்லிமும் ஏசு (அலை) நாதரை நம்பாமல் இருப்பதில்லை; எல்லா முஸ்லிம்களும் எல்லா நபிமார்களையும் நம்புகின்றனர். மரியத்தின் மகனான மஸீஹ் (ஈசாநபி) அல்லாஹுத் தஆலாவின் உண்மையான தூதரென்பதை நாங்கள் ஒருவரும் மறுப்பதில்லை. கிறிஸ்தவர்களைக் காட்டிலும் நாங்கள் அதிகமாக அவரை விசுவசிக்கின்றோம்! அந்த நபியின் திருநாமத்தை நினைக்கும் போதெல்லாம் அவருடைய ஆவிக்கு ஆண்டவனுடைய அருள் நிறைந்த கருணையுண்டாகும்படி வாழ்த்துதலும் கூறுவோம். மேற்கூறிய பாதிரியார், "ரக்ஷண்யம் பெறுவதாயின் சிலுவையிலறைபட்ட அந்த ஒருவரையே நம்பவேண்டுமென்று" உபதேசிக்கின்றார். இவருடைய அபிப்பிராயத்தின் பிரகாரம் நாம் நாற்பதுகோடி முஸ்



லிம்களும் ரக்ஷண்யம் பெற்றுவிட்டோமென்றே கூறவேண்டும். ஆனால் அந்தப் பாதிரியாரின் முழுக்கருத்தையும் நோக்கும்போது ஏசு நாதரை நம்புவது மட்டும் ரக்ஷண்யம் பெறுவதற்குப் போதாதென்றும், ஆனால் "மாதாகோவிலின் மகிமையான அனுக்கிரகங்களை" மதிக்கவும் வேண்டுமென்றும் தெரிந்து கொள்ளுகிறோம். நாம் இப்பொழுது உண்மையை ஒளியாமல் ஆராயவேண்டும். நம்முஸ்லிம்கள் ஈஸாநபி (அலை)யை மட்டும் நம்புகிறார்களல்லாமல் "மாதாகோவிலின் மகிமையான அனுக்கிரகங்களை" ஒருபோதும் ஒத்துக்கொள்ளுவதில்லை. ஏசு நாதரால் உபதேசிக்கப்படாமல் அவர்களுக்குப் பின் வந்துள்ள சில சாமான்ய மனிதர்களால் சிருஷ்டிக்கப்பட்ட மாதாகோவில் மார்க்கமாகிய மர்மமான கொள்கைகளை மட்டும் நாங்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டோம். அல்லாஹுத்தஆலாவின் அடியாரான அந்த மஸீஹ் அலைஹிஸ்ஸலாத்தை ஒப்புக்கொள்ளுகிறோம். அவருடைய திருவாயினின்றும் வெளியான அமுத வாக்கியங்களை நீங்கள் காண்பித்து விடும்பக்ஷத்தில் அந்தத் தேவவாக்கியங்களையும் ஒத்துக்கொள்ளுவோம்; ஆனால் பைபிள் ஷரீபின் புதிய ஏற்பாட்டிலுள்ள சுவிசேஷ வாக்கியங்களில் எது ஏசுவின் வசனமென்று ஒன்றும் புலப்படவில்லை. ஏசுவின் திருவசனங்கள் இன்னவைதாமென்று விளங்காமலிருக்கும்போது மனிதர்களின் குயுக்தியால் மாற்றப்பட்டுக் கிடக்கும் மர்ம வாக்கியங்களையா நாங்கள் நம்பவேண்டுமென்று நம் கிறிஸ்தவ சகோதரர்கள் எதிர்பார்க்கின்றனர்? ஈசா நபியின் இன்ஜீல் வேதம் இப்பொழுது காணப்படவில்லை. தேவவாக்கியமாகிய அவ்வேத வாக்கியம் அழிந்துபோன பின்னர் மனித சிருஷ்டியாலாகிய பைபிள் சுவிசேஷங்களை நம்பினால்தான் ரக்ஷண்யம் பெறுவோமென்று சொல்லுவது உங்களுடைய யுக்திக்கும் புத்திக்கும் பொருத்தமாயிருக்கின்றதோவென்று சற்று நிதானித்துப் பாருங்கள். ஆனால் எங்களுடைய நபி பெருமானாரவர்கள் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட குர்ஆன் ஷரீபின் மகிமையை நோட்டமிடுங்கள். அன்றுமுதல் இன்றளவும் எங்கள் திருவேதமானது ஓர் அக்ஷரமும் மாற்றப்படாமல் அப்படியே அப்பட்டமாயிருந்து வருகின்றது. ஆண்டவனுடைய திருவுள்ளச்சித்தத்தின் பிரகாரம் இது இப்படி இருக்கிறது. சென்ற 1300 வருஷங்களுக்கிடையில் எம் குர்ஆனெ ஷரீபின் ஓர் அக்ஷரமாவது ஒரு கொம்பாவது ஒரு காலாவது ஒரு புள்ளியாவது ஒரு கோடாவது சேர்க்கப்படவாவது கழிக்கப்படவாவது மாற்றப்படவாவது அறவே கிடையாது. ஆதலின் நம்முடைய நண்பர்களையும் எதிரிகளையும் பைபிள்வேதத்தை நம்புவது சிலாக்கியமா அல்லது குர்ஆன்

ஷரீபை நம்புவது சிலாக்கியமாவென்று யாதொரு கேள்வி கேட்கின்றேன். எங்கள் நபிபெருமானாருக்கு முன்னிருந்த எல்லாவேதங்களும் ஆகமங்களும் திருத்தப்பட்டும் மாற்றப்பட்டும் அழிக்கப்பட்டும்போயின. ஆனால் இவ்வுலகத்தாக்கெல்லாம் பொதுவாக அவதரித்து எல்லோருக்கும் பொதுவான ஒரே மதத்தை நிலை நிறுத்துவதற்காகத் தோன்றவேண்டுமென்று எல்லாத்தேசத்தினராலும் எதிர்பார்க்கப்பட்டுவந்த அந்த "வாக்களிக்கப்பட்ட கடைசி நபியானவர்" அரபுநாட்டில் உதயமானபோது, அவர்கள் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட குர்ஆன்ஷரீபை அல்லாஹுத் தஆலா தானே தன் திருவேதத்தில் வாக்குறுதி செய்திருப்பதே போல் இதுவரையில் பாதுகாத்துக்கொண்டு வருகின்றான்; இதேபோல் இனியும் இவ்வுலக முடியு மட்டும் பாதுகாத்து வருவான். ஆதலின் இத்திருவேதம் தான் இவ்வுலகத்தவருக்கெல்லாம் பொருத்த முள்ளதா யிருத்தல் கூடும். மேற்கூறிய பாதிரியார் தம்முடைய பைபிள் ஷரீபை எடுத்து, அதில் ஏசுநாதர் முஹம்மது நபி (ஸல்) அவதரிப்பதைக் குறித்துத் தீர்க்க தரிசனம் சொல்லுமிடத்தில் எங்கள் நபியை "உண்மைக்குரிய இளங்கோ" (The Prince of Truth) என்று கூறியிருக்கும் திருவாக்கியத்தை நன்றாக வாசித்துணர்வாராக. முஹம்மது நபியவர்கள் (ஆண்டவனுடைய சகல நன்மையமுமை இவர்களுக்கு உண்டாவதாக) உண்மையாகவே "ஓர் உண்மையான மனிதராயிருந்தார்;" ஆகவே அவர்கள் அல்லாஹுத் தஆலாவுக்குப் பணிந்து நடக்கக்கூடிய ஓர் உண்மை முஸ்லிமாகவும் இருந்து வந்தார்கள். அவர்கள் ஆண்டவனுடைய அருள்வாக்கை உபதேசிக்கும்போது, "உண்மையானது உதயமாய் விட்டது; இனிப்பொய்யானது தலையெடுப்பாமல் நசித்து விடும்," என்னும் திருவாக்கானது ஒரு பெரும் வாக்காக நிறைவேறி நின்றது.

காலித் ஷெல்ட்ரேக்

• [இந்த வியாசமெழுதியவர் கனம் காஜா சாஹிபின் முயற்சியால் வோக்கிங் மதப்பிரசார சபையில் சில ஆண்டுகளுக்கு முன் இஸ்லாத்தைத் தழுவிய ஆங்கிலேயரா யிருக்கின்றார். ப-ர்.]

## யூதகுருமார் ஈமான்கொண்டது

ஹஸரத்து அமீருல் மூமினீன் உமறொபாருக் (ரலி) அவர்கள் கலீபாவாக அரசாண்ட காலத்தில் தஸ்தர்தேசம ஜயிக்கப்பட்டது. அத்தேசத்தில் கைப்பற்றப்பட்ட பொருள்களில் ஓர் அழகிய பெட்டி காணப்பட்டது; அதைத்திறந்து பார்த்தபோது அதற்குள்



ஒரு கிரந்தம் இருந்து அகப்பட்டது. அப்பொழுது எங்களுடன் கூட இருந்த நயீம் என்னும் பேருள்ள ஒரு கிறிஸ்தவன் அப்புத்தகத்தைத் தனக்கு விற்றுவிடும்படி வேண்டிக்கொண்டான். "இந்தப் புத்தகம் தெய்வப் புத்தகமல்ல" என்று நான் மறுமொழிகூறினேன். அது "தெய்வப்புத்தகந்தான்" என்று அவன் வம்புசெய்துகேட்டான். அவனுக்கு அப்புத்தகத்தை விலைக்கு விற்க எனக்கிஷ்டமில்லாமையால் அப்பெட்டியை மட்டும் அவனிடம் விற்றுவிட்டு அதனுள்ளிருந்த கிரந்தத்தை அவனுக்கு இனமாகக் கொடுத்துவிட்டேன். அதன் பின் சிலகாலஞ்சென்று முஆவியா (ரலி) அவர்களுடைய காலத்தில் நான் பைத்துல் முகத்தஸில் வசித்துவந்தேன். அப்பொழுது வாகனத்தின்மீது ஏறி ஒருவன் சவாரிசெய்து வந்ததைக்கண்டு, அவன் நயீம் என்பவனாயிருக்கக்கூடு மென்று நம்பி அவனைக் கூப்பிட்டு, "நீ நயீம்தானா?" என்று வினவினேன். அதற்கவன் "ஆம்" என்றான். உடனே நான் அவனைநோக்கி, "முன்போலவே நீ இன்னும் கிறிஸ்தவனாகத்தானிருக்கிறாயோ?" என்று அதிக ஆவலுடன் கேட்டேன். அதற்கவன், "இல்லை, பிறகு ஹனீபுத்தனைப் (முஸ்லிமாய்ப்) போய்விட்டேன்," என்றான். பிறகு ஒரு சமயம் நான் அவனுடன் திமிஷ்கு நகருக்குப்போனேன். அங்கிருந்து சிலகாலம் சென்று நானும் நயீமும் கஅபுல்அக்பார் என்பவருடன் பைத்துல் முகத்தஸுக்குத் திரும்பினோம். என்னுடன் அவர்களிருவரும் சேர்ந்து வந்திருப்பதைக் கேள்வியுற்றுச் சில யூதகுருமார்கள் அவர்களைக் காணவந்தார்கள். கஅபுல் அக்பார் என்பவர் மேலே குறித்த அந்தப்புத்தகத்தை அங்கு வந்த யூதர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்; யூதர்களுள் படிக்கத்தெரிந்தவன் ஒருவன் அதை எடுத்துப் பார்வையிட்டான். அவ்வாறு படித்துக்கொண்டு வரும்போது அவன் அதிக கோபமடைந்தவனாய் அப்புத்தகத்தைத் தரையில் எறிந்துவிட்டான். உடனே நயீம் என்பவரும் கோபாவேசங்கொண்டு அந்தப்புத்தகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, "இந்தக் கிரந்தமோ அதிக கௌரவமுள்ளதாயும் மிக்க பழமையுள்ளதாயு மிருக்கிறது. நீங்கள் இதை இறுதிவரையில் படிக்காவிடின் நான் உங்களை விடமாட்டேன்," என்றார். அப்பால் அந்த யூதன் அதைக் கடைசிவரையில் வாசித்தான்; அப்பொழுது அடியிற்கண்ட வேதவாக்கியம் அதில் காணப்பட்டது: "எவனொருவன் இஸ்லாமார்க்கத்தைத் தவிர வேறுமதத்தை ஏற்றுக்கொள்ளநாடுகிறானோ அவனிடத்திலிருந்து அது ஒப்புக்கொள்ளப்படமாட்டாது; மேலும் அவன் கடைசித் தீர்ப்பு நாளில் கைசேதமடைந்தவர்களுள் ஒருவனாயிருப்பான்"—(குர்ஆன்). இத்

திருவாக்கியத்தைச் செவியுற்றவுடன் அப்பொழுது அங்கு வந்திருந்த 42 யூதகுருமார்களும் உடனே இஸ்லாத்தில் ஈமான் கொண்டு விட்டார்கள். முஆவியா (ரலி) அவர்கள் அக்குருமார்களுக்குத் துஹ்பா என்னும் வெகுமதியும் கொடுத்தார்கள், என்று இபுனு மாலிக் என்பவர் எழுதியிருக்கின்றார்.

## முஸ்லிம்களுக் கொரு நற்செய்தி

ஜனாப், காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களை வாணியம்பாடி வேங்கடசாமி அவர்கள் நேரில் கண்டு சம்பாஷித்த விவரம்.

நான் சென்ற 11-3-20-ல் மாலை மணி 5-க்கு ஜனாப், காஜா கமாலுத்தீன் சாஹிப், பி. ஏ. எல் எல். பி., அவர்களை மதராஸ், ம். ஏ. ஏ., ஆபீஸில் கண்டு அடியில் காணும் வினாக்களை வினவினேன்; அதற்கு அவர்கள் பின்வருமாறு விடை பகர்ந்தார்கள்:—

வினா:—தங்களுடைய சொந்த ஊர் யாது?

விடை:—என்னுடைய ஜன்ம பூமி லாஹூர்.

வினா:—தங்களுக்கு இப்பொழுது இருந்துவரும் நோக்கம் யாது? இதற்குமுன் என்ன செய்துகொண் டிருந்தீர்கள்?

விடை:—நான் ஆதியில், பி. ஏ. எல் எல். பி., முதலிய பட்டப் பரீக்ஷைகளில் தேறி ஹைக்கோர்ட்டில் வக்கீல் தொழில் பார்த்து வந்தேன். என் சிறுபிராயத்தி லிருந்தே எங்கள் இஸ்லாமார்க்க உண்மைகளை உலகிலுள்ள பல மதஸ்தர்களுக்கும் அறிவித்து அதன் தன்மையை அவர்கள் கடைப்பிடிக்கும்படி ஊழியம் செய்யவேண்டு மென்று எனக்கு ஆசை யிருந்து வந்தது.

வினா:—இப்பிரசாரத்துக்குத் தாங்கள் வக்கீல் வேலையைவிட்டுச் செல்ல நேர்ந்த காரணம் யாது?

விடை:—ஆண்டவன் கிருபையால் மேற்கூறிய ஊழியத்திற்காக என் உலக சம்பந்தமான வியவகாரங்களை ஒழித்துவிட்டு ஒருவருக்கும் தெரிவிக்காமல் எனது நண்பர், ஜனாப் நூர் அஹமத் ஷிராமியுடன் இங்கிலாந்து தேசம் சென்று இருவரும் குர்ஆன் ஷரீபின் சத்தியத்தைப் பற்றியுமே மேன்மை தங்கிய நபிகள் நாயகத்தின் திருவாக்கியங்களின் உண்மையைப் பற்றியும் அம்மேல் நாட்டில் அநேக இடங்களில் ஓராண்டு வரையில் பல பிரசங்கங்கள் செய்து கொண்டிருந்தோம்.

வினா:—தாங்கள் இவ்வாறு பிரசங்கம் புரிந்து வந்தபோது இங்கிலாந்திலுள்ளவர்கள் முதலில் தங்களுடைய போதனைகளை ஏற்றுக்கொண்டார்களா?



விடை:—1912-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 24-ம் தேதி இங்கிலாந்து சென்று 1913-ம் வருஷம் அக்டோபர் மாதம் 23-ம் தேதிவரையில் 13 மாதகாலம் பல பிரசங்கங்கள் புரிந்தும் அங்குள்ளவர்களில் எவரும் எங்கள் மார்க்கபோதனையை ஏற்றுக்கொண்டவராக இல்லாம லிருப்பதைக்கண்டு அந்தப் பதின்மூன்றாவது மாதத்தில் ஒருநாள் நான் ஆண்டவனைத் தொழுதுகொண்டபோது அதிகமாகப் பிரார்த்தனை புரிந்தேன். அன்றிரவு என் நண்பரின் கனவில் ஒரு பெரிய கானகம் தோன்றியதாம்; அக்கானகத்தின் ஓரிடத்தில் ஒரு பக்கீர் வீற்றிருந்தனராம்; அவரை என் நண்பர் விசாரித்தபோது அவர் பின்வருமாறு கூறினராம்:—

"ஆரம்பத்தில் இவ்வுலகிலுள்ள அழகிய பட்டணங்க ளெல்லாம் ஒன்று மில்லாத வெறுங்கானகங்களாகவே இருந்தன. ஆதியில் பக்கீர்கள் வசித்துவந்த இடங்கள் தாம் பின்னர் எல்லோராலும் மதிக்கப்படும் பட்டணங்களாக விளங்குகின்றன. நீங்கள் அவசரப்படக் கூடாது. நீங்கள் 13 மாதம் மாத்திரமிருந்து இதுவரையில் ஒருவரும் இஸ்லாத்தில் வழிபட வில்லையென்று அயர்ச்சியடைகின்றீர்கள். 13 மாத மல்லாமல் மிக நீண்டகாலமாகிய 13 வருஷங்கள் வரையில் தெய்விகப் பிரசங்கங்களைப் புரிந்தும் மக்கமா நகரிலுள்ள புராதனக் குடிகள் வழிபடாமல் போயினவே அதற்கப்பாலும் பெருந்தகைமையுடன் பொறுமையாகச் சன்மார்க்கப் பிரசாரம் செய்து தெய்வ ஊழியத்தில் உறுதியுடன் நின்ற நமது நபிகள் நாயகத்தின் பொறுமையைப் பின் பற்றுங்கள்." எங்களுடைய பிரயத்தனங்களெல்லாம் நன்மையாகவே முடியுமென்று அம்மஹான் உறுதிகூறியதைக் கேட்டு எனது நண்பர் தூக்கத்தினின்றும் எழுந்து எனக்கு இக்கனவைப்பற்றித் தெரிவித்தார். பிறகு அந்தப் பதின்மூன்றாவது மாதத்திலேயே லார்டு ஹெட்லி என்னும் ஆங்கிலேயக் கோடீசுவரர் எங்கள் இஸ்லாமார்க்கத்தில் நம்பிக்கை கொண்டார்.

வினா:—இவ்வாறு தாங்கள் உழைப்பதற்காகத் தங்களைப் பின்பற்றுபவர்கள் காணிக்கை ஏதேனும் கொடுக்கவேண்டுமோ? தங்கள் உபதேசத்தால் இதுவரையில் எத்தனை ஐரோப்பியர்கள் இஸ்லாத்தில் சேர்ந்திருக்கிறார்கள்?

விடை:—பாரிடத்தி லிருந்தும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்றாவது, உலகத்தவரிடத்தில் மரியாதையும் கீர்த்தியும் பெறவேண்டுமென்றாவது, இஸ்லாமார்க்க மல்லாத வேறொரு நவீனக்கொள்கையை என்னுடையதென்று உபதேசித்து அதை யொரு புதிய மார்க்க போதனையாக எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றாவது நான் கனவிலும் கருதாமல், ஆண்டவனுடைய சத்தியவேத

த்தையும் மேன்மை தங்கிய கடைசி நபியாகிய முஹம்மது நபி (ஸல்) அவர்களின் உண்மையான உபதேசங்களையும் எல்லோரும் பின்பற்ற வேண்டுமென்று யாங்கள் செய்துவந்த பிரசங்கத்தின் உண்மையை அறிந்த ஐரோப்பியர்கள் 600 பெயர்களுக்கு அதிக மாக முஸ்லிம்களாகி விட்டார்கள். (இப்பொழுது சற்றேறக்குறைய 800 ஆங்கிலேயர்கள் வரையில் இஸ்லாத்தைத் தழுவியிருக்கின்றனர். ப-ர்.) வோக்கிங் என்னுமிடத்தில் மஸ்ஜித் ஒன்றும் லண்டன் மாநகரில் பிரார்த்தனை ஆலயம் ஒன்றும் ஏற்பட்டிருக்கின்றன. நாளடைவில் இஸ்லாமிய சத்திய சன்மார்க்கத்தில் இன்னும் ஆயிரக் கணக்கான ஐரோப்பியர்கள் சேர்ந்து கொள்ளுவார்களென்பது எனது மனதார்ந்த நம்பிக்கை.

வினா:—தாங்கள் மேல்நாட்டில் போதித்துவருவது இந்திய முஸ்லிம்கள் அனுஷ்டித்துவரும் இஸ்லாமிய மார்க்கமா, அல்லது இங்கிலாந்திற் கென்றேற்பட்ட வேறொரு புதிய மார்க்கமா?

விடை:—இந்தியாவிலும் இன்னும் இதர நாடுகளிலும் முஸ்லிம்களனைவரும் அனுஷ்டித்துவரும் இஸ்லாமிய கொள்கைகளும் அவர்களின் சத்திய நிர்ணயங்களுமே இங்கிலாந்திலும் போதிக்கப் பட்டு வருகின்றன.

வினா:—ஹிந்துக்களைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் யாது?

விடை:—இந்திய சகோதரர்கள் பின்பற்றிவரும் ஹிந்துமார்க்கத்தின் கீதை, உபநிஷத், முதலிய அநேக கிரந்தங்களை நன்றாக ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். அவர்களின் பொருட்டு மதபோதகர்களாகக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டு, உத்தம மனிதப்பிறவியாக ஜனனமெடுத்த அம்மதாசாரியர்களும் சிரேஷ்டமானவர்களே; அவர்களுடைய மார்க்கபோதனைகளும் சிலாக்கியமானவைகளே. அவர்கள் தங்களுடைய போதனைகளில் யோகம் ஞானம் பக்தி ஆகிய இவைகளைப்பற்றி மிக மேன்மையாக உபதேசிக்கின்றனர்; ஆனால் அவர்களுடைய பக்திமார்க்கத்தையே எங்களுடைய இஸ்லாமிய மார்க்கமும் மிகத்தெளிவாகவும் அதிக ஆழமாகவும் உபதேசித்திருப்பதால் ஹிந்து சகோதரர்களும் எங்களுடைய மதத்தின் உன்னதமான பக்திமார்க்கத்தை அனுஷ்டித்து வருவார்களாயின் அவர்கள் கோரும் முக்திவழிக்கு அது அதிக சாதகமாயிருக்கும். இதனால் ஹிந்து முஸ்லிம்களின் சகோதர ஒற்றுமை பலப்படுமாதலால் நம்முடைய பாரதகண்டம் க்ஷேமமாகவும் உன்னதமாகவும் விளங்கும்.

வினா:—இனித்தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?



விடை:-நான் இங்கிலாந்திலிருந்து சென்ற 8 வருஷங்களாக என்னுடைய மதத்திற்கு ஊழியம் செய்து இப்பால் இந்தியாவுக்குத் திரும்பினேன். சில நாள் இச்சென்னை மாநகரில் தங்கியிருந்து பெங்களூருக்கு ஒருநாள் சென்று கல்கத்தாவில் இருபது தினம் தங்கிப் பிறகு லாஹூருக்குச் செல்வேன். ஆறுமாதம் சென்று மறுபடியும் இங்கிலாந்துக்குப் பிரயாணமாகி அங்கே எனது மார்க்கப் பிரசாரத்தை மீண்டும் செய்வதாக நிச்சயித்திருக்கிறேன். (கனம் காஜா சாஹிப் அந்த ஆறுமாத காலத்துக்குள் மேல்நாடு செல்லவில்லை; பர்மா மலாய் ஜாவா முதலிய கீழ் நாடுகளில் பிரசாரம் செய்துவிட்டுச் சென்ற ரமலான் மாதத்தில்தான் லாஹூருக்குத் திரும்பினார்கள். ப-ர்)

வினா:—உங்களுடைய இஸ்லாமார்க்கத்தை இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?

விடை:—எங்கள் குர்ஆன் ஷரீபு வேதத்தை என் நண்பர் மௌல்வி முஹம்மதலி சாஹிப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதியிருப்பதைப் பார்த்தால் யாவரும் இஸ்லாமார்க்கத்தைப் பற்றிய உண்மைகளை யெல்லாம் எளிதில் தெரிந்துகொள்ளலாம். எங்களுடைய "இஸ்லாமிக் ரெவியூ" என்னும் மாதாந்த சஞ்சிகையும் ஒவ்வொருமாதமும் பல்லாயிரக்கணக்காக வெளிப் பட்டு இஸ்லாமிய ஊழியத்தைப் பெரிதும் செய்து வருகின்றது.

வினா:—இங்கிலாந்தில் உபந்யசிக்கப் பட்டுவரும் இஸ்லாமதப் பிரசங்கங்கள் எவ்வகை முறைமையில் சேர்ந்தனவாயிருக்கும்?

விடை:—மேல் நாடுகளில் கல்விப்பயிற்சியில் சிறந்தவர்களாகவும் உலக ஆராய்ச்சியில் கைதேர்ந்த வல்லவர்களாகவும் விளங்கிவரும் அத்தேச மேதாவிகளுக்கு அதிக விசாலமான நோக்கத்துடனேயே எங்களுடைய மார்க்கத்தைப் போதித்து வருகிறோம்.

வினா:—இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷனைப்பற்றித் தங்களுக்குத் கேள்வியுண்டா?

விடை:—ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் விஷயம் எனக்குத் தெரியும். ஸ்ரீசுவாமி விவேகானந்தரைப் போன்ற மனிதர் ஒருவரைக் கடவுள் சிருஷ்டித்தது இந்தியாவின் நன்மைக்கேதுக்தான். அவருடைய குரு ஸ்ரீராம ஹம்ஸரின் மதிப்பு வாய்ந்த தெய்வபக்தியால் உலகிலுள்ளோர் அவரைப் பூஜிக்கின்றார்கள்.

வினா:—மோக்ஷமும் கடவுளின் கிருபையும் யாவை யென்று தங்கள் சமுகத்திலிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

விடை:—மோக்ஷம் பெறுவதற்கு நாம் அடைக்கலம் புகவேண்டுவது ஆண்டவன் ஒருவனைத் தவிர இவ்வுலகில் வேறு யாரிடத்திலும் இல்லை. கடவுளைப் பூஜிப்பதில் சத்திய முடைய மனிதர்களின் தரிசனமும் அவர்களிடத்தில் மரியாதையுடன் நடந்து கொள்ளுவதும் சாதாரணமனிதர்களின்வழக்கமாயிருந்து வருகிறது. எல்லாமதங்களிலும் கடவுளிடம் பக்திகொண்ட மனிதர்கள் இருக்கிறார்கள். உண்மையன்றி ஒன்றும் முடியாது. மனிதனை ஆண்டவன் எந்த நோக்கத்துடன் படைத்திருக்கிறானோ அந்த நோக்கத்திற் கிணங்க நம்முடைய ஆத்மசக்திகளையெல்லாம் வெளிப்படுத்தி மேன்மேலும் உன்னதபதவியை அடைந்து கடைசியில் சாயுச்சியம் (வஹ்தத்துல்வுஜூது) பெறுவதுதான் இஸ்லாமிய மோக்ஷமாகும்.

## விஞ்ஞாபனம்

நம்முடைய "தத்துவ இஸ்லாம்" என்னும் இம்மாதாந்த சஞ்சிகை சென்ற மேயீ முதல் வெளிவந்துலாவுகின்றது. ஒவ்வொரு மாதமும் இதன் பிரதிகளை இத்தமிழ் நாட்டில் வெளியிடப்படும் இதர பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்குத் தவறாமல் அனுப்பிக் கொண்டு வந்திருந்தும் அவர்களுள் எவரேனும் எமக்கு மாற்றுப் பத்திரிகை அனுப்பாமலிருப்பதை நோக்க மிக்க மனவருத்தமுண்டாகிறது. பத்திராசிரியர்கள் ஒருவருக்கொருவர் மாற்றுப்பத்திரிகைகள் அனுப்பிக்கொள்ள வேண்டுமென்பது பத்திரிகா முறைமையில் நீண்ட காலமாய் ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. இதுவரையில் போனது போகட்டும்; இனியேனும் தொன்று தொட்டு வரும் அப்பழய முறைப்படி நம்முடைய பத்திராசிரிய நேசர்கள் எமக்கு மாற்றுப் பத்திரிகைகள் அனுப்புவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

* * *

எமது இஸ்லா மார்க்கத்தைப்பற்றி எவரேனும் வியாசங்கள் எழுதி விஷயதானம் செய்வதாயிருந்தால் அதை அன்புடன் ஏற்றுக்கொள்வோம். இஸ்லாமார்க்க சம்பந்தமல்லாத வேறு வியாசங்களும் பொதுவான சன்மார்க்க விஷயங்களைப்பற்றிக் கூறுவதாயிருந்தால் அப்படிப்பட்ட வியாசங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் எந்த வியாசத்தையும் பிரசுரிப்பதும் பிரசுரிக்காமலிருப்பதும் இப்பத்திராசிரியருடைய ஸ்வேச்சையான அபிப்பிராயத்தைப் பொறுத்ததாயிருக்கும்.

"தத்துவ இஸ்லாம்" பத்திராசிரியர்.

-117-

11 NOV 1921

முப்ஸ்மிலன்.

# தத்துவ இஸ்லாம்

# ISLAM AS IT IS.

وَلْتَكُن مِّنكُمْ أُمَّةٌ يَدْعُونَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُونَ بِالْمَعْرُوفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ

கமலம் - 3. | 1921 வரு நவம்பர்மீ | இதழ்-7.

بسم الله الرحمن الرحيم
نحمده ونصلي على رسوله الكريم

## உண்டிக்குப்பின் உபன்யாசம்

(சிங்கைமா நகரில் ஜனாப் காஜா கமாலுத்தீன் சாஹிபவர்களால் செய்யப்பட்டது.)

### ஆண்டவன் வேதம் அரபில் இருப்பதுதான் நலம்

#### பாஷையின் அவசியம்

மனிதனுடைய குரல்வளையிலிருந் துண்டாகும் சப்தமானது ஒரு விதமான ஓர்மைப்பாட்டுடன் பக்குவமடைந்து அர்த்த புஷ்டியுடன் வெளிப்படும்போதுதான் அவனுடைய பாஷையென்பது காணப்படுகிறது. ஒரு கூட்டத்தார் தமக்குள் பரஸ்பர சங்கேதத்தால் அப்படிப்பட்ட சப்தத்துக்கு அர்த்த புஷ்டியைக் கொடுப்பதால்தான் வெறும் சப்தமாயிருப்பது வார்த்தைகளாக மாறுகின்றது. இப்படிப்பட்ட வார்த்தைகளின் மூலமாகத்தான் ஒரு மனிதன் தன் எண்ணங்களைப் பிறருக்கு அறிவிக்கிறான். இவ்வாறு பேசப்படும் வார்த்தைகள் சில சமயங்களில், அவை பேசப்படும் காலத்தோடும் இடத்தோடும் ஒழிந்து போகாமல் பிற்பட்ட காலங்களிலும் நிலைத்திருந்து உலகத்தவருக்குப் பயன்படுவதுண்டு. நம்முடைய முன்னோர்களின் எண்ணங்களையெல்லாம் அவர்கள் பேசி

வைத்த வார்த்தைகளைக்கொண்டே நாம் இப்பொழுது தெரிந்து கொள்ளுகிறோம். இப்படித்தான் ஒரு தலைமுறையாரின் பேச்சுக்களெல்லாம் மற்றொரு தலைமுறையாருக்கு வந்து சேருகின்றன. ஆதலின் ஒருகாலத்திலுள்ள மகான்கள் பேசிவைக்கும் அருமையான விஷயங்களெல்லாம் பின்வரும் தலைமுறையார்களுக்கு ஒரு பெரிய பொக்கிஷம்போல் அமைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட பாஷாஞான முறையால்தான் நம்முன்னோர்களின் ஞானக்களஞ்சியத்தை யெல்லாம் நாம் பெற்றிருக்கிறோம். பாஷை யென்பது ஒன்றில்லாவிடின் நம் முன்னோர்களின் அருமையான ஞானோபதேசங்களை யெல்லாம் நாம் இழந்திருப்போம்.

## பாஷையின் மாறுபாடு

ஆனால் இவ்வுலகிலுள்ள பாஷைகளுள் பெரும்பான்மையன காலக்கிரமத்தில் மாறுதலடைந்து வருகின்றன. ஒரு பாஷையில் ஒரு காலத்தில் வழங்கிவரும் சொற்கள் பின்னொரு காலத்தில் தம் உருவத்திலும் அர்த்தத்திலும் மாறுபா[illegible] இப்படிப்பட்ட சொற்கள் ஒரு காலத்தில் ஒரு [illegible] உபயோகப் படுத்தப்பட்டிருந்தால் அச்சொற்களின் உச்சரிப்பும் பொருளும் மாறுபடும்போது பிற்காலத்தில் வரும் மனிதர்கள் மேற்கூறிய மகானின் மனக்கருத்தை உள்ளபடியே உணர்ந்துகொள்ள முடியாமற் போவதுமுண்டு. ஒருகாலத்தில் ஒருவர் உபயோகிக்கும் சொற்கள் அக்காலத்தில் அவரைச் சூழ்ந்துள்ள இதர மனிதர்களுக்கு அதிக அர்த்த புஷ்டியுடன் விளங்கியபோதிலும் அவருக்குப் பிறகு சில நூற்றாண்டுகள் கழிந்தபின் அவதரிக்கும் ஜனங்களுக்கு அச்சொற்கள் அடியோடு பொருள் விளங்காமற்போய் விடினும் போய்விடலாம்; அல்லது அச்சொற்கள் முன்னிருந்த பொருளுக்கு நேர்மாறான அர்த்தத்தில் வந்து விடுவதுமுண்டு. அப்படிப்பட்ட காலத்தில் முன்னோர்களின் விஷயமெல்லாம் நமக்கு விளங்காமலோ, அல்லது வேறு விபரீதமான அனர்த்தத்திலோ வந்துமுடியும். ஆதலின் முன்னோர்களால் எழுதிவைக்கப்பட்ட சாஸ்திரங்களெல்லாம் நமக்கு விளங்காமலோ அல்லது வேறு அர்த்தத்திலோ வந்துவிட்டால் அப்படிப்பட்ட சாஸ்திரங்களால் யாருக்கென்ன பயன்? அவையெல்லாம் இருந்தும் இல்லாதவைபோல் தான் ஆகின்றன. ஆனால் அப்பழய சாஸ்திரங்களால் பயனடைய வேண்டுமாயின் அப்பழய பாஷையை இக்காலத்தில் வழங்கும் புதிய பாஷையாக மொழிபெயர்க்க வேண்டும். அப்பொழுது மூலக்கிரந்தத்தின் மகிமையெல்லாம் மறைந்து போகின்றது. மூலக்கிரந்தத்தின் மகிமை முதல்தலைமுறையில் மறைந்து போனால் மொழிபெயர்ப்பின் மகிமையும் மறு தலைமுறையில் இப்படித்தான் ஆய்விடுகின்றது. இப்பொழுது எல்லோருக்கும் எளிதில் விளங்கும் மொழிபெயர்ப்பானது சில நூற்றாண்டுகளுக்குப் பின் வருபவருக்கு விளங்காமற் போகும்போது அதற்கு வேறொரு புது மொழிபெயர்ப்பு வேண்டியிருக்கும். இப்படியே பாஷையின் மாறுபாட்டுக்குத் தக்கவாறு வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு மொழிபெயர்ப்பைச் செய்து கொண்டே போவோமாயின் முதலிலுண்டான மூலக்கிரந்தத்தில் என்ன என்ன விஷயம் பொதிந்திருந்ததென்று பின்னொருகாலத்தில் யாரால் சொல்ல முடியும்? மூலக்கிரந்தத்திலுள்ள முழுப்பெருமையையும் அப்படியே மொழிபெயர்ப்பில் கொண்டுவர முடியாதென்பதைப் பாஷாதத்துவ முணர்ந்த ஒவ்வொருவரும் நன்குணர்ந்து கொண்டிருக்கிறார். ஆதலின் ஆயிரம் வருஷங்களுக்குமுன் ஆன்றோர்களால் எழுதி வைக்கப்பட்ட அரிய விஷயங்களெல்லாம் அநேக மொழிபெயர்ப்புக்களின் வழியே நமக்குக் கிடைக்கும்போது இவ்விஷயங்கள்தான் ஆதியில் எழுதப்பட்டவர்களால் முதலில் வெளியான மூலக்கிரந்தங்களில் எழுதிவைக்கப்பட்டன வென்பதற்கு யார் சாக்ஷியம் கூறமுடியும்?



## பழய வேதங்கள் ஒழிந்தன

இக்காரணத்தால் தான் பண்டைக்காலத்திலிருந்த பற்பலவேதாகமங்களின் மூலக்கிரந்தங்களெல்லாம் இருந்தவிடந் தெரியாமல் மறைந்து போய்விட்டன; இன்னும் சில கிரந்தங்களைக் காலக்கிரமத்தில் மொழிபெயர்த்து வந்தபோது மொழிபெயர்த்தவர்கள் தமதிஷ்டம்போல் மூலத்தில் இல்லாத விஷயங்களை யெல்லாம் தம்முடைய மொழிபெயர்ப்பில் சேர்த்துவிட்டனர். மூஸாநபி (அலை) யின் தௌராத்வேதமும் (பைபிள்பழய ஏற்பாடும்) ஈஸாநபியின் (அலை) இன்ஜீல் வேதமும் (புதிய ஏற்பாடும்) இப்படிப்பட்ட காரணத்தாலேயே மாற்றப்பட்டுக்கிடக்கின்றன. இவ்விரண்டு வேதங்களின் மூலக்கிரந்தமும் இப்பொழுது இவ்வுலகில் இல்லை; ஆனால் அவற்றின் மொழிபெயர்ப்புக்களே இப்பொழுது மேல்நாடுகளில் உலாவிவருகின்றன. இம்மொழி பெயர்ப்புக்களில் மனிதசேர்க்கையால் அநேக மாறுபாடுகள் மலிந்து கிடக்கின்றன வென்பதை எண்ணிறந்த மகான்கள் ஒத்துக்கொண் டிருக்கின்றனர். அநேக விஷயங்கள் கழிக்கப்பட்டும் அநேக விஷயங்கள் சேர்க்கப்பட்டும் இன்னும் அநேக விஷயங்கள் திரிக்கப்பட்டும் கிடக்கின்றன. பைபிளின் பழய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் நேரிட்டிரு

க்கும் இப்படிப்பட்ட கதியே இவ்வுலகில் இன்னும் பல வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் நேரிட்டிருக்கின்றது. பண்டைக்கால மகரிஷிகளால் இப்பரத கண்டத்தில் எழுதப்பட்டிருக்கும் எழுதாக்கிளவியாகிய வேதங்களும் ஆகமங்களும் இன்று வரையில் பிராமணர்களால் பாராயணம் செய்யப்பட்டுப் பரம்பரையாய் வந்துகொண்டிருப்பதால் அவ்வேதங்களும் ஆகமங்களும் மூலக்கிரந்தத்துடன் சிறிதும் மாறுபடாமல் சுத்தப்பரிசுத்தச் சுயம்பிரகாசத்துடன் இருந்து வருகின்றனவென்று ஹிந்துமத நண்பர்கள் கூறுதல் கூடும். ஸ்ருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் உள்ள சூத்திரங்கள் மட்டும் புராதன காலமுதல் இன்றளவும் மாறுபடாமலிருக்கலாம். ஆனாலுமென்ன? சூத்திரங்களை மட்டும் ஒப்பிக்கலாம்; ஆனால் அந்த ஸமஸ்கிருதபாஷையானது அநேக நூற்றாண்டுகளுக்குமுன்னேயே உலக வழக்கற்றுப் போய்விட்டபடியால் அச்சூத்திரங்களின் பொருள்களெல்லாம் அடியோடு மறக்கப்பட்டுப் போய்விட்டன. வேதாந்த சூத்திரங்களையே அடிப்படையாகக் கொண்ட ஹிந்து மதமானது இக்காலத்தில் ஆயிரக் கணக்கான கிளைகளாகப் பிரிந்து கிடக்கின்றது. தங்களுடைய முக்கியமான மூலக்கொள்கையிலேயே அவர்களெல்லாம் ஒருவரோடொருவர் நேர்மாறாக மாறுபட்டுக் கிடக்கின்றனர். மேற்கூறிய கிளைகள் ஒவ்வொன்றும் தனித்தனியான மதங்களென்று சொல்லத்தக்க விதமாய் அவ்வளவு நேர்மாறாக அமைந்து கிடப்பதால் இவையெல்லாம் ஆதியிலிருந்த ஒரே ஹிந்து மதத்தின் கிளைகள்தாமோவென்று யாராலும் சொல்லமுடிவதில்லை. இவையனைத்தும் வடபூமுனைக்கும் தென்பூமுனைக்குமுள்ள அவ்வளவு தூரத்தில் ஒன்றோடொன்று மாறுபட்டிருக்கும் அந்த அந்தக் கிளைக்கு உரியவரும் தத்தம்முடைய கொள்கைக்கு வேண்டிய ஆதாரமெல்லாம் அந்தப் பழைய ஸம்ஸ்கிருத வேதங்களிலேயே அமைந்து கிடப்பதாய் வாதாடிவருகின்றனர். வேதாந்த சூத்திரங்களுக்கு வியாக்கியானம் செய்யும்போது வெவ்வேறு பிரிவினர் வெவ்வேறு விதமாய் அபிப்பிராயப் படுகின்றனர். ஒருவருக்கொருவர் நேர்மாறா யிருக்கும்படியும் வியாக்கியானம் செய்கின்றனர். இக்காரணத்தால்தான் ஹிந்து மதத்தின் பல்வேறு வகைப்பட்ட உட்பிரிவினர்களெல்லாம் தம்முடைய மூலக்கொள்கையிலும் ஒருவரோடொருவர் நேர்மாறாக முரண்படுகின்றனர். அவரவரும் வடமொழியிலுள்ள வேதசூத்திரங்களையே தத்தம்முடைய கொள்கைகளுக்கு ஆதாரமாகக் காட்டிவருகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட மாறுபாடான நிலைமைக்குக் காரணம் யாது? ஸமஸ்கிருத பாஷையாகிய வடமொழியானது ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்



னேயே பேச்சு வழக்கற்று ஏட்டுவழக்கில் மட்டும் சென்று ஒடுங்கி விட்டது; இதை இறந்துபோன பாஷைகளுள் ஒன்றாகக் கணக்கிட்டு விட்டனர். இக்காரணத்தால்தான் அப்பாஷையிலுள்ள ஸ்லோகங்களுக்கு வியாக்கியானம் செய்யும்போது அந்தஸ்லோகங்களை எழுதியவர்களின் கருத்தை உள்ளபடியே கண்டுபிடிப்பது பிற்காலத்திய பண்டிதர்களுக்குக் கஷ்ட சாத்தியமாகி விட்டது. இதனால்தான் இத்தனை தொல்லையும் ஏற்பட்டுவிட்டது.

மேற்கூறிய இன்னோரன்ன பலகாரணங்களால் இக்காலத்திலுள்ள இதரமதத்தினரெல்லாம் ஆதிகாலத்தில் தங்களுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட ஞானத்தை அப்படியே சிந்தவுறாமல் பெற்றிருப்பதாகப் பெருமை பாராட்டிக்கொள்ள முடியாது. ஆதிகாலத்தில் ஆண்டவனால் அனுப்பப்பட்ட வேதங்களெல்லாம் காலக்கிரமத்தில் மாறுபட்டும் சரியான பொருள் விளங்காமலும் போய்விடும் காலங்களில் ஆண்டவனிடத்திலிருந்து மன்பதையின் நன்மைக்காகப் புதியதோர் வேதம் வெளியாக வேண்டியது அவசியமாய்க் காணப்படுகின்றது. இவ்வாறு புதியவேதம் வெளிப்படாவிடின் பழயவேதங்களின் பயனானது குன்றத் தலைப்பட்டு மனிதர்களின் மனமானது சில வருஷங்களுக்குள் அஞ்ஞான அந்தகாரத்துள் மூழ்கிப் பாழடைந்து விடும். மனிதர்களை இப்படிப்பட்ட அபாயகரமான நிலைமைக்குக் கொண்டுவரக் கூடாதென்று தன் திருவுள்ளத்தில் கிருபைகொண்டதனாலேயே ஆண்டவன் பின்னிட்ட காலத்தில் புதியதோர் பரிசுத்தமான வேதத்தை வெளிப்படுத்தினான்.

## வெவ்வேறு ஜாதிக்கு வெவ்வேறு மதம்

பண்டைக்காலங்களில் மனிதர்கள் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட தடைகளினாலோ அல்லது பூமியில் இயற்கையாய் முளைத்துள்ள வேறு பல தடைகளாலோ அவர்கள் ஒருதேசத்தாரோடு மற்றொரு தேசத்தார் போக்குவரத்துச் செய்துகொள்ள முடியாமலும் பழக்க வழக்கங்கள் பண்ணிக்கொள்ள முடியாமலும் ஒவ்வொரு கூட்டத்தார்களும் தனித்தனியே காலங்கழித்து வந்தார்களென்பதை நாம் சரித்திர பூர்வமாக அறிந்துகொண்டிருக்கிறோம். ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப் போகக்கூடிய சாதனங்கள் அக்காலத்தில் ஏற்படாததனால் ஒருஜாதியாரின் ஞானமும் தத்துவமும் சன்மார்க்கமும் மற்றொரு ஜாதியாருக்குக் கிடைக்க ஹேதுவில்லாமலிருந்தது. அப்படிப்பட்ட காலங்களில் மனிதர்களின் நன்மைக்காகத் தேவ அருள் வேண்டியிருப்பின் அது ஒவ்

வொரு தேசத்தினருக்கும் தனித்தனியே அவசியமா யிருந்தது. ஆதலின் ஒவ்வொரு ஜாதியாருக்கும் ஒவ்வொரு மதாசாரியர் தோன்றியிருக்க வேண்டும்; இதனால் தான் எமது குர்ஆன் ஷரீபும், ஆண்டவனுடைய நபிமார்கள் அவதரிக்காத ஜாதியார் ஒருவருமில்லையென்று உறுதி கூறுகின்றது. இப்படிப்பட்ட நபிமார்களுக்கெல்லாம் வெளியாக்கப்பட்ட மார்க்கங்களின் மூலக்கொள்கை யெல்லாம் ஒரேவிதமான ஏக தெய்வக்கொள்கையாகத்தானிருந்திருக்கிறது. ஆனால் காலதேச வர்த்தமானங்களின் மாறுதல்களுக்குத் தக்கபடி ஒவ்வொரு ஜாதியாரின் மார்க்கத்திலும் அனுஷ்டான முறைகள் மட்டும் சிறிது சிறிது வேறுபட்டிருக்கலாம். ஆனால் இக்காலத்தில் பல்வேறு மதங்களும் பல்வேறுவிதமாய்த் தத்தம் மூலக்கொள்கைகளிலேயே மாறுபட்டுக் கிடக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் நான் மேலே கூறியதுபோல் மனிதசேஷ்டையும் பாஷாதத்துவ மாறுபாடுந்தான்.

## ஒரேமதம் உதயமாகவேண்டிய காலம்

ஏசுநாதர் இவ்வுலகத்தைவிட்டுச் சென்றபின் இரண்டுமூன்று நூற்றாண்டுகளுக்குள் இவ்வுலகமானது ஒன்றுபடத் தொடங்கிற்று. ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப் போக்குவரத்தும் மிருதமாயுண்டாயிற்று. இவ்வுலகிலுள்ள எல்லாக் கண்டங்களையும் ஒன்று சேர்க்கக்கூடிய எல்லாவித அம்சங்களும் அப்பொழுது தோன்ற ஆரம்பித்தன. இவ்வாறு உலக முழுதும் மற்றெல்லா விஷயங்களிலும் ஒன்றாகி நாகரீகத்தில் முன்னுக்கு வரும்போது அவ்வுலகத்திலுள்ள எல்லாமனிதர்களுக்கும் ஒன்றாயிருக்கக்கூடிய பொதுவான ஒரே மதமானது உதயமாகவேண்டிய அவசியமும் நெருங்கி வந்துகொண்டிருந்தது. உலகத்திலுள்ள பல்வேறு மனித வர்க்கத்தாரின் பல்வகைப்பட்ட அபிப்பிராய பேதங்களையெல்லாம் சமரசப்படுத்தி எல்லோரையும் ஒன்றுசேர்த்து உயர்ந்த நாகரீகத்துக்குக் கொண்டு செல்லத்தக்கது உண்மைமயமானதொரு தெய்விகமதந்தானென்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்த உடன்பாடாயிருக்கிறது. உலகத்தில் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் எல்லாமனிதர்களுக்கும் பொதுவாக உண்டுபண்ணத்தக்கது அப்படிப்பட்ட மதந்தானென்பதும் எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமே. உலகத்திலுள்ள பற்பல தேசத்தினரும் ஒருவரோடொருவர் போக்கு வரவு செய்துகொண்டு ஒரே வர்க்கத்தினராக ஆய்விட்டபடியால் அவர்களெல்லோருக்கும் பொருத்தமாயிருக்கும்படி ஒருபொதுவான மார்க்கத்தை அனுப்புவதே போது



மென்று ஆண்டவன் தன் திருவுள்ளத்தில் எண்ணங்கொண்டிருப்பானாயின் அப்படிப்பட்ட உலகத்துக்கெல்லாம் பொதுவான ஒரே மதத்தை அடிக்கடி மாறுபாட்டை யடையக்கூடிய ஒரு பாஷையில் வெளியிடுவதானால் அம்மதத்தின் பெருமையானது அதிசீக்கிரம் மறைந்துபோம். அடிக்கடி மாறக்கூடிய பாஷையிலாவது அல்லது சிலகாலத்துக்குப்பின் மறைந்து போகக்கூடிய பாஷையிலாவது அப்படிப்பட்ட சன்மார்க்கம் வெளிவருமாயின் அதனால் பொது ஜனங்களுக்கு எல்லாக் காலத்திலும் எல்லாத்தேசத்திலும் பயனுண்டாக மாட்டாது.

## அரபிதான் அதற்குரிய பாஷை

ஆனால் ஹிஜாஸ் தேசத்தில் வழங்கிவரும் பாஷையாகிய அரபி பாஷையானது ஆதிகால் முதல் ஒரேவிதமாயிருந்து வருகின்றது. இப்பாஷை ஒருபோதும் ஒழிவதில்லை; ஆனால் காலக்கிரமத்தில் அது எவ்வகை மாறுபாடும் அடைவதில்லை. அரபுமொழிகள் எக்காலத்திலும் ஒரேவிதமாகவே உச்சரிக்கப்பட்டு ஒரேவிதமான பொருளையே வெளிப்படுத்துகின்றன. இம்மொழிகள் நாளடைவில் அர்த்தபேதத்தையாவது உச்சரிப்பு வித்தியாசத்தையாவது அடைவதே கிடையாது. சுருங்கச்சொல்லுமிடத்து அரபிபாஷையானது என்றென்றைக்கும் ஒரேதன்மையையுடையதாகவே யிருந்து வருகின்றது. வாதத்தினிமித்தம் நாம் இப்பொழுது ஓர் உதாரணத்தைக் கவனிப்போம்: ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்குமுன் ஆண்டவன் இவ்வுலகத்தில் எல்லாக்காலத்துக்கும் எல்லாத் தேசத்துக்கும் எல்லா ஜாதியாருக்கும் பொருத்தமாயிருக்கக்கூடிய ஒருபொதுவான மதத்தை வெளிப்படுத்தப் போவதாய்த் தன்கருத்தைவெளியிட்டு, இவ்வுலகிலுள்ள எல்லாப்பாஷைகளுக்கும் சொந்தமான பாஷாதத்துவ ஞானிகளையெல்லாம் வித்தியாசம் பாராட்டாமல் கலந்து பரியாலோசனை செய்திருப்பானாயின், எந்தப்பாஷையில் அந்தக் கடைசி வேதமானது வெளிப்பட வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருப்பார்களென்று நினைக்கின்றீர்கள்? ஆண்டவனுடைய கடைசிவேதமானது என்றென்றைக்கும் ஒரேவிதமாய் நிலைத்திருக்க வேண்டுமாயின் அந்தப் பாஷாதத்துவ நிபுணர்களெல்லாம் அரபிபாஷையே அதற்குரியதென்று ஸிபாரிஷ் செய்திருப்பார்கள். 1300 வருஷங்களுக்குமுன் இவ்வுலகில் பேசப்பட்டுவந்த பாஷைகளுள் பல இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விட்டன. மிகுதி யிருக்கும் இதர பாஷைகளெல்லாம் மிகுதமான மாறுபாட்டை யடைந்திருக்கின்றன. ஆனால் இன்றே நீங்கள் ஹிஜா

லுக்கு நான் போய்ப் பார்த்ததேபோல் போய்ப்பாருங்கள்; அங்கே ஆதிகாலமுதல் மாறுபாடுறாமல் ஒரேவிதமா யிருந்துவரும் அரபி பாஷையிலேயே ஆண்டவனது வஹீவேதமாகிய குர்ஆன் ஷரீப் 1300 வருஷங்களுக்குமுன் வெளியாயிற்றென்றும் அதே அரபி பாஷையானது ஒரு சிறிதும் மாறுபடாமல் இன்றைக்கும் அத்தேசத்து அரபிக் குழந்தைகளால் பேசப்பட்டு வருகிறதென்றும் செவ்வனே உணர்ந்து கொள்ளுவீர்கள்.

## முஹம்மதும் (ஸல்) ஏசுவும் (அலை)

இவ்வாறு இதரபாஷைக ளெல்லாம் அடிக்கடி மாறுபட்டுக் கொண்டிருப்பதால் நமக்கு மற்றொரு விஷயத்திலும் கஷ்டமுண்டாகின்றது. அஞ்ஞானத்தில் அலைந்துதிரியும் மாந்தர்களுக்கு முற்காலத்திலிருந்த தீர்க்கதரிசிகளின் ஜீவிய சரித்திரமானது ஒரு நல்ல வழிகாட்டியா யிருத்தல் கூடும். ஆனால் அவர்களுடைய ஜீவியசரித்திரங்களின் ஆதாரமான கிரந்தமொன்றும் இக்காலத்தில் உள்ளது உள்ளபடியே காணக்கிடைக்கவில்லை. பாஷைகளின் காலாந்தர மாறுபாட்டாலும் மனிதர்களின் மாறாத சேஷ்டையாலும் புராதன காலத்திலிருந்த மகான்களின் ஜீவிய சரித்திரங்களெல்லாம் மந்தாரத்தில் மழுங்கிக் கிடக்கின்றன. அவர்களின் உண்மையான சரித்திரம் இன்னது தானென்று நாம் தெரிந்துகொள்ள முடியாமலிருப்பதால் நமக்கொன்றும் அச்சரித்திரங்களால் பயன் விளைவதில்லை. இவ்வாறு மழுங்கிக் கிடக்கும் சரித்திரங்களுள் ஏசுநாதரின் சரிதையானது முதன்மைபெற்று நிற்கிறது. ஏசுநாதரின் சரித்திரத்தில் மிகமிகச் சிறுபான்மையானதை மட்டும் தான் நாம் இப்பொழுது காண்கின்றோம்? ஏசுநாதரின் உண்மைச் சரித்திரம் எங்கேயிருக்கிறதென்று பலர் பலவிதமான கேள்விகளைக் கேட்கின்றனர். ஏசுவின் ஜீவிய சரித்திரமே இருக்குமிடம் தெரியாமல் மறைந்துபோய்க் கிடக்கும் இக்காலத்தில் பைத்தியக்காரத் தனத்தையுடைய பல கிறிஸ்தவப் பாதிரிமார்கள் அடிக்கடி தம்முடைய ஏசுநாதரை எம்முடைய முஹம்மது நபி (ஸல்) அவர்களுடன் ஒப்பிடத் துணிந்து விடுகின்றார்கள். இப்படிப்பட்ட மனிதர்களுள், "முஸ்லிம் வோர்ல்டு" (முஸ்லிம்களின் உலகம்) என்னும் போலிப்பெயரையுடைய பத்திரிகையின் ஆசிரியரான டாக்டர் ஸ்விம்மர் என்பவர் ஒரு பைத்தியக்காரர். ஒரு தீர்க்கதரிசியுடன் மற்றொரு தீர்க்கதரிசியை ஒப்பிட்டுப் பார்ப்பது எப்பொழுதும் தீமையையே விளைக்கும். நபிமார்களுக்குள் ஒருவரோடொருவரை ஒப்பிட்டு வேறுபாடு செய்வது அறவே கூடாதென்று முஸ்லிம்களுக்குக் கடுமையான கட்டளை பிறந்திருக்கிறது. ஆனால்

-121-



எங்களுடைய நபியைத் தம்முடைய ஏசுநாதருடன் ஒப்பிட்டுக் காட்டுவதையே தம்முடைய பொழுது போக்காகக் கொண்டிருக்கும் பைத்தியக்காரப் பாதிரிமார்களுக்கு நாம் ஒரு முக்கியமான விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். அவர்கள் தங்களுடைய தீர்க்கதரிசியின் ஜீவியசரித்திர சம்பந்தமாய் வைத்துக்கொண்டிருக்கும் அத்தனை ரிக்கார்டுகளும் ஆதாரமற்ற ரிக்கார்டுகளேயென்று நாம் அவர்களுக்குக் கூறுவோம். அவர்கள் ஏசுநாதரைப் பற்றி வைத்துக் கொண்டிருக்கும் கிரந்தமெல்லாம் வெறும் புராணக்கட்டுக்கதைகளே; ஆனால் எங்கள் நபியின் ஜீவியசரித்திரமெல்லாம் சிலாசாசனம் போன்ற உண்மைக் காதையா யிருக்கிறது. இந்த உண்மைக்காதையை எவ்வாறு புராணக்கதையுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது? ஏசுநாதரின் ஜீவியசரித்திரத்தைக் குறித்து யாருக்கும் அதிகமாய்த் தெரியாது. அவருடைய முதல் முப்பது வருஷத்துச் சரித்திரமானது மர்மமான மந்தாரத்துள் மழுங்கிக்கிடக்கின்றது; பிறகு அவருடைய மூன்று வருஷக்கதையானது மிகமிகக் கொஞ்சமாகக் காணப்படுகின்றது. இந்த மூன்று வருஷ சம்பந்தமான கதையில் அவருடைய அற்புதசம்பந்தமான விஷயங்களை யெல்லாம் நீக்கிவிட்டுக் கணக்குப் பார்ப்போமாயின் ஏசுவின் சரித்திரமெல்லாம் சுமார் ஆறுபக்கங்களுக்கு மேல் போகாது. இந்த இருபதாவது நூற்றாண்டில் இந்த வுலகத்தின் ஐந்து கண்டங்களிலுமுள்ள எல்லா மாந்தருக்கும் ஏசுவின் ஆறுபக்கங்கொண்ட சரித்திரத்தால் எவ்வளவு பயனுண்டாகக் கூடுமென்று நீங்களே யோசித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட மிகச் சூன்னியமான ரிக்கார்டுகளும் ஆதியில் யாரால் சிருஷ்டிக்கப்பட்டன வென்று நாம் ஆராய்ச்சி செய்யப்புகுவோமாயின் ஏசுவின்மீது நமக்கிருக்கும் சிறிது நம்பிக்கையும் பங்கமுறுகின்றது. ஏசுவின் கதையை ஆதியில் எழுதியவர்கள் மிகமிகக்குறைவான மூளையையுடையவர்களா யிருந்தார்கள். அவர்கள் ஏசுவின் ஜீவிய சரித்திரத்தை உள்ளது உள்ளபடியே எழுத முன்வந்தவர்களல்ல; ஆனால் அவரைப்பற்றித் தத்தமக் குண்டான சொந்த அபிப்பிராயத்தை மட்டுமே எழுதிவைத்திருக்கிறார்கள். ஏசுவைப்பற்றி முதன்முதல் எழுதத் தலைப்பட்டவர்களெல்லாம் வலையர்களும் வண்ணார்களுமா யிருந்ததனால் இப்போதிருப்பதைவிட வேறு எதைத்தான் அவர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்க முடியும்? இப்படிப்பட்ட கல்விப்பயிற்சி யில்லாத சிஷ்யர்கள், ஏசுவின் உண்மையான சரித்திரத்தால் பிற்காலத்து மனிதர்களுக்கு எவ்வளவு நன்மை விளையக் கூடுமென்பதை நன்குணர்ந்து கொள்ளாமல் தங்களுடைய சொந்தமான மனோகிருப்திக்காக அவருடைய அற்புதங்களி

லும் ஆச்சரியமான கதைகளிலுமே தங்களுடைய கவனத்தையெல்லாம் செலுத்தியிருந்தது ஓர் ஆச்சரியமன்று. மேலும் ஏசுநாதர் மலைமேல் செய்த மந்திரோபதேசத்தை நாம் சிறிது ஆழ்ந்து நோக்குவோமாயின் அதில் எழுதப்பட்டிருக்கும் விஷயமெல்லாம் மிஷ்னு, தால்மூத், பைலோ முதலிய யூதகிரந்த கர்த்தாக்களின் எழுத்தில் காணப்படுவதை நாம் அறிந்து கொள்ளுவோம். இன்னும் கிறிஸ்தவர்கள் அதிகமாகப் பெருமை பாராட்டிக்கொள்ளும் சில உவமைக் கதைகளெல்லாம் ஏசுவின்காலத்துக்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் ஜீவித்திருந்த கௌதமபுத்தரின் உபமானக் கதைகளில் காணப்படும். ஏசுவின் சம்பந்தமாக இப்படிப்பட்ட மிகப் பூச்சியமான ஆதாரமற்ற ரிக்கார்டுகளை வைத்துக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ நண்பர்கள் எவ்வாறு தம்முடைய தீர்க்கதரிசியை நம்முடைய நபிபெருமானாருடன் ஒப்பிடமுடியும்? ஆனால் இப்படிப்பட்ட ஆதாரமற்ற விஷயங்களை வைத்துக்கொண்டு இவ்வுலக முழுவதையும் கிறிஸ்து மதத்தில் சேர்த்து விடலாமென்று பிரமைகொண்டு திரியும் கிறிஸ்தவப்பாதிரி மார்களின் கண்களையெல்லாம் நன்றாக விழிக்கச்செய்யும் பொருட்டு ஏசுவின் சம்பந்தமாகவும் முஹம்மது நபியின் (ஸல்) சம்பந்தமாகவும் நான் அதிசமீபத்தில் ஒரு நூல் எழுதுவதாக எண்ணியுள்ளேன்.

இன்று யான் பேசத்தொடங்கிய விஷயத்தை விட்டுச் சிறிது அப்பால் சென்று விட்டேனென்று அஞ்சுகிறேன். நான் ஆரம்பத்தில் சொல்லியதுபோல் நம்முடைய மனத்திலிருக்கும் எண்ணங்களைப் பிறருடைய மனத்தில் புகுதவைக்கும் கருவியானது நமது சொற்கள் தான். இவ்வாறே ஆண்டவனது மனத்திலிருக்கும் எண்ணங்களெல்லாம் நம்முடைய மனத்திற்குள் அவனுடைய அருள்வாக்கால் நுழைக்கப்படுகின்றன. ஆனால் பல்லாயிரக் கணக்கான வருஷங்களுக்குமுன் ஆண்டவனால் வெளிப்படுத்தப்பட்ட வேதங்களெல்லாம் காலாந்தரத்தில் பாஷை வேறுபாட்டாலும் வேறு பல காரணங்களாலும் மாறுபட்டுக்கிடக்கும் போது அப்புராதன வேதங்களின் உதவியைக்கொண்டு நாம் நன்மை பெறமுடியுமோ? ஆதலின் ஏசுவின் வேதமாகிய இன்ஜீலும் அவருடைய காலத்துக்குப் பின் மாறுபடத்தலைப்பட்டு விட்டதனால் ஆண்டவன் கடைசியாக இவ்வுலகத்துக்கெல்லாம் பொதுவாகிய ஓரே வேதத்தை இவ்வுலக முடிவுகால மட்டும் மாறுபடாமலிருக்க வேண்டுமென்று நாடியிருப்பானாயின் அவ்வேதத்தை வெளிப்படுத்தற்குரிய பாஷையானது என்றும் மாறாத அரபிபாஷையாகத் தான் இருக்கவேண்டுமென்று நாமெல்லாம் இப்பொழுது நன்கு தெரிந்து கொண்டோம்.



இப்படிப்பட்ட ஹிஜாஸின் பாஷையில்தான் இவ்வுலகத்தின் எல்லாத்தேசத்துக்கும், எல்லாக் காலத்துக்கும் எல்லாச் சாதியாருக்கும் பொருத்தமாகிய என்றென்றைக்கும் நிலைத்திருக்கக்கூடிய கடைசி வேதமாகிய புர்க்கானுல் மஜீதென்னும் குர்ஆன்ஷரீபை ஆண்டவன் வெளியாக்கி யிருக்கிறான். அரபிபாஷையானது ஆதிமுதல் ஒரு சிறிதும் மாறுபாடடையாமல் இருந்து வருவதேபோல் அப்பாஷையில் வெளியான கடைசி வேதமும் இதுவரையில் ஒரு சிறிதும் மாறுபாடுறாமலே இருந்து வருகின்றது. இஃதேபோல் இனியும் இவ்வுலக முடிவுகாலமட்டும் இவ்வேதம் இப்படியே பரிசுத்தமாயிருந்து வருமென்பதை இனிவரும் சந்ததியார்கள் செவ்வனே தெரிந்து கொள்ளுவார்கள்.

## நாயகவாக்கியம்

1. எண்ணங்களுக்குத்தக்கபடி காரியங்கள் தீர்மானிக்கப்படும்.

2. ஒரு முஸ்லிமுடைய உண்மையான நடத்தைக்கு அத்தாக்ஷியாதெனின் அவர் தம்முடைய தல்லாத காரியத்தில் கவனம் செலுத்தாதிருப்பதுதான்.

3. ஒருவர் தமக்கு வேண்டுமென்று விரும்பும் வஸ்துவைத் தம்முடைய சகோதரருக்கும் வேண்டுமென்று விரும்பினாலல்லாமல் அவர் ஓர் உண்மையான நம்பிக்கையுடையவராயிருப்பது முடியாது.

4. நியாயமான வஸ்து இன்னதென்பது ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது; அவ்வாறே அநியாயமானதும் இன்னதென்றும் புலப்படுகின்றது. ஆனால் இவ்விரண்டுக்குமிடையில் சில சந்தேகமான வஸ்துக்கள் காணப்படுகின்றன; அவற்றினின்றும் விலகிக்கொள்வதே நன்மையாய்க் காணப்படுகின்றது.

(அபூதாவூது (ரலி) அவர்களின் அபிப்பிராயப்படி இந்நான்கு திருவசனங்களும் மனிதருடைய வைதிக மார்க்கத்துக்கு இன்றியமையாதனவாகவும் இஸ்லாமிய சட்டத்தின் சுருக்கத்தைத் தமக்குள் அடக்கிக்கொண்டனவாகவும் அமைந்திருக்கின்றன.)

5. அல்லாஹுத் தஆலாவின் குணதிசயங்களை நீங்கள் நிரம்பப்பெற்றவராயிருங்கள்.

6. கல்விக்கு உயிரைக் கொடுத்தவன் ஒரு போதும் மரணமாவதில்லை.

7. கல்விமான்களை யார் கண்ணியப்படுத்துகிறாரோ அவர் என்னைக் கண்ணியப்படுத்தியவராவார்.

8. காலையிலும் மாலையிலும் கடவுளை வணங்குங்கள்; பகற்காலத்தை உங்கள் தொழிலில் கழியுங்கள்.

9. தனக்காகவாவது பிறருக்காகவாவது வேலை செய்யாதவன் ஆண்டவனுடைய சன்மானத்தைப் பெறமாட்டான்.

10. வேலை செய்வதற்கு வேண்டிய தேகதிடமும் சௌகரியமும் வாய்க்கப்பெற்ற ஒருவன் தனக்காகவாவது பிறருக்காகவாவது வேலைசெய்யாதிருப்பானாயின் அவனுக்கு ஆண்டவனுடைய அருட்பெருஞ்சோதி வாய்க்கமாட்டாது.

11. கண்ணியமான முறையில் தங்களுடைய ஜீவனோபாயத்துக்கு வேண்டியதைச் சம்பாதிப்பவர்கள் ஆண்டவனிடத்தில் அருமையான பிரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

12. தன்னுடைய சொந்தத் தொழிலால் தனக்குவேண்டிய ஜீவனோபாயத்தைச் சம்பாதித்துக் கொண்டு யாசகம் வாங்காமல் காலங் கழிப்பவரிடத்தில் ஆண்டவன் காருண்யமுள்ளவனாயிருப்பான்.

13. கொடையிலெல்லாம் சிறந்தது இடது கைக்குத் தெரியாமல் வலது கையால் கொடுப்பதுதான்.

14. இரகசியமாகச் செய்யும் தருமந்தான் ஆண்டவனுடைய ஆத்திரத்தைத் தணிக்கும்.

15. பேசும்போது பொய்பேசுகிறவனும் தான் செய்த வாக்குறுதியை மீறிநடப்பவனும் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட அமானத்தில் நம்பிக்கை மோசம் செய்பவனும் எவனோ அவன் என்னுடைய கூட்டத்தில் சேர்ந்தவனாகான்; ஆனால் தன் உள்ளத்தில் மார்க்க விரோதியான கலகக்காரனாயிருக்கிறான்.

## கலம்பகம்

### கர்த்தரின் வசனமோ பைபிளென்பது?

இவ்வுலகிலுள்ள பலகோடி மனிதர்களால், மன்பதைக்காக அனுப்பப்பட்ட "ஜீவ ரக்ஷண்யகர்த்தா" வானவர் இயேசு கிறிஸ்து நாதர்தானென்று கருதப்பட்டுவரும் இக்காலத்தில் அந்த நாதருடைய ஜீவிய சரித்திரமும் அவரது உபதேசமொழிகளும் அழிந்து போய்க்கிடப்பதை நோக்கும்போது நமக்கு மெத்த ஆச்சரியந்தான் உண்மையாகவே உண்டாகிறது. ஏசுவுக்குப் பின்னால் மத்திய காலத்தில் வாழ்ந்திருந்த மக்களெல்லாம் பைபிள் வேதமானது ஏசுவின் உண்மையான உபதேசமென்றும் அதிலுள்ள வாக்கியங்க



ளெல்லாம் கடவுளின் சொந்த வசனங்களென்றும் ஒருவாறு நம்பி வந்தார்கள். ஆனால் இக்காலத்தில் இவ்வுலகமானது நாளுக்கு நாள் அறிவிலும் நாகரீகத்திலும் முதிர்ச்சியடைந்து வருவதால் மாதாகோவிலி லிருக்கும் குருமார்களே பைபிள் வேதமென்று அழைக்கப்படும் அந்தக் கிரந்தமானது சாதாரண மனிதர்களால் எழுதிச்சேர்க்கப்பட்ட ஒரு சாமான்ய நூல்தானென்று தற்காலத்தில் பகிரங்கமாக ஒத்துக்கொண் டிருக்கின்றனர். கார்டினல் போர்ண், ரோமன்கதோலிக் ஆர்ச்பிஷப்கள், இங்கிலாந்திலும் வேல்ஸிலுமுள்ள பிஷப்மார்கள் ஆகிய அனைவரும் கையொப்பமிட்டு 1921 ஜுலை 17, 18, 19-ம் தேதிகளில் கேம்பிரிட்ஜ் நகரில் நடந்தேறிய "நாஷனல் கதோலிக் பைபிள் காங்கிரஸ்" மகாசபையின் சம்பந்தமாக ஒவ்வொரு மாதாகோவிலிலும் வாசித்துக்காட்டப்பட வேண்டுமென்று ஒரு சுற்று விளம்பரம் அனுப்பி யிருந்தார்கள். இக்கடிதத்தில் பின்வரும் விஷயம் வெகு விளக்கமாய் எழுதப்பட்டிருந்தது: "கிறிஸ்தவர்களென்று தம்மைச்சொல்லிக் கொள்ளும் மனிதர்களுள் மிகப் பெரும்பான்மையோர் பைபிள் வேதத்தை இனிமேல் 'சர்வலோக தயாபரரான கர்த்தர் அருளிச்செய்த சத்திய வேதம்' என்னும் உண்மையான மேற்கோளை உறுதியாக ஒத்துக் கொள்வார்களென்று நினைப்பதற்கு ஒன்றும் ஏதுவில்லை. ஆனால் இதற்கு மாறாக இக்காலத்தில் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளென்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் பாதிரிமார்களுள் பலர், மனிதர்களால் எழுதிச் சேர்க்கப்பட்ட ஒரு தொகுதி நூலில் எவ்வளவு மரியாதைகாட்டுவார்களோ அவ்வளவு மரியாதையைத்தான் நம் பைபிள் வேதத்திலும் காட்டி வருகின்றனர்; ஆனால் அதைவிட இன்னும் அதிக கேவலமாய் மதிக்க இது வரையில் ஒருவரும் ஆரம்பிக்கவில்லை யென்று கூறலாம்."

ஆனால் பைபிள்வேத முழுதும் மனிதர்களாலேயே புரட்டி எழுதப்பட்டிருக்கிற தென்றும் இக்காரணத்தாலேயே அதைமெய்யான தேவவேதமென்று நம்பவேண்டாமென்றும் எமது குர்ஆனே கரீம் வேதமானது குறிப்பிடும்போது மட்டும் இப்படிக் குர்ஆன் ஷரீபு கூறுவது தப்பென்று கிறிஸ்தவ நண்பர்கள் வாதிப்பதுண்டு. இது விந்தையே. ஆனால் இக்காலத்தில் பைபிள் ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்துவரும் உண்மையைத்தான் 1300 வருஷங்களுக்கு முன் எமது குர்ஆன் ஷரீபு வெளிப்படையாய்க் கூறியிருக்கின்றது: "அந்தப் புஸ்தகத்தை (பைபிளை)த் தம்முடைய சொந்தக்கரத்தினால் எழுதிக்கொண்டு பிறகு, 'இது தேவனிடத்தி லிருந்து' வந்திருக்கிறது,' என்று கூறி அதற்காக ஒரு சிறு கிரயத்தைப் பெறும்பொரு

ட்டுப் பொய் சொல்கின்றார்களே, அவர்களுடைய கதி பிறகு அதோ கதிதான்''—(குர்ஆன், 2:79). இதுதான் சத்தியம். இது தான் இன்னும் பிரகாசமாகும்.

*     *     *     *     *     *

### சிங்கப்பூரில் வோக்கிங் மிஷன்.

கனம் காஜாகமாலுத்தீன் சாஹிப், பி. ஏ. எல் எல். பி., அவர்கள் சில மாதங்களுக்கு முன் தம்முடைய தேகாரோக்கியத்தினிமித்தம் சிங்கை நகருக்கு விஜயம் செய்திருந்தது நமது நண்பர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அப்பொழுது அப்பகுதியிலுள்ள முஸ்லிம்களுக்குப் பலவிஷயங்களைக் குறித்துப் பலவகை உபன்யாசங்களைச் செய்து கொண்டிருந்தாரென்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. சிங்கைமாநகரிலுள்ள முஸ்லிம்களெல்லோரும் ஆலிஜனாப் காஜா சாஹிப் அவர்களுக்கு வெகுவிமரிசையான உபசரிப்பெல்லாம் செய்ததோடு வோக்கிங் நகரிலுள்ள இஸ்லாம் மதப்பிரசாரசபையை ஆதரிக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் ஒரு சங்கத்தையும் ஏற்படுத்தி விட்டார்கள். சிங்கப்பூரிலுள்ள பிரபல்யமான பிரமுகர் ஜனாப் காதிர் சுல்தான், ஜே. பி., அவர்கள் இச்சங்கத்தின் போஷகராகவும் டைரெக்டராகவும் இருக்க மனமிசைந்துள்ளார். இஸ்லாமார்க்கப்பிரசாரத்தில் இவர் மிகுதியும் ஈடு பட்டவர். இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காக மிஸ்டர் சுல்தான் எடுத்துவரும் பெரு முயற்சியெல்லாம் மிகுதியும் மெச்சற்பாலனவே. ஜனாப்காஜா சாஹிபின் விஷயத்தில் இவர்கள் அதிகமான அபிமானம் காட்டினார்களென்பதை அறிய அதிக சந்தோஷப் படுகின்றோம்.

*     *     *     *

### காஜாவின் வரவேற்பு.

சிங்கை நகரில் கனம் காஜாசாஹிப் அவர்கள் தங்கியிருந்த இரண்டு மாதகாலம் வரையில் அவ்வூரிலுள்ள பொது ஜனங்களின் ஆதரவில் அவர் அதிக உற்சாகத்துடன் காலங்கழித்து வந்தார். காஜா சாஹிபை அம் முஸ்லிம் சகோதரர்கள் அதிக ஆவலுடன் ஆதரித்து வந்ததோடு நில்லாமல் அன்னாருக்கொரு உபசாரப்பத்திரமும் வாசித்துக்கொடுத்தார்கள். "இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காக இங்கிலாந்திலும் இன்னும் இதர நாடுகளிலும் காஜா சாஹிப் செய்துவரும் ஊழியத்தின் பெருமையை நன்குணர்ந்து கொண்டு அதற்காக அவருக்கு நன்றிகூற வேண்டுமென்னும் ஆவலுடன்'' அந்த உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அது வருமாறு:



"ஹாஜி, காஜாகமாலுத்தீன்சாஹிப், பி. ஏ. எல் எல். பி., அவர்களுக்கு, சிங்கப்பூர். ஐயா! இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காக இங்கிலாந்திலும் இன்னும் இதர நாடுகளிலும் நீங்கள் செய்துவரும் ஊழியத்தின் பெருமையை நாங்கள் நன்குணர்ந்து கொண்டதன் அறிகுறியாகத் தாங்கள் இச்சிங்கைநகரைவிட்டுப் புறப்படும் சமயமாகிய இவ்வேளையில் எங்களுடைய மனமார்ந்த நன்றியறிதலைத் தங்களுக்குச் சமர்ப்பிக்க முன்வந்திருக்கிறோம்.

மேல் நாடுகளில் முஸ்லிமல்லாத இதரஜாதியார்கள் இஸ்லாமார்க்கத்தைத் தாறுமாறான வழியில் தப்பாக உணர்ந்துகொண்டும் அதை அப்படியே பிறருக்குப் போதித்துக் கொண்டும் வந்தகாலம் ஒரு காலமென்பது உங்களைப்போன்ற ஏனை முஸ்லிம்களுக்கெல்லாம் நன்றாக ஞாபகத்திலிருக்கலாம். தாங்கள் மேல் நாட்டுக்குச் சென்று தங்களுடைய அயர்ச்சியில்லா உழைப்பாலும் சாமர்த்தியத்தாலும் அங்குள்ள மனிதர்களெல்லாரும் இஸ்லாத்தின் மேன்மையைப்பற்றிச் செவ்வனே அறிந்து கொள்ளும்படி செய்துவிட்டீர்கள். உங்களுடைய "இஸ்லாமிக் ரேவியூ'' என்னும் மாதாந்த சஞ்சிகையானது மேல் நாட்டுக்கொரு இஸ்லாத்தின் தீபந்தாங்கியைப் போல் இருக்கிறதென்று நாங்கள் சொல்வோமாயின் அஃதொன்றும் மிகையாக மாட்டாது.

தங்களுடைய ரெவியூ (பத்திரிகை) இப்பகுதிகளுக்கு வந்தபோது உங்களுடைய சகோதரர்களாகிய நாங்கள் மேல் நாட்டில் தாங்கள் செய்து வரும் பேரூழியம் இன்னதென்று தெரிந்துகொண்டோம்; இஸ்லாமிய கொள்கைகளை எங்கும் பரத்துவதற்காகத் தாங்கள் செய்திருக்கும் பரித்தியாகம் இப்படிப்பட்டதென்று நாங்கள் நன்கு தெரிந்துகொண்டதனால் தங்களுடைய காரியத்தில் பூரண வெற்றியுண்டாக வேண்டுமென்று பிரார்த்தனை புரிந்து வந்தோம். ரெவியூவில் தங்களுடைய போட்டோப்படத்தைப் பார்வையிட்ட பின்னர் தங்களையே நேரில் காணவேணுமென்று அதிக ஆர்வமுள்ள[illegible]வர்களாயிருந்தோம்; எங்கள் எண்ணம் பூர்த்தியானதற்காக அ[illegible]ல்லாஹு தஆலாவுக்கு எல்லாவந்தனமும் செலுத்துகிறோம்.

ஐயா! தங்களுடைய நாமதேயமானது இவ்வுலகின் நாலா பக்கத்திலும் ப[illegible]ரவியிருக்கின்றது. தாங்கள் இங்கு விஜயம் செய்தது முதல் தங்[illegible]களுடைய பக்திப் பேச்சுக்களிலிருந்தும் பகிரங்கப் பிரசங்கங்கள்[illegible] லிருந்தும் பற்பல விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறோம். [illegible] ஏழைகளும் பணக்காரர்களும் இளையோர்களும் முதியோர்

களும் தங்களுடைய உற்சாக மூட்டக் கூடிய உல்லாசமான குண விசேஷத்தையும் கபடமற்ற தன்மையையும் உண்மைக்குழைக்கும் ஊக்கத்தையும் மிக நன்றாக மெச்சுகின்றனர்.

இங்கிலாந்திலுள்ள மதப்பிரசார சபையின் சம்பந்தமான வேலையானது மிகப் பிரயாசையுள்ளதாகவும் பக்தி வைராக்கிய முள்ளதாகவும் இருந்து வந்ததனால் தங்களுடைய தேகா ரோக்கியமானது குறையத் தலைப்பட்டதென்பது எங்களுக்குத் தெரியும்; அதனால் சுகாதார நிமித்தமாகவே இப்பகுதிகளுக்குத் தாங்கள் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்தீர்களென்பதும் தெரியும். அவ்வாறு தாங்கள் இளைப்பாற வேண்டியதை விட்டு விட்டு இங்கேயும் தங்களுடைய மேலான ஊழியத்தைச் சிறிதும் சலிப்பில்லாமல் தாங்கள் செய்து வருவதை நாங்கள் கண்ணாரக் காண்கின்றோம். இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காக ஓயாமல் உழைப்பதற்கு வேண்டிய மனோதிடத்தையும் பூரண சுகத்தையும் தங்களுக்குக் கொடுத்தருளுமாறு நாங்கள் அல்லாஹுத் தஆலாவிடத்தில் வேண்டுதல் புரிகின்றோம்.

முடிவாக, தங்களுடைய யாத்திரை மனோரம்மியமான யாத்திரையாய் முடியவேண்டுமென்று நாங்கள் விரும்புவதோடு தங்களுக்குத்திடமான தேகா ரோக்கியத்தைக் கொடுக்கும்படியும்இங்கிலாந்திலுள்ள தங்களுடைய மதப்பிரசார சபையானது மேன் மேலும் விருத்தியடையும் படியும் அல்லாஹுத் தஆலாவினிடத்தில் துஆ(வேண்டுதல்) செய்கின்றோம். ஆமீன்.

சிங்கப்பூர், 1921 ௵ மார்ச்சு ௴ 26௳

* * * * * *

மிஸ்டர் பிக்தால்:—மிஸ்டர் மார்மடியூக் பிக்தால் என்பவர் சென்ற ஒரு வருஷகாலமாக "பம்பாய்க் கிரானிக்கிள்" பத்திரிகையின் ஆசிரியராக இருந்துவந்தார். அவர் ஜாதியில் ஆங்கிலேயராயினும், கனம் காஜா சாஹிபின் உபதேசத்தால் இஸ்லாம் மார்க்கத்தைச் சேர்ந்தவர். அவர் தமது உத்தியோகத்தை ராஜினாமா செய்துவிட்டார். சமீபத்தில் இங்கிலாந்துக்குப் புறப்படப்போகிறார். பம்பாய் கவர்னருக்கு அவர் சிநேகிதராகையால், அவர் அவரைப்பற்றிப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்ததாகவும் துருக்கி சம்பந்தமான துறையில் அவருக்கு ஓர் உத்தியோகம் கொடுக்கப்படலாமென்றும் பம்பாயில் பிரஸ்தாபமிருக்கிறது.



## இந்திய முஸ்லிம்களுக்கு.

## மகாத்மாவின் ஸ்ரீ முகம்.

### மனச்சோர்வின்றி உழையுங்கள்.

எனது அருமையான சகோதரர்களே! அலி சகோதரர்கள் கைதியான விஷயம் ஒவ்வொரு இந்தியரின் மனத்தையும் வாட்டி விட்டது ஒரு புறமிருக்க, உங்களை அது எந்த அளவுக்குச் சோதித்து விட்டதென்பதை நான் அறிவேன். மகா தைரியம் வாய்ந்த அலி சகோதரர்கள் மஹத்தான தேசாபிமானிகள். அவர்களுக்கு இஸ்லாமே பிரதானம்; மற்றதெல்லாம் அப்புறந்தான். இஸ்லாத்தின் மகா உத்கிருஷ்டமான போதனைகளெல்லாம் அலிசகோதரர்களிடத்தில் ஐக்கியப்பட்டிருக்கின்றன. இஸ்லாத்தின் அந்தஸ்தை உயர்த்த இந்தியாவில் இவ் விருவரையும் விட அதிகமாகப்பாடு பட்டவர் கிடையார். கிலாபத்துக்குப் பரிகாரம் தேடவும் அவர்களைப் போல் உழைத்தவர் கிடையார். அவர்கள் சத்திய வந்தர்கள். சிந்த்வாராவில் அவர்கள் பந்தோபஸ்திலிருந்த போதுங்கூட ஸத்தியத்தையே பேசினார்கள். எத்தனையோ நாள் அவர்கள் பந்தோபஸ்திலிருந்தும் அவர்களுடைய நல்ல குணங்கள் சிறிதும் மாறவே யில்லை. சிறைக்குள் சென்ற போது இருந்த மாதிரியே வெளி வந்தபோதும் இருந்தனர். சிறையிலிருந்து வெளிவந்தபின் உண்மையான தேசியக் கட்சியாக அவ்விருவரும் உழைத்துவந்ததை நாம் பெருமையுடன் கவனித்து வந்திருக்கிறோம். தங்களுடைய அரிய குணத்தினாலும், திறமையான வேலையினாலும், முஸல்மான்களின் மனத்தில் ஓர் மஹத்தான உணர்ச்சியை அவர்கள் உண்டுபண்ணி விட்டனர். வேறெந்த முஸல்மானும் அப்படிப்பட்ட வேலை செய்ததில்லை. இதனால்தான் அவர்களிடத்தில் உங்களுக்கு நேசம் ஏற்பட்டது. அவர்களை விட்டுப் பிரிந்திருக்க எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. எனது இரு கைகளும் ஒடிந்து போய்விட்டன. முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஷவுகத்அலி எனக்கு அத்யந்த மந்திரியாயிருந்தார். சரியான வழிகாட்டியாகவுமிருந்தார். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு இவர்களிருந்த வரையில் பயமே யில்லை; அவ்வளவுதூரம் அதற்காக உழைத்தனர். அவர்கள் இப்போதில்லையே யென்று நாம் ஏங்கி நிற்கக்கூடாது; ஆண்டவனை நம்பி நாம் வேலை செய்யவேண்டும்; அதைரியப்படலாகாது. அவர்களுடைய ஆத்மா நம்மைச் சூழ்ந்துகொண் டிருக்கிறது. சிறைக்குச் செல்வதனால் அவர்கள் நமக்கு அதிகமான ஊழியம் புரிந்து வருகிறார்கள். கஷ்டப்பட்டால்தான் சுகமுண்டு. அஹிம்ஸையே பிரதானம். பட்டங்களை விடுவதும்

பள்ளிகளை விடுவதும் வெகு சாதாரணமான தியாகங்கள். சிறைவாசம் புரியவும் தூக்கிலிடப்படவும் நாம் தயாராக இருக்க வேண்டும். நாம் எந்த அளவுக்குக் கஷ்டப்படுகிறோமோ அந்த அளவுக்கு நமது லட்சியம் நிறைவேறும்.

பெரிய கூட்டங்களும் ஆடம்பரங்களும் நமக்கு ஜயத்தைக் கொடுக்கா வென்றும் சாந்தமாகக் கஷ்ட மனுபவிப்பதினாலேயே நமக்கு ஜயம் கிடைக்குமென்றும் நாம் எவ்வளவு சீக்கிரம் உணர்ந்து கொள்ளுகின்றோமோ அவ்வளவு சீக்கிரம் நமக்கு வெற்றிகிடைக்கும். உங்களுடைய கக்ஷியை என்னுடைய கக்ஷியாகவே நான் கருதுகின்றேன். ஏனெனின் உங்களுடைய கட்சி நியாயமானதென நினைக்கின்றேன். உங்களிற் சிறந்தவர்களிடமிருந்து கிலாபத்தானது சிறந்த லக்ஷியமென்று உணர்ந்துகொண்டேன். நீங்கள் ஒரு தவறான காரியத்தை ஸ்தாபிக்கவோ தவறான ஆட்சியை நிலைநிறுத்தவோ சண்டையிடவில்லை. ஐரோப்பாவில் துருக்கியர் கண்ணியமானவர்களாயிருப்பதால் அவர்களுக்கு நீங்கள் பக்கபலமாகவிருக்கின்றீர்கள். ஐரோப்பியர்கள் அதிலும் முக்கியமாக ஆங்கிலேயர், துருக்கியர் முஸ்லிம்கள் என்றதனாலேயே அவர்களைத் துவேஷிக்கின்றனர். துருக்கியர்கள் மற்றவர்களைவிடத் தாழ்ந்தவர்களென்பதற்காக அவர்களை ஆங்கிலேயர் துவேஷிக்கவில்லை. துருக்கியர்களுக்காக நீங்கள் போராடுவது உங்கள் மதத்தின் பரிசுத்தத்திற்கும் பெருமைக்குமே போராடுவதாகின்றது. ஆகையால் உங்கள் லட்சியத்தையடைய நீங்கள் பரிசுத்தமான வழிகளைக்கண்டுபிடித்திருக்கின்றீர்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்கள் மதத்தைச் சரியாகக் கவனிக்காமலிருக்கின்றார்கள். நாம் ஒவ்வொருவரும் கடவுளின் உண்மையான குழந்தைகளாக ஆகாமல் நமது மதத்தைப் பிறர் கவனிக்கவேண்டுமென்றும் நமக்காகப் பிறர் இறக்கவேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றோம். ஆனால் நாம் இப்பொழுது கண்டு பிடித்திருக்கும் வழி நம் ஒவ்வொருவரையும் கடவுளின் பக்கம் திரும்பச் செய்கின்றது. நாம் யாரோடு ஒத்துழைக்க மறுக்கின்றோமோ அவர்கள், ஆக்ஷேபிக்கத்தக்க வழிகளால் தங்கள் காரியத்தைச் சாதிக்கப்பார்க்கின்றனரென்பதே ஒத்துழையாமையின் கருத்து. ஆகவே நாம் நமது எதிரிகளின் வழிகளைவிட்டு வேறுவழிகளைப் பின்பற்றினால் தான் கடவுளின் அருள் நமக்குக் கிடைக்கும். நமது நடவடிக்கைகள் மாத்திரம் கவர்ன்மெண்ட்டு நடவடிக்கைகளுக்கு விரோதமாக விருக்கும் பட்சத்தில் நாம் குறிப்பிட்ட சொற்பகாலத்தில் வெற்றியடையலாம். கவர்ன்மெண்டார் கடைசியாகக் கடைப்பிடிப்பது பலாத்காரமாக விருப்பதால் நமது



இயக்கம் பலாத்கார மின்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. இரண்டு கைகளையுங் கட்டினாலொழிய ஓசைகிளம்பாது. ஆகவே கவர்ன்மெண்டாரின் பலாத்காரத்துடன் நாம் போட்டிபோட்டால்தான் சங்கடம் நிகழவிடமிருக்கும். நாம் பலாத்கார மின்மையை அனுஷ்டித்தால் பலாத்காரத்தை உபயோகித்த கவர்ன்மெண்ட்டு ஸ்தம்பித்து விடும். ஆனால் மனம் வாக்கும் காயங்களால் நாம் பலாத்கார மின்மையை அனுஷ்டிக்க வேண்டும். நீங்கள் செய்து கொண்டிருக்கும் உறுதிக் கேற்பப் பலாத்காரத்தி லிறங்காமல் பலாத்கார மற்ற ஒத்துழையாமைத் திட்டத்தில் நம்பிக்கைவைத்து நடக்க வேண்டும். கோபம் கொள்ளச் சமயம் ஏற்பட்டபோதும் பலாத்கார மின்மையால் நாம் இந்த வருஷத்திற்குள் பூரா வெற்றியடைய முடியுமென்பதை உணரும்படி எல்லா முஸ்லிம்களையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பலாத்காரத்திலிறங்காமலிருப்பது சாத்தியமல்லாத காரியமுமன்று. ஹிந்துக்களல்லாமல் 7 கோடி முஸல்மான்களும் ஒரே வழியாக இருந்தால் என்ன பலனேற்படுமென்பதைச் சிந்தியுங்கள். பட்டதாரிகள் பட்டங்களைவிட்டும், வக்கீல்கள் தொழில்களை நிறுத்தியும், மாணவர்கள் கலாசாலைகளைப் பஹிஷ்கரித்தும், சட்டசபைகளைத் தலைவர்கள் வெறுத்து மிருந்தால் இதற்குள் நாம் வெற்றி பெற்றிருக்கமாட்டோமா? ஆனால் நம்மில் சிலர் பயங்கொள்ளிகளென்பதையும் நாம் கவனிக்கவேண்டும். 7 கோடி முஸல்மான்களும் 22 கோடி ஹிந்துக்களுமிருந்தும் உண்மையானவர்கள் சிலரேயுளர். எனவே இது வரையில் நாம் வெற்றியடையாமலிருப்போமாயின் அதற்குக் காரணம் நாமே. நமது போராட்டம் மதப்போராட்டமென்று நாம் சொல்லுவது வாஸ்தவமாயின் நாம் பொறுமையை இழக்கவேண்டிய அவசியமில்லை.

என்னைப்போல் அலி சகோதரர்களும் பலாத்காரத்தைத் தூண்டக்கூடியவர்களல்லவென்பதை நான் அறிவேன். அவர்கள் தோஷமற்றவர்கள். இஸ்லாத்திற்காகவும் தேசத்திற்காகவும் தங்களாலியன்றவளவு அவர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். கிலாபத், பஞ்சாப் அநீதிகளுக்குப் பரிகாரமும் இந்த வருஷக் கடைசிக்குள் சுயராஜ்யமும் ஏற்படாவிடின் அந்தப்பழி உங்களையும் என்னையும் சாரும். நாம் பலாத்காரத்திலிறங்கக் கூடாதாயினும் மௌனம் சாதித்திருக்கக் கூடாது. துருப்புகளுடைய கடமையைப்பற்றி அலி சகோதரர்கள் செய்த உபதேசத்தை நாமும் செய்து சிறைவாசத்தைத் தேடிக் கொள்ளவேண்டும். நம்மில் சிரேஷ்டர்கள் போய்விட்டாலும் போராட்டம் நின்றுவிடுமென்று பயப்படவேண்டியதில்லை. அவ்

விதம் நிற்காமலிருக்க முடியாவிட்டால் நாம் சுயராஜ்யம் பெறவாவது, கிலாபத், பஞ்சாப் அநீதிகளுக்குப் பரிகாரம் தேடவாவது யோக்கியதையுடையவர்களல்ல. சோல்ஜர்களாகவோ, சிவில் பதவியிலோ இந்தக் கவர்ன்மெண்டின் கீழ் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஊழியம் செய்வது பாபமென்று ஆயிரக்கணக்கான கூட்டங்களில் நாம் சொல்லவேண்டும்.

நாம் எல்லா அன்னிய நாட்டு ஆடைகளையும் பஹிஷ்கரிப்பதில் கருத்துச் செலுத்தி நம்முடைய வீடுகளிலேயே ராட்டினங்களையும் தறிகளையும் ஏற்படுத்தி நமக்குவேண்டிய ஆடைகளை உற்பத்தி செய்துகொள்ளவேண்டும். நமது நாட்டிற்குச் சுயேச்சையும் கிலாபத்துக்குப் பரிகாரமும் பெற அஹிம்ஸா தர்மத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறதாவென்று இதிலிருந்து தெரிந்துவிடும். ஹிந்து முஸ்லிம் ஐக்கிய பாவத்திற்கும், நமது திட்டத்தில் நமக்கே நம்பிக்கை இருக்கிறதா வென்பதற்கும் இது தகுந்த சோதனையாகும். அன்னிய ஆடைகளை அடியுடன் பஹிஷ்காரம் செய்த ஒருமாத காலத்திற்குள் நமது லட்சியம் கைகூடி விடும் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். ஏனெனின் அதனால் அதிக்கிரமங்கள் ஏற்படாமல் தடுத்து அவசியமானால் சட்டங்களைமீறி நடக்கவும் நமக்கு வன்மை ஏற்பட்டு விடும்.

அன்னிய ஆடைகளைப் பஹிஷ்கரித்து, நம்முடைய வீடுகளிலேயே ஆடைகளை உற்பத்தி செய்துகொள்ளும் அஹிம்ஸா தர்ம முறையைத் தவிர நமது புண்களை ஆற்றுவதற்கு வேறு மருந்து நான் சொல்வதற்கில்லை.

தங்களுடைய நண்பரும் சகாவுமான,
(ஒப்பம்) எம். கே. காந்தி.
“சுதேசமித்திரன்.”

[மகாத்மாவின் அபிப்பிராயத்தை யாம் முழுதும் அங்கீகரிக்கின்றோம்; இதில் கூறப்படும் புத்தியையும் யுக்தியையும் கடைப்பிடியாமற் போவோமாயின் நாம் நம்முடைய மதக்கடமையில் தவறியவராவோம். ப-ர்.]

## இஸ்லாத்தின் தத்துவம்

### (தன்னை யறிவது)

“நீ உன் இறைவனுடைய திருநாமத்தை நினைவில் வைப்பாயாக; மேலும் எல்லாவற்றையும் விட்டொழித்து அவன் பக்கல் வருவாயாக,” என்று அல்லாஹுத் தஆலா தன் திருவேதத்தில் கூறியுள்ளான். ஆண்டவனுடைய திருநாமத்தை நினைவில் வைத்து எல்லாவற்றையும் விட்டொழிப்பதன் தாத்பரியம் யாதெனின் சகல பற்றுக்களையும் அறுத்து அவற்றிற்குத் தலைவனாகிய அல்லாஹுத் தஆலாவின் தன்மையை அறிந்து எல்லாவிஷயத்திலும் நம்மை அவனிடம் ஒப்புவிப்பதாம். நாம் அல்லாஹுத் தஆலாவை அறிய நாடுவோமாயின் முதன் முதல் நம்முடைய தன்மையையே அறிதல் வேண்டும். “தன்னை அறிந்தவன் தன் தலைவனை அறிவான்” என்று ஆன்றோருடைய வாக்கியமொன்று காணப்படுகிறது. “நம்முடைய உண்மை அவர்களுக்கு வெளியாகும்படி உலகத்திலும் அவர்களுடைய நப்ஸு (ஆத்மாக்)களிலும் நம்முடைய உதாரணங்களை அவர்களுக்கு நாம் காட்டுகிறோம்,” என்று ஆண்டவனே மற்றோரிடத்தில் விளக்கி யிருக்கின்றான். இவ்வுலகில் காணப்படும் எல்லாப் பொருள்களைக் காட்டிலும் நமக்கு அதிசமீபத்திலிருப்பது நாமேயன்றி வேறொன்று மில்லை. நமக்குச் சமீபமாயிருக்கின்ற நம்மையே நாம் அறியாமற்போயின் மற்றொன்றை நாம் எப்படி அறியப் போகின்றோம்? ஒருகால் ‘நான் என்னை அறிவே’னென்று சிலர் சொல்லக்கூடும்; ஆனால் அது தவறேயாகும்; ஏனெனின் அவர்கள் தங்களுடைய கை கால் தலை முதலிய வெளியுறுப்பாகிய மாம்சத்தைமட்டும் தான் அறிந்திருப்பார்கள். அந்தரங்க விஷயத்தை எவ்வளவு அறிந்திருக்கிறாரென்று ஆராய்ச்சி செய்து பார்ப்போமாயின் மோகம் மீறினால் போகம் செய்யவும் கோபம் வந்தால் பாபம் செய்யவும் பசியெடுத்தால் பருக்கை தின்னவும் தான் அவர்களுக்குத் தெரியும். இப்படிப்பட்ட குணங்களெல்லாம் மிருகங்களிடத்திலும் காணப்படுகின்றன. ஆதலின் இவ்வாறு தன்னை அறிவது அல்லாஹுத் தஆலாவை அறிவதற்கு ஒரு மார்க்கமாக மாட்டாது. நம்மிடத்திலுள்ள மிருகத்தன்மையை அப்பால் ஒதுக்கிவிட்டு மனிதனுக்குரிய சுயமான குணத்தைத் தேடுவதுதான் அறிஞர்களின் தொழிலாகும். ‘நான் யார்? எங்கிருந்து வந்தேன்? இங்கு ஏன் வந்தேன்? இனி எங்கே போவேன்? எனக்கு நற்பதவி எங்கே யிருக்கிறது? என்னுடைய துர்ப்பதவியை எவ்வாறு விலக்கிக் கொள்வது? என்னிடத்தில் மிருகங்களின் குணமும் ஷைத்தானுடைய குணமும் மலக்கு (அமரர்)களின் குணமும் நிறைந்திருக்கும்போது நான் யாருடைய குணத்தைப் பின்பற்றுவது?’ என்று நமக்குள்ளே நாம் சிந்தித்து அறியவேண்டும். மிருகங்களுடைய குணமாகிய தின்னுதல் தூங்குதல் புணர்தல் இவைகளைமட்டும் நாம் மேற்கொண்டு இரவும் பகலும் உண்டு கொண்டும் உறங்கிக் கொண்டும் புணர்ந்து கொண்டும் மட்டும் காலங்கழிப்போமாயின்

நாமும் அம்மிருக மயமாகவே, மாறி விடுகின்றோம். இன்னும் துஷ்ட மிருகங்களைப்போல் நாம் நடப்போமாயின் சீறிப்பாய்வதும் பீறிக்கொல்வதுமே நம்முடைய இடைவிடாத் தொழிலாகும். நாம் கலகம் செய்வதிலும் கபடம் கொள்வதிலும் முயற்சியாயிருப்போமாயின், ஷைத்தான்களுடைய பதவிக்கு வந்து விடுகிறோம். மலக்குகளின் தொழிலோ அல்லாஹுத் தஆலாவுடைய ஜமாலைத்தரிசிப்பதாகும். அந்த அமரர்கள் மிருகங்களின் குணத்தைவிட்டும் ஷைத்தான்களுடைய செயலை விட்டும் உயர்ந்தவர்களா யிருக்கிறார்கள். நாமும் மிருகங்களும் ஷைத்தான்களும் செய்வதைப்போல் நடவாமல் அல்லாஹுத் தஆலாவை அறியவும் அவனுடைய ஜமாலைத் தரிசிக்கவும் ஆசிப்போமாயின் அந்த அமரர்களுடைய பதவியை அடையலாம். ஆனால் மிருகங்களின் குணமும் ஷைத்தானுடைய சேஷ்டையும் ஏன் நம்மிடத்தில் படைக்கப் பட்டிருக்கின்றனவென்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்; அவை உன்னை அடிமையாக்கித் தம்முடைய பணிவிடையில் வைத்து அல்லும் பகலும் உன்னை உபத்திரவம் செய்யவா அமைக்கப்பட்டிருக்கின்றன? அல்லது நீ அத்தீய குணங்களை வசப்படுத்தி உனக்கு அவற்றை அடிமையாயிருக்கும்படி செய்துகொள்ளவா ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? அத்தீயகுணங்கள் நம்மை அடக்கியாள இடங்கொடாமல் அவற்றை நாம் வென்று நிற்பதுதான் நாம் வேண்டத்தக்க காரியமாகும். நாம் மலக்குகளுடைய நற்பதவிக்குரிய வழியில் செல்ல எத்தனிப்போமாயின் அப்பொழுதே நம்முடைய தீயகுணங்களையெல்லாம் வென்றவராக ஆய்விடுவோம். கவாஸ்ஸு என்னும் மேன்மைக் குணமுடையவர்கள் இந்த ஸ்தானத்துக்கு அல்லாஹுத் தஆலாவுடைய திருச்சன்னிதானம் என்று பெயர் சொல்வர்; ஆனால் சாதாரண ஜனங்கள் இந்தப் பதவியைக்கொண்டு நாடும் ஸ்தலமானது சுவர்க்கமாயிருக்கும்.

அருமைச் சகோதரர்காள்! மனிதன் இரண்டு வஸ்துக்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறானென்று அறிந்துகொள்ளுங்கள்: ஒன்று, நம்முடைய வெளிக்கண்ணுக்குத் தோற்றமாகிற ஸ்தூலதேகமாகும்; மற்றொன்று, அந்தரங்கமான ஸூக்ஷ்மதேகமாகும். இந்த ஸூக்ஷ்ம தேகத்தைத் "நப்ஸு" என்றும் "ரூஹு" என்றும் "கல்பு" என்றும் அறிஞர் சொல்லுவார்கள். இதை அகக்கண்ணால்தான் காணமுடியும். நான் என்று சொல்லப்படுவது இந்த அந்தரங்க ஆவிதான். அதைத்தவிர மற்றெல்லா வஸ்துக்களும் அதைச் சார்ந்தவைகளாகவும் அதற்கு ஊழியம் செய்யும் வேலைக்காரர்களாகவுமே இருக்கின்றன. நம்முடைய ஸூக்ஷ்ம தேகமானது



இவ்வுலகத்தைச் சார்ந்த தன்று; ஆனால் இங்கே அது ஒரு வழிப்போக்கராகத்தான் வந்திருக்கிறது. ஸ்தூல தேகத்தை வாகனமாகக்கொண்டு ஸூக்ஷ்மதேகமானது அரசனைப்போல் தலைமை வகித்திருக்கிறது. அல்லாஹுத் தஆலாவை அறிவதும் அவனுடைய ஜமாலைத் தரிசிப்பதும் இந்த ஸூக்ஷ்ம தேகந்தான்; விதி விலக்குக்கு உடந்தைப்பட்டதும் நன்மை தீமைகளின் பலாபலனை அனுபவிப்பதும் இந்த ஸூக்ஷ்ம தேகந்தான். இவ்வனுபவங்களிலெல்லாம் ஸ்தூல தேகமானது ஸூக்ஷ்மதேகத்தைத் தொடர்ந்திருக்கும். ஆதலின் ஸூக்ஷ்மதேகத்தின் இயற்கையான குணத்தை அறிவது அல்லாஹுத் தஆலாவை அறிவதற்கு ஒருவழி காட்டியாயிருக்கும். ஆகவே, ஒவ்வொருவரும் அந்த ஸூக்ஷ்ம தேகத்தின் தன்மையை அறிய முயலவேண்டும். அதன் எதாஸ்தானம் அல்லாஹுத் தஆலாவுடைய திருச்சன்னிதானமாயிருக்கும். அவ்விடத்திலிருந்துதான் நம்முடைய ஸூக்ஷ்ம தேகம் புறப்பட்டிருக்கிறது; மீண்டும் அவ்விடத்துக்கே போய்ச் சேரும்.

இந்த ஸூக்ஷ்ம தேகமாகிய ரூஹு என்பது ஒன்றுண்டென்பதை உணர்ந்துகொள்ளுமட்டும் அதன் தன்மை இன்னதென்றும் தெரிந்துகொள்ளுவது முடியாது. ஆனால் மனிதனுக்கு ரூஹுண்டென்பது பகிரங்கமாகத் தெரிகிறது. ஏனெனின் மனிதனுக்குத் தான் உயிரோடிருப்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஒருவனுடைய நிலைமையானது அவனுடைய சரீரமாகிய ஸ்தூல தேகத்தைப் பொருத்தியதாயில்லை. பிணத்துக்கும் சரீரமுண்டு, ஆனால் ரூஹில்லை. ஸூக்ஷ்ம தேகமென்று நாம் குறிப்பிடுவதெல்லாம் ரூஹுடைய அந்தரங்கமாயிருக்கும்; இந்த ரூஹு போய் விட்டால் நம்முடைய ஸ்தூல தேகம் பிணமாய் விடும். ஒருவன் தன் கண்களை மூடிக்கொண்டு தன் சரீரத்தையும் அதற்கப்பாலுள்ள வேறு வஸ்துக்களையும் மறந்து விடுவானாயின் அப்பொழுது அவன் தன் ரூஹின் நிலைமையை அறிவான். அவன் இவ்விஷயத்தை இன்னும் நன்றாக ஆழ்ந்து யோசிப்பானாயின் மறு உலகத்தின் மர்மத்தையும் அறிந்து கொள்ளுவான்; மேலும் தன்னுடைய ஸ்தூலதேகத்தை அவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டால் அப்பொழுதும் தான் அழியாமல் நிலைத்திருக்கக் கூடுமென்பதையும் நன்குணர்ந்து கொள்ளுவான்.

"ரூஹாகிறது என் இறைவனுடைய ஏவலில் நின்றுமாயிருக்கும்"—(குர்ஆன் 17:85), என்று ஆண்டவன் தன் திருவேதத்தில் கூறியுள்ளான். "கல்க்கும் (படைப்பும்) அம்ரும் (ஏவலும்) அல்லாஹுத் தஆலாவுக்குரியதா யிருக்கும்," என்பது மற்றொரு திரு

வாக்கியம். ஆலமுல் கல்க்கு (சிருஷ்டியுலகம்) வேறு, ஆலமுல் அம்ரு (ஏவல் உலகம்) வேறு. எந்த வஸ்து அளவுக்கும் மட்டுத் திட்டத்துக்கும் அடங்கியிருக்கிறதோ அது ஆலமுல்கல்க்கு என்று சொல்லப்படுகிறது; மனிதனுடைய ஸூக்ஷ்ம தேகமானது எந்த அளவுக்கும் கட்டுப்பட்டதன்று. ஆதலின் அந்த ரூஹானது ஆலமுல் அம்ரைச் சேர்ந்ததா யிருக்கிறது. ஆகவே மனிதனுடைய ரூஹானது மட்டுத்திட்டத்துக்குக் கட்டப்படாமல் இருப்பதுடன் ஆண்டவனுடைய ஏவலால் படைக்கப்பட்டதாயு மிருக்கிறது. ஆனால் இவ்வுலகில் சில சமயவாதிகள் ரூஹை (ஆத்மாவை) கதீம் (அனாதி) என்று சொல்வதானது எம் இஸ்லாமிய சித்தாந்தப்படி தவறாகும். ஆனால் ஸ்தூல தேகத்தின் உண்மையை அறிந்து கொள்வது சுலபமே. அனுபவித்தவர்களுக்கல்லாமல் மற்றவர்கட்குக் கஷ்டமாகத்தானிருக்கும். அவரவரும் பாடுபட்டே தம்முடைய ஆத்மதத்துவ நிலைமையை அறிந்து கொள்ளவேண்டும். "யார் நம்மை நோக்கிப் பாடுபட்டார்களோ அவர்களுக்கு நம்முடைய வழிகளைக் காட்டுவோம்," என்று ஆண்டவன் குர்ஆன் ஷரீபில் கூறியுள்ளான்.

(இன்னும் வரும்)

அபூஹாமிது

## விஞ்ஞாபனம்.

இஸ்லாமிய சகோதரர்காள்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரக்காத்தஹு. நாச்சியார்கோவிலி லுள்ள முஸ்லிம் சங்கத்தார்களும் அவர்களால் வெளியிடப்படும் இம்மாதாந்த சஞ்சிகையும் இஸ்லாமிய உலகத்துக்குச் செய்துவரும் ஊழியத்தைப்பற்றி அறியாதார் இத்தமிழுலகில் ஒருவருமில்லை யாதலின் அவ்வூழியத்தைப் பற்றி யான் அதிகமாக ஒன்றும் எழுதத்தேவையில்லை. "சுதேசமித்திரன்" முதலிய கீர்த்திவாய்ந்த பத்திரிகைகளே இச்சங்கத்தாரின் அரும் பெரும் பிரயாசையைப் பற்றிப் புகழ்ந்திருக்கின்றனவென்றால் அதைக்குறித்து யான் சொல்ல வேண்டுவது என்ன இருக்கிறது? இவ்வுலகத்தில் லோகாயதக் கொள்கையானது மிதமாய்ப்போய் இப்பொழுது முடிவாயிருக்கும் ஐரோப்பிய மகா யுத்தத்துக்குப் பின் அவரவரும் உண்மையான ஆத்ம ஞானத்தைத் தேடித்திரிகின்றார். இஸ்லாத்தின் உண்மைகளை உள்ளபடியே உணர்த்திக் காட்டுவோமாயின் அவற்றை அங்கீகரிப்பவர்கள் எண்ணிறந்தோர் இத் தென்னாட்டில் காணப்படுகின்றனர். இவர்களுக்கெல்லாம் "தத்துவ இஸ்லாம்" என்னும் இவ்வொரே மாதாந்த சஞ்சிகைதான் இருந்து வருகிறது. இதைத் தவிர வேறொரு மாதாந்த சஞ்சிகையேனும் வாரப்பத்திரிகையேனும் தினசரியேனும் முஸ்லிம்களுக்காகச் செந்தமிழில் இல்லையென்பது உங்களெல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமே. இஸ்லாத்தில் அலக்ஷியமாயிருந்து வரும் தமிழ் நாட்டு முஸ்லிம்களைத் திருத்தவும் இஸ்லாமிய உண்மைகளை உணரவிரும்பும் இதர மத நண்பர்களுக்கு அவற்றை விளக்கிக் காட்டவும் இஸ்லாத்தை அநியாயமாகவும் அவதூறாகவும் தாக்கிவரும் எதிர்மத வாதிகளின் குறும்பை அழிக்கவும் இச்சஞ்சிகையைப்போல் இன்னும் அநேகம் பத்திரிகைகள் முஸ்லிம்களுக்காக இருக்க வேண்டாமா? கார்த்திகை மாதத்தில் பிறைகண்டதுபோல் இப்பத்திரிகை ஒன்றுதான் சென்ற சில மாதங்களாக இத்தமிழ் நாட்டில் உலாவி வருகின்றது. இதற்கு இப்பொழுது அநேகம் சந்தா நேயர்கள் சேர்ந்திருந்தபோதிலும் தமிழ்ப் பாஷையைத் தாய்ப் பாஷையாகக்கொண்ட முஸ்லிம்கள் இத் தென்னாட்டில் பத்துலட்சம் பேர்களுக் கதிகமாயிருக்கும் போது போதுமான வரையில் சந்தா நேயர்கள் இன்னும் சேரவில்லையென்பதைக் கேட்க எனக்கு மிக்க வருத்தமுண்டாகிறது. இப்பத்திரிகையின் சந்தாதாரர்களை அதிகப்படுத்தி எங்கே பார்த்த போதிலும் அங்கெல்லாம் இச்சஞ்சிகை நன்கு உலாவும்படி செய்வீர்களேல் அங்கங்கே இஸ்லாத்தைப்பற்றி இதரர்கள்கொண்டிருக்கும் தப்பு அபிப்பிராயமெல்லாம் ஒழிந்து உண்மையானபேரொளி ஜொலிப்பதற்கு ஒரு ஹேது வுண்டாகும். முஸ்லிம் நேசர்காள்! இஸ்லாத்தின் உண்மைகளை இத்தென்னாட்டில் பரப்பும் எண்ணம் உங்கள் மனத்தில் குடிகொண்டிருப்பது மெய்யாயின் செந்தமிழில் வெளியாகும் இம்மாதாந்த சஞ்சிகையை அதிகமாக ஆதரிக்க முன்வாருங்கள். நம்முடைய நாட்டிற்கும் மதத்திற்கும் உழைப்பதற்காகவே இம்முஸ்லிம் சங்கத்தின் தலைவரான பா. தாவுத்ஷா சாஹிப், பி. ஏ., அவர்கள் தமது ஸர்க்கார் உத்தியோகத்தையும் ராஜினாமா செய்து விட்டு இச்சங்கத்தை நடத்தி வருவதோடு மேலும் நமக்காக உழைக்கும் பொருட்டு இங்கிலாந்துக்கும் செல்லத் தயாராயிருக்கும்போது அவருடைய உழைப்புக்குத் தகுந்த உற்சாகத்தை நீங்களெல்லாம் காட்டவேண்டாமா? இத் "தத்துவ இஸ்லாம்" சஞ்சிகையானது இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காக உழைத்து வருவதால் இதற்காக நீங்கள் செய்யும் ஒவ்வோர் உபகாரமும் இஸ்லாத்தின் நன்மைக்காகவே செய்த உதவியாகும். ஆதலின் இப்போது இதை ஆதரித்து வரும் ஒவ்வொரு நேயரும் தமது நண்பர்களிடமும் பொரிஷ்செய்து

இதன் சந்தாதாரரின் தொகையை அதிகப்படுத்துவார்களென்று வேண்டிக்கொள்ளுகின்றேன். இப்பத்திரிகையின் சந்தாதாரர்களை அதிகப்படுத்தி இது இத்தென்னாட்டில் நன்றாக நின்று நிலவும்படி செய்வீர்களேல் இதன் ஆசிரியரும் இச்சங்கத்தின் தலைவருமான டா. தாவூத்ஷா சாஹிப் இன்னும் சிறிது காலத்துக்குள் நபிகள் நாயகத்தின் உண்மையான சரித்திரத்தையும் குர் ஆன் ஷரீபின் சரியான மொழிபெயர்ப்பையும் வெளியிட முன்வருவார். இவருடைய மதாபிமானமும் கல்விப் பயிற்சியும் இத்தன்மையானவென்று எல்லோரும் அறிந்திருப்பதால் இவருடைய சாமர்த்தியத்தைப்பற்றி யானொன்றும் விரித்துரைக்கவேண்டுவதின்று.

ஆதலின், அருமைச் சகோதரர்காள்! இப்பத்திரிகாசிரியரின் ஊழியத்தால் இத்தென்னாட்டில் இஸ்லாத்தின் உண்மைகளை நன்றாகப்பரத்த நாடுவீர்களேல் இச்சஞ்சிகையின் சந்தாதாரர்களை அதிகப்படுத்துங்கள், அதிகப் படுத்துங்கள், அதிகப்படுத்துங்கள்.

இங்ஙனம்,
தங்களுண்மையுள்ள
அப்துர் ரஹ்மான்.

## ஜிஹாதே கபீர்

நம்பர்—3

(முன் 204—ம் பக்கத்தொடர்ச்சி)

நம் ஸன்மார்க்கமானது மற்றெல்லா மார்க்கங்களின் மீதும் அபாரி ஜயமடைந்து ஜொலிக்கும் காலம் அதிசீக்கிரத்தில் வரலாம்; அப்பொழுது ஏனையோ ரெல்லாம் அதைக்கொண்டு சுகத்தையும் நன்மையையும் அடைவார்கள். இது இணைவைத்து வணங்குகிறவர்களுக்குத் துன்பமாகத்தான் முடியும்.

குர்ஆன் ஷரீபின் 9:32,33; 61:8,9 இந்த ஆயத்துக்களால் ஏற்படும் பொருளை நிதானித்துப்பார்க்கும் பக்ஷத்தில் ஆண்டவன் இச்சன்மார்க்கத்தைக் காப்பாற்றுவதாகச் சொன்ன வாக்குறுதியுடன் அதை மற்றெல்லா மார்க்கங்களுக்கு மேலாகப் பெருமையும் கீர்த்தியும் பொருந்தும்படி செய்வதாகவும் முன்னறிக்கை செய்திருக்கிறானென்பது செவ்வனே விளங்கும். இதனால்தான் இஸ்லாத்தைக்காப்பாற்றி அதற்கு ஜயத்தையும் கொடுப்பதாய்க் கூறுகிறான். மேற்கூறிய இரண்டிடத்திலும் ஆண்டவன் ஒரே விதமான மொழிகளையே உபயோகித்திருக்கிறான். சிலர் இச்சன்மார்க்கமான பரஞ்

-130-



சோதியை மண்ணால் செய்த அகல் விளக்கென்றும் அதைவாயினால் ஊதி அணைத்து விடலாமென்றும் எண்ணி இடைவிடாமல் பிதற்றிக் கொண்டேயிருக்கிறார்கள். இவர்களுடைய தீய எண்ணங்களெல்லாம் ஆண்டவனது திருவாக்கின் முன்னே சூரியனைக் கண்ட பனிபோலும் பெருங்காற்றிற்பட்ட தூசிபோலும் ஒருநொடியில் பறந்துபோகும். மேற்சொன்ன திருவாக்கியங்களில் காணப்படுவதேபோல் இப்பரஞ் சோதியாகிய இஸ்லாமார்க்கம் இப்படிப்பட்டதென்றும், அது ஆண்டவன் தன் திருத்தூதர் மூலமாக அனுப்பிவைத்த தூய்மையான சுத்தசத்திய சன்மார்க்கமென்றும், அது மேன்மை பொருந்தி என்றென்றைக்கும் நிலைத்து நின்று யாவருக்கும் நன்மாராயத்தைக் கொடுக்கவல்ல நற்போதனைகள் நிறைந்ததென்றும், அதுமற்றெல்லா மார்க்கங்களினும் சிறந்ததென்றும் நன்குணர்ந்து கொண்டோம்; ஆண்டவன் முன்னறிக்கையாய்ச் சொன்னபடியே நடக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை; அப்படியில்லாவிட்டால் நம்நபிகள் நாயகத்தை ஆண்டவன் அனுப்பினதே பிரயோசனமற்ற வீணான காரியமாகும்; சன்மார்க்கத்தை எல்லாத்திக்கிலும் செம்மையாகப் பரவச்செய்து யாவரும் எளிதில் இந்நேர்வழியைக் கடைப்பிடித்து இதன் பிரகாரம் நடந்து மெய்ஞ்ஞானத்தை அடைந்து மோக்ஷப் பேரானந்தத்தைப் பெறும்படி செய்வதற்குத் தான் நம்நபிகள் நாயகத்தை ஆண்டவன் அனுப்பிவைத்திருக்கிறான்.

நாம் எல்லோரும் நம் திருவேதத்தைக் கடவுளின் திருவசனமென்று ஒப்புக்கொண்டது மட்டுமின்றி அதற்கு உறுதியும் கூறுகிறோம். ஆனால் நம்மவரின் நடத்தையை நோக்கும்போது அத்திருவேதத்தின் ஏவல்களைக்கொண்டு நடப்பதில் வாயினால் சொல்வதுபோலவே மனத்திலும் அதை ஆண்டவனது திருவாக்கென்று அவர்கள் அங்கீகரித்தவர்களாக இருக்கிறார்களென்று சொல்லமுடியவில்லை. வீணனின் முஸ்லிம்கள் ஆண்டவனது திருவாக்கின்மீது திண்ணிய உறுதியுடன் இருப்பதாக அவர்களுடைய நடத்தையில் ஒன்றும் காணப்படவில்லை. பிரஞ்சுக்காரர்களும் ஜர்மானியரும் முஸ்லிம்களின் விடாமுயற்சியும் வீரப்பிரதாபமும் குன்றும் வண்ணம், இனிமேல் இஸ்லாமார்க்கம் இவ்வுலகில் பரவுவதற்குயாதொரு ஹேதுவுமில்லையென்று சொல்லியும் எழுதியும் வரும் வார்த்தைகளில் அச்சாதியார்கள் எவ்வளவு நம்பிக்கைவைக்கிறார்களோ அவ்வளவு நம்பிக்கையாவது வாஸ்தவத்தில் நம்மவர்களுக்கு ஆண்டவனின் திருவாக்கின்மீது இருந்து அதன் உண்மை இவர்களின் மனதில் ஒருவஜ்ஜிர ஆணியைப்போல் வேரூன்றி யிருக்குமாயின்

அந்த ஆண்டவனின் திருவாக்குகளில் சொன்ன சொன்னபடியே ஒவ்வொன்றும் நிறைவேறியிருக்கும். நம் முஸ்லிம்கள் அப்படிப்பட்ட மனதுள்ளவர்களாக இருக்கும் பக்ஷத்தில் அவர்கள் தங்களுக்கு உரித்தான பராக்கிரமத்துடனும் உற்சாகத்துடனும் புஜபலமுள்ளவர்களாக முன்வந்து சன்மார்க்கப் பரவுதலுக்குத் தங்களிடமுள்ள எல்லாவற்றையும் ஆண்டவன் பாதையில் அர்ப்பணம் செய்யத் தயாராயிருப்பார்கள். ஆனால் முஸ்லிம்கள் தங்களுடைய நம்பிக்கையின் (ஈமானின்) பலஹீனத்தால் மேலே சொன்னபடி சன்மார்க்கப் பரவுதலுக்காகச் செலவு செய்வதில் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். சன்மார்க்கத்தைப் பரவச் செய்யும் விஷயத்தில் பொருள் செலவு செய்வதற்கு ஏன் முஸ்லிம்கள் பின்வாங்குகிறார்களென்று யோசிக்குமளவில் அவர்களுடைய ஈமான் பலக்குறைவாகவும் அணிவேர் ஆழமாய் ஊன்றாததாகவும் காணப்படுகின்றது.

இக்காலத்தில் இதன் விளக்கமும் இந்தக் காட்சிதான் நம் கண்களின் முன்னே காணப்படுகின்றது. "அநேக மனிதர்கள் அல்லாவின் மீதும் இவ்வுலக முடிவுநாளின் மீதும் உறுதி (ஈமான்) கொண்டவர்களாக இருக்கிறோமென்று வாயால் மாத்திரம் சொல்லுகிறார்களே யொழிய வாஸ்தவத்தில் அவ்வித உறுதிப்பாட்டையுடையவர்களாயில்லை." தன் மகன் ஏதேனுமொரு பெரிய உத்தியோகத்தைப் பெறவேண்டுமென்னும் எண்ணத்தை மாத்திரம் மனத்தில் கொண்டவராய் அவனைச் சீமைவரையில் படிப்புக்காக அனுப்பி ஆயிரக்கணக்கான பணத்தை ஒருவர் வீண்செலவுசெய்து விடுகின்றார். ஆனால் தன் குமாரன் அவ்வித உயர்தரக் கல்வியை அடையத்தக்க யோக்கியதையும் திறமையும் வாய்ந்தவனாயிருக்கிறானா இல்லையாவென்பதை அறியாமலும், அவன் முடிவில் தேறுவானா அல்லது தவறுவானா என்னும் நிச்சயமில்லாமலும், மற்றபல விஷயங்களைக்காட்டிலும் முக்கியமாக அவன் கல்வியில் தேறும் வரையில் அவனே உயிருடனிருக்கக்கூடுமா என்னும் உறுதியில்லாமலும் இருக்கும்போது அவனுடைய முகத்திலேயே அவன் முழுமூடனென்று தெரிந்திருந்தும் எக்காரியத்திற்காக இப்படிப்பட்ட பிரஹஸ்பதியை அவன் தகப்பன் சீமை முதலிய இடங்களுக்கு அனுப்புகிறான்? என்ன நோக்கத்துடன் அவன் சீமைக்கு அனுப்பப்படுகிறானோ அந்த நோக்கத்தை அவன் அடியோடு தொலைத்துச் சில சமயங்களில் அக்கிரமத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாகி, அனைவரும் அருவருக்கக்கூடிய அனுசாரமான வழிகளிலெல்லாம் இறங்கித் தன் இனத்தாருக்கும் நாட்டாருக்கும் பழிப்புக்கிடமுந் தையுண்டுபண்ணிப் பிறரால் தூஷிக்கப்படும் தாதைகளுக்கும் ஆளா

A317



கின்றான். இப்படிப்பட்ட மனிதர்கள் எந்த நோக்கத்தை மனதில் கொண்டவராய் எவ்வளவோ பெருந்திரளான ஐசுவரியத்தைச் செலவு செய்யத் துணிவு கொள்ளுகிறார்களோ அந்த நோக்கமே அவர்களுக்குப் பலிக்குமென்னும் நிச்சயமில்லாமலே இவ்விதம் செய்து வருகிறார்கள். நிச்சயமில்லாத இக்காரியத்தைச் செய்யத் துணிந்த மனதில் ஆண்டவனின் ஸன்மார்க்கத்திற்கு அவசியமான பற்றுமட்டும் தேவையான அளவு இருக்குமாயின் இந்த ஸன்மார்க்கத்தை (தீனுல் இஸ்லாத்தைப்) பரவச் செய்வதற்கான விடா முயற்சியும் அதற்குரிய நித்திய ஆழ்ந்த கவலையும் அதை மேன்மைப்படுத்தற்கு வேண்டிய கவனமும் அம்மனத்தில் இல்லாமல்போகுமோ? நம் நபிகள் நாயகமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம், "எதுவரையில் உங்களுடைய பெற்றோர்களையும் பிள்ளைகளையும் விட நபிகள் நாயகத்தினிடம் உங்களுக்கு அதிகமான ஆசையும் அபிமானமும் அன்புமில்லாமல் போகின்றதோ அதுவரையிலும் உங்களுடைய உறுதிப்பாடு (ஈமான்) பொய்யானதென்றே அறியுங்கள்." இத்திருவாக்கு உங்களுடைய ஆழ்ந்த யோசனைக்கும் கவனத்திற்கும் அருகதையுள்ளதாயில்லையென்று கருதுகின்றீர்கள்? நம் நாயகத்தின் இத்திருவாக்கானது நீங்கள் அது விஷயத்தில் பாராமுகமாயிருந்து நகையாடவும், வேண்டுமானால் ஒவ்வொரு சமயத்தில் கிளிப்பிள்ளையைப்போல் வாயால்மாத்திரம் சொல்லவும் மட்டுமே உபயோகப்படுவதாய்த் தெரிகிறதல்லாமல் உங்களுடைய நடத்தையில் அதன் அந்தரங்கக்கருத்துக் காணப் படுவதாய்த் தோன்றவில்லை. ஆனால் நீங்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டிய விஷயம் யாதெனின், எவ்வளவுக்கெவ்வளவு உங்களுடைய நடவடிக்கைகளினால் நாயகத்தின் திருவாக்கினுடைய கௌரவத்தைப் பெருமைப்படுத்துகிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு ஆண்டவனும் இவ்வுலகில் உங்களுடைய கீர்த்தியையும் பெருமையையும் அதிகரிக்கும்படி செய்வான். நாம் அத்திருவாக்கை அசட்டையுடன் நகைத்துப் பாராமுகம் செய்துவிட்டபடியால் ஆண்டவனுடைய என்றும் மாறாத நியதியின்படி நடக்கவேண்டிய விஷயங்கள் நடந்தேறியே தீருமென்று நன்குணருங்கள். அத்திருவாக்கின் பிரகாரம் நாம் நடந்துகொள்ளாததனாலும் நம்முடைய ஈமானானது பலமுள்ளதாக இல்லாததனாலும் இவ்வுலகின் நாலாபக்கத்திலும் நாம் அடிமைத்தனத்தை அடையவும் அயலார் நம்மை நிந்தித்து அவமானமுறும்படி சுட்டிக்காட்டவும் இலக்காகித் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாகி நிற்கின்றோம். நம்முடைய பரிதாபகரமான நிலைமையைக்கூர்ந்து நோக்குவோமாயின் ஆண்டவனுடைய திருவாக்கு இப்பொழுது

நிறைவேறி வருகிறதென்றே றூத்துக் கொள்ள நேரும்; இனியேனும் உங்களுடைய விடாமுயற்சியையும் ஊக்கத்தையும் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காகச் செலுத்தாமல் போவீர்களேல் தடுக்கமுடியாத மற்றொரு கடுமையான விதிக்கும் உள்ளாகும்படி கொடுமையான துரதிருஷ்டம் உங்களுக்கு விளைந்து விடும்; நீங்கள் உங்களுடைய கடமைகளை அறிந்து அவற்றின் பிரகாரம் நடந்து கொள்ளாவிடின் உங்களுக்குப் பதிலாக வேறொரு கூட்டத்தாரை ஆண்டவன் சிருஷ்டித்து விடுவான்; அப்படிச் சிருஷ்டிக்கப்படுபவர்கள் உங்களைப்போல் கோழைமனமும் அதைரியமும் உள்ளவர்களாக இருக்கமாட்டார்கள்.

அதைரியமுள்ள இப்பரிதாபகரமான நிலைமையில் முஸ்லிம்களுக்கு நாலாபக்கங்களிலிருந்தும் உண்டாயிருக்கும் இம்சைகளையும் இடுக்கண்களையும் சகிக்கமுடியாமல் அவர்கள் கஷ்டப்படும் இச்சமயத்தில் என்னசெய்ய முடியும் என்றும், அவர்களுடைய ஸன்மார்க்கம் இவ்வுலகில் பெருமையும் மேன்மையும் அடையும்படியான ஆசையை அவர்கள் எவ்வாறு உடையவர்களாயிருக்கக் கூடுமென்றும் சிலர்வாதிக்கக் கூடும்; ஆனால் சற்று நிதானிப்பீர்களேல் இப்பொழுது உங்களுக்கிருக்கும் நிலைமையை விட ஒருகாலத்தில் மிகவும் பயங்கரமும் தாழ்ச்சியும் உள்ளஸ்திதியில் முஸ்லிம்களிருந்தபோது ஆண்டவன் தன்வாக்கை நிறைவேற்றியிருக்கிறானென்று கண்டு கொள்வீர்கள். நீங்கள் தற்காலம் நாற்பதுகோடி ஜனத்தொகையையுடைய ஒரு பெரியகூட்டத்தினராக இருக்கின்றீர்கள். முன்னொரு காலத்தில் பதுரு யுத்தம் நடைபெற்றபோது முஸ்லிம்களின் ஜனத்தொகை 313 தானிருந்தது. அவர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட எதிரிகளால் சூழப்பட்டிருந்தார்கள். அந்த 813 முஸ்லிம்களும் மிகக்கொடிய ஏழைகளாகவும் பிறருடைய உதவி பெறுதற்கு வழியில்லாதவர்களாகவும் இருந்தார்கள். அவர்களெல்லோருடைய ஐசுவரியத்தையும் சேர்த்துக் கணக்குப் பார்ப்பதாயின் உங்கள் பாலுள்ள ஒரு சாதாரண வியாபாரி அல்லது ஒரு சிற்றசருக்குள்ள அவ்வளவு ஐசுவரியத்துக்குங் கூட நிகரில்லாததாக இருக்கும். இவ்வாறிருந்தும் அந்த 313 முஸ்லிம்களும்தங்களுடைய ஈமானின் திடத்தால் 1000 த்துக்கு அதிகமான எதிரிகளை முறியடித்தார்கள்.

இப்பொழுது உங்கள் விரோதிகள் புத்தகங்களையும் துண்டுப்பிரசுரங்களையும் இலக்ஷக்கணக்காக அச்சிட்டு இவ்வுலக முழுதும் பரத்தியும் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் உபந்யாசங்களைச் செய்தும் நம் ஸன்மார்க்கத்தைப்பற்றி அவதூறு செய்து வருகின்ற



னர். இந்த எதிரிகள் இப்போது தங்களுக்கிருக்கும் அபரிமிதமான பலத்தைக் கொண்டும் யுத்தகளத்துக்குரிய நூதன ஆயுதங்களின் வன்மையைக் கொண்டும் இஸ்லாமிய ஸன்மார்க்கத்தை இவ்வுலகத்திலிருந்து அடியோடழித்து நாசஞ் செய்துவிட எத்தனித்து வருகிறார்கள். நம் ஸன்மார்க்கத்துக்கு விரோதமான தற்கால எதிர்ப்பை முற்கால எதிர்ப்புடன் ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்ப்பீர்களாயின் முற்காலத்திய முஸ்லிம்களின் நிலைமையானது இப்போதைய முஸ்லிம்களின் நிலைமையைக் காட்டிலும் மிகவும் பரிதாபகரமாக இருந்ததென்பது உங்களுக்குச் சரித்திர ஆராய்ச்சியினால் செவ்வனே விளங்கும். அக்காலத்திய முஸ்லிம்களிடம் யாதொரு வெளிப்படையான சொத்தும் கிடையாது; தங்களிடமிருந்த செல்வமுழுதையும் தங்கள் விரோதிகளான அபூஜஹல், அபூஸுப்யான் முதலியோரிடம் பறிகொடுத்து விட்டுத் தங்களுடைய ஈமானை மட்டும் காப்பாற்றிக் கொண்டு திசை தெரியாமல் நிலைகலங்கித் தங்களுக்கு அடைக்கலம் கிடைக்கக்கூடிய இடத்தை நோக்கினவர்களாயிருந்தார்கள். எதிரிகள் உபயோகித்த பயங்கரமான வில் வாள் ஈட்டி அம்பு முதலிய ஆயுதங்களினின்றும் தப்பி ஓடுங்காலத்தில் அச்சிறு முஸ்லிம் கூட்டத்தார் ஒரு விநாடி காலமாயினும் தங்களுடைய உறுதிப் பாட்டினின்றும் விலகாமலும் சிறிதேனும் கிலேசமடையாமலும் இருந்தார்கள். இவ்வித இடுக்கண்ணான சமயங்களில் அவர்களுக்கு ஆண்டவனது திருவாக்கின் மீது அதிபலமான நம்பிக்கையிருந்தது. இவர்களுக்கு ஆண்டவனுடைய திருவேதத்தின் மீதிருந்த அபரிமிதமான உணர்ச்சியினாலும் உறுதிப்பாட்டினாலும் இச் சிறு கூட்டத்தார்கள், பதினாயிரம் பேர்களடங்கிய சுத்தவீரர்களாகிய எதிரிகளின் சைன்யங்களெல்லாம் பூரண முஸ்தீபுடன் தக்க ஆயுதம் தரித்தவர்களாய்த் தங்களை நாசம் செய்யும் எண்ணத்துடன் படையெடுத்துவந்து மதினமாநகரை வளைந்து முற்றுகைபோட்ட போது அவர்களுடன் தைரியமாய் எதிர் நின்று யுத்தம் செய்தார்கள். அப்பொழுது மதினமா நகரிலிருந்த யூதர்களாகிய ஒரு பெருங் கூட்டத்தார் பக்கத்திலிருந்து வந்த எதிரிகளுடன் சேர்ந்து கொண்டார்கள். முஸ்லிம்கள் இவ்வாறு முன்னும் பின்னும் பெரிய விரோதிகளின் சுத்த வீரத்தனமுள்ள யுத்த ஆயுதங்களால் தாக்கப்படும் காலத்தில் அச்சிறு முஸ்லிம் கூட்டத்தார் இயந்திரத்தில் அகப்பட்ட எலியைப்போல் நசுக்குண்டு தொலைபவராய்ப் போகவேண்டியிருக்க அவர்கள் அவ்வாறு பொடிப்பொடியாய்ப் போகாமல்தங்களுக்கு ஆண்டவனது திருவாக்கின் மீதிருந்த திண்ணமான எண்ணத்தினாலுண்டாகிய பராக்கிரமத்தினாலும் மனோ தைரியத்தி

ளும் தங்களுடைய இஸ்லாமிய ஸைன்யத்தின் மூன்றும் தங்கள் உயிரையும் பொருளையும் ஒரு துரும்பினும் சிறிய தூசிக்குச் சமமாக எண்ணினவர்களாயிருந்த படியால் எதிரிகளின் மனமானது தைரியமிழந்து கோழைத்தனத்தை அடையும்படி செய்து மான்கூட்டத்தில் புகுந்த சிங்கங்களுக்கு இணையாக எதிரிகளை அதிசீக்கிரத்தில் நாசஞ்செய்து அவர்களுடைய சேனாசமூகத்தை யெல்லாம்பொடிப் பொடியாக்கி இருந்தஇடம்தெரியாமல் பிழைத்தோம் பிழைத்தோம் என்று புறமுதுகு காட்டி ஓடும்படி சின்னாபின்னப் படுத்தி விட்டார்கள். இந்த யுத்தத்தின் முடிவைப் பற்றி இதன் காலமும் குறியும் உண்டாவதற்கு நெடுங்கால முன்னமே மக்கமா நகரில் ஆண்டவன் தன் மெய்த்தூதரின் மூலமாக இச்சிறு கூட்டத்தார் எதிரிகளின் பெருங் கூட்டத்தை முறியடிப்பார்களென்று முன்னறிக்கை செய்தபடியே இச்சண்டையில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. அந்த முன்னறிக்கையானது பின் வருமாறு குர்ஆன் ஷரீபில் காணப்படுகின்றது: "என்ன! இந்தக் காபிர்கள் வானலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இவற்றிற் கிடையிலுள்ள எல்லாவஸ்துக்களுக்கும் சிருஷ்டி கர்த்தர்களாக இருக்கின்றார்களா? அவர்கள் இவ்வுலகில் தங்களுக்கு அதிக பலமுண்டென்று நினைக்கிறார்கள். அவர்களுடைய குருமார்களும் அவர்களுக்கு இதே விதமான பலம் பரலோகத்திலும் உண்டென்றே கூறுகின்றார்கள். அவர்களெல்லாம் வேண்டிய மட்டும் தங்களுடைய செல்வச் செருக்கிலும் அதை அதிகப் படுத்துவதற்கான முயற்சிகளிலுமே காலங்கழிப்பார்கள். தங்களுக்கு அவசியமான சகல சாமான்களையும் சேகரம் செய்து கொண்டு அளவற்ற தளவாடங்களையுடைய ஒரு பெருஞ்சேனையாகத் திரண்டுவந்து முஸ்லிம்களை எதிர்த்து அவர்களைத் தாக்கி அவர்களால் தோல்வியடைந்து புறமுதுகு காட்டி ஓடுவதை நீங்கள் காண்பீர்கள்." ஆண்டவனது இத்திரு வாக்கின்மீது அம்முஸ்லிம்களுக்கிருந்த பரிபூரணமான திண்ணிய நம்பிக்கைதான் சுமார் 800 ஜனங்களையுடைய அச்சிறு முஸ்லிம் தொகுதியினருக்குப் பதினாயிரக்கணக்கான எதிரிகளின்மீது வெற்றியை உண்டு பண்ணிற்று. மேற்கூறிய திருவாக்கியத்தில் குறிப்பிடப்பட்ட முன்னறிக்கையானது முழுதும் நிறைவேறி விடுமென்று சிறிதும் சந்தேகமில்லாமல் அவர்கள் நம்பியதோடு வேறு எவ்வகைக் கொள்கைக்கும் அவர்களுடைய மனத்தில் ஒரு சிறிதும் இடமில்லாதிருக்கும்படி அவ்வளவு ஆழமான திண்ணிய எண்ணமானது அம் முஸ்லிம்களின் இருதயத்தில் பதிந்து கிடந்தது. இவ்வளவு ஆழமான உறுதிப்பாட்டின் பயனுக்குத்தான் மகா சக்த வீரனென்று தமக்குள் இறுமாப்படைந்

133-



திருந்த பதினாயிரம் காபிர்களுக்கு அபஜயம் நேரிட்ட தல்லாமல் யூதர்களின் மனமும் அதிகமாகக்குன்றிப் பிறகு முஸ்லிம்களுக்கு என்றென்றைக்கும் கீழ்ப்படிந்து நடக்கும்படி நேரிட்டு விட்டது.

ஏ, என்னுடைய சகோதரர்களே! இவ்வுலகின்கண் ஆண்டவனுடைய இம் மெய்வாக்கானது நிறைவேறுமோ வென்று பெரினும் சந்தேகிக்கும் படியான அவ்வளவு கொடிய இக்கட்டான கஷ்டகாலத்தில் பின் வருங்காலத்துக்கெல்லாம் ஒருதாரணமாக எல்லோராலும் எடுத்துக் காட்டக் கூடிய வண்ணமாய் ஆண்டவன் தன் திருவாக்கில் குறித்துள்ள முன்னறிக்கையை நிறைவேற்றி உங்களை ஸ்திரமாக்கிவைத்து அதன் பயனை நீங்களெல்லோரும் அனுபவித்துவந்து பன்னெடுங்காலஞ்சென்று இப்பொழுது அத்திருவாக்கின் உண்மையைப்பற்றியும் அதில் சொல்லிய வண்ணம் நமக்கு வெற்றிகிடைக்குமோ என்னும் விஷயத்தைப்பற்றியும் சந்தேகிப்பது அறிஞர்களாகிய உங்களுக்கு அழகன்று. குர்ஆனே கரீமென்னும் நம் திருவேதத்தில் ஆண்டவன் நம் ஸன்மார்க்கத்தின் பாதுகாப்பைப்பற்றி ஏன் இரண்டிடத்தில் வாக்களித்திருக்கிறானென்றும், இஸ்லாமென்னும் இச்சன்மார்க்கம் மற்றெல்லாமார்க்கங்களைவிடச் சிறப்படைந்து மேன்மையுள்ளதாகப் பிரகாசிக்குமென்பதைப்பற்றியும் ஏன் அந்த இரண்டிடத்திலும் முன்னறிக்கை செய்திருக்கிறானென்றும் நீங்கள் சற்று நிதானத்துடன் சிந்திப்பீர்களேல், நம் ஸன்மார்க்கத்துக்கு இரண்டு சமயங்களில் அதிக தொந்தரையும் துன்பமும் நேரிடுமென்றும் அப்பொழுது இதன் விரோதிகள் இதை விழுங்கிவிட ஆயத்தமாய் விடுவார்களென்றும், அப்படிப்பட்ட இரண்டு சமயங்களிலும் ஆண்டவன் தன் திருவாக்குக்களில் கூறியபடியே நிறைவேற்றி வைப்பானென்றும் உணர்ந்துகொள்ளுவீர்கள். முதன் முதலாக நம் நபிகள் நாயகத்தின் காலத்திலேயே அரபிக்காபிர்களும் யூதிகளும் விரோதம் செய்தபொழுது ஆண்டவன் தன் திருவாக்கை நிறைவேற்றி ஜெயித்திருக்கிறான்; ஆனால் ஆண்டவனால் குறிப்பிடப்பட்ட இரண்டாவது சமயமென்பது சிலுவைக்காரர்களான கிறிஸ்தவர்களின் மும்முரமான காலமென்று சொல்லத்தக்க இக்காலத்தையே குறிக்குமென்று கூறலாம். இவ்வாறின்றேல் இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் இவ்வளவு மும்முரமாக நம் இஸ்லாமார்க்கத்தின்மீது விரோதம் பாராட்ட மாட்டார்கள். ஆண்டவனுடைய திருவாக்கியத்தின் இரகசியத்தை நோக்கும்போது எதிரிகளின் விரோதமானது மிகவும் கொடுமையுள்ளதாகவும் அதிக பயங்கரமானதாகவும் இருக்குமென்று தெரிந்து கொள்ளுகிறோம். சற்று நிதான புத்தியுடன் யோசிக்கப் பிரயத்

தனைப்படுவோமாயின் ஆண்டவனுடைய ஜகஜ்ஜோதியாகிய இந்த தீனுல் இஸ்லாமென்னும் ஸன்மார்க்கத்தை அந்த எதிரிகள் ஒரு சாதாரணமான தகழிவிளக்கென்று இலேசாகக்கருதி அதைத்தமதுவாயால் ஊதி அணைக்கப்பார்க்கின்றாரென்னும் விஷயம் வெளியாகும். இவ்விஷயம் அவர்களுடைய வீண்மமதையைத்தான் காட்டுகின்றது; ஆனால் உண்மையில் முஸ்லிம்களின் மனத்திலிருக்கும் உறுதியானது ஆண்டவனிடத்திலிருந்துண்டா யிருக்கும் பரஞ்சோதி விளக்காயிருப்பதால் அதன் எதிரிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அந்தத்தீபத்தை அணைக்கமுயன்றாலும் ஒரு சிறிதும் பிரயோசனப்படமாட்டாதென்பதை அந்த எதிரிகள் அறிய மாட்டார்களா?

(தொடரும்)

## வீரத்தன்மையும் விடாமுயற்சியும்

இதுவரையில் இவ்வுலகில் அவதரித்திருக்கும் நபிமார்களுள் எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்களுக்கு இறைவனருளும் அவனன்மாராயமும் பெருத்தோங்குக) அவர்களிடத்தில்தான் மகா மேலான உத்தமோத்தம குணங்களெல்லாம் ஒருங்கே காணப்படுகின்றன. லௌகிகத்திலும் வைதிகத்திலும் ஆத்மார்த்தமான விஷயத்திலும் எம்பெருமானாருக்கு ஒத்தவராவது உயர்ந்தவராவது வேறு யாருமில்லையென்று யான் விளம்பவும் வேண்டுமோ? எல்லாவித நற்குணங்களும் ஒருங்கே திரண்டுருண்டு ஓர் திவ்விய உரு எடுத்தாற்போன்ற எமது நபிபெருமானாருக்கு வேறு யாரைத்தான் உவமைகூற முடியும்? அவர்களிடத்தில் காணப்படும் எல்லாவகை நற்குணங்களையும் சீர்தூக்கிப்பார்க்கப்புகின் அவற்றுள் எந்தக்குணம் தாழ்ந்ததென்றும் வேறெந்தக் குணம் உயர்ந்ததென்றும் வித்தியாசம் பாராட்ட முடியாதபடி அவ்வளவு அழகுடன் எல்லாவித நற்குணங்களும் சம்பூரணமாய் நிறைந்து கிடக்கின்றன. இவ்வுலகில் எத்தனையோ வகையான வெவ்வேறு கொள்கைகளையுடைய பல்வேறு மதங்கள் காணப்படுகின்றன. ஆனால் அம்மதங்களின் தலைவர்களுடைய ஜீவியசரித்திரங்களையெல்லாம் நன்கு ஆராய்ச்சி செய்வோமாயின் அத்தலைவர்களுள் ஒருவரிடத்திலேனும் வீரத்தனமென்பது ஒரு சிறந்த குணமாய்க் காணப்படவில்லையென்பது வெளியாகும். ஆதலின் வீரமென்பதே மதத்தலைவர்களுக்கு அவசியமில்லையென்று உலகோர் கருதும்படி அவ்வளவு தீரமற்றவர்களாய் ஏனை மதத்தலைவர்களெல்லாம் காணப்படுகின்றனர். அவர்களுடைய மதக்கொள்கையிலும் வீரமென்பது



அவசியமில்லாத ஒரு சாதாரண குணமாய்க் காணப்படுகின்றது. ஆனால் வீரமென்ற பதத்தைக்கேட்டவுடனே அவர்களெல்லாம் வேறொரு தப்பருத்த மொன்றைச் செய்கின்றனர்: யுத்தகளத்தில் நின்று எதிரிகளாலும் மெச்சத்தக்க தீரச்செயல்களைச் செய்வது மட்டுந்தான் வீரத்தனமென்று அவர்கள் நினைக்கின்றனர். போர்முனையில் காட்டும் வீரமெல்லாம் யாவராலும் மெச்சத்தக்க சிலாக்கியமான காரியமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் தன்னையே நிக்கிரகம் செய்து தன்னடக்கத்துடனும் தியாகபுத்தியுடனும் இவ்வுலகில் நடந்துகொண்டு, ஏனை ஜீவன்களிடத்தில் இருமையும் தாக்ஷண்யமும் பாராட்டத்தக்க பெருந்தகைமையுள்ள காருண்யத்தை எவரொருவர் அடைந்திருக்கிறாரோ அவருடைய தீரத்துக்கு முன்னால் போர்முனையில் காட்டப்படும் வீரமெல்லாம் ஒரு சிறிதும் ஈடாகமாட்டாது. இப்படிப்பட்ட தீரம்தான் மகா சிலாக்கியமானது. சகிக்கமுடியாத துன்பங்களுக்கிடையிலும் பொறுக்கமுடியாத கஷ்ட நிஷ்டூரங்களுக் கிடையிலும் ஒருவர் தன்னடக்கத்துடனும் தியாகபுத்தியுடனும் விடாமுயற்சியுடனும் வீரத்தனத்துடனும் நடந்துகொள்வாராயின் அதுதான் உண்மையான வீரத்தனமென்று எல்லோராலும் கருதப்படும். இக்காரணத்தால்தான் எமது நபிபெருமானாரவர்கள், "மல்யுத்தத்தில் எதிரிகளைத் தோற்கடிக்கும் மனிதனொருவன் சரியான வீரனாகமாட்டான்; ஆனால் எவனொருவன் கோபாவேசம் மூண்டகாலத்திலும் தன்னடக்கத்துடன் சாந்தமாக நடந்துகொள்ளுகிறானோ அவனே உண்மையான தீரனாவான்" (மிஷ்காத்), என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள்.

நபிபெருமானாரவர்கள் சொல்லி யிருக்கும் இலக்ஷணப்படி ஆழ்ந்து நோக்குவோமாயின் இப்படிப்பட்ட தீரம் தான் வேறுபல குணங்களைக் காட்டிலும் சிலாக்கியமான உன்னத குணமென்று நாம் செவ்வனே தெரிந்து கொள்ளுவோம். இப்படிப்பட்ட வீரத்தன்மையை யுடையவர்தாம் உண்மைத் தீரராய் விளங்குவார். இவர்தாம் மற்ற மனிதர்களுக்கொரு மாதிரியா யிருத்தல் கூடும். உண்மையான தீரத்தையடையாத எவரும் சம்பூர்ண குணத்தை யுடையவரென்று சொல்வது முடியாது. இவ்வாறு பரிபூர்ணமாகிய வீரத்தன்மையை ஒருவர் அடைந்திருப்பதோடு போர்முனைக்குரிய தீரத்தையும் பெற்றிருப்பாராயின் அது மிகவும் பாராட்டத்தக்கதே. இவ்விருவகையான வீரத்தனத்தையும் ஒருங்கே அமையப் பெற்றவர்தாம் இவ்வுலகில் சம்பூர்ணமான மனிதராயிருப்பார்.

வீரத்தனத்தைக் குறித்து இம்மட்டும் தெரிந்து கொண்ட பின்னர் நமது நபிபெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல்(இவர்க

ளுக்கு இறைவனருளும் அவனன்மாராயமும் உண்டாகுக) அமர்களின் ஆண்மையைக்குறித்து இப்பால் சிறிது ஆராய்ச்சிசெய்வோம். இவர்களுடைய ஜீவிய சரித்திரத்தை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்வோமாயின் எம்பிரானிடத்தில் மேற்கூறிய இருவகை வீரத்தன்மையும் நிறைந்திருந்ததென்னும் உண்மை செவ்வனே புலனாகும். அனஸ் (ரலி) அவர்கள் நம் நபி பெருமானாரைக் குறித்துப் பின்வருமாறு எழுதுகிறார்கள்: "நபிகள் நாயகமவர்கள் (ஸல்) எவராலும் தோற்கடிக்க முடியாத அவ்வளவு அபாரமான மனோதிடத்தையும், எவருக்குமஞ்சாத அவ்வளவு அளவிடற்கரிய உற்சாகத்தையும் உடையவர்களாயிருந்தார்கள். மதினமாநகரில் நபிபெருமானாரவர்கள் வசித்துவந்தபோது ஒருநாளிரவில் சில எதிரிகளாலோ அல்லது கொள்ளைக்காரர்களாலோ பேராபத்து விளையப்போவதாய் அம்மதினமாநகர் வாசிகள் பெரிதும் திகில் கொண்டார்கள். ஆனால் எந்தத் திசையிலிருந்து இப்படிப்பட்ட ஆபத்து விளையுமென்று திகில் கொண்டார்களோ அந்தத் திசையிலிருந்தே நபிகள் நாயகம் விஜயம் செய்ததை மதீனா வாசிகள் கண்டார்கள். உண்மையை உசாவுங்காலையில் மதீனாவாசிகளின் அச்சத்துக்குக் காரணமாயிருந்த அந்தத்திசையை நோக்கி நபிபெருமானவர்கள் தன்னந்தனியே முதன் முதலாய்ச் சென்றார்களென்பது வெளியாயிற்று. மதீனா வாசிகள் அனுவசியமாய் அஞ்சத் தேவையில்லையென்றும் அவர்களுக்கு எவ்வகைத் துன்பமும் நேரிடாதென்றும் எம்பெருமானார் சமாதானத்துடன் [illegible] றினார்கள். பிறகு அவர்கள் அபூ தல்ஹாவின் குதிரையின் [illegible] சேணமில்லாமல் ஏறி இரவு முழுதும் தங்களுடைய தோளில் ஒருவாளாயுதத்தைத் தொங்க விட்டுக் கொண்டு சவாரி செய்து கொண்டிருந்தார்கள்"—(புகாரி).

புறாயிப்னி அஜிப் (ரலி) அவர்கள் பின்வருமாறு ஒருவிஷயம் தெரிவிக்கிறார்கள்: ஹுனைன்யுத்தத்தில் நபிகள் நாயகம் அவர்களை மட்டும் தன்னந்தனியே விட்டுவிட்டு நாங்களெல்லோரும் ஓட்டம் பிடித்தது உண்மைதானோவென்று என்னை ஒருவர் கேட்டார். 'ஆம், அது வாஸ்தவம்தான்; ஆனால் நபிபெருமானாரவர்கள் மட்டும் தங்களுடைய ஸ்தானத்திலேயே அசையாமல் நின்றார்கள்,' என்று விடைபகர்ந்தேன். நபிகள் நாயகம் அந்த யுத்தகளத்தில் ஒருவெள்ளைக் கோவேறு கழுதையின் மீது ஏறிச் சவாரிசெய்து கொண்டிருந்தபோது நான் பார்த்தேன். அவர்களுடைய வாகனத்தின் அங்கவடியை அவர்களது பின்னோராகிய ஹாரிஸின் குமாரரான அபூஸுப்யான் அவர்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்; அதன் கடிவாளத்தை ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் பற்றிக் கொண்டு



நின்றார்கள். அப்பொழுது எம்பிரான் அவர்கள், 'நான்தான் உண்மைநபி. நான்தான் அப்துல் முத்தலிபின் வம்சத்தவன், என்னும் கவியை உச்சரித்துக் கொண்டிருந்தார்கள். மனோதிடத்திலும் வீரத்தனத்திலும் நம் நபிகள் நாயகத்தைக் காட்டிலும் வேறொருவரும் அந்தயுத்தகளத்தில் சிறந்தவராய்க் காணப்படவில்லை. ஆண்டவன் மீது ஆணையாக நான் சொல்கிறேன்: யுத்தகளத்தில் இரத்தச் சேதம் அதிகமாயுண்டாய் அளவுக்கு மிஞ்சிய திகில் எங்கள் இருதயத்தைப் பற்றிப்பிடிக்கும் போது நாங்களெல்லோரும் நபிகள் நாயகத்தினிடத்திலேயே அடைக்கலம் புகுவது வழக்கம். ரணரங்கத்தில் எங்களுக்கெல்லாம் மனச்சோர்வு உண்டாகுங்காலத்தில் நம் நபிபிரான் மட்டுந்தான் மகா தைரியசாலியாக நின்று எதிரிகளுடன் அந்த அபாயமான வேளையில் மனங்கலங்காமல் போர் புரிவார்கள்"—(புகாரி).

இவ்விஷய சம்பந்தமாக ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் பின்வருமாறு சொல்கிறார்கள்: "அன்று நபிகள் நாயகம் ஏறியிருந்த வாகனத்தின் கடிவாளத்தை நான் பிடித்துக் கொண்டிருந்தேன். முஸ்லிம்களெல்லோரும் யுத்தகளத்தை விட்டு வெருண்டோடின போது நானும் என்கையிலிருந்த கடிவாளத்தை இறுகப் பிடித்துக்கொண்டு அம்மிருகத்தை அப்பால் எதிரிகளின் பக்கம் போக விடாமல் தடை செய்யப்பார்த்தேன்; ஆனால் நபிகள் நாயகமவர்கள் தங்களுடைய அங்கவடியால் அவ்வாகனத்தின் விலாவில் நெருக்கி அதை எதிரிகளிருக்கும் இடத்தை நோக்கிச்செலுத்தினார்கள். சிறிது நேரத்துக்குள் நாங்களிருவரும் எதிரிகளின் கூட்டத்துக்குள் அகப்பட்டுக்கொண்டு மகா அவஸ்தையான நிலைமைக்கு வந்து விட்டோம்; அப்பொழுது எதிரிகளின் கொடுமையைத் தாளாமல் நபிபெருமானின் கட்டளைக்கிணங்க அஸ்ஹாபி ஸம்ரா (ரலி) அவர்களைத் துணைக்காகக் கூப்பிட்டேன். இந்த அஸ்ஹாபியும் நான் கூவுவதைக் கேட்டு ஓடிவந்தார்கள். மற்றும் சிறிதுபொழுதுக்கெல்லாம் போர்முனையின் கொடுமையானது மாறத்தலைப்பட்டது; உடனே யுத்தகளத்தின் வெற்றியானது எம் முஸ்லிம்களின் பக்கம் திரும்பவே, எதிரிகள் தோல்வியடைய ஆரம்பித்தார்கள்"—(ஷபா)

ஒருமுறை உபை பின் கல்பு என்பவன் யுத்தத்தில் கைதியாக அகப்பட்டு மறுபடியும் அவனுக்குரிய நஷ்டத்தொகை கொடுபட்டவுடன் சிறையினின்றும் விடுவிக்கப்பட்டான். அப்பொழுது அவன் நம் நபிகள் நாயகத்தை நோக்கி, "என்னிடத்தில் ஒரு பார் அளவு ள்ள தான்யம் தின்னக்கூடிய குதிரை யொன்றிருக்கிறது. அதில் ஏறிச் சவாரி செய்துகொண்டே உன்னை நான் கொல்வேன்," என்று

சபதம் கூறினான். அதற்கு நாயகமவர்கள், "ஆண்டவன் நாடுவானே யானால், என்னுடைய கையினாலேயே நீ கொல்லப்படுவாய்," என்று மறுமொழி கூறினார்கள். பிறகு உஹது யுத்தத்தில் உபையின் கல்பு என்பவன் நம்முடைய நபிகள் பிரானை நோக்கித் தன் குதிரையை விரட்டிக்கொண்டு ஓடி வந்தான். சில முஸ்லிம்கள் வழியில் நின்று அவனைத் தடைசெய்தார்கள்; ஆனால் அவர்களை யெல்லாம் விலகிச் செல்லும்படியும் தங்களை நோக்கிவரும் எதிரிக்கு வழிவிடும்படியும் நம்பெருமானாரவர்கள் உத்தர விட்டார்கள். ஹாரிஸ் பின் அஸ்மா (ரலி) அவர்களுடைய ஈட்டியை எடுத்துக்கொண்டு நமது நாயகமவர்கள் உபை என்பவனை நோக்கிச்சென்று, தாங்கள் தாங்கியிருந்த ஈட்டியைத்தலைக்குமேல் சுழற்றி அவ்வெதிரியின் மீது மிகவேகத்துடன் அழுத்தமாகத் தாக்கினார்கள். ஈட்டியின் குத்துப்பட்டவுடன் அந்தப் பாதகன் குதிரையினின்றுந் தடுமாறிக் கீழே விழுந்தான். அதனால் அவனுடைய விலா எலும்பு முறிந்து உலகத்தில் கேட்டிராத கூச்சலுடன் கூக்குரலிட்டுக்கொண்டு தன் நண்பர்களாகிய குறைஷிகளிருக்கு மிடத்தை நோக்கி ஓடினான். நபிபெருமானால் உண்டாக்கப்பட்ட காயமானது அவ்வளவு அபாயகரமானதாயில்லை யென்று சொல்லி அவனுடைய நண்பர்கள் அவனுக்கு ஆறுதல் செய்யப்பார்த்தனர்; ஆனால் தனக்குண்டாயிருக்கும் காயத்தை அந்த நண்பர்களெல்லோருக்கும் ஆளுக்குக் கொஞ்சமாக விதித்துக்கொடுக்கும் பக்ஷத்தில் அவர்களெல்லோரும் அடியோடு வானுலகம் சென்று விடும்படியான அவ்வளவு பயங்கரமான ரணம் தனக்குண்டாயிருப்பதாக உபை என்பவன் ஓயாமல் புலம்பிக்கொண்டேயிருந்தான். இதற்கு முன்னொரு முறை யுத்தகளத்தில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தம்முடைய கையினாலேயே தன்னைக்கொல்வது நிச்சயமென்று முன்னறிக்கை செய்திருப்பதால் அவ்விதமே தான் இச்சமயம் இறந்துபோவது நிச்சயமென்று அந்தக் காதகன் கூறி அழுதான். "நபிபெருமானாவர்கள் தங்களுடைய எச்சிலை அவன்மீது துப்பியிருந்தாலே அவனைக் கொல்வதற்கு அதுவே போதுமானதாயிருக்கு மென்று அவன் ஆண்டவன்மீது சத்தியம் செய்து கூறினான். கடைசியில் இந்தரணமே அவனுக்கு மரணமாய் முடிந்தது. உபை என்பவன் மக்கமா நகரைநோக்கிப் புறப்பட்டு உஹதிலிருந்து ஆறுவது மைலில் ஸாபு என்னு மிடத்தில் உயிர் துறந்தான்—(ஷபா).

"எதிரிகளைத் தாக்குவதில் நமது நபிபிரான் அவர்களே எப்பொழுதும் முதன்மைபெற்றிருப்பார்கள்," என்று இம்ரான் பின் ஹுஸைன் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்—(ஷபா).

-136-



"யுத்த களத்தில் சண்டையானது மகா கொடுமையான உன்னதஸ்தானத்தை அடையும்போதும் வீராவேசத்தினாலும் வெம்பிய மனத்தினாலும் எங்களுடைய கண்களெல்லாம் இரத்தம்போல் சிவக்கும் போதும் நாங்களெல்லோரும் நபிபெருமானின் ஆதரவை எதிர் பார்ப்பது வழக்கம். அப்பொழுது நம் நாயகத்தைப்போல் எதிரிகளிடத்தில் நெருங்கிச் சண்டை செய்யக்கூடியவர்கள் எங்களுள் வேறொருவரும் காணப்பட மாட்டார். பதுரு யுத்தத்தில் நாங்கள் அவர்களிடம் அடைக்கலம்புகுந்த போது ரஸூலுல்லா அவர்கள் அதிக உற்சாகத்துடனும் வீராவேசத்துடனும் விடாமுயற்சியுடனும் எதிரிகளுடன் சண்டை செய்வதை நாங்கள் கண்ணாரக் கண்டோம்," என்று ஹஸ்ரத் அலீகர்ரமுல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள்.—(ஷபா)

நம் நபிகள் பெருமானாரிடத்தில் கோழை மனமென்பதாவது பயங்கொள்ளித்தனமாவது ஒரு சிறிதும் காணப்பட்டதே கிடையாது; ஆனால் இவ்வாறு அவர்களுடைய வீரத்தனம் இருந்து வந்தபோதிலும் அவர்கள் ஒருபோதும் வீண்சண்டை செய்ய விரும்பியதே கிடையாது. அவர்களுடைய ஜீவதிசையில் எப்பொழுதும் கோபாவேச மென்பதே ஜனித்ததில்லை. அவர்களுடைய வீரத்தனமானது தர்மயுத்த சம்பந்தமானதாகவே சதாகாலமும் இருந்து வந்தது. தர்மநீதிக்கு முரணாகவும் சன்மார்க்க ஒழுக்கத்துக்குப் பங்கமுண்டாகும்படியாகவும் ஜாதிய முறைமைக்கு ஹானியாகவும் அவர்கள் தங்களுடைய வீரத்தனத்தை ஒருபோதும் உபயோகித்ததில்லை. தர்ம யுத்தத்தில் போர்புரியும் சுத்தவீரனுக்குரிய முறைமையில் அவர்களுடைய தீரமானது முற்றிலும் மகா பரிசுத்த முடையதாய் எல்லோராலும் விரும்பத்தக்கதா யிருந்தது. நம் நபிகள் நாயகமவர்கள் தங்களுடைய வாழ்நாளில் அநேக யுத்தம் செய்யும்படி அவசியம் நேரிட்டது; அவற்றுள் ஒன்றேனும் நபி பெருமானால் வேண்டுமென்று வலுவில் போடப்படவில்லை; ஆனால் அவையெல்லாம் இஸ்லாத்தின் பாதுகாப்புக்காகவும் முஸ்லிம்களின் தற்காப்புக்காகவுமே நடத்தப்பட்டன. அப்படிப்பட்ட யுத்தங்களி லெல்லாம் நபிகள் பிரானவர்கள் தாமாகவே வலுவில் எந்த எதிரியையும் நோக்கி அவன்பால் யுத்தம் செய்ய நெருங்குவதில்லை; ஆனால் எதிரியின் தொந்தரவால் கைகலந்து யுத்தம் செய்யும்படியான அவசியம் நேரிட்டு விட்டால் அப்பொழுது நபிகள் நாயகம் ஒரு சிறிதும் பின்வாங்காமல் அதிக மனோதிடத்துடனும் கம்பீரத்துடனும் எதிரியைத் தோல்வியுறச் செய்வார்கள். இவ்வாறு புறமுதுகு காட்டாமல் தர்மயுத்தம் செய்ததால்தான் பதுரு

யுத்தத்தில் எம்பெருமானாருடன் உதவியாய் நின்ற முஸ்லிம்கள் முந்நூற்றுப் பதின்மூன்று பேர்களாயிருந்தும் குறைஷ்குலக்காபிர்களுள் பொறுக்கி யெடுத்த ஆயிரம் எதிரிகளை அடியோடு முறியடித்து விட்டார்கள். மக்கத்துக் காபிர்கள் தலைகிளப்பாமல் ஒடுங்கிவிடவும் முஸ்லிம்களெல்லோரும் மிக உற்சாகத்துடன் முன்னுக்கு வரவும் எம்பெருமானின் தீரமே முக்கியகாரணமா யிருந்தது. மற்றொரு சமயத்தில் ஒருநாள் மாலைப்பொழுதில் ஒரிடத்தில் ரஸூலுல்லா அவர்கள் தங்களுடைய எதிரிகளை எதிர்நோக்கிய வண்ணமாய்ச் சூரியாஸ்தமனகாலம் வரையில் காத்திருந்தார்கள்; அஸ்தமனத்துக்குப் பின் இருள்சூழ ஆரம்பிக்கும்போது நபிபெருமானார் எழுந்து நின்று தங்களுடைய சைன்யத்தை நோக்கி, "ஓ, ஜனங்களே! எதிரிகளை இப்பொழுது சந்திக்கலாமென்று ஆவலுடன் எதிர் பாராதிருங்கள்; சமாதானத்துடனும் சரீரசுகத்துடனும் உயிர் வாழ்வதற்கு அல்லாஹுத் தஆலாவிடத்தில் விண்ணப்பம் செய்யுங்கள்; ஆனால் எதிரிகளின் முன்னிலையில் யுத்த சன்னத்தராய் நீங்கள் நிற்கும்போது அமைதியுடன் நிற்கப் பழகிக்கொள்ளுங்கள்; யுத்தகளத்தில் வீசப்படும் வாளாயுதத்தின் நிழலின்கீழ்தான் சுவர்க்கமானது அமைந்திருக்கிறதென்று நான் உங்களுக்கு உறுதியாய்க் கூறுகின்றேன்; (அதாவது, இஸ்லாத்தின் உண்மைக்காக ஒருவர் உழைக்க முன்வந்து அதனால் தம் உயிரைத் தத்தம் செய்வாராயின் அப்பொழுது அவருக்குக் கிடைக்கும் சுவர்க்கானந்தமானது வேறெந்த வழியாலும் கிடைக்கக்கூடிய பரலோக இன்பத்தைக் காட்டிலும் மகா சிரேஷ்டமுள்ளதா யிருக்கும்)"— (புகாரி), என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

யுத்தகளத்தில் நின்று சைன்யத்தை நடத்தும்போது ராணுவத்தலைவர் என்னும் முறைமையில் எம்பெருமானாரவர்கள் சைன்யத்தின் நடுமத்தியிலே நின்றுகொண்டுதான் யுத்தத்தை நடத்துவார்கள். அவர்களுடைய விரப்பிரதாபமும் வேறு யாருக்கு மஞ்சாது மனோதிடமுமே அவர்களுக்கொரு கேடகமாயிருந்தன. நபி பிரானவர்கள் இவ்வாறெல்லாம் யுத்தமத்தியில் நின்று போர்புரிந்த போதிலும் தங்களுடைய திருக்கரத்தால் அநேகம் பேர்களைச் சுமார் பதினைந்து அல்லது பதினாறு சண்டைகளில் ரஸூல் (ஸல்) அவர்கள் நேரில் கலந்து போர்புரிந்திருந்தும் இரண்டே மனிதர்களை மட்டுந்தான் அவர்கள் தங்களுடைய திருக்கரத்தால் உயிர்ச்சேதம் செய்திருக்கிறார்கள்: உபை என்பவனை உஹது யுத்தத்தில் குத்தினார்கள்; மற்றொரு சமயத்தில் வேறோர் எதிரியை எமலோகம் அனுப்பினார்கள். (இன்னும்வரும்)

நவ்முஸ்லிம்.

-137-

முபிஸ்மிலன்.

# தத்துவ இஸ்லாம்

ISLAM AS IT IS,

وَلْتَكُنْ مِنْكُمْ أُمَّةٌ يَدْعُونَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ

கமலம் - 3. | 1921ஞு டிஸம்பர்மீ | இதழ்-8.

DEC 192

بسم الله الرحمن الرحيم

نحمده ونصلي على رسوله الكريم

## முஸ்லிம்களின் தொழுகை

"இவ்வேதத்தில் (குர்ஆன்ஷரீபில்) உங்களுக்காக வெளியாக்கப்பட்டிருப்பதை ஓதித் தொழுகையை நிலை நிறுத்துங்கள்; உறுதியாகவே தொழுகையானது அட்சாரத்தினின்றும் தீமையினின்றும் ஒருவனை அப்பால் விலக்கிவைக்கின்றது; நிச்சயமாகவே அல்லாஹுத் தஆலாவை மனனம் செய்வது மகா மேலான காரியமாயிருக்கிறது"—(குர்ஆன் 29:45), என்று ஆண்டவன் தனது திருவேதத்தில் தொழுகையின் பெருமையைப்பற்றி விளக்கியிருக்கிறான். ஆதலின் எம் இஸ்லாமார்க்கத்தில் தொழுகையென்பது மனிதனுடைய ஆத்மார்த்தத்தை முன்னுக்குக் கொண்டுவருவதற்காகவே ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களின் மனத்திலுதிக்கும் பிரார்த்தனைகளை வெளிப்படுத்துவதுதான் தொழுகையின் முக்கிய நோக்கமாயிருக்கின்றது. நம்முடைய தாழ்ச்சியை ஆண்டவனுடைய சன்னிதானத்தில் பணிவுடன் வெளிக்காட்டி நம்முடைய ஆத்மசக்தியை யெல்லாம் வெளிப்படுத்துவதற்காக நம்முடைய மனத்தில் பொதிந்து கிடக்கும் ஆவலை அவனிடம் தெரிவிக்கும் பொருட்டே இத்தொழுகையானது அவசியமான காரியமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதரமதங்களிலிருப்பது போலவே எம் இஸ்லாமார்க்கத்திலும் தொழுகையானது

(அதாவது தெய்வவணக்கம்) மிகமேலான காரியமென்று கருதப்பட்டு வருகின்றது. மனிதனுடைய ஆத்மாவைப் பக்குவப்படுத்துவதால் எவ்வளவு உன்னதமான நிலைமையையெல்லாம் அடைதல் முடியுமோ அவ்வளவு உன்னதமான மேன்மையையும் பெறுவதற்கு வேண்டிய மனப்பரிசுத்தத்தையெல்லாம் அடைவதற்கு இத்தொழுகையானது மெத்த உதவிபுரிகின்றது; ஆண்டவனுடைய சைதன்யதரிசனத்தை (இல்ஹாமை) அடையவேண்டுமாயின் அதற்குரிய மனப் பரிபக்குவத்தையும் நம்முடைய தொழுகையால்தான் சித்தித்துக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட தரிசனத்துக்கு இஃதொன்றுதான் சிறந்தவழி. இப்படிப்பட்ட மேன்மையையெல்லாம் அடைய வேண்டுமென்னும் அவாவுடனேயே தொழுதுவந்தால்தான் நமக்கு அத்தொழுகையால் தக்க பயனுண்டாகும். ஆனால் தொழுகையை ஒரு வெறும் சம்பிரதாயமாக மட்டும் கருதி அதில் பூரண மனவோர்மையைச் செலுத்தாமல் கபடமான எண்ணத்துடன் தொழுது வருவோமாயின் அது ஆற்றிற் கரைத்த புளியாகத்தான் முடியும்; தொழுகையின் கருத்தை யுணராமல் வெளித்தோற்றத்துக்காகமட்டும் ஒரு கடமையைக் கழிப்பதுபோல் தொழுவதானது உயிரற்ற உடலுக்கு ஓர் அலங்காரம்செய்வதுபோலாகும். இப்படிப்பட்ட உயிரற்ற தொழுகையைப்பற்றி அல்லாஹுத்தஆலா தன் திருவேதத்தில் மிகக்கேவலமாய்க் கூறுகின்றான்: "தங்களுடைய தொழுகையில் பூரணமனதையும் செலுத்தாதவர்களின் தொழுகையானது பரிதாபகரமான நிலைமைக்குத்தான் வந்து சேரும்"—(குர்ஆன், 107:5).

தொழுகையானது மனிதனுக்கு ஆத்மார்த்தமான உணவாய் அமைந்திருக்கிறது; இதை ஒவ்வொரு முஸ்லிமும் தினம் ஐந்து வேளை அனுஷ்டித்து வரவேண்டும். ஆனால் ஒவ்வொருநாளும் ஐந்துவேளை தொழுவது அதிகமென்று சிலர் நினைக்கக்கூடும்; மனிதனுடைய ஸ்தூல தேகத்தை வளர்ப்பதற்கு ஒவ்வொருநாளும் அவர்கள் எத்தனை முறை ஆகாரம் செய்ய வேண்டியிருக்கிறதென்றும் இன்னும் எத்தனைமுறை தாகசாந்தி செய்துகொள்ள வேண்டுமென்றும் அவர்கள் சற்று நிதானித்துப் பார்ப்பார்களாக. இக்காலத்தில் மேல் நாட்டு நாகரிகமென்னும் காமாட்டி அநாகரிகத்தில் மூழ்கித் தத்தளித்து நிற்கும் சிலர் தினம் ஒன்றுக்குக் குறைந்தது ஆறுவேளை ஆகாரம் செய்துவருகின்றனர்; இஃதன்றிப் பானவகையில் பலவிதமானதைப் பலதடவைகளாகத் தினம் தினம் பருகிவருகின்றனர். கட்புலனாகக் கூடிய ஸ்தூல தேகத்துக்குத் தினம் தினம் பலவேளை ஆகாராதிகள் வேண்டியிருக்கும்போது, ஸ்தூலதேக வளர்த்தியைக்

138



காட்டிலும் மிகவும் உன்னதமாகிய ஸூக்ஷ்ம தேக வளர்த்திக்காக ஒவ்வொரு நாளும் குறைந்தது ஐந்து வேளையேனும் மானஸபோஜனம் அவசியமில்லையா? ஸ்தூல தேகத்தின் விருத்தியைக்காட்டிலும் ஸூக்ஷ்ம தேகத்தின் விருத்தியானது அத்தியாவசியமானதும் உயர்ந்தது மல்லவா? ஏனெனின் ஸ்தூலத்தைக் காட்டிலும் ஸூக்ஷ்மம் விலைமதிக்க முடியாத மாணிக்கமன்றோ? தினம்தினம் இந்த ஸ்தூலத்தை வளர்க்கப் பலமுறை ஆகாராதிகளை உட்கொள்ளுகின்றோம்; இவ்வாறிருக்கும்போது ஸூக்ஷ்மத்தை வளர்ப்பதற்கு அதைக்காட்டிலும் அதிகமான மானஸபோஜனம் வேண்டாமா? தினம்தினம் ஆகாரம் செய்யவேண்டிய முறைமைப்படி சரியான விதத்தில் ஆகாரம் செய்யாவிடின் ஸ்தூல தேகமானது மெலிந்து போகின்றது; இவ்வாறிருக்கும்போது ஸூக்ஷ்ம தேகத்தை வளர்ப்பதற்குரிய மானஸபோஜனத்தை ஒவ்வொருநாளும் எத்தனை முறை நாம் உட்கொள்ளவேண்டுமென்று நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் மட்டும் இவ்வுண்மையை உணர்ந்து கொண்டதாய்த் தெரியவில்லை. ஒவ்வொரு வாரத்திலும் ஆறுதினம் வரையில் சும்மா இருந்து விட்டு ஏழாவது தினமாகிய ஓய்வு நாளிலும் மாதாகோவிலுக்குப் போகாமலே மேல்நாட்டுக்கிறிஸ்தவர்கள் காலங்கழித்து வருகின்றனர். மானஸபோஜனத்தைக்குறித்துக் கிறிஸ்துமதத் தலைவரே பின்வருமாறு கூறுகின்றார்: "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்"—'(மத்தேயு, 4:4). ஏசுநாதர் (ஈஸா அலை) வார்த்தையால்மட்டும் சொல்லி விட்டுப்போன விஷயத்தை எமது நபிபெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்களுக்கு இறைவனருளும் அவனன் சாந்தியுமுண்டாகுக) அவர்கள் தாம் அனுஷ்டானத்தில் கொண்டுவந்து நிலைநிறுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இஸ்லாமார்க்கத்தைத்தவிர ஏனைமதத்தினரெல்லாம் தேவபூஜைக்காகப் பொதுவான ஒரு தினத்தைப் பிரத்தியேகமாக ஏற்படுத்தி அந்நாளில் வேறு வேலைகளை ஒதுக்கிவைத்துத் தெய்வவணக்கத்தை மட்டுந்தான் செய்யவேண்டுமென்று கூறும்போது இஸ்லாமார்க்கம் மட்டும் மனிதனுடைய நித்தியானுஷ்டான காரியங்களுக்கிடையில் ஐங்காலப்பிரார்த்தனைகளைப் புகுத்தித் தெய்வவணக்கத்துக்கொரு புதிய தாத்பரியத்தை விளைவித்திருக்கிறது என்பதை மட்டும் நீங்கள் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இஸ்லா மார்க்கத்தில் தெய்வவணக்கத்துக்காகப் பிரத்தியேகமான நாளொன்றும் ஒதுக்கிவைக்கப்பட வில்லை; இக்காரணத்தாலேயே

எமது சன்மார்க்கத்தில் ஓய்வுநாள் (Sabbath) என்று ஒருநாள் ஏற்படுத்தப்படவில்லை. இஸ்லாத்தில் வேண்டப்படுவதெல்லாம் இதன் கீழ்க் காணப்படும் ஒரே விஷயம்தான்: அதாவது, முஸ்லிம்கள் தங்களுடைய தினப்படியான வேலைகளில் அதிக கவனத்தைச் செலுத்தியிருக்கும் வேளைகளிலும் தம்முடைய லௌகிககாரியங்களினின்றும் தமது மனதைத் திருப்பிக்கொண்டு உடனே தெய்வத்தினிடத்தில் தங்கள் ஞாபகத்தைச் செலுத்தப் பழகிக்கொள்ள வேண்டுமென்பதுதான். இஸ்லாமிய முறைப்படி லௌகிகத்தின் இடையிடையே வைதிகமும் புகுத்திவைக்கப்பட்டிருக்கிறது; இம்மார்க்கத்தில் லௌகிகம் வேறு வைதிகம் வேறு என்று வித்தியாசம் செய்வதில்லை. லௌகிகமெல்லாம் வைதிகமாகவே இம்மதத்தில் கருதப்பட்டு வருகின்றது. ஆதலின் வைதிக சம்பந்தத்தின் சார்பாகவே லௌகிகமெல்லாம் இம்மார்க்கத்தில் நடைபெற்றுவருகின்றன. இக்காரணத்தால்தான் எமது இஸ்லாமார்க்கத்தில் சன்னியாசமென்பதே கிடையாது. லௌகிக காரியங்களின் இடையிடையே நாம் செய்துவரும் வைதிக முயற்சிகளினாலேயே இறைவனுடன் சம்பந்தம் செய்துகொள்வது இம்மார்க்கத்தில் எளிதாயிருக்கும்போது ஆயுள்முழுதும் இயற்கைக்கு முரணான சன்னியாசத்தை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? இஸ்லாமார்க்கம் இவ்வுலகில் அவதரிக்குமுன் ஏனை மதத்தினரெல்லாராலும், துறவறத்தாலல்லாமல் இத்துக்க சாகரத்தைக் கடந்து மோக்ஷப் பேரானந்தத்தை அடைதல் முடியாதென்று கருதப்பட்டு வந்த தப்பு அபிப்பிராயத்தை முதன் முதலாக எம் இஸ்லாம்தான் மாற்றத்தலைப்பட்டது; இல்லற வாழ்க்கையில் அதிகமாக உழன்று வருங்காலையிலும் நாம் சரியான தேவவணக்கத்தால், துறவறத்தாருக்குக் கிட்டக்கூடிய நன்மையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமானதை அடைந்து ஆண்டவனுடைய சைதன்ய தரிசனத்தையும் அதிலகுவில் பெறக் கூடுமென்பதை எமது இஸ்லாமார்க்கம் எண்பித்து விட்டது.

குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட வண்ணமாக ஐங்காலப் பிரார்த்தனைகளைச் செய்து முடிக்கவேண்டுமென்று அல்லாஹுத்தஆலா கட்டளையிட்டிருக்கும்போது அப்பூஜைகளை அவ்வண்ணமாகவே அவற்றிற்குரிய வேளைகளில் செய்து முடிக்கவேண்டும்; ஆனால் அப்பூஜைகளில் குர்ஆன்ஷரீபின் இன்ன இன்ன வாக்கியங்களைத்தான் ஓதவேண்டுமென்று கட்டாயமில்லை. அவரவருடைய மனோநிலைமைக்குத் தக்கபடியும் அவரவரின் நாட்டத்துக்குத் தக்கபடியும் குர்ஆனே கரீமிலுள்ள எந்த ஆயத்தையேனும் ஓதிக்கொள்ளலாம். தொழுகைக்குவேண்டிய பொதுவிதிகளெல்லாம் செவ்வனே



கூறப்பட்டிருக்கின்றன; இவ்விஷயத்தில் இவ்வுலகிலுள்ள எல்லா முஸ்லிம்களும் ஒரே அபிப்பிராயமுள்ளவர்களாகவே யிருந்து வருகின்றனர். ஒற்றுமையையும் ஒழுங்கையும் உண்டுபண்ணுதற்கு இப் பொது விதிகளெல்லாம் அவசியம் வேண்டியிருக்கின்றன; ஆனால் இப்படிப்பட்ட குறிப்பிட்ட முறையான தொழுகைகளைத் தவிர ஆண்டவனிடத்தில் மனிதன் தன் எண்ணங்களை நன்றாக வெளியிட்டு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டியதற்கு அவசியமான வசதியும் இதில் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சிலர் நம்முஸ்லிம்களின் தொழுகையைக் குறித்துச் சில ஆக்ஷேபங்கள் செய்வதுண்டு: ஆண்டவனைத் தொழும்போது மனதில் மட்டும் தியானம் செய்தால் அது போதாதோ? ஏன் அங்க சேஷ்டைகளெல்லாம் செய்யவேண்டும்? என்று அவர்கள் ஐயவினாக் கேட்கின்றனர். இஸ்லாத்திலில்லாத ஏனையோர் மட்டும் இவ்வாறு கேட்பதாய் நினைக்கவேண்டாம்; தொழுகையின் இரகசியப்பெருமையை இன்னதென்றறியாத சிலமுஸ்லிம்களும் இவ்வாறே வீண்பிதற்றல் செய்துகொண்டு திரிகின்றனர். ஆனால் அவர்களுக்கு நாமொன்று சொல்ல விரும்புகின்றோம்: மந்திரத்தால் மட்டும் மாங்காய் விழுந்துவிடுமென்னும் பொய்நம்பிக்கையை அவர்கள் கைவிட்டு முயற்சியே திருவினையாக்குமென்னும் மெய்நம்பிக்கையைக் கடைப்பிடிப்பார்களாக. "எவனொருவன் தூண்டுதல் செய்கின்றானோ அவனுக்கே ஆண்டவன் துணைபுரிகின்றான்" என்பது ஆண்டவனுடைய கட்டளையன்றோ? ஆண்டவனை நாம் தொழுவதெல்லாம் நம்முடைய சொந்த சக்திகளை விருத்தி செய்துகொள்ளும் பொருட்டேயல்லாமல் அவனைவெறுமையாய் வாயால்மட்டும் ஸ்தோத்திரம் செய்தற்கன்று. இவ்வாறு நம்முடைய ஆத்ம சக்திகளை வெளிக்கிளப்பி விருத்தி செய்யவேண்டுமாயின் அதற்குவேண்டிய முயற்சிகளையும் உடனுக்குடன் செய்துவரவேண்டும். இப்படிப்பட்ட முயற்சிதான் இப்படிப்பட்ட அங்கசேஷ்டைகளையுடைய தொழுகையாயிருக்கிறது. வேறு மதங்களில் கூறுவதுபோல் தெய்வவணக்கமென்பது வெறும் தேவஸ்தோத்திரமாக மட்டும் இஸ்லாத்திலும் இருக்குமாயின் அங்கசேஷ்டையான முயற்சிகள் அவசியமாக வேண்டியதில்லை. ஆனால் தேகமுயற்சியாலேயே ஆத்மசக்திகளையெல்லாம் வெளிப்படுத்தவேண்டியிருப்பதால் அதற்குரியதேகமுயற்சியானது இப்படித்தானிருக்கவேண்டுமென்று ஆண்டவன் செய்துள்ள கட்டளையின்படி நமது நபிகள் நாயகமவர்கள் நம்முடைய தொழுகையில் இப்படிப்பட்ட அங்கசேஷ்டைகளையெல்லாம் அமைத்திருக்கின்றார்கள். மேலும் ஒருவருடைய உள்ளத்தில் ஒருவகை நிகழ்ச்சி உண்

டாகும்போது அந்நிகழ்ச்சிக்குரிய செய்கையும் அவனுடைய புற உறுப்பில் வெளிப்படுவதுண்டு. உள்ளத்தின்கண் மனக்கிளர்ச்சியுண்டாகுமாயின் அது நம்முடைய முகத்தில் மலர்ச்சியான புன்சிரிப்பை யுண்டாக்குகின்றது. சந்தோஷத்துக்கான பரபரப்பும் கோபத்துக்கான சிடுசிடுப்பும் துக்கத்துக்கான வெடுவெடுப்பும் முகத்தின்கண் தோன்றுவது சகஜம் தானே. இப்படியே உள்ளத்தில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் வெளித்தோற்றத்தில் சில குறிப்புக்கள் நிகழ்வதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். சந்தோஷ சமாசாரம் பேசும்போது முகமலர்ச்சியும் துக்க சமாசாரத்துக்கு முகச்சுளிப்பும் உண்டாகின்றன. இவ்வாறே நமஸ்காரம் செய்யும்போது நம்முடைய கையிரண்டும் குவிகின்றன; சன்மார்க்க முறைப்படி நாம் சலாம் சொல்லும்போது நமது வலதுகை நெற்றியின் கிட்டப் போகிறது. இஃதேபோல் நம்முடைய இறைவன்முன் நாம் நின்று வணக்கம் புரியும்போது நம்முடைய தொழுகையாகிய அங்கசேஷ்டை (மெய்ப்பாடு) வெளிப்படுகின்றது. ஆனால் முஸ்லிம்கள் தொழுவது போன்ற அங்கசேஷ்டைதான் அந்தத் தெய்வ வணக்கத்தில் உண்டாகவேண்டுமோ, அல்லது வேறு வகை மெய்ப்பாடும் உண்டாகலாமா என்று சிலர் சந்தேகிக்கக்கூடும். ஆண்டவனை வணங்கும்போது அவரவருடைய மனோநிலைமைக்குத் தக்கபடி வெளிப்படையான மெய்ப்பாட்டு நிகழ்ச்சிகள் உண்டாகலாம். ஆனால் எல்லோருடைய தொழுகையும் கிரியாம்சையில் ஒரு தன்மைப்பட்டதாயிருக்கும் பொருட்டு எம்பெருமானார் முஹம்மது (ஸல்) நபியவர்களுக்குண்டான மெய்ப்பாட்டுப் புற நிகழ்ச்சியையே நாமெல்லாம் நம்முடைய தொழுகையில் அநுஷ்டித்து வருகின்றோம். அவரவரும் தம் தம்முடைய மனோபாவப்படி தெய்வ வணக்கத்தில் அங்கசேஷ்டைசெய்ய ஆரம்பிப்பாராயின் இவ்வுலகிலுள்ள எல்லா முஸ்லிம்களும் எல்லாவித லௌகிகவைதிக கருமங்களிலும் ஒருதன்மைப்பட்ட ஒரேவர்க்கத்தினராயிருக்கிறார் என்னும் கட்டுத்தளர்ந்துபோம். மேலும் இதுவரையில் இவ்வுலகில் அவதரித்திருக்கும் எல்லாமனிதர்களைக்காட்டிலும், எல்லாமகான்களைக் காட்டிலும், இன்னும் எல்லா நபிமார்களைக் காட்டிலும் மிகவும் உத்தமோத்தம குலசிரேஷ்டரான எமது கடைசி நபியாகிய காருண்ய மூர்த்தியாகிய அஹமது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் காட்டிலும் நாமெல்லாம் எத்தனையோ பங்கில் தாழ்ந்தவர்களானபடியால் அவர்களுடைய வழியைப் பின்பற்றி நடப்பதே நமக்கெல்லாம் போதுமானதா யிருக்கின்றது. பெருநபியவர்களைப் பின்பற்றி நடப்பதே

—140—



நமக்கெல்லாம் சௌபாக்கியமா யிருக்கும்போது அவர்களுடைய தொழுகையின் மெய்ப்பாட்டு முறையைக்காட்டிலும் சிறந்த வழியைக் கண்டுபிடிப்பது யாரால் முடியக்கூடியகாரியம்? தொழுவதற்கு மனமில்லாதவர்களும் அதில் சோம்பேறித் தனத்தைக் காட்டக் கூடியவர்களும் மட்டுமே முஸ்லிம்களின் தொழுகையில் இப்படிப்பட்ட அங்கசேஷ்டை யிருப்பதால் யாது பயனென்று வேறு பல விதமாய் வாதாடி வருகின்றனர். இப்படிப் பட்டவர்களெல்லாம், வெறும் ஜபத்தால் மட்டும் தங்களுடைய "ஜபம்" சாயாதென்றும், தங்களுடைய ஆத்மசக்தியை யெல்லாம் வெளிக்கிளப்பி விருத்தி செய்ய வேண்டுமாயின் அதற்குரிய நியமநிஷ்டைகளைப் பெரியோர்கள் செய்து வந்தபடி செம்மையாய்ச் செய்து வரவேண்டுமென்றும், அப்படிப்பட்ட நியமநிஷ்டையில் நம்முடைய நபிபெருமானவர்களால் அநுஷ்டிக்கப்பட்டு வந்த மெய்ப்பாட்டுத் தொழுகை முறையைக்காட்டிலும் வேறு சிறந்த வழியை அநுஷ்டிக்க எவராலும் முடியாதென்றும் தம்முடைய அநுபவத்தால் அறிந்து கொள்வார்களாக.

"சூரியன் உச்சியிலிருந்து மேற்கேசாய ஆரம்பித்தது முதல் இரவின் இருள்வரையில் உள்ள (நான்கு வேளைத்) தொழுகைகளையும் காலையில் தொழும் தொழுகையையும் கடைப்பிடியுங்கள்"—(குர்ஆன் 17:78).

"இரவில் சிலநேரம் தூக்கத்தை ஒழியுங்கள்; அவசியமான விழிப்புக்கு மேல் சிறிதுநேரம் விழித்திருங்கள்; அப்பொழுது உங்களுடைய ரக்ஷகன் உங்களை மிகமேன்மையான நிலைமைக்கு உயர்த்தவுங் கூடும்."—(17:79).

பிறகு உங்களுடைய (ஐந்து வேளைத்) தொழுகையையும் முடித்துக்கொண்டு, நிற்கும்போதும் உட்கார்ந்திருக்கும்போதும் சாய்ந்துகிடக்கும் போதும் அல்லாஹுத் தஆலாவை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்; ஆனால் (அபாயத்தினின்றும் விலகி) நீங்கள் க்ஷேமமா யிருக்கும்போது தொழுகையை விடாதீர்கள். நம்பிக்கையுள்ளவர்களுக்கு (மூமின்களுக்கு)த் தொழுகையானது நிச்சயமாகக் கால நிர்ணயத்தையுடைய ஒரு நியதியான நியமமாயிருக்கிறது"—(4:103).

"மேலும் உங்கள் ரக்ஷகன் (பின்வருமாறு) சொல்கிறான்: 'என்னைக் கூப்பிட்டால் ஏன் என்று கேட்பேன்; ஆனால் என்னுடைய ஊழியத்தில் பெருமை பாராட்டுகிறவர்கள் நிச்சயமாக அவமானப் பட்டு அதிசீக்கிரம் நரகில் புகுவார்,"—(குர்ஆன் 40:60).

## நாயக வாக்கியம்

16 தங்களிடத்தில் பிறர் வைத்த நம்பிக்கையை நிறைவேற்றுகிறவர்களும் தங்களுடைய வார்த்தையில் தவறாதவர்களும் பிறருக்குக்கொடுத்த உறுதிமொழிகளைப் பூர்த்திசெய்து வைப்பவர்களுமே முஸ்லிம்களென்று சொல்லப்படுவார்கள்.

17 "நிச்சயமாக வறுமை வந்த காலையில் பொறுமையுடனிருப்பவர்களும் பிறருடைய பிழைகளை மன்னிப்பவர்களுமே மேன்மையான காரியங்களைச் செய்து முடிக்கக் கூடியவர்கள்" என்றிவ்வாறு ஆண்டவன் கூறியுள்ளான்.

18 பணிவும் உபசாரமுமே பக்தியின் காரியங்களாயிருக்கின்றன.

19 உண்மையான அடக்கமே சகல நற்குணங்களுக்கும் மூல காரணமாயிருக்கிறது.

20 அடக்கமும் கற்புடைமையுமே இஸ்லாத்திலுள்ள நம்பிக்கையின் அம்சங்களாயிருக்கின்றன.

21 தர்மத்துக்குள்ளெல்லாம் சிறந்த தர்மம் மனிதனுடைய உள்ளத்திலிருந்து உதயமாகி, வேதனைப்பட்டோரின் மனப்பிணியை மாற்றுவதற்காகப் பேசப்படும் மிருது பாஷைதான்.

22 உண்மையான பரிசுத்த முடைய தயாள ஹிருதயத்தையுடையவர்கள்தாம் பேரின்பச் சுவர்க்கானந்தத்தைப் பெறுவர்.

23 ஆண்டவனுடைய சிருஷ்டிப் பொருள்களிடத்திலும் தன்னுடைய சொந்தக்குழந்தைகளிடத்திலும் பக்ஷம் பாராட்டாதவனிடத்தில் ஆண்டவனும் பக்ஷம் பாராட்டமாட்டான்.

24 வயோதிகர்களிடத்தில் அவர்களுடைய விருத்தாப்பியத்துக்காகக் கண்ணியம்பாராட்டும் ஒவ்வொரு சிறுவருக்கும் அவருடைய விருத்தாப்பிய காலத்தில் அவரைக் கண்ணியப்படுத்தக் கூடியமனிதர்களை ஆண்டவன் உண்டாக்குவான்.

25 தன்னுடைய சிறு குழந்தைகளிடத்தில் பக்ஷம் பாராட்டாமலும் விருத்தாப்பியர்களின் கீர்த்தியில் மரியாதை செலுத்தாமலும் இருக்கக்கூடியவன் என்னுடைய கூட்டத்தில் சேர்ந்தவனாகான்; நன்மையான காரியங்களைச் செய்யும்படியும் தீமையான காரியங்களை விடும்படியும் ஏவாதவன் எவனோ அவனும் என்னுடைய கூட்டத்தில் சேர்ந்தவனாகான்.

26 தன் கண் முன்னிலையில் இருந்தாலும் இல்லாவிடினும் தன்னுடைய சகோதரனைக் காக்கக் கூடியவனே உண்மையான மனிதனாவான்.



27 தன்னுடைய வார்த்தையிலும் செய்கையிலும் எண்ணத்திலும் உண்மையாயிருப்பவனைத் தவிர மற்ற எவரும் உண்மையென்னும் வார்த்தையின் உண்மையான தாத்பரியப்படி உண்மையுள்ளவராகார்.

28 சோர்வடைந்த மனிதர்களின் மனத்துக்குச் சந்தோஷத்தை மூட்டுவதும் துன்பப்பட்ட மனமுடையவர்களுக்கு அத்துன்பத்தை நீக்குவதும் அதற்குத்தக்க சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளும்; துன்பம் வந்தகாலையில் அந்தச் செய்கையின் ஞாபகம் நீர் வீழ்ச்சிபோல் ஓடிவந்து நம்முடைய மனத்தின் பளுவைக் குறைக்கின்றது.

29 நன்மையான காரியங்களைச் செய்வதில் பிடிவாதமாயிருங்கள்.

30 அவசியமான வேளையில் தன்னோடொத்த பிராணிகளுக்கு உதவிபுரிபவனுக்கும் நசுக்குண்டவர்களுக்கு நல்லுதவி புரிபவனுக்கும் ஆண்டவன் தன் கடைசித் தீர்ப்பு நாளில் நல்லுதவிபுரிவான்.

## கலம்பகம்

### பித்தனின் பிதற்றல்.

அகம்பாவம் நிறைந்து ஆணவத்தில் மூழ்கி இவ்வுலக இன்பத்தில் இடமாய்க்கிடக்கும் மனிதர்கள் தங்களுடைய அதிருஷ்டம் அதிக செல்வாக்கான நிலைமையிலிருக்கும்போது சிற்சில வேளைகளில் தங்களுடைய மனோ நிலைமையைத் தடுமாற விட்டு விடுவதை நாம் அடிக்கடி கண்கூடாகக் காண்கின்றோம்; அப்படிப்பட்ட ஆணவநிலையில் அவர்கள் தங்களுக்கு மற்றெல்லாச் சாமான்யமனிதர்களுக்கிருப்பதைக் காட்டிலும் மிக மேலான தெய்விக சக்தியெல்லாம் நிறைந்திருப்பதாகப் பிறர் கருதும் படியான சொற்களையெல்லாம் வசனிப்பதுண்டு. சுமார் 15 அல்லது 16 வருஷங்களுக்குமுன் ஜெர்மன் தேசத்துக் கெய்ஸர்சக்ரவர்த்தி பின்வருமாறு சிலவிஷயங்கள் தமக்கு ஆவேசமூலமாக வெளியாக்கப்பட்டன வென்று கூறியதாகச் சிறந்த கர்த்தாக்கள் எழுதிவைத்திருக்கிறார்கள்:—

"மனிதனுடைய விருத்தியை முன்னேற்றத்துக்குக்கொண்டு வரவேண்டியதற்காகவே கடவுள் அடிக்கடி மனித உருவில் அவதாரம் எடுத்துவருகிறார்; அப்படிப்பட்ட மனித உருவான கடவுள் ஒரு புரோகிதனாகவேனும் அரசனாகவேனும் அஞ்ஞானியாகவேனும் ஞானியானகிறிஸ்துவனாகவேனும் அல்லது யூதனாகவேனும் இருக்கலாம். இவ்வாறே கடவுள் மோஸே, ஆப்ரகாம், ஹோமர்,

ஷார்லிமேன், லூதர், ஷேக்ஸ்பியர், காய்தே, காண்ட் முதலியோர்களிடத்திலும் மிகப் பெரிய சக்ரவர்த்தியாகிய வில்லியம் என்பவரிடத்திலும் அவதாரம்புரிந்து என்றுமழியாத விசேஷஜயத்தையெல்லாம் பெற்றிருக்கிறார். இஃதேபோல் என்னுடைய பாட்டனாரும் நானொரு ஆண்டவனுடைய தூதனென்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார்."

இவ்வாக்கியத்தைப் படிக்கும்போதே கெய்ஸரின் மனப்பான்மை இன்னதென்று தெரியவருகின்றது; இப்பொழுது நடந்து முடிவடைந்திருக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் அந்தக் கெய்ஸர் சக்ரவர்த்தி மட்டும் "என்றுமழியாத விசேஷ ஜயத்தையெல்லாம் பெற்றிரு"ப்பாராயின் தம்மை ஒரு தீர்க்கதரிசியென்று மட்டும் அவர் சொல்லிக் கொள்வதல்லாமல் தாம் ஒரு கடவுளின் அவதார புருஷரேயென்றும் பெருமையாகப் பறைசாற்றியிருப்பார். கெய்ஸரின் எண்ணம் மட்டும் நிறைவேறியிருக்குமாயின் அல்லாவின் திருநபிகளென்று தம்மைச் சொல்லிக் கொண்டிருந்த உண்மையான தீர்க்கதரிசிகளின் திருவசனமெல்லாம் இதுவரையில் பொய்த்துப்போயிருக்கும். உண்மைக்கும் பொய்க்கும் இடையில் வேற்றுமையில்லாமல் போயிருக்கும்; பிறகு பித்தனின் பிதற்றலுக்கும் பெருநபியின் தீர்க்கதரிசனத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசமும் அழிந்திருக்கும். பித்தனுடைய பிதற்றலேயெல்லாம் தீர்க்கதரிசிகளின் திருவாக்கு என்னலாமோ?

ஜெர்மன்தேசத்துச் சக்ரவர்த்தியாகிய கெய்ஸர் தமக்குப் பின்னே எவ்வளவோ அபரிமிதமான செல்வமும் தளவாடமும் இருப்பதைக்கண்டு மமதைகொண்டே இவ்வாறு பேசினரென்பது நாமெல்லாம் நன்கு நோக்கவேண்டிய விஷயமாயிருக்கிறது. இவருடைய ஆணவத்தின் முடிவு இறுதியில் என்னவாயிற்று? யுத்தத்தின் இறுதியில் இவர் அடியோடு முறியடிக்கப்பட்டுப் போயினர். இவருடைய சொந்த நிலைமையோ தம்முடைய ஜனனதேசத்தையும் விட்டு அன்னிய நாட்டில் அடைக்கலம் புகும்படியான கேவலகதிக்கு வந்துவிட்டது. ஆனால் ஆண்டவனால் அனுப்பப்படும் தெய்விக தீர்க்கதரிசிகளோ தம்முடைய ஜீவதசையின் ஆரம்பத்தில் கேவலமான தாழ்மையிலிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் பல ஹீனமான நிலைமையிலிருந்த போதிலும் மகா பலசாலிகளான எதிரிகளால் எதிர்க்கப்படுங் காலத்திலும் தங்களுடைய காரியமே இறுதியில் ஜயமடையுமென்றும் எதிரிகளெல்லோரும் அடியோடு நாசமடைவார்களென்றும் தைரியமாக முன்னறிக்கை செய்கின்றார்கள். அல்லாவின் நபிமார் அறைவதேபோல் அவ்விஷயமும் பிறகு



முடிவடைகின்றது. இதுதான் அல்லாஹூத் தஆலா ஒருவன் உண்டென்பதையும் அவனுடைய நபிமார்கள் சொல்வது மெய்யென்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

* * *

இஸ்லாமிய சக்தி.

எமது தீனுல் இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றிக் கிறிஸ்தவப்பாதிரிமார்கள் இதுவரையில் எவ்வளவோ தாழ்மைப்படுத்தி எழுதியிருக்கிறார்கள்; இவ்வாறிருந்தும் பக்ஷபாதமில்லாத கிறிஸ்தவர்கள் மட்டும் இம்மார்க்கமானது எவ்வளவு தூரம் முஸ்லிம்களின் நடையுடைபாவனைகளில் சீர்திருத்தம் செய்திருக்கிறதென்றும் அவர்களின் குறைநிசயங்களை எவ்வளவுதூரம் செம்மைப்படுத்தியிருக்கிறதென்றும் நன்குணர்ந்துகொண்டிருக்கிறார்கள். லார்வில்லியம்மூர் என்னும் ஆங்கிலக் கிறிஸ்தவரான கிரந்தகர்த்தாவால் எழுதப்பட்டிருக்கும் கிலாபத்தின் உயர்வு, தாழ்வு, வீழ்ச்சி ஆகிய இவற்றின் சரித்திரங்களை நாம் நன்கு நோக்குவோமாயின், பாரான் தேசத்துப் பாலைவனத்தில் வசித்துவந்த அந்தப் புராதன அரபிகளாகிய நாகரிகத்தின் பாதாளவுலகத்துக் காட்டுமிராண்டிகளையெல்லாம் எமது தீனுல் இஸ்லாம் எவ்வளவு உன்னதமான நாகரிகத்தின் உச்சஸ்தானத்துக்குக் கொண்டுவந்து விட்டதென்பதை நன்குணர்ந்துகொள்வோம். ஆதலினால் தற்கால விஷயங்களைப் பற்றி அறியவிரும்புவோமாயின் "முஸ்லிம் ஹெரல்டு" என்னும் கிறிஸ்தவப் பத்திரிகையில் காப்டன், வி. டபின்யூ. ஜெ. ஆர் என்பவரால் வர்ணிக்கப்பட்டிருக்கும் கீழ்க்கண்ட விஷயத்தைப் படித்துணரவேண்டும்:—

"இஸ்லாமார்க்கம், குஸ்துன்துன்யா (கான்ஸ்டாண்டிநோபிள்), தஹ்றனி, மொராக்கோ முதலிய தேசங்களின் ராஜசபையிலாகட்டும் அல்லது அதிக ஆர்ப்பாட்டமில்லாமல் சாந்தமாயிருந்துவரும் மேல் ஆபிரிக்கா முதலிய ராஜ்யங்களிலாகட்டும் அல்லது வேறு எவ்விடத்திலாகட்டும் ஒரே தன்மையையுடையதாகவேயிருந்துவருகிறது; அனுஷ்டான முறையிலும் நம்பிக்கையிலும் தீனுல் இஸ்லாமானது எங்கேபார்த்தபோதிலும் ஒரே விதமாகத்தான் காணப்படுகின்றது. ஐரோப்பா கண்டத்தின் ஏனைப்பகுதிகளெல்லாம் அஞ்ஞான அந்தகாரத்துள் மூழ்கிக்கிடந்த அந்தக்காலத்தில் ஸ்பெயின் தேசத்தில் அரசாண்டுவந்த அரபிகள் நாகரிகமென்னும் ஞானச்சுடரை அதிஉன்னதமாக இவ்வுலகில் பரத்தி வந்திருந்தும் இஸ்லாமார்க்கத்தை அனுஷ்டித்துவரும் அந்த முஸ்லிம் ஜாதியார்களுடைய முன்னேற்றத்தையெல்லாம் அம்மார்க்கமானது சோர்வடையும்படியாகச்செய்து விடுகின்றதென்று தவறுகமதித்து அம்ம

தத்தைக் குறித்துக் கேவலமாகப் பேசி "இஸ்லாத்தின் சோம்பிய கரம்" என்றும் இழிவாகக் கூறுகின்றனர். ஆனால் நாகரிகத்தின் ஓர் உயர்ந்த எல்லையை யடைந்தவர்களிடம் இஸ்லாமார்க்கம் ஒரு வகைத் தடையாய்க் காணப்பட்டபோதிலும் மிகவும் அநாகரிகத்தி லிருந்துவரும் ஆபிரிகா கண்டவாசிகளிடம் இம்மார்க்கம் மிகவும்குதூகலமான உணர்ச்சியை உண்டு பண்ணுகிற தென்னும் உண்மையை ஒருவராலும் மறுத்தற்கு முடியாது. வடநைஜீரியப் பிராந்தியங்களில் வசித்துவரும் புராதனக்குடிகளான அந்த மௌட்டிகர்களிடம் காணப்படும் விக்கிரக ஆராதனை, மதுபானம், நரமாம்ச போஜனம் முதலிய அனாசாரங்களை யெல்லாம் போக்கி இம்மார்க்கமானது அவர்களை ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்காக இஸ்லாத்தில் சேர்த்து வருகின்றது. ஒன்றுமில்லாத இடங்களில் பள்ளிவாயில்களும் சந்தைகளும் உற்பத்தியாகின்றன. அங்குள்ள பழய காலத்து அஞ்ஞானிகள் தங்களுடைய ஒதுக்கமான ஒளிதல் குணத்தையெல்லாம் கைவிட்டு எல்லோருடனும் சரிசமானமாய்க் கலக்க ஆரம்பிக்கின்றார்கள். நீகிரோவருடைய அபிப்பிராயத்தில் தீனுல் இஸ்லாமானது சோம்பலுள்ள மார்க்கமாகவாவது அல்லது உயிரற்றமதமாகவாவது காணப்படுவதில்லை. "இஸ்லாத்தின் சோம்பிய கரம்" என்பது அந்த ஆபிரிக்கவாசிகளுக்கன்று."

* * * *

## துருக்கித்தூதும் வோக்கிங் மஸ்ஜிதும்.

சென்ற மார்ச் மாதம் 6-ம் தேதியாகிய ஞாயிறன்று, லண்டன் மாநகரில் விஜயம் செய்து லௌஸான் உடன்படிக்கையின் சம்பந்தமாகத் துருக்கியின் பாத்தியதைகளை ஸெண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் கூடியிருந்த சாம்ராஜ்ய சங்கத்தின் முன் விளக்கிக்காட்டும் பொருட்டு வந்திருந்த துருக்கியின் தேசியக் கக்ஷியாருடைய தூதர்களால் புடை சூழப்பெற்றிருந்த அதன் தலைவராகிய மேன்மை தங்கிய பெக்கிர் ஸாமீ பே என்னும் பெருந்தகையார் வோக்கிங்கிலுள்ள மஸ்ஜிதைப்பார்வையிட வேண்டுமென்னும் நல்லநோக்கத்துடன் அங்கு விஜயம் செய்தார்கள். மெமோரியல்ஹாஸ் என்னும் கட்டிடத்தில் மேன்மை தங்கிய மேற்கூறிய கனவானும் அவருடன் வந்திருந்த மற்றுந் தூதர்களும் சிற்றுண்டி அருந்தினார்கள்; அவர்களுடன் ரைட் ஆனரபிள் லார்டு ஹெட்லி, டாக்டர் எச். எம். லீயான், மிஸ்டர் லவ்க்ரோவ் முதலிய பல பிரமுகர்கள் கலந்துகொண்டார்கள். இன்னும் இதர முஸ்லிம்களான சீமான்களும் சீமாட்டிகளும் அவ்விருந்தில் மேன்மை தாழ்மை யென்னும் வித்தியாசம் பாராட்டாமல் சமபோஜனம் செய்ய நேர்ந்ததை நோக்கும்போது இஸ்



லாமிய சகோதரத்துவம் நன்கு விளங்குகின்றது; அதன் பின்னர் தொழுகை வேளை வந்து விட்டதால் அப்பொழுது இன்னும் அதிகமாக இஸ்லாத்தின் சமரச ஞானமானது விளக்கத்தலைப்பட்டது. வோக்கிங் மஸ்ஜிதில் அரபி ஒருவர் அப்பொழுது பாங்கு* சொன்னார். பிறகு தொழுகைக்குரிய இகாமத் (அதாவது இமாமும் ஜமாஅத்தும் சேர்ந்து தொழும்போது தொழுகைக்கு அழைக்கும் கூப்பாடு) ஓர் ஆங்கில நவ முஸ்லிமால் சொல்லப்பட்டது. அதன் பின்னர் இந்தியாவிலிருந்து சென்றிருக்கும் வோக்கிங் மஸ்ஜிதின் இமாமான மௌல்வி முஸ்தபா கான், பி. ஏ., அவர்கள் தொழுகையை நடத்தினார்கள். இதனால் இஸ்லாத்தின் சமத்துவமும் சகோதரத்துவமும் குன்றின் மேலிட்ட தீபம் போல் நன்கு பிரகாசித்தன. இஸ்லாத்தின் முன்னிலையில் ஜாதிபேதமாவது மதபேதமாவது ஒன்றும் தடைசெய்வதில்லை. அந்தத் தொழுகைக்குப் பின்னர் ஆபிரிக்காவிலிருந்து வந்திருந்த ஒரு கிறிஸ்தவ கனவான் (இவர் ஏழுவருஷம் வரையில் அம்மதத்திலிருந்து வந்தவர்) தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்னும் தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார். மேன்மைதங்கிய பெக்கிர் ஸாமீ பே அவர்களும் இன்னும் மற்றுமுள்ள பிரமுகர்களும் இருந்து அன்னாரை இஸ்லாத்தில் சேர்த்துக்கொண்டனர். பிறகு லார்டு ஹெட்லியும் கண்ணியந்தங்கிய துருக்கித்தூதின் அதிபதியும் இஸ்லாத்தின் சமரசத்தைப்பற்றிப்பேசினார்கள். கடைசியில் ஸாமீ பே அவர்கள் இஸ்லாத்தின் பெருமையைப்பற்றியும் அதன் தாராளச் சிந்தையைப்பற்றியும் குறிப்பிட்டு விட்டு மேல் நாடுகளில் ஏற்கனவே பரவியிருக்கும் இஸ்லாத்தைப்பற்றிய துர் அபிப்பிராயங்களையும் துர் அபிமானங்களையும் போக்குவதற்கு இந்த வோக்கிங்மதப்பிரசார சபையார் பெரிதும் பாடுபட்டுவருகின்றனரென்றும், இச்சபையாரின் அரிய பெரிய ஊழியத்தைப் பற்றியும் தாம் அன்று அவர்களுடன் கலந்து ஆங்கில நவ முஸ்லிம்களுடன் தொழுது கொள்ள நேர்ந்தசந்தோஷ சமாசாரத்தைப்பற்றியும் தாம்பெரிதும் பாராட்டுவதாயும் அதன் சம்பந்தமான எல்லா விருத்தாந்தத்தையும் தமது அங்கோரா கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிப்பதாகவும் பேசி முடித்தார்.

* * * *

## மகத்தான மடமைத்தனம்.

சென்றமார்ச்சில் வெளியான "சர்ச் மிஷனெரி ரெவியூ" என்

* பாங்கு என்பது அதான்; அதாவது தொழுகைக்கு அழைக்கும் கூப்பாடு.

னும் பத்திரிகையில் மிஸ்டர் ஜே. எல். மாசிண்ட்டைர் என்பவர் எழுதியிருக்கும் மகாமதியீனமான விஷயத்தை நோக்கும்போது மேல்நாடுகளில் இஸ்லா மார்க்கத்தைப் பற்றி எவ்வளவுமகத்தான மடமைத்தனம் நிலவிவருகிறதென்பதை நாம் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்; அவர் சொல்வதாவது:—

“முஹம்மதுநபி (ஸல்)க்குப் பதினைந்து அல்லது பதினாறு முழுப்பெண்சாதிகளும் அரைப்பெண்சாதிகளும் இருந்துவந்த போதிலும் அவருக்குப்பின் ஓர் ஆண்மகவும் தங்காமல் ஒரேபெண் மகள் மட்டும் இருக்க நேர்ந்ததானது தேசசரித்திரத்தில் ஓர் அதிசயமான செய்தியாகவே அமைந்து கிடக்கிறது. ஆகவே அரபிகளின் சட்டமுறைப்படி அந்த நபிக்குப்பின் ஆண்வாரிஸ் இல்லாமல் போய்விட்டது. ஆனால் சந்ததிகளை அதிகமாகப் பெற்றுக் குடும்பத்துக்கு வேண்டிய வாரிஸ்களை மிகுதமாய் அடைவதற்காகவே இஸ்லாத்தில் பலதாரவிவாகம் என்பது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்று வாதாடிவரும் தற்காலத்திய முஸ்லிம்கள் தாங்கள் சொல்வது பொய்யென்பதைத் தங்களுடைய நபியின் சரித்திரத்திலிருந்து நன்கு தெரிந்துகொள்வார்களாக. அந்த நபிக்கு அநேக மனைவிகளிருந்தும் ஓர் ஆண்சந்ததியேனும் அவருக்குப் பின்னுள் பட்டமாள்வதற்கு இல்லை யென்பதை அம்முஸ்லிம்கள் இன்னும் தெரிந்துகொள்ளவில்லையா?”

எங்கள் திருநபியவர்களுக்குப் “பதினைந்து அல்லது பதினாறு முழுப்பெண்சாதிகளும்” இருந்தார்களென்பது சரித்திரபூர்வமான முழுப்பொய்யாயிருக்கிறது. இவ்விஷயம் உண்மைதானா வென்பதை மிஸ்டர் மாசிண்ட்டைர் என்பவர் முதன்முதலில் எண்ணிப்பாராயின் அவருக்கு நாம் மிக நன்றி கூறலாம். ஆனால் பத்திரிகைக்கு விஷயம் எழுதுபவர் தமது விஷயம் மெய்யானதுதானாவென்று ஆராய்ந்துபாராமல் எழுதத்துணிந்ததுதான் அவருடைய மடமைத்தனத்தை வெளிக்காட்டுகின்றது. மாசிண்ட்டைரின் இத்தகைய அறியாத்தனமான குற்றத்தைமன்னிப்பது ஒருபோதும் முடியாது.

இஸ்லாமார்க்கத்தில் பலதார விவாகம் செய்து கொள்ளலாமென்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கும் விஷயத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம்; முஸ்லிம்கள் நான்கு மனைவிகள் வரையில் விவாகம் செய்துகொள்ளலாமென்று அனுமதிகொடுக்கப் பட்டிருப்பது சந்தான விருத்தியை மட்டும் நோக்கியன்று. சந்தான விருத்தியானது பலதாரவிவாகத்தால் கருதப்படும் நோக்கங்களுள் ஒன்றாயிருக்கலாம்; ஆனால் இந்த ஒரே நோக்கத்துடன் தான் பலதார விவாகம் இம்மார்க்கத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றதென்று சொல்



வோமாயின் அது அறியாமையாகும். இஸ்லாமிய சரித்திரத்தை ஒருசிறிதேனும் படித்துணர்ந்தவரா யிருப்பாராயின் அப்படிப்பட்டவருக்கு இஸ்லாத்தின் பலதார விவாகவிஷயத்தின் உட்கருத்து நன்கு தெரியவரும்; உஹுது யுத்தத்தின் போது முஸ்லிம் சைன்யம் மிகுதமாய் மடிந்ததன் பயனாக அதன் பின்னர் அநேகவிதவைகள் கதியற்றவராய்ப் போய்விட்டனர்; விதவைகளும் அனாதைப் பிள்ளைகளும் அதிகமாயிருந்தமையால் அவர்களுக்கு ஒரு நல்வழிகாட்டவேண்டுவது எமது நபிபெருமானாரின் கடமையாய் விட்டது. இப்படிப்பட்ட தேசியகஷ்டங்களுக்குப் பலதார விவாகம்தான் யோக்கியமான நாகரிகமான ஒழுங்கான நிவாரணமென்று மேதாவிகள் முடிவு செய்வர். விதவைகளின் நிலைமையையும் அனாதைப் பிள்ளைகளின் நிலைமையையும் சன்மார்க்க முறைமைப்படி ஒழுங்கான வழியில் செம்மை செய்வதாயின் பலதார விவாகம்தான் அனுஷ்டிக்கப்பட வேண்டும். ஆதலின் முஸ்லிம் சமூகத்தாரின் முன்னேற்றத்துக்காக அக்காலத்தில் பலதார விவாகம் அனுஷ்டானத்துக்குக்கொண்டுவரப் பட்டது. தேசியகஷ்டங்களைப்போல் குடும்ப விஷயமும் சிக்கலான வழியில் வந்து சிலவேளைகளில் சிக்கிக்கொள்ளும்போது பலதார விவாகமே பரிகாரம் செய்யும். ஆனால் இஸ்லாத்தில் நான்கு தாரம் விவாகம் செய்யலாமென்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஏற்பட்ட கட்டாயச் சட்டமென்று கருதவேண்டாம். சிலசிக்கலான சமயங்களில் குடும்பக் கஷ்டங்களை நிவர்த்தித்துக்கொள்ளும் பொருட்டுப் பலவகைச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டே பலதார மணம் பண்ணுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒவ்வொருவருக்கும் கடமையான காரியமன்று. பலதார விவாகமானது இம்மார்க்கத்தில் ஒரு விலக்கு விதியாயிருக்கிறதல்லாமல் பொது விதியாயில்லை.

இவ்வுலகமானது இப்பொழுது ஒரு பெரிய மகாயுத்தத்திலிருந்து வெளிவந்திருக்கிறது. ஐரோப்பா முழுதிலும் ஆடவரின் ஜனத்தொகை குறைந்து பெண்டிரின் ஜனத்தொகை அதிகரித்து நிற்கின்றது. இவர்களை என் செய்வதென்பது மேல் நாட்டுக் கிறிஸ்தவப்பாதிரிகளுக்கும் தத்துவ சாஸ்திரிகளுக்கும் ஒரு சிக்கலான பிரச்னையாகக் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறது. பலதார விவாகமின்றி வேறு எவ்வகையான யோக்கிய [illegible] முறையாலும் மேல்நாட்டிலுள்ள இந்தச் சிக்கலான முடிச்சை அவிழ்க்க முடியாது. இஸ்லாமிய முறையை அம்மேல் நாட்டினர் இப்பொழுது அனுஷ்டிக்கத் தலைப்படாத வரையில் வேறு [illegible]ரவழியும் யோக்கியமும்

பொருந்திய வழியில் தற்போதுள்ள பெரும்பான்மையான அனுதை விதவைகளை ஆதரிப்பது முடியாது." அப்படி இஸ்லாமிய முறைப்படி அவர்கள் செய்ய ஆரம்பிப்பாராயின் இப்பொழுது அந்நாடுகளில் காணப்படும் பல "யுத்தக் குழந்தைகளும்" (War babes), "சட்டவிரோதமான மனைவிகளும்"(Illicit wives)இல்லாமற்போய் விடுவர்.

* * * *

## முப்பெரும் பிராணத்தியாகிகள்

### ஸோகராத்தும், ஏசுவும், ஹுஸைனும்.

(பாரிஸ்டர், ஷேய்க், எம். ஹெச். கித்வை எழுதுகிறார்.)

"அல்லாஹுத் தஆலாவின் பாதையில் பிராணத்தியாகம் செய்பவர்களை இறந்துபோனவர்களென்று சொல்ல வேண்டாம். இல்லை, அவர்கள் உயிருடன்தான் இருக்கிறார்கள்; ஆனால் நீங்கள் அறிவதில்லை"—(குர்ஆன் 2 : 154).

இவ்வுலகம் தோன்றிய நாள்முதல் இதுவரையில் எண்ணிறந்த பிராணத்தியாகிகள் தாங்கள் கொண்ட உண்மையின் காரணமாக இரத்த சாக்ஷியான மரணத்தை யடைந்திருக்கிறார்கள். ஆதம், ஹவ்வா (அலை) இவர்களின் வம்சபரம்பரையில் இப்பூவுலகில் பழய கால முதல் பல்லாயிரக்கணக்கான பிராணத்தியாகிகள் தோன்றி மறைந்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் பெரிய மனிதரென்றே கூறவேண்டும்; அவர்களெல்லோரும் உண்மையில் பெரிய மனிதர்களாயிருந்ததனால் தான் தங்களுடைய உண்மையான பெருமைக்காக இரத்தசாக்ஷி சம்பந்தமான பிராணத்தியாகத்தை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் கொண்ட உண்மையை ஸ்திரப்படுத்த நாடினபோது அவர்களுக்கு அளவுகடந்த துன்பமும் துக்கமும் குறுக்கிட்டன. இப்படிப்பட்ட எண்ணிறந்த கஷ்ட நிஷ்டூரங்களையெல்லாம் அவர்கள் மிகப் பொறுமையுடனும் [illegible] தைரியத்துடனும் எதிர்த்து வந்ததே அவர்களின் பெருமையைக் காட்டுகின்றது. மனிதர்கள் தங்களுடைய அறிவு [illegible] முயற்சியையெல்லாம் உண்மையான வழியில் செலவு செய்யும்போது அவர்களுடைய பக்தியைப்பரிசோதனை செய்யும் பொருட்டு ஆண்டவன் சிலதுன்பங்களையும் தியாகங்களையும் அவர்களுக்குண்டாக்கி இனிமேல் லோகக் கஷ்டநிஷ்டூரங்களையும் அன்னருக்குக் காண்பிப்பதுண்டு. தங்கத்தின் மாற்றைச் சோதிக்க வேண்டுமாயின் அதைப்பன்முறையும் புடமிட்டன்றோ ஆகவேண்டும்? இவ்வண்ணமே மனித சிரேஷ்டர்களும் பலவகைப் புடத்தின் மத்தியில் புகுந்து புறப்படவேண்டும். இப்படிப்பட்ட கஷ்டமான முறையையெல்லாம் கடந்து சென்றவரே

145
160942



பத்தரைமாற்றுத் தங்கம்போல் பரிசுத்த மனிதர்களாவார்கள். தங்களுடைய உண்மையை உலகத்தவருக்கு உபதேசிக்கும் காலத்தில் கணக்கில்லாக்கஷ்ட நிஷ்டூரங்களையெல்லாம் அனுபவித்து [illegible] அவசியமானால் தங்களுடைய பிராணனையும் தியாகம் செய்திருக்கிறார்கள். உண்மையான வழியில் உழைத்த உண்மைக்காக அவர்களெல்லாம் உயிர் துறந்திருக்கிறார்கள். இவ்வுலகத்தின் ஒவ்வொரு விஷயத்திலும் அதனதன் உண்மைக்காக அநேகமனிதர்கள் பிராணத்தியாகம் புரிந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்திலும், ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு ஜாதியிலும் பற்பல பிராணத்தியாகிகள் தோன்றி யிருக்கிறார்கள். இஸ்லாமார்க்கத்திலும் இப்படிப்பட்ட எண்ணிறந்த பிராணத்தியாகிகள் இதுவரையில் அவதரித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட புண்ணிய புருஷர்களால் இஸ்லாமிய உலகமானது அதிகமான பெருமையை யடைய எல்லாவிதக் காரணங்களுமுண்டு.

முஸ்லிம் ஜனத்தலைவர்களுள் பலர் இரத்தசாக்ஷி சம்பந்தமான மரணத்தை யடைந்து இஸ்லாத்தின் உண்மைக்காகப் பிராணத்தியாகம் புரிந்திருக்கிறார்கள். நமது நபிகள் நாயகத்தின் (ஸல்) காலத்தில் எத்தனையோ முஸ்லிம்கள் இஸ்லாத்தின் மேன்மைக்காக இரத்த சாக்ஷி மரணமடைந்தார்கள் (ஷஹீதானார்கள்); நபிபெருமானுக்குப் பின் வந்த முதல் நான்கு கலீபாக்களுள் ஒருவர்தாம் — அதாவது முதல் கலீபாவான அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் தாம் இயற்கையாக மரணமானார்கள். மூன்றாவது கலீபாவான உதுமான் இப்னு அப்பான் (ரலி) அவர்கள் மஹாமேன்மை தங்கிய பிராணத்தியாகிகளுள் ஒருவரா யிருந்தார். அன்ன ஆகாரமில்லாமல் பத்து நாள் வரையில் நடந்த முற்றுகைக்குப்பின் இவர்கள் ஷஹீதாகக் கொல்லப்பட்டார்கள்; இவர்களுடைய ஆள்களும் அடிமைகளும் முற்றுகை போட்ட எதிரிகளைக் கொல்ல ஆயத்தமாயிருந்தார்கள்; ஆனால் முஸ்லிம்களுக்குள் சண்டையை மூட்டிவிட்டு அவர்களுடைய அருமையான இரத்தத்தைச் சிந்துவதற்குத் தாங்கள் காரணபூதமாயிருக்கக் கூடாதென்றஞ்சி யிருந்ததனால் தங்களுடைய மனிதர்களுக்குச் சண்டைசெய்யும்படி அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் தங்களுடைய சொந்த இரத்தத்தைமட்டும் அவர்கள் சிந்தத் தயாராயிருந்ததனால் தங்களை எதிரிகள் மிகக் கொடூரமாகக் கொல்லும்படி இடங்கொடுத்தார்கள். தாங்கள் மட்டும் இஸ்லாத்தின் உண்மைக்காக ஷஹீதாக உயிர்விட்டார்களல்லாமல் தங்களுடனிருந்த இதரமுஸ்லிம்களின் இரத்தத்தை ஒருசிறிதும் சிந்த அவர்கள் இடங்கொடுக்கவில்லை.

கிறிஸ்தவமார்க்கத்திலும் அதன் ஆரம்பகாலத்திற்குப் பிறகு அநேகமனிதர்கள் பிராணத்தியாகம் செய்திருக்கிறார்கள். ஏசுநாதரின் ஜீவதிசையில் வேறொருவரும் இரத்தசாட்சி மரணமாக உயிர் துறக்காவிடினும் அந்தத் தீர்க்கதரிசியவர்கள் இவ்வுலகை விட்டுச் சென்றுபோன பின்னர் பலர் அவருடைய அபிக்ஞைக்காகப் பிராணத்தியாகம் செய்திருக்கிறார்கள். ஆனால் ஏசுகிறிஸ்துவின் ஆயுள் காலத்தில் அவருடைய சொந்த சிஷ்யர்களுள் ஒருவர் தமது குருவை முப்பது வெள்ளிக்காசுக்காகக் காட்டிக் கொடுத்து விட்டார்; மற்றொரு பிரதம சிஷ்யர் ஏசுநாதரைத் தம்முடைய குருவல்லவென்று மறுத்ததோடு அவரைச் சபிக்கவும் ஆரம்பித்தார். குருவைச் சிலுவையில் அறையும் படியான வேளை வந்தபோது அவருடைய சிஷ்யர்கள் ஒரு சிறிதும் அவரைக் காப்பாற்றும் பொருட்டுக் கவலைப்படவில்லை; ஆனால் அந்தத் தீர்க்கதரிசியானவர் இவ்வுலகை விட்டு நீங்கி நெடுந்தூரம் சென்றபின்னரே அவருக்காக அநேகர் அளவுகடந்த கஷ்ட நிஷ்டூரங்களுக்கெல்லாம் உள்ளானார்கள். பலர் பிராணத்தியாகமும் புரிய உடன் பட்டார்கள்.

இவ்வாறே இவ்வுலகிலுள்ள இதர மதங்களிலும் பலர் தாங்கள் கடைப்பிடித்த உண்மைக்காக ஷஹீதாயிருக்கிறார்கள். ஆனால் ஸொகராத், ஏசுநாதர், இமாம் ஹுஸைன் (ரலி) இம்மூவருடைய பிராணத்தியாகத்தில் சிலவகையான விசேஷங்கள் நிறைந்து கிடப்பதால் இம்மூவருமே இவ்வுலகத்தில் இதுவரையில் ஷஹீதானவர்களுக்குள்ளெல்லாம் தலை நின்றவர்களாயிருக்கின்றார்கள். இம்மூவரும் இயற்கையாகவே மகத்தான மகான்களாயிருக்கின்றார்கள். இவர்கள் எந்தக்காரணத்துக்காகப் பிராணத்தியாகம் பண்ணினார்களோ அந்தக்காரணமும் மஹா உன்னதமானதாகவே காணப்படுகின்றது. இவர்களுடைய இரத்த சாக்ஷிமரணமானது இவ்வுலகில் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படியான விசேஷப் பெருமை வாய்ந்ததாயிருக்கின்றது. இம்மூவருடைய பிராணத்தியாகத்தால் இவ்வுலகத்தவர் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பல வகைப்பட்டிருப்பதனால் இவர்களுடைய சரித்திரங்களை முறையே இங்கெழுதுகின்றேன்.

## ஸொகராத்

ஸாக்ரட்டீஸ் என்று சொல்லப்படும் ஸொகராத் என்பவர் ஏசுநாதர் பிறப்பதற்கு 500 வருஷங்களுக்கு முன் *கிரீஸ்தேசத்தில்

* கிரீஸ் தேசத்துக்கு யூனான் என்றும் யவனம் என்றும் மறு பெயர் உண்டு.



ஜீவித்திருந்தார்; இவருடைய பிதா ஸப்ரானிக்கஸ் என்று சொல்லப்பட்ட ஒரு சிற்பியாயிருந்தார். பைனரீட்டி என்னும் மருத்துவச்சி தான் இவருடைய தாயாரென்று அறிந்தோர் சொல்கிறார்கள். இவர் சங்கீதம், க்ஷேத்திர கணிதம், வானசாஸ்திரம், தேகப் பயிற்சி முதலிய சாஸ்திரங்களில் தேர்ச்சிபெற்றதோடு கிரீக்(யூனான்)பாஷையிலும் பாண்டித்திய மடைந்தார். ஆரம்பத்தில் சில காலம் தகப்பனுடைய சிற்ப வேலையைச் செய்துவந்து பிறகு சிறிது போழ்தைக்கெல்லாம் அதைவிட்டு விட்டார். ஸொகராத்தின் குடும்ப வாழ்க்கையானது எப்பொழுதும் திருப்திகரமாகவும் சந்தோஷமாகவும் இருந்ததேயில்லை. ஸாந்திப்பே என்பவள்தான் இவருடைய மனைவி; இப்பேயுடன் வாழ்ந்த காலமெல்லாம் ஸொகராத் என்பவர் ஒரு நாளேனும் சுகமடைந்ததில்லை. இவருடைய குமாரர்களெல்லாம் மந்த புத்தியுள்ளவர்களாகவும் பேதைகளாகவுமே யிருந்தார்கள். ஸொகராத் தம்முடைய சிற்பவேலையைக் கைவிட்டபின் உலகத்தவருக்குப் போதிக்கும் உத்தமகைங்கரியத்தில் ஈடுபடலாயினார். பிறருக்குப் போதிக்கும் முறைமையை இவர் ஒருவாறு தமக்கு ஏற்பத் திருத்தி யமைத்துக் கொண்டார். இதனால் இவர் அதிக கீர்த்தி வாய்ந்தவரானார். தாம் தெருவழியே செல்லும் போது எதிரில் வருபவரைக் கண்டு அவர்கள் செல்லும் வேலையைக் குறித்துப் பலவினாக்கள் வினவுவார். அப்பொழுது அவர்கள் சரியான விடை பகராவிடின் ஸொகராத் தாமே அவர்களுக்குத் தக்க விடை பகர்ந்து நல்லுபதேசம் செய்வார்.

ஸொகராத்தின் பெருமையை உள்ளபடியே உணர்ந்துகொள்ளவேண்டுமாயின் பிலாத்தூன் போன்ற மகாமேதாவிகளெல்லாரும் அவருடைய சிஷ்யர்களாயிருந்தார்களென்று சொல்வது ஒன்று மட்டுமே போதுமானதாயிருக்கும். அவருடைய சிஷ்யர்களெல்லோரும் ஸொகராத் தம்முடைய குருவாயிருப்பதைக் குறித்து அதிகப் பெருமைபாராட்டி வந்தார்கள். ஸொகராத் என்பவர் இவ்வுலகில் ஆண்டவனுடைய காரியத்தைத் தாம் நிறைவேற்றவந்ததாகவும் அதற்காகத் தமக்குத் தேவ கட்டளை கிடைத்திருப்பதாகவும் யூனான்தேசத்தில் பகிரங்கப்படுத்தினார். தம்மை மட்டும் முன்னேறச் செய்துகொள்வதல்லாமல் உலகத்திலுள்ள எல்லா மாந்தரையும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டுவதும் தம்முடைய கடமையென்று கடவுளால் உத்தரவிடப்பட்டிருப்பதாக நம்பினார். இவருடைய காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வைத்திய சாஸ்திர நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்ட தத்துவமாகிய "வைத்தியன் தன்னையே முதன் முதல் வியாதியில்லாமல் செய்துகொள்ள

வேண்டும்" என்னும் உண்மையை ஸொகராத் தம்முடைய காலத்திலேயே நன்குணர்ந்திருந்தார். தம்முடைய பார்வையில் வந்த ஒவ்வொரு வஸ்துவைக் கொண்டும் தமக்கு வேண்டிய படிப்பினையைக் கற்றுக்கொள்ளாமலிருந்ததில்லை. எல்லாச் சமயங்களிலும் தாம் கற்றுக்கொள்ளவேண்டியதையே முதன்மையாகக் கவனித்து வந்தார். இவ்வாறிருந்தும் இவ்வுலகில் நாம் இன்னும் கற்கவேண்டியது அதிகமாயுண்டென்று மதித்து இவர் எப்பொழுதும் அதிக அடக்கமாகவே நடந்துகொள்ளுவார்; ஆதலின் தம்முடைய பிரசங்கங்களில் இவர் ஒருபோதும் அகங்காரமாயிருந்ததில்லை. உலகத்தில் மனிதர்கள் தவறு செய்வது சகஜமென்பதைக் கண்டுகொண்டு அவ்வாறு பிழைசெய்பவர்களிடத்திலெல்லாம் இவர் அதிகமாக அபிமானம் பாராட்டி வந்தார். மனிதர்களைச் சன்மார்க்க நெறியில் நடத்துவதற்கு இவர் சதாகாலமும் மிகுதியான ஊக்கங்கொண்டவராகவே யிருந்தார்.

ஸொகராத் தெய்வத்தினிடத்தில் அதிக பக்தி வாய்ந்தவராயிருந்தார். "பக்திக்கு விரோதமான வார்த்தைகளையாவது கெட்டபேச்சுக்களையாவது, அல்லது அப்படிப் பட்ட செய்கைகளையாவது இவர் பேசியதாகவேனும் செய்ததாகவேனும் ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை" என்று ஸெனபன் என்பவர் கூறியிருக்கின்றார்.

அக்காலத்தில் கிரீஸ் முதலிய மேல் நாடுகளில் ஏக தெய்வக் கொள்கையே இன்னதென்று புலப்படாமலிருந்தது. அப்பொழுதிருந்த மற்றெல்லா நாடுகளைக்காட்டிலும் கிரீஸ் தேசந்தான் கல்வியிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் நாகரிகத்திலும் மிக மேன்மைப்பட்டிருந்தது. நன்மார்க்கப் பயிற்சிக்கெல்லாம் யூனான் தேசமே ஓர் உறைவிடமாயிருந்தது; ஆயினும் தெய்வக்கொள்கையில் மட்டும் அந்த யவனர்கள் மிகப்பாமரத் தன்மையுள்ளவர்களாகவே யிருந்தார்கள். அவர்களுக்குரிய கட்டுக்கதையான பௌராணிகக் கொள்கைகளும் அத்தேசத்தில் மிகுதமாகக் காணப்பட்டன. அவர்களுடைய மதக்கொள்கையில் அளவற்ற ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும் உண்டு. அத்தெய்வம் ஒவ்வொன்றுக்கும் பற்பல புராணக்கதைகளும் இருந்தன. இப்படிப்பட்ட பலதெய்வக் கொள்கைகளும் அவை சம்பந்தமான பௌராணிகக் கட்டுக் கதைகளும் ஸொகராத்தின் மனத்தை அதிகமாக உறுத்திக்கொண்டிருந்தன. இவருடைய பக்திமட்டும் இவ்வுலக ரக்ஷகனாகிய ஓரே ஆண்டவனிடத்தில்தான் குவிந்து கிடந்தது. ஸர்வ வியாபியாகி, ஸர்வ சக்தியுடன், ஸர்வ ஞானமயமாய் விளங்கும் அந்த ஓரே ஆண்டவனது பெருமையுடன் அந்த யூனான்



தேசத்துப் பாமரப் புராணக்கொள்கைகளையெல்லாம் ஒப்பிட்டுச் சொல்வதென்றால், அது ஸொகராத்துக்கு அதிக மனக்கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. புராணக்கதைகளையெல்லாம் அவர் தெய்வத்தின் செய்கை யென்று ஒத்துக்கொள்ள மறுத்து விட்டார். மனிதர்களுக்குள் மகா நீசத்தன முள்ளவர்களாலும் செய்யப்படக்கூடாத மகா கேவலமான செய்கைகளையெல்லாம் அந்த யவனர்கள் தங்கள் தெய்வத்தின் தலைமேல் குவித்து வைத்தார்கள். இப்படிப்பட்ட தெய்வங்களைத்தான் மனிதர்கள், பூஜிக்க வேண்டுமென்று கிரீஸ் தேசத்தினர் வற்புறுத்தி வந்தார்கள்; ஆனால் ஸொகராத்மட்டும் அப்படிச் செய்ய மனங் கொள்ளவில்லை. ஆயினும் அத்தேசத்திலருடைய தெய்வ பக்தியை ஸொகராத் இழிவு செய்யாமல் அவர்களுடைய புராணக்கதைகளை மட்டும் மனிதர்களால் சிருஷ்டிக்கப்பட்ட கட்டுக் கதைகளென்று சொல்லி அவற்றை நீக்கிவிடும்படி வாதாடி வந்தார்.

ஸொகராத் என்பவர் தாம் நம்பியிருக்கும் சர்வதயாபரனை சாக்ஷாத் ஆண்டவனைப் பற்றிக் கூறும்போது அவனருளால் இவ்வுலகில் காணப்படும் இயற்கைத் தோற்றங்களிலிருந்தே உதாரணம் காட்டுவார். இவ்வுலகத்தின் இயற்கைப் பொருள்களி லெல்லாம் காணப் படுவது ஏகதெய்வத்தன்மையாயிருப்பதனால் இவ்வியற்கையின் தலைவனை ஏகரக்ஷகனும் ஒருவனாகத்தானிருக்கவேண்டுமென்று அவர் வாதித்து வந்தார். அவ்வோரே தெய்வமே இவ்வுலகத்துக்கெல்லாம் போது மென்பது அவரது கொள்கை. அவருடைய ஆத்மாவானது மகாபரிசுத்த முடையதாயிருந்ததனால் ஆண்டவனிடத்திலிருந்து அடிக்கடி மனிதகோடிகளின் நன்மைக்காக இரகசிய வெளிப்பாடுகள் நிகழ்வதுண்டென்றும் அவ்வெளிப்பாட்டின் உண்மையால் மனிதர்கள் உஜ்ஜீவிப்பது எளிதென்றும் நம்பினார். ஸொகராத் தம்மிடத்தில் "தேவ ஆவி" ஒன்று தம்முடைய பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் நம்பினார். இவ்வாறெல்லாம் அவர் கூறுவது அத்தேசத்து ஜனங்களுக்கு ஓர் ஆச்சரியமாகவே யிருந்தது. ஆதலின் நூதன தேவதைகளையெல்லாம் ஸொகராத் உற்பத்திசெய்து விட்டாரென்று அவர்மீது அவ்வூர் ஜனங்கள் ஒரு குற்றத்தைச் சுமத்தினார்கள். இதோடு நில்லாமல் இன்னும் பலகுற்றங்களையும் அவர் மீது சாற்றினார்கள்.

ஸொகராத்தின் ஜீவனோபாயமானது அதிக ஆடம்பரமில்லாமல் மிக எளிதாயிருந்தது. கோடைக்காலத்திலும் மாரிக்காலத்திலும் அவர் அணிந்திருப்பதெல்லாம் ஓரே அங்கிதான். அவருடைய ஆகாரமோ மகா எளியதாயிருந்தது. அவர் வெளியில் உலாவப் போ

கும்போது பாதரக்ஷையில்லாமல், வெறுங்காலுடனேயே நடந்து செல்வார். சில வேளைகளில் அவருடைய உடம்பில் சட்டையொன்றும் இல்லாமலேயிருப்பதுமுண்டு. உலகத்திய ஜனங்களுக்கு உபதேசம் புரிவதற்காக எல்லோருக்கும் எளிதாயிருக்கும் பொருட்டு அவர் எப்பொழுதும் தம்மை அதிக ஆடம்பரமில்லாமல் எளிய தன்மையிலேயே வைத்திருப்பார். ஆண்டவனால் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளையை நன்கு நிறைவேற்றும் பொருட்டுத் தம்முடைய பெருமிதமான வாழ்க்கையெல்லாம் விட்டு விட்டுச்சர்வ சாமான்யமாக ஜீவனம் செய்து வந்தார். சந்தை கூடும் இடங்களிலும், கடைவீதிகளிலும், தேகப்பயிற்சி சாலைகளிலுமே அவர் தம் உபதேசத்துக்காகக் காலங்கழித்து வருவார். அவ்விடங்களில் குருமார்கள் இராஜீய வாதிகள் முதலாளிகள் வேலைக்காரர்கள் தொழிலாளிகள் சிற்பிகள் முதலிய எல்லா மனிதர்களுடனும் அவர் சாதாரணமாகக் கலந்து சம்பாஷிப்பார்.

ஸொகராத் அறிவில் மிகச்சிறந்தவர்; சன்மார்க்க விஷயத்திலும் இவ்வாறே சிறந்து விளங்கினார். தம் ஜன்ம பூமியாகிய கிரீஸ் தேசத்தில் இவர் அதிக அபிமான முள்ள ஒரு யவனராயிருந்தார். இவருடைய தேசாபிமானமும் சுஜாதியபிமானமும் இக்காலத்தில் ஆங்கிலேயரிடத்தில் காணப்படும் அபிமானம் போன்றன வல்ல. வெள்ளையரைப்போல் தம் தேசமட்டும் முன்னுக்கு வரவேண்டுமென்று இவர் கருதவில்லை. ஆனால் இவ்வுலகமுழுதுமே தம்முடைய சொந்த தேசமென்று ஸொகராத் கண்ணியமாகக் கருதிவந்தார். தேகதிடத்திலும் இவர் சாமான்ய மானவரென்று கருதவேண்டாம்; பாட்டிடியாவென்னுமிடத்தில் ஒரு போர்வீரனாகச் சேவகம் புரிந்து அல்ஸிபியாடீஸ் என்பவரின் பிராணனைக் காப்பாற்றினார்.

ஆண்டவன் தமக்கிட்ட கட்டளையின்படி தாம் ராஜீய விஷயத்தில் தலையிடக்கூடாதென்று ஸொகராத் ஒதுங்கியிருந்தார். ஆனால் ராஜீய விஷயத்தை இவர் அலக்ஷியம் செய்ததனாலேயே இவருக்கும் இவர்காலத்திலிருந்த ராஜீய வாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மனஸ்தாபம்தான் கடைசியில் இவருடைய பிராணத்தியாகத்துக்கு மூலகாரணமாயிருந்தது. கிரிஸ்து பிறக்குமுன் 406-வது ஆண்டில் ஸொகராத் யூனான் தேசத்து ஸெனேட் சபையில் ஓர் அங்கத்தினராயிருந்தார். ஆர்கினூஸின் வெற்றியின் சம்பந்தமான விசாரணை நடந்தகாலத்தில் அவ்விசாரணையின் முதல் தினத்தில் ஸொகராத் அதற்குரிய கம்மிட்டியாகிய பிரிட்டானின் சபையில் தலைமை வகித்தபோது குற்றவாளிகளான எட்டுத் தளபதிகளின் தலைவிதியை அச்சபையிலுள்ளவர்களில் ஒருவருடைய ஓட்டின்



மெஜாரிட்டியால் தீர்மானம் செய்துவிட வேண்டுமென்று சட்டவிரோதமாகவும் முறைமைக்கு மாறாகவும் கால்லிஸெனஸ் கொண்டுவந்த பிரேரேபணையை ஸொகராத் வெறுப்புடன் ஆக்ஷேபித்தார். இவர் முதலில் ஆக்ஷேபணை செய்தபோது வேறு சில அங்கத்தினரும் இவருடைய அபிப்பிராயத்தில் கலந்திருந்தார்கள்; ஆனால் அவர்கள் முற்றிலும் ஸொகராத்தை ஆதரிக்கவில்லை; அப்படி அவர்களெல்லாம் கைவிட்ட காலையிலும் ஸொகராத் தனியே நின்று தைரியத்துடன் தம் கக்ஷியை வாதித்து வந்தார். பிறகு இரண்டு வருஷம் சென்று பயங்கரமான கொடுங்கோலரசு அத்தேசத்தில் தலைவிரித்தாடியபோது அதற்குத் தலைமை வகித்திருந்த முப்பது பேர்களும் நம்முடைய ஸொகராத்தையும் இன்னும் நான்குபேர்களையும் நோக்கி அவர்கள் ஸாலாமிஸ் என்னுமிடத்திற்குச் சென்று அங்கிருந்த இரத்தப் பலிக்குரிய லியான் என்பவனைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று கடுமையான உத்தரவு பிறப்பித்தார்கள். அப்பொழுது ஸொகராத் மட்டுமே அதிக மனோதிடத்துடன் ஸாலாமிஸ் என்னுமிடத்துக்குப் போகமாட்டேனென்று மறுதளித்துவிட்டார். இவ்வாறு இவர் செய்துவிட்டதனால் அந்த முப்பது தலைவர்களுக்கும் இவர்மீது கோபமுண்டாயிற்று. ஸொகராத் தம்முடைய உபதேசங்களைப் பிறருக்குப் போதிக்கக்கூடாதென்று அவருக்குத் தடையுத்தரவு பிறப்பித்துக் கட்டுப்பாடு செய்துவிடுவதாகவும் அந்த முப்பது பெயர்களும் பயமுறுத்தினார்கள். அதன்மேல் அந்த முப்பதுபேர்களுக்குப் பின்னால் அந்த யூனான் தேசத்தில் ஆளத்தொடங்கிய ஜனநாயகக் கக்ஷிக்காரர்கள் தங்களுக்குக் கிடைத்த மெஜாரிட்டி ஓட்டைக்கொண்டு ஸொகராத்தை விசாரணை மன்றத்துக்குக் கொண்டுவந்து அவரைக் குற்றவாளியென்று தீர்மானம் செய்து கொலைத் தண்டனையும் விதிக்கவேண்டுமென்று முடிவு செய்துவிட்டார்கள்.

இவ்வாறு ஸொகராத் விஷயத்தில் தீர்ப்புச்செய்த அந்த ஜனநாயக ஆட்சிக்கோர் ஐயோ! அவர்களுக்குக்கிடைத்த மெஜாரிட்டி ஓட்டுக்கோர் ஐயோ!! ஜனநாயக ஆட்சியார் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் அத்தேசத்தினர் ஸொகராத் போன்றவருடைய மகா மேதாவித்தனத்தை உணர்ந்துகொள்ள முடியாதபோது அவர் ஜனநாயக ஆட்சிமுறைக்குத் தக்க யோக்கியப்பொறுப்புள்ளவரென்று யாரும் கூறத்துணிவரோ? ஸொகராத்தின் மேதாவித்தனத்தை அத்தேசத்தினர் உணர்ந்துகொள்ளாமற் போனதோடு அவருக்கு மரணதண்டனையும் விதித்தனரே! என்னே, இவர்களின் மடமை!! இப்படிப்பட்ட மனிதர்களுக்கும் ஜனநாயக ஆட்சி முறைமையைக் கொடுக்கலாமோ? (தொடரும்.)

## குர்ஆன்ஷரீபும் பைபிள்ஷரீபும்

கிறிஸ்தவர்களின் மதத்துக்கு எமது இஸ்லாமார்க்கம் பெரியதோர் எதிரியா யிருக்கிறதென்று கண்டுகொண்ட அம்மதவாதிகள் தங்களால் இயன்றமட்டும் எம்முடைய சன்மார்க்கத்தை இழிவு செய்து வருகின்றனர். தங்களுடைய மதம் சிறந்த தென்று எண்பிப்பதைக் காட்டிலும் எம்முடைய சன்மார்க்கம் தங்களுடைய கிறிஸ்தவ மதத்தைவிட மிகத் தாழ்ந்ததென்று எழுதுவதிலும் ஏசுவதிலும் அம்மதவாதிகள் தங்களுடைய காலத்தையும் பிரயாசையையும் மிகுதம் செலவுசெய்து வருகின்றனர். எம்முடைய திருவேதமாகிய குர்ஆன்ஷரீபானது ஒரு பொய்வேதமென்று எண்பிப்பதற்கு அவர்கள் பகீரதப்பிரயத்தன மெல்லாம் செய்துவருகின்றனர். தங்களுடைய பைபிள் ஷரீபானது சாமான்ய மனிதர்களால் எழுதப்பட்டு ஏசுநாதரின் தலைமேல் சுமத்தப்பட்டிருக்கிறதென்னும் உண்மையானது இவ்வுலகமுழுதும் இக்காலத்தில் நன்குபரவிக்கிடப்பதால் தங்களுடைய சுவிசேஷங்களைப் போலவே நம்முடையகுர்ஆன் ஷரீபும் மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட பொய்வேதமென்று எண்பிப்பதற்கு நம்கிறிஸ்தவ சகோதரர்கள் இனியில்லாப் பிரயத்தனமெல்லாம் செய்துவருகின்றனர். ஆனால் வேஷதாரியாகிய ஒரு பொய்நபியால் போர்ஜரியாக எழுதப்பட்டது தான் குர்ஆன்ஷரீபென்று வாதித்து வரும் அந்தக்கிறிஸ்தவர்கள் அவ்வேதத்தையே ஆதாரமாகக் கொண்டு எங்கள் நபியைக்காட்டிலும் தங்களுடைய ஏசுநாதரே சிரேஷ்டமானவரென்று கதறிசெய்வதோடு நில்லாமல், குர்ஆன்ஷரீபுக்கு நேர்மாறான அபிப்பிராயங்களை யெல்லாம் உண்டுபண்ணிக்கொண்டு அவர்கள் தங்களுடைய ஏசுவை ஆகாயம்வரையில் உயர்த்தப் பார்க்கின்றனர். குர்ஆன்ஷரீபுக்கு மாறானதும் பைபிள் வேதத்துக்கு முரணானதுமான துர்அபிப்பிராயங்களை யெல்லாம் அக்கிறிஸ்தவர்கள் தங்களுடைய மண்டையில் புகுத்திக் கொண்டு அதிகமாக அவஸ்தைப்படுகின்றனர். ஆத்மார்த்தமான விஷயங்களிலும் இன்னும் இதர லௌகிகவைதிக காரியங்களிலும் தங்களுடைய கிறிஸ்தவ மார்க்கம் ஏனைமதங்களைக் காட்டிலும் எவ்வாறு உயர்ந்ததென்பதை எண்பித்துக் காட்டவேண்டியது தங்களுடைய முக்கிய கடமையென்பதை முழுதும் உணர்ந்து கொள்ளாமல், தங்களுடைய மனித சிருஷ்டியான சாமான்ய நூல்களைச் "சுவிசேஷங்க"ளென்று நம்பி அவற்றில் தங்களுடைய ஏசுநாதர் செய்துகாட்டியதாக வரைந்திருக்கும் சில அற்புதங்களைமெய்யெனக் கொண்டு அந்த ஏசுவானவர் மற்றெல்லா மதத்தலைவர்களைக் காட்டி



லும் அதிசிரேஷ்டமானவர் என்று வாதிப்பதையே அம்மதத்தினர் தம்முடைய முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறாரென்பது அவருடைய எழுத்தாலும் பேச்சாலும் வெளியாகின்றது. எமது திருநபியைவிட ஏசுநாதர் உயர்ந்தவரென்பது பைபிள் ஷரீபாலேனும் குர்ஆனே ஷரீபாலேனும் ஏற்பட்டு விடவில்லை. ஆனால் தங்களுடைய பைபிளே உண்மையான வேதமென்றும் எமது குர்ஆன் ஷரீபே பொய்யான வேதமென்றும் வாதித்துவரும் நம் கிறிஸ்தவ நேசரின் வாதம் எம்மட்டும் சரியானதென்பதை நன்று நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும். குர்ஆன்ஷரீபு ஆண்டவனுடைய திருவசனமா அல்லது பைபிளின் புதிய ஏற்பாடான நான்கு சுவிசேஷங்களும் தான் ஆண்டவனுடைய திருவசனமா வென்று இப்பொழுது தெரிந்துகொள்ளவேண்டும். குர்ஆன் ஷரீபின் மேற்கோள்களுக்கும் பைபிள் ஷரீபின் ஆதாரங்களுக்கும் வானத்துக்கும் பூமிக்குமுள்ள வித்தியாசங்களுண்டு. புதிய ஏற்பாடு எவ்வாறு எழுதப்பட்டதென்னும் விவரத்தை நாம் கவனிப்போமாயின் அதன் வாக்கியங்களில் எவ்வளவு தூரம் நாம் நம்பிக்கை வைக்கலாமென்பது செவ்வனே விளங்கும்; புதிய ஏற்பாட்டின் சுவிசேஷங்களில் உண்மையாக ஏசுநாதரின் சொந்த வசனங்கள் எத்தனை உண்டென்று ஆராய்ச்சி செய்யப் புகுவோமாயின் அது மணற்சோற்றில் கல் ஆராய்வதுபோன்ற கஷ்ட சாத்தியமான வேலையாகத்தான் முடியும்.

எங்கள் குர்ஆன் ஷரீபு வேதமானது ஆதியில் அல்லாஹுத்தஆலாவால் அருளப்பட்டது போலவே அன்று முதல் இன்றளவும் ஓர் அக்ஷரமும் பிழைபடாமல் இருந்து வருகிறதென்பதை எண்பிக்க யான் உங்களை அதிகமாய்ச் சிரமப்படுத்தப் போகிறதில்லை. இவ்வுலகத்தின் ஒருகோடியி லிருந்து மறுகோடிவரையிலும் மேற்கே மகரிபு தேசமுதல் கிழக்கே மஷ்ரிக் தேசம் வரையிலும் வட துருவமுதல் தென்துருவ வரையிலும், இவற்றிற்கிடையிலுள்ள எல்லாத்தேசங்களிலும் எல்லாத் தீவுகளிலும் வழங்கப்பட்டுவரும் குர்ஆன் ஷரீபின் பாடமெல்லாம் ஒரே பாடமாகத் தான் இருந்து வருகிறது. ஆபிரிக்காவின் பெரிய மணல் வெளியில் ஒரு விதமான குர்ஆனும் பஸிபிக் மஹாசமுத்திரத்தின் தீவுகளில் வேறு விதமான குர்ஆனும் காணப்படுவதில்லை. இப்பூமண்டலத்திலுள்ள நாற்பதுகோடி முஸ்லிம்களிடத்திலும் வழங்கி வரும் குர்ஆன் ஷரீபின் எல்லாப் பிரதிகளும் ஒரேவிதமான பாடமாகத் தான் காணப்படுகின்றன. அரபு பாஷையிலுள்ள உயிரெழுத்தின் அடையாளமாகிய மேல் கீழ்க்கோடுகளில் கூட ஒரு குர்ஆனுக்கு

மற்றொரு குர்ஆன் வித்தியாசப்படுவதில்லை. சென்ற 1300 வருடங்களாக முஸ்லிம்களுக் கிடையில் ஒருவருக்கொருவர் ராஜீய விஷயத்திலும் இன்னும் இதரவிஷயங்களிலும் அபிப்பிராய பேதங்களும் அடிக்கடி விளையும் சண்டைகளும் இருந்துவந்த போதிலும் எம் திருவேதமாகிய குர்ஆனி ஷரீபுமட்டும் அன்றுமுதல் இன்றளவும் ஒரே விதமாகத்தான் இருந்து வருகிறது. எங்கள் நபிகள் நாயகத்தின் காலத்துக்குப்பின் கால் நூற்றாண்டுக்குள் முஸ்லிம்களுக் கிடையில் ராஜீய விஷயத்திலும் மார்க்க விஷயத்திலும் பற்பல அபிப்பிராய பேதங்கள் தோன்றிய போதிலும் குர்ஆன் ஷரீபின் உண்மையான பரிசுத்தத் தன்மையைப்பற்றி ஒருவரும் இதுவரையில் ஆக்ஷேபம் கிளப்பினதில்லை. நடைமுதல் குர்ஆன் ஷரீபினின்றும் ஒரு சிறிதேனும் மாறுபாட்டையுடைய வேறொரு கையெழுத்துப் பிரதியைக் காண்பதரிது. இப்படிப்பட்ட வித்தியாசமுள்ள வேறு ஏதேனும் ஒருபிரதி இருப்பதாகவும் யாதொருசந்தேகமும் இதுவரையில் இவ்வுலகில் ஒருவருக்கும் தோன்றினதில்லை. "மூன்று பழய குர்ஆன்களின் ஏடுகள்" என்னும் ஒருவிஸ்தாரமான நூலில் டாக்டர் மிஞ்ஞு எவ்வளவோ பிரயத்தனம் செய்து பார்த்தும் அவருடைய குர்ஆனுக்கும் எம்முடைய நடைமுதல் குர்ஆனுக்கும் இடையில் எவ்வகை வித்தியாசத்தையும் அவரால் காட்ட முடியவில்லை. அவர் அதிக கஷ்டப்பட்டு எடுத்தோதிய சில தவறுகளெல்லாம் அரபுபாஷையின் எழுத்து வாசனையையே அறியாத சிலரின் கைப்பிசகால் தான் நேரிட்டவை என்பதை எழுதப்படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் ஒத்துக்கொள்ளுகிறார். டாக்டர் மிஞ்ஞு என்பவர் இவ்வுலக இறுதிகாலம் வரையில் திட்டு முட்டிடிக் குட்டிக்கரணம் போட்ட போதிலும் எங்கள் நாற்பது கோடி முஸ்லிம்களிடத்திலும் வழங்கி வரும் குர்ஆன் ஷரீபின் பிரதிகளில் ஒன்றுக் கொன்று எள்ளளவு வித்தியாசத்தையும் அவரால் காண்பிக்க முடியாது. நபிபெருமானாருக்குப் பின்வந்த மூன்றாவது கலீபாவான உதுமானுப்னு அப்பான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் முஸ்லிம் உலகத்தில் பரவச்செய்த குர்ஆன் ஷரீபின் கையெழுத்துப் பிரதிகள் இன்னும் இவ்வுலகில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன; அப்பிரதிகளைப் பற்றி எதிர் மதவாதி ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

"உதுமானுடைய (ரலி) காலத்தில் வெளியிடப்பட்ட குர்ஆன் ஷரீபின் பிரதியானது ஒரு சிறிதும் மாற்றப்படாமல் நம்முடையவர்களுக்கு எட்டியிருக்கிறது. நபிகள் நாயகத்தின் காலத்துக்குப்பின் கால்நூற்றாண்டுக்குள் உதுமானுடைய (ரலி) கலீபத்தின் அவசர





எதிரிகள் கொலை செய்ததிலிருந்து உற்பத்தியான அசிகையும் அவமதிப்புமுள்ள கக்ஷிப்பிரதி கக்ஷிகள் அன்று முதல் இன்றளவும் முஸ்லிம் உலகத்தையே இருபிரிவாகப் பிளந்து விட்டன. ஆயினும் ஸுன்னி, ஷிய்யா ஆகிய இப்பெரும் பிரிவினர்களுக் கிடையில் இன்றளவும் வழங்கிவரும் குர்ஆன் ஷரீபானது ஒரே மாதிரியாகத் தான் இருந்து வருகிறது. அன்றுமுதல் இன்றளவும் எல்லா முஸ்லிம்களும் அடிக்கடி ஓயாமல் ஒரேமாதிரியான குர்ஆனையே ஓதிவருவதால் அந்த் துரதிருஷ்ட சாலியான மூன்றாவது கலீபாவால் உருவாக்கப்பட்ட அந்தப் பிரதிதான் இப்பொழுதும் மாறாமல் இருக்கிறதென்று நாம் சிறிதும் கூசாமல் ஒத்துக்கொள்ள வேண்டும். சென்ற பன்னிரு நூற்றாண்டுகளாக இவ்வளவு பரிசுத்தமான பிழையில்லாத பாடத்தையுடைய வேறொரு கிரந்தம் இவ்வுலகில் இராதென்றே சொல்லலாம்."— (Muir's **Life of Mahomet**).

மறுபடியும் அதே சிறந்த கர்த்தாவான ஸர் வில்லியம் மூர் என்பவர், உதுமான் (ரலி) அவர்களின் காலத்தில் உருவாக்கப்பட்ட குர் ஆன் ஷரீபின் பிரதியானது நபிகள் நாயகத்தின் மரணத்துக்குப் பின் ஆறுமாதகாலத்திற்குள் ஸைது என்பவரால் தயாரிக்கப்பட்ட குர் ஆனே கரீமின் பிரதிக்கு ஒத்த சரியான நகலென்றும், அந்தஸைது என்பவரால் சேகரம் செய்யப்பட்ட குர் ஆன் ஷரீபானது நபிகள் நாயகத்தின் காலத்தில் அவர்கள் திருவாயினால் அருளப்பட்டுவந்த குர் ஆனே கரீமுக்கு ஒத்த சரியான பிரதியென்றும் சொல்லி இவ்வாறு நம்புவதற்கு அவசியமான அநேக ஆதார ஆதேயங்களையும் எடுத்துக் காண்பித்திருக்கிறார். "முஸ்லிம்கள் இப்போதுள்ள நடைமுதல் குர் ஆனை அல்லாஹுதஆலாவின் திருவசனமென்று நம்புவதேபோல் நாங்கள் அவ்வேதமானது முஹம்மது (ஸல்) நபியின் திருவாயினின்றும் வெளிவந்த உண்மையான வாக்கியங்களென்றே நம்புகிறோம்," என்று வான் ஹாம்மெர் சொல்வதை ஸர் வில்லியம் மூரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்.

எமது குர் ஆன் ஷரீபின் திருவாக்கியங்கள் எவ்வாறு ஆதிகாலமுதல் இதுவரையில் ஒரு சிறிதும் மாற்றப்படாமல் பத்திரமாகப் பரிசுத்தத்துடன் காப்பாற்றப் பட்டிருக்கின்றன வென்று இப்பொழுது கிறிஸ்தவர்களின் அத்தாக்ஷியைக் கொண்டே நன்கு தெரிந்துகொண்டோம். ஆனால் பைபிள் ஷரீபின் கதையைப்பற்றி ஆராயப்புகுவோமாயின் அது வெகு விசித்திரமாயிருக்கும். கி. பி. 1859-ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட கிரீக் (யூனன்) பாஷையிலுள்ள பைபிளின் ஒரு பிரதிதான் இப்பொழுது காணப்படும் பிரதிகளுக்குள்ளெல்லாம் மிகப்புராதனமானதாயிருக்கிறது. வாசகருக்

ருப் பின் சுமார் 850 வருஷங்களுக்குப் பிறகு தான் இந்த 1859ல் கண்டு பிடிக்கப்பட்ட பிரதி எழுதப்பட்டதென்று கிறிஸ்தமத நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். சினாய் மலையில் ஸெயின்ட் காதரைன் என்பவர் வாசம் செய்த ஆசிரமத்தில் இப்பிரதி வைக்கப்பட்டதால் இதற்கு "ஸினி யாட்டிக்கஸ்" என்று பெயர் சொல்லுகின்றனர். இப்பொழுது பிரிட்டிஷ் கண்காட்சி சாலையில் இருக்கும் "அலக்ஸாண்ட்ரினஸ்" என்னும் பெயருடைய பிரதியானது கி.பி. 5-வது நூற்றாண்டில் எழுதப்பட்டதாயிருக்கிறது. "வாட்டிக்கன்" என்றழைக்கப்படுகிற மற்றொரு பிரதி கி. பி. 4-வது நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கிறது; ஆனால் இது பூர்த்தியான பைபிளாயில்லை. இம்மூன்று பிரதிகளும்தான் புராதன காலத்து பைபிளின் முக்கியமான கையெழுத்துப் புத்தகங்களாயிருக்கின்றன. இம்மூன்று பிரதிகளையும் எவ்வளவு தூரம் நம்பலாம் என்பதைப்பற்றிக் கிறிஸ்து மதவாதியாகிய பைபிளின் உரையாசிரியர் ரெவரெண்டு ஜே. ஆர். டம்மிலோ என்பவரின் அபிப்பிராயத்தை நாம் இதன் கீழ் எழுதுவோம். கிறிஸ்துமதத்துக்கு எதிரியாயில்லாமல் அதன் விசுவாசியாயிருக்கும் அந்த ஞானி பின் வருமாறு எழுதுகிறார்:

"நாம் இங்கு ஆராய்ச்சிசெய்ய ஆரம்பிக்கும் போது பைபிளின் புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் கிரீக் பாஷையிலேயே ஏசுநாதரின் விஷயங்களை முதன் முதலாக எழுதியிருக்கிறார்களென்று ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்; ஆனால் ஏசு நாதர் தமது ஜீவனத்தில் பெரும்பாலும் அரெமிக் (ஸார்யானி) பாஷையிலேயே பேசிவந்திருக்கிறார். புதிய ஏற்பாடு எழுதினவர்களுக்கு ஸார்யானி பாஷையிலிருந்து சில மேற்கோள்கள் கிடைத்திருக்கலாம்; ஆயினும் அவர்கள் யூனான் பாஷையிலேயே புதிய ஏற்பாட்டை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் அக்காலத்தில் பழகிவந்த புராதன மதபோதனைகளுக்கு வெளியில் தங்களுடைய சுவிசேஷமானது போய்விடுமென்று அந்தக் கிரந்தகர்த்தாக்களாவது அல்லது அவர்களுடைய பிரதிகளை நகல் செய்தவர்களாவது எண்ணியிருந்ததாக அறியப்படுவதற்கு யாதொன்றும் ஆதாரம் கிடைக்கவில்லை.

"[illegible] ஆதியால் எழுதப்பட்ட எழுத்தின் கதியும் இப்படித்தானிருக்கிறது. இக்காலத்தில் அதிக கண்ணியத்துடன் மதிக்கப்படுகின்ற இவர்களுடைய கடிதங்களெல்லாம் அவர்களின் [illegible] சில மதபோதகர்களுக்காகப் பட்டுமே எழுதப்பட்டிருக்கின்றனவன்றி மற்றபடி ஒன்றும் அவற்றிற்கு விசேஷமில்லை. இக்கடிதங்களை ஆதியில் நகல் செய்தவர்கள் [illegible] எவ்வளவு "பரிசுத்த முள்ளவை" யென்று கருதி



ருப்பாரோ அவ்வளவு பரிசுத்தத்துடன் கண்ணியப் படுத்தியிருக்க மாட்டார்கள்.

"பிறகு சில நூற்றாண்டுகள் கழிந்தபின்னரும், பைபிள் பழைய ஏற்பாட்டைப்பற்றி எவ்வளவு கவனம் செலுத்தியிருக்கிறார்களோ அவ்வளவு கவனம் புதிய ஏற்பாட்டின், விஷயத்தில் செலுத்தியிருப்பார்களென்று நம்புவதற்கு நமக்கொன்றும் ஆதாரம் புலப்படவில்லை. சில சமயங்களில் புதிய ஏற்பாட்டை நகல் செய்தவர்கள் மூலப்பிரதியில் இருந்த உண்மையான வாக்கியங்களை நகல் செய்யாமல் விட்டதோடு நில்லாமல் பைபிளில் எப்படிப்பட்ட வாக்கியங்கள் இருந்தால் நலமென்று தம்முடைய புத்தியில் தவறாகக்கருதினார்களோ அப்படிப்பட்ட பொய்யான வாக்கியங்களையெல்லாம் தாம் எழுதிய நகலில் புகுத்திவிட்டார்கள். அவர்கள் தங்களுடைய சலன புத்தியுள்ள ஞாபக சக்தியைப் பெரிதும் நம்பியிருந்தார்கள். தாங்கள் கிறிஸ்து மார்க்கத்தின் எந்தப்பிரிவில் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்களோ அந்தப்பிரிவுக்குரிய அபிப்பிராயங்களையெல்லாம் அவர்கள் எழுதிய பைபிளில் நுழையவிட்டிருக்கிறார்கள். இவையல்லாமல் வெவ்வேறு பாடங்களுள்ள அநேகம் பிரதிகள் இப்பொழுதும் இருக்கின்றன. புராதன காலத்திலிருந்த கிறிஸ்தவப் பாதிரிமார்கள் எழுதி வைத்திருக்கும் பிரதிகளையும் மேற்கோள்களையும் கணக்கில் சேர்க்காவிடினும் தற்போது சற்றேறக்குறைய 4000 புதிய ஏற்பாட்டின் கையெழுத்துப் பிரதிகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப்பார்க்கும்போது ஒன்றுக்கொன்று மாறுபாடான வேறுபாடுகள் அநேகம் காணப்படுகின்றன."

இவ்வளவு அஜாக்கிரதையுடனும் இப்படிப்பட்ட கூட்டல் குறைத்தலுடனும் நகல் செய்யப்பட்ட பைபிள் வேதத்தில் நாம் எப்படி நம்பிக்கை வைப்பது? மேலும் புதிய ஏற்பாட்டின் சுவிசேஷங்களை எழுதினவர்கள் இன்னாரென்றும் அவை எப்பொழுது எழுதப்பட்டன வென்றும் கண்டுபிடிப்பதற்கு ஒன்றும் ஆதாரமில்லை. "ஸெயின்ட் மத்தேயு என்பவரின் கருத்துக்கிணங்க எழுதப்பட்ட சுவிசேஷம்" என்று முதல் சுவிசேஷத்துக்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மத்தேயு என்பவர் ஒருபோதும் இந்த முதல் சுவிசேஷத்தை எழுதவேயில்லை; யாரோ ஓர் அநாமதேய மனிதன் அதை எழுதி மத்தேயுவின் தலையில் சுமத்தியிருக்கிறான். நாம் மேலே கூறியுள்ள உரையாசிரியராகிய டம்மிலோ என்பவர் முதல் சுவிசேஷத்தின் கர்த்தாவைப்பற்றி இவ்வாறு எழுதுகிறார்; "ஸெயின்ட் மத்தேயு என்பவர் எழு

-சேய (இப்ரானி) பாஷையில் லோஜியா அல்லது ஆரக்கிள் என்று சொல்லக் கூடிய ஒரு நூலை ஒரு கால் எழுதியிருக்கக் கூடும். இப்படிப்பட்ட ஒரு கிரந்தத்தை மத்தேயு என்பவர் எழுதியதாக கி. பி. 130-ம் ஆண்டில் பேப்பியாஸ் என்பவர் தாம் எழுதிய நூலில் குறிப்பிட்டிருப்பது தவிர உண்மையில் இப்பொழுது அந்த "லோஜியா" அல்லது "ஆரக்கிள்" என்று பெயர் சொல்லும் கிரந்தமானது இருக்குமிடம் தெரியவில்லை. அந்த இப்ரானிபாஷையிலுள்ள நூலை யாரோ ஒருவர் கிரீக் பாஷையில் மொழிபெயர்த்ததை மூலமாக வைத்துக் கொண்டு வேறொருவர் பைபிள் புதிய ஏற்பாட்டின் முதல் சுவிசேஷத்தை எழுதிவிட்டு, 'மத்தேயுவின் கருத்துக்கிணங்க எழுதப்பட்டது' என்று அதற்குப் பெயர் வைத்துவிட்டார்." டம்மிலோ என்பவர் எழுதியிருக்கும் இந்த வியாக்கியானத்தைக் கொண்டே கிறிஸ்தவர்களின் முதல் சுவிசேஷம் எவ்வளவு தூரம் நம்பத்தக்கதாயிருக்கிறதென்பதை நாம் செவ்வனே உணர்ந்து கொள்ளுகிறோம். மத்தேயு என்பவர் ஒரு நூலை எழுதியிருக்கலாம்; அதைக்குறித்துப் பேப்பியாஸ் என்பவர் தம்முடைய எழுத்தில் குறிப்பிட்டிருப்பதல்லாமல் நமக்கு வேறு ஆதாரமொன்றும் கிடைக்கவில்லை. இது தவிர மற்றக் கதையெல்லாம் கிறிஸ்தவர்களின் கட்டுக்கதையாகவே இருக்கிறது. இப்ரானி பாஷையில் மத்தேயு எழுதின லோஜியாவின் மொழிபெயர்ப்பு ஒன்று யூனான்பாஷையில் இருந்ததென்று சொல்வதற்காவது, அல்லது அப்படிப்பட்ட யூனான்பாஷையிலுள்ள ஒரு மொழி பெயர்ப்பையாவது இப்ரானி பாஷையிலுள்ள மூல கிரந்தத்தையாவது வைத்துக்கொண்டு அதன் பெரும்பான்மையான உதவியைக் கொண்டேதான் முதல் சுவிசேஷத்தை எழுதினவர் தமது நூலை எழுதி முடித்தாரென்று அனுமானிப்பதற்காவது ஓர் அணுவளவு சாட்சியமேனும் இவ்வுலகில் கிடைக்கவில்லை. "மத்தேயுவின் கருத்துக்கிணங்க எழுதப்பட்ட"தென்று முதல் சுவிசேஷத்துக்கு அவர் பெயரிட்டிருப்பதால் மேலே கூறிய வண்ணமெல்லாம் கிறிஸ்தவர்கள் அனுமானிக்கத் தலைப்பட்டு விட்டனர். மத்தேயுவால் எழுதப்பட்ட கிரந்தம் நமக்கு அகப்படாமலிருக்கும்போது அந்த நூலை வைத்துக்கொண்டுதான் முதல் சுவிசேஷத்தை எழுதினவர் தம் நூலை எழுதி முடித்தாரென்று எவ்வாறு சொல்லலாம்? மத்தேயு என்பவர் வாயால் சொன்ன சில விஷயங்களை வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட முதல் சுவிசேஷத்தை ஒருவர் எழுதியிருக்க முடியாதா?

-152-



இரண்டாவது சுவிசேஷத்தை "செயின்ட்மார்க் என்பவரால் எழுதப்பட்ட சுவிசேஷம்" என்று கூறுகின்றனர்; இந்தமார்க் என்பவர் செயின்ட் பீட்டரின் தோழராயிருந்தார். கி.பி. 130-ம் ஆண்டில் பேப்பியாஸ் என்பவர் எழுதிய ஆதாரத்தைக்கொண்டு தான் இரண்டாவது சுவிசேஷத்தை மார்க் என்பவர் எழுதியதாக நம் கிறிஸ்து நண்பர்கள் நம்புகின்றனர்.

"மார்க் என்பவர் ஏசுகிறிஸ்து நாதரால் சொல்லப்பட்ட விஷயங்களை முறைப்படி ஒழுங்காக எழுதாவிட்டபோதிலும் செயின்ட் பீட்டருக்கு அவர் மொழிபெயர்ப்புக் காரராக அமர்ந்த பின் பீட்டர் துரை சொன்னதாகத் தம்முடைய ஞாபகத்திலிருந்ததை யெல்லாம் (அல்லது பீட்டர் துரை சொன்னதையெல்லாம்) எழுதியிருக்கிறார். மார்க் என்பவர் ஏசுநாதரைப் பின்பற்றின வருமல்லர்; அல்லது அவர் பேசியதைக் கேட்டவருமல்லர்; ஆனால் நான் சொன்னதுபோல் இவர் பீட்டரின் கீழ் தர்ஜுமா செய்பவராக அமர்ந்தபின், பீட்டர் தமக்கு முன்பாக இருந்த பிரசங்கம் கேட்பவர்களுக்காக அப்போதைக்கப்போது வேண்டிய அவசரத்துக்குத் தகுந்தபடி தயார் செய்திருந்த பிரசங்கங்களை மட்டும் மார்க் என்பவர் கேட்டிருந்தார். பீட்டர் துரை தம்முடைய பிரசங்கங்களுக்காகக் குறிப்பு எழுதியபோது ஏசுநாதரின் ஜீவிய சரித்திரத்தைப் பூராவும் எழுதவேண்டுமென்று அவர் ஒருபோதும் பிரயத்தனப் படவில்லை."

மேற் கூறிய இந்த ஆதாரத்தை உண்மையான சாக்ஷியமென்று நாம் நம்பிய போதிலும் பீட்டரின் வாய் மொழியான சில பிரசங்கங்களைக் கொண்டே மார்க் என்பவர் தம்முடைய சுவிசேஷத்தை எழுதினாரென்று நாம் தைரியமாகச் சொல்லலாம். மேலும் இப்பொழுது பைபிள் புதிய ஏற்பாட்டிலுள்ள இரண்டாவது சுவிசேஷத்தை செயின்ட் மார்க்தான் எழுதினாரென்று நம்புவதற்கு யாதோர் ஆதாரமுமில்லை; ஆனால் இரண்டாவது சுவிசேஷத்தை ஆழமாகப் படித்த நிபுணர்கள் இந்தச் சுவிசேஷம் முழுதும் மார்க் என்பவரால் எழுதப்பட்டதல்லவென்றும், அப்படி அவர் ஏதேனும் எழுதியிருக்கும் பக்ஷத்தில் இரண்டாவது சுவிசேஷத்தின் முக்கியமான சில பகுதிகளை மட்டும் எழுதியிருக்கக்கூடுமென்றும் அபிப்பிராயப் படுகிறார்கள்.

செயின்ட் லூக் என்பவர் ஏசுநாதரின் சிஷ்யரல்லர்; ஆனால் அவர் அப்போஸ்தலர்களுடைய சிஷ்யராயிருந்திருக்கிறார். பவுல் என்பவரைப் பின்பற்றி இவர் தமது கிரந்தத்தை எழுதியதாக

எல்லோரும் அபிப்பிராயப்படுகின்றனர். நான்காவது சுவிசேஷமாகிய யோவானைப்பற்றியென்றாலோ, அது ஏசுநாதருக்கு நெடுங்காலம் பின்னிட்டு எழுதப்பட்டதென்பது எல்லோருக்கும் தெரியும். புதிய ஏற்பாட்டின் சுவிசேஷங்களுடைய காலத்தைப் பற்றிக் கவனிக்க ஆரம்பிப்போமாயின் முதல் மூன்று சுவிசேஷங்களும் சுமார் கி.பி. 70-வருஷங்களுக்குப் பிறகு தான் எழுதப்பட்டிருக்கக் கூடுமென்று கிறிஸ்துமத அபிமானிகள் கூறுகின்றனர்; ஆனால் மற்றும் சிலர் கி-பி 70-ம் ஆண்டுக்குப்பின் அநேக வருஷங்கள் சென்றுதான் அவை மூன்றும் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று அநுமானம் செய்கின்றனர். சுவிசேஷத்தின் வாக்கியங்களை உட்புகுந்து ஆராய்வோமாயின் இரண்டாவது அபிப்பிராயமே சரியானதென்பது நமக்குச் செவ்வனே புலப்படும்; சுவிசேஷங்களின் காலக்கிரமத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கும் ஒரு பெரியார், "புது ஏற்பாடு முழுதும் கி-பி 150-ம் ஆண்டுக்குப் பிறகுதான் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று பெரும்பான்மையோர் அபிப்பிராயப் படுகின்றனர்," என்று எழுதியிருக்கிறார். கி-பி. 130-க்கு முன் முதல் மூன்று சுவிசேஷங்களும் எழுதப்பட்டனவென்று வாதித்து வரும் சிறுபான்மையோரின் அபிப்பிராயத்தை ஒத்துக் கொள்வதாயிருந்தால் அச்சுவிசேஷங்களின் பெரும்பாலானவையான வாக்கியங்கள் பிறகு அநேக ஆண்டுகள் சென்றபின்னரே பைபிளில் புகுத்தப்பட்டிருக்கவேண்டுமென்று நாம் அங்கீகரிக்க வேண்டியிருக்கும். செயின்ட்லூக்கின் காலமானது "கி-பி.100 வருஷத்துக்கு முன்னே போகாமலும் கி-பி. 110 வருஷத்துக்குப் பின்னே போகாமலும் இருக்கக்கூடும்." (Encyclopaedia Biblica).

புதிய ஏற்பாட்டின் சுவிசேஷங்களை எழுதினவர்கள் இன்னாரென்றும் எழுதினகாலம் இன்னதென்றும் தெரியாமலிருப்பதானும், வெவ்வேறு கையெழுத்துப் பிரதிகளில் வெவ்வேறு விதமான பாடங்கள் காணப்படுவதாலும், இவற்றையெல்லாம் ஒருவிதமாகத் தீர்மானம் செய்வதற்கு எவ்வகை நம்பிக்கையான சாட்சியமும் கிடையாமையாலும் நாம் அந்தச் சுவிசேஷங்களில் நம்பிக்கை வைப்பதென்றால் அது சுத்த சூன்யமாய்த்தான் முடிகின்றது; ஆதலின் மேற்கூறிய அம்சங்களையெல்லாம் அதிகமாக ஆராய்ச்சி செய்தவரான ரெவரெண்டு ஈ. ஏ. அப்பட் என்பவர் என்ஸைக்ளோபைடியா பிப்ளிக்கா என்னும் மஹாகிரந்தத்தில் பின்வருமாறு ஓர் ஐயவினவைக் கேட்டிருக்கிறார்: "மேற்கூறிய அம்சங்களையெல்லாம் நாம் ஆராய்ச்சி செய்யும்போது புதியஏற்பாட்டின் சுவிசேஷங்களில் ஏதேனும் சிறிது உண்மை காணப்படக் கூடுமோ

—153-



என்னும் சந்தேகம் நமக்கு அதிகமாய் உண்டாகலாம்." இந்தப் பாதிரியார் கேட்கும் சந்தேக வினாவுக்கு நாம் சமாதானம் சொல்ல வேண்டுமாயின் கீழ்க்கண்ட ஐந்து வாக்கியங்கள் மட்டுந்தான் ஏசுநாதரின் உண்மையான உபதேசமாயிருக்குமென்று தைரியமாகச் சொல்லலாம்:—(1) ஏசுநாதர் தம்மைப் பாபமற்றவரென்று சொல்லிக்கொள்ள மறுதலித்த வாக்கியம் ஒன்று: "நீ என்னை நல்லவனென்று சொல்வானேன்? தேவன் ஒருவர்தவிர நல்லவன் ஒருவனுமில்லையே" (மார்க் 10: 18.) (2) ஏசுநாதர் தம்மைக்குறித்துச் சொல்லப்படும் தூஷணமானது மன்னிக்கப்படுமென்று சொன்ன வாக்கியம் ஒன்று: "எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத்தேயு 12:31). (3) ஏசுநாதரின் பெற்றதாயாரும் உடன் பிறந்த சகோதரர்களும் அவரிடத்தில் நம்பிக்கை வைக்கவில்லையென்றும், ஆனால் ஏசுவை உண்மையாகவே அவர்கள் பைத்தியங் கொண்டவரென்று நம்பினார்களென்றும் கூறும் வாக்கியம் ஒன்று: "அவருடைய இனத்தார் இதைக் கேட்டபோது, அவர் பிரமை கொண்டிருக்கிறாரென்று சொல்லி, அவரைப் பிடித்துக்கொள்ளும்படி வந்தார்கள்" (மார்க் 3:21). மார்க் 3:31 வது வாக்கியத்தால் "இனத்தார்" என்றது "அவருடைய சகோதரரும் தாயாரும்" என்று தெரிந்து கொள்ளுகிறோம். (4) ஏசுநாதருக்கு மறைவான விஷயத்தின் ஞானமொன்றும் இல்லையென்று எண்பிக்கக் கூடிய வாக்கியம் ஒன்று: அந்தநாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்; குமாரனும் அறியார்" (மார்க் 13:32). (5) சிலுவையிலிருந்து கொண்டு ஏசுநாதர் மனக்கிலேச முற்றுப் பரிதாபத்துடன் கூறிய வாக்கியம் ஒன்று: "ஏலீ! ஏலீ! லாமாசபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக்கைவிட்டீர்? என்று அர்த்தமாம்," (மத்தேயு 27:46).

மேற்கூறிய ஐந்து வாக்கியங்களுடன் இன்னும் நான்கு வாக்கியங்களிலும் நம்பிக்கை வைக்கலாம்; அந்நான்கு வாக்கியங்களும் ஏசுநாதரின் அற்புதங்களைப் பற்றிக் கூறுகின்றன. முடிவாக ஆராய்ச்சி செய்து இறுதியாகச் சொல்லுமிடத்து, "ஏசுவின் உண்மையான சரித்திரத்துக்கு இவ்வொன்பது வாக்கியங்களே அஸ்திவாரத்தூண்களாயிருக்கின்றன." மேலே கூறிவந்த விஷயங்களையெல்லாம் நன்கு நோக்குவீர்களேல் கிறிஸ்தவர்களின் பைபிள்ஷரீ

பானது நம்பத்தகாத முழுக் கட்டுக்கதையென்றே நன்குணர்ந்து கொள்ளுவீர்கள். பைபிளின் சுவிசேஷங்களை நீங்கள் படிப்பதாயின் அவற்றின் வாக்கியங்களில் பெரும்பான்மையான மனிதசேஷ்டையாலே சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்று நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஏசு நாதரின் அற்புதங்களைப் பற்றியும் அபார சக்திகளைப் பற்றியும் எவ்வளவோ அதிகமாகப் பெருமை பாராட்டிவரும் நான்கு சுவிசேஷங்களும் எவ்வளவு தூரம் மனிதர்களுடைய நம்பிக்கைக் குரியனவென்று நீங்கள் நன்றாக ஞாபகத்தில் இருத்திக்கொள்ளுதல் அவசியமாகும். இப்படிப்பட்ட மனித சிருஷ்டியான பைபிளையுடைய கிரிஸ்தவ நேசர்கள் இனியேனும் தங்களுடைய வேதத்தின் பொய்ம்மையையும் எங்களுடைய வேதமாகிய குர்ஆன் ஷரீபின் மெய்ம்மையையும் நன்றாகப் பகுத்தறிந்து பொய்யைத் தள்ளி மெய்யைத் தழுவுவார்களாக. ஆமீன்.

[இது மௌலானா மௌல்வி முஹம்மதலி சாஹிப், எம். ஏ. எல். எல். பி., அவர்களால் எழுதப்பெற்றுள்ள "முஹம்மதும் கிறிஸ்துவும்" என்னும் ஆங்கில நூலிலிருந்து எடுத்தெழுதப் பட்டிருக்கிறது.]

பா. தாவுத்ஷா, பி. ஏ.

## வீண்சம்பிரதாயம்

"துன்யாவுடைய வாழ்க்கை யெல்லாம் விளையாட்டும் இச்சை பாராட்டலும் சிங்காரித்தலும் உங்களுக்குள் பெருமை பாராட்டலும் பொருள்களிலும் பிள்ளைகளிலும் பெருகிப்பதுகுதலுமேயாம்"— (அல் குர்ஆன்)

"இச்சையிலிருந்து தன் மனத்தைத் திருப்பினவன் எவனோ அவனுக்கு நிச்சயமாக சுவர்க்கமே மீளும் ஸ்தலமாயிருக்கிறது"— (அல்குர்ஆன்)

"உங்கள் பொருள்களும் பிள்ளைகளும் அல்லாஹுத் தஆலாவுடைய ஞாபகத்திலிருந்து உங்களை மறக்கச்செய்ய வேண்டாம். யாரேனும் அப்படி மறப்பார்களாயின் அவர் நஷ்டத்திலானவரா யிருக்கிறார்"—(அல்குர்ஆன்)

"எதுவென்று அல்லாஹுத் தஆலாவுக்காக இருக்கிறதோ அதைத்தவிர, துன்யாவும் லஅனத்துப் பெற்றது, அதிலுள்ளதும் லஅனத்துப் பெற்றது"—(நாயகவாக்கியம்)

"எவனொருவன் பெருமை பாராட்டுவதற்காகவும் [illegible] போவதற்காகவும் துன்யாவைத்தேடுவானாயின் அவன் அல்லா



ஹுத் தஆலாவைத் தன்மீது கோபங்கொண்டிருக்கக் காண்பான்"—(நாயகவாக்கியம்)

"பொருளையும் பெரியதனத்தையும் ஆசிப்பதானது முஸ்லிமுடைய தீனை எவ்வளவாக நாசஞ்செய்யுமோ அவ்வளவாக ஆட்டு மந்தையை அதிக பசியுள்ள ஓநாய் நாசஞ்செய்யாது"—(நாயக வாக்கியம்)

ஏ, எமது அருமைமிக்க முஸ்லிம் சகோதரர்காள்! இவ்வுலகில் நம் போன்ற முஸ்லிம்கள் எவ்வண்ணமாக உயிர்வாழவேண்டுமென்பதை நீங்கள் ஒரு சிறிதேனும் உற்றுணர்ந்து பார்த்ததுண்டா? இவ்வுலகில் வேறு சில ஜாதியார் உயிர்வாழ்வதுபோல் இத்துன்யாவே சதமென்றெண்ணி இதற்கு வேண்டிய சகல போக பாக்கியங்களையும் அடைவதிலேயே ஏகசிருஷ்டியாயிருப்பதா? அல்லது மற்றும் சில மதத்தினர் வாதிப்பதுபோல் இவ்வுலகத்தையே முற்றத்துறந்து சதா சன்னியாச கோலத்தில் நாம் இருப்பதா? என்று நீங்கள் சற்றும் நிதானித்துப்பார்த்திருக்கிறீர்களா? குர்ஆன் ஷரீபு ஹதீது ஷரீபு முதலியவற்றின் கருத்துக்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து சீர்தூக்கிப்பார்ப்பீர்களேல் இஸ்லாமார்க்கமானது மற்றெல்லாவிஷயங்களையும் பற்றிச் சொல்வதேபோல் இவ்விஷயத்திலும் நடுநிலையான வழியையே காட்டுவதாக நீங்கள் கண்டு கொள்ளுவீர்கள். இவ்வுலகமே சதமென்றெண்ணி அதற்கு வேண்டிய காரியங்களிலேயே சதா கண்ணுங்கருத்துமாயிருக்கவேண்டுமென்று நமது தீனுல் இஸ்லாம் போதிக்கவில்லை; ஆனால் இவ்வுலகம் அநித்தியமானதால் இதைச் சிறிதும் கடைக்கணிக்காமல் முற்றத்துறந்த முழுச்சன்னியாசிகளாகவும் போய்விடும்படி எமது சத்தசத்திய சன்மார்க்கம் போதிக்கவில்லை. ஆனால் இவ்வுலகமானது பரலோகத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொள்ளுதற்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றபடியால் அப்பரலோக காரியங்களைப் பூர்த்திசெய்து கொள்ளுதற்கு எவ்வளவு இடம்பொருள் ஏவலெல்லாம் வேண்டுமோ அவ்வளவுமட்டும் சேகரித்துக்கொள்வதே போதுமென்று எமது இஸ்லாமார்க்கம் உபதேசிக்கின்றது. ஆதலின் இவ்வுலகமே கதியென்று முஸ்லிம் சகோதரர்காள்! நீங்கள் ஏமாந்துபோகவேண்டாம்; ஆனால் இல்லறத்தைத் துறந்தும் காடே கதியென்று துறவறத்தில் சேர்ந்து விடவேண்டாம். அல்லாஹுத் தஆலாவால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எல்லா சக்தியையும் வெளிப்படுத்திக் கடைசியில் மக்காவுக்குச் செல்வதற்கு மட்டும் எவ்வளவு இல்லறப்பெருமை வேண்டுமோ அவ்வளவே உங்களுக்குப் போதுமானதாயிருக்கிறது. "துன்யாவைத்துன்

யாதார்களுடன் விட்டு விடுங்கள்," ஏனெனின், அதினின்றும் தன் அவசியத்துக்குமேல் அதிகமாக ஒரு வஸ்துவை அடைபவன் எவனோ அவனுக்கு அவ்வஸ்து கேடாய் "முடியும்" என்று எம்பெருமானார் நபிமுஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். இவ்வுலகில் நமக்கு வேண்டியதற்குமேல் ஐசுவரியம் உண்டாகவேண்டு மென்று இச்சைவைப்போமாயின் அப்பொழுதுதான் இத்துன்யாவானது எல்லாத்தீங்குகளுக்கும் சிரசாயிருக்கிறது; அதன் உவப்பு எல்லாப் பாபங்களுக்கும் மூலமாயிருக்கிறது. "எது வொன்று அல்லாஹுத் தஆலாவுக்காயிருக்கிறதோ அதைத் தவிர துன்யாவும் லஃனத்துப்பெற்றது; அதிலுள்ளதும் லஃனத்துப்பெற்றது. துன்யாவுடைய உவப்பு எல்லாப்பாபங்களுக்கும் தலை நின்றதாயிருக்கிறது. எவனொருவன் துன்யாவை அதிகம் ஆசிக்கிறானோ அவன் ஆகிரத்தை நஷ்டத்தில் கொண்டுவந்தான்"—(நாயகவாக்கியம்)

ஆனால் உங்களுடைய தேவைகளுக்குப் போதுமானதைச் சம்பாதித்துக் கொள்ளுங்க ளென்றுசொன்னதனால் ஒவ்வொரு முஸ்லிமும் நித்தியதரித்திரத்தில் இருக்கவேண்டு மென்னும் சட்டமில்லை. ஒருவன் சற்று நிதானித்துப் பார்ப்பானாயின் சிக்கனமாய் உண்பதற்கும் உடுப்பதற்கும் கவலையில்லாமலும் பிறரிடம் பிச்சை புகாமலும் தெய்வவணக்கம் செய்வதற்கும் போதுமான அவ்வளவு ஐசுவரியம்தான் சம்பாதிக்கவேண்டுவது ஒவ்வொருவருக்கும் கடமையாகக் காணப்படும். உணவருந்துவது உயிரைக்காப்பாற்றுவதற்காகவும் மணம்புரிவது மக்கட் பேற்றிற்காகவும் சிறிது பொருள் தேடுவது இபாதத்துக் காலத்தில் மனம் கவலையற்றிருப்பதற்காகவுமே யென்று கருதி இவற்றிற்குப் போதுமான அளவே சம்பாதிப்பதுதான் புத்திசாலித்தனமாகும். "எவனொருவன் தன் அவசியத்துக்குமேல் அதிகத்தை ஆசித்தானோ அவன்தன் அறியாமையால் தன்னுடைய கேட்டை இச்சித்தவனாவான்," என்று எங்கள் நபிபெருமானார் கூறியுள்ளார்கள். ஆனால் தன்னளவுக்கு மேல் அதிகம் சம்பாதிக்கும்போது தனக்குவேண்டியதற்கு மேற்பட்ட பொருளெல்லாம் அல்லாஹுத் தஆலாவுக்கே அர்ப்பணம் என்று எண்ணிக்கொண்டு அவ்வாறே சன்மார்க்கவழியில் அச்செல்வத்தையெல்லாம் செலவுசெய்யவேண்டு மென்பதுதான் எமது மார்க்கம் செய்யும் சிபாரிசாகும். ஒருவன் தனக்கு வேண்டிய அளவு சம்பாதிப்பதே போதும்; அதற்குமேல் அவன் கஷ்டப் படத்தேவையில்லை. ஆனால் ஆண்டவனருளிய அதிருஷ்ட வசத்தால் அதிகதிரவியம் சேர்ந்து விடின் அதையெல்லாம் அல்லாவின் வழியில் செலவுசெய்தல்



வேண்டும். இதுதான் இஸ்லாத்தின் நீயதி. 1300 வருடங்களுக்கு முன் அபூபக்கர் ஸித்தீக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், உமறோபாறூக் (ரலி) அவர்கள் முதலிய பல அஸ்ஹாபிமார்கள் தங்களுடைய திரவியங்களை யெல்லாம் அல்லாவின் பாதையில் செலவுசெய்ய எண்ணி பைத்துல்மால் என்னும் பொது கஜானாவில் சேர்த்துவிட்டது நம்நேயர்களுக்குத் தெரியாத விஷயமன்று. ஊண் உடை உறக்கம் ஆகிய இவற்றிற்குக் குறைந்தது எவ்வளவு வேண்டுமோ அவ்வளவைமட்டும் சம்பாதிப்பதற்கு இவ்வுலக விவகாரங்களில் தலையிட்டு மிகுதிகாலத்தை யெல்லாம் ஆண்டவனுடைய இபாதத்திலேயேகழிக்கவேண்டுமென்பதுதான் நமது மார்க்கக் கட்டளை. தாமரையிலையானது எப்பொழுதும் ஜலத்திலேயேகிடந்தும் அதில்முழுதும் நனையாமல் பட்டும் படாததுமா யிருப்பதேபோல் நாம் ஒவ்வொருவரும் இவ்வுலக இன்பத்தில் பட்டும்படாததுமாகவே காலங்கழித்துமறுமையுலகத்துக்கு வேண்டிய புண்ணியத்தை யெல்லாம் அதிகமாகச் சேகரம் செய்துகொள்ளவேண்டும். ஆனால் நமக்குவேண்டியதை மட்டும் நாம் தேடிக்கொண்டால் நம்முடைய பெண்சாதி பிள்ளைகளுக்கு ஒன்றும் சேகரம் செய்துவைக்கவேண்டாமா என்று உங்களில் சிலருக்குச் சந்தேகம் ஜனிக்கலாம். இப்படிப்பட்ட சந்தேகத்துக்கு ஒரே விதசமாதானந்தானுண்டு. நம்முடைய பெண்சாதி பிள்ளைகளெல்லாம் ஆண்டவனுக்குப் பாபியாய்ப் போய்விடின் அப்படிப்பட்ட பாபிகளுக்காக நாம் பொருள் சேகரம் செய்து வைப்பதால் நமக்கொன்றும் புண்ணியமில்லை; ஆனால் பாபமே நமக்குச் சம்பவிக்கும். நம்முடைய மக்களும் மனைவியும் ஆண்டவனுக்கு நல்லடியார்களாய்ப் போய்விடுவார்களாயின் அப்பொழுது அவர்களைப் பாதுகாக்கவேண்டியது அவனது பாரமாகின்றது. ஆதலின் அவர்களுக்காக நாமொன்றும் தேடிவைக்கவேண்டிய அவசியமில்லை.

மஸ்லமத்துபுனு அப்தில்மலிக்கு என்னும் அரச குமாரர் கலீபரசான உமறுபுனு அப்தில் அஜீஸ் ரஹிமஹுல்லா அவர்களுக்கு மரணம் நெருங்கி யிருந்த வேளையில் அவர்களிடம் வந்தார். வந்தவர் "யா அமீருல் மூமினீன்! நீர் உலகத்தில் எவரும் எப்போதும் செய்யாத ஒரு வேலையைச் செய்தீர். அதாவது உமக்குப் பதின்மூன்று பிள்ளைகளிருக்கிறார்கள். அவர்களுக்காக நீர் ஒரு வெள்ளிக்காசேனும் பொன் நாணயமேனும் வைத்தீரில்லை," என்று கேட்டார். அப்பொழுது படுக்கையிலிருந்த அமீருல் மூமினீன் தங்களைத்தூக்கி உட்கார்த்தும்படி ஏவலாளருக்கு உத்தரவு செய்தார்கள். அப்படியே அவர்கள் எழுந்து உட்காரவைத்தார்கள்; பின்னர் அவ்விராஜகுமாரரை மஸ்லமத்தைப் பார்த்து, "நான் என்

பிள்ளைகளுக்காக ஒன்றையும் வைக்கவில்லையென் றல்லவா சொன்னீர்? அப்படி நான் அவர்களுடைய சொத்தை எடுத்துப் பிறருக்குக் கொடுத்து விடவுமில்லை; பிறருடைய சொத்தையும் அவர்களுக்கு அளிக்கவில்லை. என் பிள்ளைகள் அல்லாஹ்த் தஆலாவுக்கு வழிபடுகிற யோக்கியர்களாகவாவது அல்லது அப்படியில்லாத அயோக்கியர்களாக வாவது இருப்பார்கள். வழிபடுகிற யோக்கியதையுள்ளவர்களுக்கு அல்லாஹ்த் தஆலா போதுமானவனாயிருக்கிறான். அப்படியில்லாதவர்கள் எக்கேடு கெட்டாலும் எனக்கு லக்ஷியமில்லை," என்று பதில் சொன்னார்கள். முஹம்மதுபுனுக அபில்குர்துபியவர்கள் பெருஞ் செல்வராக இருந்தார். "நீர் இந்தச் செல்வத்தை உம்முடைய புத்திரர்களுக்கு ஆஸ்தியாகவைக்கவேண்டும்," என்று சிலர் கேட்டதற்கு, "இல்லை, நான் அதை [illegible] ஆஸ்தியாக அல்லாஹ்த் தஆலாவினிடத்தில் வைப்பேன்; என் பிள்ளைகளுக்காகப் பெருமையும் சிறப்புமுள்ள அல்லாஹ்த் தஆலாவை விடுவேன்; அவன் அவர்களைச் செம்மையாக வைப்பான்," என்று மறுமொழி கூறினார். பெண்டுபிள்ளைகளுக்கு வேண்டும், பெண்டு பிள்ளைகளுக்கு வேண்டும் என்று பேயாய்ப் பறக்கும் பித்தர்களுக்கு இவ்விரண்டு உதாரணங்களே போதும்.

பரலோகத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் சேகரம் செய்து கொள்ளவேண்டியதற்கு மட்டுமே இவ்வுலகத்தை நேசிக்கவேண்டுமேயல்லாமல் அதற்கு மேல் எல்லை கடந்து செல்பவர் அதோகதியில் தான் சேர்வார். மேலும் அல்லாஹ்த் தஆலாவுக்கு அர்ப்பணம் செய்வதற்கல்லாமல் வேறு சொந்த உபயோகத்துக்காக அளவுக்கு மேல் சம்பாதிக்க ஆரம்பிப்பவர் அளவில்லாத ஆழ்கடலில் தான் சென்று சேர்வார். "ஆசைக்கோர் அளவில்லை அகிலமெலாம் கட்டி யாளினும் கடல் மீதிலே ஆணைசெலவே நினைவர்," என்றார் தாயுமானவரும். அவசியத்துக்கு மேல் அதிகமாக இன்ப சுகங்களை அனுபவிப்பது ஆகிரத்துடைய காரியங்களிற் சேர்ந்ததாகாது. துன்யாவானது மூன்று வகுப்பாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. உணவு உடை இடம் இவற்றினின்றும் அவசியமான அளவின் மீது போதுமாக்கிக் கொள்வது முதல் வகுப்பு. "உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்" என்றார் ஒரு பெரியார். இதைவிட்டும் கடந்து தாராளத்துடைய அளவுக்கு வருவது மற்றொரு வகுப்பு. இதற்கும் அப்பால் அழகு அலங்காரப் பெருமை இவற்றின் அளவுக்கு ஏறுவது மூன்றாவது வகுப்பாகும். இந்த மூன்றாவது வகுப்பின் அளவுக்கு ஒரு முடிவு கிடையாது. அவசியமான அளவுடன் போதுமாக்கிக்கொண்டவன் தப்பினான்; அழகு அலங்காரப் பெருமை



இவற்றின் எல்லைக்குச் சென்றவன் ஹாவியா வென்னும் ஆழமாகிய அக்கினிக் கிடங்கில் விழுந்தான். ஹாஜத்துடைய அளவின் எல்லைக்குள் நின்றவனும் அச்சத்தை விட்டும் அகன்றவனல்லன். ஏது ஹாஜத்தில்லாமல் அதிகமாயிருக்கிறதோ அதை அவன் ஹாஜத்தில் சேர்த்ததென்று தவறாக நினைக்கவும் கூடும். அதற்காகக் கியாமத்தில் கணக்கு ஒப்பிக்கும் கஷ்டத்தில் அவன் விழுவான். இக்காரணத்தால் தான் பெரியோர்களும் பேறுபெற்றுள்ளவர்களும் அவசியமான அளவின்மீது போதுமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒருநாள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உள்ளேயிருந்து வெளியில் வந்து அஸ்ஹாபுமார்களைப் பார்த்துச் சொன்னார்கள்: "உங்களுள் குருடனாயிருப்பவனும் தனக்கு அல்லாஹ்த் தஆலா பார்வையைக் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறவனுமான மனிதன் யார்? நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்: [illegible]வன் துன்யாவை விரும்பி அதன் மீது நீண்ட ஆசைவைப்பானோ அவன் அந்த ஆசையின் அளவாக அல்லாஹ்த் தஆலா அவன் மனதைக் குருடாக்கச் செய்வான். இன்னும் எவனொருவன் துன்யாவை வெறுத்து அதன் ஆசையைக் குறைத்துக்கொள்ளுகிறானோ அவன் ஒருவரிடத்தில் படித்துக்கொள்ளாமலே அல்லாஹ்த் தஆலா அவனுக்கு ஓர் இல்மைக் கொடுத்து நடுவில் ஒருவழி காட்டி யில்லாமல் தானே அவனுக்கு நேர்வழியைக் காட்டுவான்." "தண்ணீரானது எவ்வாறு செடியை முளைக்கச்செய்யுமோ அவ்வாறே பொருளாசையும் கௌரவப்பிரியமும் மனதில் முனாபிக்குத் தனத்தை முளைக்கச் செய்யும்." "நீங்கள் துன்யாவை விட்டும் மீண்டுகொள்ளுங்கள்; ஏனெனின் யாராவதொருவன் துன்யாவைக் கனப்படுத்துவானாயின் நாளைக்கியாமத்தில் அவனை நிறுத்திக்கொண்டு அவன் தலையின்மீது ஒரு மலக்கு சப்தமிட்டு 'இவன் அல்லாஹ்த் தஆலாவால் அற்பமாக்கப்பட்ட ஒருவஸ்துவைக் கனப்படுத்தினன்' என்று கூறுவார், என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" - (நாயகவாக்கியங்கள்).

ஒருநாள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அதிகாலையில் வெளியில் வந்தார்கள். அப்பொழுது பஹ்ரைனி லிருந்து அபூ உபைதத்துப்னுல் ஜர்ராஹ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஏதோ சிறிது பொருள் அனுப்பியிருந்தார்கள். அன்ஸாருகள் இதைக்கேட்டு ஸுபுஹு தொழுகைக்குப் பெருக்கூட்டமாகத் திரண்டு வந்தார்கள். தொழுது சலாம் கொடுத்தபின் எல்லாரும் ரஸூலுல்லாஹ் அவர்களின் திருச்சமுகத்தில் வந்து கூடினார்கள். நாயகமவர்கள் அவர்களைப்பார்த்துப் புன்னகை பூத்து, "நீங்கள் பொருள்வந்த செய்தியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்," என்றார்கள்.